தன்வந்திரி

வைத்தியம் - 1000

தாமரை நூலகம், சென்னை - 26.

தன்வந்திரி

வைத்தியம்-1000

(மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்: 199

முதல் பதிப்பு : அக்டோபர் 1997

இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2008

மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2014

நான்காம் பதிப்பு மே 2021

நூல் பற்றி:

உரிமை பெற்றது

நூலின் பெயர் : தன்வந்திரி வைத்தியம் 1000 மூலமும் உரையும்

பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம் சென்னை-26

பதிப்பு ஆண்டு : 2021

உரிமை : பதிப்பகத்துக்கு

நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ

அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ

மொத்த பக்கங்கள் : 340

விலை : ரூ- 200

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை-34

பதிப்புரை

சித்தர்களின் நூல்கள் நூற்றுக்கு மேற்பட்டவற்றைக் கவனமாகப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்ட பின் தவிர்க்க முடியாதபடி ஒரு முடிவுக்கு வரவேண்டியதாயிற்று.

1. சித்தர்களின் பெயர்களால் வழங்கும் நூல்கள் பெரும் பாலானவை அவர்களாலேயே எழுதப்பட்டவை அல்ல. காதால் கேட்டு மனப்பாடம் செய்து கொண்ட சீடர்களோ அல்லது ஓலைகளில் எழுதிக் கொண்டவர்களோ திரும்பத் திரும்பச் சொல்லியும் பார்த்து எழுதியும் பலவேறு படிகளைக் கடந்து வந்துள்ளவையே இன்று கிடைக்கும் சித்தர் நூல்கள்.

2. படி எடுத்தவர்கள் நாங்கள் வாழ்ந்த நாட்டு மொழியில் சொற்களை மாற்றிக் கொண்டார்கள். நடுவில் சில கருத்துக்களை சேர்த்துக் கொள்ளவும் செய்தார்கள். போகர் நூலில் மஸ்தான் சாயபுவைப் பற்றியும், வருகிறது என்றால் பிற்காலத்தில் நூல்களை எழுதியவர்களின் கை வண்ணத்தால் நிகழ்ந்தவை தான் அவை.

3. அகத்தியர் மணி 4000 என்ற நூலின் காப்புச் செய்யுளில் முகமதுவுக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது. அதை எழுதிய அன்பர் தாம் வணங்கும் நபிகள் நாயகத்தை அகத்தியரே வணங்குவது போல் எழுதிவிட்டார்.

4. எல்லாச் சமயத்தவர்களும் சித்தர் நெறியையும் சித்த வைத்தியத்தையும் பின் பற்றியுள்ளனர் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

அகத்தியர் ஞான காவியம் என்ற நூலின் இறுதியில் விக்கிரம வருஷம் ஆவணி மாதம் சோமவார நாள் காலமே உதய லக்கினத்தில் கனகசபை முதலியாருக்கு புட்டுளார் முனிவரெழுதிய ஞான காவியம் முடிந்தது என்ற வரிகள் காணப்படுகின்றன. கனகசபை என்ற

பிரபுவுக்கு புட்டுளார் முனி என்ற அகத்திய சீடர் இந்த நூலை எழுதிக் கொடுத்த பிரதியிலிருந்து இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது என்பதைத்தான் இது குறிப்பிடுகிறது.

5. அகத்தியர் போகர் முதலியலர்களின் நூல்கள் அவை சொல்லப்பட்ட காலத்திற்கும் எழுதப்பட்ட காலத்திற்கும் இடையில் மிக நீண்ட இடைவெளி இருந்துள்ளது. இடையில் அகத்தியர் என்ற பெயரையே வைத்துக் கொண்டு நூல்களைச் செய்தவர்களின் நுல்களும் கலந்து விட்டன. அகத்தியர் பெயரால் எராளமான நூல்கள் காணப்படுவதன் காரணம் இதுவேயாகும்.

எனவே நூல்களையும் அதில் வழங்கப்பட்டுள்ள மொழி, நடை, கருத்துக்கள் முதலியவற்றையும் கொண்டு சித்தர்களின் காலத்தைக் கணக்கிட முயல்வது முற்றிலும் தவறாக முடியும்.

தன்வந்திரி வைத்திய காவியம் என்ற இந்த நூலும் தன்வந்திரி பகவானின் வைத்திய முறைகளை அறிந்தயாரோ ஒருவரால் பிற்காலத்தில் பாடப்பட்டதாகவே இருக்க வேண்டும்.

பாடல்களில் கருத்துச் சிதைவு முதலான பலகுற்றங்கள் காணப்பட்ட போதிலும் வைத்தியம் பயிலும்மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இதுபோன்ற பல நூல்கள் மிகவும் தேவை என்ற பயன் கருதியே வெளியிடப்படுகிறது.

மருத்துவம் பயில்வோர் பல நூல்களையும் கற்று ஒன்றுடன் ஒன்று ஒப்பு நோக்கியும், வைத்தியம் செய்யும் போது யாருடைய முறையில் செய்யப்பட்ட மருந்து சிறந்த பயன் தருகிறது என்பதைக் கவனித்தும் நுட்பமாக ஆய்வு செய்து அனுபவத்தைத் திரட்டிக் கொள்ள வேண்டியது அவசியம்.

சித்தர் நூல்களில் வைத்தியப் பகுதியின் இடையே ஞானம் பற்றிய பாடல்களும் விரவி இருப்பதைக் காணலாம்.

முத்திரைகள், யோகங்கள். தியானங்கள், பூஜாவிதிகள் முதலானவை படிப்பவரை ஞான நெறிபற்றிச் சிந்திக்க வைப்பதற்காக அமைந்தவை.

இந்த நூலிலும் அப்பகுதிகள் இடம் பெற்றுள்ளன. வைத்தியப் பகுதிகளைக் கவனமாகப் படித்துக் கொண்டு வரும் போது சிறிது ஞான மார்க்கத்திலும் கவனம் செலுத்துவது நன்றேயல்லவா.

உரையாசிரியர் திரு. க. லட்சுமணன் செய்யுளை அப்படியே உரைநடையாக்கிக் கொடுத்திருக்கிறார். பாடலாகப் படிக்க முடியவில்லை என்று கூறுபவர்கள் இதனால் பயனடையலாம்.

படித்துப் படித்து நெஞ்சில் ஆழமான தடம் பதிந்த மருத்துவ மணிகள் உருவாக வேண்டும். பழம்பெரும் நூல்கள் அழிந்து போகாமல் காப்பாற்றப் படவேண்டும் என்ற நோக்கங்களே தூண்டு கோல்களாக இந்நூல்களை வெளியிடுகிறோம். பிழைகள் காண்போர், மன்னிக்க வேண்டுகிறோம்.

சென்னை
20.8.97.

பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்

— — — —

உ

கடவுள் துணை

பதினெண் சித்தர்களில் சிறந்த தன்வந்திரி பகவான் திருவாய் மலர்ந்தருளிய

வயித்திய காவியம்

ஆதிமுதற் பூரணமாங் குருவே போற்றி
அப்பாலுக் கப்பாலா மடியே போற்றி
சோதியெனும் சுடரொளியே சூட்சா சூட்சம்
சூட்டுகின்ற பேரொளியே சுடரே போற்றி
சாதியெனும் நாதாக்கள் குருவின் பாதம்
சகலபுவ னங்களெலா மடிதாள் போற்றி
வாதியெனும் சற்குண நிதியே போற்றி
வாகான அகண்டத்தின் பொருளே போற்றி. (1)

ஆதிக்கு முதலான பூரணமான குருவே உன்னை வணங்கு கிறேன். அப்பாலுக்கு அப்பால் நிற்கும் திருவடியை வணங்குகிறேன். சூட்சா சூட்சமான சோதியெனும் சுடரொளியே உன்னை வணங்குகிறேன். பேரொளியாகிய சுடரை வணங்குகிறேன். நாதாக்களான குரு மார்களின் பொற் பாதங்களை வணங்குகிறேன். சகல புவனங்களின் திருவடிகளையும் வணங்குகிறேன். சற்குணநிதியை வணங்குகிறேன். அகண்டத்தின் பொருளை வணங்குகிறேன்.

போற்றினேன் தன்வந்திரி பகவான் தானும்
புனிதமுடன் நந்தீசர் பாதம் போற்றி
சாற்றினேன் வயித்திய காவியந்தா னிந்நூல்
சகலகலைக் கியானமுதல் சரக்கு வைப்பு
தூற்றினேன் லேகியங்கள் கிருதமெண்ணெய்
துணையான பற்பங்கள் செந் தூரங்கள்
ஆற்றினேன் கஷாயங்கள் ஆக்கி ராணம்
அன்பான நேந்திரமை யளந்த [illegible]மே. (2)

தன்வந்திரி பகவானாகிய நான் நந்தீசர் பாதக்[illegible]தைப் [illegible] இந்நூலாகிய வயித்திய காவியத்தைக் கூறுகிறேன். சகல-[illegible]யானம, சரக்கு வைப்பு, லேகியங்கள், கிருதங்கள், எண்ணெய், பற்பங்கள, செந்தூரங்கள், கஷாயங்கள், ஆக்கிராணம், நேந்திரமை மற்றும்,

அனந்தமாம் பிளாஸ்திரிகள் தயிலப்போக்கும்
அன்பான சிற்பத்து திராவ கங்கள்
சனந்தமாம் கற்கவகை செயநீர் போக்கு
சாற்றினோம் தொந்தங்கள் கோடா கோடி
வனந்தமாம் சிலையெண்ணெய் கபாட மாத்திரை
வளமான சாந்துகள் மைகள் கோடி
கனந்தமாங் கருவுக்க ளனந்தம் வித்தை
காட்டினேன் தன்வந்திரி பகவான் தானே. (3)

பிளாஸ்திரிகள், தயிலம், சர்பத், திராவகங்கள், கற்கவகை, செயநீர் போக்கு, கோடா கோடி தொந்தங்கள், சிலை எண்ணெய் கபாட மாத்திரை, சாந்துகள், மைகள். கருவித்தை, போன்ற முறைகளை தன்வந்திரி பகவானாகிய நான் இந்நூலில் கூறுகிறேன்.

தானாக வயித்திய காவியந்தா னிந்நூல்
சாற்றினேன் ஆயிரமா மிந்த நூலும்
கோனான விந்நூலுக் கொரு நூலில்லை
குறிப்பாக மாந்தர்கட்குப் பிழைக்க வென்று
பானான காவியத்தைப் பாடி எந்தன்
பாங்கான குகைதனிலே வைத்தே னப்பா
தேனான விந்த நூலில் சித்தர் கூடிக்
தேடியே வணங்கியென்னை நூல் கேட்டாரே. (4)

வைத்திய காவியமாக ஆயிரம் பாடல்களாக நூலைக் கூறி விட்டேன். இந்த நூலுக்கு ஒரு நூலும் இணை இல்லை. உலகமாந்தர்கள் பிழைக்க வேண்டி இந்நூலைப் பாடி குகையில் வைத்தேன். என்னை தேடி வந்த சித்தர்கள் என்னை வணங்கி இந்த நூலைக் கேட்டார்கள்.

கேட்டவுடன் நூல் கொடுத்தேன் சித்தர்க் கென்று
கிருபைபெற மனமகிழ்ந்து மாந்தர்க் கீந்தார்
நீட்டமுள்ள பெரியோர்கள் தபோ தனர்கள்
நேரான தத்துவத்தோர் நிலைத்த பேர்கள்
வட்டமா யிந்நூலை வெளிவிட்டக்கால்
மகாகோடி பாவம் வந்து நேரு மென்றார்
பூட்டகமா யிக்காவிய மாயிரந்தான்
பூட்டினேன் நாடிமுதல் பூட்டி னேனே. (5)

சித்தர் நூலைக் கேட்க இந்நூலைக் கொடுத்தேன். சித்தர் மனம் மகிழ்ந்து மாந்தருக்கு கொடுத்தார். பெரியோர்கள். தவத்தினின்றவர்கள், தத்துவத்தோர், உலகில் நிலைத்தவர்கள். இந்த நூலை தகுதியில்லாத வனுக்கு கொடுப்பாராகில் மகாகோடி பாவம் வந்து வேரும். இந்நூலில் நாடி குறிப்புகளை கூறி விட்டேன்.

நாடிக்குறிப்பு

காரணமா மாந்தருக்கு நாடிசொல்வேன்
கருவான எழுபத்தீராயிரந்தான்
பூரணமா மதைகுறுக்கித் தசநாடியாகப்
பூட்டினேன் குருநாடி சூதநாடி
தோரணமாம் வாதமென்ற நாடி-தானும்
தொகுப்பான கானகத்து மயில் போலாகும்
வாரணமாம் பித்தமது அட்டை போலாம்
வலமான சிலேத்துமமது தவளையாமே. (6)

மனிதருக்கு எழுபத்து இரண்டாயிரம் நரம்புகளுள்ளன. அதில் பத்து நாடிகளுண்டு, குருநாடி, சூதநாடியுமுண்டு, வாதநாடி மயில் போன்ற நடையும், பித்தநாடி,அட்டை போல் ஊர்ந்தும், சிலேத்துமநாடி தவளைபோல குதித்தும் இவ்வாறு மூன்று நாடிகளின் நடப்பாம்.

ஆமேதான் நாடிமூன் றோடிற்றானால்
அப்பனே சன்னியது வந்து கூடும்
போமேதான் வாதமது சிலிர்த்து நின்றால்
பொல்லாத எமனுக் கறுதியாகும்
சாமேதான் பித்தம தழுந்திற்றானால்
சார்வாக அசாத்தியமு முடனேநேரும்
தூமேதான் சிலோத்துமமது கோபித்தக்கால்
சடுதியின் ஏமன்பதி சேருவாரே. (7)

மூன்று நாடிகளும் ஓடினால் சன்னி ஏற்படும், வாதம் சிலிர்த்து நின்றால் இறப்பு உண்டாகும், பித்தம் அழுந்தி நின்றால் அசாத்தியம் நேரும், சிலேத்துமம் கோபித்தால் இறப்பு உண்டாகும்.

சேருவார் வாதத்தில் பித்தமாகில்
செழிப்பான வார்த்தையது குழறிப்பேசும்
கூறுவார் பித்தத்தில் வாதமாகில்
குணமான தேகமது வெளுப்புமாகும்
தீருவார் சேத்துமத்தில் பித்தமாகில்
தேகமது மஞ்சளிக்கு மலம் வெளுக்கும்
ஊருவார் தொந்தரமாகி நின்றால்
உடல்வலிக்கும் நீர்வகிக்கு முண்மைபாரே. (8)

வாத பித்தமாக இருந்தால் வாய் குழறிப் பேசுதல் உண்டாகும். பித்த வாதமாகில் உடல் வெளுப்பு உண்டாகும், சேத்துமத்தில் பித்தமாகில் மஞ்சளாக வெளியான மலம் வெளுப்பாக வெளியேறும், இவைகள் சேர்ந்து நின்றால் உடல் வலி உண்டாகும்

பாரப்பா வாதமது தித்திப்பாகும்
பாங்கான பித்தமது கசப்புமாமே
சீரப்பா சேத்துமமது புளிப்புமாகும்
சீனப்பா தொந்தமது வியாதிமெத்த
கூறப்பா சப்தங்கள் மாறிப்போகும்
குடிலமாங் காந்தலது அதிகமுண்டாம்
தீரப்பா மேனியது திருகிப் போகும்
திரமான நாடியின் விபரங்காணே. (9)

வாதமது இனிப்பாகும். பித்தம் க்சப்பாகும், சேத்துமம் புளிப்பாகும், சேரும் வியாதிகள் உண்டு. சப்தம் மாறிபோகும், உஷ்ணம் அதிகமாகி உடல் தொல்லை அதிகமாகும், நாடி விபரத்தைக் கூறுகிறேன்.

காணவே சேத்துமத்தில் வாதமாகில்
கடினமாம் பிடரியது வலிப்பு முண்டாகும்
தோணவே நரம்பெல்லாம் வலித்துநிற்கும்
துடியான கண்டமது வலித்துக் காணும்
ஊணவே பித்தத்தின் நாடிதானும்
உற்பனமாய் வாதத்தி லுறையுமாகில்
ஆணவே பித்தமும் வாதங்கூடில்
அரணைவால் துடிபோலத் துடிக்கும் பாரே. (10)

சேத்துமத்தில் வாதமானால் பிடரியில் வலிப்பு உண்டாகும், நரம்புகள் எல்லாம் வலி உண்டாகும், கழுத்தில் வலியுமுண்டாம், பித்தநாடி வாதத்தில் உறைந்துவிட்டாலும், பித்தமும் வாதமும் கூடி விட்டாலும் அரணைவால் துடிப்பது போலாகும்.

மரணக் குறிப்பு

பாரேதான் நோயாளி யெழுந்து நின்றால்
படைவுடனே மூச்சுமது வதிகங் கொண்டால்
சிரேதான் நேத்திரமது வட்டமிட்டால்
சிகப்பான முழியதுவும் திரும்பி வழிபார்த்தால்
தூரேதான் சேத்துமமது தொண்டைக்கட்டும்
தொலையாத நெஞ்செரிப்பு மேற்சுவாசம்
வீரேதான் மேனியது கருகல்காணும்
மேதினியில்வியாதியது செனிக்கும் வாரே. (11)

நோய் உள்ளவன் எழுந்து நிற்கும்போது மூச்சு அதிகம் கண்டு கண்களில் வளையமிட்டு, கண்சிவந்து முழி திரும்பி சேத்துமத்தால் தொண்டைக்கட்டி

நெஞ்செரிப்பும், மேல் சுவாசமும் உடல் கருப்புமாகும். இந்நிலையில் வியாதி உண்டாகும்.

வாறான பித்தமது உறையுமானால்
வளமான சேத்துமமது தொண்டைக்கட்டும்
கூறான வாதமது குறுகிற்றானால்
குறிப்பான மூத்திரமது மஞ்சள்போலாம்
நீறான பழுவெலும்பு ரத்தஞ் சுண்டி
நிலையான யாக்கைக்கு அறுதிநேரும்
தூறான செடலமது சுருக்கிற்போகும்
சுந்தரனே நாடிகுறி தெளிந்து பாரே. (12)

பித்தம் உறைந்து விட்டாலும். சேத்துமத்தால் தொண்டைக்கட்டு உண்டானாலும், வாதமது குறுகிப் போனாலும், சிறுநீர் மஞ்சளாக இறங்கும், பழுவெலும்பு ரத்தம் குறைந்து உடலுக்கு உறுதி இல்லாமல் போய்விடும். நாடிக் குறிப்பை தெளிவாக பார்ப்பாயாக.

சுரமாத்திரை

பாரப்பா மாந்தருக்கு சுரமே வந்தால்
பாடுகிறேன் மருந்தொன்று சொல்லக் கேளும்
சீரப்பா சுக்குடனே அரத்தயோமம்
சிறப்பான வாய்விளங்க மதுரங்கோஷ்டம்
நேரப்பா குங்குமப்பூ கோரோசனந்தான்
நிலையான பச்சையென்ற பூரஞ்சேரு
ஊரப்பா பத்திரியும் கிராம்புப்பட்டை
வுத்தமனே பேய்ப்புடலை பர்ப்பாடஞ் சேரே. (13)

மனிதர்கட்கு ஏற்படும் சுரத்திற்கு மருந்து ஒன்று கூறுகிறேன். சுக்கு,அரத்தை,ஓமம், வாய்விளங்கம், அதிமதுரம், கோஷ்டம்,குங்கு மப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம், பத்திரி, கிராம்பு, பட்டை, பேய்ப்புடல், பர்ப்படாகம், மற்றும்.

சேர்த்துமே சிறுதேக்கு சிறுகாஞ்சோறி
சீந்தலொடு நன்னாரி முத்தக்காசு
போர்த்துமே தேவதாரம் பொருத்தஞ்சுக்கு
பேரான வகைக்கு விராகன் ரெண்டு
கார்த்துமே சரக்கெல்லா மொன்றாய்க் கூட்டி
கனமான சூரணமாய்ச் செய்துகொண்டு
தூர்த்துமே தேன்விட்டு வரைத்துமேதான்
சிறுகுன்றி மணிபோலத் திரட்டிடாயே. (14)

சிறுதேக்கு, சிறுகாஞ்சோறி, நன்னாரி, முத்தக்காசு, தேவதாரம், இவைகள் வகைக்கு இரண்டு வராகனிடை எடுத்து சூரணித்து தேன் விட்டு அரைத்து குண்டு மணிபோல் திரட்டிக் கொள்.

திரட்டியே நாளொன்றுக் கிருபோதுதான்
நிடமான யிஞ்சிச்சாற் கியாழதுந்தன்னில்
உருட்டியே சீனியில் பனவெல்லந்தான்
வுத்தமனே கைப்பரிட்சை கண்டுயீய்ந்தால்
வெருட்டிவரும் அறுபத்துநான்கு சுரந்தான்
வீடுவிட்டு காடுறைய்யு மாதே கேளாய்
மருட்டிவிடும் அசாத்தியங்கள் சாத்தியங்கள்
மருணீங்கி எப்போதும் வாழலாமே. (15)

ஒருநாளுக்கு இருவேளையும் இஞ்சிச் சாறு கியாழத்தில் அல்லது சீனி பனை வெல்லத்துடன் கொடுக்க அறுபத்து நான்கு சுரமும் தீரும். தீராத சுரங்களெல்லாம் தீர்ந்து இவ்வுலகில் வாழலாகும்.

வாழலாம் பத்தியமோ புளிப்புமாகா
வளவான வாசனையுங் கந்தமாகா
காழலாம் சிவப்பு வஸ்திரம் கறுப்புமாகா
கனமான நெய்முதலாம் இறைச்சியாகா
நீழலாம் தித்திப்புத் தயிருமாகா
நேரான சீதளப் பண்டங்களாகா
வ்ழலாம் பத்திய மேழுநாள்தான்
வியப்புடனே கார்த்திருந்து வியாதிப்போக்கே. (16)

மேற்படி மருந்திற்கு புளிப்பு. வாசனை கந்தம் இவைகளாகாது. சிகப்பு,கறுப்பு, துணிகள் ஆகாது. நெய். இறைச்சி, இனிப்பு, தயிர், சீதளப் பொருட்கள் இவைகள் நீக்கி ஏழுநாள் மேற்படி மாத்திரையை உட்கொள்ள, மேற்படி அறுபத்துநான்கு சுரங்கள் தீரும்.

போக்கான மறுபத்திய மூன்றுநாள்தான்
புனிதமுடன் கார்த்திருந்து நீரைவாரு
நீக்கான சையோக மூன்று திங்கள்
நிலையான பத்தியமோ டிருந்தாயானால்
வாகான திரேகமது காந்தியுண்டாம்
வாகான சட்டையது தள்ளும் பாரு
தூக்கான யிக்குளிகை ॥ாருஞ் சொல்லார்
துடியான மாத்திரையாம் குளிகையாமே. (17)

மேற்படி மாத்திரை ஏழுநாளுட் கொண்டு மூன்றுநாள் மறு பத்தியமிருக்க வேண்டும், மூன்று மாதம் பத்தியமிருந்து இம்மாத்திரையை உட்கொள்ள உடல் காந்தி உண்டாகி சட்டை தள்ளும். சிறப்பான குளிகையிது.

வாதசுரத்திற்கு செந்தூரம்

ஆமேதான் வாதத்தி லெடுத்த காய்ச்சல்
அடவாகப் போவதற்கு செந்தூரங்கள்
மோமேதான் லிங்கமொரு பலமும்வாங்கு
புகழான முலைப்பால் சுத்திசெய்து
சாமேதான் வெடியுப்புப் படிகாரந்தான்
சமர்த்தான கருவோடு வீரங்கூட
நாமேதான் மூன்றையுந்தான் சுண்ணஞ் செய்து
நலமான வெண்கருவால் அறைத்திடாயே. (18)

வாத சுரத்திற்கு செந்தூரம் கூறுகிறேன், ஒருபலம் லிங்கத்தை தாய்ப் பாலால் சுத்திசெய், வெடியுப்பு, படிகாரம், வீரம் மூன்றையும் சுண்ணம் செய்த வெண்கருவால் அரைத்திடு.

அறைத்துமே லிங்கத்திற் கங்கிப்பூட்டி
அழகான மணல்மறைவிற் புடந்தான்போடு
நிறைத்துமே பத்துமுறை யிப்படியே போடு
நேரான லிங்கமது வுருகிக் கட்டும்
விறைத்துமே லிங்கத்தை யெடுத்துக் கொண்டு
வெண் சாரைக் குகைதனிலே பொதித்துமூடி
பறைத்துமே குக்குடமே போட்டாயானால்
பளிங்கற்ற செந்தூர மாகுந்தானே. (19)

மேற்படி அரைத்ததை மேற்படி சுத்தித்த லிங்கத்திற்கு கவசமிட்டு மணல் மறைவில் புடத்தைப் போடு. மறுமுறை மேற்படி கவசமிட்டு புடமிடு. இவ்வாறு பத்துபுடம் தீர்க்க லிங்கம் உருகிக்கட்டிப் போயிருக்கும். வெண்சாரக் குகையில் மேற்படி லிங்கத்தை வைத்து குக்குட புடமிட்டால் செந்தூரமாகும்.

தானான செந்தூரம் தேனிலேதான்
தாக்குவாய் அரிசியிடை தாக்கினாக்கால்
கோனான வாதசுர மெங்கே போச்சு
குறிப்பான தலைசுழட்டல் யெங்கே போச்சு
வேனான தலையிடியும் வாய்வுமேதான்
வீடுவிட்டுக் காடுரையுங் கண்டீர் பாராய்
மானான யிம்மருந்து யார்க்குக்கிட்டு
மண்டலத்தில் சிவயோகிக்குக் கிட்டுந்தானே. (20)

மேற்படி செந்தூரத்தை அரிசிஎடை எடுத்து தேனில் கலந்து உட்கொள்ள வாதசுரம் தீரும். தலைசுற்றல், தலையிடி,வாய்வு, இவைகள் தீரும். சிவயோகிக்கு இம்மருந்து தவறாமல் கிடைக்கும்.

பித்த சுரத்திற்குக் கியாழம்

கிட்டுமே பித்தசுரம் வந்தபேர்க்கு
  கெடியான கியாழமொன்று சொல்லக்கேளும்
அட்டுமே கொடிவேலி கோஷ்டம் பீர்க்கு
  அடவான பேய்ப்புடலை சித்தாமுட்டி
இட்டுமே கூவிளம் வில்வவோடும்
  இயலான யேலமொடு நெல்லிமுள்ளி
துட்டுமே நீலிவேர் வில்வவேரும்
  சிறப்பான நெற்பொரியும் கூடச்சேரே. (21)

பித்த சுரம் நீங்குவதற்கு கியாழம் கூறுகிறேன். கொடிவேலிவேர், கோஷ்டம், பீர்க்கு, பேய்ப்புடல், சித்தாமுட்டி, வில்வவேர், (கூவிளம்-வில்வம்)ஏலம், நெல்லிமுள்ளி, நீலிவேர், வில்வஓடு,நெற்பொரி மற்றும்.

சேர்த்துமே சிவபயறு சுக்குக் கிராம்பு
  சிறப்பான வாய் விளங்கம் கடுக்காய்த் தோலும்
கூர்த்துமே எட்டிவிரை தேத்தான் கொட்டை
  குணமான பிரம்பின் மூலங் கண்டங்காரி
நீர்த்துமே படிசலம் விட்டுக் காய்ச்சி
  நேராக வெட்டொன்றாயிறக்கிக் கொண்டு
போர்த்துமே மூன்று வேளைப்
  புனிதமுடன் தானருந்த சுரமும் போமே. (22)

சிவபயிறு, சுக்கு, கிராம்பு, வாய்விளங்கம், கடுக்காய்த்தோல், எட்டிவிதை, தேத்தான் விதை, பிரம்பின்வேர், கண்டங்கத்திரி, இவைகளை ஒருபடி நீரிலிட்டு காய்ச்சி எட்டுக்கு ஒன்றாக சுண்ட வைத்து மூன்று வேளை இக்கியாழத்தைக் குடிக்க கபம் தீரும்.

போமேதான் பித்த சுரம் சுழற்றல் வாயு
  பொருமலோடு மந்தார சுரமும் போகும்
ஆமேதான் தலைமயக்கம் அலரல் சன்னி
  அடவான மதமூர்ச்சை யனைத்தும் போகும்
காமேதான் காலைமாலை யனைத்துந் தீரும்
  கடினமாம் பித்த வெட்டை யனலும் தீரும்
நேமேதான் சுரங்களெல்லா மகன்று போகும்
  நோயற்றப் பாண்டமெனச் செப்பலாமே. (23)

தன்வந்திரி பகவான்

மேற்படி கியாழத்தால் பித்தசுரம், தலைசுற்றல், வாயு, மந்தார சுரம், அலரல் சன்னி, மூர்ச்சை, இவைகள் தீரும், பித்த வெட்டை, உஷ்ணம். சுரங்கள், இவைகளும் தீரும்.

சன்னிக்கு மருந்து

செப்பலாம் சன்னிக்கு மருந்து சொல்வேன்
தெளிவான வேப்பெண்ணெய் படிதரனொன்று
ஒப்பலாங் கார்த்திகைக் கிழங்கின்னீறும்
உயர்வான சம்பதுவும் குழவிந்தங் கூட
அப்பலாம் வெள்ளுள்ளி விராகனைந்து
அழகான மரமஞ்கள் சமனாய்க் கூட்டி
தொப்பலாம் காயமது விராகனைந்து
தெளிவான ஓமமது விராகனைந்தே. (24)

சன்னிக்கு மருந்து கூறுகிறேன். வேப்பெண்ணெய் ஒருபடி, கார்த்திகைக் கிழங்குநீறு, வெள்ளுள்ளி, மரமஞ்சள், பெருங்காயம், ஓமம், அவைகள் வகைக்கு ஐந்து வராகன் எடை மற்றும்.

அஞ்சான சதகுப்பை விராகனைந்து
அன்பான முசுறுமுட்டை சாதிக்காயும்
பிஞ்சான வெந்தோன்றி விராகன் ஐந்து
பேரான யிவையெல்லா மொன்றாயாட்டி
கஞ்சான யெண்ணெயிலே வொன்றாய்ச் சேர்த்து
கருவாக கடுகுபதம் தன்னில் வாங்கி
நஞ்சான சீஷாவில் விட்டு நீயும்
நலமாகத் தயிலமதைப் பதனம் பண்ணே. (25)

சதகுப்பை முசுறுமுட்டை, சாதிக்காய், வெண்தோன்றி இவைகளும் வகைக்கு ஐந்து வராகன்எடை. எடுத்து தூள்செய்து மேற்படி எண்ணெயிலிட்டு கடுகுபதமாக எரித்து வாங்கி பீங்கானில் பத்திரப்படுத்து.

பண்ணப்பா மேனியெங்கும் பூசினாக்கால்
பாங்கான சன்னியது வுடல் விட்டோடும்
நண்ணப்பா வாதமுதல் குடைச்சல் போகும்
நலமான கால்குடைச்சல் மரணைதீரும்
திண்ணப்பா வுள்ளுக்கு கொடுக்கலாகா
திரேகமது சாணமிட்டுக் கழுவிப்போடு
அண்ணப்பா ஏங்கியே திரியவேண்டாம்
அரனெனக்குத் தாமுரைத்த முறையிதாமே. (26)

மேற்படி தைலத்தை உடலில் எல்லாப் பகுதியிலும் பூச சன்னிதீரும். வாதம்,குடைச்சல், கால்குடைச்சல்,வலி இவைகள் தீரும். உள்ளுக்கு இத்தயிலத்தை கொடுக்கலாகாது. உடல் பகுதியில் பூசியதை சாணத்தால் கழுவு. ஏங்கித்திரியாமல் என்குரு எனக்கு உரைத்த இம்முறையை ஆராய்ந்து செய்வாயாக.

சூதகவாய்வுக்கு உப்பு

ஆமேதான் மாதவிடாய் வலிகொண்டோர்க்கு
அழகான வுப்பொன்று இயம்பக்கேளும்
போமேதான் நாழியுப்பு சேர்த்தானப்பா
புனிதமுடன் கரந்தைச்சாற் றன்னாலாட்டி
நோமேதான் காயவிட்டுப் புடத்தைப் போடு
நுணுக்கமுள்ள கோழிப்புடம் அடவாப்போடு
சாமே தான் உப்பதுவும் வெந்துநீறி
சார்வான மாசற்றப் பற்பமாமே. (27)

மாதவிடாய் காலத்தில் வலிஉடையவர்கட்கு உப்பு ஒன்று கூறுகிறேன். நாழிஅளவு உப்பை எடுத்து கரந்தைச் சாற்றாலாட்டி காய வைத்து கோழி புடத்தைப் போடு. உப்பு நீறி பற்பமாகும்.

பற்பத்தின் தன்மகிமை யென்ன சொல்வேன்
பளிங்குபெற சூதத்தின் வாயுவுதன்னை
நிற்பமாய் யிருவேளை மூன்று நாள்
நேராகக் கொடுத்துவிட வலிதான் போகும்
அற்பமென்று நினையாதே வுப்பின் மார்க்கம்
அதிவேகமாகுமடா யாருஞ் சொல்லார்
சொற்பமாய் செய்வே னென்பார் செய்யமாட்டார்
செகத்திலே யிந்தவித்தை யதீதங்காணே. (28)

மேற்படி பற்பம் சிறப்பானதாம். சூதகவாய்வுக்கு இருவேளையும் முன்றுநாள் கொடுக்க சூதகவாய்வு, சூதகவலி இவைகள் குணமாகும். இந்த உப்பு மார்க்கத்தை அற்பம் என்று நினைக்காதே. வேகமுடைய மருந்து.

அகஸ்தியர் குழம்பு

காணவே குழம்பொன்று வுரைப்பேன் கேளீர்
கருவான வாளமது பலமோபத்து
தோணவே லிங்கமது பலமோ வொன்று
துணிவான பூரமது பலமோவொன்று
யீணவே வங்காரம் பலமோ வொன்று
யியலான கடுக்காய்த்தோல் பலமுமொன்று

மாணவே வெடியுப்புப் பலமே வொன்று
மறைப்பான முப்பூவும் பலமு மொன்றாமே. (29)

குழம்பு ஒன்று கூறுகிறேன். நேர்வாளம் பத்துபலம், லிங்கம் ஒருபலம், பூரம் ஒருபலம், வெங்காரம் ஒருபலம், கடுகாய்த்தோல் ஒருபலம், வெடியுப்பு ஒருபலம், முப்பு ஓருபலம் மற்றும்.

ஒன்றான டத்திரியுங் காலதாக
வுயர்வான சுக்கதுவும் அரையதாக
நன்றான் வாய்விளங்கம் காலதாக
நயமான வாகையது சமனதாக
குன்றான ரோகணியுங் காலதாக
குறிப்பான திப்பிலியும் அரையதாக
நன்றாகப் பொடித்துமே சூரணித்துப்
பாங்காக முக்கண்ணின் பாலாலாட்டே. (30)

பத்திரி கால்பலம், சுக்கு அரைபலம், வாய்விளங்கம் கால்பலம், வாகை அரைபலம், ரோகினி கால்பலம், திப்பிலி அரைபலம், இவைகளை சொன்ன அளவுபடி எடுத்து சூரணித்து தேங்காய்ப்பாலால் ஆட்டு.

ஆட்டியே அறுபது சாமமாட்டு
அழகான சிமிழ்தனிலே பதனம் பண்ணு
பூட்டியே ரேசக பூரகமுஞ் செய்து
பொலிவான வாலைக்குத் தூபதீபம்
மாட்டியே கும்பித்து வணங்கி நின்று
மகிழ்ச்சி பெற நாதாக்கள் பாதம் போற்றி
தீட்டியே மூன்றுநாள் கொண்டாயானால்
தெளிவான வாதபித்தங் கழன்று போமே. (31)

மேற்படி வகையில் அறுபது சாமமாட்டி, சிமிழில் பதனம் செய் ரேசக பூரகம் செய்து வாலைக்குத் தூபதீபம் காட்டி கும்பித்து வணங்கி நின்று நாதாக்களின் பாதத்தைப் போற்றி மூன்றுநாள் உட்கொள்ள பேதியாகி வாதம்,பித்தம் கழன்று போகும்.

போமேதான் பேதியது அதிகங்கண்டால்
பொல்லாத வசம்பதனைத் தட்டிக் காய்ச்சு
நாமேதான் சொன்னபடி கொடுத்தாயானால்
நவிலவொண்ணா பேதியது யடங்கிக் கட்டும்
ஆமேதான் யிக்குழம்பு யாருஞ்சொல்லார்
அடவாக மாந்தருக்கு யெளிதாய்ச் சொன்னோம்

போமேதான் யின்னமொரு பேதி சொல்வேன்
புகழ்ச்சியா யெடுத்துரைப்பேன் கேளுகேளே. (32)

அதிகமான பேதியானால் வசம்பைத் தட்டி கியாழமிட்டு கொடுக்க பேதி நிற்கும். இக்குழம்பை யாரும் சொல்லவில்லை. உலக மாந்தர்கட்கு தெளிவுபட சொல்லி விட்டேன். மற்றொரு பேதி மருந்தைக் கூறுகிறேன்.

பேதிக்கு மருந்து

கேள்ப்பா மாந்தருக்கு விரோசனந்தான்
கெடியான வாளமது பலமோ வைந்து
நீளப்பா கடுக்காய்த் தோல் பலமோ ரெண்டு
நேரான பன்னீர்ப்பூ பலமோ ரெண்டு
வாளப்பா யிந்துப்புப் பலமோ ரெண்டு
வளமான ரோகணியும் பலமோ ரெண்டு
சூளப்பா சுக்கதுவும் பலமோ ரெண்டு
சுகமான வெடியுப்புப் பலமும் கூட்டே. (33)

நேர்வாளம் ஐந்துபலம், கடுக்காய்த்தோல் இரண்டுபலம்,பன்னீர்ப்பூ இரண்டுபலம், இந்துப்பு இரண்டுபலம், கடுக ரோகணி இரண்டுபலம்,சுக்கு இரண்டுபலம்,வெடியுப்பு ஒருபலம்.

கூட்டியே கஞ்சாவின் கஷாயத்தாலே
குடிலமாய் நாற்சாமம் ஆட்டுஆட்டு
தீட்டியே மறுபடியும் கடுக்காய் கியாழம்
திறமாக நாற்சாம மாட்டுஆட்டு
பூட்டகமா மிம்மருந்தைப் பதனம் பண்ணு
பெரியோர்கள் சிறியோர்கள் பாலருக்கும்
வாட்டமுடன் கொடுத்திடவே பேதியாகும்
வளமான யிம்மருந்தை வெளிவிடாதே. (34)

மேற்படி சரக்குகளை கஞ்சாவின் கஷாயத்தால் நான்கு சாமம் நன்றாக அரைத்திடு, கடுக்காய் கஷாயத்தால் நான்கு சாமம் அரைத்து மருந்தை பதனம் செய்வாயாக. பெரியவர்கள், குழந்தைகட்கும் அளவு அறிந்து கொடுக்க பேதியாகும், இம்மருந்தைப் பற்றி வெளியில் சொல்லலாகாது.

சுகபேதி

வெளிவிட்டால் வெகுபாவ மாந்தர்க் கெய்தும்
விஷயமா மின்னமொரு சுகபேதிகேள்
அளிவிட்ட அழிஞ்சிலிட தயிலம் வாங்கி
அப்பனே அனத்தின் காடியிலேயீய

தன்வந்திரி பகவான்

களிவிட்ட வாதபித்த நீரும்போகும்
கசடற்று திரேகமது சுத்தியாச்சு
புளியிட்ட காடைபுறா வுள்ளான் கூட்டுப்
புராதனமா மிம்மருந்து புகழ்சிபாரே. (35)

வெளியில் மேற்படி மருந்தைப் பற்றி கூறுவதால் பாவம் வந்து சேரும், இன்னும் ஒரு சுகபேதி மருந்து கூறுகிறேன். அழிஞ்சில் தயிலம் எடுத்து அன்னக்காடியில் உட்கொள்ள பேதியாகி வாதம், பித்தம் வெளியாகி உடல் சுத்தியாகும். காடை, புறா, உள்ளான் இவைகள் கூட்டலாகும்.

பெரும்பாட்டுக்கு மருந்து

பாரப்பா பெரும்பாடு வந்தபேர்க்கு
பாங்காக நாவலுட பட்டை வாங்கி
நேரப்பா எருமைமோர் தன்னைவிட்டு
நிறைவாக யிடித்துமே பிழிந்து கொண்டு
கூறப்பா கழுனீரில் கொடுத்தாயானால்
கூண்டோடே பாடு பெரும்பாடு தீரும்
சீரப்பா பத்தியந்தா னிதற்கேயில்லை
சிறப்பாகத் தன்வந்திரி யியற்றினேனே. (36)

நாவல் பட்டையை எருமை மோர் விட்டு இடித்து பிழிந்து அரிசிகழுவியநீரில் கொடுக்க பெரும்பாடு குணமாகும். இதற்கு பத்தியமில்லை. தன்வந்திரியாகிய நான் சொல்லி விட்டேன்.

குன்மம் ஆறுக்கும் உப்பு

இயற்றினேன் குன்மமென்ற வாறுக்குந்தா
னியல்பாக வுப்பொன்று சொல்லக் கேளும்
இயற்றினேன் வுப்புசேர் படிதானொன்று
கருவான தும்மட்டிச் சாற்றினாலே
பயற்றினேன் அறுபத்து நாலுசாமம்
பாங்காக அரைத்து புடமிட்டக்கால்
கழற்றினேன் பற்பமது சொல்வேன்
நாதாக்க ளிதுபோலே சொல்லாரன்றே. (37)

ஆறுவகை குன்மத்திற்கும் உப்பு ஒன்று கூறுகிறேன். உப்பு ஒருபடியை தும்மட்டி சாற்றினால் அறுபத்து நான்கு சாமம் அரைத்து உலர்த்தி புடமிடு, பற்பமாகும். நாதாக்கள் இவ்வாறு சொல்லவில்லை.

சொல்லாறே யிந்தவுப்பு அனுபானந்தான்
சூட்சாதி சூட்சங்கள் மெத்தவுண்டு

வெல்லாரே வல்லபரை தன்னீலீய
　　விரும்பி நின்ற குன்மமது யெங்கே போச்சு
கொல்லாரே வாயுவெங்கே சூதமெங்கே
　　குறிப்பான நீராம்பல் கட்டியெங்கே
புல்லாரே யிந்தவுப்பு பெரியமாற்கம்
　　புவனியிலே யாருந்தான் புகன்றிடாரே. (38)

இந்த உப்பு அனுமானந்தான். அதில் ரகசியங்களுண்டு. இவ்வுப்பு பற்பத்தை அளவுபடி உட்கொள்ள குன்மம், வாயு, சூதகவாய்வு, வலி, நீராம்பல்கட்டி இவைகள் குணமாகும். இவ்வுப்பு சிறப்பானது யாரும் இவ்வுப்பை சொல்லவில்லை.

கவுசை மகோதரம் நீராம்பலுக்கு மருந்து

புகன்றிடவே மருந்தொன்று கூறக்கேளாய்
　　புனிதமுள்ள சாரம் ஒருகட்டி வாங்கி
நகன்றிடவே வெடியுப்பு பலமோ நான்கு
　　நாதாக்கள் பூனீரு பலமோ மூன்று
துகன்றிட்ட பச்சையது பலமோரெண்டு
　　துடியான சீனமது பலமோ நான்கு
அகன்றிட்ட காரமது பலமோ ஆறு
　　அரியதொரு வீரமது பலமோ ரெண்டு. (39)

சாரத்தை ஒரே கட்டியாக எடுத்துக்கொள். வெடியுப்பு நான்கு பலம், பூனீரு மூன்றுபலம், பச்சை இரண்டுபலம், சீனம் நான்கு பலம், சாரம் ஆறுபலம், வீரம் இரண்டு பலம் மற்றும்.

இரண்டான அண்டோடு பலமோ ஏழு
　　இணையான பேரண்டம் பலமோ எட்டு
முரண்டான யிதுகளெல்லா மொன்றாய்க் கூட்டு
　　முனையான கல்வத்தில் பொடியாய்ச் செய்து
வரண்டான சாரத்துக் கங்கிப் பூட்டி
　　வாகாக குழிப்புடந்தா னிட்டாயானால்
திரண்டுமே சாரமது கட்டிப் போகும்
　　திரளான வேதையிது வேதையாமே. (40)

அண்டோடு ஏழுபலம், பேரண்டம் எட்டுபலம், மேற்படி சரக்குகளுடன் இவைகளையும் சேர்த்து கல்வத்திட்டு பொடிசெய்து மேற்படி சாரக்கட்டிக்கு கவசமிட்டு குழிப்புடம் போட சாரம் கட்டிப் போகும், இதில் வேதை யுண்டாகும்.

வேதையாம் மாந்தற்கு கொடுத்தாயானால்
　　மீளாத கவுசைமுதல் கட்டி போகும்

தன்வந்திரி பகவான்

காதையாம் நீராம்பல் கட்டிபோகும்
கனமான மகோதரம் மாந்தை போகும்
வாதையாம் மேலிசுவு பொருமல் போகும்
வாகான சர்வாங்க வாதம் போகும்
மேதையாம் வாதமெண்பதுவும் போகும்
மெதுவான மருந்தினிட வேகம்பாரே. (41)

உலக மாந்தர்கட்கு மேற்படி மருந்தை அளவுபட கொடுக்க கவுசை கட்டி குணமாகும். மேலும் நீராம்பல் கட்டி, மகோதரம், மாந்தம், மேல் இசிவு, பொருமல், சர்வாங்கவாதம் எண்பது வகை வாதம் காரமுடைய இம்மருந்தால் தீரும்.

நீர்கட்டுக்கு மருந்து

பாரப்பா நீரடைப்பு வந்தபேர்க்கும்
பாங்கான வெடியுப்புப் பலமோவொன்று
நேரப்பா அண்டோடில் வைத்து மூடி
நிலையான குக்குடமே போட்டாயானால்
ஆரப்பா வெடியதுதான் பற்பமாச்சு
வுத்தமரே யிவ்வுலகில் செய்வாருண்டோ
தூரப்பா பற்பமதை கிழங்கின் நீரில்
துரையாக கொடுத்துவிட நீர்கள்போமே. (42)

வெடியுப்பு ஒருபலம் எடுத்து அண்டோட்டில் வைத்து மூடி குக்குட புடம் போட வெடியுப்பு பற்பமாகும், இதை இவ்வுலகில் செய்பவரும் உண்டோ, இந்த வெடியுப்பு பற்பத்தை வாழைக்கிழங்கு நீரில் கலந்து கொடுக்க நீர்க்கட்டு தீரும்.

போமேதான் மலக்கட்டுக் கிரிச்சினங்கள்
பொல்லாத நீர்ச்செரிப்பு செரியாமாந்தம்
ஆமேதான் கல்லடைப்பு சதையடைப்பு
அப்பனே கோடரியா மிதுவேயாகும்
வாமேதான் யிந்தவுப்பை அன்னநீரில்
வாகாக வுண்டிடவே வியாதிபோகும்
தாமேதான் தன்வந்திரி பகவான் தானும்
சாற்றினார் மானிடர்கள் பிழைக்கவென்றே. (43)

மலக்கட்டு கிரிச்சினங்கள், நீர்ச்செரிப்பு,செரியாமாந்தம், கல்லடைப்பு, சதையடைப்பு இவைகள் மேற்படி மருந்தால் தீரும், மேற்படி பற்பத்தை அன்னகாடியில் கொள்ள நோய்கள் தீரும். மானிடர்கள் பிழைப்பதற்காக முறைகளை கூறினேன்.

விரை வாதத்திற்கு எண்ணெய்

பிழைக்கவே மாந்தருக்கு அண்டவாதம்
பிரலாப வேதனையால் செனிக்கும்வாறு
இழைக்கவே எண்ணெயொன்று யியம்பக் கேளும்
இயலான விளக்கெண்ணெய்ப் படிதானொன்று
தழைக்கமுள்ள தக்காளிச் சாறு நாழி
தழுதாழைச் சாருபடி யரையதாகும்
குழைக்கவே சீரகந்தான் பலமோவைந்து
குணமான வெந்தயமும் பலமுமைந்தே. (44)

அண்டவாதத்தால் அவதிப்படும் மனிதர்கட்கு எண்ணெய் ஒன்று கூறுகிறேன். விளக்கெண்ணெய் ஒருபடி தக்காளிச் சாறு நாழி அளவு, தழுதாழைச்சாறு அரைப்படி சீரகம் ஐந்துபலம். வெந்தயம் ஐந்து பலம்.

ஐந்தான சரக்குகளை வறுத்துமேதான்
அன்பாக யெண்ணெயிலே முதிரக் காய்ச்சி
சந்தான மில்லாத நங்கையற்கும்
சார்வான விரைவாத மானிடற்கும்
பந்தாய யெண்ணெய்தனைக் கரண்டிவீதம்
பாங்காக மண்டலந்தான் கொள்வாரானால்
வெந்தான விரைவாதம் யெங்கே போச்சு
வீடுவிட்டுக் காடுரையு மென்னலாமே. (45)

மேற்படி சரக்குகளை வறுத்து மேற்படி எண்ணெயுடன் கூட்டி சாறுகளையும் சேர்த்து பதமாக காய்ச்சிக் கொள். குழந்தை பாக்கியமில்லாத பெண்கட்கும், விரைவாதம் உள்ள மனிதர்களுக்கும் மேற்படி எண்ணெய் கரண்டி அளவு ஒருமண்டலம் உட்கொள்ள விரைவாதம் குணமாகும். பெண்கட்கு குழந்தை பாக்கியமுண்டாம்.

சகலவித தலைநோய்க்கும் நசியாக்கிராணம்

எண்ணலாம் தலைவலியின் வியாதிரோகம்
இடம்விட்டும் போனதற்கு கிராணம் சொல்வேன்
பண்ணலாம் பெருங்காயம் ஓமம்சுக்குப்
பாங்கான முலைப்பாலால் தன்னாலாட்டி
வண்ணலாம் சிறியதொரு சீலையூட்டி
வாகாகப் பிடித்திடவே வலியும் போகும்
புண்ணலாம் நாசியிலே பாய்ந்தபோது
பொல்லாத தலையிடியும் போகும்வாறே. (46)

தன்வந்திரி பகவான்

தலைவலி நோய்க்கு ஆக்கிராணம் கூறுகிறேன். பெருங்காயம்,ஓமம், சுக்கு இவை மூன்றையும், முலைப்பால் தன்னால் ஆட்டி துணியில் தடவி புகையை நாசியில் பிடிக்க தலையிடி குணமாகம்.

காதில் சீழ்வடிகிறதற்கு எண்ணெய்

வாறான மாந்தருக்கும் பாலருக்கும்
 வாகாக எண்ணெய் ஒன்று உரைக்கக் கேளும்
கூறான படிகாரச் சுன்னத்தோடு
 குடிலமாம் கெந்தகமும் சமனாய்க்கூட்டி
தேறான யெண்ணெய்தனில் காய்ச்சியேதான்
 திறமாக விடுகாதில் விட்டாயானால்
நீறான சீழதுவும் நின்றுபோகும்
 நிட்சயமாய் தன்வந்திரி யுரைத்தார்தாமே. (47)

மாந்தர்கட்கும் பாலர்கட்கும் எண்ணெய் ஒன்று கூறுகிறேன். படிகாரச் சுண்ணம்,கெந்தகம் இரண்டையும் சமனெடை எடுத்து எண்ணெயிலிட்டு காய்ச்சி காதில் விட காதில் சீழ்வடிதல் நிற்கும், தன்வந்திரியாகிய யான் சொன்னமுறை பொய்யாது.

நேத்திராஞ்சனத்திற்கு

தாமேதான் மையொன்று சொல்லக்கேளும்
 தயவான திப்பிலியுங் கரியமானும்
ஆமேதான் துத்தமுடன் துருசுதானும்
 அழகான ரோகணியு மனோசிலையும்
சாமேதான் அதிமதுரம் யாவையோடு
 சார்வான வெள்ளியோடு பொன்னுங்கூட்டு
நாமேதான் தாம்பரமாம் அயத்தினோடு
 நற்றேனில் விட்டுமே யறைத்திடாயே. (48)

மை ஒன்று கூறுகிறேன். திப்பிலி கரியமான், துத்தம், துருசு,ரோகனி, மனோசிலை, அதிமதுரம், இவற்றுடன் வெள்ளி,பொன், தாமிரம்,அயம் இவைகள் சமமாக கூட்டி தேனில் அரைத்திடு. (கரியமான்-விளங்கவில்லை)

அறைத்துமே அறுபத்து நாலு சாமம்
 அன்பாகக் குன்றிபோ லுருட்டிக் கொண்டு
முறைத்துமே முலைப்பாலில் வுரைத்துமேதான்
 முசியாமல் மண்டலந்தா னிட்டாயானால்
கறைத்துவிடும் பில்லங்கள் படலம் யாவும்
 கனமான தசை வளரல் காணாதோடும்

திறைத்துமே திறைமறைவு யாவும் நீங்கி
திடமாக லோகபதி வாழலாமே. (49)

மேற்படி மருந்தை அறுபத்து நான்கு சாமம் அரைத்து குன்றி அளவு உருட்டிக்கொள். முலைப்பாலில் உரைத்து கண்ணிலிட பில்லங்கள், படலம், தசைவளருதல் இவைகள் கரைந்து திரைமறைவு நீங்கி குணமாகும்.

மாலைக்கண்ணுக்கு நீர்வடிதலுக்கு மை

வாழலாம் வெகுகோடி காலமப்பா
அறையுரே னின்னமொரு பாகம் கேளு
ஆழவே நீரருகல் மாலைக் கண்ணு
அரியதொரு புழுவெட்டி தடிப்புத்தீர
நாழவே மருந்தொன்று செப்பக்கேளும்
நயமான ரோகணியும் துத்தம் இந்து
காழவே தேன்வளையல் முத்துரத்தினம்
கணக்காக வகைக்குச் சரியாய்க் கூட்டே. (50)

நீர்வடிதல், மாலைக்கண், புழுவெட்டு, தடிப்பு இவைகள் நீங்குவதற்கு மருந்து ஒன்று கூறுகிறேன். ரோகணி, துத்தம், இந்துப்பு,தேனீவளையல், முத்து, ரத்தினம் இவைகள் சரிஎடை கூட்டு.

கூட்டியே முலைப்பாலி லரைத்து மைந்தா
குணமாக அறுபது சாமமிட்டு
நீட்டியே மண்டலந்தா னிட்டாயானால்
நீங்காத கண்மழுங்கு புழுவுந்தீரும்
ஓட்டியே காலைமாலை விடாது மைந்தா
உத்தமனே கண்ணினி லிடுவீரானால்
தேட்டமென்ற கண்ணொளிவு தெரியும்பாரு
திறமான மையிதுவாம் மையதாமே. (51)

மேற்படி கூட்டியதை முலைப்பாலால் அறுபது சாமம் அரைத்து ஒரு மண்டலம் கண்ணிலிட கண்மழுங்கல், புழு இவைகள் தீரும். காலை,மாலை இருவேளையும் விடாது இம்மருந்தை கண்ணில் போட கண்ஒளி மிகும். சிறப்பான மை இது.

நேத்திராஞ்சன வலிக்கு

மையான மையொன்று விளம்பக்கேளாய்
மானிடர்க்கு சூட்சமொன்று மறைப்பில்லாமல்

தன்வந்திரி பகவான்

கையான மூலிகையில் புண்ணாக்கோடு
கவுதும்பை பழம்புளியுங் கூடச் சேர்த்து
தையான படிகாரம் பொரித்துப்போடு
தகரமா மிலைக்கொழுந்து சரியாய்ச் சேரு
மெய்யான கண்ணுக்கு மிடுவீராகில்
மேதினியில் கண்வலிக ளகன்று போச்சே. (52)

மை ஒன்று கூறுகிறேன். ரகசியமான இதை வெளிப்படையாக கூறுகிறேன். புண்ணாக்கு மூலிகை, கவுதும்பை, பழம்புளி, பொரித்த படிகாரம், தகரஇலைக்கொழுந்து இவைகளை சேர்த்து கண்ணுக்கு இட கண்வலிதீரும். (தகரம் என்பது ஒருவகை மரம்).

தந்த வியாதிக்கு மருந்து

போச்சப்பா தந்தமென்ற வியாதிக்கப்பா
பொல்லாத அரப்பொடியு மக்கிராகாரம்
நீச்சென்ற படிகாரம் மிருதார் சிங்கு
நோரான லவங்கையிடப் பட்டையப்பா
ஆச்சென்ற காசுக்கட்டி துருசுங்கூட்டி
அப்பனே கணக்காக கல்வம் போடு
பாச்சென்ற எலுமிச்சம் பழச்சாற்றாலே
பாங்குபெற நாற்சாம மாட்டு ஆட்டே. (53)

பல்வியாதிக்கு மருந்து கூறுகிறேன். அரப்பொடி, அக்ரக்காரம், படிகாரம், மிருதார் சிங்கி, லவங்கப்பட்டை, காசுக்கட்டி, துருசு. இவைகளை சரிஎடை எடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நான்கு சாமம் ஆட்டிடு.

ஆட்டியே நெருங்கவே மடிந்தபின்பு
அப்பனே சீசாவிற் பதனம் பண்ணு
கூட்டியே நான்குநாள் தேய்த்துவந்தால்
குடிலமாம் தந்தஅசைவு தந்தசன்னி
நீட்டியே சீழ்விழல் ரத்தங்காணல்
நிலையாது வுடலை விட்டு நீங்கும்பாரு
தாட்டிகமா யிந்தநூல் முறைபொய்யாது
தப்பாது தப்பாது திண்ணந்தானே. (54)

மேற்படி சரக்குகளை அரைத்து நன்றாக மைபோலான பின்பு சீசாவில் பதனம் செய்வாயாக. இதனால் நான்கு நாட்கள் பல் தேய்க்க தந்தவாய்வு, தந்தசன்னி, தந்தத்தில் சீழ்வடிதல், ரத்தம்வடிதல் இவைகள் நீங்கும். இந்த நூலில் சொல்லியபடி முறையாகச் செய்ய நோய்கள் தீருவது திண்ணமாகும்.

மேக வெள்ளைக்கு மருந்து

திண்ணமா மேகவெள்ளை மாந்தருக்குத்
திடங்குறைய நாதத்தைக் கெடுக்கவென்றால்
வண்ணமாம் சிங்கியுட பற்பந்தானும்
வளமாக பவளமுடன் கல்நார்தானும்
அண்ணமாம் சிங்கியுட பற்பங்கூட்டி
அப்பனே ஆவினும் வெண்ணெய் தன்னில்
கண்ணமாய் மண்டலங்கால் கொண்டதானால்
கடம்விட்டு மேகமது பறக்கும் பாரே. (55)

மேக வெள்ளை நோய்க்கு மருந்து கூறுகிறேன். சிங்கிபற்பம், பவளபற்பம், கல்நார், பற்பம், இவைகள் சரி எடைகூட்டி ஆவின் வெண்ணெயில் கலந்து ஒரு மண்டலம் உட்கொள்ள மேகநோய் நீங்கும்.

பறக்குது யிந்தமுறை கைவிடாதே
பாராளு மன்னவற்கும் சிவயோகிக்கும்
திறக்கமுள்ள யிம்மருந்து வைக்கும்பாகம்
செய்முறையாம் கைமுறையாய் தேர்ந்துபாரு
உறக்கமா யிருந்துவிட்டால் முறைபொய்யாகும்
வுத்தமற்கு யிம்மருந்து செப்புவாய்நீ
சிறக்கமாய் மருந்தினிட பாகம் சொல்வேன்
திறமாகச் செய்துநீ பிழைத்திடாயே. (56)

பாராளும் மன்னவருக்கும், சிவயோகிக்கும் இம்முறை எளிதாகும், செய்முறை, கைம்முறையை ஆராய்ந்து செய். மயங்கி இருந்துவிட்டால் முறை பொய்யாகும். உத்தமர்க்கு இம்முறையை நீ சொல்வாயாக. மருந்தின் முறைகளை கூறிவிட்டேன். செய்து பிழைத்துக் கொள்வாயாக.

கல்நார் பற்பம்

பிழைப்பதற்கு கல்நாரு பற்பஞ்சொல்வேன்
பொல்லாத கல்நாரை நீற்றுவாறார்
உழைப்பதற்கு கல்நாரை சேர்தான் வாங்கு
உத்தமனே பசுவினிட கோமியத்தில்
கழைக்கசடு தானகலப்பத்து நாள்
பாங்காக வூறவைத்து யெடுத்துக் கொண்டு
பழைப்பகற்றி ஆடுதின்னாப் பாளைதன்னில்
பாங்காக கசப்புடந்தான் போடுபோடே. (57)

தன்வந்திரி பகவான்

கல்நார் பற்பத்தை கூறுகிறேன். கல்நாரை நீற்றுவதற்கு புத்தி கூர்மை வேண்டும். கல்நார் ஒருசேர் எடுத்து பசுங் கோமியத்தில் பத்து நாள் ஊறவைத்து, ஆடுதின்னாப் பாளைச் சாற்றிலரைத்து கசப்புடம் போடுவாயாக. (கசப்புடம் = பெரியபுடம்)

சிங்கி பற்பம்

போட்டபின்பு ஆறவிட்டு எடுத்துப் பாரு
பொல்லாத கல்நாறு தவளம் போலாம்
நீட்டாமல் சீஷாவில் பதனம் பண்ணு
நேரான சிங்கியிட பற்பம் கேளு
கூட்டமாம் வெள்ளாட்டுச் சாணந்தன்னில்
குணமாக வூறவைத்துப் பத்துநாள்தான்
தேட்டமாய் தெளிவிருத்து யெடுத்துக் கொண்டு
திறமாக மூன்றுநாள் ரவியில்வையே. (58)

புடம்போட்டு ஆறவிட்டு எடுத்துப்பார். கல்நார் பற்பம் முத்துப் போல் பிரகாசிக்கும். ஜாடியில் பத்திரப் படுத்து. சிங்கிபற்பம் கூறுகிறேன். வெள்ளாட்டுச் சாணத்தில் மிருதார் சிங்கியை பத்து நாளூறவைத்து பின் வெள்ளாட்டு சாணி கரைத்து தெளிவை வாங்கி அதில் மிருதார் சிங்கியை இட்டு மூன்றுநாள் வெய்யிலில் வைப்பாயாக.

வையப்பா சிங்கிதனை யெடுத்துக் கொண்டு
வளமாக கருநொச்சிச் சாற்றாலாட்டி
கையப்பா வில்லை செய்து ரவியுலர்த்திக்
கனமாக கெசபுடமே போட்டாயானால்
மெய்யப்பா சிங்கிபற்ப மென்ன சொல்வேன்
மேதினியில் எம்போலே யாருஞ் சொல்லார்
பொய்யப்பா யென்று சொல்லித் தள்ளவேண்டாம்
புகழ்ச்சியாய் இம்மருந்தை செய்துபாரே. (59)

மேற்படி சிங்கியை பதம் செய்து கருநொச்சி சாற்றால் அரைத்து வில்லைசெய்து வெய்யிலில் உலர்த்தி கெசபுடமிட சிங்கிபற்பமாகும். என்னைப் போல் யாரும் சொல்லமாட்டார். இது பொய் என்று நினைக்காமல் இம்மருந்தை செய்து இதன் குணத்தைப் பார்ப்பாயாக.

பவளபற்பம்

பாரப்பா பவளபற்பம் சொல்லக்கேளு
பாங்கான முயலினுட ரத்தம் வாங்கி
சீரப்பா அறுசாம மாட்டு ஆட்டு
சிறப்பான பில்லை செய்து ரவியிற்போடு

காரப்பா கெசபுடந்தான் போட்டாயானால்
கசடற்ற பற்பமது தவளம் போலாம்
மாரப்பா பற்பமதைப் பதனம் பண்ணு
மகாகோடி வித்தையிது வித்தையாமே. (60)

பவள பற்பத்தைக் கூறுகிறேன். முயலின் ரத்தத்தால் பவளத்தை அறுசாமம் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்து, பின் கெசபுடமிடு பவளம் தவளம் போல் பற்பமாகும், இதனால் மகாகோடி வித்தையாகும். (தவளம் = முத்து)

மிருதார் சிங்கி பற்பம்

வித்தையாம் மிருதாரு பற்பங்கேளு
விரும்பியதோர் மிருதாரு கட்டிவாங்கி
சுத்தையாம் கோரையின் கிழங்குச் சாற்றால்
சுகமாக வேயரைத்துக் கவசம் பூண்டு
கத்தையாம் கசபுட மிட்டாயானால்
களங்கமற்ற தவளம் போல் பற்பமாகும்
நத்தையாம் சிமிழ்தனிலே பதனம் பண்ணு
நாதாக்க ளதீதவித்தை காணுங்காணே. (61)

மிருதார் சிங்கி பற்பமுறையைக் கூறுகிறேன், மிருதார் சிங்கியை கட்டியாக எடுத்து கோரை கிழங்கு சாற்றால் அரைத்து உலர்த்தி கவசமிட்டு கசபுடமிடு தவளம் போல் பற்பமாகும். சிமிழில் பதனம் செய்வாயாக.

சகல மேகங்களுக்கு இடிவல்லாதி

காணப்பா ரசங்கெந்தி ஊசிக்காந்தம்
கருவான சிங்கியுட பூரம் தானும்
ஊணப்பா துத்தமுடன் துருசுதானும்
உத்தமனே கெந்தகமுங் கல்லுக்காந்தம்
வாணப்பா ரசமுடனே கோஷ்டமேலம்
வகையான தேசாவரம் கடுக்காய்த் தோலும்
நீணப்பா மிளகுசுக்கு காட்டுச்சீரகம்
நேரான வாய்விளங்கம் சமனாய்க் கூட்டே. (62)

ரசம்,கெந்தகம், ஊசிக்காந்தம், சிங்கி, பூரம்,துத்தம், துரிசு, இவைகளை சமனெடை எடுத்துக் கொண்டு கெந்தகமுடன் கல்காந்தமும் கூட்டி அரைத்துப் பின் ரசம் சேர்த்து அரைத்து கோஷ்டம்,ஏலம், தேசாவரம், கடுக்காய்த்தோல்,மிளகு சுக்கு, காட்டுச்சீரகம், வாய்விளங்கம் இவற்றை அளவாகச் சேர்த்துக் கொண்டு.

கூட்டியே வசம்புடனே கருவாய்ப்பட்டை
குணமான செங்கொட்டைச் சித்திரமூலம்

நீட்டியே தாளிசமாம் பத்திரிகூட்ட
நேரான கொள்ளுடனே எள்ளுங்கூட்டு
தாட்டிகமாய் தேத்தானின் கொட்டைசேரு
தயவாக அமுக்கரா கொல்லன் கோவை
பூட்டகமா மிம்மருந்தோடு அண்டம் நான்கு
புனிதமாச் சேர்த்துக் கல்லுரலில் தாக்கே. (63)

வசம்பு, கருவாப்பட்டை, சேங்கொட்டை, சித்திரமூலம், தாளிசபத்திரி, கொள்ளு, எள், தேத்தான் கொட்டை, அமுக்கராக் கிழங்கு, கொல்லன் கோவைக் கிழங்கு முதலானவற்றையும் சம அளவாகச் சேர்த்து நான்கு முட்டைகளையும் சேர்த்துக் கொண்டு கல்லுரலில் இட்டு,

தாக்கப்பா மூன்று நாளாறு வேளை
தயவாக யிருப்புலக்கைச் சாடு சாடு
நோக்கப்பா மசிந்தபின் எடுத்துக் கொண்டு
நுருங்கவே பரணிதனி லடைத்துமேதான்
தூக்கப்பா மண்டலந்தான் யிரண்டுவேளை
சுகமாக வுண்டு வரப் பத்தியங்கேள்
நீக்கப்பா வாயுவென்ற பதார்த்தந்தள்ளு
நேரான மற்றதெல்லாஞ் சேருசேரே. (64)

காலை மாலை மூன்று நாட்களுக்கு நன்றாக இடித்து பரணியில் பத்திரப்படுத்து. இரண்டுவேளையும் ஒருமண்டலம் உட்கொள்ள வேண்டும். வாய்வு பதார்த்தத்தை நீங்க வேண்டும். மற்றபடி பத்தியமில்லை.

சேரப்பா பத்தியந்தா னிதற்கேயில்லை
சிறப்பாகத் தீருகின்ற வியாதிகேளு
கூரப்பா வாதமென்ற தெண்பதும் போம்
குடிலமாம் சூலைபதினெட்டும் போகும்
தீரப்பா பித்தவெடி யறுபதும் போகும்
தீரான வுபத்திரமாங் கண்டமாலை
பேரப்பா கால்குடைச்சல் கரணைத்தீரும்
பேரான மூலமுத லகன்றுபோமே. (65)

மேற்படி மருந்தால் திருகின்ற நோய்களை கூறுகிறேன். எண்பது வகை வாதம், பதினெட்டுவகை சூலை, அறுபது வகை பித்தவெடி, தீராத கண்டமாலை, கால்குடைச்சல், கரணை, மூலம் இவைகள் நீங்கும்.

போமேதான் பிறவலியும் ராசக்கட்டி
பொல்லாத அருவையொடு மகோதரம்போம்
சாமேதான் அண்டத்தின் புத்தும்போகும்
சாங்கமாம் புண்புரைகள் சடுதியிற்போம்

நோமேதான் வாயூரல் பொருமல் போகும்
நோக்கமுள்ள புழுவெட்டி தடிப்புப் போகும்
நாமேதான் செங்கிரந்தி கருங்கிரந்தி
நலமான யிடிகிரந்தி புரைகள்தானே. (66)

மற்றும் உடல்வலிகள் ராசப்பிளவைக் கட்டி, அருவை, மகோதரம், அண்டபுற்று, புண்புரைகள், இவைகள் குணமாகும். மேலும் வாயூரல், பொருமல், புழுவெட்டு, தடிப்பு, செங்கிரந்தி, கருங்கிரந்தி இடிகிரந்தி, புரைகள் நீங்கும்.

தானான மூக்கறுத்தன் யோனிப்புற்று
சங்கடமாம் பிடிப்புற்றுக் கன்னப்புற்று
கோனான வண்டுகடி தடிப்பன் புண்கள்
குணமாகு மிந்தோர் யிடிவல்லாதி
சேனான யிம்மருந்து யாருஞ் சொல்லார்
தெளிவாக தன்வந்திரி பகவான் தானும்
பானாக மானிடர்கள் பிழைக்கவென்று
பாடிவைத்தேன் நந்தீசர் பாதங்காணே. (67)

மேற்படி மருந்து ஒரு மண்டலம் உட்கொள்வதன் மூலம் மேலும் யோனிப்புற்று, வண்டுகடி, தடிப்புண்கள் இவைகள் தீரும். இது இடிவல்லாதி என்ற மருந்து என்னைப்போல் யாரும் சொல்லவில்லை. மானிடர்கள் பிழைக்க வேணடி தன்வந்திரி பகவானாகிய நான் எனது குரு நந்தீசர் பாதம் வணங்கி மேலும் மருந்துகளை கூறுகிறேன்.

இந்நூலின் தொகுப்பு
காவியப் புகழ்ச்சி

காணவே யுகந்தோறும் சாஸ்திரங்கோடி
கணக்கில்லை சித்தருக்கும் ரிஷிகட்குந்தான்
தோணவே வயித்தியமா மிரண்டு லட்சம்
துணையான வாதமது வொருலட்சந்தான்
ஈனவே சித்தர்கள் சாஸ்திரக் கோர்வை
ஏகமாய் மாராட்டஞ் செய்து வைத்தார்
பூணவே யெந்தனிட தொகுப்பு சொல்வேன்
புராதனமா மிந்தநூல் தெளிந்து பாரே. (68)

யுகம் தோரும் சாஸ்திரங்கள் கோடி சொன்னார்கள். சித்தர்கள், ரிஷிகள், வயித்தியத்தில் இரண்டு லட்சமும் வாதத்தில் ஒரு லட்சமும் சித்தர்கள் சாஸ்திரங்களை சொன்னார்கள். ஆனால் முன்பின் மறைத்து மாறுதல் செய்து சொன்னார்கள். என்னுடைய நூல்களின் தொகுப்பைக் கூறுவேன்.

தன்வந்திரி பகவான்

பாரப்பா காவியந்தா னைந்து சொன்னேன்
பாங்காகவே காவியந் தானொன்று
சீரப்பா தத்துவ காவியந்தானொன்று
தெளிவான பூரண காவியந் தானொன்று
வேரப்பா சிறுகாவிய மாயிரந்தான்
விளம்பினோம் வயித்திய காவியமாகும்
காரப்பா காவியத்தில் புகழ்ச்சிமெத்தக்
கருவாளி கண்டறிந்து செய்வார்தாமே. (69)

ஐந்து காவியங்களை சொன்னேன். இக்காவியம் ஒன்று தத்துவ காவியம் ஒன்று, பூரணகாவியம் ஒன்று, ஆயிரம் பாடலாக சிறுகாவியம் ஒன்று, மற்றுமொரு வயித்திய காவியம் ஆக ஐந்து காவியங்களும் சிறப்பானதாகும். புத்திகூர்மை உள்ளோர் ஆராய்ந்து செய்வார்கள்.

தாமேதான் யிந்தநூல் கோர்வையின்றி
சாற்றினேன் சிந்தாமணி யாயிரந்தான்
மோனேதான் நிகண்டுமுன் றூறுஞ்சொன்னேன்
புகழாக சுருக்கமிரு னூறுஞ் சொன்னேன்
வேமேதான் அந்நூறு கலைக்கியானம்
விளம்பினே னிந்நூலுக் கொரு கோர்வை
வாமேதான் ஆயிரங் கும்மி சொன்னேன்
வகுப்பாக யிந்தனூல்போல் சொல்லாரன்றே. (70)

மேற்படி நூல் கோர்வை இல்லாமல் சிந்தாமணி என்ற ஆயிரம் பாடல் கொண்ட நூலும் நிகண்டு முன்னூறு என்றும். கலைக்கியாமை ஐந்நூறு என்றும் இந்நூலுக்கு கோர்வையாக சொல்லிவிட்டேன். கும்மி ஆயிரம் என்ற நூலும் சொன்னேன். இந்நூலைப்போல் யாரும் சொல்லவில்லை.

சொல்லார்கள் நாதாக்கள் சித்தர்தாமும்
தொகுப்புடனே காவியந்தா னிதுபோல் மார்க்கம்
வெல்லார்க ளிம்மருந்து யாருஞ் சொல்லார்
வேணவித ரசாயனங்கள் கற்கந் தோன்றும்
சொல்லார்கள் வயித்தியர்க ளிம்மருந்தால்
சொல்லரிது சொல்லரிது யிதுபோல் காணார்
புல்லர்கள் கைபாகம் பிசகிடாமல்
போற்றினேன் நந்தி பாதம் போற்றினேனே. (71)

நாதாக்களும், சித்தர்களும் இக்காவிய தொகுப்பைப் போல யாரும் சொல்லவில்லை. ரசாயனம், கற்கம் போன்ற மருந்துகளைப்பற்றி எவரும் என்னைப்போல் கூறவில்லை. கைபாகம் தவறாமல் செயவாயாக. நந்தி பாதம் வணங்கி மேலும் கூறுகிறேன்.

தடிப்பு-அரையாப்புக்கு

போற்றினேன் ஆயுளு வேதமாகும்
  பொல்லாத அரையாப்புக் கறைவேன் கேளும்
சாற்றினேன் செங்கோட்டை சித்திரமூலம்
  சார்வாகப் பனவெல்லம் காசுக்கட்டி
நூற்றினேன் காடியென்ற காரஞ்சேர்த்துத்
  துடிப்பாக கச்சை கொண் டிறுக்கிக் கட்டு
ஆற்றுவாய் மூன்றுநாள் பொறுத்தவிழ்க்க
  அப்பனே கட்டியது வுடையும் பாரே. (72)

பிளாஸ்திரி

உடையுமோ ரத்தமுடன் சீழும்போகும்
  வுள்வீச்சுப் புறவீச்சு பிரவும்போகும்
இடையுமே நரம்புவலி யிசுவும் போகும்
  இணக்கமாம் பிளாஸ்திரி யொன்றியம்பக் கேளு
கடையுமே குங்கிலியம் பலந்தானொன்று
  பசு வெண்ணெய் தனிலூட்டிக் கடைந்தாயானால்
அடையுமே வெண்ணெயது திரளும்பாரு
  அப்பனே அரனுரைத்தார் உமைக்குந்தானே. (73)

அரையாப்புக்கு ஆயுள் வேதம் கூறுகிறேன். சேங்கொட்டை, சித்திரமூரம், பனைவெல்லம், காசுக்கட்டி காடிக்காரம் இவைகளை சமனெடை எடுத்து அரைத்து கட்டிமீது வைத்து துணியை இறுக்கமாக சுற்றி மூன்றுநாள் சென்றபின் பிரிக்க கட்டி உடைந்திருக்கும், ரத்தம் சீழ் இவைகள் நீங்கி உள்வீக்கம்,புறவீக்கம் இவைகள் நீங்கும். நரம்புவலி, இசிவு இவைகள் தீரும். பிளாஸ்திரி ஒன்று கூறுகிறேன். குங்கிலியம் ஒருபலம் எடுத்து பசுவெண்ணெயிலிட்டு கடைய வெண்ணெய் திரளும்.

அரையாப்பு எண்ணெய்

தாமேதான் எண்ணெய்தனை மூலமிட்டக்கால்
  தயவாக ரணமதுதான் தீரும்பாரு
கானேதான் யெண்ணையொன்று சொல்வேன்பாரும்
  கருவான பூரமது பலமோவொன்று
பானேதான் விளக்கெண்ணெய் படிதானொன்று
  பாங்காக ரசபற்பம் பலங்கால் சேரு
தேனேதான் நெய்ச்சிட்டி மூலிதானும்
  திறமாகச் சமனிடைதான் தாக்குதாக்கே. (74)

தன்வந்திரி பகவான்

மேற்படி வெண்ணெயை துணியிலூட்டி மூலத்தில் கட்ட ரணங்கள் தீரும், மேற்படி கட்டி உடைந்தபின் இதைகட்ட ரணங்கள் குணமாகும். மேலும் எண்ணெய் ஒன்றை கூறுகிறேன். பூரம் ஒருபலம், விளக் கெண்ணெய் ஒருபடி, ரசகற்பம் கால்பலம், நெய்ச்சிட்டி மூலிகை இவைகளை கூட்டிக்கொள்.

தாக்கியே மெழுகுபதம் தன்னில்காய்ச்சி
  தயவாக ஏழுநாள் கொள்வாயானால்
போக்கியே நோய்களெல்லாம் அகன்றுபோகும்
  பொல்லாத வாயுவென்றதகன்று போகும்
கிரந்தியரை யாப்பு முதல் யாவும்போகும்
  நிலையான மேகவெட்டை தீரும் பாரும்
தேக்கியே நில்லாதே யிந்தபாகம்
  திறமாகச் செய்து நீ கண்டு பாரே. (75)

கூட்டியதை மெழுகு பதமாக காய்ச்சி ஏழுநாளுட்கொள்ள அரையாப்பு, மேகவெட்டை இவைகள் இம்மருந்தால் தீரும். இதைசெய்து ஆராய்ந்து பார்ப்பாயாக.

கொறுக்குப் புண்ணுக்குப் பிளாஸ்திரி

பாரப்பா மாந்தற்கு கொறுக்கே வந்தால்
  பாடுகின்றேன் மூலமொன்று செப்பக்கேளு
சீரப்பா கெந்தகமும் பூரமொன்று
  சிறப்பான மிருதாறு சிங்கிதுத்தம்
கூரப்பா குங்கிலியம் சமனதாகக்
  குறிப்பாகத் தேங்காய் நெய் தன்னாலாட்டி
நேரப்பா நல்லசலம் விட்டுமேதான்
  நலமாக ஏழுமுறை கழுவுவாயே. (76)

கொருக்குக்கிற்கு மருந்து கூறுகிறேன். கெந்தகமும் பூரமும் மிருதாரு சிங்கி, துத்தம், குங்கிலியம் இவைகளை சமனாக சேர்த்துக் கொள். பின் தேங்காய்ப் பாலால் அரைத்து நீர்விட்டு ஏழுமுறை கழுவிக்கொள்.

கழுவியே மூலமதனை யெடுத்துக்கொண்டு
  கடிய ரணப் புண்ணதனில் இடுவீராகில்
நழுவிவிடும் நாற்றங்கள் ஆறாப்புண்கள்
  நளினமா மிந்தமுலாம் சுருக்குமெத்த
பழுவியே யாவருக்குஞ் சொல்லொணாது
  பாங்காகக் குகைதனிலே பதனம் பண்ணு
தழுவியதோர் மூன்றுநா ளாறு வேளை
  தப்பாது தப்பாது திண்ணந்தானே. (77)

மேற்படி கழுவியதை புண்ணிற்கு போட குணமாகும். கெட்டநாற்றம் உடைய ஆறாத புண்கள் குணமாகும். யாருக்கும் சொல்லலாகாது. இது சுருக்கமான மருந்து. மூன்றுநாள் ஆறுவேளையில் குணமாவது திண்ணம்.

சகலரணங்களுக்கு முலாம்

திண்ணமா மிம்மருந்த தனையகற்றித்
திறமாகக் களிம்பொன்று தேர்ந்துகேளு
கண்ணமா மிலிங்கமொடு துத்தந்தானும்
நலமான சிங்கியுடன் கெந்தந்தானும்
வண்ணமாங்குங்கிலியம் ரசக்கற்பூரம்
வளமான கடுக்காயு மாசிக்காயும்
நிண்ணமா மிதுகளொன்றுந் தப்பிடாமல்
நேரிடையாய் சமனிறுத்துப் போட்டிடாயே. (78)

மேற்படி சகலரணங்கட்கும் களிம்பு ஒன்று கூறுகிறேன். லிங்கம்,துத்தம், சிங்கி, கெந்தகம். குங்கிலியம், ரசகற்பூரம், கடுக்காய், மாசிக்காய் இவைகளை சமனெடை எடுத்துக்கொள்.

போட்டிடாய்ப் பசுவினிட வெண்ணெய்தன்னில்
பொலிவாக மூன்றுநா ளரைத்துமேதான்
காட்டிடாய் நல்லபன்னீர் கொண்டுதாக்கிக்
கருவான முலாமதனை யரைத்துமேதான்
நீட்டிடாய் பரணி தனி லடக்க்ஞசெய்து
நீணிலத்தில் மாந்தருக்கு ரணங்கட்கீய்நதால்
மூட்டிடாய் புண்புரைக ளகன்றுபோகு
முத்தமனே தன்வந்திரி வலுமைபாரே. (79)

மேற்படி சரக்குகளைபசுவின் வெண்ணெயில் மூன்றுநாளரைத்து பின் பன்னீர்விட்டு நன்றாயரைத்து பரணிதனில் பத்திரப்படுத்து, புண்களுக்கும் தீராத புண்புரைகட்கும் இம்மருந்தைப் போட குணமாகும்.

பாரப்பா சத்தி விக்கல் கொண்ட பேர்க்கு
பாங்கான சந்தனமுமகிலுமேலம்
தீரப்பா சாம்பிராணிப் பதங்கூடத்
திறமான சீரகமு மொக்கத்தாக்கி
கூரப்பா சுங்கானில் புகைபிடிக்க
குடிலமாம் விக்கலது சத்திபோகும்
தேரப்பா யிம்மருந்தை வெளிவிடாதே
தெளிவாக ரிஷிகட்கு முரைத்ததாமே. (80)

தன்வந்திரி பகவான்

சத்தி விக்கலுக்கு மருந்து கூறுகிறேன். சந்தனம்,அகில், ஏலம், சாம்பிராணிப் பதங்கம், சீரகம், இவைகளை சரி எடை எடுத்து சுங்கானிலிட்டு புகைபிடிக்க சக்திவிக்கல் தீரும். இம்மருந்தை வெளியில் சொல்லலாகாது. இது ரிஷிகட்கு சொன்னமுறை.

மதமூர்ச்சை மயக்கம் தீரமருந்து

தாமேதான் மதமுர்ச்சை கொண்டபேர்க்குத்
  தயவாக மருந்தொன்று கூறக்கேளும்
நாமேதான் மிளகுடனே சுக்குத்தானும்
  நலமான கிராம்புடனே லவங்கப்பட்டை
போமேதான் வுளுந்துடனே கருப்பங்கட்டி
  பொன்னா வரையுடனே முத்தக்காசு
காமேதான் எலுமிச்சஞ் சாற்றாலாட்டிக்
  கருவாகக் கண்ணிலே தீட்டுவாயே. (81)

மதமூர்ச்சை என்ற மயக்கம் கொண்டவர்கட்கு மருந்து ஒன்று கூறுகிறேன். மிளகு, சுக்கு, கிராம்பு, லவங்கப்பட்டை, உளுந்து, வெல்லம், பொன்னாவிரை, முத்தக்காசு இவைகளை சரி எடை கூட்டி எலுமிச்சை சாற்றாலாட்டி கண்ணில் தீட்டு.

தீட்டுவாய் காலை மாலை யிரண்டுவேளைத்
  திடமாக மையினுட வேகம்பாரு
கூட்டுவாய் தலைதேய்க்கத் தயிலமொன்று
  கூறுவேன் கச்சுப்பாலை வெள்வேலன்தான்
நீட்டுவாய் காரெள்ளு யெண்ணெய் தன்னில்
  நேராகப் பசும்பாலு மிட்டுக்காய்ச்சி
பூட்டுவாய் தயிலமது காய்ச்சியேதான்
  புகழாகக் கடுகுபதம் தன்னில் வாங்கே. (82)

காலை மாலை இரண்டுவேளை மேற்படி மையை தீட்ட மத மூர்ச்சை என்ற மயக்கம் தீரும். கச்சுப்பாலை வெள்வேலன், காரெள்ளின் எண்ணெய் பசும்பால் இவைகளை கூட்டி கடுகு பதமாக தயிலம் காய்ச்சிக்கொள்.

வாங்குவாய் தயிலமதை சிரசிற்றேய்க்க
  வாகான தலைமயக்கம் மூர்ச்சைபோகும்
தாங்குவாய் பித்தநீர் வாதநீரும்
  தாழ்வான பிறவலியும் சன்னிபோகும்
தேங்குவாய் முழுகுநாள் தன்னிலேதான்
  தேடவே வேண்டாமே புகைபுளிப்பு

பாங்குடனே பத்தியமோ காரு காரு
பகவான் தன்வந்திரியும் புகன்றவாறே. (83)

மேற்படி தயிலத்தை தலையில் தேய்க்க மயக்கம் மூர்ச்சை,பித்தநீர், வாதநீர், வலிகள், சன்னி இவைகள் தீரும். தைலம் முழுகும் நாளில் புகை, புளிப்பு நீக்கி பத்தியமாக இருக்கவேண்டும்.

நெற்றிசன்னிக்குத் தயிலம்

புகன்றிட்ட சன்னிக்கு மருந்துகேளும்
புகழாக எருக்கன்வேர் நாணல்வேரும்
துகன்றிட்ட வேப்பெண்ணெய்க் காலாழாக்குத்
திறமான நல்லெண்ணெய் அரையாழாக்கு
வகன்றிட்ட நெய்தானு மீராழக்கு
வாகான பசும்பாலு மூவாழாக்கு
அகன்றிட்ட பாண்டமதில் விட்டுக்காய்ச்சி
அழகுபெற சாடிதனி லிறக்கிடாயே. (84)

வேப்பெண்ணெய் கால் ஆழாக்கு, நல்லெண்ணெய் அரை ஆழாக்கு, நெய் இரண்டு ஆழாக்கு, பசும்பால் மூன்று ஆழாக்குப் பாண்டத்தில் ஊற்றி எருக்கன்வேரும் நாணல் வேரும்போட்டுக் காய்ச்சி இறக்கிக்கொள்.

இறக்கியே நந்தீசர் பாதம்போற்றி
யியலான தைலமதை சிரசிற்தேய்க்க
உறக்க முள்ள சன்னியது யெங்கேபோச்சு
வுத்தமனே பிறவீச்சு எங்கேபோச்சு
திறக்கமுள்ள காலிசுவு எங்கேபோச்சுத்
திடமான கையிசுவு யெங்கேபோச்சு
பறக்கமுள்ள காக்கைவலி எங்கேபோச்சு
பதிவாகத் தயிலத்தின் முறையை காணே. (85)

காணப்பா தயிலத்தின் வேகமெத்தக்
கருவாளி யானாக்கால் கண்டுகொள்வான்
பூணப்பா பத்தியமே சுருவுமாகும்
பொலிவான சீதளப் பண்டங்களாகா
ஊணப்பா புளிபுகையும் தவிர்த்துப்போடு
வுத்தமனே வாயுவென்ற பதார்த்தந்தள்ளு
வேணப்பா கையோக மாகா
விரும்பியே தன்வந்திரி யுரைத்தவாறே. (86)

தைலத்தை தலையில் தேய்க்க சன்னி தீரும். பிறவீச்சு, கால் இசிவு, கை இசிவு காக்கை வலிப்பு இவைகள் தீரும். சீதளபொருட்கள், வாயுப்பொருட்கள், புளிபுகை, போகம் இவைகளை நீக்க வேண்டும்.

மண்டைக் குடைச்சலுக்குத் தயிலம்

வாறான மண்டையிடி வந்தபேர்க்கு
வாகாகத் தயிலமொன்று செப்பக்கேளும்
நீரான கஸ்தூரி மஞ்சள்தானும்
நேரான கொம்பரக்கு தேவதாரம்
காறான லவங்கமுடன் லவங்கப் பத்திரிக்
கருவான புறா வெச்சம்
கூறான கண்டங் கத்திரியுங் கூட்டிக்
குணமாக யெள்ளெண்ணெய் தன்னிற்சேரே. (87

மண்டையிடி உள்ளவர்கட்கு தயிலம் ஒன்று கூறுகிறேன். கஸ்தூரிமஞ்சள் கொம்பரக்கு, தேவதாரம், லவங்கம், லவங்கபத்திரி, புறாவின் எச்சம், கண்டங்கத்தி இவைகளை ஒன்றிரண்டாக இடித்து எள்ளெண்ணெயுடன் சேர்த்திடு.

சேரப்பா பசும்பாலும் துளசிச்சாறும்
சிறப்பான நெய்யுடனே சரக்குங்கூட்டி
வாரப்பா பாண்டத்தில் விட்டுக் காய்ச்சி
வாகாக மெழுகுபதம் படித்துமேதான்
நேரப்பா தயிலமதை மண்டலந்தான்
நினைவாக முழுகிவர நோய்கள் போகும்
தீரப்பா சூலைமுதல் யிடியும் போகும்
திறமான சன்னிமுத லிசுவும் போமே. (88

மேற்படி சேர்த்ததுடன் பசும்பால், துளசிசாறு, நெய் இவைகளை கூட்டி பாண்டத்திலிட்டு நன்றாக காய்ச்சிமெழுகு பதமாக இறக்கி வடித்து ஒருமண்டலம் தலைமுழுக சூலை, மண்டையிடி, சன்னி, இசிவு இவைகள் தீரும்.

போமேதான் குத்துமுதல் பிடரிநோய்போம்
பொல்லாத கண்ணெரிவு துலைந்து போகும்
சாமேதான் யின்னமொரு மருந்துசொல்வேன்
சார்வாகக் கேளுமப்பா தயிலமொன்று
ஆமேதான் நல்லெண்ணெய் படிதானொன்று
அழகாகப் பசும்பாலும் படிதான்ரெண்டு
தாமேதான் சரக்குவகை சொல்லக்கேளும்
தயவில்லா சீந்திலொடு நாரியாமே. (89)

மேலும் மண்டைக்குத்து, பிடரிவலி, கண்ணெரிவு இவைகள் தீரும். மேலும் ஒருதயிலம் கூறுகிறேன், நல்லெண்ணெய் ஒருபடி, பசும்பால் இரண்டுபடி, சீந்தில், நாரி மற்றும்.

நாரியும் பற்பாடம் சிறுகாஞ்சோரி
நலமான அமுக்கரா கொல்லன் கோவை
வாரியாம் சந்தனமும் தேவதாரம்
வாகான சொல்லனுட கிழங்குங்கூட்டி
சாரியாங் கோஷ்டமுடன் லவங்கப்பத்திரி
சார்வான கைச்சோலம் விலாமிச்சோடு
பூரியாம் கிச்சிலிக் கிழங்கு கூட்டுக்
குணமான சிறுதேக்கு சமனாய்க்கேளே. (90)

பற்படாகம், சிறுகாஞ்சொரி, அமுக்கிறாகிழங்கு, கொல்லங்கோவை கிழங்கு, சந்தனம், தேவதாரம். கொல்லன் கிழங்கு, கோஷ்டம், லவங்கப்பத்திரி, கச்சோலம், விளாமிச்சை, கிச்சிலி கிழங்கு, சிறுதேக்கு இவைகள் சமனாக எடுத்துக்கொள்.

கேளப்பா யிதுவெல்லா மொன்றாய்க்கூட்டிக்
கிருபை பெறத்தானிடித்து வெண்ணெய்தன்னில்
ஆளப்பா முதிராமல் பதமாய்க்காச்சி
அன்பாக மண்டலந்தான் முழுகிவந்தால்
நீளப்பா மண்டையிடி குத்தும்போகும்
நிலையான தலைவலியும் பீனிசம்போம்
வேளப்பா இத்தயிலம் வெளிவிடாதே
விரும்பியே மனமுவந்து கேளுகேளே. (91)

மேற்படி சரக்குகளை இடித்து மேற்படி எண்ணெயிலிட்டு பதமாக காய்ச்சி ஒருமண்டலம் முழுகிவர மண்டையிடி, குத்து, தலைவலி,பீனிசம் இவைகள் நீங்கும். இம்மருந்தை வெளியாரிடம் சொல்லலாகா.

பித்தத்திற்கு மருந்து

கேளப்பா மாந்தருக்குப் பித்தம்வந்தால்
கெடியான நெற்பொரியும் வில்வவோடும்
வாளப்பா அதிமதுரம் கோஷ்டம் பீர்க்கு
வளமான சித்தாமுட்டி பேரஃமுட்டி
நீளப்பா சந்தனமும் வில்வவேரும்
நேரான பச்சையுடப் பயரும்சேரு
மானப்பா சீனியென்ற சர்க்கரையுஞ் சேர்த்து
வளமாகக் கியாழமது செய்திடாயே. (92)

தன்வந்திரி பகவான்

நெற்பொரி, வில்வவேர், அதிமதுரம். கோஷ்டம், பீர்க்கு, சித்தாமுட்டி, பேராமுட்டி, சந்தனம், வில்வஓடு, பச்சைப்பயிர், இவற்றுடன் சீனிசர்க்கரை சேர்த்திடு.

செய்யப்பா நாழிசலம் விட்டுக்காய்ச்சி
சிறப்பாக யிருவேளை கொடுத்தாயானால்
பையப்பா பித்தமது பறக்கும்பாரு
பாலகனே பத்தியமோ யிதற்கோயில்லை
நையப்பா வாந்தியது அதிகங்கண்டால்
நலமான சுக்கதுவும் சீரஞ்சேர்த்து
வையப்பா சீனியிலே கொடுத்துப்பாரு
வாந்தியது நின்றுவிடும் திண்ணமாமே. (93)

மேற்படி சரக்குடன் நாழிஅளவு நீர்விட்டு காய்ச்சி கியாழம் செய்திடு. கியொழத்தை இருவேளையும் கொடுக்க பித்தம் குணமாகும். இதற்கு பத்தியமில்லை. வாந்தி அதிகம் உண்டானால் சுக்கு,சீரகம் இவைகள் தூள்செய்து சீனி கலந்து கொடுக்க வாந்தி நிற்கும்.

தலைச்சுழற்றல் வாந்திக்கு

திண்ணமாந் தலைசுழற்றல் மயக்கந்தீர
திறமான சூரணமொன் றியம்பக்கேளு
நண்ணமாம் விலாமிச்சு பரங்கிச்சக்கை
நயமான நெற்பொரியும் சிறுபூலாவும்
கண்ணமா மிதுகளைத்தான் தூளாய்ச் செய்து
கசடறவே சீனியிலே கலந்தகொண்டு
வண்ணமாய்ப் பத்துநாள் கொண்டபோது
வாகாகத் தலைசுழற்றல் சாந்தியாமே. (94)

தலைச்சுற்றல், மயக்கம். இவைகட்கு சூரணம் ஒன்று கூறுகிறேன். விலாமிச்சைவேர்,பரங்கிசக்கை, நெற்பொரி, சிறுபூலாவேர் இவைகளை சரிஎடை எடுத்து தூள் செய்து சீனியில் கலந்து பத்து நாள் உட்கொள்ள தலைசுற்றல், மயக்கம் இவைகள் தீரும்.

பித்த வெடிப்புக்கு

சாந்தியாம் பித்தவெடி கண்ட பேர்க்குத்
தயவாக மருந்தொன்று செப்பக்கேளும்
வாந்தியாம் வாயூரல் மயக்கம்நீங்க
வாகாகத் தயிலமொன்று சாற்றக்கேளும்
காந்தியாம் வெட்டிவேர் யேலந்தானும்
கனமான மஞ்சிட்டி தேவதாரம்
வேந்தியாம் நெல்லிமாஞ்சில் கிராம்புசந்தம்
மேலான தாளிசமாம் சீரமாமே. (95)

பித்தவெடி உள்ளவர்கட்கு மருந்து ஒன்று கூறுகிறேன். வெட்டிவேர், ஏலம், மஞ்சிஷ்டி, தேவதாரம், நெல்லி, மாஞ்சில், கிராம்பு, சந்தனம், தாளிசபத்திரி, சீரகம் மற்றும்.

சீரகமா நாகப்பூ பருத்திநெல்லி
திறமான முசுமுசுக்கை பொன்னாங்கண்ணி
காரமா மதுரமோ டேலஞ்சுக்கு
கனமான சிட்டமுடன் மாஞ்சில்முத்தம்
தீரமாம் குடோரியது வொன்றாய்க் கூட்டித்
திறமாக எண்ணெய்தனில் காய்த்துமேதான்
வீரமாம் எண்ணெயிட தயிலம் வேகம்
வேதாந்த குருபீட மிதுவுமாமே. (96)

சிறுநாகப்பூ, பருத்திவிதை, முசுமுசுக்கை. பொன்னாங்கண்ணி, அதிமதுரம், சுக்கு, சிட்டம், சடாமாஞ்சில், முத்தக்காசு, இவைகளை ஒன்றாக கூட்டி எண்ணெயிலிட்டு பதமாக காய்ச்சி இறக்கிக் கொள், இது மிகவும் நல்ல தயிலமாகும்.

இதுவுமாம் கண்புகைச்சல் கண்ணெரிவு
யிதனை கபாலவலி மண்டைக்குத்து
சதுவுமாம் நீர்ப்பாய்ச்சல் நீரெறிவு
சது'ரான பித்தவெடி பித்தக்காந்தல்
கதுவுமாம் பித்தநாற் பதுவும்போகும்
கடினமாம் யித்தயிலம் நவிலொணாது
வெதுவுமாம் மண்டலந்தான் முழுகிவாநீ
மேருவாந் தயலமது விளம்பக்கேளே. (97)

கண்புகைச்சல், கண்ணெரிவு, தலைவலி, மண்டைக்குத்து, நீர்பாய்ச்சல், நீர்எரிவு, பித்தவெடிப்பு, பித்த உஷ்ணம், நாற்பதுவகை பித்தம் இவைகள் தீரும், இத்தயிலத்தின் பெருமை சொல்ல முடியாது ஒருமண்டலம் இத்தயிலத்தால் தலைமுழுகுதல் வேண்டும்.

சிலேத்துமந் தொண்ணூற்றாறுக்குந் தயிலம்

கேளப்பா நல்லெண்ணெய்ப் பசுவின்பாலும்
கெடியான யிருவேலி விலாமிச்சோடு
மீளப்பா யித்துடனே கண்டங்கத்திரி
மேலான சண்பகப்பூ கிராம்புகோஷ்டம்
காளப்பா அரத்தையோடு தேவதாரம்
கருவான தண்ணீர்மிட்டான் கொம்பரக்கு
தீளப்பா நல்லெண்ணெய் நெய்யுஞ்சேர்த்து
திறமாக மெழுகுபதம் காய்ச்சிடாயே. (98)

தன்வந்திரி பகவான்

நல்லெண்ணெய், பசுவின்பால், இருவேலி, விலாமிச்சை, கண்டங்கத்திரி, சண்பகப்பூ, கிராம்பு, கோஷ்டம், அரத்தை, தேவதாரம், தண்ணீர்விட்டான் கிழங்கு, கொம்பரக்கு இவைகளை மேற்படி எண்ணெய் பாலுடன் கலந்து நெய்கூட்டி மெழுகு பதமாக காய்ச்சிக்கொள்.

மூலநோய்க்கு மருந்து

காய்ச்சியே மண்டலங்கால் முழுகிவந்தால்
கருவான சிலேத்துமமது அகன்றுபோகும்
தேய்ச்சியே மூலநோய் தீரக்கேளு
திறமாக மருந்தொன்று அறையக்கேளும்
வீச்சியே கடுகுடனே முத்தக்காசும்
விளையான அருகருணை வாழைக்கட்டை
மூச்சியே பிரண்டையொடு கடுக்காய்த்தோலும்
மீளாத சீந்திலும் சேர்த்திடாயே. (99)

மேற்படி தயிலத்தை ஒருமண்டலம் முழுகிவர சிலேத்துமம் தீரும். மூலநோய் குணமாக மருந்து ஒன்று கூறுகிறேன். கடுகு, முத்தக்காசு, அருகுக்கட்டை, வாழைக்கட்டை, பிரண்டை, கடுக்காய்த்தோல், சீந்தில் மற்றம்.

சேர்த்துமே சுக்குடனே பரங்கிச்சக்கை
சிறப்பாகச் சூரணமாய் செய்துகொண்டு
கார்த்துமே பசும்பாலில் கடிகைபோட்டுக்
கணக்காகக் காலையில் அருந்திவாநீ
நீர்த்துவரும் ரத்தமுடன் சீழும்போகும்
நிலையாத கடுப்புமுத்தல் தீரும்பாரு
பார்த்துநீ கைபாகம் பிசகிடாமல்
பார்த்திபனே செய்துநீ தெளிந்திடாயே. (100)

சுக்கு, பரங்கிச்சக்கை, இவைகளைக் கூட்டி சூரணமாகச்செய்து கடிகை அளவு சூரணம் பசும்பாலில் போட்டு காலையில் குடிக்க வேண்டும். ரத்தமூலம், சீழ்மூலம், கடுப்புமுளை இவைகள் நீங்கும். கைபாகம் பிசகாமல் தெளிவாக ஆராய்ந்து செய்வாயாக.

இதுவுமது

தெளிந்துபார் இன்னமொரு பாகஞ்சொல்வேன்
திறமான முள்ளங்கி இருபதுதான்
தளிந்திடா காய்பதத்தில் கொண்டு வந்து
தாட்டாக இருநான்கு பிளவுசெய்து

அளிந்திடாய் பசுவின் பாலிலேதான்
அழகுபெறச் சுண்டும்வரை காய்ச்சிக்கொண்டு
வளிந்திடாப் பத்தல்தனை கீழ்மேலிட்டு
மறுபடியும் பால்படி ரெண்டுவாரே. (101)

காய் பதத்திலுள்ள முள்ளங்கி இருபது எடுத்து இரண்டு நான்காக பிளந்து பசுவின் பாலிலிட்டு சுண்டக்காய்ச்சி மேலும் கீழுமாக மாற்றிப் போட்டு மறுபடியும் ஒரு படிபசும் பால் ஊற்றுவாயாக.

வார்த்துமே சுண்டியபின் னெடுத்துக் கொண்டு
வளமாகக் காலைமாலை தானருந்த
சூர்த்துகின்ற மூலநோ யாறுந்தீரும்
கோபால ரிஷிகட்கு முரைத்தோமுண்மை
வேர்த்துவரும் நீர்க்கட்டு நீரடைப்பு
விதமான சந்திடுப்பு அரையில்ரோகம்
தீர்த்துவிடும் யிம்மருந்து முறைபொய்யாது
தேசிகனை யிதையறிந்து செய்திடாயே. (102)

ஊற்றி எரித்து பால் சுண்டியபின் எடுத்து காலைமாலை உட்கொள்ள ஆறுவகை மூலநோயும் தீரும். இம்முறையை ரிஷிகட்கு கூறிவிட்டோம். நீர்கட்டு நீரடைப்பு, சந்திடுப்பு, அரையிலேற்படும் நோய், இவைகளும் மேற்படி மருந்தால் தீரும். இம்மருந்து முறை பொய்யாகாது. இதை அறிந்து செய்வாயாக.

குழந்தைகள் காலிசுவு கையிசுவுக்கு மருந்து

செய்துமே குழந்தைவலி போவதற்குச்
சிறப்பான மருந்தினிடபாகஞ் சொல்வேன்
நைதுமே சித்தாமணக் கெண்ணெய்நாழி
நலமான வேப்பெண்ணெய் நாழி சேரு
கொய்துமே சித்திரமா மூலிசேரு
குணமான ஆத்தலறி கூடச்சேரு
பெய்துமே பெருங்காயம் பூரஞ்சேரு
பேரான ரசபற்பம் தூக்கிடாயே. (103)

குழந்தைகளின் வலி நீங்குவதற்கு மருந்தின் பாகத்தைக் கூறுகிறேன். சித்தாமணக்கெண்ணெய் நாழி அளவு, வேப்பெண்ணெய் நாழி அளவு, சித்திரமூலம், ஆற்று அலறி, பெருங்காயம், பூரம், ரசபற்பம் இவைகளை மேற்படி எண்ணெயுடன் சேர்த்துக்கொள்.

தூக்கியே யெண்ணெய்தனில் போட்டுக் காய்ச்சித்
துக்கமற வடிகட்டியெடுத்துக் கொண்டு
தாக்கியே கரண்டிவீதம் கொடுத்தாயானால்
தப்பாது வலியகன்று சார்வேராகும்
நோக்கியே குமரகண்டன் நமரகண்டன்
நோயான பலவித வலிகள் போகும்
தேக்கியே யிம்மருந்து சுருக்குமெத்த
தெளிவாக தன்வந்திரி யுரைத்ததாமே. (104)

சேர்த்ததை பதமாக காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொள். கரண்டி அளவு குழந்தைக்கு கொடுக்க வலிநீங்கும். குமரகண்ட வலிப்பு,நமரகண்ட வலிப்பு பலவிதமான வலிகள் நீங்கும். தன்வந்திரியாகிய நான் உரைத்த முறை பொய்யாகாது.

உறைத்தாரே தன்வந்திரி பகவான்தானும்
ஒகோகோ மானிடர்கள் பிழைக்கவென்று
கரைத்தாலே நந்தீசர் எந்தமக்கு
கருவான கருக்களெல்லாந் திறந்துசொன்னார்
மறைத்தொரு கருக்களெல்லாந் தன்வந்திரியான்
வாகாக வுரைத்தேனப்பா இந்நூல் மெத்த
துரைத்தனமா மின்னமொரு மருந்துகூர்வேன்
துரையாகக் கேட்டிடுங்கள் மாணாக்காளே. (105)

மானிடர்கள் பிழைக்க வேண்டி இந்தநிலை கூறிவிட்டேன். நந்தீசர் எனக்கு கருக்களைச் வெளிப்படையாக சொல்லிவிட்டார், தன்வந்திரியாகிய நான் அம்முறைகளை இந்நூலில் சொல்லி விட்டேன், மேலும் ஒரு மருந்து கூறுகிறேன் கேளுங்கள்.

தீராத வெள்ளைக்கு மஞ்சள் வெள்ளைக்கு மருந்து

மாணாக்காள் மாந்தர்களே அறையக்கேளும்
மங்கையர்கள் போகத்தால் சூடேமிஞ்சி
வீணாகக் காயமது கெட்டு நொந்து
விருதாவாய் கெட்டவர்கள் கோடாகோடி
பூணாகம் போகமால் யிருப்பதற்கு
பூட்டுகிறேன் நெய்யொன்று சொல்வேன்மைந்தா
தோணாத கருவேலன் பட்டைதானும்
தோத்தமா முருங்கையுடப் பட்டைதானே. (106)

பெண்களுடன் அதிக போக உறவு வைத்துக் கொள்வதன் மூலம் உஷ்ணம் அதிகமாகி உடல் கெட்டு நொந்து கெட்டவர்கள் கோடானு கோடியாகும். இதற்கு நெய் ஒன்றைக் கூறுகிறேன், கருவேலன் பட்டை முருங்கைப் பட்டை மற்றும்.

பட்டையாங் கருவேலன் பட்டைதானும்
கரியதொரு நாவலுட பட்டைதானும்
நெட்டையா மிலவத்தின் பட்டைதானும்
நேரான ஊஞ்சலுடப் பட்டைதானும்
குட்டையாம் ஒதியத்தின் பட்டைதானும்
குணமான அத்தியின் பட்டைதானும்
திட்டமாய் கரும்பு ரசம் துவைத்துக்கொண்டு
திறமாக வுலக்கையினால் சாடுசாடே. (107)

நாவல் பட்டை, இலவன்பட்டை, ஊஞ்சல்பட்டை, ஒதியன்பட்டை, அத்திப்பட்டை இவைகளை தனிதனியாக கரும்புச் சாற்றில் துவைத்து உரலில் இட்டு உலக்கை கொண்டு இடிப்பாயாக.

சாடியே வகைக்குரசம் படிகாலாக
சார்வாக அளந்துமே பாண்டமிட்டு
கூடியே நெல்லிரசம் அரையதாகக்
குணமாகக் கையான் சார் காலதாக
நாடியே உள்ளிச் சாற்காலதாக
நிலையான எள்ளெண்ணெய் நாழியாக
தேடியே பசுவெண்ணெய் சமனதாகக்
திறமாக வூத்தியே கலந்திடாயே. (108)

இடித்து வகைக்கு கால்படி சாறு எடுத்து பாண்டத்திலிட்டு நெல்லிக் காய்ச்சாறு அரைப்படி, கையான்சாறு கால்படி, எள்எண்ணெய் நாழி அளவு, பசுவெண்ணெய் நாழிஅளவு இவைகளை சேர்த்து கலந்து கொள்வாயாக.

கலந்திடாய் கற்கவகை சொல்லக்கேளும்
கனமான சித்தரத்தை தேத்தாங் கொட்டை
உலர்ந்திடாய் தாளிசமாம் பத்திரிதானும்
உயர்வான நிலைப்பனையும் முத்தக்காசு
நலந்திடாய் கோஷ்டமுடன் தேவதாரம்
நலமான அமுக்கரா வெந்தயந்தான்
புலர்ந்திடாய் சாதிக்காய் லவங்கப்பத்திரி
புகழான சாரத்தின் பருப்புங்கூட்டே. (109)

கலந்ததுடன் சேர்க்கும் கற்க வகைகளை கூறுகிறேன். சித்தரத்தை, தேத்தான் கொட்டை, தாளிசபத்திரி, நிலைப்பனைக் கிழங்கு, முத்தக்காசு, கோஷ்டம், தேவதாரம், அமுக்கரா, வெந்தயம், சாதிக்காய், லவங்கப்பத்திரி, சாரப்பருப்பு, இவைகளை எடுத்துக் கொள்.

கூட்டியே யெலுமிச்சம் பழச் சார்தானும்
குணமான தேங்காய்ப் பால் தன்னாலாட்டி

நீட்டியே நெய்தனிலே கலந்துசேர்த்து
நேராக வாலுகையின் அடுப்பிலேற்றி
கூட்டியே மெழுகுபதம் தனில் வடித்து
குணமாக மண்டங்கால் கொண்டாயானால்
வாட்டிவிடும் மேகமிரு பதுவும்போகும்
வாங்காத சீழுரத்தம் வாங்கிப்போமே. (110)

மேற்படி எடுத்ததை எலுமிச்சம் பழச்சாறு தன்னாலும் தேங்காய்ப் பாலாலும் ஆட்டி மேற்படி கலவையில் சேர்த்து வாலுகை அடுப்பேற்றி மெழுகுபதமாக காய்ச்சி வடித்துக்கொள், ஒரு மண்டலம் உட்கொள்ள

வாங்குமே மேகவெட்டை மேகப்புண்கள்
வளமான பெரும்பாடு யெங்கேபோச்சு
நீங்குமே எலும்புருக்கிப் பாண்டுபோகும்
நிலையான சொரிமேகம் கிரந்திமேகம்
ஏங்குமே மேகமெல்லாம் பறக்கும்பாரு
எழிலான சதையடைப்பு யெழுச்சிதீரும்
ஓங்குமே திரேகமது காந்தியுண்டாம்
ஒருபோது பத்தியந்தா னில்லைதானே. (111)

மேகவெட்டை, மேகப்புண்கள், பெரும்பாடு, எலும்புருக்கி, பாண்டு, சொரிமேகம், கிரந்திமேகம் போன்ற மேகநோய்க் கூட்டம் குணமாகும். சதையடைப்பு எழுச்சி இவைகளும் குணமாகும். உடல் ஒளிவீசும். இதற்கு பத்தியமில்லை.

இல்லையாம் அரனாருஞ் சொன்னாரப்பா
அப்பனே நானுமக்குச் சொன்னோம்பாரு
தொல்லையா யிம்மருந் தெண்ணிடாதே
துறையாக இந்தநெய் வேகமெத்த
கல்லைப்போல் திரேகமது யிறுகும்பாரு
காசினியில் எவருந்தான் செய்யமாட்டார்
நல்லறிவால் நந்தீசர் சுவாமிதானும்
நாட்டினார் சூட்சமதைக் நாட்டினாரே. (112)

அரன் எனக்கு சொல்ல நான் உனக்குச் சொன்னேன். இம்மருந்து செய்வது கடினம் என்று இருக்கலாகாது. இந்நெய் வேகமாக செயல்படும். உடல் கல்லைப்போல் இறுகி வலிமையாகும். உலகில் உள்ள சாதார மானவன் இதைச் செய்யமாட்டான். நந்தீசர் சுவாமி இதன் ரகசியத்தைக் கூறினார்.

அண்ட விரை வாதத்திற்கு மருந்து

காட்டினார் அண்டமென்ற வாயுபோகக்
கருத்தால் பூட்டுகிறேன் மெழுகோவொன்று

சூட்டுகிறேன் லிங்கமொடு பூரந்தானும்
துடியான மிளகதுவும் சுக்குங்கூட்டி
நீட்டுகிறேன் கெந்தகமுஞ் சமனாய்க் கூட்டி
நேரான ரசபற்பம் நாலிலொன்று
நீட்டுகிறேன் தேன்விட்டு அறைத்துமைந்தா
திறமாகக் கழற்சிக்கா யுண்டைசெய்யே. (113)

அண்டவாயு நீங்குவதற்கு மெழுகு ஒன்று கூறுகிறேன். லிங்கம், பூரம், மிளகு, சுக்கு, கெந்தகம் இவைகளை சமனாக கூட்டி நாலில் ஒருபங்கு ரசபற்பம் சேர்த்து தேன் விட்டு அரைத்து கழற்சிக்காயளவு உருண்டை செய்திடு.

செய்துமே அந்திசந்தி கொண்டாயானால்
தீராத அண்டமென்ற வாதம்போகும்
நைதுமே குடல்வாதம் பிரட்டுவாதம்
நலமான கழல்வாதம் ஓடுவாதம்
பெய்துமே முடக்குவாதம் சந்துவாதம்
பேரான சச்சு வாதம் வீச்சுவாதம்
வைதுமே யிம்மெழுகால் யெல்லாந்தீரும்
வளமாகப் பாடினேன் பாடினேனே. (114)

மேற்படி மருந்தை காலை. மாலை அளவுடன் கொள்ள அண்ட வாதம் நீங்கும் குடல்வாதம், பிரட்டு வாதம், கழல்வாதம், ஓடுவாதம், முடக்குவாதம்,சந்துவாதம் சச்சுவாதம், வீச்சுவாதம் இவைகள் மேற்படி மெழுகால் தீரும்.

பாடினேன் பத்தியமோ சொல்லக்கேளு
பாங்கான வெள்ளாட்டு வுப்புக்கண்டம்
நாடினேன் சுறாவுடனே காடைசேரு
நலமான வுள்ளானாம் புறாவுமாகும்
கூடினேன் கடுகெண்ணெய் தானுமாகா
குணமான வாயுவென்ற பதார்த்தந்தள்ளு
சூடினேன் யிம்மருந்து கைபாகம்பார்
சுருக்கான இன்னமொரு பற்பங்கேளே. (115)

மேற்படி மருந்து உட்கொள்ளும் போது பத்தியத்தைக் கூறுகிறேன். வெள்ளாட்டு உப்புக்கண்டம், சுறா, காடை; உள்ளான், புறா இவைகள் ஆகும். கடுகு, எண்ணெய், வாய்வு பதார்த்தங்கள் இவைகள் ஆகாது, கைபாகமாக இம்மருந்தை செய். இன்னும் ஒரு பற்பத்தைக் கூறுகிறேன்.

கெந்தக பற்பம்

பற்பமாம் கெந்தகத்தின் பற்பம் சொல்வேன்
பாங்காக மானிடர்கள் பிழைக்க வென்று
அற்பமென்று நினையாதே கெந்திபற்பம்
ஆரறிவார் பேரறிவார் அறியமாட்டார்
சொற்பமாய் எலியாலம் பாலாலாட்டிச்
சுகமாகப் பில்லைசெய்து ரவியுலர்த்தி
விற்பனமாய் குக்குடத்திற் போட்டாயானால்
விளக்கமுள்ள மாசற்ற பற்பமாமே. (116)

கெந்தகபற்பம் கூறுகிறேன். சாதாரண பற்பமென்று இதை நினைக்காதே. அறிவில்லார் அறியமாட்டார்கள். கெந்தகத்தை எருக்கம் பாலால் ஆட்டி வில்லை செய்து வெய்யிலில் உலர்த்து குக்குட புடம்போட குற்றமில்லாது பற்பமாகும்.

ஆமேதான் பற்பமதை நெய்யிற்கொள்ள
அறையுகிறேன் மேகமென்ற திருபதும்போம்
போமேதான் பூச்சிக்கடி தேள்விஷங்கள்
பொல்லாத மேகப்புண் புரைகள் நீங்கும்
காமேதான் காமாலை கண்டமாலை
கழறவொண்ணா பல்விஷமுந் தீரும்பாரு
நோமேதான் ரணங்களெல்லா மாறும்பாரு
நேர்த்தியான வின்னமொரு பற்பங்களே. (117)

மேற்படி பற்பத்தை நெய்யில் உட்கொள்ள இருபது வகை மேக நோயும் தீரும், பூச்சுக்கடி, தேள்விஷங்கள், மேகப்புண், புரைகள், காமாலை, கண்டமாலை, பல்விஷங்கள், ரணங்கள் இவைகள் நீங்கும்.

தாம்பர பற்பம்

கேளப்பா தாம்பரத்தின் பற்பம்சொல்வேன்
கெடியான தாம்பரத்தைத் தகடாய்த்தட்டி
கேளப்பா வாராமல் பழச்சாற்றாலே
குளமாகச் சுத்தித்து ரேக்குதனை
நீளப்பா ஆடுதின்னாப் பாளைதனில்
நிலையாகப் பத்துப்புட மிட்டாயானால்
பாளப்பா போகாமல் பற்பமாகும்
பாங்குபெறப் பற்பமதைப் பதனம்பண்ணே. (118)

தாம்பர பற்பம் கூறுகிறேன். தாம்பரத்தை தகடுதட்டி பழச்சாற்றால் சுத்தித்து ரேக்குபோல் மெலியதாக செய்து ஆடுதின்னாப்பாளையில் அரைத்து புடமிடு. இவ்வகையில் பத்துபுடமிட்டால் பற்பமாகும். பற்பத்தைப் பத்திரப்படுத்து. (பழச்சாறு = காடி - சிலர் எலுமிச்சம் பழச்சாறு என்பர். ஆயினும் முக்கியமான மருந்துகளுக்குக் காடியையே உபயோகிக்க வேண்டும். காடி தயாரிப்பது எப்படி என்பது அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்க).

பண்ணியே பற்பமதை யெடுத்துக்கொண்டு
பாங்குபெற நெய் தேனிற் கொண்டாயானால்
வண்ணமுள்ள நாலாயி ரத்திற்சொச்சம்
வாகான நோய்களெல்லா மகன்றுபோகும்
திண்ணமாம் பத்தியந்தான் புளியுமாகா
திறமான காடைபுறா யிரைச்சிசேரு
நிண்ணயமாய் மண்டலந்தா னுண்டுவாநீ
நிலையான நோய்களெல்லா மகலும்பாரே (119)

மேற்படி தாம்பரபற்பத்தை நெய், அல்லது தேனில் உட்கொள்ள நான்காயிரத்து நானூற்று நாற்பத்து எட்டுநோயும் குணமாகும், புளி ஆகாது, காடை, புறா, குகைகளின் இறைச்சி ஆகும். ஒருமண்டலம் அளவுடன் உட்கொள்ள சகல நோய்களும் நீங்கும்.

வெள்ளிபற்பம்

அகலும்பார் வெள்ளியுடப் பற்பஞ்சொல்வேன்
அரியதொரு முலாம்வெள்ளி சரிகைவெள்ளி
நிகலுமாம் காய்ச்சியே தகடாய்த் தட்டி
நேரான செம்முள்ளி வெள்ளைமுள்ளி
புகலுகிறேன் சமூலமதை யரைத்துமேதான்
போற்றியே யகல்தனிலே கீழ்மேலிட்டு
பகலுடனே ரவிதனிலே காயவைத்து
பாங்காக கெசப்புடந்தான் போடுபோடே (120)

வெள்ளி பற்பத்தைக் கூறுகிறேன், முலாம் வெள்ளி என்னும் சரிகை வெள்ளியை காய்ச்சி தகடுதட்டி செம்முள்ளி, வெள்ளைமுள்ளி சமூலத்தை அரைத்துக் கொண்டு அகலில் போட்டு அதன்மேல் வெள்ளிதகடை வைத்து அதன்மேல் மேற்படி இலைகற்கத்தைப் போட்டு வெய்யிலில் உலரவைத்து கெசப்புடம் போடு.

போட்டபின்பு பற்பமதை யெடுத்துப்பார்க்க
பொல்லாத வெள்ளியது தவளம் போலாம்
நிட்டமாய் பற்பமதை யெடுத்துக்கொண்டு
நிட்சயமாய் நந்திக்குப் பூசை செய்து

வாட்டமாய் லேகியத்தில் நெய்யிற்கொள்ள
வாகாக மேகவகை யாவுந்தீரும்
தேட்டமாய் மண்டலந்தான் வுண்டுபத்தியம்
தெளிவாக வடுத்துபார் தர்மவானே (121)

மேற்படி புடம்போட வெள்ளி தவளிம்போல் பற்பமாயிருக்கும், பற்பமதை எடுத்துக் கொண்டு நந்திக்கு பூசை செய்து லேகியத்துடனும், நெய்யுடனும் மேற்படி பற்பத்தை உட்கொள்ள மேக நோய் வகைகள் நீங்கும், ஒருமண்டலம் மேற்படிபற்பத்தை உட்கொண்டு பத்தியமாக இருக்க வேண்டும்.

தர்மவா னானாக்கால் அப்பாகேளு
சாற்றுகிறே னீங்குகிற வியாதிதன்னை
மர்மமாங் கைகறுப்பு மேகவெள்ளை
மதியாத குட்டமொடு குறைநோய்தீரும்
கர்மவா னானாக்கா லெதுவுந்தீரா
கருவாளி வயித்தியனங் கண்டுகொள்வான்
நிர்ணயமாய் நந்தீசர் பாதம் போற்றி
நிகழ்த்தினே னிம்மருந்து வதிதங்காணே (122)

மேற்படி வெள்ளிபற்பத்தால் நீங்கும் நோய்களை கூறுகிறேன் கை கறுப்பு, மேக வெள்ளை, குட்டம் குறைநோய், கர்மம், இவைகள் நீங்கும். புத்தி கூர்மை உள்ள வயித்தியன் அறிந்து கொள்வான், பத்தியமாக இருக்க வேண்டும்.

தங்கபற்பம்

க்ாணப்பா மானிடர்க்குத் தங்க பற்பம்
கழறுவேன் சூட்சமதாய் கண்டுதேறு
பூணப்பா தங்கமாம் குந்தளமும்
புனிதமுள்ள ரேக்கதுவாய் செய்துகொண்டு
தோணப்பா பிர்மதண்டு பாலாலூட்டித்
திறமாக வம்மூலிக் கவசம்செய்து
காணப்பா கசப்புடத்திற் போட்டாயானால்
கண்டு கொள்ளப் பற்பமது கண்டுதேரே (123)

ரகசியமாக தங்கபற்பத்தைக் கூறுகிறேன், தங்கத்தை ரேக்காக தட்டி பிரமத்தண்டு சாற்றாலரைத்து பிரமதண்டு மூலிகையை அரைத்து கவசம் செய்து கசப்புடம் போட பற்பமாகும்.

தேறவே தங்கபற்பம் வேகமெத்த
தெளிவான நெய்தேனிற் கொண்டாயானால்
கூறவே வியாதியது மகலும்பாரு
குணமான நீரிழிவு நீங்கும்பாரு

ஆறவே பவுத்திரமும் மூலம்போகும்
ஆறாத புண்புரைகளகன்று போகும்
துாறவே நோயனைத்தும் தீரும்பாரு
தீராத பிணியகலும் பாருபாரே (124)

மேற்படி தங்கபற்பத்தை தேன் அல்லது நெய்யில் உட்கொள்ள நீரிழிவு, பவுத்திரம், மூலம், ஆறாத புண், புரைகள், மற்றும் பல நோய்கள், தீராத நோய்கள் நீங்கும்.

பாரப்பா பத்தியமோ சையோகமாகா
பாங்காகப் புளிபுகையும் தவிர்த்துப்போடு
சேரப்பா லேகியத்தில் அனுபானந்தான்
சிறப்பாகக் கொண்டுவா நோய்கள் போகும்
தேரப்பா யிம்மருந்து வேகமெத்தத்
தெளிவாக எந்தமக்கு நந்திசொன்னார்
ஆரப்பா சொல்வார்கள் எம்மைப்போல
அப்பனே நாமுமக்குச் சொன்னோங்கேளே (125)

மேற்படி தங்கபற்பம் உட்கொள்ளும் போது போக உறவு, புளி புகையை நீக்கி, லேகியத்தை அனுபானமாக உட்கொள்ள வேண்டும். நோய்கள்தீரும், இப்பற்பம் வேகம், எனக்கு நந்தீசர் சொல்ல நான் உனக்கு சொன்னேன். என்னைப்போல வெளிப்படையாக யாரும் சொல்லார்.

நாகபற்பம்

கேளப்பா நாகபற்கம் நாமுறைத்தோம்
செடியான நாகமதை யிலுப்பைநெய்யில்
வாளப்பா ஏழுதரஞ் சுத்தி செய்து
வாகாகத் தானுருக்கி யெடுத்துக்கொண்டு
மூலப்பா சிறியானின் நங்கைதானு
முத்தமனை தேங்காய்போ லரைத்துமைந்தா
பாளப்பா செய்யாமல் கெசபுடமேயிட்டால்
பாங்கான பற்பமது கண்டு தேறே (126)

நாகபற்பத்தைக் கூறுகிறேன், நாகமதை உருக்கி இலுப்பை நெய்யில் ஏழுதடவை சுத்திசெய்து உருக்கி எடுத்துக்கொண்டு சிறிய நங்கையை அறைத்து தேங்காயளவு எடுத்து மேற்படி நாகத்திற்கு அங்கிபூட்டி கெசபுடமிடு பற்பமாகும்.

தேறப்பா அரிசியிடை பனவெல்லத்தில்
திறமாக [illegible] ந்தான் கொண்டாயானால்

நீறப்பா மூலநோய் யாவுந்தீரும்
நிலையாத பவுத்திரமு மாறிப்போகும்
சாரப்பா யிருமலது தீரும்பாரு
சார்வாக மேகநோய் பறக்கும்பாரு
கூறப்பா பத்தியமோ யிச்சாபத்தியம்
குறிப்பாக யிம்மருந்தைக் கைவிடாதே (127)

நாகபற்பத்தை அரிசி எடை எடுத்து பனை வெல்லத்தில் கலந்து ஒருமண்டலம் உட்கொள்ள சகல மூல நோய்கள், பவுத்திரம், இருமல், மேகநோய், இவைகள் தீரும், இச்சாபத்தியமாக இருந்து பற்பத்தை முறைப்படி உண்பாயாக.

விடவேண்டா மிம்மருந்தைக் கைபாகந்தான்
விரும்பியே முறையோடே செய்தாயானால்
பட வேண்டும் கைமுறையாகச் செய்துபார்த்தால்
பலிக்குமது என்பாகம் பலிக்குமப்பா
தொட வேண்டா மின்னமொரு கைபாகந்தான்
தோற்றமில்லை சித்தியப்பா சித்தியாச்சு
கடவான வங்கபற்பம் செப்பக்கேளும்
காசினியிலாருந்தான் சொல்லார்பாரே (128)

முறைபோடு கைபாகமாக செய்தால் இம்மருந்து சரியாக அமையும், வங்கப் பற்பத்தைப் பற்றிக் கூறுகிறேன், இவ்வுலகத்தில் யாரும் இம்முறையை சொல்லவில்லை.

வெள்வங்க பற்பம்

பாரப்பா மாந்தர்களே வங்கபற்பம்
பதிவான வங்கத்தைச் சுத்திசெய்து
நேரப்பா கருவேப்பிலை கட்டைக்குள்ளே
நேராகப் பொதிந்துமே கவசம் செய்து
சீரப்பா கசபுடத்தில் போட்டாயானால்
சிறப்பாக வங்கமது நீரும்பாரு
மாரப்பா அரிசியிடை வெண்ணேய்தன்னில்
வாகாக வுண்டிடவே வியாதிபோமே (129)

வங்கத்தைச் சுத்தி செய்து கருவேப்பிலைக் கட்டைக்குள் வைத்து கசபுடமிட வங்கம் நீரும். இவ்வங்கபற்பத்தை அரிசிஎடை வெண்ணெயிலுட் கொள்ள நோய்கள் தீரும்.

போமேதான் கவுசையொடு கறுப்புமேகம்
பொல்லாத கைக்கறுப்பு அரைக்கடியன்

தாமேதான் மேகவெள்ளை தடிப்புக்குஷ்டம்
 தனியான மேகத்தின் ஊறல் போகும்
சாமேதான் அரிகிரந்தி பொரிகிரந்தி
 சார்வான முளைமூல மகலும் பாரு
நாமேதான் நந்தீசர் பாதம் போற்றி
 நாதாக்கட் குரைத்ததுவு முண்மையாமே (130)

மேலும் கவுசை, கறுமேகம், கைகறுப்பு, அரைக்கடிகள், மேக வெள்ளை, தடிப்பு, குஷ்டம், மேகஊறல், அரிகிரந்தி, பொரிகிரந்தி, முளைமூலம், இவைகள் தீரும், நந்தீசர் பாதம் போற்றி நாதாக்கள் உரைத்த இம்முறை பொய்யாகாது.

கரிவங்க பற்பம்

உண்மையாம் கரிவங்க பற்பம்சொல்வேன்
 உத்தமனே கரிவங்கஞ் சுத்திசெய்து
கண்மையாம் எட்டியிட புளியம்பட்டைக்
 கருவான தாளக மூசைபண்ணி
நண்ணயமாய் மேற்கவசம் பட்டைபூண்டு
 நலமாக சீலைசெய்து கனபுடமேயிட்டால்
வெண்மையாம் பற்பமது தவளம்போலாம்
 வேதாந்த தாயெனக் கருளினாளே (131)

கருவங்க பற்பத்தைக் கூறுகிறேன் கருவங்கம் சுத்தி செய்து எட்டிப்பட்டை, புளியம்பட்டையில் அரைத்து தாளகமூசை செய்து அதனுள் கருவங்கத்தை வைத்து மூடி சீண மண்செய்து கனபுடமிடு. தவளம் போல் பற்பமாகும், வேதாந்தத் தாய் எனக்கு அதை அருளிச் செய்தாள்.

அருளினாள் ஆயுரு வேதந்தன்னை
 அடவாகச் செய்து கைமுறைபார்த்தோர்கள்
மருளவே யிம்மையிலு மறுமையிலுந்தான்
 மகத்தான பெரியோர்கள் ஆசிபெற்று
தெருளவே எந்நாளும் பதவிகார்த்துச்
 சிறப்பாக ரிஷிகளுடன் வாதுகூறி
வெருளவே அரனார்க்குத் தொண்டு செய்து
 விமலர்பத மடவியிலே வாழ்குவாரே. (132)

ஆயுர் வேதத்தை செய்து கை முறையை கண்டவர்கள் இம்மையிலும் மறுமையிலூம் பெரியோர்களின் ஆசி பெற்று எந்த நாளும் பதவியை காத்து ரிஷிகளுடன் வாதுபேசி அரனுக்கு தொண்டு செய்து வாழ்வார்.

துரா பற்பம்

வாழ்குவார் மானிடற்கு பற்பமொன்று
வகுப்புடனே மாட்டுகிறேன் துராபற்பந்தான்
ஆழ்குவார் இப்பற்பம் வேதைகோடி
அறையவொண்ணாக் குறுக்குவழிப் பாதைமெத்த
தாழ்குவார் இத்தொழிலோ லேசோவென்பார்
தாரணியில் செய்குவது பாடுமெத்த
மூழ்குவார் வாதமென்ற கடலிலேதான்
முழுகுவார் முழுகுவார் முழுகுவாரே. (133)

துராவை உருக்கி நிமிளையை கிராசமிட்டால் திராமடிந்து போகும். மடிந்த திராவிற்கு பூநீரைக் கவசம் செய்து கெசபுடமிட குற்றமில்லாது பற்பமாகும். இத்திராபற்பத்தை லேகியம், வெண்ணெய் இவைகளில் உட்கொள்வாயாகா.

வாறான தூரதனையே யுருக்கிக் கொண்டு
வாகான நிமிளைதனைக் கிராசமிட்டால்
நாற்றான துராவதுவும் மடிந்துபோச்சு
நாதமாம் பூநீரைக் கவசமிட்டு
சேரான கெசபுடமே யிட்டாயானால்
திறமாக மாசற்ற பற்பமாகும்
நீறான பற்பத்தை லேகியத்தில்
நேரான வெண்ணெய்தனில் கொள்வாயே (134)

திரைவை உருக்கி நிமிளையை கிராசமிட்டால் திரா மடிந்து போகும், மடிந்த திராவிற்கு பூநீரைக் கவசம் சேய்து கெசபுடமிட குற்றமில்லாது பற்பமாகும். இத்திரா பற்பத்தை லேகியம், வெண்ணெய் இவைகளில் உட்கொள்வாயாக.

கொள்ளுவாய் மண்டலந்தான் கொண்டாயானால்
கொண்டவற்கு ஏழானைப் பலமுண்டாகும்
விள்ளுவாய்ப் பத்தியமோ யிச்சா பத்தியம்
விரும்பியதோர் காடைபுறா கொக்குமாகும்
தெள்ளியதோ ரிறைச்சிவகை யாகுங்கண்டீர்
தீம்பான மச்சவகை யாகாதப்பா
புள்ளினமாம் ஊர்க்குருவி வுள்ளானாகும்
புளிவகையும் தவிர்ப்பதுவும் நன்று நன்றே (135)

மேற்படி திரா பற்பத்தை ஒருமண்டலம் உட் கொள்ள ஏழு ஆனை பலம் உண்டாகும், இச்சா பத்தியமாக இருக்கவேண்டும். காடை, புறா, கொக்கு இவைகள் சேர்க்கலாகும். மீன் ஆகாது ஊர்க்குருவி, உள்ளான் இவைகள் ஆகும். புளியை நீக்குவது உத்தமமாம்.

நன்றான சையோக மாகாவாகா
நாயகனே பெண்மாய்கை யாறுதிங்கள்
குன்றான மாய்கைதனை நீக்கினாக்கால்
குணமாகும் திரேகமது வச்சிரகாயம்
தன்றான அயபற்பம் சாற்றக்கேளும்
சார்வான அயத்தகடு லேசாய்த்தட்டி
பன்றான மிளகரணை மூலிதன்னில்
பங்காகப் பத்துப்புடம் போட்டிடாயே (136)

போக உறவை நீக்கு மயக்கத்தை நீக்கி ஆறுமாதம் இத்திராபற்பத்தை கொண்டாயானால் உடல் வச்சிரம் போலாகும், அயபற்பத்தைக் கூறுகிறேன், அயத்தை லேசாக தகடுதட்டு மிளகரணை மூலிகையை அரைத்து கவசமிட்டு புடம் போடு. இம்மாதிரி பத்துப் புடம் போடுவாயாக.

அயபற்பம்

போட்டிடவே சட்டையது யுதிரும்பாரு
பொல்லாத அயமதுவும் வெட்டையாகும்
நாட்டிடவே கானகத்தின் கடலைமூலி
நலமான மூலிதன்னைக் குகைபோல் செய்து
நீட்டிடவே அயப்பொடியை பொதிந்துமூடி
நிர்ணயமாய் நந்தியைத்தான் போற்றிசெய்து
மாட்டிடவே கெசபுடமே யிட்டாயானால்
மாசற்ற பற்பமது ஆச்சு ஆச்சே (137)

மேற்படி புடம்போட சட்டை உதிர்ந்து போகும் காட்டிலுள்ள கடலைமூலிகையை அரைத்து குகை செய்து அதனுள் அயப்பொடியை இட்டு மூடி நந்தீசரை போற்றி கெசபுடமிட அயம் பற்பமாகும்.

ஆச்சப்பா அயபற்பம் செப்பக்கேளு
அரிசியிடை வெண்ணெய்தனில் கொள்வாயானால்
பேச்சப்பா யில்லையப்பா வியாதி நீங்கப்
பேரான மருந்தொன்று வேண்டாம் பாரு
நோச்சப்பா திரேகமது நரம்புதாது
நோயற்ற வலுவுண்டா மிகுந்த பற்பம்
வீச்சப்பா காந்தியது அழகுண்டாகும்
வித்தகனே நந்திசொல்ல வுரைத்தோம் நாமே (138)

இப்பற்பத்தை வெண்ணேயில் உட்கொள்ள வியாதிகள் நீங்கும் நோயைப் போக்க வேறு மருந்து வேண்டாம், இதே போதுமானது. உடல், நரம்பு, தாது,

இவைகள் வலிமை உண்டாகும், உடல் காந்தியாகி அழகுண்டாகும். நந்தீசர் எனக்கு சொல்ல நான் சொன்னேன்.

வெண்கலப் பற்பம்

நாமான வெண்கலத்தின் பற்பம்சொல்வேன்
நாட்டிலே விளைகின்ற யிம்பூராவும்
கோனான மூலிதன்னைக் குறிப்பாகத்தான்
குணமாகத் தாளகத்தைக் கீழ்மேலிட்டு
தேனாகக் கவசமது ஏழுஞ் செய்து
தெளிவாகக் கசபுடமே யிட்டாயானால்
மானான பற்பமது தவளம்போலாம்
மண்டலத்தில் சொல்லரிது நாவேதுண்டோ (139)

வெங்கல பற்பத்தைக் கூறுகிறேன், இம்பூரல் மூலிகையை தாளகத்திற்கு கீழ்மேலிட்டு ஏழுசீலை மண் செய்து கசபுடமிடு தவளம் போல் பற்பமாகும். இப்பற்பத்தின் பெருமையை சொல்ல அரிது. (வெண்கல பற்பம் சொல்லப்படவில்லை. எங்கோ தவறு நேர்ந்துள்ளது.

உண்டான பற்பமதை பரங்கிச்சக்கை
யுத்தமனே சூரணித்து கடிகைதன்னில்
ரண்டான மண்டலந்தான் கொண்டாயானால்
நலமான வியாதியெல்லா மகலும்பாரு
திண்டான பத்தியமே யிச்சாபத்தியம்
திறமாகத் தானருந்தும் பானந்தன்னில்
பண்டான சையோக மாகாதப்பா
பாடினேன் தன்வந்திரி பாடினேனே (140)

மேற்படி பற்பத்தை பரங்கிச் சக்கை சூரணத்துடன் கலந்து கடிகையில் ஒரு மண்டலம் உட்கொள்ள நொய்கள் தீரும், இச்சா பத்தியமாக இருக்கவேண்டும். மதுவகைகளும் பெண் போகமும் ஆகாது. இம்முறையை தன்வந்திரியாகிய யான் பாடினேன்.

இரச பற்பம்

பாடுகிறேன் மானிடற்கு ரசபற்பந்தான்
பாங்காக ரசமதனைச் சுத்திசெய்து
நீடினேன் கெந்தகத்தின் பற்பந்தானும்
நேரான அலரிச்சாற் றதன்னாலாட்டி
மூடினேன் பில்லை செய்து ரவியுலர்த்தி
யுத்தமனே குக்குடமே போட்டாயானால்

வாடியே தவளம்போல் பற்பமாகும்
    வாகாகத் தன்வந்திரி பயின்றவாறே (141)

ரச பற்பம் கூறுகிறேன், ரசத்தைச் சுத்தித்து அதனுடன் கெந்தக பற்பம் கூட்டி அலரிச்சாறு தன்னால் அரைத்துவில்லை செய்து வெய்யிலில் நன்றாக உலர்த்தி குக்குடபுடம் போட தவளம் போல் பற்பமாகும்.

பயின்றதொரு பற்பத்தை யெடுத்துமேதான்
    பாங்காகத் தேன் நெய்யில் அருந்தீரானால்
நயின்றதொரு கைப்பிடிப்புக் கால்பிடிப்பு
    நலமான மூக்கறைநோய் தீரும்பாரு
வெயின்றதோர் சார்வாங்கம் வாதம்போகும்
    வெளியான கிரந்திமுதல் வாயு போகும்
அயின்றதொரு சூலைமுத லனைத்தும் நீங்கும்
    அப்பனே யுண்மையிது வுண்மைபாரே (142)

மேற்படி ரசபற்பத்தை தேய் நேய்பில் உட்கொள்ள கைப்பிடிப்பு, கால்பிடிப்பு, மூக்கறை, சர்வாங்கவாதம், கிரந்தி, வாய்வு, சூலை, இவைகள் தீரும்.

பாரப்பா பத்தியமோ மெத்தவுண்டு
    பாரினிலே யாருந்தான் கூறமாட்டார்
சீரப்பா புளிபுகையும் தவிர்க்கவேண்டும்
    செழிப்பான போகமதை நீக்கவேண்டும்
நேரப்பா தலைமுழுகும் நாளிலேதான்
    நீக்கிவிடு மருந்துண்ணலாகாதப்பா
பாரப்பா யிப்பற்பம் பளுவுமெத்தப்
    பாராளும் ராசர்களும் செய்வாரன்றே (143)

மேற்படி இசபற்பம் உண்ணம் போது பத்தியம் காத்திடு, புளி, புகை, நீக்க வேண்டும், போக உறவு தவிர்க்க வேண்டும், தலைக்கு முழுகும்போது மேற்படி பற்பத்தை உட்கொள்ளலாகாது.

பாஷாணக் கட்டு

அன்றான பாஷாணக் கட்டிவாங்க
    அவனியிலே மாந்தர்களோ அறியப்போறார்
நன்றான சாரவுப்பை காலாய்க் கொண்டு
    நயமான அண்டோடும் வொன்றாய்ச் செய்து
குன்றானக் குகைபிடித்து மூசை செய்து
    குணமான திருகுகள்ளிப் பாலாலூட்டி

வன்றாகக் குக்குடமே போட்டாயானால்
வளமாக மாசற்ற பற்பமாமே (144)

சார உப்பு, அண்டவோடு அவைகளை அரைத்து குகைப்போல் செய்து அதனுள் பாஷாணக் கட்டியை வைத்து திருகு கள்ளி பாலை வார்த்து மூடி சீலை செய்து குக்குட யுடமிட குற்றமல்லா பற்பமாகும்.

பற்பமாய் நவலோகம் தன்னிற்பாய்ச்ச
பளிங்கான செம்பதுவும் ஊறலற்று
துற்பமாம் வெள்ளையது யாகும் பாரு
துணையான ரவியிடைதான் சேர்த்தாயானால்
நிற்பமாம் சரிகைவெள்ளி மேலதாச்சு
நேரான பற்பமதைச் சந்நிக்கீய்ந்தால்
சொற்பமாம் குளிர்வாத சன்னிபோகும்
சோர்வில்லா வாதமெண் பதுவும் போமே (145)

மேற்படி பாஷாண பற்பத்தை நவலோகத்தில் பாய்ச்ச வெள்ளியாகும். செம்பில் கொடுக்க செம்பு ஊரல் நீங்கி வெள்ளியாகும்.

சன்னி, குளிவர்வாதசன்னி, எண்பது வகைவாதம் இவைகள் மேற்படி பாஷாண பற்பத்தால் தீரும்.

கண் பூவுக்கு மருந்து

போமேதான் அரப்பொடியும் சிங்கிதானும்
புகழான செம்பதுவும் பீதரோணி
தாமேதான் யிந்துப்புக் கூடச் சேர்த்துத்
தனியான நற்றியின்பூச் சாற்றாலே
சாமேதான் நாற்சாம மாட்டியேதான்
சமர்த்தாக சிமிழ்தனிலே பதனம் பண்ணு
ஆமேதான் மைதனையே யெடுத்துத்தீற்ற
ஆணிமுதல் கண்படல மகலுந்தானே (146)

ஆரப்பொடி, சிங்கி, செம்பு, பீதரோகணி, இந்துப்பு, இவைகளைச் சமனெடை எடுத்து நந்தியாவட்டைப் பூச்சாறு கொண்டு நான்கு சாமம் அரைத்து சிமிழில் பதனம் செய். இம்மையை கண்ணில் தீட்ட கண் ஆணி, கண்படலம், நீங்கும்.

சாயரட்சை சுரத்திற்கு மருந்துகியாழம்

தானான மாந்தருக்குச் சுரமேவந்தால்
சார்வாகக் கியாழமொன்று தொகுக்கக்கேளாய்
கோனான நிலவேம்பு மருட்கிழங்கு
கொடிதான ரோகணியும் புடலும்பட்டை

தேனான சீந்திலுடன் வேம்புதானும்
சிறப்பான கடுக்காயும் முத்தக்காசு
பானான செங்கோட்டை மரத்தின்பட்டை
பாங்காகச் சரியெடையாய் துாக்கிடாயே (147)

சுரத்திற்கு கியாழம் ஒன்று கூறுகிறேன், நிலவேம்பு, மருட்கிழங்கு, ரோகனி, புடலின்பட்டை, சீந்தில், வேம்பு, கடுக்காய், முத்தக்காசு, சேங்கொட்டை மரத்தின்பட்டை, அவைகள் சரியெடை எடுத்துக்கொள்.

துாக்கியே கோரையின் கிழங்குங்கூட்டித்
திறமாக நாழிசலம் விட்டுக்காய்ச்சி
தாக்கியே யிருவேளை கொள்வீராகில்
தங்காது மாலைசுரம் தரியாதோடும்
நோக்கியே பத்தியமோ புளியொன்றாகா
நொறுங்கவே மற்றதெல்லாம் கொடுக்கநன்று
போக்கியே யேழுநாள் மருந்தையுண்டு
புகழாக மற்றுநாள் நீரைவூத்தே (148)

மேலும் கோரைக்கிழங்கு சேர்த்து நாழி அளவு நீரிலிட்டு கியாழமாக காய்ச்சி இருவேளை கொள்ள மாலை சுரம் தீரும் புளி ஆகாது. மற்றவை ஆகும், ஏழநாட்கள் இக்கியாழத்தை உண்டு எட்டாம்நாள் குளிக்கலாகும்.

ஊத்தியே கூந்தலுக்குஞ் சிசுவுக்குந்தா
னுத்தமனே சாம்பிராணிப் புகையைக்காட்ட
சாத்தியே பரிமளப் புகையும் வேண்டும்
சார்வாக துாக்கமது வாகாதப்பா
நேத்தியாய் மறுநாளில் புளியைக்கூட்டு
நெறியுடனே பத்தியமது தப்பாதப்பா
பூர்த்தியா யிக்கியாழ முறை பொய்யாது
புண்ணியனே நந்திபதம் போற்றினேனே (149)

குளித்தபின் கூந்தலுக்கும், குழந்தைக்கும், சாம்பிராணிப் புகையும் பரிமள வாசனை புகையும் காட்டவேண்டும் துாக்கம் ஆகாது. மறுநாளில் புளி கூட்டி உண்ணலாம். கண்டிப்பாக பத்தியம் தவறுதல் ஆகாது. இக்கியாழமுறை பொய்யாகாது.

நீரிழிவுக்கு

போற்றினேன் தன்வந்திரி பகவான்தானும்
புகலுகிறேன் மானிடற்கு மருந்துவொன்று
சாற்றுகிறேன் நீரிழிவு கண்டபேற்கு
தப்பாது வெடியுப்புப் பழங்கலுப்பு

தன்வந்திரி பகவான்

ஆற்றுகிறேன் யெள்ளெண்ணை யிந்தமூன்றும்
அன்பாகவே காய்த்துக் கொடுத்தாயானால்
தூற்றுகின்ற நீரிழிவு நீர்க்கட்டும்போம்
துலையாத சதையடைப்பும் நீங்குந்தானே (150)

நந்தீசர் பாதம் போற்றி தன்வந்திரி பகவானாகிய யான் நீரிழிவுக்கு மருந்து கூறுகிறேன். வெடியுப்பு, பழங்கலுப்பு, எள் எண்ணெய், இவைகளை காய்ச்சிக் கொடுக்க நீரிழிவு, நீர்கட்டு, சதையடைப்பு இவைகள் நீங்கும்.

நீர்ச்சுருக்குக்கு

தானாக நீர்ச்சுருக்கு வந்தபேர்க்கு
தயவான கசகசா பலமோவென்று
தேனான வால்மிளகு பலமோ கால்தான்
தெளிவான சீனியது பலமோரண்டு
வேனான பசுவின்பால் பலமோயெட்டு
விதமான தேத்தானின் கொட்டைகாலு
நானான யிதுவெலாம் சூரணித்து
நலமாக நெய்தனிலே கிளறிக்கொள்ளே (151)

நீர்சுருக்கு கண்டவர்கட்கு மருந்து கூறுகிறேன், கசகசா ஒருபலம், வால்மிளகு கால்பலம், சீனி இரண்டுபலம், பசும்பால் எட்டுபலம், தேத்தான் கொட்டை கால்பலம், மேற்படி பொருட்களை சூரணித்து. சீனியை பாலிலிட்டு பதமாக காய்ச்சி சூரணத்தைக் கொட்டி நெய்விட்டு பதமாக கிளறிக்கொள்.

கொள்ளவே மண்டலங்கால் கொண்டாயானால்
குடிலமாம் நீர்ச்சுறுக்கு நீர்ச்செருப்பு
அள்ளவே நீரெரிச்சல் வெள்ளை போகும்
அப்பனே நாமுமக்குச் சொன்னோம்பாரு
விள்ளவே யாருக்குஞ் சொல்லவேண்டாம்
வேதாந்த தாயெனக்கு அருளினாள்காண்
தெள்ளவே வில்வாதித் தயிலஞ்சொல்வேன்
தெளிவாகத் தாமுரைத்த வேதந்தானே (152)

மேற்படி கிளறியதை ஒரு மண்டலம் உட்கொள்ள நீர்சுருக்கு நீர் எரிச்சல், வெள்ளை, இவைகள் நீங்கும், நான் சொல்லிவிட்டேன், நீயாருக்கும் சொல்ல வேண்டாம், வேதாந்த தாய் எனக்கு அருளிச்செய்தாள் தெளிவாக நான் சொன்ன வேதமாக வில்வாதி தயிலம் கூறுகிறேன்.

வில்வாதித் தயிலம்

வேதந்தான் மாந்தர்கள் பிழைக்கவென்று
விரும்பியதோர் வில்வாதித் தயிலஞ்சொல்வேன்
போதந்தான் நன்னாரி நத்தைச் சூரி
பொலிவான அசுவகெந்தி சித்தாமுட்டி
நாதந்தான் பொன்முசுட்டை சீந்தில்தானும்
நலமான விலாமிச்சம் பலமோவொன்று
சீதந்தான் முருங்கைவேர் பேராமுட்டி
சீரான யிலவங்கம் செவியமாமே (153)

நன்னாரி, நத்தைச்சூரி, அசுவகெந்தி, சித்தா முட்டி, பொன்முசுட்டை, சீந்தில், விலாமிச்சை, முருங்கைவேர், பேராமுட்டி லவங்கம், செவ்வியம், இவைகள் வகைக்கு ஒருபலம், மற்றும்.

செவ்வியமாம் கார்க்கோலும் பத்திரிமஞ்சள்
சிறப்பானத் திப்பிலியின் மூலத்தோடு
அவ்வியமாம் சிற்றரத்தை கிறுகாஞ்சோறி
அழகான திரிகடுகு சமனதாக
கவ்வியமா மிதுகளெல்லாஞ் சூரணித்துக்
கணக்காகப் பாண்டமதில் போட்டுமேதான்
பவ்வியமாம் எள்ளெண்ணை படிதான்ரெண்டு
பாங்காக விளநீரும் படிதானென்றே (154)

கார்போகஅரிசி, பத்திரி, மஞ்சள், திப்பிலிமூலம், சித்தரத்தை, சிறுகாஞ் சோறி, திரிகடுகு இவைகளை மேற்படி எடையாக எடுத்து சூரணித்து பாண்டத்திலிட்டு இரண்டுபல எள்எண்ணெய், ஒருபடி இளநீரும் விடுவாயாக.

ஒன்றானப் பசுவின்பால் படியோரெண்டு
வுத்தமனே எலுமிச்சம் பழச்சாறொன்று
நன்றான யிதுகளெல்லாம் வொன்றாய்க்கூட்டி
நலம் பெறவே மெழுகுபதம் தன்னிற்காய்ச்சு
குன்றாமல் கணபதியைப் போற்றி செய்து
குவலயத்தில் மண்டலந்தான் முழுகிவந்தால்
அன்றான பித்தமது அகன்றுபோகும்
அப்பனே நந்தியெனக் குரைத்தவாறே (155)

மேற்படியுடன் பசும்பால் இரண்டுபடி, எலுமிச்சம் பழச்சாறு ஒருபடி, இவைகளை ஒன்றாய் கூட்டி மெழுகுபதமாக காய்ச்சி கணபதிக்கு பூசைசெய்து

மேற்படி தயிலத்தால் தலை முழுகிவர பித்தம் நீங்கி குணமாகும், நந்தீசர் எனக்குரைத்தது போல் நானும் சொல்லிவிட்டேன்.

வயிற்றுக் கடுப்புக்கு

வாறான கொத்தமல்லி சாதிக்காயும்
வளமான கருஞ்சீரம் நாட்டுச்சீரம்
கூறான மாசக்காய் செண்பகப்பூ
குணமான கிளியூறல் பட்டைதானும்
நீரான கிராம்புடனே லவங்கப்பூப்பூ
நிலையான பத்திரியும் கருவாய்ப்பட்டை
நேரான கோரையின் கிழங்குங்கூட்டி
நிறையானச் சமனிடையாய் தூக்கிடாயே (156)

கொத்தமல்லி, சாதிக்காய், கருஞ்சீரகம், நாட்டுச்சீரகம், மாசிக்காய், செண்பகப்பூ, கிளீயூரம்பட்டை, கிராம்பு, லவங்கப்பூ, பத்திரி, கருவாய்ப்பட்டை, கோரைக்கிழங்கு, இவைகளை சமன் எடை எடுத்துக்கொள்.

தூக்கியே சூரணித்து சீனிபாதி
சிறப்புடனே அந்திசந்தி கொண்டாயானால்
தாக்குகின்ற வயிற்றுவலி வுளைச்சல்வாதம்
தப்பாது பித்தமுதல் கீழோடும்
தேக்குகின்ற கிருமிமுதல் மலபந்தங்கள்
தெளிவாகு மிம்மருந்து சுருக்குமெத்த
பாக்குகின்ற பண்டிதர் சூட்சாசூட்சம்
பரிட்சைமுதல் கண்டறிவர் யோகியாமே (157)

மேற்படி சரக்குகளை சூரணித்து பாதி அளவு சீனி கூட்டி காலை, மாலை, உட்கொள்ள வயுற்றுவலி, உளைச்சல் வாதம், பித்தம், கிருமி, மலபந்தம், போன்ற நோய்கள் தீரும், இம்மருந்து சுருக்கமானது. இதை கண்டறிந்து செய்பவர் யோகியாவர்.

தாம்பர செந்தூரம்

சொல்லுகிறே னுலகத்தில் மாந்தர்க்கென்று
சுருக்காகத் தாம்பரத்தின் செந்துாரங்கேள்
வெல்லுகிறேன் முருங்கைவேர் கல்லுப்போடு
விதமான அன்னமுடன் பேதிதானும்
கொல்லுகின்ற காக்கணத்தின் மூலிதன்னில்
குணமாக அரைத்து குகை வலுவாய்ச் செய்து
பல்லுகின்ற தாம்பரத்தைய் யுள்ளே வைத்துப்
பாங்காகப் பொதிந்துமே சீலைசெய்யே (158)

தாம்பர செந்தூரத்தைக் கூறுகிறேன், முருங்கை வேர் கல்லுப்பு, அன்னபேதி, காக்கணம் மூலிகை, இவைகள் சமனெடை எடுத்து அரைத்து குகை செய்து தாம்பரத்தை உள்ளேவைத்து மேல்மூடியிட்டு சீலை செய்திடு.

செய்துமே கெசபுடத்திற் போட்டாயானால்
சீரான செந்தூர மருணன் போலாம்
நைதுமே பனவெல்ல மனுபானந்தான்
நயமாக வரிசியிடை கொண்டாயானால்
கொய்துமே குஷ்டமெங்கே தடிப்புயெங்கே
குறை நோய்கள் கிரந்தி வகை யெங்கேபோச்சு
எய்துமே நாலாயிரத்துச் சிலுவானந்தான்
யென் மகனே காடுறையு மென்பர்தாமே (159)

சீலை செய்து உலர்த்தி கெசபுடமிட சூரியனைப் போல் செந்தூரமாகும். பனை வெல்லத்தை அனுபானதாக கொண்டு செந்தூரத்தை அரிசி எடை உட்கொள்ள குஷ்டம், தடிப்பு, குறை, கிரந்தி, மற்றும் சகல நோய்களும் தீரம்.

தாமேதான் பத்தியமோ யிச்சாபத்தியம்
தயவான யிறைச்சிவகை யாவுமாகும்
தாமேதான் புளிபுகையும் நீக்கவேண்டும்
சார்வான மோர்தயிரும் சேர்க்கலாகும்
காமேதான் சீதனப் பண்டமாகா
கனமான மற்றதெல்லாம் சேருசேரு
ஆமேதா னிம்மருந்து யாருஞ்சொல்லார்
அப்பனே நந்தியெமக் கறைந்தவாறே. (160)

மேற்படி செந்தூரமும் கொள்ளும் போது இச்சாபத்தியுமாக இருக்க வேண்டும் இறைச்சி வகை சேர்க்கலாம். புளி, புகை, ஆகாது, சீதள பொருட்கள் சாப்பிடலாகாது, மோர், தயிர் சேர்க்கலாம். இம்மருந்தை யாரும் சொல்ல வில்லை, நந்தீசர் சொன்னபடி நானும் கூறிவிட்டேன்.

மகாயேலாதித் தயிலம்

வாறான யேலாதித் தயிலஞ்சொல்வேன்
வாகான ஆலரசு அத்திப்பிஞ்சு
கூறான நாவலுடப் பட்டைதானும்
குணமான ஆவாரை கடலிறாஞ்சி
தேறான கருவேலன் முள்வேலந்தான்
திடமான சதாவேரி தசமூலந்தான்
நீறான பாலையுடப் பட்டைதானும்
நேரான நெல்லியுடச் சாறும்சேரே (161)

தன்வந்திரி பகவான்

ஏலாதி தயிலத்தைக் கூறுகிறேன், அல், அரசு, அத்திப்பிஞ்சு, நாவல்பட்டை, ஆவாரை, கடல் அழிஞ்சி அல்லது கடலிறாஞ்சி, கருவேலன், முள்வேலன், சதாவேரி, பாலைப்பட்டை, தசமூலம், நெல்லிச்சாறு மற்றும்,

சேரப்பா கெந்தகமும் கொன்றை வெட்டிச்
சிறப்பான முதியாரு கூந்தல்தானும்
நேரப்பா செங்கழுநீர் வெட்பூலாவும்
நிலையான கருங்காலை முத்தக்காசும்
சீரப்பா நன்னாரி தண்ணீர்மிட்டான்
சிறப்பான நிலவாகைத் தண்டுஞ் சேரு
காரப்பா காட்டுமல்லி தாழைவில்வங்
கடிதாக யிடித்துமே கியாழஞ்செய்யே (162)

கெந்தகம், கொன்றை, வெட்டி வேர், முதியார் கூந்தல், வெட்பூலாவேர், கருங்காலை, முத்தக்காசு, நன்னாரி, தண்ணீர் மீட்டான், நிலவாகைத் தண்டு, காட்டுமல்லி, தாழை, வில்வம், இவைகளை இடித்து கியாழமிட்டுக்கொள்.

செய்யப்பா சலம்நாழி ஆறதாகும்
சிறப்பான இளநீரு வெட்டாதாகும்
மெய்யப்பா ஆவின்பா லஞ்சதாகும்
மேலான யெள்ளெண்ணை நாழியஞ்சு
பெய்யப்பா சாறுசுண்டக் காச்சியேதான்
பிசகாமல் கடுகுபதம் தன்னிற்காச்சி
பையப்பா மண்டலந்தான் முழுகினாக்கால்
பறக்குமடா வியாதியெல்லா மகலுந்தானே (163)

மேற்படி கியாழம் செய்வதற்கு ஆறு நாழி அளவு நீர் விட்டு கியாழமிட்டு, இளநீர் எட்டுநாழி, ஆவின்பால் ஐந்து நாழி, இவைகளை கலந்து நன்றாக நீர் சுண்டக் காய்ச்சி பதமாக இறக்கி மண்டலம் தலைமுழுக நோய்கள் தீரும்.

அகலுமாம் பித்தம் நாற்பதுவும் போகும்
அப்பனே வாதமெண்பதுவும் போகும்
நிகலுமாம் சூலைபதி னெட்டும் போகும்
நேரான கிரந்திபதி னெட்டும் போகும்
புகலுமாம் கயரோகம் சயரோகம் போம்
புகழான பீனிசம் மண்டைக்குத்து
நகலுமாம் கபாலத்தின் சூடேபோகும்
நாட்டிலே வித்தையிது அதீதங்காணே (164)

மேற்படி தயிலத்தால் பித்தம் நாற்பது வகை வாதம் என்பது வகை, சூலை பதினெட்டு, கிரந்தி பதினெட்டு, கயரோகம், சயரோகம், பீனிசம், மண்டைக்குத்து, கபால சூடு, இவைகள் தீரும், மற்றும்

அதீதமாம் வுளமாந்தை சீறல்போகும்
அப்பனே குளிர்சீத வாதம் போகும்
துதிதமாம் பித்தவெட்டை வழலைபோகும்
துலையாத பாண்டுவென்ற மூர்ச்சைபோகும்
கதிதமாம் கழல்வாதம் சச்சுவாதம்
காணாமல் வீடுவிட்டுப் போகும்பாரு
பதிதமாம் துடைவாதம் துலைந்துபோகும்
பாடுகிறேன் தன்வந்திரி வலுமைதானே (165)

உளமாந்தம், சீறல், குளிர் சீதவாதம், பித்தவெட்டை, அழலை, பாண்டு, மூர்ச்சை, அழல்வாதம், சச்சுவாதம், தொடை வாதம், இவைகள் தீரும்.

அயமணிக்கலாப செந்தூரம்

தானான அயமணிக் கலாபஞ் சொல்வேன்
சாற்றுகிறேன் மானிடர்கள் பிழைக்கவென்று
கோனான செந்தூரம் அயப்பொடியுங்
காந்தம் குணமான அரிதாரம் ரசமும்
தேனான மேனிச்சாறு குமரிச்சாற்றால்
தெளிவாக வாறு நாள் அரைத்துமே தான்
பானாகப் பில்லை செய்து ரவியுலர்த்திப்
பாங்கான ஏழுசீலை செய்திடாயே (166)

அயமணி கலா்பம் சொல்கிறேன், அயப்பொடி, காந்தம், அரிதாரம், ரசம், இவைகளை சமனெடை எடுத்து மேனிச்சாறு, குமரிச்சாறு, இவற்றால் ஆறுநாள் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஏழுசீலை செய்திடு.

செய்துமே கெசப்புடத்தில் போட்டாயானால்
சீரான செந்தூரமென்ன சொல்வேன்
நைதுமே அருணசெந் தூரமாகும்
நலமான செந்தூரம் பதனம் பண்ணு
கொய்துமே லேகியத்தில் தேனிற்கொள்ள
குடிவிட்டுப் போகுமடா வியாதியாவும்
பைதுமே யிம்மருந்து சுருக்கு மெத்தப்
பாடுகிறேன் நந்தீசர் பாதங்காப்பே (167)

மேற்படி கவசத்தை கெசப்புடம் போட்டால் செந்தூரமாகும், சூரியனைப்போன்ற இச்செந்தூரத்தை லேகியம் தேன் இவைகளில் உள்கொள்ள வியாதிகள் குணமாகும், நந்தீசர்பாதம் காப்பாகட்டும்.

காப்பான பாண்டுவுடன் சோகைபோகும்
கருவான மகோதரமும் பீலிபோகும்
தோப்பான கவுசையொடு ரத்தக்கட்டி
தேர்வான நீராம்பற் கட்டிபோகும்
வேம்பான சூதகத்தின் வலியும் போகும்
விதமான சந்திடுப்பு சூன்மம்போகும்
தீப்பான திரேகமது சட்டைதள்ளும்
திரமான செந்தூரம் பெருமைபாரே (168)

மேற்படி செந்தாரம் உட்கொள்ள பாண்டு சோகை, மகோதரம், பீலி, கவுசை, ரத்தக்கட்டி, நீராம்பல் கட்டி, சூதகத்தின் வாய்வு, சந்திடுப்பு, குன்மம், இவைகள் நீங்கி உடல் சட்டை தள்ளும், உடல் உறுதியாகும்.

குன்மம் ஆறுக்கும் ரத்னக் கெண்டியுப்பு

பாரப்பா ரத்னக்கெண்டி மாந்தருக்குப்
பாடுகிறேன் கறியுப்புச் சேரோவொன்று
சேரப்பா யெருக்கனிட பாலினாலே
சிறப்பாக மூன்றுநா ளாட்டியேதான்
தேரப்பா பில்லைதட்டிக் காயவைத்துத்
தெளிவாகக்குக்குடமே போட்டாயானால்
ஆரப்பா என்னசொல்வேன் வுப்பின்மார்க்கம்
அளகாபுரிக் கொப்பான தவளமாமே (169)

இரத்ன கெண்டி கூறுகிறேன், கறியுப்பு ஒரு சேர் எடுத்து எருக்கன் பாலால் மூன்று நாள் அரைத்து வில்லைதட்டி காயவைத்து குக்குட புடமிட்டால் தவளம் போல் பற்பமாகும்.

தவளமாம் பற்பமதை புளியம் பூச்சாற்றால்
தனியாகவே யரைத்துப் பில்லைசெய்து
கவனமாம் பத்துமுறை யரைத்துமேதான்
கனமாகப் பத்துபுடம் போட்டாயானால்
பவளமாம் நிறம்போலே செந்தூரிக்கும்
பாங்கான செந்தூரம் வேகமெத்த
நிவளமாம் தேனதிலே கொண்டாயானால்
நிலையாது குன்மமென்ற யாவும்போமே (170)

மேற்படி பற்பத்தை புளியம் பூச் சாற்றால் அரைத்து புடம்போடு, இவ்வகையில் அரைத்து பத்துபுடம் போடு பவளம் போல் செந்துாரமாகும், இச்செந்துாரத்தை தேனில் கொள்ள குன்மங்கள் தீரும்.

போமேதான் வாயுவென்ற தெண்பதும்போம்
பொல்லாத பக்கசூலை வாதசூலை
சாமேதான் பொருமலது உஷ்ணவாய்வு
சார்வான கிரணவலி குடல்வாதங்கள்
நேரமேதான் அக்கினியின் மாந்தம்தீரும்
நுணுக்கமுள்ள புளித்தேப்ப மகலும்பாரு
ஆமேதா னிம்மருந்து நந்திதானு
மருளினா் ஆயுர் வேதந்தானே (171)

மேற்படி செந்துாரத்தால் எண்பது வகை வாயுவும், பக்க சூலை, வாதசூலை, பொருமல், உஷ்ணவாய்வு, கிரணவலி, குடல்வாதம், அக்கினி மாந்தம், புளித்தேப்பம், இவைகள் தீரும், நந்திதேவர் இம்மருந்தை எனக்கு அருளச்செய்தார்.

தானான பத்தியமோ வறிந்துகூட்டு
தவறாது திரோதாயின் மாய்கைதள்ளு
கோனான அட்சதையும் பூசைமார்க்கம்
குறையாமல் செய்துமே பணிந்துபோற்றி
தேனான சாஸ்திரங்கள் நன்றாய்ப்பார்த்துத்
திறமாக கைபாகம் பிசகிடாமல்
வேனான சித்தர்களை மனதிலெண்ணி
விருப்பமா எவ்வகையுஞ் செய்திடாயே (172)

பத்தியத்தை அறிந்து சேரும் பண்டங்களை சேர்ப்பாயாக, பெண் போகம் ஆகாது, அர்ச்சதை, பூசை செய்து பணிந்து போற்றி சாஸ்திரத்தை நன்றாக ஆராய்ந்து கைபாகம் பிசகாது சித்தர்களை மனதில் எண்ணி இம்மருந்தை செய்வாயாக.

சிரோரத்தின மதன சித்தாதி லேகியம்

செய்யவே மாந்தருக்கு சிரோரத்தினமொன்று
சூட்டுகிறேன் சித்தாதி லேகியந்தானாகும்
பையவே கருணையோடு விருகுங்கொன்றை
பாங்கான சீந்திலொடு வச்சிரவல்லி
தையவே முள்ளங்கி கடலையாகும்
தயவான அசுவமுந்தந் தேவதாரம்
முய்யவே சிறுகிழங்கு வள்ளிதானு
முயர்வான நெய்தலொடு அல்லிசேரே (173)

தன்வந்திரி பகவான்

சிரோரத்தின சித்தாதி லேகியத்தைக் கூறுகிறேன், கருணை, கொன்றை, சீந்தில், வச்சிரவல்லி, முள்ளங்கி, கடலை, அசுவகந்தி, முத்தக்காசு, தேவதாரம், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, நெய்தல்கிழங்கு, அல்லிக்கிழங்கு. மற்றும்.

சேர்த்துமே மாதளையின் வித்துங்கூட்டிச்
சிறப்பான புலைத்தண்டு சடமாஞ்சாகும்
பார்த்துமே சூரிவேர் நத்தைச் சூரி
பாங்கான மூதண்ட வேருஞ் சேரு
நீர்த்துமே தாளிசமா மாடாதோடை
நேர்ப்பான ஆணிலைப் பனையின் மூலம்
கூர்த்துமே வேலியுடப் பருத்தி தானும்
குணமான முள்ளிவேர் நெல்லிக் கூட்டை (174)

மாதளையின் விதை, புலைத்தண்டு, சடாமாஞ்சில், சூரிவேர், நத்தைச்சூரி, அருகன்வேர், தானிசபத்திரி, ஆடாதோடை, ஆண் நிலைப்பனையின் வேர், வேலிப்பருத்தி, முள்ளிவேர், நெல்லி, மற்றும்.

கூட்டியே கடலாஞ்சி பட்டைதானும்
குணமான அசுவகெந்தி சிவனார் வேம்பு
நீட்டியே புள்ளடியின் வேருங் கூட்டி
நேர்ப்பாக சூரணமாய்ச் செய்து கொண்டு
தீட்டியே வெல்லமதைப் பாகுசெய்து
திடமான நெய்விட்டுக் கிளறியேதான்
பூட்டியே தேவியைத்தான் போற்றி செய்து
புகழாக மண்டலந்தா னுண்டிடாயே (175)

கடலாஞ்சிப்பட்டை, அசுவகெந்தி, சிவனார்வேம்பு, புள்ளடிவேர், இவைகளை சமனெடை சூரணித்து வெல்லத்தைப்பாகு செய்து சூரணத்தைக் கொட்டி நெய்விட்டு கிளறி தேவியைப்போற்றி பூசை செய்து ஒருமண்டலம் உட் கொள்வாயாக.

தீரும் வியாதி

உண்டவற்கு ஏழானைப் பலமுண்டாகும்
உத்தமரே யிப்பாக முறை பொய்யாது
அண்ட வொண்ணா நோயனைத்து மகலும்பாரு
அப்பனே குத்துவாதம் தாது நஷ்டம்
கண்டதொரு வெள்ளைமுதல் கயரோகங்கள்
கடிவான நீர்க்கடுப்பு நீர்த்தோஷங்கள்
தெண்டமுடன் கூடுவிட்டுப் போகும்பாரு
தெளிவாக யிம்முறைதான் முறைபொய்யாதே (176)

மேற்படி லேகியத்தை ஒருமண்டலம் உட்கொள்ள ஏழு ஆனை பலம் உண்டாகும், இது பொய்யாகாது, நோயனைத்தும் தீரும், குத்துவாதம், தாது நஷ்டம், வெள்ளைநோய், கயரோகங்கள், நீர்கடுப்பு, நீர்த்தோஷங்கள், இவைகள் தம் உடலை விட்டு நீங்கும் இம்முறை பொய்யாகாது.

மதனகோலாகல ரத்னாவளி லேகியம்

பொய்யாது ஆயுறு வேதந்தானும்
 பூட்டுகிறேன் மாணாக்கர் பிழைக்கவென்று
தொய்யாது மதனகோ லாடமொன்று
 சூட்டுகிறேன் சூட்சாதி சூட்சமொன்று
நையாது வில்வவேர் நிலையாவாரை
 நவிலுமே சூரத்து நிலையாவாரை
செயயாது சூரத்து சிவகைவேரும்
 திறமான தொட்டாச் சுணங்கிவேறே (177)

என்மாணவர் பிழைக்க வேண்டி மதன கோலாடம் என்ற ரகசிய மருந்தைக் கூறுகிறேன், வில்வவேர், நிலாவாரை, சூரத்து நிலாவாரை, சூரத்து சிவதைவேர், தொட்டாச் சிணுங்கிவேர், மற்றும்.

வேறான மஞ்சிட்டித் துமட்டிவேரும்
 வெள்ளைச் சாட்டரணையாம் அகிலின்கட்டை
துாறான நறுதாளி தேவதாரம்
 துரையான சந்தனமா முத்தக்காசு
நீறான வெட்டிவேர் முக்காவேளை
 நேரான நன்னாரி சாயாவேரும்
வாறான முளகருணை முக்கத்தாரி
 வாகான சங்கம்வேர் பிரம்பின்மூலம் (178)

மஞ்சிஷ்டி, துமட்டிவேர், வெள்ளைச் சாட்டரணை, அகில் கட்டை, நறுதாளி தேவதாரம், சந்தனம் முத்தக்காசு, வெட்டிவேர், முக்காவேளை, நன்னாரி, நுணாவேர் மிளகருணை, முக்கத்தாரி, சங்கன்வேர், பிரம்பின் வேர், மற்றும்.

மூலமாந் தாமரைக் கிழங்குங் கூட்டி
 முதன்மையாம் குமரிக்கு வரசன்பட்டை
தாளமாம் நுணாப்பட்டை அரசின்பட்டை
 தயவான சரக்கொன்றை ஆலுமூலம்
கோலமாம் பூமிபட்டை காட்டிலவன்பட்டை
 குணமான முருங்கைவேர் கொழிஞ்சிப்பட்டை
பாலமாம் பெருமருந்து பட்டைதானும்
 பாங்காக கருநெல்லி செவியமாமே (179)

தன்வந்திரி பகவான்

தாமரைக் கிழங்கு, குமரி, பூவரசன்பட்டை, நுணாப்பட்டை, அரசன் பட்டை, சரக்கொன்றை, ஆலம் வேர், பூமிபட்டை, காட்டிலவன்பட்டை, முருங்கை வேர், கொழிஞ்சிப்பட்டை, பெருமருந்துபட்டை, கருநெல்லி, செவ்வியம், மற்றும்.

செவியமாம் கொடிவேலி சித்தாமுட்டி
சீரான பேராமுட்டி அழிஞ்சிற்பட்டை
தவியமாம் களாவேர் சீந்திற்றண்டு
தயவான பஞ்சாங்கம் துத்திவேராம்
ஒவியமாம் வேப்பனுட பட்டைதானும்
உயர்வான பூனைக்காஞ் சோரியின்வேராம்
பவியமாம் தழுதாழைக் காட்டுவாழை
தயவான மரமஞ்சள் பரங்கியாமே (180)

கொடி வேலி, சித்தாமுட்டி, பேராமுட்டி, அழிஞ்சிப்பட்டை, களா வேர், சீந்தில்தண்டு, துத்திவேர், வேம்பின்பட்டை, பூனைக்காஞ் சோரிவேர், தழுதாழை, காட்டுவாழை, மரமஞ்சள், பரங்கிப்பட்டை (பஞ்சாங்கம் என்பது மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, காய்) ஆவாரைப் பஞ்சாங்கம் மற்றும்.

ஆமேதான் யெலுமிச்சங் கண்டங்கத்திரி
அரிதான தூதுவளை கடம்பன்பட்டை
போமேதான் புனல்த்தண்டு மூதண்டம்வேர்
புகழான ஆணிலைப் பனைக்கிழங்கு
வேமேதான் சடாமாஞ்சி தாளிசமூலம்
விதமான குருவிவேர் ஆடாதோடை
நாமேதான் மைசாலக்கடி தண்ணீர்மிட்டா
னலமான வேலியுடப் பருத்திதானே (181)

எலுமிச்சை, கண்டங்கத்திரி, தூதுவளை, கடம்பன்பட்டை, புனல் தண்டு, அருகின் வேர், ஆண் நிலைப் பனங்கிழங்கு, சடாமாஞ்சில், தாளிசமூலம், குருவிவேர், ஆடாதோடை, மைசாலக்கடி, தண்ணீர் மீட்டான், வேலிப்பருத்தி, மற்றும்.

தானான கரிசலாங் கண்ணிமுள்ளி
தயவான பிரமியிலை துளசிமூலம்
பானான பொடுதலையும் அசுவகெந்தி
பாங்கான கடலாஞ்சிப் பட்டைதானும்
கோனான சிவனாரின் வேம்புதானும்
குணமான சிறுபுள் ளடியின் மூலம்
தேனான வகைக்குப்பல மஞ்சதாகத்
தேர்ந்ததோர் பாண்டத்திற் கியாழஞ்செய்யே (182)

கரிசலாங்கண்ணி, முள்ளி, பிரமியிலை, துளசிமூலம், பொடுதலை, அசுவகந்தி, கடலாஞ்சிப்பட்டை, சிவனார்வேம்பு, சிறுபுள்ளடிமூலம், இவைகள் வகைக்கு ஐந்து பலம் பாண்டத்திலிட்டு நீர்விட்டு கியாழம் செய்திடு.

சூரணத்தினுசுகள்

செய்துமே சூரணத்தின் தொகுப்புச்சொல்வேன்
சிறப்பான புங்கம்பூ ஆவாரம்பூ
கொய்துமே தென்னம்பூ பன்னீருபூ
குணமான மதனகா மேஸ்வரன்பூ
பெய்துமே திரிகடுகு திரிபலாதி
பிலமான அசுவகெந்தி யெலுமிச்சம்வேர்
நைதுமே நிலைப்பனையின் கிழங்குதானும்
நலமான சிறுதேக்கு சோம்புமல்லி (183)

சூரண சரக்குகளை கூறுகிறேன், புங்கம்பூ, ஆவாரம்பூ, தென்னம்பூ, பன்னீர்ப்பூ, மதன காமேஸ்வரன்பூ, திரிகடுகு, திரிபலாதி, அசுவகெந்தி, எலுமிச்சம்வேர், நிலைப்பனங்கிழங்கு, சிறுதேக்கு, சோம்பு, மல்லி, மற்றும்.

மல்லியாம் சீரகங் கருஞ்சீரகந்தான்
மறைவான கானகத்தின் சீரந்தானும்
கொல்லியாம் குரோசானி யோமந்தானும்
குறிப்பான வெந்தயம் நல்லவோமம்
முல்லியாம் காசிரா சாதிக்காயும்
உத்தமனே லவங்கமாம் லவங்கப்பத்திரி
மெல்லியாம் சாதிப்பத்திரி லவங்கப்பட்டை
மேலான சிறுலவங்கப் பட்டைசேரே (184)

சீரகம், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், குரோசாணி ஓமம், வெந்தயம், ஓமம், காசிரா, சாதிக்காய், லவங்கம், லவங்கப்பத்திரி, சாதிபத்திரி, லவங்கப்பட்டை, சிறுலவங்கப்பட்டை, மற்றும்.

சேர்த்துமே வால்மிளகு அன்னாசிப்பூ
சிறப்பான பூனையென்றக் காலின்வித்து
கோர்த்துமே விளாம்பிசின் செண்பகப்பூ
குணமான யிஸ்கோலின் விரையுஞ்சேர்த்து
பார்த்துமே தேக்குவிரை பேதனாவும்
பாங்கான நீர்முள்ளி ரூமஸ்தாகும்
ஆர்த்துமே துத்திவிரை ஆவாரம்வித்து
அழகான வெள்ளரியின் முருங்கைவித்தே (185)

தன்வந்திரி பகவான்

வால்மிளகு, அன்னாசிப்பூ, பூனைக்காலிவிதை, விலாம்பிசின், செண்பகப்பூ, இசுபகோல்விதை, தேக்குவிதை, பேதனாவிதை துத்துவிதை, ஆவாரம்விதை, வெள்ளரிவிதை, முருங்கைவிதை, மற்றும்.

வித்தான காட்டின முருங்கைவித்து
விரைவான அத்திவிரை அரசன்வித்து
சத்தான ஆலம்விரை துத்திவித்துச்
சார்வான துளசிவிரை கெஞ்சாவித்து
கொத்தான பத்திராட்சி ருத்திரவித்துக்
குணமான சமுத்திரா சோகிவித்து
பத்தான நத்தையென்ற சூரிவித்துப்
பதனமான பருத்திவிரை பூவரசன் கூட்டே (186)

காட்டு முருங்கை விதை, அத்திவிதை, அரசன்விதை, ஆலம்விதை, துத்திவிதை, துளசிவிதை, கெஞ்சாவிதை, உத்திராட்ச விதை, சமுத்திர சோகி விதை, நத்தைச் சூரி விதை. பருத்திவிதை, பூவரசன், மற்றும்.

கூட்டியே செம்பருத்தி நெருஞ்சிப்பழமும்
குணமான விளாம்பிசினும் வேலம் பிசினும்
மீட்டியே யிலவம்பிசின் முருங்கைப்பிசினும்
இழலான பீசுபந்து அக்கரோட்டி
தீட்டியே பேரீச்சங் கசகசாவும்
திறமான திராட்சிப்பழம் சிறுநாகப்பூ
பூட்டியே பூமி சர்க்கரைகிழங்கு
புகழான வாகாசச் கருடன் தானே. (187)

செம்பருத்தி, நெருஞ்சிமுள், விளாம்பிசின், வேலம்பிசின், இலவம்பிசின், முருங்கைப்பிசின், பிஸ்தா, அக்ரோட்டு, பேரிச்சம்பழம், கசகசா, திராட்சைபழம், சிறுநாகப்பூ, பூமிசக்கரை கிழங்கு, கருடன்கிழங்கு, மற்றும்.

தானான அதிமதுரம் அக்கிராகாரம்
தாக்காக வேலரிசி தாளிசப்பத்திரி
கோனான லவங்கப்பத்திரி யிலையுங்கூட்டு
குறிப்பான சதகுப்பை கூகைநீரும்
மானான கல்நாரு குங்குமப்பூ
மகத்தான கல்மதம் கற் கடகசிங்கி
பானான சலாசத்து வாய்விளங்கம்
பதிவான கார்போக வரிசியாமே (188)

அதிமதுரம், அக்ராக்காரம், ஏலரிசி, தாளிசபத்திரி, லவங்கப்பத்திரி, சதகுப்பை, கூகைநீர், கல்நார், குங்குமப்பூ, கல்மதம், கற்கடகசிங்கி, சலாசத்து, வாய்விளங்கம், கார்போக அரிசி, மற்றம்.

அரிசியாம் விழலரிசி ரேவல்சின்னி
அரியவோ ரிதழின் தாமரையுங்கூட்டு
வரிசையாய் சீந்திற் சர்க்கரையுங்கூட்டு
வாகாக வகைக்குவொரு பலமாய்த்தூக்கு
கரிசையாம் சரக்குமுதல் வித்துயாவும்
கருகாமல் சூரணித்து வைத்துக்கொள்ளு
பரிசையுடன் ரசவகைகள் எடுப்பதற்குப்
பதிவாகப் பாடுகிறேன் பாடுறேனே (189

விழலரிசி, ரேவல்சின்னி, ஓரிதழ்தாமரை, சீந்தில் சக்கரை, இவைகள் வகைக்கு ஒருபலம் எடுத்து யாவையும் சூரணித்துக் கொள், ரச வகைகளை கூறுகிறேன்,

இரச வகை

பாடுகிறேன் முருங்கைப்பூ ரசமொன்றாகும்
பதிவான செவ்விளநீர் படியொன்றாகும்
தேடுகின்ற நெல்லிநீர் படியொன்றாகும்
திறமான கதலிச்சார் படியொன்றாகும்
நீடுகின்ற தேங்காய்ப்பால் படியொன்றாகும்
நேரான செங்கரும்பு படியொன்றாகும்
பாடுகின்ற நெல்லிரசம் படியொன்றாகம்
பதிவான தண்ணீர்மிட்டான் படியொன்றாமே (190)

முருங்கைப்பூச்சாறு ஒருபடி, செவ்விளநீர் ஒருபடி, நெல்லிக்காய் சாறு ஒருபடி, கதலிச்சாறு ஒருபடி, தேங்காய்ப்பால் ஒருபடி, செங்கரும்புசாறு ஒருபடி, நெல்லிரசம் ஒருபடி, தண்ணீர் மீட்டான் சாறு ஒருபடி மற்றும்,

ஒன்றான பசும்பாலு படியொன்றாகும்
உத்தமனே ரசவகைகள் கூட்டுவாய்நீ
நன்றான கியாழத்தைச் சுண்டக்காய்ச்சி
நலம்பெறவே ரசவகை யாவும் விட்டு
பன்றான சீனிசர்க் கரையுஞ் சேர்த்து
பாங்கான ஆவினுட நெய்யும்விட்டு
குன்றாத மலைத்தேனுங் கூடவிட்டுக்
குறிப்பாக லேகியத்தைப் பதமாய்க்கிண்டே (191)

பசும்பால் ஒருபடி, கூட்டிக்கொள், முதலில் செய்த கியாழத்துடன் இச்சாறு வகைகளை கூட்டி சீனி சக்கரைச் சேர்த்து பாகுசெய்து மேற்படி சூரணத்தைக் கொட்டி ஆவின் நெய், மலைத்தேனும் கூட்டி லேகியமாக பதமாக கிளறிக்கொள்,

தன்வந்திரி பகவான்

கிண்டியே மெழுகுபதம் தன்னில்வாங்கி
கிருபை பெற வாசனையும் பச்சைப்பூரம்
தண்டியே கஸ்துாரி சாம்பிராணிப்பூ
சார்வாகப் பன்னீரும் வாசம் சேர்த்து
அண்டர்பிரான் றனைவணங்கிப் போற்றி செய்து
அடவாக நந்திபதம் வணங்கி நின்று
பண்டிதத்தின் பிரகாரம் பிசகாமற்றான்
பாடிவைத்தேன் தன்வந்திரி வலுமையாமே (192)

மேற்படி மெழுகுபதமாகக் கிளறி பச்சைக் கற்பூரம், கஸ்துாரி, சாம்பிராணிப்பூ, பன்னீர் இவைகளை கூட்டிக் கொள், ஈசனை வணங்கிப் பூசித்து நந்திபதத்தை வணங்கி நின்று முறைபிசகாது செய்வாயாக.

வலுமையாம் தன்வந்திரி பகவானும்தானும்
வசனித்தேன் கனகசபை நாதருக்கு
வலுமையாம் இப்பாகம் யாருஞ்சொல்லார்
கடினமாம் ராசர்கள் செய்து பார்ப்பார்
சுலுமையா மெளியோர்கள் செய்யமாட்டார்
செய்வதற்குக் காயசுத்தி வுடனேயாச்சு
பலுமையா மிம்மருந்து வுண்டபேர்க்குப்
பாங்காக வேழானைப் பலனுண்டாமே (193)

தன்வந்திரி பகவானாகிய நான் சொன்ன இம்முறையை தவறாமல் செய், இம்முறையை கனகசபை நாதருக்குச் சொன்னேன், இப்பாகத்தை யாரும் சொல்ல வில்லை, ராசர்கள் இம்முறையை செய்வார்கள், எளியோர்கள் செய்யமாட்டார், இம்மருந்தால் உடல் சுத்தியாகும், இம்மருந்தை உட்கொண்டவர்க்கு ஏழுஆனை பலம் உண்டாகும்.

உண்டவற்குப் பத்தியமோ காடையாகும்
உத்தமனே ஊர்வணங்க வுடும்புமாகும்
கண்டமா மிறைச்சியுடன் பாலுமாகும்
கனமான வறுப்புக்கறி எறாவுமாகும்
அண்டமுடன் கோழிமுட்டை வவ்வாலாகும்
அன்பான கோழியுடன் மயிலுமாகும்
பண்டிதரே யிதுமுறை தான் பொய்யாதையா
பாங்காகப் பத்தியமாய் உண்டிடாயே (194)

மேற்படி மருந்தை உட்கொள்ளும் போது காடை, உடும்பு, இறைச்சிகள், பால், வறுப்புக்கறி, எறால், கோழிமுட்டை, வவ்வால், கோழி, மயில், இவைகளை சேர்க்கலாகும், இம்முறை பொய்யாகாது, பத்தியம் இருந்து இம்மருந்தைக் கொள்வாயாக.

உண்டவற்கும் விந்துாறுங் கேணியாகு
முத்தமனே சித்தினியு மத்தினியுந்தானும்
திண்டான பத்மினியுஞ் சங்கினிதானும்
திடமான யிச்சாதி நாலு பேரும்
வண்டாடுங் குழல்மாது மன்னர்முன்னே
வணங்குவார் லீலையிலே முகஞ்சோர்வார்கள்
பண்டான மன்மதன் போல் லீலைசெய்து
பட்சமாய் ரதியுடனே வாழ்குவாயே (195)

மேற்படி லேகியத்தால் விந்து ஊறும், அத்தினி, சித்தினி, பத்தினி, சங்கினி, ஆகிய நான்கு சாதி பெண்களையும் சலையாமல் கூடலாகும், லீலையின் போது முகம் சோர்வார்கள் மன்மதனைப்போல் லீலைசெய்து ரதியுடன் வாழ்வாயாக.

இதற்குச் சிரோரத்தின ஸ்நானத்தயிலம்

வாழ்குவார் தாரணியில் மாந்தருக்கு
வகையாகத் தயிலமொன்று சூட்டக்கேளும்
ஆழ்குவார் நல்லெண்ணெய்ப் படிதானொன்று
அப்பனே பாலதுவும் படிதானொன்று
மூழ்குவார் மூலிவகை கரசைதானும்
முனையான வில்வத்தின் மூலிதானும்
தீழ்குவார் நொச்சிலியின் கொழுந்துதானும்
திடமான நெல்லியின் கொழுந்துதானே (196)

தயிலம் ஒன்று கூறுகிறேன். நல்லெண்ணெய் ஒருபடி, பால் ஒருபடி, கரசை மூலிகை, வில்வயிலை, நொச்சி கொழுந்து, நெல்லிக் கொழுந்து, மற்றும். (கரசை என்பது கரி சாலை)

தானான அல்லியின் கொழுந்துதானும்
தயவான அமுக்கரா தண்ணீர்விட்டான்
கோனான கடைச்சரக்கு சித்தாமுட்டிக்
குணமான சந்தனமும் தேவதாரம்
பானான அகிற்கட்டை முத்தக்காசு
பாங்கான முதியாரின் கூந்தல் கூட்டி
வேனான கைக்கோலம் சீரந்தானும்
விதமான நன்னாரி பாடமாமே (197)

அல்லிக் கொழுந்து, அமுக்கிறா, தண்ணீர்விட்டான், மற்றும் கடைசரக்கான சித்தாமுட்டி, சந்தனம், தேவதாரம், அகில்கட்டை, முத்தக்காசு, முதியார் கூந்தல், கச்சோலம், சீரகம், நன்னாரி, மற்றும்.

பாடமாம் கோஷ்டமுடன் திரிபலாதிப்
பாங்கான சுக்குடனே ஓமம்கூட்டு
நீடமாம் சோம்புடனே வில்வவோடும்
நேரான சாம்பிராணிக் கஸ்தூரி மஞ்சள்
தேடமாம் வெட்டிவேர் சீவனார் வேம்பு
திறமான அமுக்கரா கொல்லன் கோவை
வேடமாம் தூளிடித்து யெண்ணெய்தன்னில்
விரும்பியே கடுகுபதந் தன்னிற் காய்ச்சே (198)

கோஷ்டம், திரிபலாதி, சுக்கு, ஓமம், சோம்பு, வில்வபழ ஓடு, சாம்பிராணி, கஸ்தூரி மஞ்சள், வெட்டிவேர், சிவனார் வேம்பு, அமுக்கிறா கொல்லன் கோவை, இவைகளை தூளாகச் செய்து மேற்படி எண்ணெயுடன் எல்லாவகையும் கலந்து கடுகுபதமாக காய்ச்சிக்கொள்.

காய்ச்சியே கணபதி மாயன்போற்றிக்
கடுவாகத் தேவியைத் தியானஞ்செய்து
ஆய்ச்சியே தாள் பணிந்து திரிபுரையைப் போற்றி
அன்பாகத் தயிலமதை சீசாவிலூற்றி
தேய்த்துமே மண்டலந்தான் முழுகிவந்தால்
தீராத பிணியகலும் தீரும் தீரும்
மூய்ச்சியே விடாமல் முழுகினாக்கால்
முயன்றோரும் சகலநோய் தீரும்பாரே (199)

கணபதி மாயன், தேவி, இவர்களை தியானித்து திரிபுரையைப் பணிந்து போற்றி தயலத்தை சீசாதனிலடைத்திடு, ஒருமண்டலம் தலைமுழுகிவர நோய்கள்தீரும், விடாமல் தலைமுழுகிவர சகல நோய்களும் நீங்கும்.

பாரே நீ கயரோகம் சயரோகந்தான்
பரிவான அரைகடியும் சிரங்கும் தீரும்
சீரேதான் கிரந்திமுதல் யாவுந்தீரும்
சிறப்பான அஸ்தியில் வெட்டைதீரும்
நீரேதான் கபாலத்தின் சூடுபோகும்
நிலையான பீனிசமும் அகலும் பாரு
சேரேதான் நீர்ப்பாய்ச்சல் கண்ணருகல்
தெளிவாகும் புழுவெட்டுத் தடிப்பும்போமே (200)

மேற்படி தயிலம் முழுகுவதன் மூலம் கயரோகம், சயரோகம், அரையாப்புக்கடி, சிரங்கு, கிரந்தி, அஸ்தி வெட்டை, கபால உஷ்ணம், பீனிசம், நீர்ப்பாய்ச்சல், கண்ணருகல், புழுவெட்டு, தடிப்பு இவைகள் நீங்கும்.

வயித்திய காவியம்

போமேதான் நாலாயிரத்து நானூறுசொச்சம்
 பொதிவான வியாதியெல்லா மகலும்பாரு
நாமேதான் நந்திசொன்னார் எந்தமக்கு
 நமனார்க்கிங் கேதுவகை தரவோயில்லை
வேமேதான் ரிஷிகட்கு யிந்தமுறைபாகம்
 வெகுசுறுக்கு அதிகவித்தை சொல்லிப்போமோ
தாமே தான் தன்வந்திரி பகவான்
 தானும் மானிடற்குச் சாற்றினாரே (201)

மேற்படி தயிலத்தால் நாலாயிரத்து நானூற்று நாற்பத்து எட்டு நோய்களும் நீங்கும், நந்தீசர் எனக்கு சொன்னார். இவ்வகை செய்வாரிடம் எமனுக்கு வேலை இல்லை, ரிஷிகட்கு இம்முறை எளிதிலாகும், சுருக்கமான இம்முறை அதிக பலனைத்தரும், தன்வந்திரி பகவானாகிய நான் மானிடர்க்குச் சொல்லி விட்டேன்.

கபாலக் கூந்தல்

சாற்றினார் மாந்தர்கட்கு கபாலக்கூந்தல்
 தயவாகச் சொல்லுகிறேன் தயிலமொன்று
போற்றுகிறேன் புருஷரத்தின் மாமூலிப்
 பொலிவான முதியாரு கூந்தல்தானும்
தூற்றினார் மரமஞ்கள் மாஞ்சிதானும்
 துடியான அதிமது:ரம் கோஷ்டமேலாம்
ஆற்றினார் செங்கழுநீர் செண்பகப்பூ
 அப்பனே கார்போக அரிசியாமே (202)

கூந்தல் தயிலம் கூறுகிறேன், முதியார் கூந்தல், மரமஞ்சள், சடாமஞ்சில், அதிமதுரம், கோஷ்டம், ஏலம், செங்கழுநீர், செண்பகப்பூ, கார்போக அரிசி, மற்றும்.

ஆமேதான் நெல்லியின் சாறுதானும்
 அப்பனே யெள்ளெண்ணை படிதான்ரெண்டு
சாமேதான் பசும்பாலு படிதானொன்று
 தயவாக மருந்தெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
காமேதான் தயிலமதைக் காய்ச்சியேதான்
 தயங்காமல் மண்டலங்கால் முழுகிவந்தால்
போமேதான் பித்தநாற் பதுவும் போகும்
 பொல்லாத பித்தவெட்டை நீங்குந்தானே (203)

நெல்லிச்சாறு, எள்ளெண்ணெய் இரண்டு படி, பசும்பால் ஒருபடி, மேற்படி சரக்குகளை இடித்து இத்துடன் சேர்த்து தயிலம் பதமாக காய்ச்சி கால் மண்டலம் முழுகிவர நாற்பது வகை பித்தமும், பித்தவெட்டையும் தீரும்.

நீங்குமே கண்புகைச்சல் கண்மழுங்கு
 நீங்காத புழுவெட்டுத் தடிப்பும் போகும்

தன்வந்திரி பகவான்

ஏங்குமே மயிற்கூந்தல் வளரும் பாரு
யெழிலான காந்தலது தீரும்பாரு
பாங்குபெற திரேகமது மின்னும்பாரு
பரிவான சட்டையது தள்ளும்பாரு
ஓங்குமே தங்கம்போல் காந்தியுண்டாம்
உத்தமனே இம்முறை அதீதங்காணே (204)

மேலும் கண்புகைச்சல், கண்மழுங்கு, புழுவெட்டு, தடிப்பு, உஷ்ணம் இவைகள் நீங்கி கூந்தல் வளரும், உடல் பொலிவு உண்டாகும், சட்டைதள்ளும். தங்கம் போல் நிறமுண்டாகும்.

சடாதாரி

காணவே மானிடற்கு சடாதாரியொன்று
கடிமரம் சுக்கொன்று யேலமொன்று
தோணவே மிளகொன்று திப்பிலியொன்று
துடியான பூரமொன்று காரமொன்று
ஏணவே லிங்கமொன்று தாராமொன்று
யெழிலான நாபியொன்ற யிரசமுமொன்று
ஊணவே கெந்தகமும் வீரங்கால் தான்
உத்தமனே யிதுகளெல்லாம் ஒன்றாய்க்கூட்டே (205)

சடாதாரி கூறுகிறேன், சுக்கு, எலம், மிளகு, திப்பிலி, பூரம், காரம், லிங்கம், தாரம், நாபி, ரசம், இவைகள் வகைக்கு ஒருபங்கு, கெந்தகம், வீரம், வகைக்கு கால்பங்கு இவைகளை ஒன்றாக கூட்டிக்கொள்.

கூட்டியே மலைத்தேனால் துளசிச்சாற்றால்
கொற்றவனே நாற்சாம மாட்டினாக்கால்
ஈட்டியே பாணமது மாத்திரையாக்கி
இணையான குன்றிபோல் திரட்டிக்கொண்டு
கூட்டியே முலைப்பாலில் துளசிச்சாற்றில்
குறிப்பான கியாழமதில் கொடுத்தாயானால்
தீட்டிவரும் பித்தசுரம் வாதசுரம்யாவும்
பிரண்டோடிப் போகுமெனப் பேசினாரே (206)

மேற்படி கூட்டியதை மலைத்தேன், துளசிச்சாறு, இவைகளை விட்டு நான்குசாமம் அரைத்து குன்றி அளவு உருட்டிக் கொள், முலைப்பால், துளசிச்சாறு, கியாழத்தில் கொடுக்க பித்த சுரம், வாத சுரம் நீங்கும்.

பேசினார் வெகுகோடி மருந்துதாமும்
பிரயோகம் செய்வார்கள் ரிஷிகள்தாமும்

காசினியி லிதுபோல யாருஞ்சொல்லார்
கழறவொண்ணா சடாதாரி யிதுவேயாகும்
தேசிச்சா றுதனிலும் கொடுக்கலாகும்
திறமான விம்மருந்து சுருக்குமெத்த
ஊசிநீர் தன்னிலே தாக்கினாக்கால்
உத்தமனே திரேகமது காயமாச்சே (207)

வெகுகோடி மருந்துகளுண்டு, ரிஷிகள் செய்து பிரயோகம் செய்வார்கள், உலகத்தில் இதுபோல யாரும் சொல்லவில்லை, சடாதாரி இதுவாகும் தேசிச்சாற்றிலும் இம்மருந்தைக் கொடுக்கலாம், ஊசிநீரில் சடாதாரியைக் கொடுக்க உடல் வச்சிரமாகும்.

மண்டோதரி

ஆச்சப்பா மண்டோதரி மாத்திரைசொல்வேன்
அப்பனே மானிடர்கள் பிழைக்கவென்று
தேச்சப்பா காரமுடன் லிங்கந்தானும்
தெளிவான பூரமொடு வீரந்தானும்
மூச்சப்பா ஒமமுடன் லவங்கந்தானும்
உத்தமனே சாதிக்காய் மாசக்காயும்
ஏச்சப்பா கசகசா லவங்கப்பட்டை
யெழிலான வால்மிளகு ரோகணிசேரே (208)

மண்டோதரி மாத்திரையைக் கூறுகிறேன், காரம், லிங்கம், பூரம், வீரம், ஓமம், லவங்கம், சாதிக்காய், மாசிக்காய், கசகசா, லவங்கப்பட்டை, வால்மிளகு, கடுகரோகணி, மற்றும்.

சேர்த்துமே கடுக்காயும் சிங்கிதானும்
தெளிவான சித்தரத்தை பேரரத்தை
கோர்த்துமே சூரணமாய்ச் செய்துகொண்டு
கொற்றவனே எலுமிச்சம் பழச்சாற்றாலே
ஆர்த்துமே அறுபது சாமமாட்டு
அப்பனே நற்றேனி லாறுசாமம்
நீர்த்துமே குன்றிபோல் திரட்டியே தான்
நெடிதான ரவிதனிலே யுலர்த்திடாயே (209)

கடுக்காய், சிங்கி, சித்தரத்தை, பேரரத்தை, இச்சரக்குகளை சமனாக கூட்டி சூரணித்து எலுமிச்சைப் பழச்சாற்றால் ஆறு சாமம் அரைத்திடு, தேனில் ஆறுசாமம் அரைத்து குன்றி அளவு மாத்திரையாக திரட்டிக் கொண்டு வெய்யிலில் உலர்த்திக்கொள்.

தன்வந்திரி பகவான்

உலர்த்தியே முலைப்பாலில் தேனிற்கொள்ள
வுத்தமனே திரிதோஷ சுரமும் போகும்
நலர்த்திவிடும் சன்னிசுரம் அகன்றுபோகும்
நனினமாம் பதிமூன்று சன்னிபோகும்
கலர்த்துகின்ற நளிர்சுரமுந் தாபசுரம்போகும்
கருவான அறுபதுநாள் சுரமும்போகும்
பலர்த்துகின்ற பத்தியமோ புளியுப்புமாகா
பாங்கான மாய்கையுந் தள்ளுதள்ளே (210)

மேற்படி மாத்திரையை தாய்ப்பால், தேன், இவைகளில் கொடுக்க திரி தோஷ சுரம், சன்னிசுரம், பதிமூன்றுவகை சன்னி, நளிர்சுரம், தாபசுரம், போன்ற அறுபதுவகை சுரமும் நீங்கும், புளி, உப்பு, ஆகாது, போக உறவை நீக்குதல் அவசியமாகும்.

தள்ளப்பா மண்டலந்தா னிச்சாபத்தியம்
தாழ்வாக யாதொன்றும் சேர்க்கவேண்டாம்
விள்ளாத பொருள்களெல்லாம் இதிலேவிள்ளும்
வீணர்களே யிந்நூலைப் பழிப்புச் சொல்வார்
கள்ளாருங் குடியர்கள் காமியோதான்
கருதார்க ளிந்நூலின் கருத்தின் மார்க்கம்
வள்ளாரு மங்கையரே வழியின்மார்க்கம்
வகுத்துரைத்தேன் தன்வந்திரி யுரைத்தவாறே (211)

ஒருமண்டலமும் இச்சாபத்தியம் இருக்கவேண்டும், குடியர்கள், காமிகள் இந்தநூலை பழிப்பர்.

சுகந்தமாது

வாறான மானிடர்கள் பிழைக்கவென்று
வசனித்தேன் சுகுந்தமாது மாத்திரைதன்னை
கூறான தாளகமும் சிங்கிதானும்
குணமான லிங்கமுடன் பூரந்தானும்
வேறான கெந்தகமும் ரசமுந்தானும்
எழிலான வால்மிளகு லவங்கந்தானும்
சாறான கார்போக வரிசிதானும்
சார்வாகத் தேனதில் அறைத்திடாயே (212)

சுகந்தமாது மாத்திரையைக் கூறுகிறேன், தாளகம் மிருதார், சிங்கி, லிங்கம், பூரம், கெந்தகம், ரசம், வால்மிளகு, லவங்கம், கார்போக அரிசி இவைகளை சரி எடை எடுத்து தேனில் அரைத்திடு.

அரைத்துமே நாற்சாமம் பிரம்பின்சாற்றால்
அப்பனே யிருசாமம் கையான் சாற்றால்
திரைத்துமே மேனியிடச் சாற்றினாலே
திறமாக வறுசாம மாட்டியேதான்
பறைத்துமே குன்றிபோ லுருட்டியேதான்
பாங்காகப் பரணிதனில் பதனம்பண்ணு
நிறைத்துமே முலைப்பாலில் தேனிற்கொள்ள
நிற்காது மூன்றுவிதச் சுரம் போந்தானே (213)

தேனில் நான்கு சாமமும் பிரம்பின் சாற்றால் இரண்டு சாமமும், கையான் சாறு மேனிச்சாற்றால் ஆறுசாமமும் அரைத்து குன்றிபோல் உருட்டி காயவைத்து பரணியில் பதனம் செய், தாய்ப்பால், தேனில் உட்கொள்ள மூன்று வித சுரமும் தீரும்.

தானான சன்னிசுரம் பலன் மூன்றும்போம்
சார்வான வாதமெண் பதுவும்போகும்
கோனான பித்தம் நாற்பதுவும் போகும்
குறிப்பான சிலேத்துமமது தொண்ணூற்றாறும்
தேனான யிந்தவகை சுரமும் போகும்
தெளிவாகு மிம்மருந்து சுருக்குமெத்த
பானான பத்தியமோ புளியு மாகாப்
பரிவாக சையோக மாகாதென்னே (214)

மேலும் சன்னிசுரம், எண்பதுவகை வாதம், நாற்பதுவகை பித்தம், தொண்ணூற்று ஆறுவகை சிலேத்துமம், இவ்வகைச் சுரங்களும் போகும், இது சுருக்கமான மருந்தாகும், புளி ஆகாது, போக உறவு ஆகாது.

பீதாம்பரக் குளிகை

என்னவே பீதாம்பரக் குளிகையொன்று
யெழிலாக மானிடற்குப் பூட்டுகின்றேன்
பண்ணவே சாதிக்காய் அபின்கஞ்சாவும்
பரிவான ரூமஸ்து பேதனாவும்
சொன்னதொரு பூனைக்கால் அமுக்கராவும்
துடியான பற்பாடம் சிறுகாஞ்சோரி
நன்னயமா முருங்கைப்பூச் சாற்றினாலே
நளினமுடன் அறுசாமம் ஆட்டு ஆட்டே (215)

பீதாம்பரக் குளிகையைக் கூறுகிறேன், சாதிக்காய், கஞ்சா, ரூமிமஸ்து, பேதனா விதை, பூனைக்காலி விதை, அமுக்கிறா, பற்படாகம், சிறுகாஞ்சோரி, இவைகளை சமனெடை எடுத்து முருங்கைப்பூச் சாற்றால் ஆறுசாமம் அரைத்திடு.

ஆட்டியே குன்றிபோ லுருட்டியேதான்
அழகாக பசும்பாலில் ரேகித்தேதான்
கூட்டியே கதலியுட ரசமுந்தானும்
குணமாக யிருவேளை கொண்டாயானால்
மூட்டிவிடுங் தாபாக்கினி யதிகமாகி
--------- மன்மத தாபமெத்த
சூட்டினேன் ராஜாக்கள் செய்துபார்ப்பார்
சுருக்காகும் நந்தீசர் பாதங்காணே (216)

மேற்படி அரைத்ததை குன்றி அளவு உருட்டி, பசும்பாலில் இழைத்து அல்லது கதலி ரசம் சேர்த்தும் இருவேளை உட்கொள்ள வீரிய வீர்த்தி அதிக முண்டாகும், ராஜாக்கள் செய்வர், நந்தீசர் பாதம் காணுவாயாக.

காணவே பத்தியம் யிறைச்சியாகும்
பதிவான காடைபுறா வுடும்பாகும்
தோணவே கவுச்சிவகை யாகாதப்பா
துடியான வாயுவென்ற பதார்த்தந்தள்ளு
சாணமா மற்றதெல்லா மாகுமாகும்
சார்வான சீதளப் பண்டங்களாகா
ஏணவே பத்தியமோ சரியாய்க்காரு
என்மகனே நந்திசொல்ல வுரைத்தோம் நாமே (217)

மேற்படி மருந்து கொள்ளும் போது இறைச்சி வகைகள் ஆகும் காடை, புறா, உடும்பு இவைகள் ஆகும், மீன் வகைகள் ஆகாது, வாய்வு பதார்த்தம் ஆகாது. சீதள பொருட்களாகாது, மற்ற பொருட்கள் உட் கொள்ளாகும், பத்தியமிருந்து உட்கொள்வாயாக. நந்தீசர் சொல்ல நான் உனக்கு சொன்னேன்.

இரத்த வாந்திக்கு

நலமான மாந்தருக்கு வாந்திகண்டால்
நரமான தேசாவரம் சுக்குத்தானும்
தரமான யேலமுடன் லவங்கந்தானும்
தயவான சோம்புடனே சீரந்தானும்
போமான தாளிசமாம் பத்திரிகூடம்
பொலிவான தேவதாரம் அகிலின்கட்டை
காமான சரக்குக ளெல்லாந்தானும்
கருவாகச் சூரணித்து சீனிசேரே (218)

வாந்தி ஏற்பட்டால் குணமாக மருந்து கூறுகிறேன், தேசாவரம் சுக்கு, ஏலம், லவங்கம். சோம்பு, சீரகம், தாளிசபத்தரி, தேவதாரம், அகில் கட்டை, இச்சரக்குகளை சமனெடை எடுத்து சூரணித்து சரி எடை சீனி சேர்த்துக்கொள்.

சேர்த்துமே சரியெடை சீனிதானும்
சிறப்பாக வெண்ணைதனில் கொள்வாயானால்
கோர்த்துவரும் இரத்தபித்தம் பித்தம்வாந்தி
குறுகாம லகன்றுவிடும் கோதேகேளாய்
துார்த்துமே வாய்கசப்பு புளியேப்பந்தான்
பொல்லாத யிரிசுவு பொருந்தவோடும்
தீர்த்துவிடும் அசாத்தியங்கள் சாத்தியங்கள்
தீருமென்றே தாமுறைத்தார் முனிவர்தாமே (219)

மேற்படி சூரணத்தை வெண்ணெயில் உட்கொள்ள இரத்தபித்தம், பித்த வாந்தி, வாய்கசப்பு, புளிஏப்பம், இசிவுகள், இவைகள் தீராமலிருந்தாலும் இச்சூரணத்தால் தீரும், இதை முனிவர் சொன்னார்.

மனோரஞ்சித ரத்னகெண்டித் தயிலம்

முனிவான மனோரஞ்சித ரத்னகெண்டி
மொழிகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
கனிவான கடப்பன்பட்டை கடுகுரோகணி
கருதுகின்ற புளியாரை அமுக்கராவும்
தனியான சிவதைவேர் கைச் சோலந்தான்
தயவான கஸ்துாரி மஞ்சள் தானும்
பனியான பீனசப்புல் லாடா தோடைப்
பாங்காகப் பாங்குபெற வசம்புகூட்டே (220)

மனோரஞ்சித ரத்னகெண்டி கூறுகிறேன், கடப்பன்பட்டை, கடுகுரோகணி, புளியாரை, அமுக்கிறா, சிவதைவேர், கச்சோலம், கஸ்துாரி மஞ்சள், பீசைப்புல், ஆடாதோடை. வசம்பு, மற்றும்.

கூட்டவே யெருக்கனுடன் கொல்லன்கோவை
குணமான சாதிக்காய் அதிமதுரம்
நீட்டவே யிருசந்தம் தேவதாரம்
நிலையான சீரகம் காட்டுச்சீரம்
கூட்டவே நாகமல்லிச் சித்தா முட்டிக்
குணமான கொடிவேலி நொச்சிமுள்ளி
தேட்டவே அணிநுணா பூசனிதானும்
தெளிவான பெருமருது அத்திசேரே (221)

எருக்கன், கொல்லன்கோவை, சாதிக்காய், அதிமதுரம், சந்தனம், செஞ்சந்தனம், தேவதாரம், சீரகம், காட்டுச்சீரகம், நாகமல்லி, சித்தாமுட்டி கொடிவேலி, நொச்சிமுள்ளி, நுணா, பூசனி, பெருமருது, அத்தி இவைகளின் வேர்.

தன்வந்திரி பகவான்

சேர்த்துமே தூளிடித்துச் சூரணித்து
தெளிவாக யெண்ணெய்தனில் போட்டுக்காய்ச்சி
கார்த்துமே பசும்பாலுங் கூடச் சோர்த்து
கனிவான மெழுகுபதம் தனிலிறக்கி
தூர்த்துமே மாயவனைப் போற்றிசெய்து
துணிவாக வாத்தாட்குப் பூசைசெய்து
ஆர்த்துமே மண்டலந்தான் முழுகிவந்தால்
அப்பனே வியாதியெல்லாந் தீருந்தானே (222)

மேற்படி சரக்குகளை சமனெடை எடுத்து இடித்து சூரணம்செய்து எண்ணெயிலிட்டு காய்ச்சி பசும்பால் கூடச்சேர்த்து மெழுகுபதமாக காய்ச்சி இறக்கு. மாயன், ஆத்தாள் இவர்கட்கு பூசைசெய்து ஒருமண்டலம் முழுகிவர நோய்கள் குணமாகும்.

தீரும் வியாதி

தீருகின்ற வியாதியெல்லாம் செப்பக்கேளும்
திடமான காக்கைவலி குமரகண்டன்
மாறுகின்ற நமரகண்டன் சார்வாங்கநோயும்
வளமான கால்குடைச்சல் கரணைதீரும்
தூறுகின்ற பிறவலியும் பிறவீச்சுக்குதான்
துனை::யான கபாலவலி மண்டைக்குத்து
நாறுகின்ற கண்டமாலை நளினப்புண்கள்
நாடாது யெப்போதும் நாடாதாமே (223)

குணமாகும் நோய்களை கூறுகிறேன், காக்கைவலி, குமரகண்டன் வலி, நமரகண்டன், சர்வாங்க நோய், கால்குடைச்சல், கரணை, பிறவலி, பிறவீச்சு, கபாலவலி, மண்டைக் குத்து, கண்டமாலை, கெட்டநாற்றமுடைய புண்கள், இவைகளும்.

நாடாது பித்தவெட்டை பித்தப்பாண்டு
நவிலுகின்ற அரைகடியன் புரைமேற்புண்கள்
கூடாது மண்டையிடிக் கபாலவாய்வு
பொல்லாத கயரோகம் சயரோகங்கள்
தேடாது யிருமலுடன் பொருமல்தீரும்
தீராத கண்ணெரிச்சல் தீரும்பாரு
ஆடாத கூத்தெல்லாம் ஆடும்பாரு
அப்பனே தன்வந்திரி யுரைத்ததாமே (224)

பித்த வெட்டை, பித்தபாண்டு, அரைகடி, புரைபுண்கள், மண்டையிடி, கபால வாய்வு, கயரோகம், சயரோகங்கள், இருமல், பொருமல், கண்ணெரிச்சல், இவைகளும் குணமாகும் தன்வந்திரியாகிய யானுரைத்த இம்முறை பொய்யாகாது.

பாண்டு காமாலைக் கியாழம்

உரைத்தாரே மானிடற்குப் பாண்டேவந்தால்
உறுதியுடன் நிலப்பீர்க்குக் காட்டுமல்லி
கரைத்தாரே கொடிவேலி கையாந்தானும்
கனமான குருக்கத்தி அழிஞ்சிசேரு
திரைத்தாரே மாவிலங்கு யிலந்தைதானும்
திறமான திட்டமுடன் அயமுஞ்சேரு
வரைத்தாரே மாவிலங்கு அத்திச்சத்திரம்
வாகான கொன்றையுடச் சங்கத்தானே (225)

பாண்டுக்கு மருந்து கூறுகிறேன், நிலப்பீர்க்கு, காட்டுமல்லி, கொடிவேலி, கையான், குருக்கத்தி, அழிஞ்சில், மாவிலிங்கு, இலந்தை, இவைகளுடன் அயம், அத்திவேர். கொன்றை, சங்கம், மற்றும்.

தானானக் குன்றிவேர் அதிமதுரம்
தயவான அதிவிடையம் கருஞ்சீரந்தானும்
கோனான ஆமணக் குக்கிலாதி
குணமான ஆவாரை பொன்னாம்பூவும்
தேனான கரிசலாங் கண்ணிதானும்
திறமான நீர்முள்ளி யானைத்திப்பிலி
வேனான அவுரியா லரசுவித்து
விதமான அரத்தையுடன் கருஞ்சீரமாமே (226)

குன்றிவேர், அதிமதுரம், (முத்தக்காசு) அதிவிடையம், கருஞ்சீரகம், ஆமணக்கு, குக்கிலாதி, பொன்னாவாரைபூ, கரிசலாங்கண்ணி, நீர்முள்ளி, யானைத்திப்பிலி, அவுரி, ஆவின்விதை அரசன்விதை, அரத்தை, கருஞ்சீரகம்.

சீரந்தான் மரமஞ்ச ளாமணக்கு
தினமான நீர்முள்ளி சித்தாமூட்டி
காரமா மிருகொன்றை அக்கிராகாரம்
கருவான சிற்றரத்தை சுரைக்கொடிதானம்
பாரமா மிருவாட்சி மைகாலக்கடி
பரிவான காட்டெருமைப் பாலுங்கூட்டி
வாரமா மிதுகளெல்லா மூறவைத்து
வாகாகப் படியெட்டுச் சலமும்வாரே (227)

மேலும் மர மஞ்சள், புல்லாமணக்கு, நீர்முள்ளி, சித்தாமூட்டி, இருகொன்றை அக்கிராகாரம், சித்தரத்தை, சுரைக்கொடி, இருவாட்சி, மைசாலக்கடி,

தன்வந்திரி பகவான்

காட்டெறுமைப்பாலில் இவைகளை சமனெடை எடுத்து ஊறவைத்திடு, பின் எட்டுப்படி நீர் ஊற்று.

வார்த்துமே யெட்டொன்றாய்க் காய்ச்சியேதான்
    வளமைபெறக் கியாழமதை கொடுப்பீரானால்
கார்த்துவரும் காமாலை பாண்டுரோகம்
    கருவான நீராம்பற் கட்டிபோகும்
துார்த்துகின்ற வயிறுளைவு பொருமல்தானும்
    துலையாத ரத்தக்கட்டி கவுசைபோகும்
சேர்த்துவரும் விஷரோகம் நீரருகல்
    விலகிடுமே தன்வந்தரி யுரைத்தவாறே (228)

ஊற்றியதை அடுப்பேற்றி எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி கியாழமாக செய்து கொடுக்க காமாலை, பாண்டுரோகம், நிராம்பல்கட்டி, வயிறு உளைச்சல், பொருமல், ரத்தக்கட்டி, கவுசை, விஷரோகம், நீர்அருகல், இவைகள் நீங்கி குணமாகும்.

பரிசாத சங்கரத்த உப்புக்கட்டு

கேளடா மணிமணியாய் வுப்பைவாங்கி
    கெடியான குருசெயநீர் விட்டு ஆட்டி
நாளடா காய்ந்து தென்றால் ஓட்டில் வைத்து
    நன்றாகக் குக்குடந்தான் போடுபோடு
தேனடா கொட்டுதல்போல் வுப்புச்சுன்னம்
    செயமாகச் சரக்கெல்லாம் கொல்லும்கொல்லும்
வாளடா செயநீரு வைத்தாயானால்
    மகத்தான கோடிவித்தை ஆடும்பாரே (229)

மணிமணியாக உள்ள கரிஉப்பை வாங்கி குருசெய நீர்விட்டு ஆட்டி காய்ந்தபின் ஓட்டில்வைத்துக் குக்குடபுடமிட உப்பு சுண்ணமாகும், இச்சுண்ணம் சரக்கு வகைகளை கொல்லும், இச்சுண்ணத்தை செயநீர் செய்ய கோடிவித்தை ஆடலாகும்.

பாரப்பா கரியுப்புச் சுன்னம்நாலு
    பரிவான வீரமொன்று லிங்கமொன்று
சேரப்பா கெந்தியொன்று சூதமேழு
    திறமான குருசெயநீர் விட்டு ஆட்டி
வாரப்பா ரவிமுகத்தில் காய்ந்த பின்பு
    வறுத்திடுவாய் மூன்று நாழிகை தான்மட்டும்
கூறப்பா யென்னாலே சொல்லப்போமோ
    கோடிவித்தை நாழிகைக்குள் கூட்டுந்தானே (230)

மேற்படி கரிஉப்புச் சுண்ணம் நான்குபலம், வீரம் ஒருபலம், லிங்கம் ஒருபலம், கெந்தி ஒருபலம், சூதம் ஏழுபலம், இவைகளை குரு செயநீர்விட்டு ஆட்டி வெய்யிலிலிட்டு காய்ந்தபின் மூன்று நாழிகை வறுக்கவும் அதைக் கொண்டு கோடிவித்தை ஆடலாம்.

கெந்தகம்

தானென்ற கெந்தகத்தின் களங்குகேளு
தாய்சொன்னாள் கெந்தகத்தை வாங்கிக்கொண்டு
வானென்ற அயக்கரண்டி தனிலுருக்கி
மைந்தனே மிளகுதக் காளிசாற்றில்
மானென்ற சோடசந்தான் சாய்த்தாயானால்
மகத்தான களங்கமப்பா கோடிவித்தை
கோனென்ற கனங்கமொன்று ரெட்டிசூதம்
கூட்டுவது வீரமொன்று சாரமொன்று (231)

கெந்தக களங்கு கூறுகிறேன், கெந்தகத்தை அயக்கரண்டியிலிட்டு உருக்கி மிளகுதக்காளிச் சாற்றில் சாய்க்க வேண்டும். இவ்வாறு செய்ய கெந்தகம் களங்காகும், இக்களங்கு ஒருபங்கு, சூதம் ரெண்டுபங்கு, வீரம் ஒருபங்கு, சாரம் ஒருபங்கு.

ஒன்றாகக் குருசெயநீர் விட்டு ஆட்டி
வுலர்ந்தபின்பு வறுத்திடுவாய் நாழிகைதானொன்று
நன்றாக கெந்தகந்தா னாலுமாற்று
நாவுண்டோ பாவுண்டோ யென்னாற் கூடா
குன்றான செம்புசுத்தி தன்னைக்கேளும்
கூறறிது அவுரியிலை குட்டித்தக்காளி
நன்றாகப் பொரிந்தாரம் வீரத்தோடு
மடையறும் தான்சேர்த்து அரைத்துப்பூசுபூசே (232)

மேற்படி சரக்குகளை கல்வமிட்டு குருசெயநீர் விட்டு அரைத்து ஒருநாழிகை வறுக்க கெந்தகம் நான்குமாற்று தங்கமாகும். செம்பு சுத்தி கூறுகிறேன். அவுரியிலை, குட்டித்தக்காளி, இவைகளில் தாரம், வீரம், இரண்டையும் அரைத்து செம்பிற்கு பூசுவாயாக.

பூசியே ஓட்டில்வைத்துக் குக்குடந்தான்
பொன்னாகும் செம்பூரலறுந்துப்போச்சு
வாசியே செம்புபத்து வெள்ளியொன்று
வளமாகத் தகடடித்துச் சொல்லக்கேளும்
ஆசியே காரமொடு வீரம்துத்தம்
அழகான நாயுருவி நெரிஞ்சில் கூட்டி

தன்வந்திரி பகவான்

பூசியே குக்குடத்தில் செம்பினூறல்
போச்சுதடா வேதைமுகம் புகன்றதாமே (233)

பூசிய செம்புகவசத்தை ஓட்டிவிட்டு குக்குடபுடமிடு, செம்பு ஊறல் நீங்கும், இச்செம்பு பத்துபங்கு, வெள்ளி ஒருபங்கு சேர்த்து ஊதி தகடடித்து காரம், வீரம், துத்தம், இவைகளை நாயுருவி, நெரிஞ்சில் சாறுகளை விட்டு அரைத்து மேற்படி தகடிற்கு பூசி குக்குடபுடமிட செம்பின் ஊறல் நீங்கும் வேதையாகும்.

ஆமப்பா லிங்கமேதை சொல்லக்கேளும்
ஆச்சரிய மடையனும் காரியஞ்சூதம்
தாமப்பா வெண்காரம் வொன்றாய்க்கூட்டி
சாதகம் போல் குருசெயநீர் விட்டு ஆட்டி
ஓமப்பா கவசித்து மண்ணுஞ் செய்து
உப்பில்வைத்துச் சாமமொன்று யெரித்தாயானால்
வாமப்பா லிங்கமது கட்டிப்போச்சு
வாங்கப்பா நாலுலிங்கம் சூதம்கேளே (234)

லிங்கத்தைக் கூறுகிறேன் ஆச்சரியம் இது, காரீயம், சூதம், வெண்காரம், இவைகளை சமனெடையாக கூட்டி குருசெயநீர் விட்டு அரைத்து கவசம் செய்து சீலைமண் செய்து உப்பில் வைத்து ஒருசாமம் எரித்தால் லிங்கம் கட்டிப் போகும் கட்டிய லிங்கம் நான்குபங்கு.

லிங்க களங்கு

கேளப்பா பாதிரசம் கெந்தியொன்று
கெடியான வீரமொன்று காரமொன்று
வேளப்பா குருசெயநீர் விட்டு ஆட்டி
வெயில் முகத்திற் காயவைத்து லிங்கத்தாட்டு
நாளப்பா சந்த சாகரம்போல் வேதை
நிமைக்கு முன்னே செய்துவிக்கும் வேதைமார்க்கம்
நானப்பா சொல்லாது சற்குருவின் சூட்சம்
நன்றான மருந்தெல்லாம் வாய்க்குந்தானே (235)

மேற்படி லிங்கத்துடன் இரண்டுபங்கு ரசம், ஒருபங்கு கெந்தகம், ஒருபங்கு வீரம், ஒருபங்கு காரம், இவைகளை குருசெயநீர் விட்டு அரைத்து வெய்யிலில் காயவைத்து உருக்கு, சத்த சாகரம் போல் வேதையாகும், சற்குருவின் ரகசியமாகும்.

நாகவித்தை

தானான நாகவித்தை சொல்லக்கேளும்
தனிநாக மொன்றுடனே சூதம்ரெட்டி
மானான அரிதாரம் துரிசுவெள்ளை
மைந்தனே வெண்காரம் வீரங்கூட்டி.

கோனான செயநீர் விட்டு ஆட்டிக்
    கொடியரவிக் காயவைத் துருகும்போது
பானான நாகவித்தை யாடுமாடும்
    பண்பாகத் தன்வந்திரி யுரைக்கண்டே (236)

நாகவித்தையைக் கூறுகிறேன், நாகம் ஒருபங்கு, சூதம் இரண்டுபங்கு, அரிதாரம், துரிசு, வெள்ளை, வெண்காரம், வீரம், இவைகளை குருச்செயநீர் விட்டு அரைத்து சூரியவெப்பத்தில் காயவைத்து உருக்கு நாகம் வித்தையாடும், வேதை உண்டாம்.

கண்டு சொல்ல ஆடலாம் சித்தராலே
    காசினியி லுள்ளவர்கள் காணுவாரோ
விண்டு சொல்லக்காரியம் தகட்டைக்கேளும்
    வெடியுப்பு அரிதாரம் சூதமொன்று
பண்டு சொல்லப் பொரிக்காரம் சேரக்கூடிப்
    பாங்கான குருசெயநீர் விட்டு ஆட்டி
துண்டு சொல்ல ரவிமுகத்தில் வறுத்துப்போடு
    துறைகோடி சூட்சமெல்லாம் வெளிவிட்டேனே (237)

உலகில் உள்ளவர்கள் காணும்வாரு பலவிதம் விளையாடலாம் காரீயத்தகடு ஒருபங்கு, வெடியுப்பு, அரிதாரம், சூதம் ஒருபங்கு, பொரிகாரம் இவைகளை கூட்டி குருசெயநீரை விட்டு அரைத்து வெயிலில் இட்டு வறுத்துப்பார், கோடிமுறைகளின் ரகசியத்தைச் சொல்லிவிட்டேன்.

விட்டகுறை யுண்டானால் நூல்வந்தெய்தும்
    வெளியாகக் கருவெல்லாந் தோன்றும் தோன்றும்
தொட்டகுறை யிதுதானோ மதிவிதியுங் காணும்
    சூஸ்திரம் மாயிரந்தா னிந்தநூலு
மட்ட அஞ்சு காவியந்தா னிதுபோல் சொல்வார்
    வசனித்தார் சித்தர்களு முனிவர்தாமும்
சட்டமா யொளித்துவைத்தார் அனந்தங்கோடி
    சாற்றினே னிந்தநூல் முதல் நூல்தானே (238)

விட்ட குறை உண்டானால் நூல் கிடைக்கும், கருக்கள் வெளிப்படையாக அறியலாகும், தொட்டகுறை என்பது மதி, விதி, காணும், சூஸ்திரமான ஆயிரம்பாடல் கொண்ட இந்நூலும், ஐந்து காவியங்களைப் போலவும் எந்நூலுமில்லை, சித்தர்கள், முனிவர்கள் கோடிநூல்களை ஒளித்து வைத்தனர், இந்நூல் முதல்நூலாகும்.

தானென்ற திருநடனம் போலவே சுவாமி
    தான்சொன்னார் நந்தீசர் எந்தமக்கு
தேனென்ற மொழியுடையா ளப்பாதானை
    தேசத்தோர் தங்களுக்குக் கொடுக்க வேண்டாம்

மானென்ற சிவகாமி என் தாயார் பூசை
வஸ்துவைப்போ லிந்நூலை வணங்கிப்பாரு
கோனென்ற வழியொளியும் ஞானந்தோன்றும்
கும்பிக்கும் மணித்தாயைக் கூறினேனே (239)

திருநடனம்போல சுவாமி நந்தீசர் எனக்குச் சொல்லி விட்டார், நான் உமக்கு சொன்னேன். உலகத்தோரிடம் இதை கொடுக்காதே, சிவகாமி தாயிற்கு பூசை செய்து என்நூலை வணங்கிப் பார்ப்பாயாக விழி ஒளியும், ஞானமும் தோன்றும்.

கூறியதோர் துரிசியிட ஆட்டங்கேளு
குன்றிபோல் துருசியொரு கட்டிவாங்கி
மாறியதோர் புடைக்காளானறைத்துப்பூசி
மைந்தனே சிறுபுடத்தில் தவளநீராம்
ஆரியதோர் வெண்சுடர்க் கொப்பும் உண்டோ
ஆச்சரியங் கோடான கோடிவித்தை
தேறியதோர் வெண்கண்டர்களஞ்சி நாலு
சிறந்திடுவாய் வீரமொன்று சூதம்ரண்டே (240)

துரிசின் முறைகளை கூறுகிறேன். துரிசி ஒரே கட்டியாக வாங்கி புடைக்காளானை அரைத்துப்பூசி சிறுபுடமிட தவளம்போல் நீராகும், துரிசின் பசுமைநீங்கி வெண்மையாகும். இதனால் கோடிவித்தை, ஆடலாம். இந்த வெள்ளைத்துரிசி நான்கு பங்கு, வீரம் ஒருபங்கு, சூதம் இரண்டுபங்கு, மற்றும்.

ஒன்றாகக் கெந்தியுடன் பாதிகாரம்
ஒக்கவே குருசெயநீர் தன்னாலாட்டி
நன்றாகக் காய்ந்தபின்பு வறுத்துப்போடு
நான் சொல்லக்கூடாது வேதைப்போக்கு
பன்றாகும் வெண்கண்ட ரிடைக்குரெட்டிப்
பாய்ச்சுவாய் சூதமொன்று வீரமொன்று
மன்றாகுங்காரீயம் பற்பமொன்று
வார்த்தரைப்பாய் செயநீரால் வறுத்துக்கொள்ளே (241)

கெந்தகம் ஒருபங்கு, காரம் அரைபங்கு, இவைகளை குருசெயநீர் விட்டுஅரைத்து வெய்யிலிலிட்டு, காய்ந்தபின் வறுத்துப்போடு. இதன் வேதையை நீயே அறிந்து கொள்வாயாக. மேற்படி வெள்ளை துரிசிக்கு இரண்டுபங்கு சூதம், வீரம், காரீயபற்பம், இவைகளை குருசெயநீரால் அரைத்து வறுத்துக்கொள்.

இரசபற்பம்

கொள்ளவே ரசம்நீரும் ஆடுமாடும்
கோடான கோடிவித்தை தொந்தங்கோடி

வில்ளொணா மெள்ளவே நாகத்தைக்கட்ட
வெண்கண்டர் மால்தேலி காரம்சாரம்
அள்ளவே குருசெயநீர் விட்டுக்கொண்டு
ஆட்டியே நாகத்தில் பூசிக்கொண்டு
உள்ளவே பத்தெருவில் புடந்தான்போடு
ஓடாமல் புகையடங்கி மாண்டுபோமே (242)

ரசம்நீறி ஆடும், இதனால் கோடி தொந்தம் ஏற்றலாகும். நாகத்தைக் கட்ட கூறுகிறேன், மேற்படி வெண்கண்டர் மால் தேவி, காரம், சாரம், இவைகளை சமனெடை எடுத்து அரைத்து நாகத்திற்கு பூசி பத்தெருவில் புடமிடு, நாகம்புகை அடங்கிக் கட்டுமாகும்.

மாமென்ற அரிதாரம் சிவப்புக்கேளு
மைந்தனே விஷ்ணுவின் மூலிமாட்டி
தாமென்ற மால்தேவிக் கங்கிபூட்டிச்
சார்வாக சிறுகாடை புடந்தான்போடு
ஆமென்ற தாரமது சிவப்புமெத்த
ஆச்சரியம் வேதைமுகங் கோடிகோடி
ஓமென்ற கண்டரின் சிவப்பு சொல்வேன்
உவருப்பு வெண்காரம் கூடக்காட்டை (243)

சிவப்பு அரிதாரம் கூறுகிறேன், விஷ்ணுவின் மூலிகையை அரைத்து மால் தேவிக்கு கவசம்கட்டி சிறுகாடைபுடம் போட தாரம் சிவப்பாகும். இதனால் கோடி வேதை உண்டாகும், சிவப்பு கண்டர் கூறுகிறேன், துரிசு, உவருப்பு, வெண்காரத்தைக்கூட்டு.

கூட்டியல்லோ செயநீராம் நூற்றுக்கொன்று
குணமான கைபாகத் துடன் வறுக்க
மாட்டியே யேடுத்துப்பார் சிவப்புமெத்த
மைந்தனே கோடிவோ விரித்துவாடும்
வேட்டியெல்லாம் குருவண்ட செயநீராலே
பிரபல்லியம் குறுக்கைவழி வித்தைமார்க்கம்
பூடடியெல்லாம் வெளியாகச் சொன்னேன்பாரு
புகழ்பெரிய வெடியுப்புச் சுன்னங்கேளே (244)

கூட்டியதை குருசெயநீரிலரைத்து கைபாகத்துடன் வறுக்க சிகப்பாகும். இதனால் கோடிமுறைகளை ஆடலாகும், குருவண்ட செயநீரால் சுருக்கமான முறையில் வேதை வித்தை காணலாகும், இதை தெளிவுபட கூறிவிட்டேன். வெடியுப்பு சுண்ணத்தைப் கூறுகிறேன்.

தன்வந்திரி பகவான்

பாஷாணக்கட்டு

கேளப்பா வெடியுப்புச் சீனம்நேராய்
　　கெடியான குருசெயநீர் விட்டு ஆட்டி
நாளப்பா காயவிட்டு வறுத்தாயானால்
　　நன்றான வெடியுப்புச் சுன்னமாச்சு
வாளப்பா சாரமிட்டு செயநீர்வைத்தால்
　　மைந்தனே கோடான கோடிவித்தை
தேளப்பா கொட்டுதல்போல் பாஷாணமார்க்கம்
　　திறஞ்சொல்ல வுனக்கரிது நன்றாய்த்தானே (245)

வெடியுப்பு, சீனம், இரண்டையும் சரி எடை எடுத்து குருசெயநீர் விட்டு அரைத்து காயவைத்து வறுக்க வெடியுப்பு சுண்ணமாகும். வெடியுப்பு சுண்ணத்துடன் சாரம் கலந்து பனியில் வைக்க செயநீராகும். இதனால் கோடானு கோடி வித்தையாகும் பாசான மார்க்கத்தை சொல்லுவேன். அது உனக்கு அரிதாகும்.

தானென்ற அப்பிரேகம் வெடியுப்புச்சீனம்
　　சாரமொடு வெண்கார மடையன்காந்தம்
வேனென்ற வுவருப்பு ரோமநீராம்
　　வீரமுடன் நேராக வரைத்துக் கூட்டி
வானென்ற குருசெயநீர் விட்டு ஆட்டி
　　வளமாக கவுசித்துச் சீலைசெய்து
மானென்ற ரவிமுகத்தில் காயவைத்து
　　வரிசையுடன் வுப்பில்வைத்து எரித்துவாங்கே (246)

அப்ரேகம், வெடியுப்பு, சீனம், சாரம். வெண்காரம், காந்தம், துரிசு, உவருப்பு, வீரம், இவைகளை ஒருமித்து கூட்டி ரோமநீர் சேர்த்து குருசெயநீர்விட்டு அரைத்து சீலைகவசம் செய்து வெய்யிலில் காயவைத்து உப்பில்வைத்து எரித்து எடு.

வாங்கியே ஆனதொரு சாமமாட்டி
　　மறுநாள்தான் கமலவன்னி சாமமூட்டு
தேங்கவே ஆறவைத்து எடுத்துப்பாரு
　　தந்தம்போல் முழுக்கட்டு தன்னைச்சொல்வேன்
ஏங்கவே வாதியென்றா லிந்தமுறை செய்வான்
　　செய்தவனே யோகியாவான் ஞானியாவான்
நீங்கியே வறுமையெல்லாம் தவறுண்டேபோம்
　　நெறியான வித்தையிதி லடங்கிப்போச்சே. (247)

எடுத்ததைக் குருசெயநீர்விட்டு ஒருசாமம் அரைத்து மறுநாள் கமலவன்னி அளவு நெருப்பில் சாமநேரம் எரித்து ஆறவிட்டு எடுத்துப்பார், இந்த முழுக்கட்டை

செய்தவனே வாதியாவான். யோகியும், ஞானியுமாவான். இதை முடித்தவர்க்கு வறுமை நீங்கும், வேதை இதில் அடங்கிப்போர்கும்.

போச்சென்று யெண்ணாதே யின்னூல்தான்கி˙ டி
புகழ்ந்தரச வாதியென்றும் ஞானியென்றும்
ஆச்சென்று சொல்வதல்லால் வேறொன்றில்லை
அச்சரிய மெத்தமெத்த அறிவுண்டாகும்
நீச்சென்ற மவுனமுண்டாம் திஷ்டியுண்டாம்
நிலைத்தகுரு செயநீரும் பலபேருக்குண்டாம்
வாச்சென்று மித்தனையு மார்தான்காண்பார்
மகத்தான காவியந்தான் வாய்த்தபேர்க்கே (248)

இந்த நூல் கிடைத்தவர்கள் இதன் முறைப்படி தவறாமல் செய்வதால் ரசவாதி, ஞானி என்றும் பெயர் பெறுவார். நல்ல அறிவு உண்டாகும். மவுனம், திருஷ்டி, இவைகள் உண்டாகும். குருசெயநீர் பலருக்கு அமைந்தாலும் நான்சொன்ன இத்தனைவகை மருந்தையும் யார் செய்வார்.

வாய்த்ததொரு பாஷாணப் போக்குகேளு
மகத்தான வித்தையப்பா சொல்லோண்ணாது
ஏத்ததொரு வுட்சாரச் சுண்ணநீரில்
யெரித்துவிடு துளாந்திரமாய் இசைந்தோர்சாமம்
மேய்த்த தொரு தேன்வளையல் மடையன்சீனம்
மிருதாரு சிங்கியொடு அப்பிரகம் கூட்டி
காய்ந்ததொரு செயநீர் விட்டு ஆட்டிக்
கசடற்றப் பாஷாணம் பூசிப்போடே (249)

பாஷாணப் போக்கும் அதன்வேதையும் சொல்ல முடியாது சாரச் சுண்ண நீரில் பாசாணத்தை துலாந்திரமாய்க்கட்டி, ஒருசாமம் எரித்து எடுத்து, தேன்வளையல், துரிசு, சீனம், மிருதார் சிங்கி, அப்பிரகம், இவைகளைக் கூட்டி செயநீர் விட்டு அரைத்து மேற்படி பாசாணத்திற்கு கவசம் கட்டு வாயாக, (தேன் வளையல் - தேன்வளையல் உப்பு)

போடப்பா சிறுசீலை மண்ணுஞ்செய்து
புகழாக வுப்பில்வைத்து கட்டிக்கொண்டு
சாடப்பா விளிம்புக்குச் சீலை செய்து
தன்னுடனே சாமம்ரண்டு தீபம்போலே
கோடப்பா திறமான பாஷாணங்கட்டும்
கூட்டுகிற குருவேறு வென்றாயானால்
நாடப்பா அத்தியெங்கே தடந்தாயதனால்
நல்லவெள்ளைப் பாஷாண மிதற்கொவ்வாதே (250)

தன்வந்திரி பகவான்

கவசம் கட்டியதை சிறுசீலை மண் செய்து சட்டியில் உப்பிட்டு அதன்மேல் வைத்து மேல்சட்டி மூடி சீலைமண் செய்து இரண்டுசாமம் தீபம் போல் எரித்து எடு. பாஷாணம் கட்டிப் போகும். நல்ல வெள்ளைப்பாஷாணம் இதற்கு ஒப்பு ஆகாது.

ஒவ்வாது யென்றுசொன்ன வகையேதென்றால்
உத்தமனே பாஷாணம் ஒன்றுவாங்கி
கவ்வாது வெள்ளீயம் ரெண்டு சேர்த்துக்
கனமான சூதமது நாலுங்கூட்டி
மவ்வாது வெண்கார மொன்றேயல்லால்
மாறவே எருக்கன்பால் விட்டு ஆட்டி
தவ்வாது வறுத்தெடுத்துப் பின்னுமாட்டி
சாதகமாய் வில்லைதட்டி ரவியில்வையே (251)

பாஷாணம் ஒன்று, வெள்ளீயம் இரண்டு, சூதம் நான்கு, வெண்காரம் ஒன்று, இவைகளை எருக்கம் பால் விட்டு அரைத்து வறுத்து எடுத்து மற்றொருமுறை எருக்கம்பாலால் அரைத்து வில்லைத்தட்டி வெய்யிலில் வைப்பாயாக.

வையப்பா அப்பிரகம் மிருதார்சிங்கி
வகையான சீனமுடன் மூன்றுங்கூட்டி
மெய்யப்பா கவசமதாய் பொதிந்துமூடி
விரைவாக வெயிலுலர்த்திச் சுண்ணமீதில்
கையப்பா சிரங்கையுப் பிட்டுவைத்து
கைமுறையா யுப்பிட்டுச் சுண்ணமிட்டு
தையப்பா னிரதமுடன் வாலைதன்னை
சாமமொன்று தீபவன்னித் தன்னைமூட்டே (252)

அப்ரேகம், மிருதார்சிங்கி, சீனம், இவை மூன்றையுங் கூட்டி அரைத்து மேற்படி காயவைத்த வில்லைக்கு கவசமாக மூடி, வெயிலில் உலர்த்திச் சுண்ணத்தின் மேல் ஒரு படி உப்புப் போட்டு அதன்மேல் இதைவைத்து சட்டிக்குள் உப்பு, சுண்ணம் இவைகளை முறையாக வாலைமேல் வைத்து அடுப்பேற்றி ஒரு சாமநேரம் தீபம் போல் எரித்து வாங்கு.

ஊட்டியிதை மண்திறந்து பார்க்கும்போது
வுனைகூட்டிக் கருகென்ற சருகின்மெத்த
சூட்டியிந்த வேதைதன்னைச் சொல்லப்போமோ
சூட்சமென்ன கோடான கோடிவித்தை
பூட்டியிந்த படியெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
புகழ்ந்து ரச வாதியேன்றா லென்நூல்பாரு
காட்டியிந்தக் காவியத்தைக் கொடுக்கவேண்டாம்
கங்கை தரித்தோராணை கடக்கப்போமோ. (253)

எரித்ததை எடுத்து பார், இதன் வேதைகோடான கோடியாகும் மறைத்த முறை)யெல்லாம் வெளியாக கூறிவிட்டேன், ரசவாதி என்றால் என்நூலை ஆராய்ந்து பார்க்க வேண்டும், இந்த வயித்திய காவியத்தை யாருக்கும் கொடுக்கலாகாது, இது கங்கையைச் சடையில் தறித்த சிவபெருமானின் ஆணையாகும்.

போவென்றே தனித்திருந்து யிந்நூல்தன்னைப்
புகழ்ந்துமெச்சி வாசித்துக் கருக்களாய்ந்து
வாவெனலே யிதைவிட்டு நூலீய்ந்தாயானால்
வாய்புழுத்து நாவிழுந்து மரணமாகி
சாவென்றேன் புத்தியுள்ளோன் விவேகமுள்ளோன்
சாகாம லிருக்கயிந்நூல் கொடுக்கமாட்டான்
கூவென்று யான்சாபம் போட்டதாலே
கொடுமையென்ற சூட்சமதை யொளித்தார்தானே (254)

தனியாக இருந்து இந்நூலின் கருக்களை ஆராய்ந்து பார்ப்பாயானால் தெளிவாகிப் போகும், நூலை மற்றோர்க்கு கொடுக்கலாகாது, நூலைக் கொடுத்தால் வாய்புழுத்து நா உள்ளுக்கு இழுத்து மரணமடைவான், அறிவு கூர்மையுள்ளோன் விவேகமுள்ளொன் நூலை கொடுக்க மாட்டான்.

இரும்பு செம்பு

தானென்ற இரும்பினுட செம்பைக்கேளு
சாற்றுகிறேன் அடவியிலே சொல்லவேண்டாம்
தூமென்ற மடையள் அப்பிரேகம் காந்தம்
தூக்குவா யிடைசமனாய் ரங்குபாதி
வாவென்ற பழச்சாறு விட்டு ஆட்டி
மைந்தனே நெடுஞ்சில்லு கட்டியேதான்
தீனென்ற கெந்திரண்டு காரமொன்று
திறமான துரிசியுட சாரமொன்றே (255)

அயச்செம்பு கூறுகிறேன், துரிசு, அப்ரேகம், காந்தம், இவைகளை சமனெடை எடுத்து ரெங்குபாதி அளவிட்டு பழச்சாறு விட்டு அரைத்து நீளசில்லு கட்டி, கெந்தகம் இரண்டு, காரம் ஒன்று, துரிசு ஒன்று, சாரம் ஒன்று, இவைகளை எடுத்துக்கொள், (ரெங்கு = ஒருவகை வைப்புச் சரக்கு).

ஒன்றாகப் பொடிசெய்து குகையினுள்ளே
உத்தமனே அரப்பொடியும் தூவிக்கொண்டு
நன்றாகச் சில்லிட்டுச் சீலைசெய்து
நாற்ப தெருக்குள் புடந்தான் வலுவாய்மாட்டி
சென்றாக ஆத்தியெடு சுத்தி செம்பாம்
அதினுடைய ஆட்டங்களோ மெத்தமெத்த

தன்வந்திரி பகவான்

பன்றாகக் கோடிவித்தை யென்றாளாத்தாள்
  பதிந்திட்டேன் காவியமாய்ப் பதிந்திட்டேனே (256)

மேற்படி எடுத்ததை பொடிசெய்து குகையினுள் வைத்து அரப்பொடியை தூவி சில்லிட்டு மூடி சீலைசெய்து நாற்பது எருவில் புடமிட்டு ஆறவிட்டு எடுத்துபார். தூய செம்பு இருக்கும், இதனால் கோடி வேதை உண்டாம்.

பதித்தமுறை யின்னமொன்று கூறக்கேளும்
  பறப்பிலே விடவேண்டாம் பாடோமெத்த
விதித்தபடி முன்குகையில் நெரிஞ்சித்தூளு
  விரைந்துள்ளு மிட்டு சிங்கி ரசமுஞ்சேர்த்து
கதித்தவிதம் முன்போலப் புடந்தான்போடு
  கனகமொத்த செம்பாகும் சொல்லப்போமோ
சதித்தவித மேதென்று செம்பைக்கண்டால்
  சதகோடி சங்கவித்தை வேதையாமே (257)

இன்னும் ஒன்று கூறுகிறேன், முன்குகையில் நெரிஞ்சில்தூள் சிங்கி, ரசமும் குகைக்குள்ளிட்டு முன்போல் புடம்போட தங்கம் போல் செம்பாகும், இச்செம்பைக் கண்டால் சதபோடி வேதையாகும்

களங்கம்

ஆமென்ற செம்புக்கு முன்னோர்புடத்தில்
  ஆச்சரியங் களங்கெடுத்து ஆட்டங்கேளு
வேமோடு களங்குரண்டு சூதம்ரண்டு
  வீரமென்று காரமொன்று ஒன்றாய்க்கூட்டி
தாமென்ற குருசெயநீர் விட்டு ஆட்டி
  தான் வறுக்க கோடிவித்தை தாண்டியோடும்
வானென்ற தொழிலெவற்குஞ் சொல்லவேண்டாம்
  வாய்பேசா திருந்துவிடு மவுனங்கானே (258)

இன்னொரு புடம்போட்டு செம்பைக் களங்காக்கி அக்களங்கு இரண்டு, சூதம் இரண்டு வீரம் ஒன்று காரம் ஒன்று, இவைகளை ஒன்றாக கூட்டி குருசெயநீர் விட்டு அரைத்து வறுத்துக்கொள். இதனால் கோடிக்கும் மேல் வேதையாகும், இம்முறையை யாரிடமும் சொல்லல் ஆகாது.

காணவே யிம்முறைகள் செய்யும்போது
  காட்டாதே ஒருத்தருக்குங் கைபாகந்தான்
தோணவே மண்ணால்கை மறப்பு செய்து
  சூஸ்திரந்தா னிருக்குதென்று சொல்லொணாது

பேணவே கண்காணா தடக்கஞ்செய்து
பிரபல்லிய வஸ்துகளும் மகிட்சி கூர்ந்து
பூணவே ஆதாரம் மேல்மூலஞ் சென்று
பூரணியே வாரணியே தாயேயென்னே (259)

இம்முறையைச் செய்து பின் வேறுயாரும் கைபாகம் கேட்டால் சொல்லிவிடாதே. கையால் மறைத்துக் கொள். இதன் ரகசியம் தெரியுமென்று காட்டிக் கொள்ளாதே. தாயை வணங்கி மௌனமாக இரு.

என்னவே சதானிந்திய மனதேயூன்றி
ஏரடா அறிவங்கே பதத்தில் மீளும்
வன்னமே காயசித்தி யாகுஞ் சொன்னேன்
மகத்தான விரதையெல்லாம் வளரும்பாரு
அன்னையே முன்னின்று காட்டிவைப்பாள்
அதுதானே பொருளாகி ஆட்டிவைக்கும்
முன்னமே சொன்னமுறை போக்கெல்லாந்தான்
மூட்டுகின்ற கைபாக முறையைப்பாரே (260)

மனனை ஒருநிலைபடுத்தி தாயை வணங்குவாயாக, ஞானம், காயசித்தி உண்டாகும், விரதைகள் வளரும், அன்னை முன்னின்று கொடுப்பாள். அது பொருளாகி ஆட்டிவைக்கம், சொன்னமுறை பிசகாது கைபாகம் காண்பாயாக.

துருசு

பாருநீ துருசியுட கட்டிவாங்கி
பண்பாகச் சிவந்து நின்ற பாலைமூலி
வேரு நீ அரைத்துருட்டி பொதிந்து கொண்டு
மேலாகச் சீலை செய்து யெருதானொன்றில்
தேருநீ புடம்போட்டு யெடுத்துவாங்கி
சேர்த்திடுவாய் சூதம்ரெட்டி கெந்தியொன்று
வாருநீ பச்சிலைச்சார் விட்டு ஆட்டி
வறுத்துயிடு ஆயிரத்தெண் மாத்துமாமே (261)

துரிசியைக் கட்டியாக வாங்கி, சிவப்பு பாலை வேரை அரைத்து உருட்டி அதற்குள் மேற்படி துரிசியை வைத்து சீலைமண் செய்து புடம் போட்டு எடுத்து துரிசுக்கு இரண்டுபங்கு சூதம், துரிசின் எடை கெந்தகம், இவைகளை பச்சிலைச் சாறு விட்டு அரைத்து வறுத்திடு, இதனால் வேதை உண்டாகும்.

மாத்துமே யிவ்வேதை கோடாகோடி
மகத்தான ஆட்டமெல்லாம் யிதற்குள்ளாகும்

தன்வந்திரி பகவான்

மாத்துமே பரிச்செம்பு அயச்செம்பு தன்னில்
மருகிடவே வேதைமுகம் கோடாகோடி
மாத்துமே யிவ்வித்தை சித்தற்கெய்தும்
மற்றவற்கு மெய்தாது நளினமெத்த
மாத்துமே நந்தி சொல்லத் தன்வந்திரியானும்
வகுத்துரைத்தேன் மானிடற்குத் தொகுத்தசொல்லே. (262)

இதனால் கோடா கோடி வேதை உண்டாகும், தங்கச்செம்பு, அயச்செம்பால் கோடா கோடி வேதை உண்டாகும், இவ்வித்தைகளை சித்தர் செய்து வேதையாடலாம். மற்றவர்கட்கு ஆகாது. நந்தீசர் சொல்ல நான் உமக்கு கூறிவிட்டேன்.

மகா வில்வாதித் தயிலம்

சொல்லுகிறேன் மாந்தருக்கு வில்வாதியொன்று
சூட்டுகிறேன் சூட்சாதி சூட்சமொன்று
வெல்லுகிறேன் வில்வாதி பலந்தானூறு
வியல்பான ஏலரிசி பலந்தான் பத்து
சொல்லுகிறேன் அதிமதுரம் தேவதாரம்
கெடியான சித்தாமுட்டி பேராமுட்டி
தெல்லியதோர் கியாழமாய்ச் செய்துகொண்டு
திறமான யெண்ணெய்சமன் சரியாய்க்கூட்டே (263)

ரகசியமான வில்வாதி தயிலம் கூறுகிறேன், வில்வாதிநூறுபலம், ஏலரிசி பத்துபலம், அதிமதுரம், தேவதாரம், சித்தாமுட்டி பேராமுட்டி, இவைகளை கூட்டி கியாழம் செய்து, கியாழத்திற்கு சமனெடை எண்ணெயைக்கூட்டுவாயாக.

கூட்டவே மெழுகுபதம் தனில்வடித்து
குணமான யெண்ணெய்தனை யிறுத்துக்கொண்டு
நீட்டியே மண்டலந்தான் முழுகினாக்கால்
நிலையாது பித்தம் நாற்பதுவும்போகும்
மீட்டிவரும் கபரோகம் சயரோகங்கள்
மீளாத யிருமல்முதல் கிழேசாடும்
ஓட்டிவிடும் சொரிசிரங்கு யாவும் தீரும்
வித்தமனே மதிமயக்கம் போகுந்தானே (264)

கூட்டியதை அடுப்பேற்றி மெழுகுபதமாக வடித்து ஒருமண்டலம் இத்தைலத்தால் தலைமுழுக நாற்பதுவகை பித்தம், கபரோகம், சயரோகங்கள், தீராத இருமல், சொறி, சிரங்கு, புத்தி மயக்கம், இவைகள் குணமாகும்.

களங்கு மார்க்கம்

மாத்தான குருக்களங்கு யெட்டுக்கொன்று
மடையனொன்று சவ்வீரம் கரியபற்பம்
பாத்தான சாறுவிட்டு அரைத்தக்கூட்டி
பதராதே வறுத்தரைத்து யெரித்துஆற
கூத்தான வேதையப்பா ஆடுஞ் சூட்சம்
கோடான கோடி கவர் ஆடும் பாரு
சித்தான இவ்வேதை அதீதமெத்தச்
சிறப்பான யிவ்வித்தை கூடுங்காணே (265)

முன் சொல்லப்பட்ட குருக்களங்கிற்கு எட்டுக்கு ஒன்று துரிசு, சவ்வீரம், காரீயபற்பம், இவைகளை மூலிச்சாறுவிட்டு அரைத்து எரித்து ஆறவிடு. இதனால் வேதையாகும், கோடான கோடி சூட்சம் காணலாம்.

கூடுமென்ற காரீயஞ் சூதம் நேராய்க்
கூட்டுபொன் அப்பிரேகம் மடையன்வீரம்
பாடுமென்ற கெந்தகமும் வொன்றாய்க்கூட்டி
பதறாதே குருசெயநீர் விட்டு ஆட்டி
ஒருமென்ற ரவியுலர்த்தி வறுத்துப்போடு
ஓகோகோ ஐந்துதரம் செய்தாயானால்
ஆடுமென்ற துராதுரைக்கும் வேதையாகும்
ஆஆஆ போக்கிதுவே கோடிதானே (266)

காரீயம், சூதம் இரண்டும் சமனெடை, பொன் அப்ரேகம், துரிசு, வீரம், கெந்தகம், இவைகளை ஒன்றாக கூட்டி குருசெயநீர்விட்டு அரைத்து வெயிலில் உலர்த்தி வறுத்துப் போடு, இவ்வாறு ஐந்து முறை செய்ய கோடிக்கும் அதிகம் வேதையாகும்.

இரசமெழுகு

கோடியென்ற ரசமெழுகின் வகையேதென்றால்
குருசெயநீர் விட்டுக்கறி யுப்பையாட்டி
நாடியே குக்குடத்தில் சுண்ணமாகும்
நன்றான சுண்ணத்தில் காரசாரம்
வாடியே திரியாதே களஞ்சியொன்று
மைந்தனே சேரவொன்றாய் கிளறிக்கொண்டு
தேடியே பீங்கானில் செயநீர்தாங்கி
திறமான துரிசிநீர் களஞ்சிபோடே (267)

தன்வந்திரி பகவான்

ரசமெழுகு செய்யும் வகையைக் கூறுகிறேன், கறியுப்பைக் குருசெயநீர் விட்டு அரைத்துக் குக்குடபுடமிடு, சுண்ணமாகும், இச்சுண்ணத்தில் காரசாரம் ஒருகளஞ்சி சேர்த்து மத்தித்து பீங்கானில் எடுத்துக் கொண்டு செயநீர்விட்டு களஞ்சி அளவுதுரிசிச் சுண்ணமும் இடவும்.

போட்டுமே பீங்கானில் வைத்துக்கொண்டு
புகழாக வறுத்தெடுத்து செயநீர்விட்டு
ஆட்டியே கெந்தியினை யறைத்துக்காய்ந்து
அப்பனே செயநீரை யிறக்கிக்கொண்டு
மாட்டியே சூதத்தில் விட்டுஆட்டி
மைந்தனே வறுத்தெடுத்துப் பின்னுமாட்டி
கூட்டியே தேவதைகட்கு கோடானுகோடி
குறியான ரசமெழுகின் கூத்தைக்காணே (268)

பிறகு பீங்கானை அடுப்பில்வைத்துச் சரக்குகளை வறுத்து எடுத்துக்கொள்ளவும் மீண்டும் செயநீர்விட்டு அரைக்கவும் கெந்தியை சேர்த்து செயநீராக இறக்கிக் கொள்ளவும். அதை ரசத்தில் விட்டு ஆட்டி வறுத்தெடுக்கவும் மீண்டும் செயநீரால் அரைத்துப்பாா்க்க ரசம்மெழுகாகும். கோடாகோடி வேதையாகும்.

சங்குமகா பாஷாணக்கட்டு

காணவே பாஷாணக் கட்டுகேளு
கைபாகம் சூட்சவழிக் கருவைத்தானம்
பூணவே மணிக்காரம் நிமிளைதானும்
பூநீறு அப்பிரேகம் வங்கம்சிங்கி
தோணவே கற்பூரா லத்திசூடன்
சுளுவான நவாச்சாரம் இணங்கன்சீனம்
பேணவே குருசெயநீர் தன்னாலாட்டிப்
பேசாதே சமபாகம் வெள்ளைதானே (269)

பாஷாணக் கட்டு கூறுகிறேன், மணிக்காரம், நிமிளை பூநீறு, அப்பிரேகம், வங்கம், சிங்கி, கற்பூரம், நவாச்சாரம், வெடியுப்பு, சீனம், இவைகளை சமனெனை எடுத்து குருசெயநீர் தன்னால் அரைத்திடு இதன் எடை வெள்ளையை எடுத்துக்கொள்.

தானேகேள் கவசித்து சீலைசெல்து
சாமந்தான் உப்பில்வைத்து எரித்துப்போடு
ஊனேகேள் மாட்டெலும்பு போலேயாகும்
உத்தமனே இதின் சுறுக்கு வேகமெத்த
நானேகேள் சொன்னபடி யாருஞ்சொல்லாா்
நாட்டிலே யிம்முறையை யறையவேண்டாம்
மானேகேள் இந்தவித்தை சூட்சமப்பா
மகத்தான பாஷாணக் கட்டுத்தானே (270)

மேற்படி வெள்ளைக்கு மேற்படி அரைத்ததை கவசம்செய்து சீலைமண் செய்து உப்பில்வைத்து ஒருசாமம் எரித்து எடு. மாட்டின் எலும்பு போல பாஷாணம் கட்டிப்போகும். இதன் வேகம் அதிகம், நான் சொன்னபடி யாரும் சொல்லவில்லை, இம்முறையை வெளியாரிடம் சொல்லலாகா, இதுபாஷாணம் கட்டுமாகும்.

கட்டான பொரிக்காரம் கெந்தகமுஞ்சாரம்
　கல்லுப்பு வெடியுப்புக் கலந்துகூட்டி
மட்டான கோரக்கர் மூலிச்சாற்றில்
　வடிமெழுகு போலரைத்துக் கவசம்செய்து
திட்டான மண்செய்து காயவைத்துத்
　திறமான தோரெருவில் புடந்தான்போடு
பட்டான துரிசியது நீறும்பாரு
　பாங்கான வீரமுடன் கெந்திகூட்டே (271)

பொரிக்காரம், கெந்தகம், சாரம், கல்லுப்பு, வெடியுப்பு, இவைகளை சமனெடை கூட்டி கஞ்சாச் சாற்றில் மெழுகுபோல அரைத்து துரிசுக்கு கவசமிட்டு மண்சீலை செய்து உலர்த்தி எருவில் புடமிட துரிசி நீறும். நீறின துரிசுடன் வீரம், கெந்தம் கூட்டுவாயாக.

கூட்டியே வெண்காரங் கூடச்சேர்த்து
　குருசெயநீர் விட்டறைத்து வறுத்துப்போடு
ஆட்டியே யிப்படியே குருசெயநீர்விட்டு
　அப்பனே ஐந்து வண்ணம் வறுத்தாயானால்
நாட்டியே வித்தையென்றால் கோடிவித்தை
　நன்றான வேதையுமாம் கோடாகோடி
ஊட்டியே துரிசியிட ஆட்டைக்காண
　ஓகோகோ பராபரத்தி னடிகாணலாமே (272)

கூட்டியதுடன் வெண்காரம் சேர்த்து குருசெயநீர் விட்டு அரைத்து வறுத்தி. இவ்வாறு ஐந்து முறை குருசெயநீர் விட்டு வறுத்திடு. இதனால் வேதை கோடா கோடியாகும், துரிசினுட வேதையை கண்டால் பராசக்தியின் திருவடிகளைக் கண்டது போலாகும்.

காணுவோம் பூமியிலே தோற்றமெல்லாம்
　கருணையென்ற வித்தையெல்லாம் ஆதிமூலம்
பூணலா மனதுக்கு அதுவே மூலம்
　புரியாதார் முன்னெழுத்தை யோகமாக
தோணலாம் ஆகாச வெளிக்குட்சென்று
　சுரூபமென்ற மதிகுருவின் நடனமாக
பேணலாம் குருநிழலைத் தினந்தான்போற்றி
　பீடித்த சித்தனேன்று பெருமைதானே (273)

தன்வந்திரி பகவான்

துரிசியின் மூலம் வேதைகண்டால் பூமியின் தோற்றம் எல்லாம் காணலாகும், வேதைக்கு ஆதி இதுவாம், மனதுக்கு இதுவே மூலம். புரிந்த முன் எழுத்தை யோகமாக கொண்டு ஆகாச வெளிக்குச் சென்று சுரூபம் என்ற மதிகுருவின் நடனமான குருநிழலை தினமும் போற்றி நித்தன் என்று பெருமை கொள்வாயாக.

தாமர பற்பம்

பெருமையென்ற தாம்பரத்தின் பற்பஞ்சொல்வேன்
பேசாதே குருவிடையம் சொல்வேன்மைந்தா
அருமையென்ற தாம்பரந்தான் களஞ்சியாறு
அதிற்பாதி காரீய மிரதங்கூட்டி
வருமையென்ற வெண்காரம் வீரம்கெந்தி
ஒன்றான குருசெயநீர் விட்டரைத்து
கருமையென்ற குக்குடத்தில் தவளம்நேராம்
கனகமடா வெகுகோடி காட்சிபாரே (274)

தாம்பர பற்பம் கூறுகிறேன், தாம்பரம் ஆறு களஞ்சி, காரீயம், இரசம், இவைகள் மூன்று களஞ்சி, வெண்காரம், வீரம், கெந்தகம், இவைகளை கூட்டி குருசெயநீர் விட்டு அரைத்து குக்குடபுடமிடு. நீறும், இதனால் வெகுகோடி காட்சிகள் காணலாகும்.

காட்சியா மின்னமொரு வித்தைகேளு
கைபாகம் செய்பாகம் கருவைச்சொல்வேன்
ஆட்சியாம் பொன்னிமிளை வீரம்காரம்
அந்திடைக்குப் பொன்னென்ற அப்பிரேகங்கூட்டி
வாட்சியாய் குருசெயநீர் விட்டு ஆட்டி
மைந்தனே குக்குடத்தில் மடையன்போலாம்
பூச்சியாம் வெட்டுவைந்தால் புதுவையொக்கும்
புகழான நாகத்தின் போக்குதானே (275)

இன்னும் ஒன்றைக் கூறுகிறேன், பொன்னிமிளை, வீரம், காரம், இவைகளின் எடைக்கு பொன் அப்ரேகம், இவைகள் நான்கும் எடுத்து குருசெயநீர் விட்டு அரைத்து குக்குடபுடமிடு துரிசு போலாகும் இதனால் பலவித்தையாடலாகம்.

போக்கான வசிகரத்தின் மூலங்கேளு
புகழ்பெரிய ஆவின் கோரோசினை கற்பூரம்
வாக்கான கண்ணனிட மூலிதானும்
மகத்தான சந்தணமும் புனுகுங்கூட்டி
தாக்கான மந்திரமும் ராசவசியம்
சர்வமோகினி வாவா வென்றேசொல்லி
தாக்கான நீலகண்டன் மாடும்போலே
கண்டதெல்லாம் தேடிநின்று கதரும்பாரே (276)

வசிகரத்தைக் கூறுகிறேன், ஆவின் கோரோசனை பச்சைக் கற்பூரம், விஷ்ணு கிரந்தி, சந்தணம்,புனுகு, இவைகளை கூட்டி மந்திரம் சர்வமோகினி வா வா என்று செபித்துக்கொள்ள சலகலமும் வசியமாகும்.

வசியம்

பாரப்பா கிராம்பொன்று கூடச்சேரில்
பரைவசியம் செகவசியம் யெட்டுமாடும்
வாரப்பா செங்கழுநீர் படிச்சார்விட்டு
மயனம்போல் அரைத்துருட்டி வைத்துக்கொண்டு
சேரப்பா மத்தியிலே திலர்தம்போடு
திறமான வசிகரத்தின் சித்தியாச்சு
காரப்பா யிதைமறைத்துச் சொன்னார்சித்தர்
கருவையெல்லா மின்னூலில் கண்டிடாயே (277)

செகவசியத்திற்கு கூறுகிறேன், கிராம்பு ஒன்றை செங்கழுநீர் சாறு விட்டு அரைத்து புருவமத்தியில் திலகமிட வசியம் சித்தியாகும். சித்தர் மறைத்துச் சொன்னார், மறைத்த கருவை இன்னூலில் பார்த்துக்கொள்.

கண்டதொரு நூல்போல யிந்நூல்தன்னைக்
காசினியோர்க்கு ஒருநாளும் கொடுக்கவேண்டாம்
அண்டதொரு சிவனாணை குருவினாணை
அப்பனே யிந்நூலைப் பதனம் பண்ணு
அண்டியொரு சீஷன்வந்து அடுத்தாலுந்தான்
அருமையென்ற காவியந்தான் கொடுக்கவேண்டாம்
தொண்டியே ஏவல்செய்து கெஞ்சினாலும்
தெளிவுறவே நூலினிடந் தியங்கிடாதே (278)

மற்ற நூற்களைப்போல இந்த நூலை உலகத்தோரிடம் கொடுக்க வேண்டாம், இது சிவன் ஆணை, குருவின் ஆணை, இந்த நூலை பத்திரப்படுத்து, சீடன் கேட்டாலும் இக்காவியத்தைக் கொடுக்காதே, ஏவல் செய்து கெஞ்சி கேட்டாலும் நூலை கொடுக்கலாகாது.

தியங்கியதோர் கருக்களெல்லாம் சொல்லவேண்டாம்
செய்முறையும் கைமுறையும் பகரவேண்டாம்
மயங்கியதோர் சூதம்ரெண்டு வீரமொன்று
மகத்தான பொன்னப்பிரகம் தானுங்கூட்டி
தயங்கிடவே சூதபற்பம் அரைதான் கூட்டித்
தானான கெந்தகமும் கால்தான் கூட்டி
வயம்பிடவே குருசெயநீர் விட்டு ஆட்டி
வகுப்புறவே பின்னுமப்படியே செய்யே (279)

தன்வந்திரி பகவான்

இந்நூலில் உள்ள கருக்களை சொல்ல வேண்டாம், செய்முறை கைமுறையில் பதற்றம் கூடாது, சூதம் இரண்டு, வீரம் ஒன்று, இவைகளுடன் பொன்னப்பிரேகம், சூதபற்பம் அரைபங்கு, கெந்தகம் கால்பங்கு, இவைகளை குருசெயநீர் விட்டு அரைத்து வறுப்பாயாக, மீண்டும் குருசெயநீர் விட்டு அரைத்து வறுப்பாய்.

செய்யப்பா நாகத்தைப் பற்பமாக்க
    திறமான வீரத்தா லாட்டிப்பாரு
மெய்யப்பா சூட்சமெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
    விள்ளாதே ஒருவருக்கும் விள்ளவேண்டாம்
தையப்பா னிறத்தமிட்ட வாலைதன்னை
    தயவான சிவகாமித் தாயே போற்றி
மெய்யப்பா பிரபல்லிய வித்தைதன்னை
    மெய்யாகக் கண்டு சொன்னார் காட்சியாமே · (280)

இவ்வகையில் நாகத்தைப் பற்பமாக்கு, வீரத்தை அரைத்துப்பார், ரகசியங்களை வெளியாகச் சொல்லிவிட்டேன், ஒருவருக்கும் இதை சொல்லக்கூடாது, வாலையாகிய சிவகாமி தாயைப் போற்றி உண்மையான பிரபல்லிய வித்தையைப் பார்த்து எனக்குச் சொன்னார்.

தீராத வாந்திக்கு

சொன்னாலே மானிடர்க்கு வாந்திகண்டால்
    துடியான சீரகமும் ஏலந்தானும்
பன்னுகின்ற அதிமதுரம் தேவதாரம்
    பாங்கான நெற்பொரியும் நரமாஞ்சுக்கு
துன்னுகின்ற விலாவிலையும் கொத்தமல்லி
    துணையான பச்சையென்ற பயருஞ்சேர்த்து
மின்னுகின்ற முட்டியுடன் கியாழஞ்செய்து
    முனையான பராபரியைப் பூசிப்பாயே (281)

வாந்தி ஏற்பட்டால் மருந்து கூறுகிறேன், சீரகம், ஏலம், அதிமதுரம், தேவதாரம், நெற்பொரி, சுக்கு, விலா இலை, கொத்தமல்லி, பச்சைபயிர், சித்தாமுட்டி, இவைகளை சரி எடை கூட்டி கியாழம் செய்து பராபரியை பூசை செய்திடு.

பூசித்துக் கணேசனைப் போற்றிசெய்து
    புகழாக காலைமாலை கொண்டாயானால்
ஆசித்து மதமூர்ச்சை மயக்கந்தீரும்
    அப்பனே கிறுகிறுப்புச் சுழலைதீரும்
பூசிக்கும் சுவாசமது காந்தல்போகும்
    பொல்லாத வயிறுளைச்சல் அகலும்பாரு

நேசித்துக் கியாழம்செய்து பார்த்தால்
நொருங்கிவிடும் பித்தமெல்லா மிந்தநூலே (282)

கணேசனையும்பூசைசெய்து காலை, மாலை மேற்படி கியாழத்தை உட்கொள்ள மூர்ச்சை, மயக்கம், சிறுகிறுப்பு, அழலை, உஷ்ண சுவாசம், வயிற்றுளைச்சல், பித்தம், இவைகள் நீங்கும்.

இந்தநூல் காவியந்தான் ஆயிரமுந்தப்பா
தியம்பினேன் கருக்குருவும் செளியதான
இந்த நூலாயிரந்தான் சூஸ்திரப்போக்கு
இனிமை பெறக் குருவெல்லாம் பனிபோலாக
இந்தநூல் கைபாகம் செய்பாகம் யாவும்
வெளியாச்சு தென்றுசித்தர் மெச்சிக்கொண்டு
அந்தநூல் போலவென்று அப்பாசித்தர்
அருநூலும் பெருநூலும் ஒளித்தார் காணே (283)

இந்தநூல் ஆயிரம் பாடல் காவியத்தில் கரு குருவை எல்லாம் வெளிப்படையாக சொல்லிவிட்டேன், இது ஆயிரம் சூஸ்திர போக்கு குருவை எல்லாம் கைபாகம் செய்பாகம் வெளியாகச் சொன்னேன், இதை கண்ட சித்தர்மெச்சிக் கொண்டு அருநூலும், பெருநூலும் ஒளித்து வைத்தார்.

காணப்பா கோடிவித்தை செய்யும்நூலை
கருவென்று லோகத்தில் விளங்கச்சொன்னேன்
பூணப்பா தினந்தோறும் பூசைசெய்து
புகழவைத் தெடுத்தடக்கம் செய்துவைத்தால்
தோணப்பா யிந்நூலுக் காவியந்தான்
தொண்டு பண்ணால் யிந்நூல் கொடுக்கமாட்டார்
பேணப்பா நூல்தனையே கொடுத்தாயானால்
பெருநரகில் விழுந்துன்தன் பெருமைசொல்லே (284)

கோடி வித்தைகளை செய்யும் முறைகளை கருவெல்லாம் உலகத்தில் விளக்கமாகச் சொன்னேன். தினமும் பூசைசெய்து நூலை அடக்கம் செய்து தொண்டு செய்தாலும் இந்த நூலைக் கொடுக்க மாட்டார், நூலை கொடுத்தால் பெருநரகில் வீழ்வாய்.

சகல மேகங்களுக்கு பரிசாங்க தத்திரயோதசி

சொல்லுகிறேன் மானிடற்கு மேகம்வந்தால்
சூட்சாதி சூட்சமொன்று செப்பக்கேளும்
வெல்லுகிறேன் கிளிமூக்கின் கிழங்கினோடு
விதமான அசுவகெந்திக் கிழங்கு தானும்

செல்லுகின்ற பரங்கியுடப் பட்டைதானும்
கொடிதான முளகருணைப் பட்டைதானும்
செல்லுகின்ற செணாமரப் பட்டைதானும்
சிறப்பான இலவனுடப் பட்டையாமே (285)

மேகநோய் கண்டால் அதற்கான ரசகிய மருத்துவ முறை கூறுகிறேன் கிளிமூக்கு கிழங்கு, அசுவகெந்தி கிழங்கு, பரங்கிப் பட்டை, மிளகருணைப் பட்டை, செணாமரப் பட்டை, இலவன் பட்டை, மற்றும்.

பட்டையாம் வெள்வேலன் பட்டைதானும்
பாங்கான அத்தியுடப் பட்டைதானும்
பட்டையாம் நுணாமரப் பட்டையாகும்
பதிவான அழிஞ்சிலிட பட்டைதானும்
பட்டையா மாமரப் பட்டைதானும்
பாங்கான கொய்யாவின் பட்டைதானும்
பட்டையாம் இச்சியுடப் பட்டைதானும்
பருவான அரசினுடப் பட்டையாமே (286)

வெள்வேலன்பட்டை, அத்திப்பட்டை, நுணாமரப் பட்டை, அழிஞ்சில்பட்டை, மாமரப்பட்டை, கொய்யாப்பட்டை, இச்சிப்பட்டை, அரசமரப்பட்டை, மற்றும்.

ஆமேதான் கருநொச்சிப் பட்டையாகும்
அப்பனே நாகலின் பட்டைதானும்
வேமேதான் கொழுஞ்சியிடப் பட்டைதானும்
வியப்பான மருதுனிடப் பட்டைதானும்
காமேதான் இச்சியுடப் பட்டைதானும்
கருவான செம்மரப் பட்டைதானும்
போமேதான் கொங்கிலவன் பட்டைதானும்
குணமான கருவேலன் பட்டைகூட்டே (287)

கருநொச்சிப்பட்டை, நாவல்பட்டை, கொழிஞ்சிப்பட்டை, மருதானிப்பட்டை, இச்சிப்பட்டை, செம்மரப்பட்டை, கொங்கு இலவன்பட்டை, கருவேலன்பட்டை, மற்றும்.

கூட்டவே தெங்கினிடப் பட்டைதானும்
குறிப்பான பனையினிட பட்டைதானும்
நீட்டியே பூவரசன் பட்டைதானும்
நிலையான தேக்கினிடப் பட்டைதானும்

கூட்டியே சரக்கொன்றை பட்டைதானும்
குணமான பீலியிடப் பட்டைதானும்
பூட்டியே ஒதியனிடப் பட்டைதானும்
புகழான வாகையுடப் பட்டைசேரே (288)

தென்னைமரபட்டை, பனையின்பட்டை, பூவரசன்பட்டை, தேக்கின்பட்டை, சரக்கொன்றைப் பட்டை, பீலியின் பட்டை, ஒதியன்பட்டை, வாகைமரப்பட்டை.

சேர்த்துமே சூரணித்து வடியே செய்து
திறமாகச் சீனியிலே கலந்துகொண்டு
கோர்த்துமே காலைமாலை யுட்கொண்டானால்
குறிப்பான மேகமென்ற திருபதும்போம்
நீர்த்துமே வாதமென்ற தெண்பதும்போம்
நிலையாது மேகவெள்ளை யாறும்பாரு
ஆர்த்துவரும் தொண்ணூற்றார் சிலேத்துமரோகம்
அகன்றுவிடும் தன்வந்திரி வலுமையாமே (289)

மேற்படி பட்டைகளை சமனெடை எடுத்து சூரணித்து வடிகட்டி சீனியைக் கலந்து காலை, மாலை, உட்கொள்ள இருபது வகை மேகமும், என்பதுவகை வாதமும், ஆறுவகை மேக வெள்ளையும், தொண்ணூற்று ஆறுவகை சிலேத்துமமும் நீங்கி குணமாகும்.

தாமேதான் சாஸ்திரத்தை யார்கேட்டாலும்
தடை சொல்லி யனுப்பிவிடு சதாசிவத்தின்
ஆமேதான் சற்குணற்கு யிந்தநூாலு
அறையவே தன்வந்தரி வகுத்தேன்பாரு
தேமேதான் கருக்குருவு மிதிலேதோன்றும்
தெளியாத வஸ்துவெல்லாம் அறையலாகும்
கோமேதான் சித்தர்கூடி யனந்தங்கோடி
குடிலமாய் மறைத்தாரே கோடிதானே (290)

இந்த நூலை யார் கேட்டாலும் இல்லை என அனுப்பிவிடு, சதாசிவத்தின் சற்குணற்கு இந்தநூலை தன்வந்தரி பகவானாகிய நான் வகுத்தேன். கருக்குரு இதில் தெளிவாகும், வஸ்த்துவைக் கூறலாகும், சித்தர்கள் கூடி கோடி முறைகளை மறைத்தார்கள்.

கபாட மாத்திரை

தானான மானிடற்கு கபாடமாத்திரை
சாற்றுகிறேன் லிங்கமொடு வீரம்பூரம்

தன்வந்திரி பகவான்

கோனான கெந்தியோடு தாளந்தானும்
குணமான காந்தமொடு காரந்தானும்
தேனான சூதமொடு பரங்கிச்சக்கை
தெளிவாகத் தேன்விட்டு அரைத்துமேதான்
பானான குன்றிபோ லுருட்டியேதான்
பதிவாக முலைப்பாலி லுண்டுபாரே (291)

கபாட மாத்திரையைக் கூறுகிறேன், லிங்கம், வீரம், பூரம், கெந்தகம், தாளகம், காந்தம், காரம், சூதம், பரங்கிச்சக்கை, இவைகளை சமனெடை எடுத்து தேன்விட்டு அரைத்து குன்றி அளவு உருட்டி தாய்ப்பாலில் உட்கொள்வாயாக.

பாரப்பா முத்தோஷ சுரமும்போகும்
பாங்கான பித்தத்தா லெடுத்தரோகம்
சீரப்பா வுடலைவிட் டேகும்பாரு
தெளிவாக யிந்தநூல் கவரோகோடி
நேரப்பா யிக்காவிய மாயிரந்தான்
நிறையான கற்பூர தீபமப்பா
தேரப்பா சோகை காமாலைதீரத்
தெளிவான கியாழமொன்று செப்பக்கேளே (292)

மேற்படி வகையில் உட்கொள்ள முத்தோஷமும், சுரமும் தீரும், பித்தத்தால் உண்டான நோய் நீங்கும். இந்நூலில் கோடி முறைகளை காணலாம், இவ்வாயிரம் பாடல்கள் கொண்டகாவியம் கற்பூர தீபமாகும். சோகை, காமாலை, நீங்க கியாழம் ஒன்று கூறுகிறேன்.

சோகை காமாலைக்கு கியாழம்

கேளப்பா நீர்முள்ளி வீழிவேரு
கெடியான பூவரசன் பட்டைதானும்
கேளப்பா கையானும் தொட்டிதானும்
குணமான நெருஞ்சியிட கீரைதானும்
நீளப்பா புண்ணாக்கின் பூண்டுதானும்
நேரான மூக்கிரட்டை மூலிதானும்
வேளப்பா தேட்கொடுக்கின் மூலிதானும்
வியல்பான திராயுட மூலியாமே (293)

நீர்முள்ளி, வீழிவேர், பூவரசன்பட்டை, கரிசாலை, தொட்டிவேர், நெருஞ்சில் இலை, புண்ணாக்குப் பூண்டு, மூக்கிரட்டை மூலி, தேள்கொடுக்கு மூலி, திராய் மூலி, மற்றும்.

மூலியாம் ரோகணியும் கடுக்காய்தானும்
முதிர்வான சீரகமும் திப்பிலிதானும்
காலியாம் சுரைக்கொடியும் வெள்ளரிவித்தும்
கருவான ஆடாதோடை முள்ளங்கிச்சார்
நீலியாம் வெள்ளாட்டு அமுரிதன்னில்
நேராகப் படியெட்டு அளந்துவிட்டு
பாலியாம் பாண்டத்தைச் சுண்டக்காய்ச்சிப்
பதமாகக் கியாழமதை யுண்டிடாயே (294)

கடுகு ரோகணி, கடுக்காய், சீரகம், திப்பிலி, சுரைக்கொடி, வெள்ளரிவிதை, ஆடாதோடை, முள்ளங்கிச்சாறு, நீலி, வெள்ளாட்டு அமுரி எட்டுபடி அளந்து பாண்டத்திலிட்டு மேற்படி சரக்குகள் மூலிகைகளை அதனுள் இட்டு சுண்டக் காய்ச்சி கியாழமதை உட் கொள்வாயாக.

உண்டிடவே காமாலை வீக்கம்போகும்
உத்தமனே நீராம்பல் கட்டிபோகும்
கண்டிடவே கவுசையொடு விம்மல்போகும்
கதிப்பான தொண்டைக்கட்டுச் சீதம்போகும்
அண்டியே மலபந்தம் வாங்கிப்போகும்
அப்பனே வயிறுாதல் அகன்றுபோகும்
தெண்டமுடன் புறண்டுவந்த வீக்கம்போகும்
தெளிவாக தன்வந்திரி யுரைத்தவாறே (295)

மேற்படி கியாழத்தை காலை, மாலை உட்கொள்ள காமாலை, வீக்கம், நீராம்பல் கட்டி, கவுசை, விம்மல் தொண்டைக்கட்டு, சீதம், மலபந்தம், வயிறுஊதல், இவைகள் குணமாகும்.

பித்த வெடிப்புக்கு

வாறான லோகத்து மானிடற்கு
வளம் பெறவே பித்தவெடி வந்துதானால்
கூறான சீரகமும் பலமோ அஞ்சு
குணமான ஏலரிசி பலமோ நாலு
நீரான எலுமிச்சம் பழச்சாற்றாலே
நினைவாக வொருசாமம் எரித்துமேதான்
காரான யிஞ்சியிடச் சாற்றினாலே
கனமான முச்சாமம் எரித்திடாயே (296)

பித்த வெடிக்கு மருந்து கூறுகிறேன், சீரகம் ஐந்துபலம், ஏலரிசி நான்குபலம், இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு சாமம் எரித்தபின் இஞ்சிச்சாற்றில் மூன்று சாமம் எரித்திடுவாயாக.

தன்வந்திரி பகவான்

எரித்துமே வெயில்தனில் காயவைத்து
எழிலாகச் சூரணித்து வடியேசெய்து
கரித்துமே சீனியதில் சமனாய்ச்சேர்த்து
கருவாக அந்திசந்தி கொண்டாயானால்
பொரித்து வரும் பித்தவெட்டை நாற்பதும்போம்
பொல்லாத மதமூர்ச்சை யகலும்பாரு
தெரித்துவிடும் கண்மறைப்பு தெளிந்துபோகும்
தேவியெனக் கிட்டமுறை செய்துபாரே (297)

மேற்படி எரித்த இருசரக்குகளையும் வெய்யிலில் காயவைத்து சூரணம்செய்து வடிகட்டி சீனியை சமன் எடை சேர்த்து காலை, மாலை, உட்கொள்ள நாற்பதுவகை பித்தம், பித்தவெட்டை. மதமூர்ச்சை, நீங்கிவிடும். கண்மறைப்பு நீங்கி தெளிவு உண்டாகும், இது தேவி அருளிச் செய்தது.

மூத்திரப் பிரமியத்திற்கு

பாரேதான் மாந்தர்கட்கு ரத்தங்கண்டால்
பரிவாக மருந்தொன்று செப்பக்கேளும்
கூரேதான்சிங்கியிடப் பற்பந்தானும்
குணமான பவளத்தின் பற்பந்தானும்
சீரேதான் விராலியிடக் கொழுந்துச்சாற்றில்
தெரிவுறவே யரைத்துமே தன்னிற்கொள்ள
சேரேதான் ரத்தமென்ற பிரமியம்போம்
சிறப்பான தன்வந்திரி நூலிதாமே (298)

சிறுநீரில் ரத்தம் காணுதற்கு மருந்து கூறுகிறேன். சிங்கிபற்பம், பவளபற்பம், இவைகளை விராலிக்கொழுந்துச் சாற்றில் அரைத்து உட்கொள்ள மேற்படி ரத்தபிரமியம் நீங்கும்.

நரித்தலை வாதத்திற்கு

நூலான நரித்தலையின் வாதங்கண்டால்
நுணுக்கமாய் செங்கொட்டை யாளிதானும்
சேலான எட்டிவிரை கொள்ளுதானும்
செழிப்பான எள்ளினிட வீழிதானும்
பாலான ஆவாரப் பட்டைதானும்
பதிவான வெள்ளுள்ளி மிளகுதானும்
கோலான பெருங்காயம் சமனாய்க்கூட்டி
கொதித்துமே வேதுமுகங் காட்டிடாயே (299)

நரித்தலை வாதத்திற்கு மருந்து, சேங்கொட்டை, ஆளி, விதை, எட்டிவிதை, கொள்ளு, எள், வீழி, ஆவாரம்பட்டை, வெள்ளுள்ளி, மிளகு, பெருங்காயம், இவைகளை சமமாக கூட்டி நீரிலிட்டு கொதிக்க வைத்து வேது பிடிக்கவும்.

காட்டிடவே முழங்காலின் வாதம்போகும்
கருவான வாதமென்ற தெண்பதும்போம்
தீட்டிடவே வுட்குத்துப் பிரவீச்சம்போம்
திடமான வலுவந்து சேரும்பாரு
கோட்டிடவே யாக்கையதற் கழிவோயில்லை
குணமாகும் வாதத்தோர் பிடிப்புமாறும்
நேட்டிடவே யிம்மருந்து சுறுக்குமெத்த
நெடிதான காவியந்தான் பாருபாரே (300)

மேற்படி வகையில் வேதுகாட்ட முழங்கால்வாதம், மற்றும் எண்பது வகைவாதம், உட்குத்து, பிரவீச்சு, வாதப்பிடிப்பு, இவைகள் நீங்கி உடல் வலுவடையும், உடல் அழியாது, இம்மருந்து சுருக்கமானது இக்காவியத்தில் கூறப்பட்ட முறைகளை பார்ப்பாயாக.

ஆறா ரணப் புகை

பாரப்பா காவியந்தான் பாடுமெத்த
பார்ப்பதற்கு வெகுகாலஞ் செல்லும்பாரு
காரப்பா இரணங்களுக்குப் புகைதான் சொல்வேன்
கருவான லிங்கமொடு புளியம்பரணை
சீரப்பா வுரல்தனிலே கீழ்மேலிட்டுச்
சிறப்பாகப் புகைதனையே பிடித்தாயானால்
வேரப்பா ரணவேறு அற்றுப்போகும்
வெகுகோடி யிந்நூலு சாட்சியாமே (301)

இக்காவிய முறைகளை முடிப்பதற்கு வெகுகாலம் ஆகும், இரணங்கட்கு புகையைக் கூறுகிறேன், லிங்கம் எடுத்து அதன் மேலும் கீழும் புளியம் பரணியை போட்டு புகையை ரணங்களுக்கு காட்ட ரணம் காய்ந்து போகும்.

சகல வாய்வுக் குத்தலுக்குக் கியாழம்

காட்சியாம் மாந்தர்கட்கு வாய்வே வந்தால்
கழறுகிறேன் சுக்குடனே கருவாய்ப்பட்டை
தீட்சியாம் கொடிவேலின் பட்டையோடு
தெளிவான கடுகுடனே கழற்சிக்காயும்
மாட்சியாம் வசம்புடனே வெள்ளைப் பூண்டு
மகத்தான ரோகணியு மொன்றாய்க்கூட்டி
நீட்சியாம் கியாழமது செய்துகொண்டு
நேர்ப்பாக அந்திசந்தி கொண்டிடாயே (302)

தன்வந்திரி பகவான்

வாய்வுக்கு மருந்து கூறுகிறேன் சுக்கு, கருவாய்ப்பட்டை, கொடிவேலி வேர்பட்டை, கடுகு, கழற்சிக்காய், வசம்பு வெள்ளைப்பூண்டு, கடுகரோகணி. இவைகளை சமனெடை எடுத்து நீரிலிட்டு கியாழம்செய்து காலை, மாலை உட்கொள்வாயாக.

கொண்டிடவே வாதமென்ற எண்பபதுவும்போம்
கொடிதான குத்தலென்ற ரோகம் போகம்
அண்டிடவே பத்தியந்தா னுப்பாகாது
அப்பனே மற்றதெல்லா மாகும்பாரு
தெண்டிடவே சீதளப் பண்டமாகா
தெளிவாக ஸ்தானங்க ளாறாநாளாம்
விண்டிடவே வறுத்துப்புத் தானும்கூட்டு
வியப்பாக மற்றதெல்லாஞ் சேருசேரே (303)

மேற்படி வகையில் கொள்ள எண்பதுவகை வாதமும் நீங்கும், குத்தல் நோய் தீரும், மருந்துட்கொள்ளும் வேளையில் உப்பு, சீதளப் பொருட்கள் ஆகாது, மற்றவைகள் ஆகும், ஆறாவது நாள் குளித்த பின் வறுத்த உப்பு கூட்டிக் கொள்ளலாம், மற்ற தெல்லாம் சேர்த்துக் கொள்ளலாம்.

சகல கிரந்திக்கு யெண்ணெய்

சேரப்பா கற்றாழைக் குமிழின்சாறு
திடமான தாழையிட மணத்தக்காளி
காரப்பா நெல்லிக்காய் கையான்சாறு
கனமான வீழியொடு தொண்டைச்சாறும்
நேரப்பா விழுதியிடச் சாறுங்கூட்டி
நெடிதான கொடுப்பையுட சங்கம்பூலா
கோரப்பா தக்காளி யிலையினோடு
கொடிதான வேலியிடப் பருத்திதானே (304)

கற்றாழைக் குமிழின்சாறு, தாழை, மணத்தக்காளி, நெல்லிக்காய், கரிசாலை, இவைகளின் சாறு, வீழி, ஆதொண்டை வழுதி, கொடுப்பை, சங்கம், பூலா, தக்காளி இலை, வேலிப்பருத்தி, மற்றும்.

தானான யிருநெஞ்சி யானைத்திப்பிலி
தயவான சிவகிரந்தி விஷ்ணுகிரந்தி
கோனான தண்ணிமிட்டான் கிழங்குகூட்டி
குணமான பசும்பாலும் காடித்தண்ணீர்
தேனான வாமணக்கி னிளநீரோடு
தெளிவாக மெழுகுபதம் காய்ச்சியேதான்

பானான சுரண்டிவீதங் கொண்டாயானால்
பறக்குமடா கிரந்திமுதல் பறக்கும்பாரே (305)

இருவகை நொச்சி, யானைத்திப்பிலி, சிவகிரந்தை, விஷ்ணுகிரந்தை, தண்ணீர்விட்டான் கிழங்கு, பசும்பால், காடித் தண்ணீர், ஆமணக் கெண்ணெய், இளநீர், இவைகளை கலந்து மெழுகுபதமாக காய்ச்சி கரண்டி அளவு வீதம் உட்கொள்ள கிரந்தி குணமாகும்.

பறக்குமப்பா யின்னமொரு பாகம்சொல்வேன்
பண்பாகக் கேட்டிடுங்கள் மாணாக்காளே
சீறக்குமென்ற சிற்றரத்தை பேரரத்தை
சிறப்பான நிலப்பனையின் அசுவகெந்தி
திறக்குமுள்ள நிலக்குமிழும் தண்ணீர்மிட்டான்
திறமான கற்றாமரைச் சித்திரமூலம்
கறக்குமுள்ள துத்திவேர் நீர்நெருப்பு
கடிதான சாபத்திரி கிராம்புமாமே (306)

இன்னும் ஒன்ற கூறுகிறேன், சித்தரத்தை, பேரரத்தை. நிலப்பனை, அசுவகெந்தி, நிலக்குமிழ், தண்ணீர் மீட்டான், கல்தாமரை, சித்திர மூலம், துத்திவேர், நீர்மேல் நெருப்பு, சாதிபத்திரி, கிராம்பு, மற்றும்.

ஆமேதான் பத்திரியு மதுரமாஞ்சில்
அழகான லவங்கமொடு ஏலந்தானும்
சாமேதான் வால்மிளகு பத்திரிதானும்
சார்வான திரிகடுகு திரிபலாதி
போமேதான் சோம்புடனே சீரந்தானும்
பொதிவான கசகசா நாகப்பூவும்
நாமேதான் கடுக்காயு மல்லிதானும்
நலமான ரேவலிட சின்னிசேரே (307)

லவங்கபத்திரி, அதிமதுரம், சடாமாஞ்சில், லவங்கம், ஏலம், வால்மிளகு, தாளிசபத்திரி, திரிகடுகு, திரிபலாதி, சோம்பு, சீரகம், கசகசா, சிறுநாகப்பூ, கடுக்காய், மல்லி, ரேவல் சின்னி, மற்றும்.

சேர்த்துமே கார்போக அரிசிதானும்
சிறப்பான வகைக்கு சமனிடையதாக
கோர்த்துமே சூரணமாய் செய்துகொண்டு
கொப்பெனவே சீனியது சமனாய்ச்சேர்த்து
தீர்த்துவரும் வெண்ணெய்தனில் கொண்டாயானால்
திருமடா பெருங்கிரந்தி அரிகிரந்தி

பார்த்துமே செங்கிரந்தி கருங்கிரந்தி
பறக்குமடா யிம்மருந்து அதீதங்கேளே (308)

கார்போக அரிசி, இவைகள் வகைக்கு சமன் எடை எடுத்து சூரணித்து சமன்சீனி சேர்த்து வெண்ணெயில் கலந்துட் கொள்ள பெரும்கிரந்தி, அரிகிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, இவைகள் குணமாகும்.

இருபத்தொரு மேகம்தீர சர்வாங்கசுத்தி எண்ணெய்

கேளவே சித்தாமணக் கெண்ணை நாழி
கெடியான கையான் சாற் படிதான்நாழி
நாளவே பசுவின்பால் படிதான்நாழி
நலமான தேங்காய்ப்பால் படிதானாழி
மாளவே மாதுளம் பழச்சாறு படிதானாழி
மெதுவான குமரிச்சாறு படிதானாழி
ஆளவே அறுகன் சார் படிதானாழி
அப்பனே நீர்ப்பூண்டு இளநீராமே (309)

சித்தாமணக்கெண்ணெய் நாழி அளவு, கரிசாலைச் சாறு நாழி, பசும்பால் நாழி, தேங்காய்பால் நாழி, மாதுளம் பழச்சாறு நாழி, குமரிச்சாறு நாழி, அறுகன்சாறு நாழி, நீர்பூண்டுசாறு நாழி, இளநீர் நாழி, மற்றும்.

இளநீராம் கருஞ்சீரம் சிறுநாகப்பூ
யெழிலான சாதிக்காய் கிராம்பு ஏலம்
களம்புடைய கூகைநீர் மதுரம்வேகம்
கனமான சீனமொடு காரந்தானும்
களம்பெறவே கற்பூர சத்துதானும்
கடிதான யெண்ணைதனில் விட்டுக்காய்ச்சி
வளம்பெறவே கரண்டிவிதம் கொண்டாயானால்
வாங்குமடா நோயனைத்தும் வாங்குந்தானே (310)

கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, சாதிக்காய், கிராம்பு, ஏலம், கூகைநீர், அதிமதுரம், சீனம், காரம், கற்பூர சத்து, இவைகளை மேற்படி எண்ணெயுடன் கலந்து காய்ச்சி பதமாக எடுத்துக்கரண்டி அளவு வீதம் உட்கொள்ள நோய்கள் அனைத்தும் குணமாகும்.

எலி விஷத்திற்கு மருந்து

தானான மாந்தருக்கு எலிதீண்டினாலே
தயவாகச் சாற்றுகிறேன் மருந்தோவேகம்

கோனான பூனையிடப் பிச்சிதானும்
குணமான கோஷ்டமுடன் காஷ்டந்தானும்
சேனான யிம்மூன்று மொன்றாய்ச் சேர்த்துத்
திறமாகப் பஸ்மித்துக் கொடுத்தாயானால்
வேனான விஷமதுவுந் தீரும்பாரு
விளம்பினோ மிம்மருந்து வேகங்காணே (311)

எலிகடிக்கு மருந்து கூறுகிறேன், பூனையின் பிச்சியை எடுத்து அத்துடன் கோஷ்டம் காஷ்டம் ஆக மூன்றும் சேர்த்து பஸ்பம்போல் செய்து கொடுக்க விஷம்நீங்கும், இம்மருந்து வேகமானது,

பதினெண் குட்டத்திற்கு மருந்து

காணவே மானிடற்கு குஷ்டம்வந்தால்
கண்காணா தோடுதற்கு மருந்துசொல்வேன்
தோணவே லிங்கமொடு பூரந்தானும்
துடியான வீரமொடு சாரந்தானும்
பூணவே காரமொடு கெந்திதானும்
புகழான துருசுடனே துத்தந்தானும்
ஆணவே பாஷாணந் தன்னில்கூட்டி
அப்பனே மிருதாரு சிங்கிகூட்டே (312)

குஷ்டத்திற்கு மருந்து கூறுகிறேன், லிங்கம், பூரம், வீரம், சாரம், காரம், கெந்தகம், துரிசு, துத்தம், பாஷாணம், மிருதாரு சிங்கி, மற்றும்.

கூட்டவே மடையனிட ரசமுந்தானும்
குணமான அரிதார மூசிக்காந்தம்
நீட்டிடவே கெவுரியிட சூடன்தானும்
நேரான பொரிகாரம் சமனாய்ச்சேர்த்து
தீட்டவே ஆடுதின்னாப் பாளைதன்னில்
திறமாக வறுபது சாமமாட்டு
ஆட்டவே தயிலமது யிறக்குதற்கு
அப்பனே பில்லைதட்டி நிழலில்வையே (313)

துரிசு, ரசம், அரிதாரம், ஊசிக்காந்தம், கெளரி, சூடன், பொரிகாரம், இவைகளை சமனாக சேர்த்து ஆடுதின்னாப்பாளை சாற்றில் அறுபது சாமம் அரைத்து வில்லைதட்டி நிழலில் உலர்த்து.

வைத்துமே மெழுகுபதம் காய்ந்தபின்பு
வாகாகக் குழித்தயிலம் இறக்கிக்கொண்டு
நைந்துமே பனவெல்லத்தில் குன்றியிடைகொள்ள
நாடாது குஷ்டம் பதினேட்டும்போகும்

தன்வந்திரி பகவான்

கைத்துமே புளி புகையும் தவிர்த்துப்போடு
கடிதான வாயுவென்ற பதார்த்தந்தள்ளு
தைத்துமே விஷரோகம் விஷப்பாண்டுபோகும்
தரியாது நோய்களெல்லாம் தவிர்த்துப்போமே (314)

லேசாக உலர்ந்தபின் குழித்தைலம் இறக்கிக்கொண்டு குன்றி எடை தயிலத்தை பனை வெல்லத்தில் வைத்து உட்கொள்ள பதினெட்டு வகை குஷ்டம், குணமாகும். புளி, புகை, வாய்வு பதார்த்தம், இவைகளை நீக்கி உட் கொள்வாயாக. விஷரோகம், விஷப்பாண்டு, இவைகள் குணமாகும்.

பெண்கள் மருந்தீட்டுக்குச் சிட்சை

போமேதான் பெண்கள் மருந் தீட்டுப்போகப்
பூட்டுகிறேன் தேங்காயின் பால் பிழிந்து
ஆமேதான் கடுகுரோகணி மாஞ்சில்தானும்
அடவாக சூரணித்துப் பாலில்தாக்க
போமேதான் மூன்றுநாளாறு வேளை
பொசிப்புடனே தானருந்த தீரும்பாரு
சாமேதான் மருந்தீடு முறியும்பாரு
சார்வாகப் பத்தியந்தா னுப்பாகாதே (315)

பெண்களால் ஏற்படும் மருந்தீடு நீங்கக் கூறுகிறேன் தேங்காய்ப்பால் எடுத்து கடுகரோகணி, சடாமாஞ்சில், இவைகளை சூரணித்து மேற்படி பாலிலிட்டு மூன்றுநாள் ஆறு வேளை உட்கொள்ள மருந்தீடு நீங்கும் உப்பு ஆகாது.

கெற்பத்தை வின்னபப்படுத்தும் மருந்து

ஆகாது மங்கையர்கள் கெற்பமாக
அறையுறேன் மருந்தொன்று செப்பக்கேளும்
போகாது நீலியின் சாற்றினாலே
பொல்லாத வீரத்தை கழஞ்சிபொடியிட்டு
சாகாதே காலைமாலை யிரண்டுவேளை
சருகாமல் தானருந்த கெற்பவின்னம்
நோகாமல் கெற்பமழிந்து போகுமென்று
நோக்கமுடன் தன்வந்தரி புகன்றவாரே (316)

பெண்கள் கர்ப்பத்தை அழிக்கும் மருந்தைக் கூறுகிறேன் நீலியின் சாற்றில் வீரப்பொடி கழஞ்சி அளவு சேர்த்து காலை, மாலை, இரண்டுவேளை குடிக்க கர்ப்பம் அழிந்துபோகும் நான் சொன்ன முறைபிசகாமல் செய்வாயாக.

கெற்ப முண்டாக மருந்து

வாறான மங்கையர்கள் கெற்பமாக
வறையுறேன் பசும்பாலு வசம்புதானும்
நீறான விழுதியிலை மூலிதானும்
நிலையான குப்பமேனி சமனாய்ச்கூட்டி
காறான பால்தனிலே குழப்பியேதான்
கனமாக விருவேளை கொண்டாயானால்
சேறான கிருமியது அற்றுப்போகும்
செனிக்குமே பிள்ளையது செனிக்கும்பாரே (317)

பசும்பால், வசம்பு, விழுதியிலை, குப்பைமேனி இவைகளை சமமாக கூட்டி மேற்படி பாலில்கலந்து இருவேளை உட்கொள்ள கர்ப்ப கிருமிகள் நீங்கி குழந்தை உண்டாகும்.

செனிக்குமது பிள்ளையது பிறக்கும்பாரு
தெளிவாகும் திரேகமது சொலிக்கும்பாரு
கனிக்குமே யிந்தமுறை பொய்யாதையா
காசினியி லாருந்தான் சொல்லமாட்டார்
வனிக்குமே முறையோடே செய்தாயானால்
மகாகோடி புண்ணியங்க ளெய்தும்பாரு
பனிக்குமே யிக்காவிய மதீதவித்தைப்
பாடினோம் தன்வந்திரி பாடினோமே. (318)

மேற்படி மருந்தால் குழந்தை உண்டாகி பிறக்கும், உடல் பொலிவாகும், உலகத்தில் யாரும் சொல்ல மாட்டார்கள், முறையாக செய்தால் கோடி புண்ணியங்கள் உண்டாகும், இந்தக் காவியத்தில் பல வித்தைகளை தன்வந்திரி பகவானாகிய நான் கூறிவிட்டேன்.

சுகபேதி ரத்னாதி சூர்ணம்

பாடினோம் சுகபேதி செப்பக்கேளும்
பாங்கான சூரத்து நிலாவிரையும்
தேடினோம் ரேவலு சின்னிதானும்
சிறப்பான சுக்குடனே கடுக்காய்த்தோலும்
கூடினோம் சீரகமும் வாலுமுவைதானும்
குணமான கருவாய்த்தோல் கற்றாமரைக்கிழங்கும்
நாடியே சூரணித்து வடியேசெய்து
நலமாக அந்திடைக்குச் சீனிசேரே (319)

தன்வந்திரி பகவான்

சுகபேதி முறையைக் கூறுகிறேன், சூரத்து நிலாவிரை, ரேவல் சின்னி, சுக்கு, கடுக்காய்த்தோல், சீரகம், வாலுழுவை, கருவாய்ப்பட்டை, கல்தாமரைக்கிழங்கு இவைகளை சமனெடை எடுத்து சூரணித்து வடிகட்டி சரிக்குச்சரி சீனிசேர்த்திடு.

சேர்த்துமே பாணிதனில் கொண்டாயானால்
சிதராது பலபேதி நீரும்போகும்
கோர்த்து வரு மூன்று வித நீரும் போகும்
கொடிதான மலக்கட்டு மலபந்தங்கள்
தீர்ந்துவிடும் வயிறுளைவு கிருமிப்பூச்சு
சிக்காமல் அகன்றுவிடும் சுகமேசெய்யும்
ஆர்த்துமே யிப்பரகம் சித்தர் சொல்வார்
அப்பனே நந்தியெமக் கருளினாரே (320)

சேர்த்ததை நீரில் உட்கொள்ள வாத, பித்த, கப, நீர்கள் நீங்கும், மலக்கட்டு, மலபந்தங்கள், வயிற்றுளைச்சல், கிருமி, பூச்சு, இவைகள் குணமாகி சுகமளிக்கும், நந்தீசர் இதை எனக்கு அருளினார்.

ஆமதுதானே தெண்ட மென்றாயானால்
அகலயில்லை பதினெண்பேர் சித்தர் களெல்லாம்
வேமதுதான் வழலையென்று சொல்வதெல்லாம்
வெவ்வேறே யிடைபாகம் விளம்புவார்கள்
ஆமதுதான் வழலைக்கி யிடைகளேது
அப்பனே பரிபாஷை மெத்தவுண்டு
கோமதுதான் சித்தர்கள்தான் கூடிக்கொண்டு
குகைதனிலே யிந்நூலை ஒளித்திட்டாரே (321)

பதினெண்பேர்களாகிய சித்தர்கள் எல்லாம் வழலை என்று சொல்வது எல்லாம் வேறு வேறு எடைபாகம் சொல்வார்கள், வழலைக்கு எடைகள் இல்லை இதில் பரிபாசைகள் அதிகம் உண்டு, சித்தர்கள் கூடி இந்தநூலை குகைக்குள் ஒளித்து வைத்தார்.

ஒளித்திட்ட முப்பூவையும் வெளியில்போட்டேன்
உத்தமர்கள் கண்டாக்கால் அடக்கங் கொள்வீர்
பளித்திட்ட மடையர்கள்தான் இந்தநூலே
பாங்காக வுலகத்தில் போடுவார்கள்
நளித்திட்ட யிந்தநூல் மருமம்மருமம்
நவிலவே முடியாது நாவேமெத்த
அனித்திட்ட அவன்தலைதான் வெடித்துப்போகும்
அரகரா யிந்நூல்தான் ஒளித்திட்டாரே (322)

சித்தர்கள் ஒளித்த முப்புவை வெளியாகச் சொல்லிவிட்டேன் இந்நூலை கண்டுவிட்டால் அடக்கம் செய்வாயாக, மடையர்கள் இந்த நூலை உலகிற்கு கொடுப்பார் இந்நூல் மர்மமாகும் இதன் பெருமையை சொல்ல முடியாது ரகசியத்தை வெளியிட்டால் தலை வெடித்துப் போகும், இந்நூலை குகையில் ஒளித்திட்டார்.

ஒளித்திட்ட சித்தர்கள்தான் சொல்லவென்றால்
உத்தமர்க ளிப்படிதான் வழலைசொல்வார்
பளித்திட்டா ரிடையொன்று மார்க்கமென்றும்
பரிகமா யவர்களனே கம் சொன்னார்
நளித்திட்ட முப்பூவும் வெளியிற்போட்டால்
நாசமாய் அவன் குடும்பம் நசிந்துப்போகும்
களித்திட்ட யிந்நூலை காட்டாதே சொன்னேன்
கனமான பிள்ளையென்றால் கையிலீயே (323)

சித்தர்களை சொல்லவென்றால் இவ்வாறு தான் வழலை சொல்வார் எடை ஒன்று மார்க்கம் ஒன்று என்று அனேகம் சொன்னார், தெளிவான முப்பூவை வெளியாரிடம் சொன்னால் அவன் குடும்பம் நசித்துபோகும், இந்த நூலை வெளியில் காட்டல் ஆகாது உண்மையான மாணவன் என்றால் அவனிடம் கொடுப்பாயாக.

ஈயாதே கோடிதனம் கொடுத்தாலுந்தான்
யிளப்பமா யுந்நூலை கொடுக்க வேண்டாம்
தையாதே சொன்னவித்தை பிழைக்கச்சொன்னேன்
தனங்கோடி அவன் கொடுத்தா லென்னவாகும்
வையப்பா கோடிதன மிதிலுண்டாகும்
வாகாக யிந்நூலு சுருக்கமெத்த
கையப்பா பழுத்தால் பழந்தானாகும்
கைகண்ட யிந்நூல் கண்டிலேனே (324)

கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்நூலை கொடுக்கலாகாது, நீ பிழைக்க வேண்டி வித்தைகளைக் கூறிவிட்டேன் கோடி ரூபாய் கொடுத்தால் என்ன வாகும், அந்த கோடி ரூபாய் இந்நூலால் உனக்கு கிடைக்கும், இந்தநூலில் சுருக்கமான துறைகள் ஏராளம்.

கண்டிலேன் சகலதுறை தனக்கெல்லாந்தான்
காரணமாய் வழலை சுண்ண மெடுத்துக்கொண்டு
பண்டிலேன் பண்டிதரே மருந்துக்கெல்லாம்
பாங்காக விச்சுன்னம் பரிவாய்ப்போடு
அண்டிலேன் நோய்ளெல்லாம் நிர்த்தூளாய்போகும்
அஷ்டசித்துக் கெல்லாந்தான் சகலமுறையாடும்
பண்டல்லோ ஆதியண்ட வாமமப்பா
பரிவாக யிந்நூலை யீந்திடாதே (325)

தன்வந்திரி பகவான்

வழலைச் சுண்ணத்தை எடுத்து சகல மருந்துகட்கும் கூடச் சேர்ப்பாயாக சொல்லப்பட்ட நோய்கள் விரைவில் குணமாகும், அஷ்ட சித்து உட்பட சகல முறைகட்கும் வழலைச் சுண்ணத்தை சேர்த்திடு இவ் வழலைதான் ஆதி அண்ட வாமமாகும்.

ஈயாதே யிந்தநூல்தான் யென்னவென்று
  யிதமாக கேட்டாக்கால் சொல்லக்கேளு
தாயான வழலைதனை யிப்படிதான் சொல்வார்
  தயவான சித்தர்கள் வேவ்வேறே சொன்னார்
மாயாதே உலகத்துக் குள்ளே மைந்தா
  மச்செந்திரு உனக்குச்சொன்னேன் பாருபாரு
பாயாதே கூடுவிட்டுக் கூடுசெய்யும்
  பாங்கான வுனதுசிரம் வெடித்துப்போமே. (326)

இந்நூலை சாதுர்யமாக கேட்டாலும் வழலை முறையைக் கேட்டாலும் மறுத்துவிடு, சித்தர்கள் வெவ்வேறு முறைகளில் சொல்லிவிட்டனர், உனக்கு தெளிவாக வழலைச் சுண்ணம் சொல்லி விட்டேன், பலமுறைகளை பார்க்காதே நூலைக் கொடுத்தால் உன் தலை வெடித்துப் போகும்.

வெடித்துப்போ மென்றுசொல்லி சாபம்போட்டால்
  வெளியிலே யிந்தநூல் வந்ததேது
படித்திட்ட சிவயோகி தனக்குமப்பா
  பாங்கான ஞானிக்கு கொடுக்கவேணும்
குடித்திட்ட மடையருக்கு யீந்தாயாகில்
  குரும்பரவ ரேதுசொல்வா ரிந்தநூலை
மடைத்திட்ட வழலைதனை யெடுத்துக்கொண்டு
  வாகான பதங்கண்டு கொடுக்க நன்றே (327)

தலை வெடிக்கும் என்று சொல்லி சாபம் போட்டால் வெளியில் இந்த நூல் வந்தமுறை யேது, சிவயோகி, ஞானி இவர்கட்கு கொடுக்க வேண்டும், மடையர்கட்கு நூலை கொடுக்கல் ஆகாது. வழலைச் சுண்ணத்தை எடுத்து பதம்கண்டு கொடுக்க நன்மையாகும்.

வாடை

நன்றான வாடையென்று சொல்லக்கேளு
  நயமான அப்பிரக மினிவெட்டாம் பூச்சி
கண்டான திகைப்பூண்டு பச்சையோந்திப்
  பாங்கான வழலையொன்று சேர்த்துக்கொண்டு
கண்டாயோ கல்வத்திலிட்டு மைந்தாமைந்தா
  கனமான ஜங்கோலம்விட்டு அரைத்துக்கொண்டு

பண்டான வட்டுபோல் பிடித்துநீயும்
பாங்கான வோட்டிலிட பற்பமாச்சே (328)

வாடை ஒன்ற கூறுகிறேன், அப்பிரேகம், மின்மினிபூச்சி, திகைப் பூண்டு, பச்சோந்தி, வழலை, இவைகளை சேர்த்துக் கல்வத்தில் இட்டு ஐங்கோலத்தைலம் விட்டு அரைத்து வட்டுப்போல் செய்து ஓட்டிலிட்டு பற்பம் செய்திடு.

ஆச்சப்பா இப்படியே யெடுத்துக்கொண்டு
ஆசையுள்ள மனிதர்பேரில் மருந்தைப்போடு
பேச்சப்யா நம்பியுன்பின் துடருவார்க்ள
பேர்பெரியத் தொழிலும் இவ்வண்ணமேயாகும்
மூச்சப்பா தம்பனந்தான் கொண்டோதினால்
மூதண்ட மூச்சடங்கும் சாவுமில்லை
காச்சப்பா சமாதிக்கு ஆதிகற்பம்
கனமான ஞானமெல்லாம் வணங்கும்பாரே (329)

மேற்படி பற்பத்தை ஆசையுள்ள, மனிதர்கள் மீது போடுவாயாக உன்னைப் பின் தொடர்வார்கள், தொழில்கள் இவ்வகையே ஆகும் மூச்சைத் தம்பனம் செய்வதனால் மூச்சு அடங்கும். சாவுயில்லை வாசித் தம்பனம் சமாதிக்கு ஆதிகற்பமாகும் இதனால் ஞானம் உண்டாகும்.

வணங்கியே வழலைகொஞ்ச மெடுத்துக்கொண்டு
வாதபுலி வாய்க்கட்ட அய்யென்போதுஞ்
உணங்கிலிப்பு சவ்வென் றெடுத்துப்பார்
யிதுவிட்ட புளியின்னங் கேளுகேளும்
தடங்கயிலே பிரவென்று சாத்தினாக்கால்
சொல்லவந்த பேய்பிறக்கு அய்யன்றோது
பாங்கான பணங்காசு பொருளொன்றுமில்லை
படையாவின் மருந்துவகை தன்னைக்கேளே. (330)

வகையென்னா அம்மென்றால் வருகும்பாம்பு
வந்தபின்பு போவென்றால் பலவென்றோது
துகையென்னா கற்பம் ஆக் கிருஷ்ணாவென்று
சொல்லுவேன் ஸிறியானங்கை விஷசத்துரு
நகையென்னா நசியென்றால் நல்லபாம்பு
நல்விஷமும் முடனேவிழும் மசியென்றாக்கால்
பகையென்ன வோகண்ட போதே அய்யா
பறக்குமே பாம்பெல்லாம் பணியும்பாரே (331)

தன்வந்திரி பகவான்

பணியடா தயபேணி பறவு ஆவென்றால்
படமெடுக்கும் அணியென்னாசி காகாவெண்ணில்
அணியாக செத்துவிடு மரவமெல்லாம்
பனியென்னும் பராபரத்தில் செகட்டாமகிமை
யினியுண்டோ வயித்தியரே யினியென்னா
கோளருமை உலகத்தோர்க்கு யெவ்விதமும் வோடும்
துணியான மந்திரந்தான் துணிவுமெத்த
துடியான அரவத்தின் மாறாட்டமாமே (332)

மாறாது பொட்டனயெடுத்து வடக்கம்செய்து
வாதாடும் உலகத்தோ ரெதுத்தாறானால்
அறாக்கடி மந்திரிக்கச் சென்று யிதமாக
அவன்மேலே பொடிதன்னைப் போடுபோடு
சுறாமாக அவன்தானு மசந்துபோவான்
சுட்டாலும் போகாது துன்பமெத்த
அருதறவா உன்னை வந்து பணிந்தானானால்
அன்புடனே சீயென்று பொடியைப்போடே (333)

போட்டவுடன் வஞ்சகங்கள் தீர்ந்துபோகும்
புகழான நோய்களெல்லா மாண்டுதீரும்
கேட்டவுடன் சித்தர்வந்து கிருபைசெய்வார்
கெவுனத்தில் பலந்தேற மார்க்கஞ் செய்வார்
வாட்டங்க ளில்லையடா பொடியினாலே
மகவு மவுனத்தையெல்லா மிதுக்குள்ளாகும்
பாட்டுங் கொட்டத்தினா லாகதென்னா
பரைபூசை யரிபூசை பணிந்துபாரே (334)

மாரியந்த மண்டைதனை யிடைத்துமூளை
வணிதாயித்தின் கரண்டியிலே வைத்துக்காய்ந்தால்
மீறியந்த வெடியுப்பு வாங்குமட்டு
மிதுகெடுக்க யதையெடுத்து வெள்ளீயத்தில்
யேறிட்போ மாத்தெட்டு காட்டுமையா
யென்ன சொல்வே னிந்த முறைக்கெல்லாந்தொந்தம்
தேறினதன் முறையமனே செய்வான்
சித்தாந்த மாயோக வானும்தானே (335)

330 முதல் 335 பாடல்கள் பிழையாக இருப்பதால் உரை எழுதப்படவில்லை.

துத்த நாகக் கட்டு

தானென்ற துத்தநாகக் கட்டுகேளு
தனியான அரவத்தோல் பலமிரண்டுவாங்கி
மானென்ற ரோமமது பலம்ரெண்டப்பா
மைந்தனே பொடிபொடியாக் கத்தரித்துக்கொண்டு
ஊனென்ற பொடிகழுவிக் காய்ந்தநேரம்
உத்தமனே பலம்ரெண்டா யிருக்கவேணும்
மானென்ற அண்டத் தோடு ரெண்டு
மாகவே பலம்நாலு பொடித்துக்கொள்ளே (336)

நாகக்கட்டு கூறுகிறேன், பாம்புத்தோல் இரண்டு பலம், ரோமம் இரண்டுபலம், இரண்டையும் பொடியாகத்தரித்து கழுவி காய்ந்தபின்பு இரண்டுபலம் எடுத்து அண்டத்தோலிரண்டு பலம் சேர்த்து நன்றாக பொடித்துக் கொள்.

பொடிக்கேத்த ரணபரணி யடைத்துக்கொண்டு
மைந்தனே குழிதயிலம் வாங்குவாங்கு
வடிக்கேத்த மயில்துத்தம் சுறுக்குதாக்க
மெழுக்காகும் நாலுசெம்பு வெள்ளியாறு
நடிக்கேத்த தங்கமொன்று கூட்டியேதான்
நலமாக குருவொன்று கொடுத்துப்பாரு
படிக்கேத்த துத்தமது எண்ணியப்பா
பழுக்குமடா வயசாறு பயன்சொன்னேனே (337)

மேற்படி பொடியை குழித்தயிலம் இறக்கிக் கொண்டு மயில் துத்தத்திற்கு தயிலத்தால் சுருக்குத் தாக்கிப்பார், மெழுகு ஆகும். செம்பு நான்கு, வெள்ளி ஆறு, தங்கம் ஒன்று, இவைகளை கூட்டி மேற்படி மெழுகை ஒன்று கொடு, ஆறு மாற்று தங்கமாகும்.

மால்தேவி

சொன்னேனே மால்தேவி பலமுமஞ்சு
சுகமான அரன்தேவி பலமோ நாலு
வன்னேனே பொடிபண்ணி மேதிக்கொம்பி
லுள்ளடைத்து மாம் பட்டை சாற்சிரங்கை
பண்ணேனே குமரிச்சா ரோர்சிரங்கை
பருங்கொம்புக் குள்ளடைத்து மரக்குச்சாலே
கன்னேனே கொம்புவா யடைத்துசீலை
சீலைக்குமண் செய்து சாண்புடமே போடே (338)

தன்வந்திரி பகவான்

அரிதாரம் ஐந்துபலம், கௌரி நான்கு பலம் இவைகளைப்பொடி செய்து எருமைக்கொம்பில் போட்டு மாம்பட்டைச்சாறு சிரங்கை அளவு, குமரிச்சாறு ஒரு சிரங்கை அளவு, கொம்பினுள் ஊற்றி மரக்குச்சால் அடைத்து, சீலைமண்செய்து, சாண் (அளவு) புடம் போடு.

புடமாறி யதையெடுத்து நிறுத்துப்பார்த்து
பண்பாலே யந்திடைக்கித் தங்கம்சேர்த்து
திடமாக உருக்கயிலே சரியாநிற்கும்
செப்பினே ரசநீறு செப்பக்கேளு
குடமான ரசங்குழிக்கல் லிட்டுநீதான்
வெட்கரந்தை சார்விட்டு ரெண்டுசாமம்
அடவாக யரைத்துவில்லை காயவைத்து
அதன்பிறகு புடம்போட சுன்னமாமே (339)

புடம் ஆறி எடுத்து உள்ளிருப்பதை எடுத்து அதன் எடைக்குச்சரி எடை தங்கம் கூட்டி உருக்கு. ரசநீறு கூறுகிறேன்.ரசத்தை குழிக்கல்லிலிட்டு வெண்கரந்தைச் சாறுவிட்டு இரண்டுசாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து புடம் போட சுண்ணமாகும்.

ஆச்சுன்ன மறச்சுந்தான் விராகனொன்று
அப்பனே கெந்தியுமவ் விடையேயாகும்
மூச்சென்ற மாம்பட்டை முத்தினதாக
முன்கொண்டு தினமூன்று வறுத்துக்கொண்டு
வரச்சென்ற கலையத்தில் விட்டுமூடி
மண்செய்து குப்பியிலே யன்பத்தோர் நாள்
பேச்சென்ன புதைத்துவிடு பிரிச்செடுத்து
கோழிபுடம் போடச் செந்துரிக்கும்பாரே (340)

மேற்படி சுண்ணம் ஒருவிராகன், கெந்தகம் ஒருவிராகன் இரண்டையும் முற்றிய மாம்பட்டையைக்கொண்டு மூன்றுநாள் வறுத்து குப்பியில் அடைத்துச் சீலைமண் செய்து பூமியில் ஐம்பத்தொருநாள் புதைத்து வைக்கவும். பிறகு எடுத்து கோழிப்புடம் போடச் செந்தூரம் ஆகும்.

பாரப்பா வெள்ளிபத்தில் கொடுத்துப்பாரு
பக்குவமாஞ் செந்தூர மொன்றுந்தானே
நேரப்பா மாத்தஞ்சு யின்னங்கேளு
னிசமான கெந்திபல மஞ்சுங்கூட்டி
காரப்பா சூதமது பலமுமஞ்சு
கலையமதி லிட்டுமேல் சட்டிமூடி
வேரப்பா குழியில்வைத்து மணலையிட்டு
வெள்ளாட்டு புழுக்கையொரு நாழிபோடே (341)

பத்துபங்குவெள்ளியை உருக்கி ஒருபங்க செந்தூரத்தைக் கொடுக்க ஐந்துமாற்று தங்கமாகும், மேற்படி செந்தூரத்துடன் கெந்தகம் ஐந்துபலம், ரசம் ஐந்துபலம், இவைகளைக் கூட்டி கலயத்திலிட்டு மேல்மூடி வைத்து மணலைக்கொட்டி அதன்மேல் வெள்ளாட்டு புழுக்கையை ஒருநாழி அளவு போடு.

நாழிவித மாழிவிட்டு யெருவைப்போடு
நாற்பத்தஞ் சாநாளி லெடுத்துப்பாரு
ஆழிசெந் தூரத்தை வாளியிட்டு
அப்பனே சிமிழிலே பதனம் பண்ணு
தாழிவைத்து செம்பினிலே பத்துக்கொன்று
தனியாக புளியிட்டுக் கொடுத்திடவே மாத்து
பாதியாம் செந்தூரம் பூட்டுதப்பா
பாடினோம் எட்டுமாத்து பூட்டினோமே (342)

மேற்படி எருவைப்போட்டு நாற்பத்து ஐந்து நாள் கழித்து எடுத்துப்பார், செந்தூரமாகி இருக்கும். சிமிளில் பத்திரப்படுத்து. செம்பை உருக்கி பத்துக்கு ஒன்று செந்தூரம்கொடு எட்டுமாற்று தங்கமாகும்.

பூட்டிப்பார் யின்னமொன்று செப்பக்கேளு
பூதலத்தில் ரெண்டுகை பிரமாணத்தில்
ஈட்டிப்பார் பெரிய எரு வாகதட்டி
ரெண்டருவுங் காயவைத்து எடுத்துக்கொண்டு
வீட்டிப்பார் அடியெருமேல் புளியன்பூவை
விக்கணத்தி பரப்பியதில் காரீயம்வைத்து
சூட்டிப்பார் துண்டு துண்டாக வெட்டி
சுகராக புளியம்பூ முன்போல்போடே (343)

இரண்டு அளவில் பெரிய எருக்களாக விராட்டிதட்டி காயவைத்து எடுத்துக்கொண்டு அடியில் உள்ள எருவின்மீது புளியன் பூவை பரப்பி அதன்மீது துண்டு துண்டாக வெட்டிய காரீயத்தை வைத்து அதன் மேலும் புளியம் பூவை பரப்புவாயாக.

முன்பாக பூவிட் டமுக்கிக்கொண்டு
மோகமுடன் துட்டுப்பத் தனியனாகும்
அன்பாக நாலுவிரற் கனமாயிட்டு
அதின்மேலே புதுமேலந்த எருவுமூடி
வன்பாக ரெண்டெருவும் மூடிமூடி
வளமாக ரெண்டருவு மகிழ்ந்துசீலை
ஒன்று செய்து புளியம் பொறுக்கு யெருவுமிட்டு
குளியிலு மரையளவு புடம் போடநீறே. (344)

தன்வந்திரி பகவான்

மேற்படி புளியம்பூவை நான்குவிரல் கனம் பரப்பி அதன்மீது மற்றொரு விரட்டியை வைத்து சீலைமண் செய்து குழிவெட்டி புளியம் பொறுக்கும் எருவும் போட்டுப் புடம்போட காரீயம் நீறும்.

நீறான கெவுரியது விராகள்பத்து
நிறமானகார்த்திகை கிழங்கு வைத்துவேறு
வீறான கிழங்குகொண்டு வாயைமூடி
மிகுசீலை மண்செய்து குகையில்வைத்து
நேராக உருக்கவே கெவுரிசெம்பாம்
தனிவெள்ளி பத்தினிலே ஒன்றுயீய
ஆறாகப் பழுக்குமடா யின்னங்கேளு
அக்கிழங்கை கவசமிட்டு கவசம்கட்டே (345)

கெவுரி பத்து விராகன் கார்த்திகை கிழங்கை துளையிட்டு மேற்படி கெவுரியை வைத்து கிழங்காலே துளையை மூடி சீலைமண் செய்து குகையில்வைத்து உருக்க கெவுரி செம்பாகும். வெள்ளிபத்துக்குச் செம்பு ஒன்று கொடுத்துருக்க பழுத்து தங்கமாகம். மேற்படி செம்புக்கு கார்த்திகைக் கிழங்கை அரைத்து கவசம் செய்திடு.

கட்டியே புடமிட்டு எடுத்து வெள்ளிக்
காசுபணம் பற்றுருக்கி குருவொன்றீய
எட்டரையும் சரியாகு மின்னமொன்று
ஈயச்செந் தூரமுண்டு யியம்பு வேன்கேள்
நிட்டிரண்டு தான் துவைத்து மூன்றுநேர
மணியுறுக்கி யிம்மருந்திற் சாய்த்துப்பின்னை
தட்டியே கம்பியிலே வைத்து பழச்சாத்தால்
தானரைத்து வில்லையதாய் புடத்தைப்போடே (346)

கவசம் செய்ததை புடமிட்டு எடுத்து வெள்ளிபத்திற்கு அக்குரு ஒன்று கொடுக்க வேதையாகும் தங்கமுண்டாகும் ஈயச் செந்தூரத்தைக் கூறுகிறேன், ஈயத்தை உருக்கி கார்த்திகைக் கிழங்குச் சாற்றில் மூன்றுதரம் சாய்த்து பின் பழச்சாற்றால் அரைத்து வில்லைதட்டிப்புடத்தைப் போடு.

புடம்போடு பின்னுமிச் சர்க்கரைத்துயிந்த
பிரையோக மேழாநாள் செய்துபோடு
நடம்போடு செந்தூர மாகும்பாரு
நற்செம்பு நாலுவெள்ளி யாறுஞ்சேர்த்து
இடம்போடே செந்தூர மொன்று தக்க
யிட்டிடவே மாத்தாகு மின்னஞ்சொல்வேன்
அடம்போடு கோழிமுட்டை நாலு வாங்கி
மைந்தனே தயிலமதை யிறக்கிக்கொண்டே (347)

இவ்வாறு ஏழாம்நாளும், புடம்போட செந்தூரமாகும், செம்பு நான்குபங்கு வெள்ளி ஆறுபங்கும் சேர்த்து உருக்கி இச்செந்தூரம் ஒன்று கொடு வேதையாகும், நான்கு கோழி முட்டைகளைக் கொண்டு தயிலம் இறக்கிக்கொள்.

கொண்டபின்பு கெந்திசுத்தி பாலிலஞ்சு
சூராக சுத்திசெய்து பொடித்து
பொட்டணங் கட்டியே யண்டத் தயிலம் விட்டுக்
கனமான சுடர்த்தயிலம் வடிப்பாயப்பா
யண்ட வித்தை யஞ்சு மாத்துந் தான் சொன்னே
னத்தயிலம் விட்டாறு புடமேபோட
தண்டமிட்டுத் தங்கமாமிடை குறையும்சத்தை
சதவித்தை யெளிமையிது பிழைப்புத்தானே (348)

கெந்தகத்தை பாலில் ஐந்து முறை சுத்தித்தபின் பொடித்து மூட்டையாக கட்டி மேற்படி அண்டத் தயிலம் விட்டு சுடர்த்தைலமாக இறக்கிக்கொள், இந்த சுடர்த்தயிலத்தால் (முன்வேதையான தங்கம்) ஐந்து மாற்றுத்தங்கமாகும் தயிலத்தை விட்டு ஆறு புடமிட தங்கத்தின் மாற்று உயரும் எளிமையான இந்த வித்தை பிழைப்புக்கு ஆகும்.

நாகமஞ்சு

பிழைக்கவே நாகமஞ்சு ரசம்பேறாக
பிரளாமல் கழஞ்சிரெண்டு வைத்துக்கொண்டு
வுளக்கவே னாகத்தை கரண்டியிட்டு
அதையுருக்கி ரசம்கொடுத்து அம்மியிலேவைத்து
யிளைக்கவே வெடியுப்பு நாலாங்காச்சல்
யிட்டரைத்து முன்னேகால் களஞ்சியப்பா
விலைகரை ரெண்டுநாழிகையில் கவசந்தான்
வீசும்போது தண்ணீர்விட் டரையக்கேளே (349)

நாகம் ஐந்துபங்கு ரசம் இரண்டு பங்கு, மேற்படி நாகத்தைக் கரண்டியிலிட்டு உருகும் போது ரசத்தைக் கொடுத்து கல்வத்திலிட்டு நாலாங்காய்ச்சல் வெடியுப்பு மூன்றேகால் களஞ்சி சேர்த்து இரண்டு நாழிகை அரைத்துப் பின் தண்ணீர் விட்டு அரைக்கவும்.

அரைக்கயிலே யந்தர மெடுத்துக்கொள்ளு
அதன்பிறகு தண்ணீரை னிரம்பவிட்டு
உரைக்கயிலே யிறுகி மொக்க வளித்துக்கொண்டு
வுடன்மெழுக்கு பதமானால் வில்லைத்தட்டி
நிரைக்கறவி காய்ந்துவிட சுன்னமப்பா
நிசமாக பதனமாய் வைத்துக்கொண்டு

உரைத்தெடுத்து ரசத்தை சிறுபயறுவீத
முத்ததங்கக் கட்டில்ரசம்வர விட்டுத்தேயே (350)

அரைத்துபின் தண்ணீரை கொட்டிவிட்டு அடியிலிருப்பதை மெழுகுபதம் வரும்வரை அரைத்து வில்லைத்தட்டி வெய்யிலில் காயவைக்க சுண்ணமாகும், சுண்ணத்தில் உரைத்து எடுக்க ரசம் உண்டாகும், இந்த ரசம் சிறுபயிறு அளவெடுத்து தங்கத்தில் தேய்ப்பாயாக.

தேய்க்கவே உண்டுகொள்ளும் தங்கம் நாலு
திரும்பிரவி காய்ந்துமே தகட்டில்சேரு
சாய்க்கவே முன்ரசத்தில் பயறுவீதம்
தடவிரவி காயவைக்க தகடுனொறுங்குமப்பா
மாய்க்கவே மஞ்சாடி மூன்றுசெம்பு
மாட்டிடவே யதையெடுத்து வெள்ளியேழு
தேய்க்கவே ரவிப்பிறப்பை யாகும்பாரு
செய்தங்கம் சாதிலிங்கஞ் செம்புமூன்றுயீயே. (351)

தேய்க்க தங்கம் ரசத்தை வாங்கிக் கொள்ளும் இவ்விதம் ரசத்தை கொடுக்கக் கொடுக்கத் தங்கம வாங்கிக் கொண்டு நொருங்கி தூளாகும். செம்பு, மூன்றுபங்கு, வெள்ளி ஏழு பங்கு மேற்படி தூளான தங்கம், சாதிலிங்கம், இவைகள் மூன்று பங்கு கொடுத்து எல்லாம் உருக்கு.

ஈயவே யிடைக்கிடைதான் தங்கமிட்டு
யிதில் தங்க மிட்டுருக்க யேழுமாத்தாம்
ஆயவே யில்லாவிட்டால் புத்தொட்டிலூது
வப்பவல்லோ வேதையது யென்ன சொல்வேன்
சாயவே சாதிலிங்க மெழுக்குகேளு
கறுங்கோழி முட்டையிலே பணம் போற்றுவாரம்
பாயவே பணவிடை ஒண்ணரைதானப்பா
பச்சை கற்பூரம் முட்டைக்குள்ளே தாக்கே (352)

உருக்கியதற்கு ஏடைக்கு எடை தங்கமிட்டு உருக்க ஏழு மாற்று தங்கமாகும், அவ்வாறு ஆகவில்லை என்றால் புத்தோட்டில் இட்டு ஊது வேதை நிச்சயமுண்டாகும், சாதிலிங்க மெழுகு கூறுகிறேன், கோழி முட்டையில் பணம் அளவு துவாரமிட்டு ஒண்ணரைப் பணவெடை பச்சைக்கற்பூரத்தை அதனுள் இடுவாயாக.

தாக்கியே ரவியில் வைப்பாய் மெழுகுமாகும்
தயவாக யம்மெழுகெடுத்து லிங்கத்தில் சுற்றி
மீக்கியே விளக்கினிலே பிடிக்கும்போது
மெழுக்காகும் அதில்தங்கம் கூட்டிக்கொண்டு
ஆக்கியே வெள்ளிசெம்பு பத்துக்கொன்று
அப்பனே அதில்பத்துக் கொன்றுசேரு

பாக்கியமே உண்டாகும் யினிமேலென்ன
பண்பான அரிதாரக் கட்டைக்கேளே. (353)

மேற்படி முட்டையை வெய்யிலில் வைக்க மெழுகாகும், இம்மெழுகை லிங்கத்திற்கு பூசி விளக்கில் பிடிக்க மெழுகாகும். இம் மெழுகில் தங்கத்தைக் கூட்டிக் கொண்டு வெள்ளி, செம்பு இவைகளில் பத்துக்கு ஒருபங்கு மெழுகு கொடுக்க வேதையாகும், அரிதாரக்கட்டு கூறுகிறேன்.

கட்டான அரிதாரம் குளிக்கல்லிவிட்டுக்
கருதியே சாராயம் விட்டரைப்பாய்
மட்டாக சாமம்ரெண் டரைத்தபோது
வழிக்கயிலே வேளைச்சார் மூன்று துளிவிட்டு
திட்டாக மைபோலே ஆட்டுஆட்டு
திடமாக வழித்தெடுத்துப் பில்லைசெய்து
தட்டாக வில்லைரவி காயவைத்து
தனிநாயுருவி சாம்ப லேற்றுயேற்றே (354)

அரிதாரத்தை கல்வத்தில்ட்டு சாராயம் விட்டு இரண்டு சாமம் அரைத்து வேளைச்சாறு மூன்று துளி இட்டு நன்றாக மைபோல அரைத்து வழித்து வில்லை செய்து வெய்யிலில் காயவைத்து சட்டியில் நாயுருவி சாம்பல் போட்டு மேற்படி வில்லையை வைத்து மேலும் மேற்படி சாம்பல் போட்டு மூடி சீலை செய்து அடுப்பேற்று.

ஏற்றி யெரிப்பாய் விறகுகொண்டு
யிருசாம ம்தீயெரிக்க கட்டிப்போச்சு
ஆத்தியே செம்புபத்துக் கிவை ஒன்றிய
வாச்சரிய மவருடனே சொல்லிப்போறாய்
மாற்றியே கூர்வதர்க்கு வகையைக் கேளு
மைந்தனே வெடியுப்பு புளினவச்சாரம்
தோத்தியே சூடனது செயநீர்விட்டுச்
சேர்த்தரைக்க வேயதுவு மெழுக்கதாமே (355)

மேற்படி இரண்டுசாமம் விறகு கொண்டு எரிக்க அரிதாரம் கட்டும். செம்புபத்திற்கு அரிதாரக் கட்டு ஒன்று கொடுத்துருக்கு வேதையாகும். வெடியுப்பு, நவாச்சாரம், சூடன், இவைகளை செயநீர்விட்டு அரைக்க மெழுகாகும்.

மெழுக்கல்லோ சரக்கெதுவுங் கட்டும்கட்டும்
மெழுக்கிடுவாய் மேல்பிரயோ கங்களப்பா
அழுக்கமுள்ள சுண்ணாம்பு முப்புமாகும்
அதுவரைத்து சீலையிலே பூசிக்கொண்டு

வழுவழுப்பு வாறாமல் மெழுகுமே தான்
    வாகாக நாலுமிந்தச் சீலைமண்ணு
தொழுகமுப்பாய்ப் பூசியே காயவைத்து
    துகழ்வாவி புடமிடவே கட்டிப்போமே. (356)

இம்மெழுகால் சரக்குகள் கட்டும். சுண்ணமாகும் மெழுகை அரைத்து சீலையில் பூசி சரக்குக்கு கட்டி மேல் நான்குசீலைமண் செய்து காயவைத்து புடமிட சரக்குகட்டிப்போகும்.

போமேதா னிந்தநூல் சூட்சாசூட்சம்
    பூட்டினார் வெகுகோடி மருந்துதானும்
ஆமேதான் மாறாட்டம் செய்துவைத்தார்
    அப்பனே நானுரைத்தேன் தெளிவதாக
சாமேதான் முக்கருவு மிதற்குள்ளாகும்
    தப்பாது தப்பாது நாவோமெத்த
காமேதான் கைபாகம் செய்பாகந்தான்
    கருவாளி தானறியச் சொன்னார் தாமே (357)

பல ரகசியங்களையும், வெகுகோடி மருந்துகளையும் தங்கள் நூல்களில் மாற்றிச் சொல்லிவிட்டார்கள், நான் உனக்குத் தெளிவுபட கூறிவிட்டேன், முக்கருவும் இதற்கு உள்ளாகும், கைபாகம், செய்பாகம் முறையாக செய்தால் முறைகள் தப்பாது. இதை புத்தி கூர்மை உள்ளோன் அறிய சொல்லிவிட்டேன்.

தீராத வாந்திக்கு

சொன்னாலே மானிடற்கு வாந்திகண்டால்
    துடியான சீரகமும் ஏலந்தானும்
பன்னுகின்ற அதிமதுரம் தேவதாரம்
    பாங்கான நெற்பொரியும் நலமாஞ்சுக்கு
துன்னுகின்ற விளாவிலையும் கொத்தமல்லி
    துணையான பச்சையென்ற பயரும்சேர்த்து
மின்னுகின்ற முட்டியுடன் கியாழஞ்செய்து
    முனையான பராபரியைப் பூசிப்பாயே (358)

வாந்திக்கு மருந்து கூறுகிறேன். சீரகம், ஏலம், அதிமதுரம், தேவதாரம், நெற்பொரி, சுக்கு, விளா இலை, கொத்தமல்லி, பச்சை பயிர், சித்தாமுட்டி. இவைகளை சமனெடை சேர்த்து கியாழம் வைத்து பராபரியை பூசிப்பாயாக.

பூசித்துக் கணேசனைப் போற்றிசெய்து
    புகழாக காலைமாலை கொண்டாயானால்

ஆசித்து மதமூர்ச்சை மயக்கந்தீரும்
அப்பனே கிறுகிறுப்புச் சுழலைதீரும்
பூசிக்கும் சுவாசமது காந்திப்போகும்
பொல்லாத வயிறுளைச்சல் அகலும்பாரு
நேசித்துக் கியாழம் செய்துபார்த்தால்
நெருங்கிவரும் பித்தமெல்லாம் பறக்கும்பாரே (359)

மேலும் கணேசனை பூசித்து காலை, மாலை, கியாழத்தை உட்கொள்ள மூர்ச்சை, மயக்கம், அழலை, கிறுகிறுப்பு, உஷ்ணசுவாசம், வயிற்றுளைச்சல், இவைகள் நீங்கும், பித்தங்கள் நீங்கும்.

பறக்குமென்றே தன்வந்திரி பகர்ந்தார்மெத்த
பாடினார் இந்நூலுக் காவியந்தான்
திறக்கமாய் மானிடற்கு வெளியாத்தோன்றும்
சீரான காவியந்தான் அதீதமெத்த
பறக்கமுள்ள நூற்கோர்வை பகரக்கேளும்
பதிவான கருக்கிடைநூல் ஆய்ந்துசொன்னேன்
சிறக்கமுள்ள தன்வந்திரிக் கியாழமைந்நூற்
திறமான லேகிய மைந்நூறுமாமே. (360)

இந்த நூல் காவியத்தில் வெளிப்படையாக கூறிவிட்டேன், நூல் கோர்வையைக் கூறுகிறேன், கருக்கிடை நூலை ஆராய்ந்து சொன்னேன், கியாழம் ஐநூறு லேகியம் ஐநூறு என்ற நூற்களும் சொன்னேன்.

நூற்றொகுப்பு

நூறான அன்னூறு பற்பஞ்சொன்னேன்
துணுக்கமாங் கிரதத்திலைந் நூறுஞ்சொன்னேன்
வேறான செந்தூர மைந்நூறுஞ்சொன்னேன்
வெளியான தயிலத்தி லந்நூறுஞ்சொன்னேன்
கூறான தொந்தங்கள் கோடாகோடி
கொட்டிலேன் காவியத்தி லனந்தங்கோடி
சேறான எந்நூல்போ லாருஞ்சொல்லார்
திறமான காவியந்தா னிந்த நூல்பாரே. (361)

பற்பம் ஐநூறு, கிருதம் ஐநூறு, செந்தூரம் ஐநூறு, தயிலம் ஐநூறு, என்ற நூற்களும் சொல்லிவிட்டேன். தொந்தங்கள் கோடாகோடி, காவியத்தில் அனந்தம் கோடி சொன்னேன், என் நூலைப்போல யாரும் சொல்ல வில்லை, சிறப்பான காவியமான இந்த நூலை பார்ப்பாயாக.

தங்கபற்பம்

பாரப்பா தங்கபற்பம் சொல்லக்கேளு
பாங்கான தங்கத்தின் காசுவாங்கி
நேரப்பா கருமத்தன் இலையரைத்து
நெகிழவே கவசித்துச் சீலை செய்து
சீரப்பா கசபுடமே யிட்டாயானால்
சிறப்புள்ள பற்பமது யென்னசொல்வேன்
காரப்பா பற்பத்தை லேகியத்திலுண்ணும்
பாங்கான மண்டலந்தான் பத்தியந்தான்காரே. (362)

தங்க பற்பத்தைக் கூறுகிறேன், தங்கக் காசை எடுத்து கருவூமத்தன் இலையை அரைத்து தங்க காசுக்கு கவசம் செய்து சீலைமண் செய்வாயாக. பின் கசபுடமிட பற்பமாகும் இத்தங்க பற்பத்தை லேகியத்துடன் ஒரு மண்டலம் உட்கொண்டு பத்தியம் இருப்பாயாக.

கார்க்கவே திரேகந்தான் சட்டைதள்ளும்
பாங்கான திரேகமது வச்சிரகாயம்
தீர்க்கவே யிறைச்சிவகை யாவுங்கூட்டு
தெளிவாக நண்டுகறி கூட்டு கூட்டு
ஆற்கவே சேத்துமக்கள் தொண்ணூற்றாறும்
அகன்றுபோம் கூடுவிட்டு காசரோகம்
வேர்க்கவே சயமீளை சுவாசகாசம்
மிரண்டோடிப் போகுமெனப் பேசினோமே. (363)

உடல் சட்டை தள்ளும் உடல் வச்சிரம் போலாகும், இறைச்சி வகைகளை கூட்டுவாயாக நண்டுக்கறி சேர்த்துக் கொள்ளலாம். தொண்ணூற்று ஆறுவகை சிலேத்துமம் காச நோய், சயம், ஈளை, சுவாசகாசம், இவைகள் நீங்கும்.

பேசினோம் கடத்திலுள்ள வியாதிதீரும்
பிரலாப சன்னிமுதல் பிறநீர்க்கோவை
காசினியில் யிந்தபற்பம் சுறுக்குமெத்தக்
கண்டவற்கு கண்டபடி சொல்லப்போகா
தேசிவித்தை பரிவித்தை யேமவித்தை
தீட்டினோ மாயிரந்தான் காவியத்தில்
வாசிமுதல் தத்துவ காவியத்திற்சொன்னேன்
வாகாக யிந்தநூல் குருநூலாமே (364)

மேலும் சன்னி, பிறநீர்க்கோவை, இவைகளும் நீங்கும். இப்பற்பம் சுருக்கமானது தேசிவித்தை, பரிவித்தை ஏமவித்தை இவைகளை இந்நூலில் கூறிவிட்டேன், வாசி, தத்துவம், இவைகளை கூறிவிட்டேன், இந்நூல் குரு நூலாகும்.

நெல்லிக்காய் கெந்திபற்பம்

குருநூலாம் கெந்தகத்தின் பற்பஞ்சொன்னேன்
கெடியான கெந்தகத்தின் கட்டி வாங்கி
அருவான ஆத்தலரி மூலிதன்னை
அன்பாகத் தாமறைத்துன் அங்கிபூட்டி
பருவான சீலைமண் ணேழுஞ்செய்துப்
பதிவான குக்குடமே யிட்டாயானால்
தருவான பற்பமது தவளம்போலாம்
சாற்றவொண்ணாக் கெந்தகத்தின் பற்பமாமே (365)

கெந்தகபற்பம் கூறுகிறேன், கெந்தக கட்டி எடுத்து ஆத்தலரியை அரைத்து மேற்படி கெந்தக கட்டிக்கு கலசம்செய்து ஏழுசீலை மண் செய்து குக்குடபுடமிட்டால் தவளம் நிறமான கெந்தக பற்பமாகும்.

பற்பமாம் வெண்ணெய்தனில் கொண்டாயானால்
பறக்குமடா சூலைநோ யெல்லாந்தீரும்
அற்பமென் றேண்ணாதே கெந்திபற்பம்
அரிதான கிரந்திமுதல் யாவுந்தீரும்
கற்பநோய் நீரிழிவு பிரமேகம்போம்
கருவான குட்டமதில் பதினெட்டும்போம்
சொற்பமாம் நெல்லிக்காய் லேகியத்தில்
சுகம்பெறவே வுண்டிட பித்தம்போமே (366)

கெந்தக பற்பத்தை வெண்ணெயில் உட்கொள்ள சூலைநோய்கள், கிரந்திகள், நீரிழிவு, பிரமேகம், பதினெட்டுவகை குஷ்டம், இவைகள் நீங்கி குணமாகும். கெந்தக பற்பத்தை அற்பமாக நினையாதே, நெல்லிக்காய் லேகியத்தில் கெந்தக பற்பத்தை கொள்ள பித்தம் நீங்கும்.

போமேதான் புண்புரைகள் சில்விஷங்கள்
பொல்லாத கடிவிஷங்கள் வாதம்போகும்
தாமேதான் வயிற்றுவலி மகோதரங்கள்
தசையிலுள்ள விஷநீர்கள் தவிர்ந்துபோகும்
நாமேதான் பாண்டு காமாலை தீரும்
நவில வொண்ணா வலிவாதம் அற்றுப்போகும்
காமேதான் யிந்தபற்பம் சுறுக்கு மெத்தக்
காசினியி லாருந்தான் செய்யார்பாரே. (367)

தன்வந்திரி பகவான்

மேலும் புண்புரைகள், சில்விஷங்கள் கடிவிஷங்கள், வாதம், வயிற்றுவலி, மகோதரங்கள், விஷநீர்கள் பாண்டு, காமாலை, வலிவாதம், இவைகள் நீங்கி சுகமாகும். இப்பற்பம் சுருக்கமானது. பலன் அதிகம். உலகத்தில் மற்றோரும் சொல்லவில்லை.

மண்டூரபற்பம்

பாரப்பா மண்டூர பற்பம் சொல்வேன்
பாங்காக ஆயிர மாண்டுசென்ற
தேரப்பா சிட்டத்தைக் கொண்டுவந்து
தெளிவாக கோமியத்தில் மண்டலந்தான்
நேரப்பா ஊறவைத்துச் சென்றபின்பு
நெடிதான பொன்னூமத்தன் சாற்றினாலே
வாரப்பா பன்னிரண்டு சாமந்தானும்
வாகாகத் தானறைத்து பில்லைசெய்யே. (368)

மண்டூர பற்பத்தைக் கூறுகிறேன், ஆயிரம் ஆண்டு ஆன பழைய கிட்டத்தை எடுத்து கோமியத்தில் ஒருமண்டலம் ஊறவைத்து எடுத்து பொன்னூமத்தன் சாற்றில் பனிரெண்டு சாமம் அரைத்து வில்லை செய்திடு.

செய்துமே அம்மூலிக் கவசஞ்செய்து
செழிப்புடனே கெசபுடமே யிட்டாயானால்
நைதுமே பற்பமது தவளம் போலாம்
நாட்டிலே யாருந்தான் செய்யார்பாரீர்
கைதுமே மலைத்தேனில் கொண்டாயானால்
கசடற்றுப் போகமடா பாண்டுசோகை
பெய்துவரும் விஷநீரு ஆம்பல் கட்டி
பிறண்டோடிப் போகுமெனக் கூறினோமே (369)

பொன்னூமத்தையை அரைத்து மேற்படி வில்லைக்கு கவசம் செய்து கெசபுடமிட தவளம்போல் பற்பம் கிடைக்கும் இக்முறையை யாரும் செய்யமாட்டார் மலைத்தேனில் பற்பத்தை உட்கொள்ள பாண்டு, சோகை, விஷநீர், ஆம்பல் கட்டி, இவைகள் நீங்கி குணமாகும்.

நீலாஞ்சனக்கல் பற்பம்

கூறினோம் ஆயுரு வேதந்தானும்
குணமான நீலாஞ்சனக் கல்லுதானும்
தேறினதோர் கட்டியாய் ஒன்றுவாங்கி
தெருளியென்ற மூலிதன்னைக் கவசம்பூட்டி

ஆறினதோர் கெசப்புடத்தில் மேலெருவையிட்டு
அப்பனே காற்றுப்படா விடங்களாக
கூறினதோர் கைபாகம் பிசகிடாமல்
கொப்பெனவே நீற்றியதை யெடுத்திடாயே (370)

ஆயுர் வேதம் கூறுகிறேன், நீலாஞ்சனக் கல்லை ஒரு கட்டியாக வாங்கி, தெருளி மூலிகையை அரைத்து மேற்படி கல்லிற்கு கவசம்கட்டி பதமான இடத்தில் நிலத்தின்மீது கெசப்புடமிட நீறும், அதை கைபாகம்பிசகாது செய்ய வேண்டும்.

எடுத்திடவே யெண்ணெய்தனில் கொண்டாயானால்
என்மக்காள் மதுமேகம் நீரருகல்
கொடுத்திடவே குடிவிட்டுப் போகுங்கண்டர்
குடிலமா மிட்டபற்பங் கூறார்கூறார்
அடுத்திடவே பத்தியமோ யிச்சாபத்தியம்
அறைகிறேன் சீதளப் பண்டமாகா
கொடுத்திடவே சையோக மாகாதப்பா
துரைமக்கள் யிப்பற்பம் சுறுக்குகாணே (371)

மேற்படி நீலாஞ்சனக்கல்பற்பத்தை வெண்ணெயில் கொள்ள மதுமேகம், நீர் அருகல், இவைகள் நீங்கி குணமாகும். இப்பற்பத்தை யாரும் கூறவில்லை இச்சா பத்தியமிருந்து சீதனப் பண்டம், போக உறவு இவைகளை நீக்க வேண்டும்.

அரிதாரபற்பம்

காணவே தாளகத்தின் பற்பஞ்சொல்வேன்
பாங்காக மானிடர்கள் பிழைக்கவென்று;
தோணவே தாளகக் கட்டிவாங்கி
துடியான சுண்ணாம்பைத் தண்ணீர்விட்டு
ஆனவே குகைபோலவே செய்துமைந்தா
அப்பனே அதற்குள்ளே கட்டிவைத்து
ஈணவே அண்டோடு சுண்ணமிட்டு
யெழிலாக குக்குடமே போட்டிடாயே (372)

தாளகபற்பம் கூறுகிறேன், தாளகத்தைக் கட்டியாக வாங்கிக்கொள் சுண்ணாம்பைத் தண்ணீர்விட்டு அரைத்துக் குகைபோல் செய்து மேற்படி தாளகக் கட்டியை வைத்து அண்டவோட்டுச் சுண்ணமும் போட்டுக் குக்குடபுடமிடு.

போட்டிடவே பற்பமது யென்னசொல்வேன்
புகழான பற்பமது; தவளம்போலாம்
மாட்டிட வெள்ளிசெம்பில் பத்துக்கென்று
வாகாக கொடுத்திடவே மாத்தஞ்சாகும்

தன்வந்திரி பகவான்

காட்டிடவே சயரோக மீளைபோகும்
    கணப்புடனே யிருமலது காசம் போகும்
தீட்டிடவே யெலிவிஷங்கள் சிலவிஷங்கள்
    துலையாத குஷ்டமொடு குறைநோய்போமே (373)

மேற்படி புடமிட தவளம் போல் பற்பமாகும், வெள்ளிச், செம்பில் பத்துக்கு ஒன்றை இப்பற்பம் கொடுக்க ஐந்து மாற்று தங்கமாகும் பற்பத்தை உட்கொள்ள சயநோய் ஈளை, இருமல், காசம், எலிவிஷங்கள், குஷ்டம், குறைநோய்கள் நீங்கி குணமாகும்.

போமேதான் வண்டுகடி சில்விஷமும்போகும்
    பொல்லாத மந்தார காசம்போகும்
ஆமேதான் கிரந்திபதி னெட்டும்போகும்
    அப்பனே வாதமென்ற தெண்பதுவும்போகும்
சாமேதான் சேத்துமங்கள் தொண்ணூற்றாறும்
    தவறுண்டோ போகுமடா சாற்றக்கேளு
நாமேதா னிந்தநூல் முறைபாகக்தோடு
    நாட்டினோ மானிடற்கு நாட்டினோமே (374)

மேலும் வண்டுக்கடி, சில்விஷம், மந்தாரகாசம், பதினெட்டுவகை கிரந்திகள் எண்பதுவகை வாதம், தொண்ணூற்று ஆறுவகை சிலேத்துமம், இவைகளும் குணமாகும். இந்தநூலில் முறைபாகத்தோடு இவ்வுல கோருக்கு கூறிவிட்டேன்.

மகாசாதிலிங்க பற்பக்கோடளி

நாட்டினோ மானிடர்கள் பிழைப்பதற்கு
    நவில வொண்ணா சாதிலிங்கக் கட்டிவாங்கி
மூட்டினோ முலைப்பாலி லூறவைத்து
    முத்தமனே சுருக்குமுதல் நாலுசாமம்
தீட்டினோம் வெண்கருவு வெடியுப்புச்சீனம்
    திறமான வீரமொடு பூரம்சேர்த்து
வாட்டமுடனக் கருவால் நாலுசாமம்
    வாகாக அரைத்துமே கவசம் செய்யே (375)

சாதிலிங்கத்தைக் கட்டியாக எடுத்து தாய்ப்பாலில் ஊறவைத்து பின் தாய்ப்பாலால் நான்கு சாமம் சுருக்கிடு வெடியுப்பு, சீனம், வீரம், பூரம், இவைகளை சேர்த்து வெண்கருவால் நான்குசாமம் அரைத்து மேற்படி சுருக்கிட்ட லிங்கத்திற்கு கவசம்கட்டு,

செய்துமே குக்குடமாம் லகுவிற்போடு
    செழிப்பான பற்பமது நீறும்பாரு
கொய்துமே பற்பத்தை தேனிற்கொள்ள
    கொப்பெனவே பாண்டு கா மாலைதீரும்
நைதுமே பாரிச வாய்வு போகும்
    நலமான சூலைமுதல் நாடாதோடும்
பெய்துமே சுரங்களறு பத்துநாலும்
    புறண்டோடிப் போகுமெனப் பேசுவோமே (376)

மேற்படி கவசத்தை குக்குடபுடமிட பற்பமாகும், இப்பற்பத்தை தேனில் உட்கொள்ள பாண்டு, காமாலை, பாரிச வாய்வு சூலை, இவைகள் நீங்கும், பத்துநாளுட்கொள்ள சுரங்கள் தீரும்.

கொச்சி வீரப்பற்பம்

போகுமே கொச்சியென்ற வீரந்தன்னைக்
    குவலயத்தில் நல்லதாய் வாங்கிக்கொண்டு
ஆகுமே நாய்க்கோட்டான் கிழங்குதன்னை
    அன்பாகத் தானரைத்துக் குகைபோற்பண்ணி
ஏகுமே வீரத்தை அதற்குள் வைத்து
    யெழிலாக முப்பூவும் களஞ்சியிட்டு
பாகுமே குக்குடமே போட்டாயானால்
    பளிங்கற்ற பற்பமது ஆச்சுபாரே. (377)

நல்ல கொச்சி வீரத்தை எடுத்துக்கொள், நாய்க் கோட்டான் கிழங்கை அரைத்து குகைபோல்செய்து மேற்படி வீரத்தை அக்குகைக்குள் வைத்து முப்பூ களஞ்சி அளவு இட்டு குக்குடபுடமிட பளிங்குபோல் பற்பமாகும்.

பாரப்பா சன்னிபதி மூன்றும் போகும்
    பாங்கான சிலேத்துமமது தொண்ணூற்றாறும்
நீரப்பா பித்தநோய் நாற்பத்துநாலும்
    நேரான வாதமது யெண்பதும்போம்
காரப்பா யிப்பற்பம் கடினமெத்தப்
    பாரினிலே யாருந்தான் சொல்லார்விள்ளார்
நேரப்பா பத்தியமோ யிச்சாபத்தியம்
    நினைவாக யிப்பாகஞ் செய்ய நன்றே (378)

மேற்படி கொச்சி வீரபற்பத்தை உட்கொள்ள பதிமூன்று வகை சன்னி, தொண்ணூற்று ஆறுவகை சிலேத்துமம், நாற்பதுவகை பித்தநோய், எண்பதுவகை வாதம், இவைகள் நீங்கும் இப்பற்பத்தை யாரும் சொல்லவில்லை, இச்சாபத்தியம் இருக்க வேண்டும், இம்மருந்து சிறப்பானது.

அன்னபேதி பற்பம்

நன்றான அன்னமென்ற பேதிதன்னை
நாட்டுகிறேன் மாணக்கள் பிழைக்கவென்று
குன்றான அன்னத்தின் கட்டிவாங்கிக்
குழியானைக் கல்லதனை மூசைசெய்து
நன்றான கட்டியை உள்ளேவைத்து
நலம் பெறவே கசபுடமே யிட்டாயானால்
வன்றான சுண்ணாம்பு போலே நீறும்
வகுக்க வொண்ணா பற்பமது ஆகும்பாரே (379)

அன்னபேதியைக் கட்டியாக எடுத்துக்கொள், குழியானைக்கல்லை மூசைசெய்து மேற்படி கட்டியை உள்ளே வைத்து கசபுடமிட சுண்ணாம்பைப் போல் நீறும், பற்பமாகும்.

இரத்தின பற்பம்

பாரப்பா மேகமென்ற திருபதும்போம்
பரிவான உஷ்ணநோயகலும்பாரு
தேரப்பா ரத்தினத்தின் கட்டி வாங்கித்
தெளிவான பூனீரைக் குகைபோற்செய்து
சீரப்பா குக்குடமே போட்டாயானால்
தெளிவான பற்பமது தவளம்போலாம்
நேரப்பா பற்பத்தின் வேகமெத்த
நெடிதான வெண்ணெய்தனில் கொண்டிடாயே. (380)

மேற்படி அன்னபேதி பற்பத்தால் இருபதுவகை மேகம், உஷ்ண நோய், நீங்கும், ரத்தினத்தைக் கட்டியாக எடுத்துக்கொள், பூனீரைக் குகைபோல் செய்து அதற்குள் ரத்தினத்தை வைத்து குக்குடபுடமிட்டால் தவளம்போல் பற்பமாகும், இப்பற்பத்தை வெண்ணெயில் உட் கொள்வாயாக.

கொண்டிடவே மேகமது இருபதும்போம்
கொடிதான சூலைபதி னெட்டும்போகும்
அண்டிடவே சயமோடு யீளைபோகும்
அப்பனே காந்தலது தீரும்பாரு
பண்டுபோல் திரேகமது மின்னும்பாரு
பதிவாக சட்டையது வுதிரும்பாரும்
தெண்டமுட னிந்தநூல் கோர்வைபோலத்
தெளிவுறவே யாருந்தான் சொல்லாரன்றே (381)

மேற்படி ரத்தினபற்பத்தை வெண்ணெயில் உட்கொள்ள இருபதுவகை மேகம், பதினெட்டுவகை சூலைகள், சயம். ஈளை, உஷ்ணம், இவைகள் குணமாகி உடல் மின்னும், சட்டை உதிர்ந்து ஒளிவீசும், இந்த நூலைப்போல்யாரும் கூறவில்லை.

பாஷாண பற்பம்

அன்றான மானிடற்குப் பற்பமொன்று
அறையுறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
குன்றானப் பாஷாணக் கட்டிவாங்கி
குணமான மூசையொன்று செப்பக்கேளும்
பன்றான சீனமொடு வெடியுப்புச் சேர்த்துப்
பாங்கான பேரண்டம் ஒன்றாய்க்கூட்டி
வன்றான வெண்கருவால் அரைத்துமைந்தா
வாகாக சிமிழ்போல மூசைசெய்யே (382)

பாஷாணத்தைப் கட்டியாக எடுத்துக் கொள், சீனம், வெடியுப்பு, மண்டை ஓடு, இவைகளைக் கூட்டி வெண்கருவால் அரைத்து சிமிழ்போல் மூசை செய்திடு.

செய்துமே பாஷாணக் கட்டிவாங்கித்
திறமான திருகுகள்ளிப் பாலையூட்டி
நைதுமே மேலுமந்த பில்லைமூடி
நலமாக யெழுசீலை வலுவாய்ச்செய்து
கொய்துமே குக்குடமே போட்டாயானால்
குவலயத்தில் மாசற்ற பற்பமாச்சு
பெய்துமே தேனதில் கொண்டாயானால்
பறக்குமடா சகலநோய் பறக்கும்பாரே (383)

மேற்படி பாஷாணத்தை மூசையில்வைத்து திருகுகள்ளி பாலை விட்டு மூடிச் சீலைமண் ஏழுசெய்து குக்குடபுடமிட குற்றமில்லாத பற்பமாகும், இப்பற்பத்தை தேனில் உட்கொள்ள சகல நோயும் நீங்கும்.

பறக்கின்ற பற்பத்தை செம்பிலீயப்
பளிங்குபோல் வெள்ளியது பாருபாரு
சிறக்கமுள்ள வயததுதான் யெட்டதாகும்
சிறப்புள்ள சரிகைவெள்ளி யுடனாய்ச்சேர்த்து
திறக்கமாய்க் காய்ச்சிடவே சிகப்புகாணும்
தேர்ந்ததோர் வித்தையிது ரசிதவித்தை
துறக்கமாய்ப் பாடிவைத்தே னிந்தநூலு
தொழிலாளி பார்த்தாக்கால் செய்வாரன்றே (384)

தன்வந்திரி பகவான்

மேற்படி பற்பத்தை செம்பில் கொடுக்க எட்டு மாற்று வெள்ளி உண்டாகும். ஈரிகை வெள்ளியை சேர்த்து உருக்க சிகப்பாகும், இது வெள்ளி வித்தையாகும்.

உப்பு பற்பம்

அன்றான மானிடற்கு பற்குமொன்று
அரைகிறேன் லவணமாம் பற்பமப்பா
குன்றான லவணமதை சேருவாங்கிக்
குறிப்பாக செருப்படையின் சாற்றாலாட்டி
பன்றான மாவிலிங்கப் பட்டைக்குள்ளே
பாங்காக பொதிந்துமே கவசம்செய்து
வன்றாக கசபுடமே யிட்டாயானால்
மாசற்ற லவணத்தின் பற்பமாச்சே (385)

லவணபற்பம் கூறுகிறேன், லவணத்தை சேர் அளவு எடுத்து செருப்படைச் சாற்றால் அரைத்துக்கொள், மாவிலிங்கப்பட்டையை அரைத்து (அரைத்த) உப்பிற்கு கவசமிட்டு கசபுடமிட லவணம் பற்பமாகும்.

ஆச்சப்ப லவணபற்பம் சாற்றக்கேளு
அப்பனே குன்றியிடை நெய்யிற்கொள்ள
போச்சப்பா குன்மமென்ற தெட்டும்போகும்
பொருமலுடன் வயிற்றுவலி சூதவாய்வு
நீச்சப்பா மகோதரமும் பீலிகையும்போகும்
நேரான தசவாய்வு சூலைபோகும்
தேய்ச்சப்பா பாரிச வாய்வு போகம்
தெளிவாக திரேகமது மின்னும்பாரே (386)

மேற்படி லவணபற்பத்தை குன்றி எடை நெய்யில் உட்கொண்டு வர எட்டுவகை குன்மம். பொருமல், வயிற்றுவலி, சூதகவாய்வு மகோதரம், பீலிகை, தசவாய்வு, சூலை, பாரிச வாய்வு, இவைகள் நீங்கி உடல் ஒளி உண்டாகும்.

மின்னுமப்பா பற்பத்தின் செய்கைகேளு
மேன்மையாம் ரவிமதியும் ஒன்றாய் கூட்டி
துன்னுகின்ற குருலவணம் பத்துக்கொன்று
துடிப்புடனே கொடுத்துருக்க மாத்தஞ்சாகும்
மின்னுகின்ற தங்கமது சரியாய்ச்சேர்த்து
மிக்கவே தகடடித்து புடமேயீய
பன்னுகின்ற மாத்ததுவும் வொன்பதாகும்
பாடினார் வெகுகோடி வேதையாமே. (387)

செம்பு, வெள்ளி, இவைகளை ஒன்றாகக் கூட்டி உருக்கி மேற்படி லவணபற்பம் ஒன்று கொடுக்க ஐந்து மாற்று தங்கமாகும் சரி எடை தங்கமிட்டு உருக்கி தகடடித்து புடமிட ஒன்பதுமாற்று தங்கமாகும், இக்களங்கை ஓட்டிலிட்டு ஊதுவாயாக.

பரிசவேகை

வேதையிலே யின்னமொரு போக்குசொல்வேன்
 வீரான அயச்செம்பு தங்கமொன்று
ஆதையிலே கரிவங்க மிரசமுங்கூட
 அப்பனே வெள்ளியது சரியாய்க்கூட்டி
பாதையிலே பித்தளையும் அரையும்சேர்த்துப்
 பாங்காகக் காரமிட்டு வுருக்கினாக்கால்
தீதேயில்லாகளங்கு போ லாகுமப்பா
 தெளிவாக வோட்டில்வைத் தூதிப்போடே. (388)

அயச்செம்பு, தங்கம் ஒன்று, கருவங்கம், இரசம், வெள்ளி சரி எடை, பித்தளை அரை, இவைகளை காரமிட்டு உருக்க களங்காகும், இக்களங்கை ஓட்டிலிட்டு ஊதுவாயாக.

போட்டிடவே மாத்தஞ்சு யிருக்கும்பாரு
 பொங்கமுட னிடைக்கிடை தங்கம்சேர்த்து
ஆடையிலே சீவனம் செய்துகொண்டு
 அப்பனே என்காவிய மறிந்துபாரு
நீடையிலே கசடருக்கு காட்டவேண்டாம்
 நிச்சயமாய் நாமுரைத்தோம் நந்திபாதம்
ஓடையிலே தன்வந்திரி பகவானும் தான்
 தெளிவுறவே தாமுரைத்தார் வேதந்தானே (389)

மேற்படி வகையில் ஊதி எடுக்க ஐந்து மாற்று தங்கமாகும், சரி எடை தங்கமிட்டு உருக்கு மாற்று அதிகமாகும், இதைவைத்து சீவனம் செய்து கொள். இக்காவியத்தை ஆராய்ந்து பார், கசடர்கட்கு இந்நூலை காட்டுதலாகாது, நந்தீசர் பாதம் போற்றி தன்வந்திரி பகவானான நான் முறைகளை கூறிவிட்டேன்.

வேதந்தான் ஆயுரு வேதமப்பா
 விமலரும் ஆயிக்கு சொன்னதப்பா
போதமா மிக் காவியந்தான்
 பூட்டினார் வெகுகோடி பூட்டுமப்பா
நீதமா மருந்துவகை செய்பாகம்யாவும்
 நிகழ்த்தினேன் குருக்குவழி யனந்தங்கோடி
பாதமாம் நந்திபதம் வணங்கி நின்ற
 பாடினேன் தன்வந்திரி பாடினேனே (390)

தன்வந்திரி பகவான்

ஆயுர் வேதம் பரமேஸ்வரர் அன்னைக்கும் சொன்னதாகும், இந்த காவியத்தில் வெகு கோடி முறைகளுண்டு, மருந்து வகை செய்பாகத்தை சுருக்கமாக சொல்லிவிட்டேன். நந்தீசர் பாதத்தைப் போற்றி தன்வந்திரி பாடிவிட்டேன்.

பேய்த் தும்மட்டிக்கா யெண்ணெய்

பாடினதோர் மானிடர்க்கு யெண்ணெயொன்று
　　பட்சமா யுரைக்கிறேன் பகரக்கேளும்
தேடினதோர் மட்டிக்காய் காக்கணம்வேர்
　　துடியான லவணமா மிந்துவோடு
ஆடினதோர் வெள்ளுள்ளி வசம்புதானும்
　　அப்பனே கருஞ்சீரகம் சரியதாக
கூடினதோர் சித்தாமணக் கெண்ணெய்தானும்
　　குடிலமாஞ் சரியாகக் கூட்டிடாயே　　　　(391)

தும்மட்டிக்காய், காக்கணம்வேர், இந்துப்பு, வெள்ளுள்ளி, வசம்பு, கருஞ்சீரகம் இவைகளை சரி எடை கூட்டி அதன் அளவு சித்தாமணக் கெண்ணெய் கூட்டிக்கொள்.

கூட்டியே மெழுகுபதம் தன்னிற்காய்ச்சி
　　துணமாக ஈராறு நாள் தான் கொள்ள
ஆட்டியே பத்தியந்தா னிச்சாபத்தியம்
　　அப்பனே கடுகெண்ணெய் தானுமாகா
நீட்டியே மண்டலந்தான் இரண்டுமுறையுண்ண
　　நிற்காது சூசிக வாய்வுதானும்
ஓட்டிவிடும் வாதமென்ற தெண்பதும்போம்
　　உத்தமனே யிந்தயெண்ணெய் அதிகமாமே　　　　(392)

கூட்டியதை மெழுகுபதமாக காய்ச்சி பனிரெண்டு நாள் உட்கொள்ள வேண்டும், இச்சா பத்தியமாக இருக்க வேண்டும். கடுகு, எண்ணெய் ஆகாது, இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள சூசிகவாய்வு, எண்பது வகை வாதம், இவைகள் நீங்கும்.

சகல வாய்வுகளுக்குச் சூரணம்

அதீதமாம் மாந்தருக்கு சூரணங்கேள்
　　அப்பனே திரிகடுகு சீரந்தானும்
வதீதமாம் திரிபலையும் விளங்கங்காயம்
　　வாகான சவுட்டுமண்ணு ரோகிணிதானும்

சதிதமாம் கோஷ்டமுடன் மாஞ்சில் ஏலம்
சார்வான மதுரமாம் கிராம்புச்சந்தம்
சதிதமாம் தாளிசம் சீரம் நாகம்
கருவாகச் சூரணித்து வடிதான் செய்யே (393)

திரிகடுகு, சீரகம், திரிபலை, வாய் விளங்கம் பெருங்காயம், சவுட்டு மண், கடுகு ரோகிணி, கோஷ்டம், சடாமாஞ்சில், ஏலம், அதிமதுரம், கிராம்பு, சந்தனம், தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, இவைகளை சரி எடை எடுத்து சூரணித்து வடிகட்டிக் கொள்.

செய்யுமே சீனியது சரியெடைதான்கூட்டி
சிறப்பாக வெருகடிதான் கொண்டாயானால்
கொய்துமே வாத மென்ற தெண்பதும்போம்
குடிகெடுக்கும் பித்தமதுக் கீழேசாடும்
கொய்துமே சந்துவாதம் முடக்குவாதம்
தெளிவான முகவாத மிசுப்புவாதம்
பைதுமே சகல ரோக வாயுதானும்
பறக்குமடா வீடுவிட்டுப் பறக்கும்பாரே (394)

மேற்படி சூரணத்திற்குச் சரி எடை சீனி கூட்டி வெருகடி அளவு உட்கொண்டுவர எண்பதுவகை வாதம், பித்தம், சந்து வாதம், முடக்குவாதம், முகவாதம், இசுப்பு வாதம். சகல வாய்வும், நீங்கி குணமளிக்கும்.

சிலேத்தும ரோகத்திற்கு நெய்

பறக்குமே மானிடற்கு சிலேத்துமம் தீரப்
பாடுகிறேன் நெய்யொன்று சூட்சாசூட்சம்
சிறக்குகின்ற சீந்தலோடு தேவதாரம்
தெளிவான சித்தரத்தை குரோசானியோமம்
நிறக்குகின்ற மரமஞ்சள் விலாமிச்சோடு
நேரான சந்தனமு முத்தக்காசு
திறக்கமுள்ள சிறுதேக்கு கண்டங்கத்திரி
திறமான வாறுமுவை யரிசிகூட்டே (395)

சிலேத்துமம் நீங்க நெய் ஒன்று கூறுகிறேன், சீந்தில் தேவதாரம், சித்தரத்தை, குரோசானி ஓமம், மரமஞ்சள், விலாமிச்சை, சந்தனம், முத்தக்காசு, சிறு தேக்கு, கண்டங்கத்திரி, வாலுளுவை அரிசி, இவைகளை சரி எடை கூட்டிக் கொள்.

கூட்டியே நெய்தனிலே போட்டுக்காய்ச்சிக்
குணமான மண்டலந்தான் முழுகினாக்கால்
வாட்டிவிடும் சிலேத்துமந் தொண்ணூற்றாறும்
வாங்குமடா கபரோக மீளைதானும்

தன்வந்திரி பகவான்

தாட்டிகமா மிந்த நெய் சுருக்குமெத்த
    தாரணியி லாருந்தான் செய்யமாட்டார்
பூட்டகமாய்ப் பத்தியந்தானிச் சாபத்தியம்
    புகலுகிறேன் தன்வந்திரி புகலுறேனே. (396)

மேற்படி கூட்டியதை நெய்யிலிட்டு காய்ச்சி ஒரு மண்டலம் முழுக தொண்ணூற்று ஆறுவகை சிலேத்துமம், கபநோய், ஈளை, இவைகள் குணமாகும். இந்த நெய் சுருக்கமானது, உலகத்தில் சாமானியர் செய்ய முடியாது. இச்சாபத்தியமிருக்க வேண்டும்.

அஷ்ட குன்மத்திற்கு மருந்து

புகலுகிறேன் மானிடற்குக் குன்மம்வந்தால்
    போவதற்கு மருந்தொன்று செப்பக்கேளும்
நகலுகிறேன் காரமுடன் தாரந்தானும்
    நலமான பூரமுடன் கெந்திதானும்
அகலுகிறேன் லிங்கமுடன் காந்தந்தானும்
    அரியதொரு மனோசிலையுங் கூடச் சேர்த்து
நிகலுகிறேன் திரிகடுகு திரிபலாதி
    நெடிதான தேன்விட்டு அறைத்திடாயே (397)

குன்மத்திற்கு மருந்து கூறுகிறேன், காரம், அரிதாரம், பூரம், கெந்தகம், லிங்கம், காந்தம், மனோசிலை, இவைகளைச் சேர்த்து திரிகடுகு, திரிபலை, இவைகளும் கூட்டி தேன்விட்டு அரைப்பாயாக.

அரைத்துமே தூதளங்காய்ப் பிரமாணங்கள்
    அன்பாக மண்டலந்தான் கொண்டாயானால்
திறைத்து வரும் குன்மமென்ற தெட்டும்போகும்
    திரமான வயிற்றுவலி புரட்டல் தீரும்
கரைத்துவரும் வாந்தியுடன் விம்மல்தீரும்
    கண்காணா தோடுமடா கண்டுபாரு
மறைத்து வரும் கண்ணோசை மழுங்கல் தீரும்
    மறப்பெல்லாந் திறப்பாக பாடினோமே. (398)

மேற்படி அரைத்ததை தூதுளங்காய் அளவு உருட்டிக்கொள், ஒரு மண்டலம் உட்கொள்ள எட்டுவகை குன்மங்கள், வயிற்றுவலி, புரட்டல் வாந்தி, விம்மல், இவைகள் குணமாகும். கண் ஒளி உண்டாகும், மறைப்பை நீக்கிச் சொல்லி விட்டேன்.

மேகரசாயனம்

பாடினோம் மேகமிரு பதுதான்போகப்
பண்பாக பரங்கியுடப் பட்டைதானும்
தேடியே சாதிக்காய் சாதிபத்திரி
தெளிவான அசுவகெந்தி சிறுநாகப்பூ
கூடியே பூமி சர்க்கரைதான் கூட்டி
புகழான பூனையிடக் காலிவித்தும்
நீடியே தேத்தானின் வித்துங்கூட்டி
நேர்ப்பான நிலைப்பனையின் கிழங்குங்கூட்டே (399)

இருபது வகை மேகநோய் நீங்க கூறுகிறேன், பரங்கிப் பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, அசுவகெந்தி, சிறுநாகப்பூ, பூமிசக்கரை கிழங்கு, பூனைக்காலிவிதை, தேத்தான் விதை, நிலைப்பனைக் கிழங்கு. இவைகளை கூட்டி துாள்செய்திடு.

கூட்டியே சீனியிட சர்க்ரைதானும்
குணமான நெய்யுடனே கிரதஞ்செய்து
மாட்டியே நெல்லாவிப் புடந்தானிட்டு
மகிழ்ச்சிபெற மண்டலந்தான் கொண்டாயானால்
நீட்டிவரும் மேகமென்ற திருபதும்போம்
நெடிதான பிறமேகம் தீரும்தீரும்
வாட்டிவிடும் சகலரோக வியாதிதிரும்
வகுப்பாக யிக்காவியம் தெளிவதாமே (400)

மேற்படி சரக்குடன் சினி சக்கரை கூட்டி நெய்யிலிட்டு கிருதம் செய்து ஒருமண்டலம் உட்கொண்டுவர இருபதுவகை மேகம், பிறமேகம், சகல உஷ்ணமும் நீங்கி குணமாகும், இக்காவியத்தில் தெளிவாக கூறிவிட்டேன்.

குறிப்பு: ஞானம் பற்றிய பாடல்களுக்கு உரை எழுதப்படவில்லை.

தெளிவான வசியமுமோகனமும் நசித்து
திறமான ஸ்தம்பனமுச் சாடனமும் நசித்து
வளியான கிருஷ்ணமும் வேசனமும் நசித்து
மாரணமும் பேதனமும் வகையுடனே நசித்து
பனியான ஜெகசால மானதுவும் நசித்து
பரிசனமாய் நின்றதொரு ணோசை நசித்து
வுளியாத பெண்ணாசை மண்ணாசை நசித்து
வொன்றுமன்றித் தன்மயமா மொடுங்குவதேனம்மா. (401)

அடங்கிவிட யாராலு முடியாதப்பா
அப்பனே நானுனக்கு அறைந்தவாறும்
ஒடுங்கி நிரு மயமாகி பூரணத்தில் நின்று
ஒங்கு முடித் தகாதன வெல்லாமகற்றி
மடங்கலன்றி சித்திவெகு சுத்தமுடன் றானுந்
தன்மையுடன் மனதைத்தா னறிந்தாலே
திடங்கடு மயமாய் சின்மய பூரணமாய்
சிவசிவா செகமயமே சிவமயமாங்காணே (402)

காணவே கண்டதெல்லாஞ் சிவமயமென்றெண்ணு
கடந்தேகிப் போனதெல்லாஞ் சிவமயமென்றெண்ணு
ஈணவே சூட்சாதி சூட்சமெல்லாம்
என்மகனே பிராணாய களையுமாகும்
பேணவே தன்னகமே சிவமயமென்றெண்ணு
பிலமான வாசியது சிவமயமென்றெண்ணு
ஆணவே பீடமெல்லாம் சிவமயமென்றெண்ணு
அப்பனே பிராணாயகளை சுரூபமயமாமே. (403)

ஆமப்பா சுரூபமய பூரணமென்றெண்ணி
யடர்ந்தெழுந்த் தத்துவத்தை யறிவால்நீக்கி
தாமப்பா ஓமென்ற பிரணவத்தினாலே
தன்னுயிர்போல் மன்னுயிரை தான்தானென்று
நாமப்பா சொல்லுகிறோம் நாதாந்தவீட்டில்
நாடிமனங் கொண்டுவரும் நயனம்பாரு
சேரப்பா கொண்டுதிரு நயனம்பார்க்க
சோமகிரி சூரியகிரி சுத்தமாச்சே. (404)

ஆச்சப்பா சோமகிரி யுச்சிமீதில்
அருள் பெருகுஞ் சூரியகிரி மூலமாச்சு
மூச்சப்பா பேசாத காட்சி தன்னை
பிரணவத்தின் கிருபையினால் சொல்லக்கேளு
நீச்சப்பா நிலையறிந்து காணப்போகா
நிஜமான நிலையதுதா னுந்திகாணே
காச்சப்பா முப்பூவுக் கிடமேயாச்சுக்
கண்காணா தோடுநிலை யதீதங்காணே (405)

காணவே யுந்தியென்ற கமலமீதில்
கண்கொள்ளா காட்சிவெகு சூட்சங்காணும்
தோணவே சூட்சநிலை தானேகண்டு
துருவமென்ற மேறுவடா யடைந்ததன்னில்

பூணவே யண்டபதங் கைக்குள்ளாகும்
 புருவமென்ற சமாதியிலே பூண்டுகொண்டு
யூணவே மனதுறுதி யாகநின்று
 வுத்தகலை ரவிமதியுஞ் சோதியாச்சே (406)

சோதியென்ற முச்சுடரு மொன்றாய்நின்று
 துலங்குதடா தன்னகத்தில் நன்றாய்ப்பாரு
நீதியுட நிலையறிந்து கொண்டதெல்லாம்
 நல்ல தொரு புருவமைய சோதி யாச்சு
ஆதியென்ற சோதியடா மனக்கண்ணாச்சு
 யறிவான ரூபமடா அதமாவாச்சு
ஓதியதோர் மந்திரகலை யதமாவாகி
 உண்மையென்ற பூரணமாய் விளங்குந்தானே (407)

சோதி என்ற மூன்று சுடரும் ஒன்றாய் நின்று தன் அகத்தில் ஒளிவிடுவதை நன்றாகக் காண்பாயாக நீதியின் நிலையறிந்து கொண்டது எல்லாம் புருவமையத்தில் சுடருகின்ற சோதியாகும். அந்த ஒளியே மனக்கண் ஆனது, அறிவு உருவமாகி ஆத்மாவாகும், மந்திரக்கலை ஆத்மாவாகி உண்மை என்ற பூரணமாய் விளங்கும்.

தானே தான் விளங்குமடா யறிவானந்தந்
 தன்மையுள்ள பூரணமாய் தான்தானாகும்
வீணேதான் திரியாதே யறிவைப்பற்று
 வேதாந்தம் சித்தாந்தம் ரெண்டுமொன்று
கோனேதான் தானவனாய்க் குறித்துப்பாரு
 குறியறிந்து பாராது நிலை கொண்டாயானால்
ஊனேதா னானந்த போதமாகு
 முண்மையென்ற நிருவிகற்ப முறுதிபாரே (408)

நிருவிகற்பம் ஆறாதாரம்

பாரப்பா நிருவிகற்ப மார்தான்காண்பார்
 பத்தியுள்ள மாணாக்கள் சொல்லக்கேளு
காரப்பா சிவமிதென்றால் காரமாச்சு
 கருணைவளர் சிவமதுதான் விந்து
நேரப்பா விந்துநிலை யறிந்துகொள்ள
 நிசமுனக் கில்லையடா நிஜத்தைக்கேளு
சாரப்பா சற்குருவி னிடமே சென்று
 சங்கையுடன் றானவனால் தன்னைப்பாரே (409)

பாரப்பா தன்னைமிக வறிவிற்கண்டு
 பாலகனே விருந்துநடி யமுர்தம்வாங்கி

நேரப்பா சற்குருவை தியானம்பண்ணி
நிலையறிந்து கணபதிக்கு யபிஷேகித்தால்
வீரப்பா கொண்டுநின்ற யறிவைமைந்தா
மெய்ஞ்ஞான பூரணமாய் விளங்கும்பாரு
காரப்பா யந்தநிலை சொந்தமென்று
கருணையுட ணந்திசந்தி பூசை பண்ணே (410)

பண்ணப்பா யந்திசந்தி பூசைபண்ணு
பரம கயிலாசமென்ற பதியைநோக்கி
கண்ணப்பா தானறிந்து தன்னைப்பார்த்தால்
கசடான கர்மவினை காணாதோடும்
எண்ணப்பா வென்று தன்னை மறந்திடாதே
யெட்டறிந்து திட்டமுடன் கட்டாய்நில்லு
முண்ணப்பா விசையறிந்து பாய்ந்ததண்ணீர்
முத்தியுடன் மணிகெவுனக் குளிகைபாரே (411)

பாரப்பா மாணிடர்களே செப்பக்கேளும்
பரிவான உலகமதில் பேயின்கூற்று
நேரான கூத்துதான் சிவன்செயலென்றெண்ணி
நேர்மையுடன் பூரணமாய்ப் புருவமேவி
தூரான யடிமுடிபு மொன்றாய்க்கண்டு
சுகசீவ பிராணமய மாகி நின்றால்
மாறாத வாழ்வுசிவ யோகவாழ்வு
வந்துதடா வினைதீரு மனையக்காரே. (412)

'மனதான மனதறிந்து மனதைக்கார்க்க
மார்க்கமுள்ள கற்பமொன்று வழுத்தக்கேளு
கனமான கற்பமடா யார்தான் காண்பார்
கருணைவளர் யுகாரமடா சத்திசத்தி
குணமான உகாரமென்ற சத்திதன்னை
குருவருளா லந்திசந்தி பூசை பண்ணி
சணமான ஆங்காரத் திருக்கருத்து
சின்மயங் கொண்டென்னாளுந் திறமாய்நில்லே. (413)

திறமான சத்தியடா உகாரசத்தி
சிவசிவா மனம்நிறுத்தி பூசைசெய்தால்
உறமான தேகமதுக் குறுதிமெத்த
யுத்தகலைக் கியானமடா சித்தியாகுந்
திறமான யண்டபதங் கைக்குள்ளாகுந்
திருவான பூரணமுஞ் சித்தியாகும்

பரமான பராபரமும் தான்தானாகும்
பதிவான மூலத்தில் பலந்தான்பாரே (414)

பாரப்பா பதியறிந்து குருவைக்கண்டு
பத்தியுடன் சத்திசிவ பூசைபண்ணி
காரப்பா கருணைவிழி மலர்க்கண்ணாலே
கமலமென்ற குருநடுக் கண்ணைப்பற்றி
நேரப்பா நின்றதினால் மைந்தா மைந்தா
நிஜமான சிவரூபங் கண்ணிற்காணுந்
தேரப்பா சிவரூபங் கண்ணிற்காணார்
தெளிந்து மணங் கொண்டதினா லாதிபாரே (415)

திருவுளச்சிவன் செயல் அனாதசிட்சை

ஆதியென்ற நாதமடா சோதிசோதி
யதையறிந்து பூரணமாய்ப் பூசைசெய்தால்
சோதியென்ற ஞானமது யிதுதானாச்சு
சுகமாக சிவயோக மிதுதானாச்சு
நீதியென்ற பிரணாய மிதுதானாச்சு
நிஜமான வாசியது யிதுதானாச்சு
யோதியதோர் மந்திரமு மிதுதானாச்சு
வுண்மையென்ற பூசைவிதி யிதுதானாச்சே. (416)

ஆச்சப்பா கெவுனமதும் இதுதானாச்சு
ஆதியென்ற கற்பமதும் இதுதானாச்சு
நீச்சப்பா வுபதேசம் இதுதானாச்சு
நிஜமான சத்திசிவம் இதுதானாச்சு
பேச்சப்பா பேசுவதும் இதுதானாச்சு
பேசாத மவுனமதும் இதுதானாச்சு
காச்சப்பா தெரிசனமும் இதுதானாச்சு
கருணைவளர் வாலையுட கருத்தைக்கேளே (417)

மனமறிய கற்பநிலை சூட்சம்

கருத்தறிந்து கருணையுடன் கருவைக்கொண்டால்
கால்சத்தி மேல்சத்தி காணாதோடுந்
திருத்தமுடன் பூரணமு மலைநின்றாடுந்
திருவான வாலையுட செயல்தன்னாலே
மருத்தமென்ற மாய்கையெல்லாம் மாண்டுபோகும்
மங்கையுடன் கெங்கையது வலுமைமெத்த

தன்வந்திரி பகவான்

நிருத்தியந்த வாதார பூசைபண்ணி
நேர்மையுள்ள மாதாவாய் மகவாயெண்ணே (418)

சாயாதிகற்ப சமாசிச்சூட்சம்

என்மக்காள் மானிடரே கற்பசூட்சமையா
யின்பரசந் தான்கொடுத்த மாதர்தன்னை
தன்மையுடன் மோகமதாய் சஞ்சாரஞ்செய்தால்
தானினைந்த காரியங்கள் தவறுண்டேபோம்
வுண்மையென்ற மந்திரங்க ளுதவாதையா
யுடலதிலே செந்தீயு முடனேபற்றும்
வண்மையென்ற கூற்றுவனு முயிரையுண்பான்
மார்க்கமுடன் மனதறிந்து மனத்தைக்காரே (419)

காரப்பா மனதறிந்து மனதைக்காத்து
கருணைதரு ஞானசத்தி வாலைபூசை
நேரப்பா நேர்மையுடன் பூசைசெய்தால்
நினைத்தபடி முடிக்கும் வகைக்குள்ளாகுஞ்
காரப்பா சகலகலைக் கியானந்தோன்றுஞ்
சதாயோக மானசிவ யோகந்தானுந்
தேரப்பா சிவயோகத் திருந்தால்மைந்தா
சிவசிவா பூரணத்தில் செயலைக்காணே (420)

பூரணமெழுகு ரவிசூட்சம்

செயலான செயலறிந்து செயலைக்காண
திறமான தீர்க்கமொன்று செப்பக்கேளு
மயலான மயக்கருத்தி மவுனங்கொண்டு
மகத்தான கேசரியா மண்டத்தேறி
சுயமான பூரணமாஞ் சோதித்தாயே
சுத்தமுடன்தான் வணங்கித் தொழுதுபோற்றி
நயமாக வஸ்துவை செய்துகொண்டு
நாதாந்த பூரணத்தை நயமாய்வாங்கே. (421)

வாங்கியந்த பூரணத்தை மைந்தாநீயும்
வணக்கமுடன் பீங்கானில் வைத்துப்போற்றி
பாங்குபெற்ற ரவிபீசஞ் சரியாய்ச்சேர்த்து
பதமாக மதித்து ரவியில்வைத்து
சாங்கமாய்க் காய்ந்த பின்பு யெடுத்துப்பாரு
சதாசிவத்தின் செயலதினால் மெழுகாய்ப்போகும்

பூங்கமலயமுர்தரச மெமுகைவாங்கி
புத்தியுடன் சத்திசிவ வாலைசேரே. (422)

சேரப்பா அஞ்சையு மொன்றாகச்சேர்த்து
திறமாக மத்தித்து ரவியிற்போட்டு
சேரப்பா யின்னமொரு கருமானங்கேள்
சத்தியுடன் புனுகுடனே வீரம்பூரம்
காரப்பா கருவறிந்து சேர்த்துக்கொண்டு
கலயமதிற் குன்றிரந்து தயிலம்வாங்கி
நேரப்பா முன்சொன்ன யஞ்சும்போடு
நிஜமான தயிலத்தை விட்டுக்கிண்டே (423)

கிண்டிமிகத் தானெடுத்து ரவியிற்போட்டு
கிருபையுடன் பீங்கானில் தானுஞ்சேர்த்து
அண்ட கேசரிமாது தன்னைப்போற்றி
யாக்கை நிலை தனையறிந்து அந்திசந்தி
குண்டுமணி யளவாகக் கொண்டாயானால்
குகுலமென்ற தீவினைகள் காணாதோடும்
வெண்டிசையுங் கீர்த்திபெறுவாய் (424)
(அரை அடி குறைவு)

அமுர்தரசபானங்கொள்ள அனாதரட்சை

தானென்ற ம[illegible]னசத்தி யானமாது
தனை[illegible]ந்த காலமதில் தானேதானாய்
தோனன்ற தப்பியாச பானங்கொள்ள
சிவந்தமலர் குவிந்துபூ மலர்ந்தகால
மூலமென்ற யமுர்தரச மெமுக்குங்கன்னி
யுகந்துமனம் கொண்டுவர யோகமாகி
கோனென்ற குருவருளா லுருஞ்சிவாங்கி
குவிந்தமலர் கனிந்தமணி சுவைத்துவாங்கே. (425)

வாங்கியறு சபையறிய மதுரங்கொண்டு
மனங்கனிய மாவடியில் மனக்கண்சாற்றி
பாங்குபெற மொக்கடிலற் பதிவாய் நின்றாற்
பரிவான சிவயோகப் பலத்தினாலே
தாங்கிநின்ற மும்மூர்த்தி யாறாதாரம்
தான்காணப் புவனமெல்லாந் தானேதானாய்
யேங்கியதோர் வாதியுட பலத்தினாலே
யுள்ளாறுமனை பலத துறுதிபாரே. (426)

தன்வந்திரி பகவான்

உறுதியுள்ள பஞ்சகண பஞ்சகமூல
முண்மையுள்ள திரிகோண யந்திரத்தாலே
பருதிமதி சுடரொளியா யண்டஞ்சூழ்ந்து
பரும்பணியாந் திசைநாத வாசியாலே
சுருதிதிரு வாசியம்மா வாசியாலே
சுகசீவ பிராணகலை சோதியாகி
சரிதையொடு கிரிகைசிவ யோகமாகி
சகலகலைக் கியானமென்ற ஞானமாமே (427)

கலைக்ஞானம்

ஞானமென்ற ஞானமடா மவுனஞானம்
நாதாந்த போதமென்ற ஞானந்தன்னை
மோனமென்ற மனதடங்கி ஞானப்பாலை
முத்திதரும் கலையறிந்து யூதிவாங்கி
பானமென்ற பானமடா மதுரபானம்
பரஞான பூரணமாய் நின்றுபாயுந்
தானமென்ற தலமறிந்து வாயுவுவாலுஞ்
சங்கையுடன் வாசிகொண்டு வாயால்வாய்கே (428)

வாங்கியிரு கலையறிந்து மவுனமாக
மவுனமென்ற மாங்கனியை கனிவாயுண்ண
யேங்கியேயொரு சபைதாண்டப் பலனுண்டாகும்
யொடுங்கிமனக் கால்கெதியை ஊணிப்பாரு
தாங்கிநின்ற தேகமது வலுத்துக்காணுந்
தன்றாது வாசியது தங்கம்போல
மாங்கனிதா னுண்டபெலன் கெதியுண்டாச்சு
மகத்தான சூட்சமென்ற சூட்சம்பாரே (429)

சூட்சமென்ற சூட்சியுட காலைப்பாரு
சூதான மானகெதி யிருகாலய்யா
காட்சியிவன் சூட்சாதி காலைக்காண
கண்காட்சி யானகால் தன்னைப்பாச்சு
சாட்சியென்ற ஜெகசாட்சி யமுர்தமுண்ண
தானிருந்த கண்காட்சி தானாய்நின்று
பேட்சியென்ற சூட்சமடா பின்னேதுமில்லை
பிலமான யனுபோகி யானால்பாரே (430)

பாரடா யிவளாட்டுக் காலேபாதம்
பற்றிக்கொண்டு கண்டுபிடி வாதஞ்சித்தி

ஊரடா யுப்பாலு மப்பினாலு
    முள்ளபடி கண்டுபிடி வாதத்தாலே
காரடா முப்பூவால் கண்டவித்தை
    கையறிந்தால் ரசவாதங் கொள்ளையாச்சு
நாரடா நாரிமன மார்தான்காண்பார்
    நயப்பாதங்கண்டவர்கள் யேழைதானே (431)

ஏழையென்றேன் யான்வலுத்தென் யென்னைப்போலே
    யேகநிரு மயமான சோதிப்பாலை
காலையிலே கருவறிந்து கொண்டாற்றானே
    கண்டபடி கண்டவற்கு தொண்டுசெய்வான்
வேளையிலே கதலிகுலை சாய்ந்தமார்க்கம்
    வகைபாரு துகைபாரா மனதைக்கற்றார்
தாளையிலே மலர்ப்பூத்துக் கனியுண்டாச்சு
    சதாயோக யோகமதாய்க் காணுவாயே (432)

காணுதற்கு யென்னசொல்வேன் விதிதான்வேண்டும்
    கண்டவர்கள் விண்டதுண்டோ கனியின்மார்க்கம்
பூணுதற்கு மனம்பூண்டு காலைப்பார்க்க
    புலம்பிமனம் குலையாதே மூலமார்க்கந்
தோணுதற்கு மும்மூலங் கண்டுபோகுஞ்
    சுகமான சக்கரத்தை யறிந்துகொள்வாய்ப்
பேணுதற்கு யோகவெளி சூட்சாசூட்சம்
    பொருத்து நீ கொள்வதற்கு தொட்டுக்காட்டே (433)

தொட்டுமிகக் காட்டுவது யந்தரத்தோடு
    குறிபோல காட்டுவது சூட்சாசூட்சம்
கட்டுவது யங்கேயடா விருதாற்கொண்டு
    காரணத்தா ரொட்டவிடங் கருணையாகு
மெட்டுரெண்டுங் கூட்டியல்லோ திறவுகோலா
    லிதையறிந்து பூரணத்தா லறிந்துபார்க்க
கிட்டுமடா பூரணத்தின் வட்டம்பாரு
    கேசரத்திற் கேசரியாள் கிருபையாலே. (434)

சர்வஞான முக்கோண மந்திரவாள் தியானபூசை

பாரடா பரஞ்சோதி முக்கோணத்தைப்
    பற்றிக் கொண்டு யின்னமொரு கருவைக்கேளு
காரடா கனிந்து மனக் கனிவாய் நீயும்
    காலரிந்து வாசியினால் கருவைப்பற்றி

தன்வந்திரி பகவான்

நேரடா நிலையறிந்து பானங்கொள்ளு
 நிசமான யறுசமயம் நிலத்தைப்பாரு
மேரடா யடிமுடியுங் கணேசன்சத்தி
 மெய்ஞ்ஞான பூரணத்தின் கெதியைப்பாரே (435)

கெதியான கேசரமே மணியின்சோதி
 கணேசனடி மூலமடா ஆதியந்த
மதியான மய்யமடா ருத்திரமூலம்
 மகத்தான வாசியடா ஸ்ரீமறீங்கென்ற
விதியான வெழுத்தறிந்து வோதுதற்கு
 வியம்பரிது வோங்கார விஞ்சைமூலம்
பதியான மதியறிந்து மந்திரவாளை
 பத்திமணங் கொண்டபடி யின்னங்கேளே . (436)

கேளப்பா மந்திரவாள் தனக்குமந்திரம்
 கேசரத்தின் பூரணமே ரீங்காரமாவாள்
வாளப்பா யதையறிந்து தியானம்பண்ண
 அடிமறந்து செய்யாதே யறிவைப்பற்றி
நாளப்பா முப்பொலியு மங்கேவாங்கும்
 நாற்பத்தி முக்கோண நாதத்தாட்டு
வாளப்பா வாழ்வதற்கு மவுனத்தாயே
 மனதுருகப் பூரணமாய் மதிகண்ணெண்ணே (437)

கண்ணான கமலதிரி சூலிவாமி
 காரணமே பூரணமே கமலத்தாயே
விண்ணான சபைதனிலே நடனமாடி
 வேதாந்த பேரொளியாய் நின்றதாயே
முண்ணான கண்மணியே ரூபாரூபி
 முதலான பூரணமே யருமைக்கண்ணே
வுண்ணான பூரணமா யெந்நாளுந்தான்
 ஓமென்ற மூலமந்திர சத்தியமாதே (438)

சத்தியமாய் நின்றசிவ சத்திமாதே
 சமர்முனையில் வெற்றிதரும் நாதத்தாயே
வெற்றியுள்ள பூரணத்தின் வேதரூபி
 வேதாந்த கோத்திரமாய் விளங்குந்தாயே
முத்தியுள்ள மோன மந்திர விபோக
 மோனமுடன் தியானமதாய் பூசைசெய்ய
பத்தியுள்ள மந்திரவாள் கையிலீய்ந்து
 பதிவான வரங்கொடுப்பாள் கெதியைப்பாரே (439)

பார்முழுது மொருகுடைக்கீழ் பரிவாயாள
பகர்ந்தொல்லை மறவாதே தியானம்பாரு
சீர்பெறவே பூவைசெய்யில் கும்பமெட்டுந்
தீர்க்கமுள்ள கும்பமடா வோம்பிரதானம்
நேர்பெறவே கும்பருவ கும்பம்வைத்து
நேமமுட நவக்கிரகந் தனக்குமைந்தா
பேர்பெறவே நாகமது கபிலைமைந்தா
பிலமான யட்சதையும் படிதானொன்றே (440)

படியாக அட்சதையும் பரப்பிமைந்தா
பத்தியுடன் பிரணவத்தை பதிவாய்நாட்டி
முடிவான சத்திநடு மையத்திற்கு
மோனமுள்ள அட்சத்தையும் படிதானெட்டு
மடியான தரமதிலே சத்திகும்ப
மாதியென்ற பிரணவத்தை யன்பாய்ச்சாத்தி
வடிகாக யெனையாள வாவாவென்று
மார்க்கமுடன் தானிருந்து செ.்லக்கேளே (441)

கேளப்பா பிரணவமேல் முக்கோணமிட்டு
கிருபையுள்ள கோணமதில் விந்துபோட்டு
வாளப்பா சொல்லுகிறேன் கும்பமெல்லாம்
வகையுடனே நூலணிந்து கெங்கைவிட்டு
ஆளப்பா மாங்குலையும் தேங்காய் சாத்தி
அன்பாக வாதணிந்து ஆடைசாத்தி
சூளப்பா சுகந்தபரி மளங்கள் சாத்தி
சுத்தமுட னீயிருந்து பூசைபண்ணே (442)

பண்ணப்பா சரீரத்தில் பஞ்சபூதம்
பரமனுட. ணாட்டுகிற தாளத்துள்ளே
கண்ணப்பா மண்டலத்தில் வானமூர்த்தி
கனமாகத் தானிருக்க பிராணதாரை
வண்ணப்பா பரிவான மூலத்துள்ளே
வணக்கமுடன் பிராணனைத்தான் தரிக்கப்பண்ணி
அண்ணப்பா கிராமத்தோ டுண்ணப்பண்ணு
அப்பனே ராப்பகலாய் காணுங்கானே. (443)

காணப்பா குருவசனந் தெளிந்துகொண்டு
கலந்துநின்ற மாய்கையொடு மாயாலோகம்
பேணப்பா சைதன்னிய மிந்தமூன்றம்
பலமான ஆகாசம் போலேபாரு

தன்வந்திரி பகவான்

தோணப்பா மறைந்திருக்கக் கண்டாலுந்தான்
துகளறுத்த தீர்க்கமுடன் முத்தியாக
பேணப்பா யறிவுடனே யென்னேரந்தான்
பலமாக நிற்கிறநேரம் திறந்தான்பாரே (444)

காரணைப் பிரமதியானம்

பாரப்பா வுலகமதில் பிரமநாமமென்று
பரிவாக நிச்சயித்து மனதுபூண்டு
நேரப்பா யறிவல்லோ தாரணையுமாக
நிலையான தியானமதில் நேர்மைகேளு
காரப்பா யகிலமெல்லாம் போதமாக
கண்கண்ட கடமெல்லா மகண்டமாகி
நேரப்பா வெளியெல்லாம் நிர்மலமாய்க்காண
நேர்மையுள்ள தியானமது நினைவாய்க்காணே (445)

அமரபட்ச பூர்வத்தியானம்

காணவே அமரபட்ச பூர்வபக்ஷந்தன்னில்
கலந்துநின்ற ஆசனத்தில் கருணைவைத்து
பூணவே குண்டலமுங் கிரீடம்சாத்தி
புகழான சரஸ்பதியும் வாமபாகம்
பேணவே பரிவாரம் நிறுத்து நிற்க
பெருமையுடன் இருதயத்தில் தியானம்பண்ணி
தோணவே மானதமாம் பூசை செய்தால்
சுத்தமுள்ள தியானமடா மாய்கைபாரே (446)

பிரமதியானம் - மாலுடைய தியானம்

பாரப்பா மாலுடைய தியானங்கேளு
பக்தியுடன் பச்சைவர்ன ரூபமாக
நேரப்பா சங்கோடு சக்கரமுமாக
நிசமான சாபமொடு க ங்கள் சாற்றி
காரப்பா குண்டலமுங் கிரீடம்வைத்து
கண்ணறிந்து முத்திரையுந் துளசிமாலை
சேரப்பா லட்சுமியும் வாமபாகம்
தீர்க்கமுடன் தியானிக்க தியானமாச்சே (447)

ருத்திர தியானம்

ஆச்சப்பா ருத்திரனை தியானம்பண்ண
அரகரா யஞ்செழுத்தும் ஆயுதங்களோடு
காச்சப்பா குண்டலமும் கிரீடம் வைத்து
கருணையுள்ள ருத்திரியும் வாமபாகம்
பேச்சப்பா தானிருத்தி மவுனமாக
பெருமையுட னிருதயத்தில் பேணிப்பார்க்க
மூச்சப்பா யடங்கிநின்ற தியானமாச்சு
முத்தியுடன் றன்னறிவா லிருந்துபாரே (448)

மயேஸ்வரி தியானம்

இருந்துகொண்டு மகேஸ்வரனைத் தியானம்பண்ண
யிருள்கண்ட ஒளிபோலே யின்பங்கொண்டு
வருந்திநின்ற குண்டலமுங் கிரீடஞ்சாத்தி
மகத்தான மயேஸ்வரியை வாமம் வைத்து
சொரிந்தமுர்தம் பூரணமாம் பேதங்கொண்டு
சுகசீவ பிராணகலை சுத்தமாக
அருந்தவமா யிருதயத்தில் நினைக்கமைந்தா
பரிசுரண மகேஸ்வரின் தியாணங்காணே (449)

சதாசிவ தியானம்

காணவே சதாசிவனார் தியாணங்கேளு
கருணையுடன் பஞ்சவர்ண ரூபமாக
தோணவே மனோன்மணியும் வாமபாகம்
சுகமாக தேவகணஞ் சூழ்ந்துநிற்க
பேணவே யிருதமாங் கமலந்தன்னிற்
பிரியமுடன் றானிருந்து தியானித்தாக்கால்
பூணவே நினைத்தவண்ணங் கண்ணிற்காணும்
புனிதமுள்ள தியானமதை பூண்டுபாரே (450)

பாரடா யிப்படியே ஆறுவகைதியானம்
பரிவான மண்டலத்தில் மூன்றுவகைதியானம்
நேரப்பா தானிருந்து வுபாசிப்பார்கள்
நேர்மையுள்ள தேவாதி தியானமாச்சு
வேரப்பா விஷயமென்ற தியானஞ்சொல்வேன்
விளங்கிநின்ற பிரபஞ்சந் தான் தானென்றுங்

தன்வந்திரி பகவான்

காரப்பா யண்ட_வெளி ரூபமாகக்
கருணைபெறத் தாஙிருக்க தியானமாச்சே (451)

அத்தோய தியானம்

ஆச்சப்பா அத்தோய தியானங்கேளு
அண்டரண்ட புவனமெல்லாம் ஓமென்றெண்ணி
நீச்சப்பா சகலவுயிர் தாமென்றெண்ணி
நிசமான பரவெளிதான் தாமென்றெண்ணி
மூச்சப்பா பஞ்சகர்த்தான் தாமென்றெண்ணி
முனையான மயேஸ்வரியை தியானித்தேதான்
பேச்சப்பா பேசாத மவுனந்தானாய்
பேரண்ட சுயப்பொருளாய் தியானஞ்செய்யே (452)

செய்யப்பா தியானமது பத்துஞ்சொன்னேன்
சிவசிவா சமாதியது செப்பக்கேளு
மெய்யப்பா தத்துவலய சமாதிமைந்தா
விளங்கிநின்ற தத்துவத்தை நன்றாப்பார்த்து
பொய்யப்பா வென்றறிந்து புருவமேனி
பூரணமாய் கற்பூர தியானம் பார்த்து
மையப்பா மையமதில் நின்றாயானால்
மகத்தான தத்துவலய சமாதியாச்சே (453)

ஆச்சப்பா தத்துவலய சமாதி சொன்னேன்
அரகரா சவ்விகற்பச் சமாதிகேளு
நீச்சப்பா நிலையறிந்து வாசியாலே
நிறைந்த பரிபூரணமாய் தீபம்பார்த்து
காச்சப்பா கருவிகர ணாதியென்ற
கட்டதுழித்து வெளியாய்க் கண்டுகொண்டால்
போச்சப்பா சவ்விகற்ப சமாதியாச்சு
பிலமான நிருவிகற்பச் சமாதிகேளே (454)

தன்னையறிய சத்திசிவம்

கேளடா திருவிகற்பச் சமாதிதன்னைக்
கிருபையுள்ள மானிடரே சொல்லக்கேளு
வாழடா தன்னறிவே சாட்சியாக
மகத்தான அண்டமெல்லாம் தான்தானாக
காலடா சகலவஸ்தும் பேதமாகக்
கண்டதுவும் கேட்டதுவு மாயமாக

ஆளடா ஆனந்தங் கொண்டாயானால்
அக்கரு நிரு விகற்பமது தான் காணே (455)

காண நிருவிகற்ப சமாதி சொன்னேன்
கருவாக வுள்ளசஞ்சார சமாதிகேளு
தோணவே அண்டசரா சரங்களெல்லாஞ்
சுகமாக வேறெல்லாம் நாமேன்றெண்ணி
பேணவே தானிருந்து கிரகம்சூட்சம்
பிரியமுடன் கண்டறிந்து வாசல்பூட்டி
பூணவே நடக்கும்போ திருக்கும்போது
ஒடுக்கமுடன் மவுனமதா யுலாவுவாயே (456)

வாயான மேல்வாசல் பூட்டும்போது
மகத்தான திட்டியெட்டு மொடுக்கமாச்சு
மாயாத ஒடுக்கமதி லொடுங்கியந்த
மகத்தான யனுக்கிரக வலஞ்சென்றேறி
தாயான திரேகமதே போதமாக
தானிருக்க சஞ்சார சமாதியாச்சு
தோயாதே சஞ்சார சமாதிகொண்டு
சுகமாக ஆரூட சமாதிகாணே (457)

காணவே ஆரூட சமாதிதன்னை
காணரிது நந்திபதம் சொல்லக்கேளு
பூணவே தத்துவலய சமாதிபெற்று
புகழாக நிட்டையுடன் செய்யவேண்டும்
பேணவே நிருவிகற்ப சமாதிபெற்று
பிலமாக சஞ்சார சமாதியாகி
தோணவே ஆரூட சமாதிகொண்டால்
சுத்தமென்ன அசுத்தமென்ன ரெண்டுமொன்றே (458)

ஒன்றான ஆரூட சமாதிகேளு
வுண்மையுள்ள நந்திபதம் அருமையாக
கண்டதொரு காட்சியெலாம் அனித்தியமென்று
கால்வைத்து அடிநடுவே முடிமேலாக
விண்டதொரு பஞ்சறிவை யறிவால் நீக்கி
வேதாந்த பரமவெளி தன்னினோடே
நின்றாடி கொண்டுசிவ ஜோதியாகி
நின்றதினா லாரூட சமாதியாச்சே (459)

ஆச்சப்பா சமாதியஞ்சு நன்றாய்ச்சொன்னேன்
ஆதிதொடுத் தந்தம்வரை நன்றாய்ப்பாரு

தன்வந்திரி பகவான்

பேச்சப்பா அடிமுடியும் பிலத்துக்காணும்
பேருகின்ற அஷ்டாங்கம திட்டம்பாரு
மூச்சப்பா முன்னிலையாய் நிறுத்திக்கொண்டு
முத்தியுள்ள நவக்கிரக சூக்ஷங்கண்டு
பாச்சப்பா அனுக்கிரகப் பதியில்நின்று
பாதாதி கேசமுதல் தன்னைப்பாரே (460)

தன்னைத்தான் தானறிந்து பார்க்கும்போது
தத்துவமாய் நின்றதொரு தொண்ணூற்றாறு
மெண்ணத்தான் துலையாத ஆசாபாச
மென்னசொல்வேன் பஞ்சகர்த்தாள் பஞ்சபூதங்
கண்ணைத்தான் தானறிந்த கண்ணிற்கண்ணுங்
கலையான ரவிமதியுஞ் சுடர்கள் மூன்று
முண்ணத்தா னறிந்துமன துன்னிப்பார்க்க
வுண்மையென்ற நிக்ஷயத்தை வுரைக்கொண்ணாதே. (461)

ஒண்ணான நிச்சயத்தை வுரைக்க வென்றா
லுண்ணாக்கு மண்ணாக்கு மொன்றுங்காணேன்
கண்ணான பேரொளியை என்னசொல்வேன்
கறுப்பல்ல வெளுப்பல்ல சிவப்புமல்ல
விண்ணான நீலமல்ல பச்சையல்ல
விளம்புதற் குறியதான அண்டத்துள்ளே
பண்ணான பாழ்விட்டு யிருளுக்குள்ளே
பாய்ந்துநின்று பார்க்கவெல்லா மிருளாய்ப்போச்சே. (462)

இருளான யிருளினுட ஒளியைப்பார்க்க
யென்னசொல்வேன் அதினுடைய யின்பந்தன்னை
மருளான மனம் நிறுத்தி மனக்கண்கொண்டு
மாசற்ற யிருளொளியை மகிழ்ந்தோர்தானு
மருளான பேருலகிற் றானேதானாய்
மந்தவெளி தனையறிந்து ஒளியைப்பற்றி
வெருளான யிருள்நீக்கி மருளிநின்று
விளங்குமருள் பொருளெனவே மேவுவாயே (463)

மேவுகின்ற வாதியந்த முதிக்குமுன்னே
மெஞ்ஞான யிருளதிலே அருளுண்டாச்சு
தாவுகின்ற அருளதிலே வொளியுண்டாச்ச
தன்னொளியுந் தானதிலே வெளியுண்டாச்சு
கூவுகின்ற பரவொளியில் சதாசிவன்தான்
கூர்மையுடன் பேரண்டம் படைத்துநின்றார்

பாவுகின்ற மகேஸ்சரனார் சத்தத்தோடே
பதிவாக வாய்வதனை படைத்தார்பாரே (464)

பாரப்பா ருத்திரனார் தாபத்தாலந்த
பக்குவமா யக்கினியை படைத்துநின்றார்
நேரப்பா திருமால்தான் கிருபையாலே
நிச்சயமாய் ஜெலமதனை யடைந்துநின்றார்
பேரப்பா பெற்றதொரு பிரமாவுந்தன்
பெருக்கவே பூமிதனை படைத்துநின்றார்
காரப்பா முன்சொன்ன சத்திசிவம் ரண்டுங்
கருணையுட ரவிமிதியு மானார்தானே (465)

தானேதா னாகிநின்ற யேழுலகந்தானுந்
தனித்து நின்ற பராபரமாஞ் சுழியினுள்ளே
வானேதான் கெதியேனவே சகலசித்தும்
வருந்திவிளை யாடிமிக வானனாட்டி
ஆனேதான் தானெனவே முப்பாழுக்கப்பா
லொடுங்கிநின்ற பானவீட்டுக் குள்ளேசென்று
நானேதான் நீயெனவே யந்தகாரம்
நலமாயி தன்அருளில் நாட்டம்பாரே (466)

பாரப்பா யிருளொளியும் வெளிமூன்றாய்யா
பரிவான தேகமதிற் கணக்குகொள்ளு
சாரப்பா யிம்மூன்று நிலையைச் சொல்வேன்
சரீரமென்ற சத்தியடா யிருள்தானப்பா
நேரப்பா ஒளியான யறிவின்கண்ணு
நிஜமான வெளியதுதான் மாயாமாயங்
காரப்பா மாய்கைவெளி கண்ணேசூட்சங்
கருவான கண்மறைந்தா லிருள்தான்காணே. (467)

காணப்பா யிருளதனால் வொளிதான்தோன்றும்
கருவான வொளியதனால் வெளிதான்தோன்றும்
பேணப்பா வெளியொளியு மெதினாலாச்சு
பெருகிநின்ற விருளதிலே வுண்டாச்சப்பா
ஆணப்பா தானொடுங்கும் வகையே தென்றா
லுத்தமனே வெளியதுவும் ஒளியில்சேரும்
பூணப்பா ஒளியதுவு மிருளில்சேரும்
புத்தியுடன் கண்டறிவாய் தன்னுள்தானே (468)

தன்வந்திரி பகவான்

தன்னுள்ளே தானறிந்து தன்னைப்பார்க்க
தனதான மண்டலங்கள் மூன்றினுள்ளே
விண்ணுள்ள முச்சுடரைக் கண்டுமந்த
வேதாந்த முச்சுடரி னொளியைப்பார்க்கில்
கண்ணுள்ளே வெளிதனிலே கண்ணைக்கண்டேன்
கருணையென்ற வொளிதனிலுந் தன்னைக்கண்டே
னுண்ணயத்தி னிருள்தனிலே நின்று பார்க்கில்
யேகநிரு மயமான யருள்தானாச்சே (469)

ஆச்சப்பா யருள் நிறைந்த புருவமையம்
யண்டபகி ரண்டமென்ற ஆதிவீடு
பேச்சப்பா பெருகிநின்ற ஆதிவீட்டில்
பிலமான பஞ்சகர்த்தாள் பஞ்சமூர்த்தி
மூச்சப்பா நிறைந்ததொரு சுடர்கள் மூன்று
முனையான சுழிமுனைதான் மோட்சமென்று
பேச்சப்பா அந்திடமே சொந்தமாகி
புத்தியுட னந்திடத்தே பூசைபண்ணே. (470)

பண்ணப்பா பூசைவிதி கண்ணே சூட்சம்
பாலகனே சூட்சமென்ற சுடரில்நின்று
கண்ணப்பா ஆதாரமூலபீடை
நாதாந்த மூலமடா நந்திவீடு
முண்ணப்பா விண்ணான நந்திவீட்டில்
மோட்சமென்ற யட்சரத்தை சொல்லக்கேளு
விண்ணப்பா நிறைந்ததிரு நயனமேவி
மேவி மேன்மை போலு ரீங்ரீங் கென்றோதே (471)

ஓதுவது புருவநடு சுழியில் நின்று
வுத்தமனே நூத்தெட்டு வுருவேசெய்தால்
மாதுவய தோர் பூசை தானு
மார்க்கமுடன் சுத்தமதாய் சித்தியாச்சு
கோதுவது மூதில்லா ஆறாதாரம்
குருவுமான நந்திபதங்காணாலாகும்
நீதியுள்ள வாதார மீராறுக்குள்
நிரஞ்சனமாய் நின்றபூர ணந்தான்பாரே. (472)

பாரப்பா பூரணமாம் ஜோதிவாலை
பற்றிக்கொண்டு ஆதார பீடமானால்
நேரப்பா ஆதார பீடமீதில்
நிரஞ்சனமாய் நின்றதொரு வாலைதன்னை

வயித்திய காவியம்

காரப்பா கருணைஒளிக் கண்ணால்மேவி
கமலாஞ்சி மூர்தமைக் களித்துக்கொண்டால்
பேரப்பா பெற்றதொரு வாலைப்பெண்தான்
பெருகிநின்ற சோதியடா கண்கொள்ளாதே (473)

நேத்திர தியானம்

கண்ணான கண்மூடி விழியைத்தானே
கருணைவளர் சுழினையிலே கருத்தைவைத்து
விண்ணான நேத்திரத்தை விரலாலாட்டி
விளங்கிநின்ற ரவிபோலே காந்திவீசும்
ஒண்ணான காந்திப்பிர காசங்கண்டால்
உத்தமனே யப்பிறவி யோட்டிப்போச்சு
முன்னான சோதியிலே மனக்கண்சாற்றி
முத்தியுடன் சுத்தமதாய் தன்னைப்பாரே (474)

பாரப்பா சிவயோக வாலைப்பெண்தான்
பறிநின்ற திசைநாதந் தானே கொண்டால்
காலப்பா வாலையவ ளிருக்கும்வீடு
கருணைவளர் கேசரியாங் கமலந்தன்னில்
நேரப்பா சுழிமுனையாம் புருவமீதில்
நின்றிலங்குங் கற்பூர தீபந்தானாய்
சேரப்பா யத்தீபச் சுடரிலேதான்
தெளிந்து கொண்டு சிவஞானி சிவத்தைத் தேடே. (475)

தேடப்பா கண்மூடி விழியைத்தானும்
திருவான சுழிமுனையிற் கருத்தைவைத்து
நாடப்பா நேத்திரத்தை நாடிப்பாரு
நாதாந்தச் சுடரொளியை விரலாலாட்டி
கூடப்பா பிரபையொளி யென்னசொல்வேன்
கோடான கோடிரவி பிரபைவீசுஞ்
சூடப்பா யப்பிரப்பை தானே கண்டால்
சுகமான சிவரூபத் தான்தானாச்சே (476)

ஆச்சப்பா சிவகலை யிதுதானய்யா
ஆதியந்த மானதுவு மிதுதானய்யா
பேச்சப்பா பேசாத மவுனமையா
பெருகிநின்ற சாயுச்சிய பதவிஅய்யா
மூச்சப்பா நிறைந்ததிரு வாசியாலே
முத்திபெற நவக்கிரக சூட்சம்பார்த்து

தன்வந்திரி பகவான்

காச்சப்பா யக்கினிகொண் டாறாதாரங்
கருவான வெளிபூசை கண்கண்டேனே (477)

கண்டசிவ ரூபமிது தானய்யா
கருணைவளர் சாயுட்சிய பதியீதய்யா
விண்கண்ட வெளிபூசை சரிதைமார்க்கம்
வேதாந்த சுழிமுனையில் மேவிப்பாரு
முன்கண்ட காட்சியெல்லாம் அங்கேகண்டேன்
முத்தியுள்ள பிறப்பு மங்கே கண்டேன்
கண்கண்ட ஓங்கார வட்டந்தன்னில்
காணுதடா யெட்டுரெண்டுங் கருவாய்க்காணே. (478)

சத்தி பூசை

காணப்பா மானிடரே யுமக்காய்ச் சொன்னேன்
கருவான யெட்டு ரெண்டும் நாதவிந்து
பேணப்பா நாதவித்து சத்திசிவமாச்சு
பொழிகின்ற சத்திசிவந் தான்தானென்று
பூணப்பா யறிவதினால் மனமே பூண்டு
புத்தியுடன் சத்திசிவ பூசைகேளு
தோணப்பா தனையறிந்து பூசைசெய்ய
சொல்லுகிறேன் கருமான சூட்சந்தானே (479)

தானான சூட்சமது யென்னவென்றால்
தண்மையுடன் போம்வாய்வு சிவமதாக
மூனான யுட்புகுதல் சத்திசிவமாகு
முண்மையுட னிதுவறிந்து தன்னைப்பார்த்து
கோனான குருபீட புருவமத்தி
குருவாக அனுக்கிரக சுழினைமீதில்
வானான கேசரகம் தானேதானாம்
மனங்குவிந்து பூசைசெய்யும் வகையைக்கேளே. (480)

வகையான பூரகந்தான் வங்கென்றூது
மகத்தான கும்பகந்தா நங்கென்னூது
துகையான ரேசகந்தான் சிங்கென்றய்யா
சுத்தமுடன் யோக சாதனையைக்கேளு
பகையாத பூரகந்தா ளவங்கென்றாச்சு
பத்தியமுடன் றாநிருக்க மாத்திரைரெண்டாச்சு
கையாத ரேசகந்தான் நங்கென்றாக்கால்
நன்மையுள்ள மாத்திரை நாலுமாச்சே (481)

ஆச்சப்பா ரேவிகரு செயசிங்கென்றே
தானினைத்து மிகவூதி விடுதடாமல்
மூச்சப்பா னறிந்துயிப் படியே செய்தால்
முக்கியமடா சிவயோக பூசைதானும்
பேச்சப்பா பேசாமல் மவுனங்கொண்டு
பெருகிநின்ற வாசிதா ரணையைப்பற்றி
காரப்பா இப்படியே வருடமொன்றில்
கருணையோ சிவயோகங் கருதிப்பாரே (482)

பாரப்பா யிந்தவிதம் தேவிபூசை
பதறாமல் செய்துசிவ யோகம்பார்த்தால்
நேரப்பா நின்றதொரு மகனேயென்று
நினைத்தவரந் தான்கொடுப்பான் நிலையைபற்றி
சாரப்பா சிவயோகத் தாலே
சார்ந்திருந்து பூரணியை பூசைசெய்து
காரப்பா ஆதாரம் நன்றாய்ப் பார்த்து
கருத்து வைத்து பூசைசெய்ய கருவைக்கேளே. (483)

கேளப்பா மயேஸ்வரிக்கு வாம பூசை
கிருபையுடன் செப்புகிற வகையே தென்றால்
வாளப்பா யன்னமொடு பலகாரங்கள்
வார்க்கவசை நெய்யுடனே பரிமாணங்கள்
ஆளப்பா வெண்டயிரு மண்டத்தோடு
யருள்பெருக வஸ்துவோடு சுத்திவைத்து
காளப்பா தானறிந்து நைவேத்தியஞ்செய்து
கருணைபெற தூபமொடு தீபம்காட்டே (484)

காட்டடா தீபமொடு தூபங்காட்டு
கருணைபெற மானதமாம் தியானஞ்செய்து
மூட்டடா மணி வோசை சங்கினோசை
முழக்கடா செகண்டிகை நாதபூசை
கூட்டடா சங்கீத மேளவாத்தியம்
குமரவே நாதசின்ன சாமத்தட்டு
சூட்டடா சோடசமா முபசாரங்கள்
சுத்தமுடன் செய்துகெடந் தன்னைவாங்கே (485)

தாங்கியிரு மார்பினிடை யமைத்துமைந்தா
வணக்கமுடன் சிமரீங்கிலி யென்றேதான்
ஓங்கியொரு மனதாகத் தியானம் பண்ணி
நுட்பமாய்ப் புருவநடுக் கமலந்தேக்கி

தாங்கிமிக ஓங்ரீங் அம்மென்றோதி
சங்கையுடன் மூலகண பதியைப்பார்த்து
பாங்குபெற சிவசிவ யென்றமுர்தமூட்டி
பத்தியுடன் சற்குருவை நம்மென்றோதே (486)

ஓதிமனப் பூரணமாய் ஙமந்தாநீயு
முறைமையுடன் முதுகனி வர்க்கமெல்லாம்
நீதியுடன் மூலமதற் கற்சனையே செய்து
நேர்மையுடன் சீஷர்களை யருகழைத்து
சோதியென்ற புருவமதில் திருநீறிட்டு
சுகசீவ மருணகலை யமுர்தமீய்ந்து
ஆதிபரஞ் சோதிதன்னைத் தியானம் பண்ணி
யமுதுகனி வர்க்கமெல்லா மவர்கட்கீயே (487)

ஈய்ந்துமுக நிர்மால்லிய மெல்லாங்கூட்டி
யின்பமுடன் தீபதூபங்கள் காட்டி
ஆய்ந்துநின்ற அரதேசிபர தேசிக்கு
அன்னமொடு பலகார மன்பாயீந்து
சாய்ந்து மனம் போகாமல் நிலையில் நின்று
சங்கையுடன் வாசிதா ரணையைப்பற்றி
பாய்ந்துமிக வாதாரத் துள்ளே சென்று
பருவரியே காரணியம் பரையே யென்னே (488)

அம்பரமே யகண்டமே ஆதித்தாயே
ஆதியந்த மில்லாத அரூபத்தாயே
தம்பரையே தமரசமே மவுனஞானச்
சத்தானந் தவளி தாயேதாயே
நம்பரையே நாதாந்த கருணைவாழ்வே
நானென்றும் நீயென்று மில்லாதாளே
உம்பரையே வும்பருக்கு மார்க்குமெட்டா
ஓங்காரங்கடந்து நின்ற வொளியே யென்னே. (489)

ஒளியாகி ஒளிநிறைந்த வெளியுமாகி
ரெண்டாகி யுறுதியாகி
வளியாகி மதியாகி வானுமாகி
மவுனரஷக யோகமெனும் ஞானமாகி
தெளிவாகி தெளிவினுள்ளே வொளியுமாகி
சித்தாகி ரிஷிகள் சுத்த மனமுமாகி
நெளியாகி யளியாகி மேல்கீழாகி
நேத்திரத்துக் கடங்காது பூரணமாயெண்ணே (490)

பூரணமே கருணைவளர் பூதத்தாயே
போதமய மானசிவ யோகத்தாயே
காரணமே கண்ணிறைந்த கமலத்தாயே
கமலாட்ச பூரணமாய் நின்றமாதே
மாரணமாய் சகலசித்துந் தாயேதானாய்
மஹாமந்திர சுரூபமதாய் நின்றதாயே
காரணமாய் சகலவுயிர் வாசியாலே
தந்த சுத்தி சித்தமுமாய் தாயேகாணே (491)

காணுகின்ற கற்பூர தீபமாதே
கைலாச சுவாசமுள்ள கமலத்தாயே
பூணுகின்ற சத்தாகி சித்துமாகி
பூரணமா யானந்த மயமுமாகி
யூணுகின்ற சித்தசுத்த பூதமாகி
யோசையுள்ள நாதவிந்து களையுமாகி
தாணுகின்ற வெளியொளியின் சோதியாகி
சோதியெனு மாதியந்த வடிவுமாமே. (492)

வடிவாகி முடிவாகி மாலுங்காண
மன்னுயிர்க்குந் தானான மயமாகி
அடியாகி நடுவாகி வானுந்தாண்டி
அண்டசரா சரங்களெல்லாம் நினைவுமாகி
முடிவாகி நானாக நீயுமாகி
மூச்சாகி மூச்சற்ற பொருளுமாகி
விடிவாகிய சுத்தமுமாய் சுழியுமாகி
விளங்கிநின்ற யானந்தப் பொருளுமாமே. (493)

பொருளான வேதாந்த சித்தாந்தமாகி
புகழ்நின்ற மோட்சத்தின் பொருளுமாகி
அருளாகி அருளியந்த யண்டமாகி
அளவற்ற வாகாச ரூபமாகி
மருளாகி மருள்கண்டு யறிவுமாகி
மகத்தான சோதிசிவ காட்சியாகி
யிருளாகி வெளியாகி வெளியுமாகி
யேற்றபரி பூரணமா யிருந்தாய்நீயே. (494)

தாயாகி தந்தையுமாய் சேயுமாகி
சகலவுயிர் சீவகலை சீவனாகி
காயாகி கனியாகி ரசமுமாகி
கண்ணாகி விண்ணாகி காந்தியாகி

ஓயாத மணிகெவுன நாதமாகி
வொன்றுக்கு மடங்காத ஊமைபாகி
பேயாகி பேர்பெரிய கண்களாகி
பேரண்ட மானபூ ரணமேயெனனே. (495)

பூரணமாய் காரணமாய் புத்தியாகி
பொய்யில்லா வாக்காகிப் புகழாகியெங்குங்
காரணமாய் நிற்குணமாய் கருணையாகி
கண்ணடங்கா விண்ணாகி கருத்துமாகி
மாரணமா யதுவாகி யிதுவாகி
மருகியபின் னதுவற்று யிதுவுமற்று
தோரணமா மண்டமுதற் பதமுமாகி
சொல்லாகி குருவாகி நின்றவாறே (496)

குறியாகி வேதாந்த சாட்சியாகி
குணமாகி மனமாகி யதுவுந்தாண்டி
நெறியாகி ஆதியந்த சூட்சமாகி
நேருமன வாசிதிரு வாசியாகி
சிறிதாகி பெரிதாகி சீவனாகி
சீவநிலை காலாகி தெளிவுமாகி
பெரிதாகி யெட்டுடனே நாலுமாகி
பேரொளியாய் சித்தொளியாய் நின்றதாயே. (497)

தாயாகி ஆதார மூலமாகி
தன்னொளியும் விண்ணொளியும் தான்தானாகி
தீயாகி காற்றாகி வானுமாகி
செலமாகி மண்ணாகி மூலமாகி
வாயாகி கண்ணாகி மூக்குமாகி
வாய்நிறைந்த காற்றாகி பரிசமாகி
சேயாகித் திருவாகி செல்வமாகி
தேவிமனோன் மணியான கண்ணேபெண்ணே. (498)

கண்ணாகி கண்ணிறைந்த காட்சியாகி
கருணைவளர் கற்பூர தீபமாகி
உண்ணாகி சத்திசிவம் ரெண்டுமாகி
வுள்ளகலை ரவிமதியுஞ் சுடர்மூன்றுமாகி
விண்ணாகி வேதமென்ற நாலுமாகி
வேதாந்த பஞ்சகாத்தா ளஞ்சுமாகி
முன்னாகி சடாட்சரங்க ளாறுமாகி
முத்தியுள்ள வகைதோற்ற மேழுமாமே. (499)

ஆமென்ற யஷ்டாங்க மெட்டுமாகி
  ஆதிநவக் கிரகமுடன் தீட்சையாகி
பூமென்ற தீட்சதெனக் குயிராய்நின்ற
  வோங்கார ரீங்கார வெளியுமாகி
நாமென்ற நவ்வுடனே மவ்வுமாகி
  நலமான சிவ்வுடனே வவ்வும் யவ்வாய்
தாமென்ற சவ்வுடனே கிலியுமாகி
  சகலமுமா சிலதாகி நின்ற தாயே. (500)

ஆறுவகை தியானம்

தாயாகி மூலக் கணபதியுமாகி
  தன்மையுள்ள நான்முகனு மாலுமாகி
தீயான ருத்திரனும் வேதசனாகி
  சிவசிவா சதாசிவனும் மனோன்மணியுமாகி
ஓயாத முச்சுடரும் ஒளியுமாகி
  ஒன்றுமற்று நின்றபொருள் தானுமாகி
வாயாற ஓதுகின்ற மனத்திறமுமாகி
  மந்திரமெல்லாம் அடங்குஞ் சோதிதானே. (501)

சோதி சு[illegible]ரான முத்திரை

சோதியென்ற மயேஸ்வரியை பூசை செய்ய
  சுகமான முத்திரை சொல்லக்கேளு
ஆதியென்ற முத்திரையை யார்தான் காண்பார்
  அருள் பெருரு முத்திரையை மனதில் கொண்டு
நீதியுடன் ஆறுவகை முத்திரையைக் கேளு
  நிசமான மானிடர்கள் முத்திரைதானொன்று
ஊதியதோர் அபான முத்திரைதானொன்று
  உத்தமனே யோனிமுத்திரை தானொன்றே. (502)

ஒன்றான திருவிணி முத்திரை தானொன்று
  உறுதியுள்ள சோவினி முத்திரைதானொன்று
நன்றான மோகினி முத்திரைதானொன்று
  நாட்டமுடன் ஆறுவகை முத்திரையை மைந்தா
குன்றாத சிவயோக சற்குருவினாலே
  குறியறிந்து ஆறுவகை முத்திரையைப் பெற்று
நின்றாடு மயேஸ்வரியை பூசை செய்து
  நீமகனே ஆறுவகை முத்திரையைச் சாற்றே. (503)

அபான முத்திரை

சாற்றுவது சுவகரண முத்திரையைக் கொண்டு
சங்கையுடன் உளமென்று தியானஞ்செய்யில்
பார்த்திபனே சதாகோடி மந்திரமும்சித்தி
சகலகலை சாஸ்திரமுஞ் சித்தி
தோற்றியதோர் ஆதார மூலஞ்சித்தி
திருவாசி ஆனதொரு வாசிசித்தி
தோத்திரமாய் நின்றதொரு பூசைசித்தி
சுகமான ஆறான முத்திரையுஞ்சித்தே. (504)

சித்தான அபான முத்திரையைச் செய்து
தீர்க்கமுடன் கிலியென்று தியானஞ்செய்ய
வத்தான பூரணமாய் சிவயோகஞ்சித்தி
மகத்தான கற்பூர தீபஞ்சித்தி
வித்தான பிரமனொரு சரஸ்பதியுஞ்சித்தி
வேத மயமான சிவயோகஞ்சித்தி
சத்தான அபான முத்திரையினுடமகிமை
சங்கையுடன் கண்டுசிவ யோகஞ்செய்யே (505)

செய்யப்பா யோனி முத்திரையைக் கொண்டு
தீர்க்கமுடன் றீங்கென்றே தியானஞ்செய்யில்
மெய்யப்பா தேவாதி தேவர்களுஞ்சித்தி
மேலான அண்டமொடு புவனஞ்சித்தி
மய்யப்பா மையமென்ற சுழினைசித்தி
மாலொடு லட்சுமியும் தனங்கள் சித்தி
பையப்பா யோனி முத்திரையைப் பெற்று
பத்தியுடன் சிவயோகம் பணிந்துகாணே. (506)

மகா திருவினி முத்திரை

காணவே திருவினி முத்திரையைக் கொண்டு
கருணையுடன் வங்கென்று தியானஞ்செய்யில்
பூணவே ருத்திரர் முதல் சகல செந்தும்
பூலோக ராசரொடு வசியமாகும்
தோணவே சந்தான சவுபாக்கியங்கள்
சுத்தமுடன் ஐந்தறிவுஞ் சித்தியாகும்
பேணவே ருத்திரியும் சித்தியாகும்
பிலமான திருவினியால் சித்திபாரே. (507)

சமஷ்டி சோபினி முத்திரை

பாரப்பா சோபினி முத்திரையைச் செய்து
பத்தியுடன் அம்மென்று தியானஞ்செய்ய
நேரப்பா சொல்லுகிறேன் சர்வலோகம்
நிஜமான ஆதாரஞ் சித்தியாகும்
மேரப்பா மேருகிரி தீபஞ்சித்தி
மெய்யான மயேஸ்வரனு மீஸ்பரியுஞ்சித்தி
காரப்பா சோபினி முத்திரையினாலே
கண்ணடங்கா போதசிவ யோகமாமே. (508)

மோகினி முத்திரை

ஆமப்பா மோகினி முத்திரையைச் செய்து
அருள்பெருகும் புருவமதில் மனக்கண்சாற்றி
ஓமப்பா யகாரமுடன் உகாரங்கூட்டி
உத்தமனே மகாரமென்ற மவுனத்தேகி
காமப்பால் கானற்பால் சித்தியாகும்
கருணைதரு மனோன்மணியுஞ் சித்தியாகம்
வாமப்பால் பூரணமுஞ் சித்தியாகம்
மகத்தான நால்பதமுஞ் சித்திய.மே (509)

சிவாய குரு முத்திரை

சித்தியுள்ள முத்திரைகள் ஆறுக்குந்தான்
சிவாயகுரு முத்திரையைச் சொல்லக்கேளு
பத்தியுடன் சொல்லுகிறேன் புருவமத்தி
பதிவாக இருகரமும் ஒன்றாய்க் கூட்டி
சுத்தமுடன் லாடவிழி கண்ணின்நேரே
தொழுதுமனம் நினைத்தபடி சுத்தமாக
முத்தியுடன் வரங்கொடுக்க வேண்டுமென்று
மோனமுடன் மனோன்மணியைப் பூசைபண்ணே. (510)

பண்ணப்பா பூசைவிதி சித்தரோடுமுனிவர்
பாடினார் கைமுறைகள் அறியாமல்தான்
நண்ணப்பா சட்டைமுனி நாதர்தானும்
நன்மையுடன் பூசைவிதி நன்றாய்ச்சொன்னார்
முண்ணப்பா அந்தமதில் நன்றாய்ச்சொன்ன
முடிவான சவிமிய சாகரத்தைப்பாரு

கண்ணப்பா துலங்குவது போலேநல்ல
கருவான பூசைவிதி யளித்தார் காணே. (511)

முத்திரைக்கு விபரம்

காணவே முத்திரைக்கு விபரஞ்சொல்வேன்
கைலாசம் இடங்கொள்ளா தென்றுசொல்லி
பூணவே ஆறு முத்திரையில் மைந்தா
புனிதமுடன் மூன்றுவகை முத்திரையைக்கேளு
தோணவே சித்தாதி நூல்கள் தோறும்
சுகமாக முத்திரையைச் சொன்னதல்லால்
பேணவே விபரமது சொல்லவில்லை
பேரான இக்காவியம் பாருபாரே (512)

பாரடா முத்திரையைச் சொல்வேனப்பா
பரிவாக இருகையும் கூப்பிக்கொண்டு
நேரடா தற்சனி விரல்விரித்து
நேரான அங்குட்ட மத்தியிலும்படவே
காரடா முத்தியிலும் கனுட்டைமுனைபடவே
கையறிந்து கொண்டதினால் மோகினி முத்திரையாம்
சேரடா முத்திரையை அறிந்துகொண்டு
தீர்க்கமுடன் ஓமெனறு செபித்துக்காணே (513)

திருவினி முத்திரை

காணவே திருவினி முத்திரையைக்கேளு
கை கூட்டி தர்ச்சினையிரு விரல்விரித்து
பூணவே மத்திமை சுழிகை இம்மூன்றும்
போதமுடன் விரலமுந்திரர்வினை முத்திரையாம்
பேணவே முத்திரையை குருவருளால் கண்டு
பிலமாக வங்கென்று தியானித்தாக்கால்
தோணவே சகலசித்தி தானேயுண்டாய்
சுத்தமுடன் வசிகரமாய் வாழுந்தானே. (514)

யோனி முத்திரை

தானென்ற யோனி முத்திரையைக் கேளு
சங்கையுடன் சொல்லுகிறேன் அங்குட்டம்ரண்டு
பூனென்ற கனுட்டிகையாடி விரல்படவே வைத்து
பொருந்தரெண்டுங் கைகூப்பி பிடித்துக்கொண்டால்
தேனென்ற யோனி முத்திரையுமாச்சு

செம்மையுடன் முத்திரையை தீர்க்கம் பண்ணி
ஊனென்ற ரீங்கார மனதிற்கொண்டு
உறுதியுடன் தான் செபிக்க தேவதைகள் சித்தே. (515)

சித்தமுடன் பூசைவிதி தன்னில்மைந்தா
தீர்க்கமுடன் பதினாறு முத்திரையைச்சொன்னேன்
சுத்தமுள்ள முத்திரைகள் தன்னிலேதான்
சுகமாக ஆறுவகை முத்திரைகள் நன்று
பத்தியுடன் ஆறுவகை முத்திரையினாலே
பகுத்தறிந்து ஆதார தெரிசனைகள் பெற்று
வித்தான பிறவிதனை நன்றாய் நீக்கி
வேதாந்த பூரணமாய் விளங்கு முத்தி (516)

ஐந்து விரலுக்கும் பெயர்

முத்தியுள்ள கரத்தின் விரல் மகிமைதன்னை
முக்கியமுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
பத்தியுள்ள அங்குட்டம் பெருவிரலால் நிற்கும்
பதிவாக அடுத்தவிரல் தர்ச்சினையாமைந்தா
சித்தமுள்ள நடுவிரல்தான் மத்திமையாநிற்கும்
திறமான பவுத்திரந்தான் அனாமிகையாய் நிற்கும்
சுத்தமுள்ள சுண்டுவிரல் கனுட்டிகையாய்நிற்கும்
சுகமாக இதையறிந்து முத்திரையுஞ் செய்யே (517)

ஓங்காரப் பொருள்

செய்யப்பா பூசைவிதி அந்தமாகும்
சிவசிவா ஆதியந்தம் ஆர்தான் காண்பார்
மெய்யப்பா ஆதியிலே அமைத்தவிதி மைந்தா
மெஞ்ஞான மூலமடா ஓங்காரம்தான்
மையப்பா ஓங்காரம் ரவியுமாச்சு
மகத்தான மகாரமடா மதியுமாச்சு
பையப்பா ரவிமதியும் தானேநின்று
பார்க்கவிரு கண்காட்சி தானுண்டாச்சே. (518)

ஆச்சப்பா அமைத்தவிதி அதுதானாச்சு
ஆதியந்த பூரணமும் இதுதானச்சு
மூச்சப்பா நின்றரவி அதுதானாச்சு
மூவுலகு மாண்டவிடம் இதுதானாச்சு
காச்சப்பா அந்தவிடம் சொந்தமாக
காலறிந்து மேலான கமலக்கண்ணே

தன்வந்திரி பகவான்

பாச்சப்பா காலறிந்து இடைபின்னாக
பகுத்தறிந்து மூலமதில் பதிவாய்நில்லே (519)

பதிவான இடமதுதான் புருவமத்தி
பரஞான கேசரியா ளிருக்கும்வீடு
விதியான வீடறிந்து கெதியென்றெண்ணி
மெய்ஞ்ஞான அமுர்தரசங் கொண்டாயானால்
மதியான சந்திரகலை ரவியிற்சென்று
மகத்தான சோதிப் பிரகாசங்காணும்
கெதியான சோதிப் பிரகாசங் கண்டால்
கேசரத்தை ஆளுகின்ற வாசிதானே (520)

வாசியென்ற சிவயோகம் தனக்குமைந்தா
மகத்தான யகாரமுள்ள முப்புசொல்வேன்
தேசியென்ற உப்புடனே காரம்பூரம்
திறதாக மூன்றுமொன்றாய்க் கல்வத்திட்டு
ஊசியென்ற உப்புநீர் தன்னாலாட்டி
உறுதியுடன் தானெடுத்து வட்டுபண்ணி
மாசியென்ற கசிவகல புடத்தைப்போடு
மகத்தான சுன்னமிது காரந்தானே. (521)

முப்பூச் சுண்ணம்

தானென்ற யகாரமடா அண்டசத்து
தருவான பூமியிட நாதசத்து
வாவென்ற வீரமடா பூரசத்து
மார்க்கமுடன் சத்துவகை மூன்றுங்கூட்டி
மானென்ற கல்வத்தில் நன்றாயாட்டி
மனதாரக் கவிழ்த்துவொரு புடத்தைப்போடு
ஊனென்றச் சத்துவகை மூன்றுமொன்றாய்
உடன்சேர்ந்து உருகியது சுன்னமாச்சே (522)

மூன்று வகைச் சுண்ணம்

ஆச்சப்பா இன்னமொன்று சுன்னம்சொல்வேன்
ஆதியென்ற பூரமுடன் நாதஞ்சேர்த்து
காச்சப்பா களிப்பான துருசுகூட்டி
கல்வத்தில் பழச்சாற்றால் நன்றாயாட்டி
மூச்சப்பா தானிகு காவியிற்போட்டு
முள்ளவனைத் தாற்ப்பணிந்து புடத்தைப்போடு

நீச்சப்பா நிலையாத காரமாச்சு
    நிசமான காரம்வெகு சுன்னமாச்சே. (523)

பாரப்பா மூன்றுவகை சுன்னமொன்றாய்
    பருவமாய்க் கல்வத்தில் வைத்துக்கொண்டு
காரப்பா ஆறுவகை நீர் தன்னாலாட்டி
    கருணைபெற வழித்துருட்டி ரவியில்போட்டு
சாரப்பா நீர்வத்த நன்றாய்க் காய்ந்தால்
    சற்குருவைத் தான்பணிந்து புடத்தைப்போடு
வீரப்பா தாெனாடுங்கி நீறிப்போகும்
    வெகுசுருக்கு மூன்று வகை சுன்னந்தானே (524)

தானான மூன்றுவகை ஒன்றாய்நின்று
    தன்மையுட நீறியது காரமாச்சு
ஊனான காரமுள்ள சுண்ணாம்போடே
    உத்தமனே நவச்சாரம் வீரம்பூரம்
கோனான குருவருளால் நாலும்சேர்த்துக்
    கூர்மையுடன் கல்வமிதில் பொடித்துக்கோண்டு
வானான பீங்கானில் வைத்து மைந்தா
    மகத்தான சந்திரனில் வைத்துக்காணே. (525)

முப்புச் செயநீர்

காணவே சந்திரனில் வைத்துப்பாரு
    கசிந்துமிகத் தானூரில் கெங்கையாச்சு
தோணவே கெங்கையேன்ற செயநீர் தன்னை
    சுத்தமுள்ள பீங்கானில் வடித்துவைத்து
பேணவே சரக்குகளில் சுருசுருக்கா
    பேசாமல் தானடங்கி கட்டிப்போடு
மூணவே உபசாரங்கள் நீறிப்போகும்
    முருமையுள்ள சத்துவகை மெழுகுமாமே (526)

ஆமப்பா காரமுதல் சாரமெல்லாம்
    அருமையுள்ள செயநீரால் மெழுகுமாகும்
காமப்பால் கனப்பால் கசிந்துநின்று
    கருவான செயநீரை யார்தான் காண்பார்
சோமப்பால் கண்டவனே சுருதிக்காண்பான்
    சொல்லாத முறைதானே செய்வானப்பா
நாமப்பா வென்றகுறி தன்னைநீயும்
    நாதாந்த பூரணமாய் நாடிப்பாரே. (527)

தன்வந்திரி பகவான்

நாடிப்பார் மூன்றுவகை சுன்னந்தன்னை
நன்மையுடன் கைமுறையாய்ச் செய்துகொண்டு
தேடிப்பார் சரக்குகளை நன்றாய்க்கண்டு
திறமான நவலோகம் தங்கமாகும்
சூடிப்பார் தங்கமென்ற அங்கந்தன்னில்
சோதிமய மானசிவ அண்டமேரை
வாடிப்பார் தவையாமல் சொல்லக்கேளு
மகத்தான ருத்திரரை வணங்கித்தானே (528)

மூன்றுவகை சுண்ணத்தையும் கைம்முறை மாறாது செய்து கொண்டு சரக்குகளை நன்றாக கண்டு முறை செய்தால் நவரோகம் தங்கமாகும், தங்கம் என்ற உடலில் சோதி மயமான சிவ அண்டமேரை ருத்திரரை வணங்கி கூறுகிறேன்.

வேதைக்கு ஆறுவகை சுத்தி

தானென்ற பூரணமாம் அண்டசத்து
தன்னைக் கண்டார் விண்டதில்லை கல்பாஷாண
மூனென்ற உறுதியுள்ள கல்பாஷாணம்
உண்மையுள்ள வீரமடா லிங்கந்தாரம்
போனென்ற பிருதியியு மப்புஞ்சேர்த்து
புத்தியுடன் ஆறுமொன்றாய் கல்வத்திட்டு
தூனென்ற மூன்று சுன்னம் செயநீராலே
சுத்தமுடன் அரைத்துசுத்தி பண்ணிப்பாரே (529)

பூரணமான அண்டசத்தைக் கண்டவர் விண்டதில்லை, கல்பாஷாணம், வீரம், லிங்கம், அரிதாரம், பிருதிவி, அப்பு, இவை ஆறும் ஒன்றாய் சேர்த்து கல்வத்திலிட்டு மூன்று சுண்ண செயநீரால் அரைத்திடு கத்தியாகும்.

சுத்திபண்ணும் வகையிதுவே சொல்லக்கேளு
சுகமாகத் தானரைத்து வட்டுபண்ணி
பத்தியுடன் சட்டிநடு வைத்துச்சாம்பல்
பதித்துமிகத் தீயெரித்து பதத்தைப்பாரு
சித்தியுடன் அனலெழும்பு கட்டிப்போகும்
தீர்க்கமுடன் தானெடுத்து செப்புக்கேளு
புத்தியுடன் செம்பிலரை வாசிதாக்கி
பூரணமாய் வெள்ளியிலே பூட்டிப்பாரே (530)

மேற்படி வகையில் அரைத்து வட்டு செய்து சட்டியில் சாம்பலிட்டு அதன்மேல் வட்டுவைதது அதன்மேல் சாம்பலிடு, அடுப்பேற்றி பதமாக தீ எரித்துப் பார்க்க அனல் எழும்பி கட்டிப்போகும். இதை அரைபங்கு அளவை வெள்ளியில் சேர்த்துருக்கு.

பார்க்கையிலே வெள்ளி தங்கமயமாய்ப்போச்சு
பருநான கேசரியின் வாசத்தாலே
சேர்க்கையுடன் சிவயோகம் தங்கிப்போச்சு
ஏகாந்த அஷ்டகர்மம் சித்தியாச்சு
சேர்க்கையுடன் ஆதார மூலபீடம்
திருவான பீடமதை தியானம் பண்ண
தீர்க்கமுடன் நீயிருந்து வாசியேறி
செகதீப மானசெயல் தான்தானாமே (531)

உருக்க வெள்ளி தங்கமயமாகும், சேகரியின் வாசத்தால் சிவயோகம் தங்கிப்போகும், அஷ்டகர்மம் சித்தியாகும், ஆதார மூலபீடத்தை தியானம் செய்து வாசியேற்றி செகதீபமான செய்கை தான் தானாகும்.

தானான ஆதார ரூபந்தன்னை
சங்கையுடன் தானிருந்து தியானஞ்செய்ய
தேனான மானிடரே சொல்லக்கேளும்
தேகசுத்தி யுயிர்சிலமாய் தெளிந்துகொண்டு
வானான லாடமதில் மனக்கண்வைத்து
மனங்கனிய ஓம்ரீங் அங்கென்றாக்கால்
கோனான ஆதார பூசைதானும்
கோடான கோடி செய் தபத்துக்கொப்பே (532)

அம்மா வாசி

ஒப்பென்ற உறுதிதனை சொல்லக்கேளு
ஓமென்ற பிரணவமே மூலபீடம்
செப்பென்ற பீடமதில் றீங்காரவிலை
சென்றிருந்தாள் காரமென்ற சிவனார்கூட
கொப்பென்று தானெழுந்து வாசியாகி
கொண்டுநின்ற திருவாகி அம்மாவாசி
அப்பென்ற ஆதார அம்மாவாசி
அதையறிந்து சிவயோக அங்கம்பாரே. (533)

பாரப்பா சிவயோக அங்கம்பார்க்க
பதிவாக றீங்கென்றார் பூரகமேயாகும்
நேரப்பா அம்மென்றார் கும்பகமேயாகும்
நேர்மையுடன் நிலையறிந்து நேசம் வைத்து
சாரப்பா வோவென்று ரேசகமே செய்யில்
தாட்டாதே வாசி தானே தாங்கும்
சேரப்பா வாசியது தங்கும் வீட்டில்
சென்றறிந்து அடிநடுவு முடியைக்காணே (534)

தன்வந்திரி பகவான்

காணவே ரீங்காரம் நாலமாச்சு
கருணைவார் காரமடா விந்துவாச்சு
பூணவே ஓங்காரம் வாசியாச்சு
புத்தியுடன் தன்னறிவால் தன்னுட்பாரு
தோணவே தன்னறிவால் பார்க்கும்போது
சோதியென்ற ரவிமதியும் சுடர்மூன்றாச்சு
பேணவே சுடர் மூன்று தன்னுள்பார்க்க
பேசாத மவுனமென்ற கற்பமாச்சே (535)

ஓங்கார சத்தியம்

ஆச்சப்பா கற்பமென்ற அரிவைக்கேளு
ஆதியேன்ற வோங்கார சத்தியாச்சு
நீச்சப்பா சத்தியேன்ற ஓங்காரந்தன்னை
நிலையறிந்து மாலையிலே நேர்மையாக
பேச்சப்பா தானிறைந்த மவுமென்று
பெருமையுடன் உருமையதாய் பூசித்தார்கள்
மூச்சப்பா தானிடம் விட்டமையாதையா
மூர்க்கமுள்ள வோமசத்தி முத்திபாரே. (536)

பாரப்பா ஓமசத்தி பூசை சொன்னேன்
பதிவாக யகாரமென்ற சிவத்தின்பூசை
நேரப்பா நிலையறிந்து யகாரமான
நேரான சிவமதுவும் விந்துவாச்சு
காரப்பா விந்துவென்ற சாரந்தன்னை
கருணையுடன் பூரணமாய் உதயந்தன்னில்
தேரப்பா தானிருந்து உருவே செய்தால்
சிதம்பரத்தி னேல்கையிலே தீபமாமே. (537)

ஆமப்பா யகாரசிவ பூசைசொன்னேன்
அறிந்துமன தறிவாலே அறிவைப்பற்றி
நாமப்பா வென்றமதந் தன்னைநீக்கி
நடுவான ரீங்கார வாலைதன்னை
தாமப்பா தன்னகமே யென்று போற்றி
சதாநந்த பூரணமாய் பூசைசெய்தால்
வாமப்பா கொண்டகெதி தன்னாலந்த
மகத்தான மடபதிதான் றீங்குந்தானே. (538)

தானென்ற மடபதிதான் தான்தானாகத்
தன்மையுடன் பூரணத்தில் சாற்றக்கேளு
வானென்ற வடிவுடைய அண்டந்தன்னில்
மகத்தான அமுர்தரச போகந்தன்னை
கோனென்ற குருவருளால் தன்னை வாங்கிக்
குறியான சத்திசிவ நாதங்காட்டி
தேனென்ற கற்பூர தீபங்காட்டி
திருவான பதிநோக்கிப் பூசைபண்ணே (539)

பண்ணப்பா பஞ்சகண தீட்சைமார்க்கம்
பாலகனே தானறிந்து பதிமேற்கொண்டு
விண்ணப்பா தானறிந்து வாசியாலே
வேதாந்த முச்சுடருக்கு அப்பாலேகி
யுண்ணப்பா தன்னறிவால் மனக்கண்கொண்டு
வோமுடித்தப் பட்டணத்தை உறுதியாக
கண்ணப்பா தானறிந்து தன்னைப்பார்க்க
கசடறவேதான் சீயங்கம் தன்னைப்பாரே (540)

அங்கமுட நிறைபஞ்ச பூதமும்நசித்து
அணுகிநின்ற பஞ்சமல ஆதாரம்நசித்து
சங்கையுள்ள சீவகளை புரியட்டம் நசித்து
சுரக்கிரமமா மவத்தையுடன் சராசரங்கள் நசித்து
பொங்குபுகழ் ஏழுவகை பூசைபல நசித்து
போக்கான சரிதைமுதல் அஞ்ஞானவரை நசித்து
நங்கை முதற் போதவரை இருபதுவும் நசித்து
நானென்ற சொல்லதனை நசிப்பதுவும் நாடே (541)

நாட்டமுட நிறைகுறி காண்பதுவும் நசித்து
நாதாந்த நாதமுடன் விந்துவும்நசித்து
தேட்டமென்ற பேதமுடன் சிவயோகம்நசித்து
திருவான கோவில்களு மந்திரங்கள்யாவும்
ஆட்டமென்ன ஆங்காரக் கூத்ததுவும்நசித்து
அஞ்செழுத்து மூன்றெழுத்து மொன்றுமிக நசித்து
வாட்டமென்ற மயக்கமுடன் மகிழ்ச்சிகளும் நசித்து
வந்ததுவும் போனதுவும் நசிப்பதுவே நாட்டம். (542)

நாட்டமுட நயனமெல்லாம் கண்டதெல்லாம்நசித்து
நடுவணையு மடமுடியும் நசிப்பதுவும் நசித்து
ஆட்டமென்ற ஆகாச வாய்வுகளும் நசித்து
அடர்ந்தெழுந்த அங்கியு மப்பதுவும் நசித்து

தேட்டமென்ற பிருதிவியு மாறிமதியும் நசித்து
திருகிநின்ற சுழிமுனையு மறுசுவையும் நசித்து
ஓட்டமென்ற பாகமது பிறப்பு இறப்பும் நசித்து
ஒன்றுமற்ற நிருமயமே ஒடுங்குவது நாட்டம். (543)

ஒடுங்குவது காண்பனென உண்ணுவதும் நசித்து
உறுதியுடன் ஏமமோடு நியமமது நசித்து
அடங்கிநின்ற பிராணாய ஆசனமும் நசித்து
அரகரா பிரத்தியா காரமது நசித்து
துடங்கிநின்ற தாரணையும் தியானமது நசித்து
சுகசீவ பிராணகளை சமாதிகளும் நசித்து
திடங்கொண்ட தூலமுடன் சூட்சமுமே நசித்து
சிவசிவா நிருமயமாய் நிற்பதுவே நாட்டம் (544)

பூசைமுறை சொல்லுகிறேன் மைந்தாமைந்தா
பூரணமாம் கும்பநடுக் கும்பந்தன்னில்
நேசமுடன் மதுரரசக் கனிகள் வைத்து
நேமமுடன் தூபமுடன் தீபங்காட்டி
ஓசையுள்ள மணிநாதஞ் சங்குநாதம்
உத்தமனே செகண்டிகை செகநாதந்தான்
ஆசையுடன் உபசாரஞ் செய்துநல்ல
ஆனந்த பூரணியை பூசைபண்ணே (545)

பண்ணப்பா பூசைநவ கும்பபூசை
பத்தி கொண்டு சித்தமதாய் சத்திபூசை
விண்ணப்பா நிறைந்ததிரு மந்திரவாளாய்
விளங்குகின்ற வேதாந்த வாலைபூசை
கண்ணப்பா நிறைந்ததிரு வாமபூசை
காமகளை பூரணமாய் நின்றபூசை
முண்ணப்பா செய்தவத்தால் பலிக்கும் பூசை
முத்தியுள்ள பூசையடா சித்திதானே (546)

சித்திந்த பூசையடா தேவிபூசை
திக்கெட்டும் வெற்றியடா இந்தபூசை
பத்தித்த பூசையடா தப்போயில்லை
பதியறிந்து மந்திரவாள் தன்னைநீயும்
புத்திக்குள் இதையறிந்து பூசைபண்ண
பூமிமுதல் ஆகாச மகுடம் பெற்றாய்
முத்திக்குள் முத்தியடா அறிவைக்காரு
முன்னவன்தான் கண்ணிறைந்த மூலந்தானே. (547)

வயித்திய காவியம்

தானென்ற மூலமடா ஏகமூலம்
தயவான கும்பநவ மூலமெல்லாம்
வானென்ற புஷ்பமடா சொர்ணபுஷ்பம்
வகையுடனே திசைகள் எட்டும் கும்பம்சேர்த்து
கோனென்ற கும்பநடுக் கும்பந்தன்னில்
குருவான தங்கமது களஞ்சிவாங்கி
பூனென்ற தகடதிலே புவனமாது
பூரணியாள் அட்சரத்தை பொருந்தநாட்டே. (548)

சகலத்துக்கு மந்திரவாள்

நாட்டமென்ற நடுவான கும்பந்தன்னில்
நாதாந்த புவனை சக்கரத்தைச் சாத்தி
தேட்டமென்ற கும்பநவ கும்பமெல்லாம்
சிவசிவா பூசைமுறை செயமாய்ச்செய்து
ஆட்டமென்ற அம்பலவாள் தன்னைநீயும்
அங்கனையே பூரணமாய்த் தியானம்பண்ணி
வாட்டமில்லா வாசிமலர் வாசத்தாலே
வளர்பிறையும் தேய்பிறையும் பூசைபண்ணே (549)

பண்ணடா பூசைமுறை ஆசைவைத்து
பதியான மணங்கொண்டு மிகப்பூசைசெய்தால்
முன்னடா நின்றுதிரி புவனைதானும்
மூன்றுலகும் தன்வசமாய் ஆள்வதற்கு
கண்ணடா கருணைவைத்து நிறனீரிட்டு
கமலமலர் அமுர்தமதை கனிவாயூட்டி
விண்ணடா தானிருந்த மந்திரவாளை
வேதாந்த பூரணமாய் வாவிப்பாளே. (550)

பாரான தன்வந்திரி சகலத்துக்கும்
பதிவான மந்திரவாள் சூட்சங்கேளு
நேரான மூலமடா வடிவுமாச்சு
நிசமானரீங்காரம் வேலுமாச்சு
கூறாது வடிவேலா மந்திரவாளை
கூர்மையுடன் சொல்லுகிறேன் வோங்ரீங்கென்று
மாறாத மவுனமதாய் தியானம்பண்ணி
மார்க்கமுடன் திசையான வகையைப்பற்றே. (551)

பீடை போக

பத்திமனங் கொண்டுபரி பூரணமாய்நின்று
பரஞான சேகரமே வாசமாகி

தன்வந்திரி பகவான்

சுத்தமுடன் வோம்ரீங் வசிவசியென்றோத
சூழ்ந்துநின்ற சத்துருக்கள் வசியமாகும்
சித்தமுடன் வோம்ரீங் நசிநசியென்றோதச்
சிவந்துவரும் பீடையெல்லாம் அகன்றுபோகும்
சுத்தமுடன் வோம்ரீங் வசியென்றோத
சகலகலை பாக்கியமுந் தானுண்டாமே. (552)

உண்டாகும் ஓம்ரீங் மசிமசி யென்றோத
ஒடுங்காத காலகடி விஷங்கள் நீறாம்
தங்காமல் வோம்ரீங் அங்கென்றேதான்
தட்டடா மிருகமெல்லாம் தானேயோடும்
நன்றாக சொன்னதிந்த மந்திரவாளை
நாட்டமுடன் பூரணமாய் பூசைபண்ணி
நின்றாட ஏதொரு காரியத்துக்கெல்லாம்
நிஜமான மந்திரவாள் வோம்ரீங்கெண்ணே (553)

பாக்கியமுண்டாக

எண்ணுவது முண்ணுவது மந்திரசூட்சம்
ஏகாந்த சூட்சமதை என்னசொல்வேன்
விண்ணிறைந்த சூட்சமடா அம்மாவாசி
வேதாந்த வாசிசிவ விந்துநாதம்
கண்ணிறைந்த போதமடா கமலபோதம்
கருணைவளர் பூரணமாய் நின்றநாதம்
விண்ணில்விளை யாடுகின்ற நாதந்தன்னை
வித்தகனே மெய்த்தவமாய் கண்டுபாரே (554)

கபால பீனிசத்திற்குத் தைலம்

பாரப்பா மானிடர்க்குக் கபால பீனிசம்
கண்டவுடன் வீடுவிட்டுப் போவதற்கு
நேரப்பா குங்குமப்பூ கஸ்தூரிதானும்
நேரான தேங்காயின் நெய்யினாலே
காரப்பா இருசாமம் காய்ச்சியேதான்
கனமான மெழுகுபதம் தன்னில்தாக்கி
வாரப்பா நாசியிலே இருதமர்க்குள்ளும்
வாகாக மண்டலந்தான் புகட்டிடாயே. (555)

கபால பினீசம் நீங்குவதற்கு மருந்து கூறுகிறேன் குங்குமப்பூ, கஸ்தூரி, இவைகளை தேங்காய் எண்ணெயிலிட்டு இரண்டுசாமம் காய்ச்சி மெழுகு பதமாக எடுத்து மூக்கின் இரண்டு துவாரங்களிலும் விடுவாயாக. இவ்வாறு ஒரு மண்டலம் புகட்டுவாய்.

புகட்டிடவே பீனிசங்கள் எங்கே போச்சு
　　புகழான தசையடைப்புக் காந்தலெங்கே
அகட்டிடவே கபாலவலி கபாலப்புத்து
　　அப்பனே தீருமடா இந்த நெய்யால்
நிகட்டிடவே இப்பாகம் யாருஞ்சொல்லார்
　　நேரான தன்வந்திரி யானுரைத்தேன்
தகட்டிடவே இன்னூல்தான் குருநூலப்பா
　　தப்பாது தப்பாது திண்ணந்தானே. (556)

மேற்படி வகையில் செய்ய பினீசங்கள் நீங்கும், சதையடைப்பு உஷ்ணம், தலைவலி, தலைப்புற்று இவைகள் இந்த நெய்யால் நீங்கும் இப்பாகத்தை யாரும் கூறவில்லை. தன்வந்திரியாகிய நான் கூறிவிட்டேன், இந்த காவிய நூல் குருநூலாகும். இதிலுள்ள முறைகள் தப்பாது.

விஷமுஷ்டித் தைலம்

திண்ணமா மானிடர்க்குத் தைலமொன்று
　　சூட்டுகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
வண்ணமா மருதோன்றி சிறுகுறிஞ்சான்
　　மாசற்ற அறுகன்வேர் பாம்பு கொல்லி
கண்ணமாம் சீதேவி மஞ்சள்தானும்
　　கனமான சிற்றகத்தி தின்னாப்பாளை
எண்ணமாம் வெள்ளருகுக் கடுகுரோணி
　　இயலான செம்பரத்தை சுரைகூட்டே (557)

தைலம் ஒன்று கூறுகிறேன், மருதோன்றி சிறு குறிஞ்சான் அறுகண்வேர், சிறியாநங்கை, சீதேவி, மஞ்சள், சிற்றகத்தி, ஆடுதின்னாப் பாளை, வெள்ளருகு, கடுகரோகணி, செம்பரத்தை, சுரை, மற்றும்.

கூட்டியே மலைமல்லி தேமாதானும்
　　குணமான புலிதொடக்கி குப்பைமேனி
நீட்டியே அத்தியுட புலிதொடக்கி
　　நேரான செம்புளிச்சை தகரைதானும்
வாட்டியே சங்கங்குப்பி குதிரைவாலி
　　வாகான சங்கினிதானும் மிசங்குதானும்
பூட்டியே கிலுகிலுப்பை வேம்புதானும்
　　புகழான ஆமணக்கு நன்னாரிதானே. (558)

மலைமல்லி, தேமா புலிதொடக்கி குப்பை மேனி அத்தி, செம்புளிச்சை, தகரை சங்கங்குப்பி, குதிரைவாலி, சங்கினி, இசங்குச் செடி, கிலுகிலுப்பை வேம்பு, ஆமணக்கு, நன்னாரி, மற்றும் (புலிதொடக்கி என்பது ஈயத்தண்டு என்னும் முள் செடி)

தன்வந்திரி பகவான்

தானான நிலைப்பனை அசோகுதானம்
தாக்கான தாமரையும் சஞ்சீகாணி
கோனான வசம்புடனே நெல்லிதானும்
குணமான அசுவகெந்தி பூலாதானும்
வேனான விடதாரி சடைக்கெஞ்சாவும்
விதமான வில்வமுடன் தைவேளைதானும்
பானான கையானின் சண்பகப்பூ
பாங்கான சதகுப்பை மல்லியாமே. (559)

நிலப்பனை, அசோகு, தாமரை சஞ்சீகரணி (புளியன்கலை) வசம்பு, நெல்லி, அசுவகெந்தி, பூலா, விடதாரி, சடைக்கெஞ்சா, வில்வம், தைவேளை கையான், சண்பகப்பூ, சதகுப்பை, மல்லி, மற்றும்.

ஆமேதான் சீரகமும் எலுமிச்சைதானும்
அடவான பூவுமாம் கொல்லிதானும்
சாமேதான் தண்ணீர்மிட்டான் சங்கினிதானும்
சார்வான சதுரக்கள்ளி மூலிதானும்
போமேதான் கவுதும்பை அரத்தைதானும்
பொங்கமாய்த் தூளிடித்துக் கியாழஞ்செய்து
தாமேதான் நல்லெண்ணை சரியதாக
தாக்கடா கியாழமதில் தாக்கிடாயே. (560)

சீரகம், எலுமிச்சை, எலுமிச்சப்பூ, கொல்லி, (ஆடுதின்னாப்பாலை) தண்ணீர்மிட்டான், சதுரக்கள்ளி மூலி, கவுதும்பை, அரத்தை, இவைகளை சமமாக எடுத்து தூளாக இடித்து நீரிலிட்டு கியாழம்செய்து கியாழத்திற்கு சமன் நல்லெண்ணை சேர்த்துக்கொள்.

தாக்கிடாய் மெழுகுபதம் தன்னில்காய்ச்சி
தயவாகக் கணேசனைப் பூசித்தேதான்
போக்கடா மண்டலந்தான் முழுகிவந்தால்
பொல்லாத நமரகண்டன் குமரகண்டன்
தீக்கடா முசல்வலியும் காக்கைவலியும்
நேரான சச்சுவாதம் அனைத்தும்போகும்
பாக்கடா இத்தைலம் சுருக்குமெத்தப்
பாடுகிறேன் இன்னமொரு தைலம்பாரே. (561)

மேற்படி சேர்த்ததை மெழுகுபதமாக காய்ச்சி கணேசனை பூசித்து ஒருமண்டலம் முழுகிவர நமரகண்டன், குமரகண்டன் முசல்வலி, காக்கைவலி, சச்சுவாதம் முதலான வாதங்கள் நீங்கும் இத்தைலம் சுருக்கமான முறை, மேலும் ஒரு தைலம் கூறுகிறேன்.

குஷ்டத்திற்கு மிருகாமல் தைலம்

பாரப்பா பதினெட்டுங் குஷ்டம்நீங்கப்
பாடுகிறேன் தைலமொன்று சுறுக்குமேத்த
சீரப்பா லிங்கமுடன் பூரம்வீரம்
சிறப்பான கெந்தியுடன் காந்தந்தானும்
கூரப்பா சிங்கியுடன் துத்தம்தானும்
குறிப்பான அமுக்கரா தேவதாரம்
சேரப்பா அகில்கட்டை சந்தனந்தானும்
சிறப்பான சீரகமும் ஏலங்கூட்டே. (562)

பதினெட்டு குஷ்டங்கள் நீங்க தைலம் கூறுகிறேன், லிங்கம், பூரம், வீரம், கெந்தகம், காந்தம், சிங்கி, துத்தம், அமுக்கிரா, தேவதாரம், அகில்கட்டை, சந்தனம், சீரகம், ஏலம், கூட்டுவாயாக.

கூட்டியே பசும்பாலும் குமரிதானும்
குணமான பசுநெய்யும் எள்ளெண்ணைதானும்
நீட்டியே விளக்கெண்ணைச் சரியதாக
நேராக மெழுகுபதம் தன்னில்காய்ச்சி
வாட்டமுடன் மண்டலந்தான் முழுகிவந்தால்
வாகாக பதினெட்டுக் குஷ்டம்போகும்
தேட்டமாம் இத்தைலம் சுருக்குமெத்த
தேசத்தில் செய்கிறது அரிதாமெண்ணே (563)

மேலும் பசும்பால், குமரி, பசுநெய், எள்எண்ணெய், விளக் கெண்ணெய் இவைகளை சரிஎடை கூட்டி மேற்படி சரக்குகளை இட்டு மெழுகுபதமாக காய்ச்சிடு, ஒருமண்டலம் இத்தயிலத்தால் தலைமுழுக பதினெட்டு குஷ்டமும் நீங்கும், இம்முறை சுருக்கமாகும், உலகத்தில் இம்முறை செய்வதரிது.

சீழ் ரத்தம் வயிற்றுக் கடுப்புக்கு மருந்து

எண்ணவே மானிடர்க்கு ரத்தங்கண்டால்
எழிலான மருந்தொன்று செப்பக்கேளும்
கண்ணவே கடுக்காய்ப்பூ சுக்குதானும்
கனமாகச் சூரணித்துப் பொடியாய்ச் செய்து
திண்ணவே மேற்பதங்க மாகச் செய்து
திறமாக அறுவேளை கொண்டேயப்பா
பண்ணவே பரமனைப் பூசித்தேதான்
பாங்காக நூறு உரு பூசிப்பாயே. (564)

தன்வந்திரி பகவான்

மானிடர்க்கு ரத்தம்கண்டால் மருந்து கூறுகிறேன், கடுக்காய்பூ, சுக்கு, இவைகளை சூரணித்து பொடி செய்து ஆறுவேளை உட்கொள்ள ரத்தக்கடுப்பு கீழ்ரத்தம், குணமாகும். பூரத்தை பதங்கமாக செய்து, பரமனுக்கு நூறு உரு சொல்லி சிப்பாயாக. (இப் பாடல் சரியாக அமையவில்லை)

பூசியல்லோ சுன்னமென்ற குகையில்வைத்துப்
    பொருந்தவே மேல்மூடி சீலைசெய்து
ஆசியல்லோ ஈசான்ய பூசை பண்ணி
    அஞ்செருவில் புடம்போடப் பூரம்நீறாம்
வாசியல்லோ கடுங்கார வெயநீர் குத்தி
    மகத்தான ரவிதனிலே உலரப்போடு
தேசியல்லோ சிவகாமி சொன்னமார்க்கம்
    செப்புகிறேன் அதன்பெருமை செப்புறேனே. (565)

மேற்படி பதங்கித்த பூரத்தை சுண்ணக் குகையில் வைத்து மேல்மூடியிட்டு லமண் செய்து ஈசான்ய பூசைசெய்து ஐந்து எருவில் புடமிட நீறும், பூரநீறை த்து கடுங்கார செயநீர் விட்டு வெய்யிலில் உலரவை, அது சிவகாமி சொன்ன ர்க்கமாகும், இதன் பெருமையைச் கூறுகிறேன்.

செப்பியதோர் பூரமது பலந்தானொன்று
    தெளிவான சாரமது பல:ரமொன்று
ஒப்பியதோர் இதுரண்டும் கல்வத்திட்டு
    ஓங்கியதோர் நெட்டடங்க மாட்டுமாட்டு
தப்பியதோர் சுண்ணாம்புக் குகையில்வைத்து
    சார்வாக மேல்மூடி சீலைசெய்து
அப்பியதோர் புடம்போட வெந்துநீறும்
    ஆச்சரியம் பனியில்வைக்க செயநீராமே. (566)

மேற்படி பூரம் பலம் ஒன்று, சாரம்பலம் ஒன்று இவ்விரண்டையும் கல்வத்தில் ட்டு நன்றாக அரைத்து சுண்ணக் குகையில் வைத்து மேல்மூடியிட்டு சீலை செய்து டமிட வெந்து நீறும், நீறியதைப் பனியில் வைக்க செயநீராகும்.

தாளக வங்கச் சுண்ணம்

ஆமப்பா இந்நீரில் வீரச்சுண்ணம்
    அதட்டியே கலக்கிமெள்ள வைத்துக்கொண்டு
ஓமப்பா சரக்கு அறுபத்து நாலு
    உத்தமனே வாட்டிடவே மணியுமாகும்
சாமப்பா, சாரமது லவணமெல்லாம்
    சணத்திலே சுண்ணாம்பாய் வெந்துபோகும்

வேமப்பா தாம்பரமும் வெள்ளையாகும்
　　வேதித்த தாளகத்தின் மஞ்சள்போமே. (567)

மேற்படி செயநீரில் வீரச் சுண்ணத்தை கலந்து வைத்துக்கொள் ஆடும் சரக்கு அறுபத்துநான்கும் இச்செயநீரால் வாட்ட மணியாகும், சாரம், லவணவகையெல்லாம் சுண்ணமாகும், தாமிரம் வெள்ளையாகும். தாளகத்தின் மஞ்சள் நீங்கும்.

சரிவங்க சுண்ணம்

மஞ்சளென்ற கெந்தகமே வெள்ளையாகும்
　　மாசற்ற வீரமது குருவுமாகும்
மஞ்சளென்ற லிங்கமது மெழுகுமாகும்
　　ஆதியென்றக் கல்லுப்பு மணியுமாகும்
துஞ்சலென்ற உபரசங்கள் ஈயமாகும்
　　தொடுமுன்னே சூதமது விரைத்துப்போகும்
கஞ்சலென்ற லோகங்கள் வேதையாகும்
　　காட்டிடவே நூற்றொன்றும் ஏமமீ.ரச்சே. (568)

கெந்தகம் வெள்ளையாகும், வீரம் குருவாகும், லிங்கம் மெழுகாகும், ஆதிஎன்ற கல்லுப்பு மணியாகும், உபரசங்கள் சத்தாகும், தொடும்முன்பே சூதம் கட்டிப்போகும் லோகங்களில், நூற்றுக்கு ஒன்று கொடுக்க வேதையாகும்.

ஏமமே ஆச்சுதென்று மகிழவேண்டாம்
　　எளிதாக மூலத்தை இறுத்திப்பாரு
வாமமே கெதியாக வனுதினமும்போற்று
　　வழியாறு தளங்களெல்லாம் கண்டுபாரு
சேமமே தமர்வாசல் உள்ளேபுக்க
　　செப்பரிய மதியளவும் தொட்டுஏறு
காமமே கெதியென்று உழலவேண்டாம்
　　கருத்தென்ற உளியினால் பொரியைவீசே. (569)

வேதையைக் கண்டு மகிழ்ந்து மயங்கி விடாதே மூலத்தை இறுத்திப்பார், கெதியாக அனுதினமும் போற்று, ஆறு தலங்களை கண்டுபார், தமர்வாசல் உள்புகுந்து மதியளவு தொட்டு ஏறு, காமத்தில் மயக்கம் கொண்டு உழலவேண்டாம்.

கற்பூராதிச் சுண்ணம்

வீசிடவே பூரமென்ற நீரினாலே
　　விளங்கியதோர் தாளகத்தின் சுருக்கும்போடு
தூசிடவே ச வர்க்காரச் சுண்ணம்போடு
　　துடியான பூரமென்ற சுண்ணமூன்றும்

தன்வந்திரி பகவான்

ஆசிடவே வெடியுப்பு நீராலாட்டி
அப்பியே தாளகத்தின் ரவியிற்போடு
வாசிடவே சுண்ணாம்புக் குகையில்வைத்து
மண்செய்து ஊதிடவே சுண்ணமாமே. (570)

பூரச் செயநீரால் தாளகத்திற்கு சுருக்கு போடு, பின் சவர்க்காரச் சுண்ணம், பூரச் சுண்ணம், சேர்த்து வெடியுப்பு நீரால் அரைத்து தாளகத்திற்கு கவசமிட்டு வெய்யிலில் போடு, உலர்ந்தபின் சுண்ணாம்பு குகையில் வைத்து ஊத சுண்ணமாகும்.

சுண்ணமென்ற தாளகத்தில் வீரங்கூட்டி
துடியாக மத்திச்சு வங்கம்கூட்டி
சுண்ணமென்ற அண்டோடும் கீழ்மேலிட்டுக்
கடுகெனவே சுண்ணமென்ற குகையிலூது
வண்ணமென்ற வங்கமது சுண்ணமாகும்
வாதமென்ற கடைதிறக்கும் சுண்ணமாகும்
திண்ணமென்ற வேங்கைகையில் ஆடுபோலத்
திடுக்கிட்டுச் சூதமது உண்டையாமே. (571)

மேற்படி தாளக சுண்ணமுடன் வீரம்கூட்டி மத்தித்து வங்கம்கூட்டி சுண்ணகுகையில் அண்டோடு போட்டு அதன்மீது மேற்படி சரக்கு களைவைத்து அதன்மேல் அண்டவோட்டு தூளையிட்டு நெருப்பில் வைத்து ஊத வங்கம்சுண்ணமாகும், இதனால்வாதம் உண்டாகும், வேங்கையிடம் அகப்பட்ட ஆடுபோல் இச்சுண்ணத்தில் சூதம்கட்டும்.

சவர்க்காரத் துருசு சுண்ணம்

ஆமப்பா துருசுஒரு பலமாய்த்தூக்கி
அதிகமென்ற பூரநீர் தன்னில்தோய்த்து
சேமப்பா ரவிதனிலே உலரப்போட்டு
சிறப்பாக ஏழுநாள் ஆனபின்பு
காமப்பா சவர்க்காரச் சுண்ணமொன்று
தயங்காத வீரமென்ற சுண்ணமொன்று
வாமப்பா வங்கமொன்று பூரமொன்று
வகையான சீனமொரு காசுதானே. (572)

துரிசை ஒரு பலம்எடுத்து பூரச் செயநீரில் தோய்த்து வெய்யிலில் காயவைத்து ஏழுநாள் சென்றபின்பு, சவர்க்காரச் சுண்ணம், வீரச்சுண்ணம், வங்கம், பூரம், சீனம், இவைகள் வகைக்கு ஒரு காசு எடுத்துக்கொள்.

தானென்ற புழுகோடு உரமுங்கூட்டி
சமரசமாய்க் கடுங்காரச் செயநீர்குத்தி
மானென்ற துரிசியின்மேல் கவசங்கட்டி
வகையான சுண்ணாம்புக் குகையில்வைத்து
கானென்ற சிமிழ்மூடிச் சீலைசெய்து
கசபுடத்தில் போட்டெடுத்து ஆறவிட்டு
ஆனென்ற கவசத்தை உடைத்துப்பார்த்தால்
அப்பப்பா கடுஞ்சுருக்கு சுண்ணம்மாச்சே. (573)

மேலும் புனுகு, உரம் இவைகளை கூட்டி கடுங்காரச்செயநீர் விட்டு அரைத்து துரிசியின்மீது கவசம்கட்டி சுண்ணக்குகையில் வைத்து மேல்மூடியிட்டு சீலைமண்செய்து கசபுடமிட்டு ஆறவைத்து உடைத்து பார்க்க துரிசு சுண்ணமாகி இருக்கும். இது சுருக்கமான முறையாகும்.

ஆச்சப்பா துரிசியது குருவுமானால்
அண்டரண்ட கடாகமெல்லாம் கிழிந்துபோகும்
மூச்சப்பா படுமுன்னே சூதங்கட்டும்
மூதண்ட சவ்வீர மெழுகேயாகும்
பாச்சப்பா அண்டமெல்லா மெழுகாய்ப்போகும்
அப்பனே பாஷாணம் வெண்ணையாகும்
வேச்சப்பா பரிநீறும் வெள்ளிநீறும்
வெகுவான வேதையெல்லாம் கோடிசாமே. (574)

இத்துரிசின் குருவால் அண்டரண்ட பகிரண்டமெலாம் ஆடலாகும். துரிசிகுரு படும்முன்னே சூதம் கட்டும், சவ்வீரம் மெழுகாகும், அண்டமெல்லாம் மெழுகாகும், பாஷாணம்வெண்ணெயாகும், தங்கம் வெள்ளி ஆகியவை நீறிப்போகும், சரக்குகள் சாகும், அதனால் கோடி வேதையுண்டாகும்.

கோடியென்று சொல்லுவதும் கொஞ்சம்நஞ்சம்
குறுக்கலாம் நெருக்கலாம் அனேகவித்தை
வாடியென்று முழியாமல் சித்தியாகும்
மனிதர்சித்தர் ஆட்டெல்லாம் இதுதானல்லோ
நாடியென்னும் துரிசியினால் சிங்கிபண்ணி
நலமுத்தக் குளிகைகட்டிச் சாரணையே செய்து
ஆடியென்னுங் குளிகைதன்னை வாயில்வைத்து
அண்டரண்ட பதமெல்லாம் பார்த்திட்டேனே. (575)

கோடிவேதை என்பது குறைவுதான் கோடாகோடி வேதையாடலாம், நீண்டகாலம் வெகுவித்தைசெய்யலாகும், இத்துரிசு குருவினால் சித்தர்கள் பலமுறைகள் கண்டனர், துரிசு குருவால் சிங்கிசெய்து இரசகுளிகைசெய்து சாரணைகளை தீர்த்து அண்டரண்ட பதம் எல்லாம் பார்த்திட்டேன்.

தன்வந்திரி பகவான்

பார்த்திட்டேன் அண்டத்தில் சித்தர்கோடி
    பரிவாக வாவரைநீ கண்டுபேசில்
மாத்திட்டக் குருவேது வென்றாராகில்
    மகத்தான மூலருடன் போகரென்றுசொல்லு
சேர்த்திட்ட சூத்திரமும் சாத்திரமுங்கேள்
    சிறப்பாகப் பக்கத்தில் இருக்குதென்று
கார்த்திட்டக் குளிகையுடன் வேகங்கேளு
    கண்ணில்லாக் கற்பமும் புக்குவென்னே. (576)

அண்டத்தில் கோடி சித்தர்களைக் கண்டேன், நீ அவர்களைக்கண்டு பேசினால் குருயார் என்ற கேட்பார்கள். மூலருடன் போகர் என்று சொல், சூஸ்திரமும், சாஸ்திரமும் கேள். பக்கத்தில் இருக்குதென்ற கூறு.

என்னவே சாரத்தை அண்டம்போலச்
    சீவியே அபினி மெழுகோடுபூரம்
கன்னவே செயநீர்விட்டு அரைத்துப்பூசக்
    கடுகவே ரவிதனிலே உலரப்போடு
பன்னவே அதன்மேலே அரக்குத்தானும்
    பக்குவமாய் இறக்கியதில் கவசங்கட்டி
மன்னவே சாணாங்கி சீலைசெய்து
    வகையாக வங்கத்தில் தோய்க்கக்கேளே. (577)

சாரத்தை அண்டம்போல் சீவி அபினி, பூரம் இவைகளை செயநீர்விட்டு அரைத்து சாரத்திற்கு பூசி வெய்யிலில் உலரப்போடு, அதன்மேல் அரக்கைக் கவசம் செய்து சாணத்தால் சீலைசெய்து வங்கத்தில் தோய்த்தால்.

சாரசுத்தி

கேளப்பா வங்கத்தைக் குகையிலிட்டு
    கெடியாக உருக்கையிலே தோய்த்துவாநீ
வாளப்பா ஏழுதரம் தோய்த்துவாநீ
    வகையான சாரமது சுத்தியாகும்
தாளப்பா சவர்க்காரச் சுண்ணம் வீரம்
    தயங்காத பூரமுடன் மூன்றுகேளு
வேளப்பா வெடியுப்பு நீரைவார்த்து
    விரவியதை சாரத்தின் மேலேபூசே. (578)

வங்கத்தைக் குகையிலிட்டு உருக்கும்போது மேற்படி கவசத்தை தோய்த்திடு இவ்வாறு ஏழுமுறை தோய்க்க சாரம் சுத்தியாகும், சவர்க்காரச் சுண்ணம், வீரம், பூரம், இவை மூன்றையும் சேர்த்து வெடியுப்பு நீரைவிட்டு அரைத்து சாரத்தின் மீது கவசம்கட்டு.

பூசியதைச் சுண்ணாம்புக் குகையில்வைத்துப்
புடம்போட்டு எடுத்துப்பார் தவளநீறாம்
மாசியதைக் கடுங்காரச் செயநீர்குத்தி
அப்பனே பனியில்வைக்க செயநீராகும்
தேசியிதில் கருக்களில் சுறுக்குப்போட்டு
செயமான மெழுகாகும் வேதையாகும்
ஆசியதை எண்ணாதே கற்பமுண்டு
அருணனைப்போல் சிவப்பாகும் காயந்தானே. (579)

மேற்படி கவசத்தை சுண்ணக்குகையில்வைத்து புடமிட்டு எடுத்துப்பார்க்க தவளம்போல் நீறாகும், இதில் கருங்காரச் செயநீர்விட்டு பனியில்வைக்க செயநீராகும். இச்செயநீரால் சுருக்கிட சரக்குகள் மெழுகாகும். அம்மெழுகில் வேதையாகும்.

சீனச் சுண்ணம்

நானென்ற செயநீரில் வீரச் சுண்ணம்
சமரசமாய் பூரமென்ற சுண்ணமொன்று
கானென்ற சவர்க்காரச் சுண்ணமொன்று
கலந்தந்த செயநீரில் படிகைமேலே
வானென்ற தினந்தோறும் தோய்த்துதோய்த்து
மகத்தான ரவிதனிலே ஏழுநாள்போடு
பானென்ற வெடியுப்புச் சுண்ணம்பூசிப்
பருவமாய்ச் சுண்ணமெனற குகையில்வையே. (580)

வீரச் சுண்ணம் ஒன்று, பூரச்சுண்ணம் ஒன்று, சவர்க்காரச்சுண்ணம் ஒன்று இவைகளில் வகைக்கு ஒருபங்கை மேற்படி செயநீரில் கலக்கிக் கொண்டு படிகாரத்தைத் தோய்த்து வெய்யிலில் இடு இவ்வாறு தினமும் தோய்த்து ஏழுநாள் வெய்யிலில் இடு, பின் வெடியுப்பு சுண்ணத்தை படிகாரம்மேல் கவசம்கட்டி சுண்ணக்குகைக்குள் வைப்பாயாக.

நிமிளைச் சுண்ணம்

வைத்துமே சீலைசெய்து புடத்தைப் போடு
வாகாக எடுத்துப்பார் சீனச் சுண்ணம்
கைத்துமே கடுங்கார செயநீர் குத்திக்
காணிதுக்குச் சமனாக சாரஞ்சேர்த்து
தைத்துமே கல்வத்தில் இட்டு ஆட்டி
சமரசமாய்ப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
மைத்துமே பனியில்வைக்க செயநீராகும்
மாசற்ற நீராலே எல்லாஞ்சாமே. (581)

தன்வந்திரி பகவான்

மேற்படி குகைக்கு சீலைமண் செய்து புடம்போட சுண்ணமாகும் இச்சீனச்சுண்ணத்தில் கடுங்கார செயநீர்விட்டு சம அளவு சாரம் சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து புடம்போட்டு எடுத்துக் கொண்டு பனியில் வைக்க செயநீராகும், இந்தசெயநீரால் சரக்குகள் சாகும்.

காரமென்ற நீரிலே வீரச் சுண்ணம்
மயங்காத பூரமென்ற சுண்ணம்போட்டு
காரமென்ற நீரிலே கலக்கிவைத்துக்
கடுஞ்சூடன் பலம்ஒன்றில் நீரைவார்த்து
ஆமென்ற நிழலிலே மூன்றுநாள்வை
அதின்பிறகு ஏழுநாள் ரவியில்போடு
வானென்ற வில்லை செய்து உலரப்போடு
மாசற்றக் கல்லுப்புச் சுண்ணம்பூசே. (582)

மேற்படி செயநீரில் வீரச்சுண்ணம், பூரச்சுண்ணம் இவைகளை கலக்கி சூடன் ஒருபலத்தில் செயநீரை விட்டு நிழலில் மூன்று நாள்வைத்து, வில்லை செய்து ஏழுநாள் வெயிலில் போடு, பின் அதன் மீது கல்லுப்புச் சுண்ணத்தை கவசம்கட்டு.

பரிச் சுண்ணம்

பூசியே சுண்ணாம்புக் குகையில்வைத்து
பொலிவாகப் புடம்போடப் பூப்போலாகும்
காரியே கடுங்காரச் செயநீர்குத்தி
கனமான அண்டத்தின் மேலேபூசி
தேசியென்ற செந்திரிக்கத் துள்ளேவைத்துச்
சிறப்பாக மூன்றுநாள் ரவியில்போட
தூசியென்ற மேலோடு ரண்டுங்கூடச்
சுழன்றுவெந்து சுண்ணாம்பாய் நீறிப்போமே. (583)

மேற்படி கவசம்கட்டியதை சுண்ணக்குகையில்வைத்து புடமிட பூப்போலச் சுண்ணமாகும். இச்சுண்ணத்தில் கடுங்கார செயநீர்விட்டு கலந்து அண்டத்தின் மீது பூசி செந்திரிக்கத்துள் வைத்து மூன்றுநாள் வெய்யிலில் போட மேலோடு சுழன்று வெந்து சுண்ணமாக நீறிப்போகும்.

நீறியதில் வீரமென்ற சுண்ணம்போடு
நேர்ப்பாக சாரநீர் விட்டு ஆட்டி
மாறியந்த நிமிளையின்மேல் கவசங்கட்டி
மகத்தான சுண்ணாம்புக் குகைக்குள்வைத்து
தேறியதின் மேல்மூடி சீலைசெய்து
சிறப்பாக கெசபுடத்தில் போடுநீயும்

ஆறியபின் எடுத்துபொற் கடிதாஞ்சுண்ணம்
  ஆகாகா இதன் ஆண்மை அறிந்திலேனே. (584)

மேற்படி அண்டச்சுண்ணத்துடன் வீரச் சுண்ணமிட்டு சாரநீர்விட்டு அரைத்து நிமிளையின் மீது கவசம்கட்டி சுண்ணக்குகைக்குள் வைத்து மேல்மூடியிட்டு சீலைமண்செய்து கெசபுடமிட நிமிளைச்சுண்ணமாகும்.

அறிந்திலேன் இச்சுண்ணம் வீரச்சுண்ணம்
  அப்பனே ரண்டையுந்தான் சாரநீரால்
பிறிந்திலேன் மத்திச்சுத் தங்கத்தில்பூசிப்
  பேரான அண்டத்தோல் கீழ்மேலிட்டு
செறிந்திலேன் கெசப்புடமாய் வெளியிற்போடு
  சீரான பரிதானும் சுண்ணமாகும்
கறிந்திலேன் வாதமடம் திறந்துபோச்சு
  கைக்குள்ளாய் வாதமெல்லாம் சிக்கிப்போச்சே. (585)

நிமிளைச் சுண்ணம், வீரச்சுண்ணம், இரண்டையும் சார நீரால் மத்தித்து தங்கத்தின்மீது கவசம்கட்டி இதன்மேலும் கீழும் அண்டத்தோல் போட்டு வெளியில் கெசபுடமிட தங்கம் சுண்ணமாகும், இத்தங்கச் சுண்ணத்தால் வாதம் கைக்குள்ளாகும்.

போச்சப்பா பரிதானும் சுண்ணமானால்
  பொட்டிட்டால் சூதமது கட்டிப்போகும்
நீச்சப்பா வாதமெல்லாம் கைக்குள்ளாச்சு
  நிரையான சரக்குகள்தான் மணிபோலாகும்
காச்சப்பா திரேகமது பண்டுபோலாம்
  காயசுத்தி கண்டு கொள்ளு சுறுக்குமெத்த
வாச்சப்பா இத்தனையு முப்பாலாச்சு
  மயங்காதே உப்பை முன்னை கட்டியாடே. (586)

தங்க சுண்ணத்தை பொட்டளவு சூதமதற்குகொடுக்க சூதம் கட்டிப்போகும். வாதம் கைக்குள்ளாகும், சரக்குகள் மணிபோல் நிண்றாடும், தங்கச் சுண்ணத்தை உட்கொள்ள உடல் இறுகி சித்தியாகும், இது சுருக்கமான முறை, இத்தனை வகைகளும் உப்பாலானது, உப்பை முன் கட்டி வாதமாடுவாயாக.

ஆடவே வாசனையை அடித்துத் தள்ளும்
  அப்பனே அஷ்டாங்கம் சூர்ந்துபாரு
போடவே சற்பமுண்டு காயசித்தி
  பேரான மணித்தாயை நித்தம்பூசி
கூடவே குருபதத்தில் தொண்டுபண்ணு
  குறிப்பாக கைமுறையும் இனமும்பாரு

நீடவே சத்துரு மித்துருவும் பாரு
    நினைவெல்லாம் வேதாந்தக் குறியில்வையே. (587)

உப்பைக்கட்டி வாதமாட வாசனையை அடித்துத்தள்ளும் அஷ்டாங்கத்தை கூர்ந்து பார்ப்பாயாக, கற்பமுண்டு காயசித்தி செய்து மனோன்மணித்தாயை தினமும் பூசிப்பாயாக, குருவின்பதத்தில் தொண்டுசெய்து கைமுறையும், சரக்கு இனங்களும், சத்துரு, மித்துரு வகைகளும் பார்த்து நினைவை வேதாந்தக்குறியில் வைப்பாயாக.

வெண்காரக் கட்டு

குறிப்பான வெண்காரக் கட்டைக்கேளு
    கூரறிது இதன்பெருமை சிவனும்காணார்
நெறிப்பாக சத்தெல்லாம் இதனால்அல்லோ
    நேரான காரம்விட்டால் சத்துப்போச்சு
வெறிப்பான லோகங்கள் இனத்துக்கெல்லாம்
    விரவியதை இட்டல்லோ கண்விட்டாடும்
கறிப்பாகம் போலல்லோ காரவாண்மை
    கைவிட்டால் சரக்கெல்லாம் கொள்ளாதென்னே. (588)

வெண்காரக்கட்டு கூறுகிறேன், இதன் பெருமையை சிவனும் காணார், வெண்காரகட்டால் சத்துவகைகள் உண்டாகும், காரம்விட்டால் சத்துவகைகள் கூடாது. லோகங்களின் இனத்திற்கு காரத்தைக் கூட்டினால்தான் கண்விட்டாடும், காரத்தின் முறையைகைவிட்டால் சரக்குகள் முடியாது.

என்னவே காரமது பலகைபோல
    எடுத்துமே ஆவெருதின் சாணியாலே
கன்னவே கழுவிநன்றாய் சுத்தி பண்ணி
    கலங்காதே சவர்க்கார சுண்ணவீரம்
பன்னவே பூரமொடு மூன்றுங்கேளு
    பதறாமல் களஞ்சிடைதான் தூக்கிக் கொண்டு
தன்னவே மத்திச்சு சாரநீரில்
    தயங்காதே ரவிதனிலே தோய்த்துப்போடே. (589)

வெண்காரத்தைப் பலகையைப்போல் எடுத்துக்கொண்டு (பசு) எருதின் சாணியால் கழுவி சுத்திசெய்திடு சவர்காரச்சுண்ணம், வீரம், பூரம், ஆகிய மூன்றையும் களஞ்சி எடை எடுத்து சாரநீரில் மத்தித்து வெண்காரம் மேல் கவசமிட்டு வெய்யிலில் போட்டுவிடு.

போடவே தினமேழில் வெளிறிக்கட்டும்
    பூனைக்கண் ஒளிபோலே வண்ணங்காணும்

மாடமே நாகத்தின் செயநீர்க்குள்ளே
 மாஞ்சியே ரேக்கதனை மேலேசுற்றி
நீடவே தீப்பதத்தில் வாட்டுவாட்டு
 நேர்ந்தபரஞ் சிலையைத்தான் சுத்திவாங்கு
வாடவே அருணனைப்போல் சிவப்பேயாகும்
 மாதளம்பூப் போலிருக்கும் மகிழ்ந்துபாரே. (590)

மேற்படி வகையில் ஏழுநாட்கள் செய்ய வெண்காரம் வெளிறிக் கட்டும். பூனையின் கண்ஒளிபோல் நிறம்காணும், நாகச் செயநீரில் இதை தோய்த்து தங்கரேக்கை இதன்மீது சுற்றி தீபத்தில் வாட்டுவாயாக, சூரியனனைப்போல் சிவப்பாகும், மாதளம்பூப்போல் நிறமுடையதாக இருக்கும்.

பார்க்கவே நவலோகம் நூற்றுக்கொன்று
 பாய்ச்சிடவே பதினாறு மாற்றுக்காணும்
மார்க்கவே தினம்பணந்தான் உண்டாயாகில்
 அருணனைப்போல் தேகமுமாம் கண்ணொளியுமுண்டாம்
சேர்க்கவே காயமது கற்பாந்தகாலம்
 திரையாமல் பண்ணுவிக்கும் நரையேயில்லை
கார்க்கவே சூதத்தைக் கணத்தில் கொல்லும்
 கண்ணிமைக்குள் பாஷான சத்துமாமே. (591)

நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க பதினாறுமாற்று தங்கமாகும். தினமும் பணவெடை உட்கொள்ள உடல் சூரியனைப் போலாகும், கண்ஒளிமிகும், உடல் கற்பாந்த காலம் அழியாது நரைதிரை இல்லை, இதனால் சூதம் சாகும், கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பாஷாணம் சத்தாகும்.

அண்டத்தைலம்

சத்தான சாரநீர்க் குள்ளேமைந்தா
 தயங்காதே சவர்க்காரச் சுண்ணமிட்டு
பத்தான வீரமிட்டுப் பூரமிட்டு
 பரிவான பீங்கானில் வாங்கிக்கொண்டு
அத்தான அண்டமது அன்பத்தொன்று
 அத்தமென்ற மஞ்சளாம் கருவைவாங்கி
நித்தான சட்டியிட்டு அடுப்பிலேற்றி
 நினைவாக வறுத்திடுவாய்க் கருகத்தானே. (592)

சவர்க்கார சுண்ணம், வீரம், பூரம், இவைமூன்றையும் சாரநீரில் கலந்து பீங்கானில் எடுத்துக்கொள் ஐம்பத்து ஒரு அண்டத்தின் மஞ்சட்கருவை சட்டியிலிட்டு அடுப்பேற்றி கருக வறுப்பாயாக.

கருகவே வறுத்திடுவாய்த் தைலமாகும்
 காணந்த வேளையிலே படிதானொன்று

தன்வந்திரி பகவான்

பருகவே இலுப்பை நெய்யைக் கூடவிட்டுப்
பக்குவமாய் ஆனபின்பு இறுத்துக்கொண்டு
தருகவே அப்பிரேகம் பலந்தான்ரண்டு
தன்னோடு காந்தமது பலமும்ரண்டு
திருகவே கருவளையல் பலமும்ரண்டு
சிறந்ததொரு வெண்காரம் பலமும்ரண்டே. (593)

மேற்படி வகையில் வறுக்க தைலமாகும், அதனுடன் இலுப்பை நெய்யை விட்டு பதமாக எரித்து இறுத்துக்கொள் அப்ரேகம் இரண்டுபலம், காந்தம் இரண்டுபலம், கருவளையல் இரண்டு பலம், வெண்காரம் இரண்டுபலம், இவைகளை எடுத்துக்கொள்.

நாகக் கட்டு

ரெண்டோடு இதுவெல்லாம் பொடியாய்ப்பண்ணி
நேரான அண்டத்தின் தைலந்தன்னால்
பண்டோடு மண்ணாலே குகைதான்பண்ணி
பக்குவமாய் சுட்டெடுத்து வைத்துக்கொண்டு
தண்டோடு தயிலத்தை உட்குகையில்பூசி
சார்வாக நாகமொரு பலந்தானொன்று
கண்டோடு வெருங்கையில் உருக்கிக்கொண்டு
கனமான சாகரத்தின் பொடிமேல்தூவே. (594)

மேற்படி சரக்குகளை பொடி செய்து கொள், மண்ணால் குகை செய்து சுட்டு எடுத்து மேற்படி அண்டதயிலத்தை குகைக்குள் பூசி அக்குகைக்குள் ஒருபலம் நாகத்தை இட்டு உருக்கு நாகம் உருகும்போது மேற்படி சரக்குகளின் பொடியை தூவுவாயாக.

தூவயிலே நாகமது கண்விட்டாடும்
சுகமாக மருந்திட்டக் குகையில்வார்த்து
தாவயிலே தயிலத்தைக் குத்துகுத்து
தனிப்பிரகு சாரநீர்க் குத்துவாநீ
பாவையிலே வில்லையாய் இருக்கும்பாரு
பக்குவமாய் எடுத்துமுன் போல் தயிலம்பூசி
தாவையிலே முன்போல உருக்கிமைந்தா
தாக்கான சாரத்தின் போட்டுத்தூவே. (595)

மேற்படி வகையில் செய்ய நாகம் கண்ணடங்கி உருகிக் கண்விட்டாடும், மருந்திட்ட குகையிலிட்டு அண்டத்தயிலத்தை விட்டு மேற்படி பீங்கானில் வைத்த சாரநீரையும் விட்டு உருக்க நாகம் வில்லையாக இருக்கும். எடுத்து முன்போல அண்டத்தயிலம் பூசின குகையிலிட்டு முன்போல உருக்கி சாரத்தைத் தூவுவாயாக.

தூவியபின் முன்குருவில் மருந்துபூசித்
துடியாக அதற்குள்ளே மருந்துபூசி
பாவியபின் அதன்மேலே தைலங்குத்திப்
பாவாக அதன்மேலே சாரநீர்குத்து
மேவியபின் இப்படியே அன்பத்தொன்று
மெலிவாகச் சாய்த்துவடி மேற்றூரப்பார்க்க
காவியபின் புகையஞ்சுங் கட்டிப்போகும்
கனமான முழுக்கட்டு நாகம்பாரே. (596)

முன்போல குகைக்குள் மருந்து பூசி மேற்படி நாகமிட்டு அண்டத்தயிலம்விட்டு அதன்மேல் தைலம்விட்டு உருக்கு, இவ்வாறு ஐம்பத்தொரு முறை செய்ய நாகம் முழுக் கட்டாகும்.

நாக செந்தூரம்

பாரப்பா நாகமது கட்டிற்றானால்
பணபேதி சணபேதி சத்தபேதி
ஆரப்பா இதனாட்டம் காணப்போறார்
அம்மம்மா சிவயோகி சித்தர் காண்பார்
தூரப்பா எடுத்துசலம் தூலையாய்ப்போல
துடர்ந்தேறிக் கோடிமட்டும் எட்டியோடும்
காரப்பா குருபதத்தில் தொண்டுபண்ணு
கைமுறைகள் தவறாமல் கட்டாய்ச்சூட்டே. (597)

நாகம் முழுக்கட்டானால் பணபேதி, சணபேதி, சத்தபேதி இதனில் ஆட்டம் காணலாகும். இதை சிவயோகி சித்தர் காண்பார், தொடர்ந்து ஏறி கோடிமட்டும் எட்டியோடும், குருபதத்தில் தொண்டு செய்து கைமுறை தவறாமல் நாகத்தைக் கட்டு.

சூட்டவே நாகமொரு பலந்தானப்பா
துடியான தங்கமொரு பலத்திலீய
நீட்டவே ரண்டுமொன்றாய் உருகும்போது
நினைவாகச் சூதமொரு பலத்தைப்போடு
ஆட்டவே கல்வத்தில் இதனைக்கொண்டு
அணையப்பா பலம்நாலு கெந்திதானும்
கூட்டவே சூடன்பல மிரண்டுபோடு
துடியான மல்லிகையின் சாற்றாலாட்டே. (598)

கட்டிய நாகம் ஒருபலம், தங்கம் ஒருபலம் இவை இரண்டும் மூசையிலிட்டு உருகும்போது சூதம் ஒருபலம் கொடுத்து கல்வத்திலிட்டு நான்குபலம் கெந்தகமிட்டு சூடன் இரண்டு பலமும் சேர்த்து மல்லிகையின் சாற்றால் நன்றாக அரைத்திடு.

தன்வந்திரி பகவான்

ஆட்டியே தினமூன்று காயக்காய
அதன்பின்பு பொடியாக்கி குப்பிக்கேற்றி
நீட்டடவே வாலுகையில் பன்னிரண்டுசாமம்
நேர்ப்பாக முத்தியும் மாட்டித்தீரு
கூட்டியே வஸ்துசுத்தி ஈசான்யத்தில்
கொடிய நிருவாணிக்குப் பூசைசெய்து
மாட்டியே நவலோகம் ஆயிரத்துக்கொன்று
மாற்றே இருபத்து அஞ்சுதானே. (599)

அரைத்ததை மூன்றுநாள் உலரவைத்து பொடியாக்கி குப்பிக்கு ஏற்றி, குப்பியை வாலுகையில் ஏற்றி, பனிரெண்டுசாமம் முத்தீயாய் எரித்திடு, வஸ்துசுத்திவைத்த ஈசான்யத்தில் நிருவாணிக்கு பூசைசெய்து எடுத்திடு, நவலோகம் ஆயிரத்துக்கு இசசெந்தூரம் ஒன்று கொடுக்க இருபத்து ஐந்துமாற்று தங்கமாகும்.

அஞ்சான செந்தூரம் குன்றியுண்ணு
அப்பனே மண்டலத்தில் சட்டைபோகும்
பஞ்சான நோய்களெல்லாம் பறந்துபோகும்
படுமுன்னே காயமது இறுகிக்கொள்ளும்
தஞ்சான சிலைபோல தேகமின்னும்
சாவில்லை யுகந்தோறும் நரையுமில்லை
பிஞ்சான காயமுமாம் பத்தியமாயுண்ணு
பேசாதே ஒருவருடன் மூலம்பாரே. (600)

இச்செந்தூரத்தை குன்றிஅளவு உட்கொண்டுவர ஒரு மண்டலத்தில் சட்டைநீங்கும், சகல நோய்களும் நீங்கும் உடல் இறுகிச் சிலையைப்போல் மின்னும் இறப்பு இல்லை, யுகம்தோறும் நரை இல்லை, பதினாறு வயது போலாகும், பத்திய காத்து ஒருவருடனும் பேசாது செந்தூரமுண்டு மூலம் பார்ப்பாயாக.

நாகச் சுண்ணம்

பார்க்கவே நாக மொரு பலத்தைநீயும்
பரிவாகத் தகடாக்கிப் பூசிக்கேளு
சேர்க்கவே வீரமென்ற சுண்ணமொன்று
சிறப்பாகப் பூரணத்தின் சுண்ணமொன்று
கார்க்கவே தாளகத்தின் சுண்ணமொன்று
கலங்காதே சாரநீர் விட்டு ஆட்டி
ஆர்க்கவே மத்தித்து தகட்டில்பூசி
ஆதியாஞ் சுண்ணாம்புக் குகையிலூ;தே. (601)

நாகத்தை ஒருபலம் எடுத்து தகடாக்கி அதன்மீது பூசும் மருந்தைக் கூறுகிறேன், வீரச்சுண்ணம் ஒன்று, பூரணத்தின் சுண்ணம் ஒன்று (பூரசுண்ணம்) தாளகச்சுண்ணம்

ஒன்று, இவைகளை சாறநீர்விட்டு அரைத்து மத்தித்து மேற்படி நாகத்தின் தகட்டில்பூசி சுண்ணக் குகையில் வைத்து ஊது.

ஊதவே சுண்ணாம்பாய் நீறிப்போகும்
உத்தமனே வாசனைக்குப் பாஷாணம்சாமே
பாதவே சூதமது இட்டலிபோலாகும்
பண்பான வீரமது மணியுமாகும்
கோதவே லிங்கமது கட்டிப்போகும்
கொடிதான சரக்குகளில் பூசிவாட்ட
ஓதவே சரக்கெல்லாம் பனிபோலாகும்
உத்தமனே நாகத்தின் நோட்டந்தானே. (602)

நாகம் சுண்ணமாக நீறும், இந்த நாகசுண்ணத்தின் வாசனைக்கு பாஷாணம்சாகும், சூதம்கட்டும், வீரம் மணியாகும், லிங்கம் கட்டும் நாகச்சுண்ணத்தை சரக்குகளில் பூசிவாட்ட சரக்குகள் சாகும்.

தானென்ற நாகம்போல் காரியஞ்சாய்த்து
சமர்த்துடனே தகடாக்கிப் பூசிக்கேளு
ஊனென்ற வெள்ளையென்ற பாஷாணத்தோடு
உத்ததொரு சவ்வீரம் சீனங்கூட்டி
கானென்ற சவர்க்காரச் சுண்ணஞ்சூடன்
கலந்தரைத்துச் சாரத்தின் செயநீராலே
பானென்ற தகட்டினில் பூசிவைத்துப்
பக்குவமாய்ச் சுண்ணமென்ற குகையிலூதே. (603)

நாகத்தைப்போல் காரீயத்தை தகடாகச்செய்து வெள்ளைப் பாசாணம், சவ்வீரம், சீனம், சவர்க்காரச் சுண்ணம், சூடன், இவைகளை எடுத்து சாரச்செயநீரால் அரைத்து காரீயத்தகட்டில்பூசி சுண்ணக்குகையில் வைத்து ஊது.

ஊதையிலே வெந்துருகிச் சுண்ணமாகும்
உத்தமனே சுண்ணத்தில் சாரங்கூட்டி
பாதையிலே கல்வத்தில் இட்டு ஆட்டிப்
பக்குவமாய்ச் சுண்ணமென்ற குகையில்வைத்து
வேதையிலே மேல்மூடிச் சீலைசெய்து
விளங்கவே புடம்போட மலரும்பூப்போல்
காதையிலே கடுங்கார செயநீர்குத்திக்
கனமான பீங்கானில் பனியில்வையே. (604)

மேற்படி வகையில் ஊத காரீயம் வெந்து சுண்ணமாகும், இக்காரீய சுண்ணத்துடன் சாரம்கூட்டி கல்வத்திலிட்டு அரைத்து சுண்ணக்குகையில் வைத்து

மேல்மூடியிட்டு சீலைமண் செய்து புடமிட பூப்போல மலர்ந்து சுண்ணமாகும், இதனுள் கடுங்கார செயநீர்விட்டு பீங்கானிலிட்டு பனியில்வை.

வைத்துவுடன் பலபலெனத் தண்ணீராகும்
 வாகான இன்னீரில் வீரம்பூரம்
கைத்துடனே உப்பான சுண்ணமிட்டுக்
 கனமான துருசுநீர் களஞ்சிபோட்டு
தைத்துடனே கல்வத்தில் சூதமாட்டு
 தாக்கியரை நாற்சாமம் கல்வத்திட்டு
மொய்த்துடனே உண்டையாம் எடுத்துக்கொண்டு
 முசியாமல் ஆரையிலை கவசங்கட்டே. (605)

பனியில்வைக்க பலபலவெனச் செயநீராகும். இச்செயநீரில் வீரம், பூரம்,உப்புச்சுண்ணம், துரிசுசுண்ணம், இவைகள் வகைக்கு களஞ்சி எடையை மேற்படி செயநீரில் கலக்கிக்கொண்டு கல்வத்தில் சூதமிட்டு செயநீரால் நான்குசாமம் அரைத்து வெண்ணெய் போல் ஆனபின்பு உருண்டை செய்து ஆரையிலையை அரைத்து கவசம்கட்டுவாயாக.

கட்டியே கசப்புடமாய்ப் பத்தும்போடு
 கனமான சூடனைத்தான் அதனில்வாட்டி
தெட்டியே கரண்டியிலே எண்ணைக்குத்தி
 உருக்கியே பின்பெடுத்து சிரசில்வைக்க
வெட்டியே பார்நீயும் கத்தியோடா
 விரவியே வாயில்வைக்க ஸ்தம்பனமேயாகும்
வட்டியே உவர்ச்சத்தின் சத்தையீய்ந்து
 மார்க்கமாய்ச் சாரணைதான் செய்திட்டாயே. (606)

கவசக்கட்டியை கசபுடமிடு. இவ்வாறு ஆரையிலை கவசம்கட்டி பத்து புடமிடு, சூடனை நெருப்பில் வாட்டி எண்ணேய்விட்டு குளிகையை அதனுள்போட்டு எடுத்து சிரசில் வைக்க அனேக காட்சிகளை காணலாகும், குளிகையை வாயிலிட விந்து ஸ்தம்பனமாகும். உவர்சத்தை மணிக்கு கொடுத்து சாரணையை செய்வாயாக.

செய்திட்டக் குளிகைதனை வாயில்வைக்கத்
 திறமான அண்ட ரண்டங்களெல்லாம்
கைதிட்ட மாகவேதான் காட்டுவிக்கும்
 கண்ணிமைக்குள் சங்கவரைப் புக்குவிக்கும்
கொய்திட்ட அண்டத்தில் சித்தருண்டு
 கோடான ரிஷிகள்தான் அனேகருண்டு
வெய்திட்ட புத்தியினால் கொடுத்தாயானால்
 விரைந்தெடுத்து அண்டத்தில் பாய்வார்பாரே. (607)

சாரணையை செய்தகுளிகையை வாயில்வைக்க அண்டரண்ட பகிரண்டங்களை காணலாகும். அண்டத்தில் சித்தர்களும் ரிஷிகளும் அனேகருண்டு, அவர்களிடம் குளிகையை கொடுக்கலாகாது. குளிகையைக் கொடுத்துவிட்டால் உடனே அண்டத்தில் பாய்ந்து போய்விடுவார்கள்.

பாரப்பா அடுக்குகளில் புக்கிப்போவார்
பாய்ந்துபோய் நீயெங்கே தேடப்போறாய்
சேரப்பா அவருடைய மணியைவாங்கி
திறமாக கற்பமொன்று வாயில்போட்டு
காரப்பா அண்டத்தில் புக்கிப்போனால்
கடுகவே நூறுமணி வாயில்வைத்து
தூரப்பா கெவுனத்தில் தேடிப்பார்த்தால்
சுத்தியெங்கும் காணாமல் திகைத்திட்டாரே. (608)

பாய்ந்து வானவெளியில் உள்ள அடுக்குகளில் புகுந்து விடுவார்கள் நீ அவர்களைத் தேடமுடியாது, திருமூலருடைய மணியைவாங்கி வாயிலிட்டு அண்டத்தில் புகுந்துபோனார் ஒரு சித்தர், திருமூலரும் நூறுமணியை வாயில்வைத்து கெவுனத்தில் தேடிப்பார்த்தார் அச்சித்தரைக் காணாமல் திருமூலர் திகைத்து நின்றார்.

திகைத்திட்டுக் குகையில்வந்து சீஷருக்குச்
செப்பினோர் கேசுரத்தில் ஆடும்போது
பகைத்திட்ட சித்தர்கள்தான் அனேகம்கோடி
பாசிக்கும் குளிகையைத்தான் கேழ்ப்பார்கள் மக்காள்
நகைத்திட்டு அவர்கையில் ஈயவேண்டாம்
நலம்போலே ஏளிதமாய்ப் போகவேண்டாம்
பகைத்திட்டப் பாட்டாகச் சொல்லக்கேட்டேன்
பேய்மக்காள் புத்திகொண்டு பிழைத்திட்டேனே. (609)

திருமூலர் குகைக்குவந்து சீடர்கட்கு கேசரத்தில் ஆடும் போது சொன்னார். இவ்வாறு அனேககோடி சித்தர்கள் உண்டு குளிகையை சித்தர்கள் கேட்பார்கள், அவர்களிடம் குளிகையை கொடுக்க வேண்டாம். திருமூலர் பாடலாக சொன்னதை கேட்டேன் அவ்வகை சித்தர்களிடம் குளிகையைக் கொடுக்காது புத்தியுடன் பிழைத்திட்டேன்.

பிழைத்திட்டக் குளிகைகண்டு யோகம்பார்த்து
பேரான காயத்தை சுத்திபண்ணி
குழைத்திட்ட ஆத்தாளை பூசைபண்ணி
கூறறிய வஸ்துசுத்திப் பானம்பண்ணி
அகத்திட்டு வாசியைத்தான் அங்கென்றூணி
அடுக்காறு தலத்தில்நிற்கும் மட்சரமுங்கண்டு

தன்வந்திரி பகவான்

வளைத்திட்ட சந்திரனில் அமுர்தத்தையுண்டு
வளையோடே மனதூணிப் பாருபாரே. (610)

இவ்வகையில் குளிகையைக்கண்டு யோகம்பார்த்து உடலைச் சுத்தி செய்து, ஆத்தாளை பூசைசெய்து வஸ்து சுத்திபானம் பார்த்து வாசியை அங்கென்று ஊணி ஆறுதலத்தில் நிற்கும் அட்சரம்கண்டு சந்திரனில் அமுர்தத்தை உண்டு மனததை ஊன்றி பார்ப்பாயாக.

பார்த்திடவே தங்கமொன்று உருகும்போது
பரிவான சூதமொன்று கூடயீந்து
கார்த்திடவே நாகமொன்று கொடுத்துவாங்கு
காணிதுக்குள் சமனாகக் கெந்திகூட்டி
ஆர்த்திடவே வீரமொன்று பூரமொன்று
அழகாக நாலிலொன்று கூடக்கூட்டி
மார்த்திடவே கல்வத்தில் இதனைப்போட்டு
மல்லிகையின் இலைச்சாற்றில் அரைத்திடாயே. (611)

தங்கம் ஒன்று உருகையில் சூதம் ஒன்று, நாகம் ஒன்று கொடுத்து இதற்கு சமன் எடை கெந்தகம் சேர்த்து நாலில் ஒன்று வீரம், பூரம், கூட்டி கல்வத்திலிட்டு மல்லிகையின் இலைச்சாற்றில் மூன்றுநாள் அரைப்பாயாக.

அரைத்திடுவாய் தினமூன்று சாறுவிட்டு
அழகாகப் பொடியாக்கி குப்பிக்கேற்றி
நிறைத்திடுவாய் வாலுகையில் அடுப்பிலேற்றி
நேர்ப்பாகத் தீயெறிப்பாய் பன்னிரண்டு சாமம்
விரைத்திடுவாய் ஆயிபதம் பூசைபண்ணி
வெருளாதே எடுத்துப்பார் அருணன்போலாம்
கரைத்திடுவாய் ஆயிரத்துக் கொன்று ஈய
கைகண்ட மாற்றதுதான் இருபத்தஞ்சே. (612)

அரைத்ததை உலர்த்தி பொடிசெய்து குப்பிக்கேற்றி வாலுகையில் வைத்து அடுப்பேற்றி பனிரெண்டுசாமம் எரித்து ஆயிபதம் பூசை செய்து எடுத்துப்பார்க்க சூரியனைப்போல் செந்தூரமாகும், லோகம் ஆயிரத்துக்கு செந்தூரம் ஒன்று கொடுத்துருக்கு இருபத்தைந்து மாற்று தங்கமாகும்.

அயந்துமே செந்தூரம் பணந்தானொன்று
அனுபானந் தேனோடே மண்டலமே கொள்ளு
கொய்துமே நோய்களெல்லாம் தவிடுபொடியாகும்
கெடியான சித்தியுண்டாம் அருணன்போலாம்
துஞ்சுமே நரைதிரையும் எல்லாம்மாறும்
சுகசட்டை யொன்றுமே கக்கிப்போகும்

வஞ்சுமே கற்பாந்திர கோடிகாலம்
வாசியைநீ மூலத்தில் இருத்திப்பாரே. (613)

செந்தூரத்தைப் பணவெடை எடுத்து தேனை அனுபானமாக சேர்த்து ஒரு மண்டலம் உட்கொள்ள சகல நோய்களும் நீங்கி காயசித்தி உண்டாகி உடல்சூரியனைப் போலாகும், நரை, திரை, மாறி உடல்சட்டைக்கக்கும், கோடிகற்பாந்த காலம் வாழலாகும். வாசியை மூலத்தில் இருத்திப்பார்.

சவ்வீர வைப்பு

இருத்திட்ட சவ்வீர வைப்பைக்கேளு
எளிதான வெடியுப்புப் பலந்தானாலு
பொருத்திட்ட சீனமது பலந்தான் பத்துப்
புகழாக இதுரண்டுங் கல்வத்திட்டு
வருந்திடவே மேனிச்சார் விட்டு ஆட்டி
வகையாக வில்லைதட்டி உலரப்போடு
தருத்திடவே கலசத்தில் இதனைப்போட்டு
சக்கரமாம் பாளையைத்தான் மேலேமூடே. (614)

சவ்வீர வைப்புக்கூறுகிறேன், வெடியுப்பு நான்குபலம், சீனம் பத்துபலம், இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு மேனிச்சாறு விட்டு அரைத்து வில்லைத்தட்டி உலரப்போடு, இதை கலயத்தில் வைத்து சக்கரபாளையை கலயத்தின் மேலில் மூடுவாயாக.

மூடியே சீலைசெய்து அடுப்பிலேற்றி
முசியாமல் பீங்கானின் கிண்ணிவைத்து
சாடியே தணலெரிப்பாய் முச்சாமந்தான்
தன்னுக்குள் வேர்போ லிரங்கும்பாரு
வாடியே வெளுப்பாக இறங்கிநீரை
வகையாக ஆத்திவிடும் மறுகால்நீரை
தேடியே இதற்குள்ளே அடைத்துவைத்துச்
சிதறாமல் நீரெல்லாம் வாங்குவாங்கே. (615)

கலயத்தை சீலைமண்செய்து அடுப்பேற்றி பீங்கான்கிண்ணி வைத்து நெருப்பிட்டு மூன்றுசாமம் எரிக்க வெளுப்பாக இறங்கும்நீரை விட்டுவிட்டு மறு நீரை சேதப்படாமல் வாங்கி பத்திரப்படுத்து.

வாங்கியே சூதமொரு பலந்தானெட்டு
வகையாகப் பரும்பீங்கான் தன்னில்வைத்து
ஓங்கியெரிர் திராவகத்தை அதனிலிட்டு
உர்ப்பனத் தணலில் வைத்துக் களியாய்க்கிண்டி

தன்வந்திரி பகவான்

தேங்கியே மணல்போலே ஆகும்பாரு
சிறப்பாக கல்லுப்புப் பலந்தானொன்று
பாங்கியே துருசதுவும் பலந்தானாலு
பக்குவமாய்ப் பூநீறு பலந்தான்ரண்டே. (616)

சூதம் எட்டு பலத்தை ஒரு பீங்கானில் வைத்து மேற்படி திராவகத்தை அதனுள்விட்டு நெருப்பில்வைத்து பார்க்க மணல் போலாகும், கல்லுப்பு ஒருபலம், துரிசு நான்குபலம், பூநீறு இரண்டுபலம், மற்றும்.

வெடியுப்புத் திராவகம்

இரண்டோடே வெடியுப்பு ஒன்றரைதானப்பா
நேரான சீனமது ஒன்றரையுமாகும்
கன்றோடு அன்னமென்ற பேதிதானும்
கடுகவே ஒருபலந்தான் கூட்டப்போடு
தன்றோடு சாரமது அரைதான்போடு
சார்வான கல்லுப்புத் துருசுதன்னை
பன்றோடு பொடியாக வறுத்துப்போடு
பக்குவமாய் வெவ்வேறே பொடித்துவையே. (617)

வெடியுப்பு ஒன்னரை பலம், சீனம் ஒன்னரைப்பலம், அன்னபேதி ஒருபலம், சாரம் அரைபலம், கல்லுப்பு, துரிசு. பொடிசெய்து வறுத்து தனித்தனியாக வைத்திடு, எல்லாவற்றையும் தனித்தனியாகப்பொடித்து வைத்திடு.

வைத்ததெல்லாம் சூதத்தில் ஒன்றாய்ப்போடு
வாகாகப் பொடிசெய்துக் குப்பிக்கேற்றி
பைத்ததெல்லாம் அரைவாசி தானேபோட்டு
பக்குவமாய் வாலுகையில் மேலேவைத்து
நைத்தல்லோ தீப்போட்டுக் கமலம்போல
நாலுநாள் முச்சாமம் ஆறவிட்டு
கைத்தல்லோ பன்னிரண்டு சாமமானால்
கண்தேங்காய் போலிருக்கும் கடிதுதானே. (618)

மேற்படி சூதத்தில் மேற்படி பொடித்ததை கலந்து பொடித்து குப்பியில் அரைவாசிப்போட்டு வாலுகையின் மீதேற்றி கமலம்போல் மூன்று சாமம் நெடுப்பிடு, ஒருநாளுக்கு மூன்றுசாமம் வீதம், நான்கு நாள் எரித்து ஆறவிட்டு எடுத்துப்பார், தேங்காயைப் போல் சவ்வீரம் இருக்கும்.

தானென்ற சவ்வீரம் பொடிதான்சேரே
சமர்த்தான கல்லுப்பு ஒன்று முக்கால்

வானென்ற சவ்வீரம் பொடிக்குப்பாதி
மகத்தான துருசியென்ற பலந்தானப்பா
கானென்ற துருசிக்குப் பாதிப்பூநீர்
கனமான பூநீறுக்குச் சீன முக்கால்
வேனென்ற வெடியுப்புப் படியேயாகும்
வெடியுப்பு மூன்றிலொன்று சாரம்சேரே. (619)

மேற்படி சவ்வீரப்பொடிக்கு அரையளவு கல்லுப்பு கல்லுப்பு எடை துரிசு, துரிசுக்குபாதி பூநீர், பூநீருக்கு முக்காலளவு சீனம், வெடியுப்பு ஒருபடி, வெடியுப்புக்கு மூன்றில் ஒன்று சாரம், மற்றும்.

சேர்க்கவே அன்னமென்ற பேதிதானும்
சிறந்த பூநீறுக்குப் பாதியப்பா
ஆர்க்கவே பொடிசெய்து குப்பிக்கேற்றி
அரைவாசி வாலுகையில் மேலேபோட்டு
ஏற்கவே தீயிடுவாய் கமலம்போல
இதமாக நாலுநாள் சாமமப்பா
பார்க்கவே ஆரவிட்டு எடுத்தாயானால்
பக்குவமாய்ப் பன்னிரண்டு சாமந்தானே. (620)

மேற்படி பூநீரின் எடைக்கு பாதிஅளவு அன்னபேதி, இவைகளை அளவுடன் பொடித்து குப்பிக்கு ஏற்று, குப்பியை வாலுகையின் மேலே ஏற்றி கமலம்போல் தீயிட்டு நான்கு நாள் எரித்திடு. இவ்வாறு ஒருநாளைக்கு மூன்றுசாமம் வீதம் மொத்தம் பனிரெண்டு சாமம் எரித்து ஆறவிட்டு எடுத்துக்கொள்.

தானென்ற மும்முறை இப்படியே செய்தால்
சமர்த்தான கொச்சியென்ற பேருமாச்சு
கானென்ற பரங்கிவைப்பு என்று சொல்வார்
கனமான வீரத்தால் வாதமாச்சு
வேனென்ற வீரத்தைச் சுண்ணஞ்செய்தால்
வெருளாமல் தங்கமது பூப்போலாச்சு
தேனென்ற சரக்கெல்லாம் சுண்ணமாகும்
சிறுபிள்ளை ஆகுமிந்த வாதந்தானே. (621)

மூன்றுமுறை மேற்படி வகையில் எரித்துவாங்க கொச்சிவீரமாகும், பரங்கிவைப்பு என்றும் சொல்வார், இவ்வீரத்தால் வாதம் முடியும், வீரத்தை சுண்ணம் செய்தால் அவ்வீரச்சுண்ணத்தால் தங்கம் பூப்போலநீறும் மற்ற சரக்குகள் சுண்ணமாகும்.

வாதத்துக் காதியென்ற வீரப்போக்கை
    மறைத்தாரே நாதாக்கள் சித்தர்தாமும்
வேதத்தின் முஷ்டிபோல் ஒளிப்புமெத்த
    வெட்டவெளி ஆச்சுதென்றால் லோகமெல்லாம்
போதத்தில் பஞ்சகர்த்தாள் திருஷ்டிபோகும்
    பொன்மயமாய் உலகமெல்லாம் போகுமென்று
நீதத்தில் திறஞ்சொன்னார் இல்லையென்று
    நேர்ப்பாக எந்நூலில் சொன்னேன் பாரே. (622)

நாதாக்கள் சித்தர்களின் வீரத்தின் வாதமுறைகளை மறைத்துக் கூறினர், வீரத்தால் வாதமுறைகள் தெளிவாகிப்போனால் போதத்தில் பஞ்சகர்த்தாள், திருஷ்டிநீங்கும், உலகமெலாம் தங்கமயமாகும். யாரும் வெளிப்படையாக சொல்லவில்லை. நான் தெளிவாகும்படி இந்த நூலில் கூறிவிட்டேன்.

சொன்னதினால் சித்தரென்மேல் பகையுமாச்சு
    தோற்றாத கருவெல்லாம் வெட்டவெளியாகப்
பன்னதினால் பலனென்று விரித்துச் சொன்னேன்
    பார்த்தங்கே ஒப்பென்று மனதிலெண்ணி
சன்னதிலே மடப்பளிகள் சாத்திரத்திலில்லை
    சண்டாளர் கைகொடுக்கில் இந்தநூலை
மன்னதிலே நூல்கொடுத்தார் நரகமெய்தி
    மாண்டிறந்து கடைநரகில் மாள்வார்காணே. (623)

இந்த நூலில் தெளிவாகும்படி கூறிவிட்டதால் சித்தர்கள் என்மீது பகை கொண்டார்கள், கருவை எல்லாம் தெளிவாக கூறிவிட்டேன் பார்த்து மனதில் எண்ணி வாதத்தை முடித்துக்கொள். மற்றோர் சாஸ்திரத்தில் இம்முறைகள் தெளிவாக இல்லாமல் மறைப்பாக சொல்லிவிட்டனர். சண்டாளர்களிடம் இந்த நூலை கொடுத்துவிட்டால் உனக்கு நரகமெய்தும்.

காணவே நின்மூடன் வாதிகட்கு
    கைகொடுக்கில் இந்தநூல் கருவைப்பண்ணி
பூணவே பார்த்தலைந்து மோகங்கண்டு
    புளகிதமெய் மறந்துபோய்க் கொண்டேயேங்கி
ஆணவே தனமீய்ந்து கற்பழித்து
    ஆயருடன் தன்பாதம் பூசைபண்ணு
ஊணவே காமநோய் கண்டுயேங்கி
    உலகத்தில் நடக்கைதப்பி உழல்வான்தானே. (624)

மூட வாதிகள் இந்த நூலைப் பார்த்து வாதம்செய்து முடியாமல் அலைந்து மேகநோய்கண்டு மெய்மறந்து ஏங்கிப் பணம் கொடுத்து பெண்ணுறவு கொண்டு காமநோய்கண்டு உலகத்தில் நடத்தை தப்பி உழல்வான்.

தானான ஞானிகள்தான் இந்நூல்பார்த்தால்
சண்டாளப் பாசத்தை அறுத்துத்தள்ளி
ஊனான காயத்தை சுத்திபண்ணி
உற்றாறு தலங்களெல்லாம் சோதித்தேறி
பானான நீர்தாரைக் குள்ளேசொக்கி
பரத்துக்கு அடுக்கினின்று பானம்பண்ணி
ஆனான அன்னமரைத் தண்ணீர்கால்தான்
வருந்தியே ஒருபோதும் இருப்பர்தானே. (625)

ஞானிகள் இந்நூலை பார்த்தால் சண்டாளக்குணமான பாசத்தை விலக்கி உடலைச் சுத்தி செய்து ஆறு தலங்களை சோதித்து யேறி நீர்த்தாரைக்குள் (நிராதாரத்தில் என்று இருக்கலாம்) மனதை நிறுத்தி பரத்தின் அடுக்கில் நின்று பானம்கொண்டு அன்னம் அரை தண்ணீர்கால் ஒருபோது அருந்தி, இவ்வுலகில் நீண்டகாலம் வாசம் செய்வார்கள்.

இருந்திட்டக் கருவெல்லாம் எண்ணிப்பார்த்து
எளிதாகத் தொழில்செய்து ஏமங்கண்டு
திருந்திட்ட சிவனுடைய சொத்து என்று
சிலவுசெய்யக் கனமானக் கற்பத்துக்கு
பொருந்திட்ட மாத்திர மெடுத்துவித்து
பூசைத் திரவியத்துக்கும் கற்பத்துக்கும்
அருந்திட்டு மொன்றும் அறியார்போல
ஆசைவைத்து இருப்பார்கள் ஞானிதானே. (626)

ஞானிகள் கருவெல்லாம் ஆராய்ந்து பார்த்து வாதம்செய்து தங்கம்கண்டு இது சிவனுடைய சொத்து என்று பூசைப் பொருள்கட்கும் கற்பத்துக்கும் செலவுசெய்து கற்பமுண்டு ஏதும் அறியாதவர்போல இருப்பார்.

ஞானிக்கு வறுமைவந்தால் சகலசித்தும்பொய்யா
நாட்டிலுள்ள மனிதர்தான் நகைப்பாரென்று
ஞானிக்குப் பசிவந்தால் மனமலையுமென்று
நாதாக்கள் சொல்லாதக் கருவைச் சொன்னேன்
ஞானிக்கு மௌனநிலை பீடமாகும்
நயமான சதிரமது பற்றோயில்லை
ஞானிக்கு சொர்னமது குருவுக்காச்சு
நலமான சவ்வீர வைப்பைக்கேளே. (627)

ஞானிக்கு வறுமைவந்தால் சகலசித்தும் பொய்யாகும், நாட்டிலுள்ள மனிதர்கள் நகைப்பாரென்றும், பசி வந்தால் மனம் அலையும் என்றும் நாதாக்கள்

சொல்லாத கருக்களை சொல்லிவிட்டேன், ஞானிக்கு மௌனநிலை பீடமாகும். சதிரமது பற்று இல்லை, சொர்னமது குருவுக்காகும், சவ்வீர வைப்பைக் கூறுகிறேன்.

சிகப்பு சவ்வீரவைப்பு

கேளப்பா வெடியுப்பு பலமோநூறு
  கெடியான சீனமது நூற்றுப்பத்து
வாளப்பா சவுட்டுமண் ணிருபத்தஞ்சு
  மருவியதோர் துருசதுவு முப்பதாகும்
நாளப்பா நவாச்சாரம் பலமும்பத்து
  நட்பான சத்தியென்ற சாரமஞ்சு
காடப்பா கல்லுப்பு பலமுமஞ்சு
  கடிதாகக் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணே. (628)

வெடியுப்பு நூறுபலம், சீனம் நூற்றிபத்துபலம், சவுட்டுமண் இருபத்தைந்துபலம், துரிசு முப்பதுபலம், நவாச்சாரம் பத்துபலம், சத்திசாரம் ஐந்துபலம், கல்லுப்பு ஐந்துபலம், இவைகளை எடுத்து கல்வத்திலிட்டு பொடி செய்வாயாக.

பொடிசெய்து பிரண்டைச்சார் தன்னினாலே
  பேணியரை ஏழுநாள் வில்லைசெய்து
கெடிபண்ணி ரவிதனிலே யுலரப்போட்டுக்
  கெட்டியாய்ப் பாண்டத்தி லரைவாசியிட்டு
தடமான சக்கரமாம் பாளைதன்னில்
  சாங்கமாய் மூடியெல்லா சமனம்செய்து
துடிபண்ணி அடுப்பேற்றித் தீயை மூட்டித்
  துப்புரவாய்த் தீ நீரைவாங்குவாங்கே. (629)

பொடி செய்ததை பிரண்டைச்சாறுவிட்டு ஏழுநாள் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலரவைத்து பாண்டத்தில் அரைவாசி போட்டு சக்கரம்பாளையை கொண்டு பாண்டத்தை மூடி சமன் செய்து அடுப்பேற்றி தீயைமூட்டு கடைசிவரை தீநீரை வாங்குவாயாக.

நீரிலே வெள்ளைநீர் தனையகற்றி
  நேர்ப்பாகச் சிவந்தநீர் தன்னைவாங்கி
சீறிலே அரக்கான குய்யான்தன்னில்
  சிறப்பாக அடைத்துச் சேதிகேளு
தூரிலே சூதமது பலந்தான்பத்து
  சூட்சாதிக் கல்லுப்பு பலமேஅஞ்சு
மூரிலே துரிசியது பலந்தான்ரண்டு
  வுற்பனமாம் வெடியுப்புக் பலம்ரண்டாமே. (630)

முதலில் வரும் வெள்ளைநீரை விலக்கி, சிவந்த நீரை வாங்கி அரக்குக்குப்பிக்குள் பத்திரப்படுத்து, சூதம்பத்துபலம், கல்லுப்பு ஐந்துபலம், துரிசு இரண்டுபலம், வெடியுப்பு இரண்டுபலம், மற்றும்.

ஆமப்பா சீனமது பலமேரண்டு
அன்னமென்ற பேதியது பலமேரண்டு
ஓமப்பா சாரமது பலமுமிரண்டு
வுறுதியாம் பூநீறு பலமுமிரண்டு
காமப்பா லிங்கமது பலமுமிரண்டு
கம்பிக் கற்பூரமதுப் பலமும்எட்டு
நாமப்பா வெள்ளையது பலமும்ரண்டு
நற்கெவுரி மனோசிலையும் ஒன்றுபோடே. (631)

சீனம் இரண்டுபலம், அன்னபேதி இரண்டுபலம், சாரம் இரண்டுபலம், பூநீறு இரண்டுபலம், லிங்கம் இரண்டுபலம், கம்பிக்கற்பூரம் எட்டுபலம், வெள்ளை இரண்டுபலம், கெவுரி, மனோசிலை வகைக்கு ஒருபலம், மற்றும்.

போடப்பா பலம்ஒன்று கெந்திதானும்
புகழான சூடனது பலமும்ஒன்று
வாடவே தொட்டியது அப்பிரேகம்
நிமிளைவத்த மொருஅக்கிராம காதலோகம்
தேடவே கற்காவி சாஸ்திரபேதி
சிறப்பான சிங்கியொடு குதிரைப்பல்லும்
நீடவே அஞ்சனக்கல் துத்தத்தோடு
நெடிதான சிலாசத்து கல்நார்தானே. (632)

கெந்தகம் ஒருபலம் சூடன் ஒருபலம் தொட்டி அப்ரேகம், நிமிளை, வத்தம், (அக்கிராம காதலோகம் என்பது பிழை, சரியான வார்த்தை தெரியவில்லை) கற்காவி, சாஸ்திரபேதி, சிங்கி, குதிரைப்பல், அஞ்சனக்கல், துத்தம், சிலாசத்து, கல்நார், மற்றும்.

தானென்றக் கடல்நுரையு மொவ்வொன்றுபலந்தான்
தாக்கியரை எட்டுநாள் திராவகத்தைவிட்டு
பானென்ற ரவிதனிலே வுலரப்போட்டுப்
பரும்பீங்கான் தன்னிலிட்டுத் தணலிலிட்டு
ஊனேன்ற பொடிபோலே வறுத்துக்கொண்டு
வுற்பனமாய்க் காசியென்ற மேருக்கேற்றி
வானென்ற அரைவாசி மட்டும்போட்டு
மயங்காதே வாலுகையில் வைத்திடாயே. (633)

கடல்நுரை இவைகள் வகைக்கு ஒருபலம் எடுத்து மேற்படி சரக்குடன் கலந்து மேற்படி இறக்கின திராவகம்விட்டு எட்டு நாள் அரைத்து வெய்யிலில் காயவைத்து

பீங்கானில் வைத்து நெருப்பில் வைத்து பொடிபோல் வறுத்துக்கொண்டு மேருவிலேற்றி வாலுகையில் ஏற்றுவாயாக.

வைத்திட்டுத் தீயெரிப்பாய் ரண்டுசாமம்
மிதமான தீபமா யாறவிட்டு
கைத்திட்டுத் தீபம்போல் எரிப்பாய்மைந்தா
கலங்காதே பன்னிரண்டு சாமந்தானும்
மொய்த்திட்டுப் பகல்முழுதும் தீயேபோட்டு
முயற்சியாய் மறுகாலம் ஆறவிட்டு
நைத்திட்டு ஆறுநா ளானபின்பு
நயமானப் பதம்பார்த்து யிறக்கிடாயே. (634)

வாலுகையை அடுப்பேற்றி இரண்டுசாமம் தீபம்போல் தீயெரித்து ஆறவிட்டு மறுநாள் இரண்டுசாமம் தீபம்போல் தீயெரிப்பாய் இவ்வாறு ஆறுநாள் பனிரெண்டுசாமம் எரித்து பதம்பார்த்து இறக்கிக்கொள்.

இறக்கியே குப்பியில்தான் மருந்துங்கூட்டி
யிதமாகத் திராவகத்தி லரைத்துலர்த்தி
நறுக்கியே முன்போலப் பொடியாய்ப்பண்ணி
நலமான காசியென்ற மேருக்கேற்றி
உருக்கியே வாலுகெம்பின் மேலேவைத்து
வுற்பனமாய்த் தீயிட்டு வாறுசாமம்
மறுக்கியே ஆறவிட்டு எடுத்துவாங்கி
மறுநாளும் முன்போலே சரியாய்க்கூட்டே. (635)

இறக்கிய கும்பியில் உள்ள மருந்தை எடுத்து அதனுடன் முன் சரக்குகளைச் சேர்த்து முன் திராவகத்தைவிட்டு அரைத்து வெய்யிலில் உலர்த்தி பொடிசெய்து காசிமேருக்கேற்றி வாலுகையில்வைத்து அடுப்பேற்றி ஆறுசாமம் தீயிட்டு ஆறவிட்டு எடுத்து மருந்தை எடுத்து முன் போல் சரக்குகளை சேர்த்துக்கொள்.

கூட்டியே இம்முறையாய் செய்வாயானால்
கொச்சிவைப்பாய் சவ்வீர மிருக்கும்பாரு
நீட்டியே நிருவிஷமு மஞ்சுகெடியான
அலரிவேர் பட்டையுடன் பலமும்பத்து
மூட்டியே கந்தகந்தான் பலமும்ரண்டு
முட்டையாம் மஞ்சளென்றக் கருவாலாட்டி
வாட்டியே வில்லைபண்ணிப் புடத்தயிலம்வாங்கி
வகையான வீரத்தில் சுறுக்குப்போடே. (636)

பரங்கிப் பட்டைப் பாஷாணவைப்பு

போட்டுள்ளே மெழுகானப் பதத்தில்வாங்கிப்
பொன்ரேக்குச் சுத்திவைக்கத் தின்றுபோடும்
நீட்டெனே ஒன்றுக்கு நாலுதங்கம்
நிகழாக சுத்திவைக்கத் தின்றுபோடும்
மூட்டுடனே வாயிரத்துக் கொன்றேயீய
முசியாமல் பதினாறு மாற்றுமாகும்
மாட்டுடனே உபரசங்க ளீயமாகும்
மாசற்ற வீரத்தை யொளித்தார்பாரே. (637)

சுருக்கிட மெழுகான பதத்தில்வாங்கி தங்கரேக்கு சுற்றி நெருப்பில் வாட்ட மெழுகு ரேக்கை வாங்கிக்கொள்ளும், ஒரு பங்கு மெழுகுக்கு நாலுபங்கு தங்கரேக்கைக்கொடு, லோகங்களில் ஆயிரத்துக்கு ஒருபங்கு மெழுகை கொடுக்க பதினாறு மாற்றுத்தங்கமாகும், இம்மெழுகால் உபரசங்கள் ஈயமாகும், வீரத்தின் முறைகளை மற்றோர் மறைத்து பாடிவிட்டனர்.

ஒளித்தாரே நாதாக்கள் என்று சொல்லி
வுத்தமன்யான் பார்த்ததுக்கு வுண்மையாக
வளித்தாரே லோகத்தோர் பிழைக்கவென்று
வாச்சரிய வீரம்விட்டால் வாதம்போச்சு
களித்தாரே முன்சொன்ன வீரமெல்லாம்
காரமிட்டு வீயத்து;க்காகும்
சுளித்தாரே யேமமொன்றுங் காணாதேங்கிச்
சுணங்கலாய்ச் சுட்டலைந்து மாள்வான்றானே. (638)

நான் தெளிவாகும்படி வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன் உலகத்தோர் இதைகண்டு பிழைத்து கொள்வார், வீரம்விட்டால் வாதம் முடியாது, முன்சொன்ன வீரமெல்லாம் காரமிட்டு லோகத்தில் கொடுத்து தங்கம்காணாது ஏங்கி சுட்டலைந்துமாள்வான்.

பரங்கிப் பாஷாணவைப்பு

மாளாமல் பரங்கியென்றப் பாஷாணத்தை
வைக்கிறதோர் முறைகேளு மக்கள்தானே
தாளாமல் சூதமொரு பலந்தான்பத்து
சாதகமா ய்க்கல்லுப்புப் பலந்தானெட்டு
மீளாமல் வெள்ளையென்ற பாஷாணமைந்து
விரவியே கல்வத்தில் பொடித்துக்கொண்டு
கேளாமல் திராவகத்தை எட்டுநாள்மட்டும்
கெடியாகப் பொடிபண்ணி மேருக்கேற்றே. (639)

தன்வந்திரி பகவான்

பரங்கிபாசாண வைப்பைக் கூறுகிறேன், சூதம்பத்துபலம், கல்லுப்பு எட்டுபலம், வெள்ளைப்பாசாணம் ஐந்துபலம், இவைகளை கல்வத்தில் பொடித்துக்கொண்டு திராவகத்தைவிட்டு எட்டுநாள் அரைத்து உலரவைத்து பொடிசெய்து மேருக்கேற்றுவாயாக.

மேருக்கே ஏற்றியபின் வாலுகையில்வைத்து
மிதமான தீயிட்டக்கே பன்னிரண்டுசாமம்
பேருக்கே பதங்கமது யிறுகியேறும்
பெருந்தேங்காய் போலிருக்கும் பாஷாணந்தான்
போருக்கு முன்போல மருந்துகூட்டுப்
புகலாக திராவகத்தை விட்டுஆட்டி
பாருக்கே பொடிபண்ணி மேருக்கேற்றிப்
பக்குவமாய் வாலுகையில் பதித்திடாயே. (640)

மேற்படி மேருவை வாலுகையில் வைத்து அடுப்பேற்றி பனிரெண்டு சாமம் தீயிட பதங்கம் இறுகியேறும் தேங்காய்ப்போல் பாஷாணம் இருக்கும், முன் அளவில் முன் சரக்குகளை சேர்த்து திராவகத்தால் அரைத்து உலர்த்தி பொடித்து மேருக்கேற்றி வாலுகையில்.

பதித்திடவே பன்னிரண்டு சாமம்தீயைப்
பகல்முழுதும் எரியிட்டு ஆறப்போடு
விதித்திட்டப் பக்குவத்தி லிறக்கிப்பாரு
மேலோடு தள்ளியே பொடியாய்ப்பண்ணி
மதித்திட்ட முன்போல மருந்துகூட்டி
மறவாமல் மூன்றுதரந் தீய்ந்தாயானால்
கதித்திட்ட பரங்கியென்ற பாஷாணந்தான்
கண்ணிமைக்கு ளாகிவித்தை யாடும்பாரே. (641)

வாலுகையை அடுப்பேற்றி பனிரெண்டுசாமம் தீயிட்டு ஆறவிட்டு இறக்கி உள்ளிருக்கும் மருந்து எடுத்து முன்சரக்குகளை முன் அளவுடன் இட்டு திராவகத்தால் அரைத்து உலர்த்தி மேருக்கேற்றி வாலுகையில் வைத்து தீயிடு இவ்வாறு மூன்றுமுறை முடிந்தபின் பார்த்தால் பரங்கிபாஷாணம் இருக்கும், கண்ணிமைக்கும் நேரத்தில் வேதை உண்டாகும்.

பாரப்பா பரங்கியென்ற பாஷாணந்தான்
பலமெடுத்து அயச்சட்டிக் குள்ளேவைத்து
நேரப்பா துண்டிப்பா நாலுசாமம்
நீந்தாதே சுரக்கிடவே மெழுகாய்ப்போகும்
தூரப்பா விரும்புசெம்பு நூற்றுக்கொன்றீய
துடியான ரசிதமதுப் பதினைந்தாகும்

சீரப்பா சரக்கெல்லாம் கட்டிப்போகும்
சிறுபிள்ளை யாகுமிந்த வாதந்தானே. (642)

மேற்படி பரங்கிப் பாசாணத்தை ஒருபலமெடுத்து அயச்சட்டிக்குள் வைத்து திராவகத்தால் நான்குசாமம் சுருக்கிட மெழுகாகும், இரும்பு, செம்பில், நூற்றுக்கு ஒருபங்கு மெழுகு கொடுத்துருக்கு பதினைந்து மாற்றுடைய வெள்ளியாகும், சரக்குகள் கட்டும், சிறுபிள்ளைகூட இதனால் வேதையை முடிக்கும்.

நூல்முறை

வாதமென்றால் கொஞ்சத்தில் கிடைக்குமோதான்
மகத்தான யோகிமுதல் ரிஷிகள்சித்தர்
நீதமென்றப் பஞ்சகர்த்தா ளிவர்களெல்லாம்
நேர்ப்பாகப் பார்க்கையிலும் தப்பிப்போகும்
வேதமென்ற அந்தரத்தின் முடிவுக்கேற்கும்
விரைந்தமனோ மணித்தாயார் சொல்லயானும்
பாதமென்றே சிரசில்வைத்துக் கேட்டுக்கேட்டுப்
பட்சமாய் பிள்ளைகட்கு வுரைசெய்தேனே. (643)

வாதம் என்பது எளிதில் கிடைப்பதல்ல, யோகிகள், ரிஷிகள், சித்தர், பஞ்சகர்த்தாள் இவர்கலெல்லாம் நேராக பார்க்கும் போதும் வாதம் தப்பிப் போகும், மனோன்மணி தாயார் சொல்ல, நான் அவர் பாதத்தை சிரசில் வைத்து கேட்டு, பிள்ளைகட்கு கூறிவிட்டேன்.

உரைசெய்தார் சித்தர்கள்தா னனேகங்கோடி
யுத்தமனே அகத்தியர்தா னெடுத்துப்பாவாய்
நிரைசெய்த நவகாண்டம் சொன்னாரையா
நேர்ப்பான வெண்பாவாய் கோரக்கர்தாமும்
திரைசெய்தார் ஏழாயிர முடிவுசொன்னார்
திரட்டிமச்ச முனியேழு கண்டஞ்சொன்னார்
பரைசெய்த சிவவாக்கியர் அஞ்சுகாண்டம்
போக்கோடே சித்தர்சொன்னார் கரைகாணேனே. (644)

சித்தர்கள் அனேகங்கோடி உறைசொன்னார், அகத்தியர் நவகாண்டம் சொன்னார், கோரக்கர் வெண்பாவாக ஏழாயிரம் முடிவு சொன்னார், மச்சமுனி ஏழுகாண்டம் சொன்னார், சிவவாக்கியர் ஐந்து காண்டம் சொன்னார், இவர்கள் சொன்னதில் நான் முடிவு காணவில்லை.

காணாத காசிபர்தான் வண்ணஞ்சொன்னார்
கரையாத ரோமமுனி வடுகில்சொன்னார்

பூணாத ராமதேவர் சந்தப்பாசொன்னார்
புகலரிய நந்திகள்தா னனந்தஞ்சொன்னார்
சோணாத திருமூலர் தேவர்தாமும்
சொன்னதிரு மந்திரந்தா னனேகங்கோடி
ஊணாத வரரிஷிக ளனந்தஞ்சொன்னார்
உற்றபிர்ம மந்திரந்தான் காடுகாடே. (645)

காசிபர் வண்ணம் சொன்னார், ரோமமுனி வடுகில் சொன்னர், நந்தீசர் அனேகம் சொன்னார், திருமூலர் திருமந்திரம் அனேகம் சொன்னார், வரரிஷி பிர்ம மந்திரத்தை அனேகம் சொன்னார்.

காடாகப் போகாமல் பதஞ்சலியமூர்த்தி
கணக்கோடே ஏமுகாண்டஞ் சொன்னாரையா
தோடாகச் சட்டைமுனி நிகண்டோடொக்கத்
துயரமா யிருபத்து ஏழுநூறுபாடல்
பாடாகக் காலாங்கி நாயர்தாமும்
பக்குவமாய் நடுக்காண்டஞ் சொன்னாரையா
நாடாகக் கிருந்தபேர்க் குதவியென்று
நலம்பெறவே ஏழுகாண்டஞ் சொன்னேன்பாரே. (646)

பதஞ்சலியமூர்த்தி ஏழுகாண்டம் சொன்னார், சட்டைமுனி நிகண்டுடன் இரண்டாயிரத்து ஏழுநூறு பாடல்கள் கூறினார், காலங்கி நாயர் நடு காண்டம் கூறினார், நான் ஏழுகாண்டம் கூறினேன்.

பார்க்கவே யேழையுந்தான் எழுநூறாக
பரிவாகச் சொல்லிவிட்டேன் சூத்திரந்தான்
ஏற்கவே யென்பிள்ளை கொங்கணர்தானப்பா
யெழில்மூன்று ஆயிரத் தெண்ணூறுஞ்சொன்னார்
சேர்க்கவே சட்டைமுனி முன்னூல்நன்று
செசமறியக் கொங்கணர்தாம் நூலும்நன்று
கார்க்கவே சங்குமாமுனி நூலும்நன்று
கருதியே மனமூன்றிப் பாருபாரே. (647)

ஏழுகாண்டத்தையும் ஏழுநூறு பாடலாக சூத்திரமாக கூறினேன், என் சீடர் கொங்கணவர் மூன்றாயிரத்து தொண்ணூறுபாடல்களாக வாதகாவியத்தை கூறினார், சட்டைமுனி கூறிய முன்சொன்ன நூல் நன்று, கொங்கணவர் நூலும் நன்று சங்கு மாமுனி நூலும் நன்று, மனம் ஊன்றி இந்நூல்களை ஆராய்ந்து பார்ப்பாயாக.

பாரப்பா மற்றமற்ற நூல்ளெல்லாம்
பரிவான கருவாகச் சொன்னாரையா
நேரப்பா கண்ணாடி முகம்போல
நேர்ப்பாகச் சொல்லிவைத்தார் ராமதேவர்

தேரப்பா சாஸ்திரங்கள் பார்க்கப்பார்க்கத்
திருட்டெல்லாம் வெளியாகு மறைவுமில்லை
ஆரப்பா என்னுடைய நூலைக்கண்டால்
ஆதியென்ற கொங்கணர்தான் கரைகண்டாரே. (648)

மற்ற நூல்களில் கருவாக சொன்னார்கள், கண்ணாடியில் பார்க்கும் முகம்போல தெளிவாக சொன்னார் ராமதேவர், சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்க்க அதிலுள்ள மறைப்பு உனக்கு தெளிவாகும், என்னுடைய நூலைக் கண்டு கொங்கணவர் வாதத்தில் முடிவுகண்டார்.

சோறைவீரவைப்பு

கரையென்ற சோறையென்ற வீரவைப்புக்
காட்டுகிறேன் கருவாகக் கேளுமக்காள்
பரைகண்ட சவ்வீரம் பலந்தானெட்டுப்
பாய்ச்சி நன்றாய்க் கல்வத்தில் எடுத்துக்கொண்டு
திரைகண்ட கல்லுப்புச் சுண்ணம்ரண்டு
திறமான துருசியது சுண்ணம்ரண்டு
வகைகண்ட சீனமது பலமுமெட்டு
வாகான வெடியுப்புச் சுண்ணமிரண்டே. (649)

சோறை வீரவைப்பைக் கூறிகிறேன், சவ்வீரம் எட்டு பலம், எடுத்து கல்வத்திலிட்டு அத்துடன் கல்லுப்புச் சுண்ணம் இரண்டு பலம், துரிசுச் சுண்ணம் இரண்டுபலம், சீனம் எட்டுப் பலம், வெடியுப்புச் சுண்ணம் இரண்டுபலம்.

ரெண்டான சாரமது சுண்ணம்ரண்டு
நேர்ப்பான சீனமது சுண்ணம்ரண்டு
பண்டான அன்னமென்றே பேதிரண்டு
பாங்கான பொடியோடே யொக்கக்கூட்டி
தண்டான மேருவுக்கு அரைவாசிப்போட்டு
சாதகமாய் வாலுகையின் மேலேவைத்து
செண்டான அடுப்பேற்றி வைப்பாயப்பா
செகமரிய பன்னிரண்டு சாமந்தானே. (650)

மேலும் சாரச்சுண்ணம் இரண்டு பலம், சீனச்சுண்ணம் இரண்டுபலம், அன்னபேதி இரண்டுபலம், இவைகளை மேற்படி சவ்வீரத்துடன் சேர்த்து பொடி செய்து மேருவுக்கு அரை அளவிட்டு வாலுகையின் மேல்வைத்து அடுப்பேற்றி பனிரெண்டு சாமம் தீயிடு.

தானென்ற வீரத்தை எடுத்துப்பார்த்தால்
சாதகமாய் அடியிலே தானேநிற்கும்

தன்வந்திரி பகவான்

கானென்ற குருவாகும் தண்ணியிலே குழைத்துச்
சிறப்பான காகத்தி னிறகிற்பூச
கோனென்ற கொக்கிறகு போலேயாகும்
கொடிதான வீரத்தின் குளிகைப்போக்கு
தேனென்ற பதங்கம்போ லிருக்கும்பாரு
திறமான கொள்ளையதில் வாதந்தானே. (651)

மேற்படி தீயிட்டு வீரத்தை எடுத்துபார்க்க அடியில் நிற்கும், இவ்வீரத்தை தண்ணிரில் குழைத்து காக்கை இறகில் பூச கொக்கின் இறகு போல் வெள்ளையாகும், வீரத்தின் குளிகைப்போக்கு பதங்கம் போல் இருக்கும், இதில் அளவில்லா வேதையுண்டாகும்.

துருசுகுரு

வாதந்தான் எப்படித்தான் வருகுமக்காள்
மகத்தான துருசுநீர் பண்ணவேண்டும்
சூதந்தான் தன்னையல்லோ கட்டவேண்டும்
துடியான சூதமல்லோ காயசித்தி
வேதமென்ற பொருளறிந்தால் ஞானியாவான்
விரைந்தாறு தலங்கண்டால் யோகியாவான்
காதந்தான் என்றுசொல்ல வேதையாடக்
கலந்தோடி நடந்த :க்கால் துலையும்பாரே. (652)

வாதம் முடிக்கும் முறையைக் கூறுகிறேன் துரிசுசுண்ணம் முடிக்க வேண்டும் சூதத்தால் காயசித்தியுண்டாகும், வேதத்தின் பொருளை அறிந்தவர் ஞானி, ஆறுதலம் கண்டால் யோகி.

பார்ப்பதுபோல் துருசியொரு பலத்தைவாங்கிப்
பரிவான சோறையென்ற வீரந்தன்னை
சேர்ப்பதுதான் முக்காசி யிடையேதூக்கி
செயமான வாய்நீரால் மத்திச்சேதான்
கார்ப்பதுதான் துருசியின்மேல் பூசுபூசு
கனமான ரவிதனிலே போடுபோடு
தோர்ப்பதுநாள் பத்து முறை போட்டாயானால்
சுகமான துரிசியது நீறுமாமே. (653)

துரிசு ஒருபலம், சோறைவீரம் மூன்று காசு எடை எடுத்து வாய்நீரால் மத்தித்து மேற்படி துரிசுக்கு பூசி வெய்யிலில் பத்துநாள்போட துரிசு சுண்ணமாகும்.

ஆமேதான் சாறுவராத் தழைகளெல்லாம்
அத்தட்டிமெள்ளப் பக்குவமாய்ப் பிழியத்தண்ணீர்

போமேதான் பாலெல்லா மிறந்துநீரும்
பிரட்டில்லைச் சுத்தசலம் போலேயாகும்
வேமேதான் சரக்குகளில் சுருக்குப்போட
விடுபட மெழுகாகும் வேதையாகும்
ஒமேதான் நவலோக மீய்ந்தாயானால்
ஒருகோடிக் கோடுமிதுவு சத்திதானே. (654)

சாறுவராத மூலிகைகளில் துரிசு சுண்ணத்தை இட்டு இடித்துப்பிழிய சுத்தசலம்போல நீர்வடியும், இந்நீரை சரக்குகட்கு சுருக்கிட சரக்குகள் மெழுகாகும், இம்மெழுகை நவலோகங் கட்கு கொடுக்க தங்கமாகும், வேதை கோடிக்கு ஓடும்.

உசத்தியென்ற விராலியிலைக் குள்ளேகேளு
உரலிலிட்டு யீய்ந்தபின்பு துருசிசுண்ணம்
புசத்தியென்ற விராகனிடை யதிலேபோட்டு
பிசைந்துவைத்துக் கிண்டியபின் பிழியத்தண்ணீர்
தசத்தியென்ற சூதமது சட்டியிட்டு
மகிழ்வாக விருசாம மெரித்தபின்பு
நசத்தியென்ற யிட்டலிபோ லாகும்பாரு
நாமறியோ மிதுபோற போக்குத்தானே. (655)

விராலியிலையை உரலிலிட்டு துரிசு சுண்ணம் விராகன் எடை சேர்த்து பிசைந்து பிழிய சாறுவரும், சூதத்தைச் சட்டியில் இட்டு மேற்படி பிழிந்த சாறைவிட்டு இருசாமம் எரிக்க இட்டலிபோல் ரசம் கட்டி இருக்கும்.

போக்காகச் சூதத்தில் தங்கமிட்டு
பேரான கெந்தகமோ சரியாய்க்கூட்டித்
தேக்கான தாளகமும் சிலையும்வீரம்
திறமான மல்லிகையின் சாற்றாலாட்டி
நோக்கான குப்பியிலே பொடியாய்ப்போட்டு
நுகர்ந்துநன்றாய் வாலுகையில் செந்தூரித்து
வாக்கான ஆயிரத்துக் கொன்றேயீய
மாற்றென்ன பதினெட்டுக் காணுந்தானே. (656)

மேற்படி கட்டிய சூதம் உருகும்போது தங்கமிட்டு இதற்கு சரிஎடை கெந்தகம்சேர்த்து தாளகம், மனோசிலை, வீரம், இவைகளை அளவுடன் கூட்டி மல்லிகையின் சாற்றால் அரைத்து காயவைத்து பொடிசெய்து குப்பிக்கு அரைஅளவு இட்டு வாலுகையின் மேலேற்றி எரிக்க செந்தூரமாகும், லோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று செந்தூரம் கொடுக்க பதினெட்டு மாற்று தங்கமாகும்.

தன்வந்திரிபகவான்

தானென்ற வுப்ரசங்கள் நூற்றிரண்டுபத்து
 தளமான பாஷாணம் அறுபத்துநாலு
தோனென்ற லவணவகை யிருபத்தஞ்சு
 சொல்முறையாய் நவலோக ரத்தினங்கள்
ஆனந்த மிதுவெல்லாம் சத்தாய்வாங்கி
 அழகான சூதத்தில் ஒல்வொன்றாயீய்ந்து
பூணந்தக் குடோரியது கக்கப்பண்ணிப்
 புகழான சாரணையில் சாய்த்திடாயே. (657)

உபரசங்கள் நூற்றி இருபது, பாசாணம் அறுபத்து நான்கு, காரசாரம், லவணங்களின் வகை இருபத்தைந்து, லோகங்கள் ஒன்பது, ரத்தினவகை ஒன்பது இவைகளில் முறைப்படி சத்து எடுத்து மேற்படி ரசக்கட்டிற்கு ஒவ்வொன்றாய் கொடுத்து குடோரி கொடுத்து மீண்டும் விடுவித்து சாரணையைத் தீர்ப்பாயாக.

சாய்த்திடவே யொருதரந்தா னுபரசத்திலீய்ந்து
 சாதகமாய் சகமென்ற குளிகையாச்சு
வாய்த்திடவே ரண்டுதரந் தீர்த்தாயானால்
 மாசற்ற யோகிபெ ன்ற குளிகையாச்சு
வாய்த்திடவே மூன்றுதரந் தீர்ந்தாயானால்
 மகத்தான பொடியென்ற குளிகையாச்சு
ஆப்த்திடவே யஞ்சுதரம் தீர்ந்தாயானால்
 அட்டமா குளிகையென்று அறிந்திடாயே. (658)

மேற்படி வகையில் ஒருமுறை சாரணையை தீர்க்க சக குளிகையாகும், இரண்டு முறை சாரணையை தீர்க்க யோகி குளிகையாகும், மூன்று முறை சாரணையை தீர்க்க பொடி குளிகையாகும், ஐந்து முறை சாரணையை தீர்க்க அட்டமா குளிகையாகும்.

அறிந்திட்டு ஏமுதரம் தீர்த்தாயானால்
 அப்பனே மோகினியாங் குளிகையாச்சு
தெறிந்திடவே யிருநாலு சாரணை தீர்த்தாயானால்
 பேசரிய பரமவொளி குளிகையாச்சு
கறிந்திட்டப் பனிரெண்டு தீர்த்தாயானால்
 செகமறிய அஷ்டமா சித்தியாச்சு
பிறிந்திடவே பதினாலுந் தீர்ந்தாயானால்
 கமலினியாம் குளிகையென்ற குளிகையாச்சே. (659)

ஏழுமுறை சாரணைதீர்க்க மோகினி குளிகையாகும், எட்டுமுறை சாரணைதீர்க்க பரமவொளிக்குளிகையாகும் பனிரெண்டுமுறை சாரணைதீர்க்க அட்டமாசித்தி குளிகையாகும். பதினான்குமுறை சாரணைதீர்க்க கமலினிகுளிகையாகும்.

குளிகை விபரம்

ஆச்சப்பா பதினாறு தரமுத்தீர்த்தால்
அப்பனே சந்தானக் குளிகையாச்சு
பேச்சப்பா பதினேழு தரமுத்தீர்த்தால்
பேரான சொரூபமென்ற குளிகையாச்சு
வாச்சப்பா சொரூபமென்ற குளிகையாலே
வகையான வெகுகோடி வேதையாச்சு
மூச்சப்பா கலம்போலே யிருக்கும்பாரு
முசியாத வேதைக்கு மேவலாமே. (660)

பதினாறு முறை குளிகைக்கு சாரணைதீர்க்க சந்தானக்குளிகையாகும் பதினேழுமுறை சாரணையைத்தீர்க்க சொரூபக் குளிகையாகும் இந்த சொரூபக் குளிகையால் வெகுகோடி வேதையாகும், வாசி அடங்கும்.

லிங்கமெழுகு

மேவவே துருசியென்ற குருவைத்தொட்டு
விளம்புகிறேன் காக்கானின் பூவைவாங்கி
பாவவே துரிசியிட்டுப் பிழிந்துகொண்டு
பருவமுள்ள அயச்சட்டிக் குள்ளேவார்த்து
ஆவவே நெடுங்கம்பி லிங்கமொன்று
அதைப்பொடித்து அயச்சட்டிக் குள்ளேபோட்டு
காவவே வெடியுப்பு காசிடையே போட்டுக்
கனமான அடுப்பேற்றித் தீயைமூட்டே. (661)

துரிசி குருவை காக்கணம் பூவிலிட்டு கசக்கிப்பிழிந்து சாறு எடுத்து அயச்சட்டிக்குள்ளிட்டு கம்பிலிங்கம் ஒருபலத்தைப் பொடித்து மேற்படி அயச்சட்டிக்குள்ளிட்டு வெடியுப்பு ஒரு காசு எடை சேர்த்து அடுப்பேற்றி தீயை மூட்டுவாயாக

மூட்டவே வெந்துநன்றாய் மெழுகுமாகும்
முனியவே வழித்தெடுத்துப் பீங்கானில்வைத்து
நாட்டவே நவலோகம் நூற்றுக்கொன்றீய
நலமான மாற்றென்ன பத்தரையே காணும்
ஆட்டவே திணங்குன்றி யுள்ளேகொள்ள
அருணன்போல் தேகமுமாங் கண்டுகொள்ளு

பூட்டவே நரையெல்லாம் மாறிப்போகும்
பொற்சடையோன் தேகமுமாங் கண்டுகொள்ளே. (662)

லிங்கம் மெழுகாகும், மெழுகை வழித்து பீங்கானில் பத்திரப்படுத்து, நவலோகம் நூற்றுக்கு லிங்கமெழுகு ஒன்று கொடுக்க பத்தரை மாற்று தங்கமாகும், தினமும் குன்றி அளவு, உட்கொள்ள உடல் சூரியனைப் போலாகும், நரை மாறிப்போகும், உடல் தங்கத்தைப்போலாகும்.

வெள்ளை மெழுகு

கண்டுகொள் விராகனிடை துரிசுச்சுண்ணம்
கனமான சதுரக்கள்ளிப் பாலில்போட்டு
விண்டுபார் சாமந்தான் மூடிவைக்க
விடுபட்டு சுத்தசலம் போலேயாகும்
கொண்டுபார் வெள்ளையென்ற பாஷாணந்தான்
கொடிதான அயச்சட்டிக் குள்ளேவைத்து
மண்டுபார் நால்சாமம் சுருக்கும்போட்டு
மகத்தான வெள்ளையது மெழுகுமாமே. (663)

துரிசுசுண்ணத்தை விராகன் எடை எடுத்து சதுரக்கள்ளிப் பாலில்போட்டு ஒருசாமம் மூடிவைக்க சுத்தசலம் போல் முறிந்து போகும், வெள்ளைப்பாசாணத்தை அயச்சட்டியிலிட்டு இந்நீரால் நான்குசாமம் சுருக்கிட மெழுகாகும்.

மெழுகெடுத்து வங்கத்தி னிடைக்கிடைதானீய
மெதுவான வங்கமது நொறுங்கும்பாரு
அழுக்கெடுத்து வங்கத்தை வெள்ளியிலேதாக்க
அப்பனே வெள்ளியது பொடியாய்ப்போகும்
தழுக்கெடுத்து சூதத்தை சமனாய்ச்சேர்த்துத்
தாக்கியறை பாலென்ற தண்ணீர்விட்டு
தழுக்கெடுத்து நால்சாமம் அறைத்தபின்பு
நலமாக வழித்தெடுத்து அயவகலில்வையே. (664)

வங்கம் உருகும்போது வெள்ளைபாசாண மெழுகை சமனெடைக் கொடுக்க வங்கம் நொருங்கிப் போகும், நொருங்கிய வங்கத்தை வெள்ளியில்கொடுக்க வெள்ளி நொருங்கும். நொருங்கிய வெள்ளியுடன் சமஅளவு சூதம்சேர்த்து மேற்படி சதுரக்கள்ளி முறிந்த நீரைவிட்டு நான்கு சாமம் அரைத்து வழித்து அய அகலில் வைப்பாயாக.

வைத்துமே அயவகலில் மூடிச்சீலை
மண்செய்து பத்தெருவிற் புடத்தைப்போடு

தைத்துமே வெந்ததுவும் குருவாய் நிற்கும்
தாக்கினால் வங்கத்தில் நூற்றுக்கொன்று
நைத்துமே வோரிடைதான் கொடுத்தாயானால்
நலமான மாற்றென்ன பதினைந்தாகும்
மெய்த்துமே செம்புஅயந் தன்னிலீய
விடுபட்ட வெளிமயமா யாகும்பாரே. (665)

மேற்படி அயஅகலை மூடிச்சீலை மண்செய்து பத்தெருவில் புடமிட வெந்து குருவாய் நிற்கும், வங்கம் நூற்றுக்கு ஒருபங்கு குருவைக்கொடுக்க பதினைந்துமாற்று வெள்ளியாகும், செம்பு, அயம். இவைகளில் நூற்றுக்கு ஒரு பங்கு குருவைக்கொடுக்க வெள்ளிமயமாகும்.

இரசிதவைப்பு பாஷாணம்

பாரப்பா ரசிதமென்ற பாஷாணந்தான்
பண்பாகச் சொல்லுகிறேன் மக்களேகேள்
நேரப்பா சங்கினுட சுண்ணந்தானும்
நிறுத்தல்லோ பலம்பத்து ஒன்றாய்ச் சேர்த்து
வேரப்பா வெள்ளையென்ற பாஷாணந்தான்
விரவியே சேர்த்துமிகக் கல்வத்தாட்டி
சீரப்பா சீனமது பத்துஞ்சேர்த்து
சிறப்பான சாரமது பலமும்ரண்டே. (666)

இரசித பாசாணவைப்பைக் கூறுகிறேன் சங்குச்சுண்ணம் பத்து பலம், வெள்ளிப் பாஷாணம் சம அளவுசேர்த்து கலந்து கல்வத்திட்டு அரைத்து சீனம்பத்துபலம், சாரம் இரண்டுபலம், மற்றும்.

ரெண்டோடு சூதமது பலமோபத்து
நேர்ப்பாகத் திராவகத்தா லேழுநாளாட்டி
தண்டோடே ரவிதனிலே யுலரப்போடு
சாங்கமாய்ப் பொடிபண்ணி மேருக்கேற்றி
வெண்டோடே வாலுகையின் மேலேவைத்து
விரவியே கமலம்போல் தீயைமூட்டு
பண்டோடே பன்னிரண்டு சாமமானால்
பக்குவமாய்ப் பலகைபோல் பதங்கமாமே. (667)

முன்பு அரைத்து வைத்து சரக்குடன் சூதம்பத்துப் பலம் சேர்த்து நிராவகத்தால் ஏழுநாள் அரைத்து வெய்யிலில் உலரப்போடு உலர்ந்தபின் பொடிசெய்து மேருவுக்குள் வைத்து வாலுகையில் ஏற்றி கமலம் போல் பனிரெண்டுசாமம் தீயெரித்து ஆறவிட்டு எடுத்துப்பார் பலகைபோல் பதங்கம் ஏறிஇருக்கும்.

ஆமிந்த பாஷாணம் பலமேவாங்கி
அயச்சட்டிக் குள்ளிட்டு அப்பால்கேளு

சாமிந்த ரண்டுமொன்றாய்க் கலக்கிவைத்துச்
சாற்றியதோர் கருநாபி பொடித்துப்போட்டு
ஓமிந்த மூன்றுநாள் கழிந்தபின்பு
உத்தமனே தெளிவிறுத்து சொல்லக்கேளு
தாமிந்த விச்சரக்கை கலக்கிவைத்துச்
சரியெடையாய்த் தண்ணீராம் சுருக்குபோடே. (668)

பாஷாணம் ஒருபலத்தை சட்டியிலிட்டு மேற்படி இரசித பாசாணம் சேர்த்து இரண்டையும் ஒன்றாகக் கலக்கிவைத்து கருநாபி பொடித்துச் சேர்த்து வை. மூன்றுநாள் கழித்துப் பார்க்க நீராகி இருக்கும் தெளிவைமட்டும் இறுத்து தண்ணீரால் சுருக்கிடவும்.

(இந்தப் பாடல் சரியாக இல்லை)

சுருக்கிடவே ரசிதமென்ற பாஷாணந்தான்
துடியான மெழுகாகும் சுரண்டிவாங்கி
நறுக்கிடவே வெள்ளீயத் தீய்ந்தாயானால்
நலமான நீர்வற்றி ரசிதமாகும்
முறுக்கிடவே மெழுகாகும் சூதங்கட்டும்
முயற்சியாய் துருசதுவும் குருவுமாகும்
குறுக்கிடவே வாதமொன்று பார்ப்போமானால்
குலமாவார் வாதியென்றால் குருடனாமே. (669)

சுருக்கிட ரசித பாசாணம் மெழுகாகும, சுரண்டி எடுத்து வெள்ளீயத்தை உருக்கி இம்பெழுகைக் கொடுக்க வெள்ளியாகும், இம்மெழுகால் சூதம்கட்டும் துரிசு குருவாகும்.

குருடனென்றால் வுத்தியுண்டு பயபத்தியுண்டு
குறிப்பான வாதியென்றால் இலைதழையைத்தேடி
முரடனைப்போல் ஒன்றோடே ஒன்றுசேர்த்து
முயற்சியா யரைத்துகெச புடத்தைப்போடு
திருடனைப் போல் முழித்தங்கே எடுத்துப்பார்த்து
சீயென்று எறிந்துவிட்டுப் பின்னொன்றுபார்ப்பான். (670)

(ஒரு அடி குறைவு)

வாதி என்றால் புத்தியுண்டு பயபக்தியுண்டு, வாதி இலையைத்தேடி, முரடனைப்போல் ஒன்றோடு ஒன்று சேர்த்து அரைத்து கெசபுடமிட்டு எடுத்துப்பார்த்து மருந்து முடியாமல் எடுத்து எரிந்து விட்டு பின் ஒரு முறையைப் பார்பபான், ஞானி என்பவன் குருவைத் தேடுவான்.

சீவற்கெவுரி பாஷாணமெழுகு

குருத்தேடி யவரவர்கள் சொன்னமொழிகேட்டுக்
 குறையாத சாத்திரத்தைத் தேடிப்பார்த்து
கருத்தேடிக் கைமுறைகள் கண்டுதேடி
 கலங்காதே யோகத்தில் கண்டுபாரு
உருத்தேடி யுட்கருவி புறக்கருவிதேடி
 யுடலறிந்து வுயிர்நிற்குந் தானந்தேடி
கருத்தேடிக் கைம்முறைகள் கண்டுதேறிக்
 கலங்காதே யோகத்தில் கண்டுபாரே. (671)

குருவைத்தேடி அவர்கள்சொன்ன முறைகளைக்கேட்டு சாஸ்திரத்தை தேடிப் பார்த்து கைமுறைகள் கண்டு யோகத்தில் பார்ப்பாயாக, உட்கருவி வெளிக்கருவி இவைகள்தேடி உடலை அறிந்து உயிர்நிற்கும் இடத்தைத் தேடி, கைமுறைகளை கண்டு கலங்காமல் யோகத்தில் தேறுவாயாக.

பாரப்பா துருசியென்ற சுண்ணந்தானும்
 பதராமல் விராகனிடை எடுத்துக் கொண்டு
நேரப்பா எருக்கினுடப்பால் ரெண்டுசேரில்
 நினைவாக யதனிலிட்டுச் சாமம்வைக்க
சேரப்பா பிடியது சமமாய்நிற்கும்
 சிவப்பான கெவுரியென்ற பாஷாணந்தான்
வாரப்பா அயச்சட்டிக் குள்ளேவைத்து
 மறவாமல் நாற்சாமம் சுருக்குப்போடே. (672)

துருசிச் சுண்ணம் விராகன் எடை எடுத்துக் கொண்டு, இரண்டு சேர் எருக்கன் பாலில் போட்டு ஒரு சாம நேரம் வைக்க நீராகும். சிவப்பான கௌரி பாஷாணத்தை இரும்புச் சட்டிக்குள் வைத்து நான்கு சாமம் இந்நீரால் சுருங்குப் போடவும்.

போட்டவுடன் மெழுகாகும் எடுத்துமக்காள்
 பேரான காரீயம் பலந்தானேழில்
நீட்டுடனே சரியிடையாய் மெழுகிலீய
 நேர்ப்பாக வாங்கியது தூளாய்ப்போகும்
மாட்டுடனே யித்தூளை தங்கத்திலீய
 மலிந்துதங்கம் நொறுங்கியே தூளாய்ப்போகும்
ஆட்டுடனே அதற்குநிகர் சூதங்கூட்டி
 அரைத்துமுன் னீர்தன்னாலே பில்லைகட்டடே. (673)

சுருக்கிட மெழுகாகும் காரீயம் ஏழு பலத்தை உருக்கி அதற்குச் சரிஎடை மெழுகைக் கொடுக்க காரீயம் நொருங்கித் தூளாய் விடும் இந்தத் தூளை தங்கத்தில்

கொடுக்கத் தங்கம் நொருங்கித் தூளாகும். அதற்குச் சம அளவு பாதரசம் சேர்த்து முன் சொன்ன செயநீரால் அரைத்து வில்லை தட்டவும்

கட்டியே அயச்செம்புக் குள்ளேவைத்து
கனமான பத்தெருவிற் புடத்தைப்போடு
ஒட்டியே குருவாகும் நூற்றுக்கொன்றீய
ஓடுமப்பா பத்தரையாகும் சத்திமெத்த
துட்டியே இக்குருவால் சூதங்கட்டும்
துலையாத சரக்கெல்லாம் கொன்றுபோடும்
எட்டியே வெகுதூரம் ஓடும் ஓடும்
எடுக்கெடுக்கத் துலையாத வூத்துமாமே. (674)

மேற்படி வில்லையை அயச் செம்புச்சிமிழில் வைத்துப் பத்தெருவில் புடம் போடவும். குருவாகும் இந்த குருவை நவலோகத்துடன் நூற்றுக்கு ஒன்று சேர்க்கப் பத்தரை மாற்றுத் தங்கமாகும். இந்த குருவால் ரசம் மணியாகும். சரக்கெல்லாம் மடியும். எடுக்க எடுக்க வெகுதூரம் ஓடும் கணக்கிலடங்காத வேதை யாகும்.

ஊத்தான தாளகந்தான் பலத்தைவாங்கி
யுறுதியாம் சுண்ணத்தால் சுத்திபண்ணி
மாத்தான அயச்சட்டிக் குள்ளேவைத்து
மருவவே [illegible]லைக்கள்ளிப் பாலுக்குள்ளே
நீத்தான துருசியென்ற சுண்ணம்போடு
நேர்க்கவே முறிந்தபின்பு எடுத்துக்கொண்டு
காத்தான தாளகத்தில் சுருக்குப்போடக்
கனிவான மெழுகாகும் கண்டுகொள்ளே. (675)

ஒரு பலம் தாளகத்தைச் சுண்ணத்தால் சுத்தம் செய்து இரும்புச் சட்டிக்குள்வை. இலைக்கள்ளிப் பாலில் துருசுச் சுண்ணத்தைப் போடப்பால் முறிந்து நீராகும். இந்த நீரால் மேற்படி தாளகத்துக்குங் சுருக்குப் போட மெழுகாகும்.

கொள்ளவே சுத்திசெய்த செம்பு ஒன்று
குவிந்துவொன்று உருகையிலே மெழுக்கொன்றீய
மெள்ளவே வெண்கலம்போல் தகர்ந்துபோகும்
மேதிச்சு வுருகையிலே தங்கம்ஈய
தள்ளவே கழித்து ஒன்றா யாகும்போது
தங்கத்தின் சரியெடைக்கு நாகமீய
அள்ளவே கூட்டியெல்லாம் சேர்த்துக்கொண்டு
அதிகமாய்ச் சூதத்தைச் சரியாய்க்கூட்டே. (676)

சுத்தி செய்த செம்பு உருகும்போது மெழுகு ஒரு பங்கு கொடுக்க வெண்கலம்போல் ஆகம். அதனுடன் தங்கம் கொடு, தங்கம் நன்றாகச் கலந்தவுடன் தங்கத்தின் எடைக்கு நாகம் கொடு. பின் சரிஎடை சூதத்தைச் கூட்டவும்.

கூட்டவே சூதந்தான் கெந்தகத்தின்ரெட்டி
குறிப்பான முன்பாலின் தண்ணீராலே
நாட்டவே வில்லைசெய்து அயச்சிமிழில்வைத்து
நலமாக மேல்மூடி மண்சீலைசெய்து
வாட்டவே பத்தெருவிற் புடத்தைப்போடு
மகத்தான செந்தூர மாகுமப்பா
ஆட்டவே மதிதன்னில் நூற்றுக்கொன்றீய
அருணனைப்போல் சிவப்பான தங்கமாமே. (677)

சூதத்தின் எடைக்கு இரண்டு பங்கு கெந்தகம் கூட்டி முன் சொன்ன இலைக்கள்ளிப்பால் முறித்த நீரால் அரைத்து வில்லை செய்து இரும்புச் சிமிழில் வைத்து மேல்மூடி போட்டு மண் சீலை செய்து பத்தெருவில் புடம் போடவும் செந்தூரமாகும் வெள்ளி நூறுக்குச் செந்தூரம் ஒன்று கொடுக்க சூரியனைப்போல் சிவந்த தங்கமாகும்.

தங்கமாம் குருபோட்டால் சூதங்கட்டும்
சாவென்ற பேர்போச்சு திரேகத்திற்கு
பங்கமாஞ் சரக்குகளில் போட்டுப்போட்டு
பதைத்தங்கே கட்டிப்போம் தூரவோடும்
கெங்கையடா சாறுவராத் தழைகளெல்லாம்
கெட்டியாய்ப் பிழிந்ததொரு பிழிந்ததண்ணீர்
சங்கையா முட்கொள்ள காயசித்தி
சதகோடி யுகம்வரைக்கு மறியாதெண்ணே. (678)

பாடபேதம = புளியந்தண்ணீர்.

தங்கம் குருவால் சூதம் கட்டும். தங்கம் குரு உட்கொள்ள மரணம் பொய்யாகும். மற்ற சரக்குகளில் சேர்க்க எல்லாம் காட்டும். சாறு வராத் தழைகளின் மேல் தெளித்து தங்க குரு சேர்த்துப் பிழிந்து அந்த நீரை உட்கொள்ள காய சித்தியாகும். சதகோடியுகம் வரை உடல் அழியாது.

சிவப்பு நவாச்சாரம்

எண்ணவே சிவப்பான நவாச்சாரத்தை
யிதமாகக் கேளுங்கள் மக்களேகேள்
பண்ணவே வெடியுப்புப் பலந்தான்பத்து
பருவமுடன் சீனமது யிருபத்தைஞ்சு

கண்ணவே ரெண்டையுந்தான் கல்வத்திட்டுக்
காரமாம் நாயுருவிச் சாற்றாலாட்டி
தெண்ணவே தெலுக்காக வில்லைதட்டித்
திறமான ரவிதனிலே காயப்போடே. (679)

சிவப்பு நவாச்சாரத்தைக் கூறுகிறேன், வெடியுப்பு பத்துபலம், சீனம் இருபத்தைந்து, இவை இரண்டும் கல்வத்திலிட்டு நாயுருவி சாற்றால் அரைத்து சிறுவில்லைகள் செய்து வெய்யிலில் மூன்றுநாள் காயவை.

போடவே தினமூன்று காயக்காய
பொருப்பான பின்பெடுத்துக் கரத்திலிட்டு
ஆடவே சக்கரமாம் பானைமேலே
அணைத்தாப்போல் வைத்திட்டு சமண்மண்பூசி
நீடவே யடுப்பில வைத்திதுத் தீயைமூட்டு
நினைவாக வெள்ளைநீர் வருகம்பாரு
வாடவே சிவந்தநீர் வருகுமக்காள்
மகத்தான பீங்கானி லெடுத்துவையே. (680)

பின்பெடுத்து சக்கரபானையில் அணைத்துவைத்து சமமாக மண்பூசி அடுப்பிலேற்றி தீயை மூட்டுவாயாக, முதலில் வெள்ளைநீர் வரும், அதைவிட்டு சிவந்தநீர் வரும்போது பீங்கானில் பிடித்துக்கொள்.

வைக்கவே யரக்காலே குப்பிபண்ணி
வருகிறதோர் திராவகத்தை யதிலேவாரு
நைக்கவே வெள்ளைதன்னை வீசிப்போடு
நவாச்சார மெழுகுதனைக் கல்வத்திட்டு
அயக்கவே திராவகத்தா லாட்டு ஆட்டு
அறுசாம மாட்டியபின் வழித்தெடுத்து
வைக்கவே பரும்பீங்கான் தன்னிலிட்டு
வளமாகத் திராவகத்தைக் குற்றுகுற்ளே. (681)

சிவந்தநீரை அரக்குக்குப்பியில் பத்திரப்படுத்து வெள்ளைநீரை விட்டுவிடு, நவாச்சார மெழுகை கல்வத்திலிட்டு இச்சிவந்த திராவகத்தால் ஆறுசாமம் அரைத்து வழித்து பீங்கானிவிட்டு திராவகத்தை அதனுள்விடு.

குத்தியே ரவியில்வைத்து மூன்றுநாள்தான்
குறிப்பாகத் தணலின்மேல் பீங்கான்வைத்து
பத்தியே பொடியாக வறுத்துக்கொண்டு
பருவமாய்க் காசியென்ற குப்பிக்கேற்றி
அத்தியே அரைவாசி மட்டும்போடு
அழகான வாலுகையின் மேலேவைத்து

ஒத்தியே தீபோடு கமலம்போல
யிதமாகப் பன்னிரண்டு சாமந்தானே. (682)

பின்பீங்கானை மூன்றுநாள் வெய்யிலிலிட்டு பின் நெருப்பின் மீது பீங்கானை வைத்துபொடியாக வறுத்துக்கொண்டு காசிகுப்பியில் அரைவாசியிட்டு வாலுகையின் மீது வைத்து கமலம்போல் பனிரெண்டு சாமம் தீயிடு.

தானென்ற நால்சாமம் எரித்துப்போடு
சாதகமாய் ராக்கால மாறப்போட்டு
கானென்ற மூன்றுநா ளானபின்பு
கடுங்குப்பி எடுத்துடைத்தால் தேங்காய்போலத்
தேனென்ற சிறுதிடத்தில் சிவந்துகாணும்
திருப்பவுங் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
பானென்ற திராவகத்தை விட்டு ஆட்டி
பரும்பீங்கான் றன்னிலிட்டு திராவகத்தைகுத்தே. (683)

பின் நான்குசாமம் எரியவிட்டு இரவில் ஆறப்போடு மூன்று நாளானபின் குப்பியை எடுத்துடைத்தால் தேங்காய்ப்போல் சிவந்து இருக்கும், மறுமுறையும் கல்வத்திலிட்டு பொடி செய்து திராவகத்தை விட்டு அதைத்து பீங்கானில் இட்டு திராவகத்தை விடுவாயாக.

குத்தியே மூன்றுநாள் ரவியிற்போடு
குவிந்தபின்பு அதனையே வறுத்துப்போடு
ஒத்தியே பொடியாக்கி மேருக்கேற்றி
யிதமான வாலுகையில் தீயைமூட்டு
பத்தியே கமலம்போல் எரிப்பாயப்பா
பன்னிரண்டு சாமந்தான் கடந்தபின்பு
புத்தியே குப்பியைத்தா னுடைத்துப்போடு
பொதிவான பதங்கத்தை எடுத்துக்கொள்ளே. (684)

பின்பீங்கானை மூன்று நாள் வெய்யிலிலிட்டு பின் நெருப்பில் வைத்து வறுப்பாயாக, வறுத்ததைப்பொடி செய்து மேருக்கேற்றி வாலுகையில் வைத்து கமலம்போல் பனிரெண்டுசாமம் தீயெரிப்பாயாக ஆறவிட்டு குப்பியை எடுத்து உடைத்துப்பார்க்க பதங்கமிருக்கும்.

கொள்ளவே முன்போல திராவகத்திலாட்டிக்
குவிந்தபின்பு நீர்க்குத்தி ரவியிற்போடு
அள்ளவே தணலுக்குள் வறுத்துப்போடு
அதிகமாங் காசியென்ற மேருக்கேற்றி
தள்ளவே வாலுகையில் தீயைமூட்டித்
தனையெடுத்து முன்போல பாவனைசெய்து
துள்ளவே ஏழுதிரந் தீர்த்தாயானால்
சூரியன்போல் சிவந்திருக்குஞ் சாரந்தானே. (685)

முன்போல பதங்கத்தை எடுத்து திராவகத்தாலரைத்து திராவகத்தை விட்டு வெய்யிலில் மூன்று நாள் வைத்து நெருப்பில் வறுத்து பொடி செய்து காசிமேருக்குள் பாதியளவிட்டு வாலகையில் வைத்து பனிரெண்டுசாமம் தீமூட்டி பாவனை செய்வாயாக இவ்வகையில் ஏழுமுறை தீர்க்க நவாச்சாரம் சிவந்து இருக்கும்.

சாரந்தான் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சமர்த்தாக சூதமது பலமும்பத்து
வாரந்தான் தங்கமது ரண்டரையுமாகும்
மருவிநின்றா லரைப்பொடியுங் கல்வத்திட்டு
தீரந்தான் எலுமிச்சம் பழச்சார்விட்டுத்
திரவுண்டை நன்றாகப் பொடியாய்ப்பண்ணி
நாரந்தான் காசியென்ற மேருக்கேற்றி
நலமான வாலுகையில் வைத்திடாயே. (686)

மேற்படி பக்குவம்செய்த நவாச்சாரம் பத்துபலம், சூதம்பத்துபலம், தங்கம் இரண்டரைபலத்தை அரத்தால் ராவி மேற்படி சரக்குகளுடன் கூட்டி கல்வத்திலிட்டு எலுமிச்சை பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து உலர்த்தி பொடிசெய்து காசிகுப்பியிலிட்டு வாலுகையில் ஏற்றுவாயாக.

வைத்துமே பன்னிரண்டு சாமந்தீயை
மறவாமல் போட்டுவரத் தீபம்போல
மைத்துமே மாதளம்பூப் போலேயாகு
மைந்தனே வேறொன்றுக் குப்பிக்கேற்றி
நைத்துமே சீலையினால் கொத்தொடாமல்
நலமான கட்டிவைத்து ஆயிரத்துக்கொன்று
தைத்துமே காசிடைதான் கொடுத்தாயானால்
தங்கமது பதினாறு மாற்றுமாமே. (687)

வாலுகையை அடப்பேற்றி பனிரெண்டுசாமம் தீபம்போல் தீயிடு, மாதளம் பூப்போல் நிறமான செந்தூரமாகும், வேறுகுப்பிக்குள் செந்தூரத்தைவைத்து துணியை செந்தூரத்தில் படாமல் கட்டிப் பத்திரப்படுத்தவும் லோகத்தில் ஆயிரத்துக்கு ஒரு பங்கு செந்தூரத்தைக் கொடுக்க பதினாறு மாற்றுத்தங்கமாகும்.

தங்கமே யாச்சுதென்று கெர்ச்சிக்காதே
தளராமல் காயத்தை சுத்தி பண்ணு
பங்கமே வாராமல் தினம் பணமேயுண்ணு
பளபளக்கு முடம்பெல்லாம் வாலையாகும்
அங்கமே சரீரமது பவளம்போலாம்
அரனுண்ட கற்பமது யானுமுண்டேன்
சிங்கமே யிவனென்பார் நரையோயில்லை
செகமெல்லாங் குன்றியிடைக் கொவ்வாவாறே. (688)

வேதையாகி தங்கமானால் தலைகனம் கொள்ளாதே, உடலை சுத்திசெய்திடு, தினமும் பணவெடை செந்தூரத்தை உட்கொள்ள உடல் பளபளத்து இளமையாகும், உடல் பவளம்போலாகுழ் அரனுண்ட இக்கற்பத்தை நானும் உட்கொண்டேன் சிங்கத்தைப்போல் தோற்றம் உண்டாகும், நரை இல்லை, இதன் ஒரு குன்றி எடைக்கு உலகமே ஈடாகாது.

குருபுத்தி

ஒவ்வாது தேகமப்பா சரீரத்துக்கு
    வுத்தமியாள் மனோன்மணியாள் தாய்ப்பிறப்பு
சவ்வாது வுடன்பூசி சரக்கில்கூட்ட
    தணலிட்டு வாட்டையிலே சவலையாகும்
சவ்வாது நவலோகம் கவ்வுமுன்னே
    கனகமய மாகிவிடுங் கணக்கோமெத்த
பவ்வாது வுலகத்தில் கேட்டபேர்கள்
    பரியாசமென்பார்கள் பாஷாண்டிதானே. (689)

உத்தமியான தாய் மனோன்மணியை கண்டுகொள், சரக்குகளில் சவ்வாது பூசி நெருப்பில் வாட்ட சவலையாகும், இச்சவலையை நவலோகம் விழுங்கிக்கொண்டு தங்கமயமாகும். இதைப்பற்றி உலகத்தில் கேட்டவர்கள் பரியாசம் செய்து பாசாண்டிவேலை என்பார்கள்.

பாஷாண்டி மெத்தவுண்டு லோகத்துக்குள்ளே
    பரிவாக அவருடனே பேசவேண்டாம்
பாஷாண்டி வாதமுண்டோ வென்றுகேட்டால்
    பண்பாக செய்தொழிலே வாதமென்னு
பாஷாண்டி வைதாலும் சகித்துக்கொள்நீ
    பத்தியற்ற மார்க்கமாய் விசேஷம்பேசா
பாஷாண்டி முகத்தின் முன்னே நிற்குமூதேவி
    பாங்கான தேசம்விட்டு மறுதேசம்புக்கே. (690)

உலகத்துள் பாஷாண்டிகள் நிறைய உண்டு அவர்களிடம் பேச வேண்டாம், பாஷாண்டி வாதம் என்பது உள்ளதா. எனக்கேட்டா‹ செய்தொழில்தான் வாதம் என்று சொல் அப்பாஷாண்டி திட்டினாலும் சகித்துக்கொள் பக்தி மார்க்கத்தை அவனிடம் பேசாதே, பாஷாண்டி முன் நில்லாமல் வேறு தேசம்போவாயாக.

பத்தியே ஞானமுத்தி வாதியுடன்பேச
    புத்தியில்லா தவருடன் பேசவேண்டாம்
கத்தியே மனதடங்கிப் போதம்பாரு
    மனமான பெரியோர்க்குத் தொண்டுபண்ணு

எத்தியே மூலத்தைக் கும்பித்தேறு
யியலான தளங்களெல்லாம் சோதித்தேறி
நந்தியே யமுர்தத்தை அண்டமுன்னி
நாதாக்கள் ரிஷிகளுட மறைப்பால் நில்லே. (691)

ஞானமுத்தி வாதியுடன் பேசு புத்தியில்லாத பாஷாண்டியிடம் பேச வேண்டாம், மனதை அடக்கும் போதத்தைப் பார்ப்பாயாக, பெரியோர்கட்கு தொண்டு செய்து மூலத்தைக் கும்பித்துயேறு தளங்களை எல்லாம் சோதித்து ஏறு, அமுர்தத்தை தினமும் உண்டு நாதாக்கள், ரிஷிகள் மறைப்பால் நின்றுபார்.

நில்லென்ற அறுபத்துநால் மறைப்புக்குள்ளே
நிலைத்துநிற்கும் வாதசித்திக் குளிகைசித்தி
கல்லென்ற காயசித்திக் கவனசித்தி
கரைகாணா யோகசித்தி ஞானசித்தி
இல்லென்ன எட்டுசித்தி யுண்டுமேதி
யிடங்கொள்ளா கரைகொள்ளா வுலகிற்குள்ளே
சில்லென்ற காடுபோல் சாத்திரங்கள் மெத்த
செப்பரிது வுரைகாணார வாதந்தானே. (692)

அறுபத்து நான்கு மறைப்புக்குள், நிலைத்து நிற்கும் வாதசித்தி குளிகை சித்தி, காயசித்தி, கவசித்தி, யோகசித்தி, ஞானசித்தி, அட்டமாசித்தி, இவைகளை கண்டுபார். இவ்வுலகில் காடுகுபால அனேக சாஸ்திரங்களுண்டு, முடிவுகாணாத வாதங்களுமுண்டு.

வாதந்தான் முன்பின்னாய் சொல்லிவைத்து
மறைத்தாரே சரக்கென்ற வைப்பு தன்னை
நீதந்தான் ஆதியுப்பை யிழுக்காய்சொல்லி
நிலைத்துநிற்கும் வீரத்தை மறைத்துப்போட்டார்
வேதந்தான் முடுக்கியே கோப்பாய் நின்ற
வீரத்தை வைத்தாலே வாதமாகும்
பாதந்தா னில்லாமல் நடக்கப்போமோ
பரிவாக சிவந்திருந்த சாரந்தானே. (693)

வாதத்தை முன்பின்னாய் சொல்லிவைத்து வைப்புச் சரக்குகளை மறைப்பாகச் சொல்லி ஆதியுப்பை மேன்மையில்லாமல் சொல்லி வீரத்தை மறைத்து சொல்லிவிட்டனர், வீரத்தை முறைப்படுத்திச் சேர்க்க வாதம் முடியும், பாதமில்லாமல் நடக்க முடியாது, சிவந்திருக்கும் சாரத்தின் முறைகளைக் கூறுகிறேன்.

சிவந்திருந்த சாரத்தின் மகிமைகேளு
சித்தர்முதல் ரிஷிகள் சொல்ல முடியாதப்பா

அவந்திருந்த காலாங்கி நாயனார்சொல்ல
அன்புடனே கேட்டிருந்தேன் யானும்கொஞ்சம்
நவந்திருந்த சூதத்தைத் துரத்திக்கொல்ல
நலமாகச் சுருக்குக்கண்டேன் நல்கப்போகா
சுவந்திருந்த பிள்ளை சொல்ல நடந்தாப்போல
சரக்கெல்லாம் கண்ணிமைக்குள் கொல்லுந்தானே. (664)

சித்தர்கள் முதல் ரிஷிகள் கூட சிவந்த சாரத்தின் மகிமையை சொல்ல முடியாது, சிவந்த சாரத்தால் சூதம் சாகும். சுருக்கமான முறை, பிள்ளைசொல்ல நடந்ததுபோல சரக்கெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் இச்சாரம் கொல்லும்.

சூதக்களங்கம்

கொல்லுகின்ற கருவேது வென்றாயானால்
குவிந்தபடி சொல்லுகிறேன் குறிப்பாய்க்கேளு
வெல்லுகின்ற சூதமொன்று கெந்தியொன்று
விடுபட்ட தாளகமும் சிலையும்லிங்கம்
அல்லுகிற சிவப்பானச் சாரமொன்று
அப்பனே பழச்சாற்றால் சாமம்ஆட்டி
தொல்லுகிற வில்லைத்தட்டிக் காயப்போடு
சிறப்பாக அயக்குகையில் வைத்திடாயே. (695)

கருமுறையைக் கூறுகிறேன், சூதம் ஒருபங்கு கெந்தகம் ஒரு பங்கு, தாளகம் மனோசிலை, லிங்கம், மற்றும் சிவந்தநவாச்சாரம் ஒருபங்கு, இவைகளை பழச்சாற்றால் ஒருசாமம் அரைத்து வில்லைத்தட்டி காயவைத்து அயக்குகையில் வைத்திடுவாயாக.

வைத்துமே சீலைசெய்து புடத்தைப்போடு
வயிரவற்கு பூசைபண்ணி தொழுதுபோற்றி
கைத்துமே கவசத்தை வாங்கிப்போடு
களங்காக வேயிருக்கும் நவலோகத்தில்
அய்த்துமே யாயிரத்துக் கொன்றுபோடு
அப்பனே மாத்தென்ன பன்னிரண்டாம்
நைத்துமே காவிக்கு வுப்புக்கேற்கும்
நலமான சீஷருக்குத் தொழிலைச்சொல்லே. (696)

வைத்த அயக்குகைக்கு மூடியிட்டு சீலைமண் செய்து வயிரவர்க்கு பூசைசெய்து தொழுது கவசத்தை வைத்து புடமிட களங்காகும், லோகங்களில் ஆயிரத்திற்கு ஒன்று கொடுத்துருக்கப், பனிரெண்டு மாற்றுடைய தங்கமாகும், காவிக்கும் உப்புக்கும் வெற்றி கொள்ளும், நல்ல குணமுடைய சீடர்கட்கு சொல்வாயாக.

சூதக்கட்டு

சொல்லவே சூதத்தைக் கட்டுதற்கு
சுருக்காக வழிசொல்வேன் கேளுமக்காள்
அல்லவே இரும்பகலில் பழச்சார்விட்டு
ஆதியென்ற சாரத்தைப் பொடியாய்ப்பண்ணி
மல்லவே சூதமொரு பலத்தைவிட்டு
மறவாமல் அகலில்வைத்துப் பொடியேதூவு
கல்லவே கட்டியது மணிபோலாகும்
கரியில்வைத்து வுருக்கிடவே ரசிதமாமே. (697)

சூதத்தைக் கட்டுவதற்கு கூறுகிறேன், அயத்தின் அகலில் பழச்சாறு விட்டு சிகப்பு நவாச்சாரத்தைப் பொடி செய்து சூதத்தை ஒருபலமெடுத்து பழச்சாறுவிட்ட அகலில் இட்டு மேற்படி சாரப்பொடியைத்தூவு, சூதம் மணிபோலாகும், சூதமணியை நெருப்பிட்டு உருக்க வெள்ளியாகும்.

ஆமப்பா இச்சாரம் பொடியாய்ப்பண்ணி
அப்பனே மஞ்சளென்றக் கருவைப்போட்டு
சேமப்பா ரவியில்வைக்கத் தயிலமாகும்
சிறப்பானப் பணவிடைதான் தயிலங்கொள்ள
போமப்பா சாவுகிற கற்பகாலம்
புகழான வயிரம்போ லிருக்கும்திரேகம்
காமப்பா விந்தைகட்கும் மெத்தநன்று
கைவிட்ட சூத்திரம்போல் கண்டுபாரே. (698)

சிகப்பு சாரத்தைப் பொடிசெய்து முட்டை மஞ்சட்கருவில் போட்டு வெய்யிலில்வைக்க தயிலமாகும், பணவெடைத்தயிலத்தை உட்கொள்ள உடல் வயிரம் போல் உறுதியாகி கற்பாந்த காலம் வாழலாகும், விந்து கட்டிப் போகும்.

துரிசுவைப்பு

பார்க்கவே துரிசியிடவைப்புசொல்வேன்
பண்பாகச் செம்பாலே பானைபண்ணி
கார்க்கவே கல்லுப்பு பொடியாய்ப்பண்ணி
காணிதுக்கு பதினாறு வெடியுப்புசீனம்
மெத்தவே நிறுத்தந்த பானையிலேபோட்டு
மிதமான பழச்சாறு படிதான்விட்டு
ஆர்க்கவே மேல்மூடி அடைத்துப்போடு
ஆறுதிங்க ளானபின்பு எடுத்துப்பாரே. (699)

துரிசு வைப்பைக் கூறுகிறேன், செப்பினால் பானைபோல் செய்து கல்லுப்பைப் பொடிசெய்து அதற்குள் போட்டு பதினாறு பங்கு வெடியுப்பு, சீனம், இவைகளையும் போட்டு பழச்சாறு ஒருபடி விட்டு மேல்மூடி இட்டு மூடிவைக்கவும் ஆறுமாதங்கள் கழிந்தபின்.

எடுத்துப்பார் பச்சையாங் கட்டிப்போகும்
  யிதமான வயிரம்போல் துரிசியாகும்
அடுத்துப்பார் அறுபதுவும் சத்தியாச்சு
  அப்பனே செம்பதுவும் சிவனுமாச்சு
கடுத்துப்பார் தயிரதுவும் விஷ்ணுவாச்சு
  கலந்துநின்ற பழச்சாறு பிர்மாவுமாச்சு
தொடுத்துப்பா ரிதனைகுரு செய்யில்வேதை
  துலையாது வாதத்தி லாதியாமே. (700)

எடுத்துப்பார்க்க பச்சைநிறமாக வயிரம்போல் கட்டித்துரிசு இருக்கும் இதனால் சரக்கு அறுபதும் சத்தியாகும், செம்பு சிவனாகும், தயிர் விஷ்ணுவாகும், பழச்சாறு பிரம்மாவாகும், இத்துரிசை சுண்ணம் செய்ய வேதையாகும், துரிசுச்சுண்ணம் வாதத்திற்கு முதல் படியாகும்.

பச்சை துருசில் சூதக்கட்டு

வாதத்தி லாதியென்ற சூதக்கட்டு
  வகைசொல்வேன் பச்சையென்றும் மயங்கவேண்டாம்
நீதத்தில் துரிசியது பலமுமொன்று
  நேர்ப்பாகப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு
பூதத்தி லிரும்பான கரண்டிதன்னை
  புத்தியுடன் சலம்விட்டு அலம்பிப்போட்டு
சூதத்தை நிறுத்தல்லோ பலமும் போட்டுத்
  துப்பரவாய்த் தண்ணீரை முக்கால்வாரே. (701)

சூதக்கட்டு கூறுகிறேன், துரிசுபச்சை என்று மயங்கவேண்டாம் ஒருபலம் துரிசைப் பொடித்துக் கொண்டு இரும்புக்கரண்டியை நன்றாக நீரில் கழுவிக்கொண்டு சூதத்தை ஒருபலம் அளவிட்டு முக்கால் அளவு தண்ணீர் விடுவாயாக.

தண்ணீர்தான் கொதிக்கையிலே துருசுத்தான்
  சாதகமாய்த் தூவிவரத் தண்ணீராமே
தண்ணீர்தான் சுண்டிடவே மறுதண்ணீர்விட்டு
  சாகாமல் தூவிவரத் துருசுத்தூளை
விண்ணீரை மூன்றுதரம் விட்டுக்காச்சு
  மெழுருபோ லுண்டிருக்கும் சூதந்தானும்

தண்ணீரை விட்டுநன்றாய் தேய்த்துதேய்த்து
சிறப்பாகக் கழுவிடவே தீர்க்கமாமே. (702)

நெருப்பில்வைத்து தண்ணீர் கொதிக்கும்போது மேற்படி பொடித்த துரிசுதூளை தண்ணீரில் தூவுவாயாக தண்ணீர் குறைந்தால் மறுதண்ணீர் விட்டு துரிசுதூளை தூவி வா. மூன்றாம் முறையும் தண்ணீர்விட்டு துரிசுதூளையிட்டுக்காய்ச்சி தண்ணீர் குறைந்ததும் நீர்விட்டு நன்றாக கழுவிக் கொள்.

தீர்க்கமா யுருட்டியதை வைத்துக்கொண்டு
செப்பரிய மத்தங்காய்க் குள்ளேவைத்து
மூர்க்கமாய் வெள்ளியது வராகனிடைபத்து
முன்போல அழகாகத் திருவப்பண்ணி
தூர்க்கவே சூதவுண்டை நடுவேவைத்து
துப்பரவாய் மேல்மூடி சீலைசெய்து
ஆர்க்கமாய் காயவைத்து எடுத்துக்கொண்டு
அழகாக மேல்மூடித் திருகிப்போடே. (703)

மேற்படி கழுவிய சூதத்தை உருட்டி ஊமத்தன் காய்க்குள் வைத்து பத்துவராகனிடை வெள்ளியை சிமிழ்போல் செய்து மேல்மூடி செய்து அதற்குள் சூதம்வைத்த ஊமத்தன் காயைவைத்து மேல்மூடியிட்டு சீலைமண்செய்து காயவைத்துக் கொள்.

திருவியே மதுசுத்தால் நல்லயெண்ணைச்
சிறப்பாக கலசத்தி லரைமட்டும்பார்த்து
மருவியே வெள்ளியென்றக் கிண்ணிதன்னை
வட்டமிட்டு வூஞ்சல் கலயத்திட்டு
தருவியே மேலோடு கொண்டுமூடி
சாங்கமாய் சீலைமண் மேலேபூசி
கருவியே கலசத்தில் கழுத்துதன்னில்
கடுகியே பணம்போலே தமருபோடே. (704)

ஒரு கலசத்தில் நல்லெண்ணெய் அரை அளவுவிட்டு மேற்படி வெள்ளிகிண்ணி கவசத்தை நல்லெண்ணையில் படாமல் ஊஞ்சல்போல் கட்டி மேல்மூடி மூடி சீலைமண் கலசம்செய்து கலசத்தின் கழுத்துப் பகுதியில் பணம் அளவு ஓட்டை செய்திடு.

தமரிட்டுக் கலசத்தை ஆணிமேல்வைத்து
தயங்காதே விரற்பருமன் திரியைப்போட்டு
தமரிட்டு விளக்கேற்றி நாலுசாமம்
தயங்காதே எரியிட்டு ஆறவிட்டு

அமரிட்டு வெள்ளியென்றக் கிண்ணிதன்னை
  அசையாமல் திருகலிட்டு வுண்டைவாங்கி
பமரிட்டுத் தண்ணியிலே கழுவிப்போட
  பத்துமுறை யவிர்ப்புடமாய்க் காயப்போடே. (705)

கலசத்தை ஆணிமேல்வைத்து விரல்பருமன் திரியிட்டு விளக்கு ஏற்று நான்குசாமம் எரித்திடு, ஆறவிட்டு வெள்ளிகிண்ணியை எடுத்து சூத உருண்டையைத் தண்ணீரில் கழுவு. இவ்வாறு பத்து ஆவிபுடமிட்டு சூதஉருண்டையை காயவைத்திடு.

காயயிலே போட்டபின்பு தண்ணீரிற்கழுவிக்
  கசங்காமல் வெள்ளியிட சிமிழில்வைத்து
பாயையிலே முன்போல எண்ணையிலே போட்டுப்
  பக்குவமாய் நாற்சாமம் எரித்தபின்பு
போதையிலே யிப்படிதான் புடமேபோடு
  பேரான எண்ணையிலே பத்துமுறைபோடு
தேயையிலே வெள்ளியைத்தான் பிடித்துப்போடு
  சிறப்பான வெள்ளியைத்தான் ய்யமிட்டூதே. (706)

காயவைத்ததைத் தண்ணீரில் கழுவி சூத உருண்டையை வெள்ளிச் சிமிழில்வைத்து நல்லெண்ணெய் விட்டு ஆவிப்புடமாக நான்குசாமம் எரித்து வாங்கு, இப்படியே பத்துமுறை எண்ணெ:யில் ஆவிப்புடம் போடுவாயாக, பின் வெள்ளியுடன் ஈயம் சேர்த்து ஊது.

ஊதியே முன்னறையில் சிமிழ்போல் பண்ணு
  வுத்தமனே புடம்பத்து எறிப்புப்பத்து
பாதியே யிப்படிதான் செய்துக்கொண்டு
  பரிவாகக் கரியில்வைத்து வுருக்கவாங்கும்
கோதியே தங்கமிட்டு வுருக்கிக்கொண்டு
  குறிப்பான நாகமது கூடவிட்டு
ஆதியே சமனாகப் பொடியாய்ப்பண்ணி
  யந்தகெந்தி சூதமிடைச் சமனாய்க்கூட்டே. (707)

இரண்டும் கலந்து உருகியபின் சிமிழ்செய்து அதற்குள் சூதம் வைத்து ஆவிப்புடமாக பத்து முறை எரிப்பாயாக, சூதம் மணியாகும். சூதமணியுடன் தங்கமிட்டு உருக்கி நாகம் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து சூதமணி எடை கெந்தகம்கூட்டி பொடிக்கவும்.

கூட்டியே கல்வமதில் பொடியாய்ச்செய்து
  கொடிதான மல்லிகையின் சாற்றாலாட்டி
நீட்டியே மூன்றுநா ளரைத்தபின்பு
  நேராகப் பொடிபண்ணிக் குப்பிக்கேற்றி

மூட்டியே வாலுகையின் மேலேவைத்து
முயற்சியாய்த் தீமூட்டிக் கமலம்போல
ஆட்டியே பன்னிரண்டு சாமமானால்
அருணநிறம் போலாகும் வேதைகேளே. (708)

அந்தப் பொடியை மல்லிகைச் சாறுவிட்டு மூன்று நாள் அரைத்து உலர்த்தி மறுபடியும் பொடிசெய்து குப்பிக்கேற்றி வாலுகையில் வைத்து கமலம்போல் பனிரெண்டு சாமம் தீ எரிக்கவும், பின் ஆறவிட்டு எடுத்துப்பார்த்தால் சூரியனைப்போல் செந்தூரமிருக்கும் இச்செந்தூரத்தின் வேதையைக் கூறுகிறேன்.

கேளப்பா நூற்றொன்று நவலோகத்தோடுங்
கெடியான மாத்தென்ன எட்டுமாகும்
வேளப்பா குளிகைக்குச் சாரணையேசெய்தால்
வெகுகோடி காலமட்டும் ஓடும் ஓடும்
தாளப்பா ஆயிசுண்டு தயங்கவேண்டாம்
தயங்காத மூலிகையி லாசுமெத்த
பாளப்பா துருசுவிட்டுச் சூதங்கட்டும்
படுபேச்சு மூலிகையிற் காட்டாதென்னே. (709)

நவலோகத்தில் செந்தூரம் நூற்றுக் கொன்று கொடுக்க எட்டுமாற்றுத் தங்கமாகும், மேற்படி குளிகைக்கு சாரணையைத்தீர்த்தால் வெகுகோடி காலம்ஒடும். ஆயுள்பெருகும், மூலிகையின் மூலமும் ஆயுள்பெருகும் துரிசால் சூதம்கட்டும், இலைகளில் துரிசு குருவைச் சேர்த்து சாறு எடுத்திடு.

என்னவே வுபரசங்கள் நூற்றிரண்டுபத்து
யிலைகளினால் சுருக்கிட்டு சாறுவார்ப்பாய்
பன்னவே பாஷாணம் அறுபத்துநாலும்
படுமுன்னே கட்டாக காசுச்சுண்ணம்
மன்னவே வுப்புவகை யிருபத்தஞ்சும்
மல்லிகைப் பூப்போல் மலர்ந்து சுண்ணமாகும்
தன்னவே கார சாரங்களாலே
சகலமுந்தான் கட்டினமுங் குருவுமாமே. (710)

உபரசங்கள் நூற்றிருபதுக்கும் பாஷாணம் அறுபத்து நான்குக்கும் சுருக்கிடக்கட்டும் உப்புவகை இருபத்தைந்தும் சுருக்குத் தாக்க சுண்ணமாகும், காரசாரச் சரக்குகளால் கட்டினமும், குருவும் உண்டாகும்.

துருசுகளங்கம்

ஆமப்பா முலிகையில் சிலவுமுண்டு
அந்தவகை மூலிகைதான் மனிதர்க்கியோர்

வாமப்பா மலைகளிலே வுண்டுவுண்டு
மகத்தான தலமது சூதமுண்டு
தாமப்பா மனிதரெங்கே சஞ்சரிக்கப்போரார்
சஞ்சரிப்பார் நாதாக்கள் ரிஷிகள்சித்தர்
போமப்பா மனிதருக்கு சரக்குக்காரம்
புகழாதி வாதத்தில் துரிசியாமே. (711)

மூலிகை வகை சில உண்டு, அவ்வகைச்சிறப்பான மூலிகைகள் மனிதர்கட்கு கிட்டாது. அவை மலைகளில் மட்டுமே உண்டு, சூதம் உண்டு, சாதாரண மனிதர் அங்கே சஞ்சரிக்க முடியாது, நாதாக்கள், ரிஷிகள், சித்தர்கள் அங்கே சஞ்சரிப்பார்கள், வாதத்திற்கு ஆதி துரிசாகும்.

ஆதியாந் துருசியென்ற களங்கஞ்சொல்ல
அறையுறேன் பண்பாக அறிவுள்ளோர்க்கு
பாதியாம் துரிசிபலம் ஒன்றேதூக்கு
பண்பாக கெந்தியது பலமே முக்கால்
மாதியாம் குடவன்பலம் ஒன்றேபோடு
மாசற்ற வீரமது பலமேகால்தான்
பேதியாம் இவைமூன்றும் வுமிநீர்விட்டு
பெலக்கவரை நால்சாமம் பின்புகேளே. (712)

புத்தி கூர்மை உள்ளவர்கட்கு துரிசு களங்கம் கூறுகிறேன், துரிசு ஒருபலம் எடுத்துக்கொள், கெந்தகம் முக்கால் பலம், பித்தளை ஒருபலம்_வீரம்கால்பலம், இவை மூன்றையும் உமிழ்நீர்விட்டு நான்குசாமம் அரைப்பாயாக.

கேளுநீ மெழுகாகும் பதத்தில்வாங்கி
கெடிபடவே துரிசியின்மே லப்பிப்போடு
வாளுநீ புலர்ந்தபின்பு அதின்மேற்போட
வகையாக சுண்ணாம்புக் கவசம்போடு
வாளுநீ புலர்ந்தபின்பு சீலைசெய்து
தணல்படவே தீயாற்றி எடுக்கக்கேளு
நீளுமே நீற்றியதைக் குகையில்வைத்து
நேர்கார மிட்டுருக்க மணியுமாமே. (713)

மெழுகுபதத்தில் அரைத்து மேற்படி துரிசுக்கு கவசமிட்டு உலர்ந்தபின் அதன்மேல் சுண்ணாம்புக்கவசம்கட்டி அதுவும்உலர்ந்த பின் சீலைமண் செய்து நெருப்பில் வாட்டிப் பின் ஆற விட்டு எடுத்து குகைக்குள்வைத்து காரமிட்டு உருக்க மணிபோலாகும்.

மணியெடுத்து வுடைத்தால் ரவியுமாகும்
　　மாசற்ற வெள்ளிதனை நாலுக்கொன்று
தணியாக வுருக்கிடவே மூன்றுமாற்று
　　தப்பாது கைகண்ட தொழிலுமாகும்
மணியாக யிச்செம்பு களங்கமாகும்
　　அப்பனே செந்தூரங் குருதான்செய்ய
கணியாக நாலாறு காணுங்காணும்
　　கருத்திதுக் குள்ளேதென்றால் கெந்திதானே. (714)

மணியை உடைத்தால் செம்புமாகும், இந்தக் செம்பை வெள்ளி நான்குக்கு ஒன்று கொடுத்து உருக்க மூன்று மாற்று தங்கமாகும் இதுதப்பாது இச்செம்பு களங்காகும், இச்செம்பை வைத்து செந்தூரம் அல்லது குரு மருந்தாகச் செய்ய அதனால் இருபத்து நான்கு மாற்று தங்கம் கிடைக்கும் செந்தூரம் அல்லது குருவாகச் செய்யும்போது கந்தகம் சேர்க்க வேண்டும் என்பதுதான் உட்கருவாகும்.

தானாகுந் துருசியென்ற செந்தூரத்தை
　　சாற்றுகிறேன் இதுலெகுவு முன்னேபாரு
தேனாகும் வெடியுப்பு செயநீர்தன்னில்
　　சிறந்துநின்ற துருசியொரு பலந்தானிட்டு
கானாகுஞ் செயநீரில் தோய்த்துதோய்த்து
　　கடுரவியில் தினந்தினந்தான் ஏழுநாட்கு
பானாகும் வெடியுப்பு பலந்தான் மூன்று
　　பண்பான சீனமது முப்பத்தஞ்சே. (715)

துரிசு செந்தூரத்தைக் கூறுகிறேன், இதன்முறை சுலபம், இதை முன் பார்ப்பாயாக, வெடியுப்பு செயநீரில் ஒருபலம் துரிசை இட்டு செயநீரில் தோய்த்து வெய்யிலில் இடுவாய், இவ்வாறு தினமும் தோய்த்து ஏழுநாட்கள் வெய்யிலில் இடு வெடியுப்பு மூன்றுபலம், சீனம் முப்பத்தைந்துபலம்.

அஞ்சவே கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
　　அப்பனே கழுதையுட கர்த்தம்வார்த்து
துஞ்சவே யரைத்துநன்றாய் பில்லைபண்ணித்
　　துடியான ரவிதனிலே வுலரப்போடு
மிஞ்சவே கல்வத்தில் போட்டுநீயும்
　　மேலாக சக்கரமாம் பானைவைத்து
கெஞ்சவே உளுந்தரைத்துச் சீலைசெய்து
　　கெடியான அடுப்பேற்றித் தீயைமூட்டே. (716)

மேற்படி இரண்டையும் கல்வத்தில் பொடி செய்து கழுதையின் சிறுநீர்விட்டு நன்றாக அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலரப்போடு, சக்கரப்பானையை

வைத்து அதனுள் வில்லையைப்போட்டு உளுந்தை அரைத்து சீலை செய்து அடுப்பேற்றி தீயைமூட்டு.

மூட்டவே மேலோடிப் புகையோடொக்க
    மூக்காலே சலம்விழுகும் வெள்ளைநீராய்
ஆட்டவே வெள்ளையைத்தா கைலில்வைத்து
    அதன்பின்பு சிவந்தசலம் வருகுமக்காள்
பூட்டவே பீங்கானில் வாங்கிவாங்கி
    பேரான அரக்காலே குப்பிபண்ணி
நீட்டவே யதில்வாரு கரையாதப்பா
    நேரான லோகமென்றால் கரைந்துபோமே. (717)

தீயைமூட்ட புகையுடன் வெள்ளைநீர்விழும், இவ்வெள்ளை நீரைவிட்டு விட்டு சிவந்த நீர் வரும்பொழுது பீங்கானில் பிடித்துக் கொள், பின் அரக்குக் குப்பியில் சிவந்த திராவகத்தை பத்திரப்படுத்து. இத்திராவகத்தால் லோகங்கள் எல்லாம் கரையும்.

போமெனவே ரவியில்வைத்து துரிசைவாங்கிப்
    பொடிபண்ணி கல்வத்திற் றிராவகத்தைவார்த்து
ஆமெனவே அறுசாமம் அரைத்தபின்பு
    அப்பனே பெரும்பீங்கான் தன்னில்வைத்து
காமெனவே நீர்குத்தி ரவியிற்போடு
    கலங்காதே மூன்றுநா ளானபின்பு
தாவெனவே தணலுக்குள் வறுத்துப்போட்டு
    தயங்காதே பொடிபோலே மேருக்கேத்தே. (718)

மேற்படி (715வது பாடல்) பதப்படுத்திய துரிசியை எடுத்து கல்வத்திலிட்டு இத்திராவகத்தை விட்டு ஆறுசாமம் அரைத்து பெரிய பீங்கானில் வைத்து மேற்படி திராவகத்தை விட்டு மூன்று நாள் வெய்யிலிலிட்டு நெருப்பில் வறுத்து பொடி செய்து மேருவில் ஏற்று.

ஏத்தியே தீமூட்டிப் பனிரெண்டுசாம
    மிதமாகக் கிடந்தபின் ஆறவிட்டு
மாத்தியே யுடைத்தொடுத்துக் கல்வத்திட்டு
    வாகான திராவகத்தில் அரைத்துமுன்போல்
தூத்தியே பெரும்பீங்கான் தன்னில்வைத்துத்
    துடியான திராவகத்தைக் குத்துகுத்து
ஆத்தியே தணலுக்குள் வறுத்துப்போடு
    அதிகமாங் காசியென்ற குப்பிபோடே. (719)

தன்வந்திரி பகவான்

மேருவை அடுப்பில்வைத்து பனிரெண்டு சாமம் மிதமாக எரித்து ஆறவிட்டெடுத்து உடைத்து எடுத்து உள்ளிருப்பதை கல்வத்திலிட்டு திராவகத்தை விட்டு அரைத்து நெருப்பிலிட்டு வறுத்துப் பொடித்து காசிக்குப்பியில் இடுவாயாக.

போட்டுமே வாலுகையின் மேலேவைத்துப்
பொலிவாகத் தீபம்போல் தீயைப்போட்டு
ஆட்டுமே பன்னிரண்டு சாமமானால்
அப்பனே ஆறவிட்டு எடுத்துப்பாரு
காட்டுஐந்து திரமேயிப் படியேபண்ணு
கசடற்று அருணனைப்போல் சிவந்துகாணும்
தீட்டுமே செந்தூரத்தை கத்திகொண்டு
சுரண்டியே எடுத்துவை துரிசிஆட்டே. (720)

குப்பியை வாலுகையில் ஏற்றி அடுப்பில்வைத்து பனிரெண்டு சாமம் தீயிட்டு ஆறவிட்டு எடுத்துப்பார், ஐந்து முறை இவ்வாறு மடக்கிமடக்கி முறைபடுத்த சூரியனைப்போல் சிவப்பாகும் செந்தூரத்தைக் கத்தியால் சுரண்டி எடுத்துப் பதனம் பண்ணு.

துருசு செந்தூரம்

ஆட்டான செந்தூரம் நவலோகத்தில்
அணைத்திடவே பத்திரையா மாயிரத்துக்கொன்று
மூட்டான சூதத்தைக் கரண்டியிலேவிட்டால்
முதன்மையான செந்தூரம் மார்க்கங்கிட்டும்
காட்டான சாரதனில் பிழிந்தாயானால்
கமலம்போல் திரண்டுருண்டு மணியுமாகம்
வாட்டான சூடன்தீக் குள்ளே வாட்டி
மருவிநன்றா யுருக்கிடவே சோதியாமே. (721)

மேற்படி துரிசு செந்தூரத்தை நவலோகம் ஆயிரத்துக்கு ஒன்றுகொடு. பத்தரைமாற்றுத் தங்கமாகும், சூதத்தைக் கரண்டியிலிட்டு அதில் துரிசுசெந்தூரத்தைப் போட்டுக் துணியில்பிழிய சூதம் உருண்டுதிரண்டு மணியாகும், இந்தமணியை சூடன்தீயில்வாட்டி உருக்க சோதிமய மானமணியாகும்.

வாட்டியே மேல்கவசம் சத்திசாரம்
வளையலுப்பு வெண்காரந் தானுங்கூட்டி
நீட்டியே வெடியுப்பு நீராலாட்டி
நிலவரமாய் உள்கருதான் பூசிக்கொண்டு
வாட்டியே அதின்மேலே கவசம்கட்டி
வளமாக மணல்மறைவில் புடத்தைப்போடு
தீட்டியே அம்புக்குட் கூர்மைபோலச்
சிரசான சூதமது மணியுமாமே. (722)

சோதியான சூத மணியின் மீதுகட்டும் மேல் கவசம் கூறுகிறேன், சத்திசாரம், வளையலுப்பு, வெடியுப்பு, இவைகளை வெடியுப்பு நீரால் அரைத்து சூதமணியின் மீது கவசம் செய்து மணல் மறைவில் புடம்போடு சூதம் நன்றாக கட்டி இருக்கும்.

மணியான சூதமதுதா னுருகும்போது
மாட்டுநீ நாலுக்கு ஒண்ணுதங்கம்
தணியான தங்கமிடை நாகம்போடு
தனிநாகத் திடைபோடு லிங்கம்தன்னை
வினியான லிங்கமிடை வீரம்போடு
மீளாமல் வீரமிடை காரந்தாக்கு
கணியான சூதமது களங்கமாகும்
காட்டிடவே நவலோக மேமமாமே. (723)

மேற்படி சூதமணி உருகும்போது நாலுக்கு ஒரு பங்குதங்கம், தங்கம் எடைநாகம், நாகம் எடை லிங்கம், லிங்கம் எடை வீரம், வீரம் எடை காரமிட்டு எல்லாம் சேர்த்து உருக்க களங்காகும், இக்களங்கை நவலோகத்தில் கொடுத்து தங்கமாக்கும் முறையைக் கூறுகிறேன்.

ஏமமா நூற்றுக் கொண்ணுயீவா
யென்மகனே யெட்டரைதான் ஆணிக்கொக்கும்
ஓமமாம் புடத்துக்கு உப்புக்கேகா
உண்மையா யிரும்பாட்டி சீவனத்தைப்பண்ணு
காமமாம் பெண்ணாசை தன்னைவிட்டு
கசப்போடு புளியுப்பு யெண்ணைவிட்டு
சேமமா யிரும்புதான் செந்தூரித்து
செகசால வித்தையெல்லாம் துரும்பாயெண்ணே. (724)

நவலோகம் நூறுபங்குக்கு களங்கம் ஒரு பங்கு கொடுத்துருக்க எட்டரைமாற்று ஆணித்தங்கமாகும், இத்தங்கத்தைவைத்து சீவனத்தை செய்து கொள், இத்தங்கம் புடத்திற்கும் உப்புக்கும் நிறம்மாறாது பெண் ஆசை என்ற காமம் கசப்பு, புளி, உப்பு, எண்ணெய் இவைகளை நீக்கு. இரும்பைச் செந்தூரம் செய் செகசாலவித்தை இதற்கு ஒப்பு ஆகாது.

எண்ணியெண்ணி மனஞ்சலித்து விட்ட ஞானி
யெங்கெங்கு மிருக்கிலுமென் யெவிடம்போயென்
அண்ணி கற்பமுண்டு காயசித்திசெய்து
அங்கென்று தடுக்காது தவத்தில்சென்று
நண்ணூது வார்தேசமாம் தலத்தில் புக்கி
நடனமாஞ் சிலம்பொலியின் நாட்டங்கண்டு
ஒண்ணி ஒண்ணி மவுனத்தி லறிவுதாக்கி
ஒருவருடன் பேசாதே வுண்மையாமே. (725)

வித்தையை நுனைத்து மனம் சலித்துவிட்ட ஞானி எங்கு சென்றாலும் பயனில்லை கற்பம் உட்கொண்டு காயத்தைச் சித்தி செய்து தலத்தில் புகுந்து சிவசக்தி நடனத்தின் சிலம்பொலியை கேட்டு மகிழ்ந்து மவுனத்தில் அறிவை நிருத்தி ஒருவரிடமும் பேசாமல் யோகத்தைப் பார்ப்பாயாக.

உண்மையா மிரும்பாட்டி சீவனத்தைப்பண்ணு
ஒருபலந்தா னிரும்பதனை காசாய்விற்பார்
அண்மையா யிரும்பதுவும் ஆத்தாளாத்தாள்
ஆட்சியாய் செந்தூரம் பண்ணினாக்கால்
பண்ணுமையா யிரும்புதனி னுணுக்கமெத்த
நோய்சென்றா லிரும்பினுட நுட்பங்காணார்
வண்மையாம் புடசெயத்தின் மார்க்கங்காணார்
மகத்தான சித்தியெல்லா மிரும்பலாச்சே. (726)

அயத்தை செந்தூரம் செய்து விற்று சீவனத்தைச் செய்து கொள், இரும்பு ஆத்தாளாகும், இரும்பை செந்தூரித்து பார், இதில் பல நுணுக்கமான முறைகளுண்டு, இந்த நுட்பத்தை அறிய மாட்டார்கள் புடத்தின் அளவையும், மார்க்கத்தையும் அறிய மாட்டார்கள், மகத்தான சித்திகள் இரும்பாலாகும்.

இரும்பான செந்தூரம் குன்றியுண்ணு
யேத்தமா மண்டலந்தான் பத்தியாகும்
கரும்பான கல்லாகும் தேகந்தானும்
கரத்தாலே மலைதனையே குத்தினாக்கால்
துரும்பாகும் தூளாகும் தவுடுபொடியாகும்
சுக்கிலந்தான் மேலோடும் கீழோடாது
எரும்பான யெண்பதுக்குள் கொள்ளவாகும்
இருக்குமடா இரும்பதுவும் ஏத்தமாமே. (727)

இரும்பு செந்தூரத்தை குன்றிஅளவில் ஒருமண்டலம் உட் கொள்ளவும், உடல் கல்போலாகும், தன்கைகளால் மலையை குத்த மலை தூளாகித் தவிடு பொடியாகும், சுக்கிலம் மேலோடும். கீழ் இறங்காது, எண்பதுவயதிற்குள் உட்கொள்வது நல்லது இந்த இரும்புச் செந்தூரம் மிகச் சிறந்தது.

இரும்பான களங்குக்கு நாலத்தொன்று
யேத்தமாங் கெந்தகத்தை சுத்தித்துகூட்டி
பெரும்பான பொற்றலையின் சாற்றாலாட்டி
போட்டுவரப் புடம்பத்து செந்தூரமாகும்
பரும்பான நவலோகத்தில் நெட்டியோடும்
பார்த்ததுவும் பதினாலும் மருவிக்காணும்
துரும்புதான் தூணான வாறுபோல
சொல்முறைகள் மறவாதே சூட்டுகூட்டே. (728)

இரும்பு களங்குக்கு நாலில் ஒன்று சுத்தித்த கெந்தகத்தைக் கூட்டி பொற்றிலைச் சாற்றால் அரைத்துப் புடமிடு. இவ்வாறு பத்துபுடமிட்டால் நல்ல செந்தூரமாகும், நவலோகத்தில் இச்செந்தூரம் பாயும், பதினாறு மாற்றுதங்கமாகும் துரும்பு தூணாவதைப்போல முறைகளை மறக்காமல் சேர்த்துச்செய்வாயாக.

மறவாதே சவர்க்கார சுண்ணந்தன்னை
மாட்டுகிற கருவிதான் வழலைமார்க்கம்
துறவாதே ஆருக்கும் கெர்ச்சிக்காதே
செய்தொழிலை மறவாதே திருட்டெண்ணாதே
பறவாதே கன்னிதனைப் பார்த்திடாதே
பரத்திலே மனதுன்னிப் பாருபாரு
இறவாதே காயசித்தி யோகசித்தி பண்ணி
யேத்தமாஞ் சமாதியிலே யிருந்திடாயே. (729)

சவர்க்கார சுண்ணத்தைக் சேர்க்கிற முறைதான் வழலைமார்க்கமாகும் யாருக்கும் சொல்லாதே, செய் தொழிலை மறக்காதே, திருட்டாகாது, பெண்ணிடம் மயங்கித் திரியாதே. பெண்ணைப் பார்க்கலாகாது, பரத்தில் மணதூன்றிப் பார்ப்பாயாக, இறக்கமலிருக்க காயசித்தி, யோகசித்தி, செய்து சமாதியில் இருப்பாயாக.

சமாதியிலே யிருக்கவல்லோ சவர்க்காரத்தை
தவறாமல் வெளியாகச் சொன்னேன் மக்காள்
வமாதியிலே வழலைதனை சித்தரெல்லாம்
மாச்சல்ல மகாகடின மாகச்சொன்னார்
எமாதியிலே எண்ணைதனை வார்த்து
பண்ணி யேத்தமாஞ் சுன்னத்தில்
சமாதியிலே கனபாடு பட்டுப்பட்டு
காணாம லிறந்தவர்கள் கோடிதானே. (730)

சமாதியில் இருப்பதற்கு சவர்க்காரத்தை வெளியாகச்சொன்னேன், வழலை தன்னை சித்தரெல்லாம் மகா கடினமான முறைகளில் சொன்னார்கள், சுண்ணத்தில் எண்ணெய்தனை விட்டு சமாதியில் மிக பாடுபட்டு வழலையை காணாமல் இறந்தவர்கள் கோடா கோடி.

தானென்ற சவர்க்காரம் சொன்னதர்மம்
தாயான மணித்தாய்க்கு குருவுக்காச்சு
ஏனென்றால் நிகண்டுக்குள் தீர்ந்தேனையா
யேளிதமாஞ் சித்தருக்கு யிலக்காய்ச் சொன்னேன்
கோனென்னற சித்தரெல்லாம் வழலைதன்னை
கூறினார் வெகுகடினம் குணமொன்றில்லை
தேனென்ற யேழுலட்சம் சிவன்சொன்னத்தில்
செப்பிவில்லை யென்றுநான் திறந்திட்டேனே. (731)

சவர்க்காரம் சொன்ன தர்மம் மனோன்மணித்தாய்க்கு குருவுக்காச்சு நான் சொன்ன நிகண்டுக்குள் முறைகளை தெளிவாக கூறிவிட்டேன், சித்தர்கள் வழலையை வெகுகடினமாக கூறினார், குணம் ஒன்றுமில்லை சிவன் சொன்ன ஏழுலட்சம் கிரந்தத்தில் சொல்லவில்லை, நான் சொல்லிவிட்டேன், என்றும்.

திறந்திட்டே னென்றுசொல்லியே சவர்க்காரத்தை
சித்தரெல்லாம் யென்மேலே சினமுமாச்சு
மறந்திட்ட வழலைதான் வெளியில் போட்டால்
மலையெல்லாம் சித்தர்மய மாச்சுதென்றே
கறந்திட்ட பால்போல வெளியாய்ச்சென்று
கயிலாச பாட்டர்முன்னே கருதிச் சொன்னார்
அறந்திட்ட பாட்டரது கேட்டபோதே
யரைச்சணத்தில் யென்னையங் கழைப்பித்தாரே. (732)

சவர்க்காரத்தை நான் தெளிவாகக் கூறிவிட்டதால் சித்தர்கள் என்மீது கோபம் கொண்டார்கள் மலை எல்லாம் சித்தர் மயமாகும் எனறு பயந்து கறந்த பாலைப் போல் வெளிப்படையாகச் சொல்லிவிட்டார் என்று - கயிலாசப்பாட்டர் முன் சொல்ல, பாட்டர் அதைக் கேட்டதும் என்னை அழைத்து வரச் சொன்னார்.

அழைச்சுமே கூர்மமுனி கூட்டிப்போனார்
அதிசமாம் போகரேவு சவுக்காரத்தை
விழைச்சுமே வெளியாகச் சொல்லுவானேன்
மேதினியெல்லாம் சித்தர்மய மாய்ப்போகும்
பழைச்சுபரி தாபரிந்து போடுயென்றால்
பாட்டர்சொல்ல யான்கேட்டு பக்கல்விந்த
உழைச்சுமே நிகண்டுவனை யொளித்துவைத்து
உலகத்துக் கீய்ந்துவிட்டேன் உண்மைதானே. (733)

கூர்மமுனி என்னை அழைத்துச் சென்றார், சவுக்காரத்தை வெளிப்படையாகச் சொல்லுவானேன், உலகமே சித்தர் மயமாகிப் போகும் நூலை பிரித்துப்போட்டு விடு என்றார் பாட்டர், அடுத்த இரண்டுவரிகள் பொருந்தனில்லை.

சொல்லுகின்ற யென்குருவே பூரணமேஅய்யா
சித்தானால் சகலருந்தான் துதிசெய்வார்கள்
அல்லுமையா ஆதிசிவன் யோகமானால்
அனுசரித்து அஞ்சலி பெந்தனங்கள் பண்ணி
கல்லுமையா கரைத்ததோர் விசேஷஞ்சொல்லி
கடாட்சிக்க வேணுமென்றால் கருணைகூர்வார்
வில்லுமையாய் வளைத்தாலோ அம்புதைக்கும்
வெறுமரத்தில் அம்புதையா விதம்போலாமே. (734)

என் குருவே பூரணமே அய்யா சித்தானால் சகலரும் துதிசெய்வார், ஆதிசித்தர் சிவன் கோபமானால் அவரை அனுசரித்து சமாதானப்படுத்தி கல்லும் கரைந்து போகுமளவுக்கு சொல்லி கடாட்சிக்க வேண்டும் என்றால் கருணை கூர்வார் வில் வளைந்தால் அல்லவா அம்பைச்செலுத்த முடியும் வெறும் மரத்தில் அம்பு தைக்காததுபோல.

விதமான சவுக்காரம் தன்னைசொன்னால்
வெகுசெனக் குபகார மாணாலென்ன
திதமான சுகுர்தம்வந்து லபிக்குமையா
தெளிவான ஞானவெளி தோன்றுமப்பா
பதமான பாபம்வந்து பறந்துபோகும்
பாஷித்தால் வெகுசித்தர் நூலுக்குள்ளே
அதமான தீயிலிட அகன்றுபோகும்
ஆகையால் வாதமெல்லாம் அசடாய்ப்போச்சே. (735)

சவுக்காரத்தை தெளிவாக சொன்னால், உலகிற்கு நன்மை உண்டாகும், தெளிவான ஞானம் தோன்றும், பாவம் பறந்துபோகும், வெகுசித்தர் தங்கள் நூல்களில் சொன்னார்கள், அவற்றைத் தீயிலிட்டு எரித்துவிட்டதால் வாதமெல்லாம் அசடாய்ப்போச்சு.

அசடாகப் போகாமல் அறைகிறேனான்
ஆனந்த வன்பாக அறிவாய்க்கேளே
திசடான சித்திரை வைகாசிக்குள்ளே
செங்கதிரோன் ரவிதன்னில் பொங்கிநீறும்
பசடாக பூநீருதான் பதக்குவாரி
பாண்டத்தி லிட்டுமே தண்ணீர்வாரு
திசடாக ஒன்றுக்கு ரெண்டு தண்ணீர்
சிறப்பாக வார்த்துமே கலக்கிடாயே. (736)

அவ்வாறு அசடாகப் போகாமல் நான் சொல்லிவைத்தேன், சித்திரை வைகாசிக்குள், சூரியன் உதிக்கும் வேளையில் பொங்கிநீறும் பூநீரு பதக்கு அளவு எடுத்து, பாண்டத்திலிட்டு அதற்கு இரண்டு பங்கு அளவு நீர்விட்டு கலக்கிக்கொள்.

கலக்கியே மூன்றுநா ளானபின்பு
கசகாமல் தெளிவிறுத்து காச்சுகாச்சு
புலக்கியே பொடியான பதத்தில்வாங்கி
பேரான வெடியுப்பு நீராலாட்டி
விலக்கியே வில்லைபண்ணி காயவைத்து
மீராதே புடம்போட்டு யெடுத்துவைப்பாய்
துலக்கியே சீனத்தை கல்வத்திட்டு
துடியான வெடியுப்பு நீராலாட்டே. (737)

கலக்கியதை மூன்றுநாள் வைத்திருந்து பின்பு தெளிவைமட்டும் இறுத்து காச்சுவாயாக, உப்பாகும் பதத்தில் எடுத்து பொடித்து வெடியுப்பு நீரால் அரைத்து வில்லை செய்து காயவைத்து புடம்போட்டு எடுத்து வைத்திடு, சீனத்தைக் கல்வத்திலிட்டு வெடியுப்பு நீர்விட்டு ஐந்து நாள் அரைத்திடு.

ஆட்டியே அஞ்சுநாள் வில்லைபண்ணி
அகலிலிட்டு அன்பதெரு அடக்கிபோடு
தூட்டியே ஆறவிட்டு எடுத்துப்பாரு
சுப்பிரமாய் வெள்ளையாய் சுண்ணமாகும்
காட்டியே வுலைவைத்து கல்லுப்புத்தானும்
கணக்காக வெடியுப்பு நீராலாட்டி
வாட்டியே அகலிட்டு புடத்தைப்போட
வாரம்போல் சுண்ணாம்பு ஆகும்பாரே. (738)

அரைத்ததை வில்லை செய்து அகலிலிட்டு சீலைமண்செய்து ஐம்பது எருவில் புடம்போட்டு ஆறவிட்டு எடு, வெள்ளை நிறமான சுண்ணமாகி இருக்கும், கல்லுப்பை வெடியுப்பு நீரால் அரைத்து அகலில்வைத்து புடமிடு, சுண்ணமாகும்.

ஆகுமே பூநீறு சுண்ணம்நாலு
அரிதான சீனத்தில் சுண்ணம்ரெண்டு
ஏகுமே கல்லுப்பு சுண்ணமொன்று
யேத்தமா கல்வத்தி லிதனைப்போட்டு
போகுமே பொடிபண்ணி வெடியுப்புநீரால்
ஒருசாம மரைத்திட்டு வில்லைபண்ணி
தேகுமே குக்கிடத்தின் புடத்தைப்போட்டு
சீதனமாய் ஆறவிட்டு யெடுத்துக்கொள்ளே. (739)

மேற்படி பூநீறு சுண்ணம் நான்கு பலம் சீனச்சுண்ணம் இரண்டு பலம், கல்லுப்புச் சுண்ணம் ஒரு பலம், இவைகளை கல்வத்திலிட்டு பொடிசெய்து வெடியுப்பு நீரால் சாமம் அரைத்து வில்லை செய்து குக்குடபுடமிட்டு ஆறவைத்து எடுத்துக் கொள்.

எடுத்துமே வெடியுப்பு நீராலாட்டி
இழுத்தரைத்து வீரமது பலம்கால்போட்டு
விடுத்துமே வில்லைபண்ணிக் காயவைத்து
மீராதே புடம்போட்டு யெடுத்துவாங்கி
கடுத்துமே கல்வத்தி லிதனைப்போட்டு
கடிதான வீரமது பலம்கால்போட்டு
தடுத்துமே வெடியுப்பு நீராலாட்டி
சாதகமாம் அஞ்சுபுடம் போட்டிடாயே. (740)

எடுத்ததை வெடியுப்பு நீரால் அரைத்து கால்பலம் வீரம் சேர்த்து நன்றாக அரைத்து வில்லை செய்து காய வைத்து புடம் போட்டு ஆறவிட்டு எடுத்து மறுமுறையும் கால்பலம் வீரமிட்டு வெடியுப்பு நீரால் அரைத்து புடமிடு. இவ்வாறு வீரம் கால்பலம் அளவு சேர்த்து வெடியுப்பு நீரால் அரைத்து வில்லை கட்டி காயவைத்து புடமிடு. இவ்வாறு ஐந்துபுடம் தீர்த்துக்கொள்.

அஞ்சுமே புடம்போடச் சுண்ணமாகும்
    ஆண்மையாஞ் சவுக்காரம் சுண்ணமாச்சு
கொஞ்சமே சரக்கெல்லாம் கட்டிப்போகும்
    கெடியாரம் போடலாம் வாதஆட்டு
துஞ்சுமே வாய்திறந்து பேசவேண்டாம்
    சொல்லாதே ஒருவருடன் சூட்சமெத்த
தஞ்சமே விளாங்காய்போல் உண்டைபண்ணி
    சாந்தமாம் ரவிதனிலே காயப்போடே. (741)

ஐந்துபுடம் தீர்க்க சுண்ணமாகும், சவுக்காரம் சுண்ணமாச்சு, இதனால் சரக்குகள் கட்டும், வாதமாடலாம், வாய்திறந்து பேசவேண்டாம், இதன் ரகசியத்தைக் கூறவேண்டாம், இச்சுண்ணத்தை விளாங்காயளவு உருண்டைசெய்து வெய்யிலில் காய வை.

காயவைத்து யெடுத்துவைப்பாய் பதனமாக
    கருத்துவைத்து கைமுறையாய் வளமாய்ப்பண்ணு
ஆயவைத்துச் சாத்திரத்தில் சொன்னாரில்லை
    அறுபத்து நாலானால் மரபில்தானும்
சாயவைத்து வெவ்வேறாய் சொல்லிப்போட்டார்
    சனங்களெல்லாம் சித்தமய மாகுமென்று
ஓயவைத்து நம்முடைய நிகண்டில்சொன்னேன்
    உத்தமமாம் சவர்க்காரச் சுண்ணமாச்சே. (742)

காயவைத்து பத்திரப்படுத்து, இதில் கருத்து வைத்து கை முறை மாறாது செய்வாயாக, இவ்வாறு கை முறையாக இப்பாகத்தை யாரும் சொல்லவில்லை, வெவ்வேறாக சொல்லி வைத்தார், என் நிகண்டில் வெளிப்படையாக தெளிவாக சொல்லிவிட்டேன், இது உத்தமமான சவர்க்கார சுண்ணமாகும்.

சவுக்கார வித்தைதனை சொன்னாரென்று
    சதாசிவனு மென்மேலே கோபமானார்
மவுக்கமா மவுனிகளும் கோபமானார்
    வாய்திறக்கார் சித்தர்கள்தான் யென்னோடப்பா
குருக்காரம் நிகண்டுதனை குகையில்வைத்தால்
    கோபம்வந்தால் சித்தர்கள்தான் கிழிப்பாரென்று

உவுக்கமா முலகத்தோர்க் கீய்ந்துவிட்டேன்
உத்தமித்தாய் சொல்லிடவே வுரைசெய்தேனே. (743)

இவ்வாறாக சவுக்கார வித்தைகளை வெளிப்படையாக சொன்னார் என்று சதாசிவன் என்மீது கோபம் கொண்டார், மவுனிகளும் என்மீது கோபமானார், என் நிகண்டு நூலை குகையில்வைத்தால் சித்தர்கட்கு கோபம்வந்து கிழிப்பார்கள் என்று உலகத்தோர்க்கு கொடுத்துவிட்டேன், உத்தமித்தாய்சொன்னபடி செய்துவிட்டேன்.

செய்திட்டேன் சிவகாமி சொல்லக்கேட்டு
சித்தரெல்லாம் சினேகம்விட்டுக் கோபமாகி
வைத்திட்டா ரென்றுசொல்லி வெளியில்போட்டேன்
மறைந்துவைத்த கருவிதான் வழலைமார்க்கம்
கொய்திட்ட குருவாலே கோடிகவராகும்
கூறரிது கூகூகூ கொள்ளைகொள்ளை
கைதிட்ட சரக்கு நமன்போலாகும்
நாமறியோ மிதுபோலே போக்குதானே. (744)

சிவகாமி சொல்வதைக் கேட்டு நான் கூறிவிட்டேன், சித்தர்கள் என்மீது கோபமாகி சினேகிதம்விட்டார்கள் என்பதனால் நூலை வெளியி லிட்டேன், இக்குருவால் கோடி முறைகளாகும், சரக்குகட்கு இக்குரு நமன்போலாகும், இதனால் சரக்குகள் சாகும்.

போக்கான கருவெல்லா மெதினாலாச்சு
புகழான ஊசரத்தின் குருவாலாச்சு
தாக்கான சாத்திரத்தில் சித்தரெல்லம்
சாதகமாய்ச் சொல்லாதே போனாரென்று
நோக்கான ரெண்டுக்குள் வெளியாய்ச்சொன்னேன்
நுட்பமெல்லா என்னூல்போல் யெவருஞ்சொல்லார்
வாக்கான சவுக்காரம் குருத்தான் செய்யும்
மார்க்கத்தை வழியோடே வழுத்துவேனே. (745)

கருவெல்லாம் சவுக்காரத்தால் ஆனது, சித்தரெல்லாம் சாஸ்திரத்தில் மறைத்துப் பாடினார், இரண்டுக்குள் நான் தெளிவாக வெளியாக சொல்லிவிட்டேன், என் நூலில் உள்ள நுட்பத்தைப்போல் எவரும் சொல்லார், சவுக்கார குரு செய்யும் முறையை கை பாகமாக கூறுகிறேன்.

வழுத்துவேன் முன்வைத்த சவுக்காரந்தான்
வாகாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
எழுத்தவே யெருக்கம்பால் படிதானொன்று
யிசைந்த அண்ட சுன்னமது பலந்தானொன்று

விழுத்தவே வெடியுப்பு சுண்ணமொன்று
மிடுக்கான சீனத்தின் சுண்ணமொன்று
தழுத்தவே வங்கத்தின் சுண்ணமொன்று
சவுட்டைவில்லை பலமொன்று தூக்கிக்கொள்ளே. (746)

முக்வைத்த சவுக்காரம் பத்து பலம், எருக்கம் பலம் ஒருபடி, அண்டசுண்ணம் ஒருபலம், வெடியுப்பு சுண்ணம் ஒருபலம், சீனச்சுண்ணம் ஒருபலம், சவுட்டுப்பின் வில்லை ஒருபலம், இவைகள் எடுத்துக் கொள், மேலும்

தூக்கியே கல்சுண்ணம் பலந்தானாலு
துப்புரவாம் நல்லதண்ணீ ரெண்டுசேரு
நீக்கியே நீரதனில் கல்சுண்ணத்தை
நிகழாமல் கலக்கியே நீரிறுத்துக்கொண்டு
வாக்கியே முன்சொன்ன அஞ்சுதானும்
வகைக்குஒரு பலம்நிறுத்து கலக்கிக்கொண்டு
தாக்கிய வீரமது காசுரெண்டு
சாரமதுக் காசுரெண்டு பூரம்ரெண்டே. (747)

கல்சுண்ணம் நான்குபலம், நல்லநீர் ரெண்டுபடியில் கல்சுண்ணத்தைக் கலக்கி நீரை இறுத்துக்கொண்டு முன்சொன்ன ஐந்துவித சரக்குகளில் வகைக்கு ஒருபலம் எடுத்து மேற்படி சுண்ணநீரில் கலக்கி வீரம், சாரம், பூரம், இவைகள் வகைக்கு இரண்டு காசு எடை, மற்றும்.

ரெண்டோடு கருநாபி காசுரெண்டு
நிச்சயமாம் புழுகதுவும் காசுரெண்டு
பண்டோடு குக்குவெண் பலமும்ரெண்டு
பாங்கான குருவண்டு அன்பத்தொன்று
தண்டோடு வெள்ளூரமும் காசுரெண்டு
தளுக்கான சூதமது காசுரெண்டு
துண்டோடு சுண்ணாம்பு நீரினாலே
சுழட்டியரைக் கொன்றாகக் கலக்கிக்கொண்டே. (748)

கருநாபி புனுகு, கொக்கின் வெண்மலம், இவைகள் வகைக்கு இரண்டு காசு எடை, குருவண்டு ஐம்பத்து ஒன்று, வெள்ளூரம், சூதம், இவைகள் வகைக்கு இரண்டு காசுஎடை, இவைகளை மேற்படி சுண்ண நீரில் கலக்கிக்கொள்.

கலக்கியே ஒன்றாக வைத்துக்கொண்டு
கடிசான யெருக்கம்பால் படிதான்விட்டு
அலக்கியே அண்டமது அன்பத்தொன்று
அப்பனே வெண்கருவைக் கூடவிட்டு

குலக்கியே குச்சியினால் மத்திச்சுவைக்க
கொப்பளித்துக் கடுங்கார செயநீராகும்
திலக்கியே தெளிவாக யிருத்துக்கொண்டு
செயமான சவுக்காரம் தன்னில்போடே. (749)

மேற்படி பொருட்களை சுண்ணநீரில் நன்றாக கலந்து முன் எடுத்த எருக்கம்பாலை படி அளவு இட்டு மேலும் ஐம்பத்தொரு அண்டத்தின் வெண்கருவிட்டு குச்சியினால் நன்றாக மத்தித்து வைக்க கடுங்கார செயநீராகும், தெளிவை இறுத்துக் கொண்டு சவுக்காரத்தில் இந்நீரை விடுவாயாக.

போட்டுமே கவர்கழியால் கடையவெண்ணை
பொருமிவரும் வழித்தெடுத்துபெரும்பீங்கான்
மூட்டுமே மூணுநா ளாகமட்டும்
முயற்சியாய் கடைந்தெல்லாம் வெண்ணைவாங்கு
நாட்டியே ரவியிலிட்டு காயப்போடு
நவாச்சாரம் சரியிடைக்கி நாட்டிப்பின்பு
ஆட்டியே அஞ்சுநா ளரைத்துமைபோல்
அகலிலிட்டு மூடியே புடத்தைப்போடே. (750)

விட்டதை கழியால் நன்றாகக்கடைய வெண்ணெய் திரளும், வெண்ணெயை பெரிய பீங்கானில் வழித்து வைத்திடு. மூன்று நாள் கடைந்து முடிய மட்டும் வெண்ணெய் எடுத்து பீங்கானிலிட்டு வெய்யிலில் வைப்பாய், காய்ந்த பின் வெண்ணெயின் எடைக்கு சமன் நவாச்சாரம் சேர்த்து ஐந்துநாள் மைபோல் அரைத்து அகலில் வைத்து மேலகல் மூடி புடத்தைப் போடுவாயாக.

மூடியே புடம்போட சாரங்கட்டி
முத்துப்போல் வெள்ளையுமாம் பனியில்வைப்பாய்
சாடியே கலந்தானம் சிவந்திருக்கும்
தனுக்குள் வீரமொடு பூரம்போட்டு
பாடியே யெடுத்துவைப்பாய் பதனமாக
பருவமாய்க் கம்பிஉப்பு தோச்சுப்போடு
சீடியே சீனத்தை தோச்சுப்போடு
தேசுவாம் வெண்காரம் தோச்சுப்போடே. (751)

புடம் ஆறி எடுத்துப்பார்க்க சாரம் கட்டி இருக்கும், முத்துபோல் வெண்ணிறமாக இருக்கம். பனியில் வைக்க சிவந்த வண்ணமான செயநீராகும், செயநீரில் வீரம், பூரம், போட்டு கலக்கி, பத்திரப்படுத்து, கம்பிவுப்பை இச்செயநீரில் துவைத்துபோடு அதேபோல் சீனம், வெண்காரம் இவைகளையும் செயநீரில் துவைத்து போடு.

தோச்சிடவே பாரையுப்பு சூடன்வெள்ளை
சூதமொடு சவ்வீரம் சாதிலிங்கம்

ஆச்சிடவே அறுபத்து நாலுங்கட்டும்
அருகாம லவணமது கட்டிப்போகும்
ஓச்சிடவே உபரசங்கள் நூற்றிரண்டுஞ்சத்தாம்
உற்பனமாய் சுருக்கிட்டு வாட்டுவாட்டு
சாச்சிடவே சவுக்காரம் கடைந்தநீரில்
சரக்கான வளையலுப்பை யரைத்துக்கட்டே. (752)

பாறையுப்பு, சூடன், வெள்ளை, சூதம், சவ்வீரம், சாதிலிங்கம், உள்பட அறுபத்து நான்கு சரக்கும் செயநீரில் துவைத்துப் போட கட்டும், காராசார லவண வகைகள் செயநீரால்கட்டும் உபரசங்கள் நூற்று இருபதும் சத்தாகும், இச்செயநீரில் வளையலுப்பைக் அரைத்துக் கட்டு.

கட்டுதற்கு முன்பேதான் உள்கருவைக்கேளு
காரமொடு சவ்வீரம் லிங்கந்தானும்
மட்டுதற்கு வகைக்குஒரு விராகனிடைதூக்கி
மகத்தான சவுக்காரம் கடைந்தநீரில்
ஒட்டுதற்கு அரைத்துமே உள்கருவாய் பூசி
உலர்ந்ததொரு வளையலுப்பு கவசங்கட்டி
மட்டுதற்கு மணலாவியிற் புடத்தைப்போட
மகத்தான முழுவயிரக் கட்டுமாமே. (753)

கட்டுவதற்குமுன் உள்கருவைக் கூறுகிறேன், காரம், லிங்கம், சவ்வீரம் இவைகள் வகைக்கு விராகனிடை எடுத்து சவுக்காரம் கடைந்த இச்செயநீரில் அரைத்து வளையலுப்பிற்கு கவசம்கட்டி மணலாவியில் புடமிட வயிரம் போல் வளையலுப்புக் கட்டிப்போகும்.

கட்டியதோர் சரக்குகளில் வேதைகோடி
கசடத்த சத்துகளோ மெழுகுகோடி
தெட்டியதோர் செயநீரும் சுண்ணங்கோடி
செந்தூரம் குருவோடு களங்குகோடி
யெட்டியதோர் குளிகைவகை கோடாகோடி
யெடுத்தோடும் குளிகையிலே விந்தைகோடி
பட்டியதோ பழுப்பினமும் கொழுப்பினமுங்கோடி
பகரரிது சவுக்கார நீரிலாட்டே. (754)

இவ்வாறு கட்டிய சரக்குகளில் கோடி வேதையாடலாம், கசடுநீங்கி சத்துக்கள், மெழுகுவகைகள் கோடியாகும், செயநீரும், சுண்ணமும் கோடி, செந்தூரம் குரு களங்கு வகைகள் கோடி, குளிகைவகை கோடாகோடி, அக்குளிகையினால் வித்தைகள் கோடி, பழுப்பினமும், கொழுப்பினமும் கோடி, சவுக்கார நீரில் அரைத்து முறை செய்வாயாக.

சவுக்காரம் மரப்பையெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
தாய்சொல்ல யான்கண்டு சந்தோஷித்து
எவுக்கமாம் யெழுகோடி யுகமும்பார்த்து
யேழையான சித்தருக்கு யியல்பாய்ச்சொல்லி
தவுக்கமாம் நல்சீவுள் பார்த்துத்தேடி
சவுக்கார வைப்பெல்லாம் சாற்றினேன்யான்
உவுக்கமாம் சவுக்காரம் பார்த்துத்தேர்ந்த
உயர்சீடர் நாற்பத்து மூவராச்சே. (755)

சவுக்கார மறைப்பை எல்லாம் வெளியாகச் சொன்னேன், தாய் சொன்னதை நான்கேட்டு சந்தோஷித்து ஏழுகோடி யுகம்பார்த்து ஏழையான சித்தர்கட்கு சொல்லிவிட்டேன், சவுக்கார முறைகளில் தேர்ந்து முடித்த சீடர்கள் நாற்பத்து மூன்றுபேர்.

ஆச்சப்பா நாற்பத்து மூன்றுபேரும்
அண்டத்து சித்தருடன் வாதுபோட்டு
கூச்சப்பா குளிகையுட வேகங்காட்டி
குருவான துரிசினீர் கூர்மைகாட்டி
தாச்சப்பா சவுக்காரம் சிழமைகாட்டி
சடதார தெரிசனத்தில் சார்வுகாட்டி
யேச்சப்பா சிலம்பொலியி னிடக்கங்காட்டி
யெனைப்போல சமாதியிலே யிருந்தார்காணே. (756)

அச்சீடர்கள் நாற்பத்து மூன்றுபேரும் அண்டத்து சித்தருடன் வாதுபேசி குளிகையின் வேகத்தையும், துரிசுசுண்ணத்தின் காரத்தையும், சவுக்காரத்தின் முறைகளையும் காட்டி சடாதார தெரிசனத்தில் சார்வும் காட்டி சிலம்பொலியை கேட்டு என்னைப்போல் சமாதியில் இருந்தார்கள்.

இருந்திட்ட சவுக்கார செயநீர்தன்னில்
யிதமாக வீரமொடு பூரம்போட்டு
கருந்திட்ட காரமொன்று சவ்வீரமொன்று
கருதியதோர் தாளகமும் துருசுஒன்று
திருந்திட்ட சூதமொன்று கல்வத்திட்டு
சிறப்பாகச் செயநீரை விட்டுஆட்டி
நருந்திட்ட நாலுநா ளரைத்துமைபோல்
நலமாக மூன்றுபங்கு பண்ணிவையே. (757)

சவுக்காரச் செயநீரில் வீரம், பூரமிட்டு, காரம் ஒன்று, சவ்வீரம் ஒன்று, தாளகம் ஒன்று, துரிசு ஒன்று, சூதம் ஒன்று இவைகள் ஐந்து சரக்கையும் கல்வமிட்டு, வீரம். பூரமிட்ட செயநீரை விட்டு நான்கு நாள் அரைத்து மை போலானபின் மூன்று பங்காகப் பிரித்து வைப்பாயாக.

பண்ணியதோர் சரக்கதுவும் பலந்தானொன்று
　　பரிவான அரப்பொடிதான் பலந்தான்போட்டு
யெண்ணியதோர் யெலுமிச்சம் பழச்சாறுவார்த்து
　　இதமாக மூன்றுநா ளூறவைத்து
கண்ணியதோர் கழுவியெல்லாங் காயப்போட்டு
　　கனத்ததோர் முன்பங்கு ஒன்றுங்கூட்டி
குண்ணியதோர் குகையிலிட்டு உருக்கியாட்டு
　　கொட்டியே உடைத்தெடுத்து மருபங்குகூட்டே. (758)

அரப்பொடி ஒருபலத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டு மூன்றுநாள் ஊறவைத்து கழுவிக்காய வைத்து அரைத்து மூன்றாக பிரித்து வைத்த சரக்கில் ஒருபங்கை அரப் பொடியுடன் சேர்த்து குகையிலிட்டு உருக்கு, பின் கொட்டி உடைத்து மறுபங்கு சரக்கை சேர்த்துக்கொள்.

கூட்டியே பின்பொருக்கால் குமுறஊது
　　குகைநொருக்கி சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
மாட்டிப்பின் பொருக்கால் மருந்துகூட்டி
　　மறவாம லூதிடவே சத்துமாகும்
சாட்டியே சத்தெல்லாம் காரமிட்டு
　　தரித்தயிடை நாலுக்கு ஒன்றுதங்கம்
ஊட்டியே ஒன்றாக உருகும்போது
　　உயர்கின்ற நாகத்தை ஊட்டக்கேளே. (759)

சேர்த்ததை குகையிலிட்டு குமுற ஊதி உருக்கு, சத்தாகும், சத்தை எல்லாம் எடுத்து மூன்றாம் பங்கு மருந்தைச் சேர்த்து குகையிலிட்டு நன்றாக ஊத சத்தாகும், சத்தைக்காரமிட்டு உருக்கி நாலுக்கு ஒருபங்கு தங்கம் கொடுத்து உருக்கி இதனுடன் நாகத்தைச் சேர்க்கும் முறையைக் கூறுகிறேன்.

நாகத்தை யுருக்கதோர் மார்க்கங்கேளு
　　நலமாகச் சுத்திபண்ணி வில்லைவார்த்து
ஆகத்தை யிருக்குகின்ற அப்பிரகங்காந்தம்
　　அதிகமாம் வளையலுப்பு சத்திச்சாரம்
மாகத்தை யெவாச்சாரம் வீரமோடுகார
　　மடுக்கார வகைக்கு அரைப் பலந்தான் கூட்டி
பூதத்தை வெடியுப்பு நீரினாலே
　　புகழான தினமூன்று அரைத்திடாயே (760)

நாகத்தை சுத்தி செய்து உருக்கி வில்லைபோல் வார்த்து அப்ரேகம், காந்தம், வளையலுப்பு, சத்திச்சாரம், எவாச்சாரம், வீரம், காரம், இவைகள் வகைக்கு அரைப்பலம் எடுத்து வெடியுப்பு நீரில் மூன்று நாள் அரைத்துக் கொள்.

தினமூன்று அரைத்தபின்பு வெடியுப்புநீரில்
சேறுபோல் குழப்பியே வைத்துக்கொண்டு
அனகாக வில்லையது ஆறுமணலாகும்
அழகான குழம்பிலே அதட்டிவாட்டு
பண்பாகக் குழம்பையெல்லாப் பதியவாட்டு
பண்பான வளையலுப்பு கலசங்கட்டி
அன்பாக அன்பதெரு அடுக்கிப்போட
அகாரமா முழுக்கட்டு ஆகும்பாரே. (761)

அரைத்தபின் வெடியுப்பு நீரைக்கலந்து குழம்புபதமாக குழப்பி வைத்து மேற்படி நாகவில்லை கட்கு பூசி நெருப்பில் வாட்டு குழம்பெல்லாம் செல்லும் அளவிற்கு வாட்டி வளையலுப்பை அரைத்து நாகத்திற்கு கவசம்கட்டி ஐம்பது எரு அடுக்கிப்புடமிட நாகம் முழுக்கட்டாகும், இதை மேற்படி வகையுடன் சேர்த்து செந்தூர முறைப்படி தயார் செய்து கொள்க.

கட்டியே லிங்கமது கருதக்கேளு
காரணமாம் சவுக்காரச் செயநீராலே
துட்டிலே துருசுஅஞ்சு பலத்தைவாங்கி
துடியான கல்வத்தி லிதனைப்போட்டு
அட்டவே அஞ்சுநா ளரைத்துமைபோல்
அகலிலிட்டு புடம்போடச் சுண்ணமாகும்
பட்டவே சுண்ணம்வைத்துக் கிடைதான்சாரம்
புகட்டியரைத் தஞ்சுநாள் புடத்தைப்போடே. (762)

மேலும் மருந்தில் சேரும் லிங்கத்தை பதப்படுத்தும் முறை கூறுகிறேன், துரிசு ஐந்துபலத்தை கல்வத்திலிட்டு சவுக்காரச் செயநீரால் ஐந்து நாள் அரைத்து புடமிட சுண்ணமாகும், துரிசுசுண்ணத்திற்கு சமன் சாரம் சேர்த்து ஐந்து நாள் சவுக்கார நீரினால் அரைத்து புடமிடு.

போட்டுவாய் பீங்கானில் பனியில்வைத்துப்
பெருகுகின்ற ஆறுபோல் செயநீராகும்
தீட்டுவாய் செயநீரில் பூரம்வீரம்
சிறப்பாகப் பொடித்திட்டு வறுத்துக்கொண்டு
காட்டுவாய் கம்பிலிங்கம் பலத்தைவாங்கி
கனமாக முலைப்பாலும் பழச்சாறும் சேர்த்து
ஓட்டுவாய் ஓட்டிலிட்டுச் சுருக்குப்போடு
உறுதியாய் செயநீரை சுருக்குப்போடே. (763)

புடமிட சுண்ணமாகும், இச்சுண்ணத்தை பீங்கானிலிட்டு பனியில் வைக்க செயநீர் பெருகும், செயநீரில் வீரம், பூரம், பொடித்துப் போட்டு ஒருபலம்

கம்பிலிங்கத்தை ஒட்டிலிட்டு தாய்ப்பாலாலும், பழச்சாற்றாலும், சுருக்கிட்டு, பின் இந்த செயநீரால் சுருக்கிடு.

சுருக்கிட்டு நாற்சாம மானபின்பு
சுத்தமாம் சவாதோடு காரம்வீரம்
அருக்கிட்ட செயநீரா லரைத்துபூசி
ஆண்மையாம் வளையலுப்பு சத்திச்சாரம்
கருக்கிட்ட வெடியுப்பு நீராலாட்டி
கனமாக மேல்கவசம் கட்டிவாட்டு
உருக்கிட்டு உருதியாய் வாட்டிவாட்டி
உண்மையாய் மறைவினில் புடத்தைப்போடே. (764)

மேற்படி நான்குசாமம் சுருக்கிட்டு சவ்வாது காரம், வீரம், இவைகளை செயநீரால் அரைத்து லிங்கத்திற்கு கவசம்கட்டி வளையலுப்பு, சத்திச்சாரம், இவைகளை வெடியுப்பு நீரால் அரைத்து மேற்படி கவசத்தின் மீது மேலும் கவசமிட்டு நெருப்பில் வாட்டி மறைவில் புடம் போடு.

மறைவிலே புடம்போட் டெடுத்துவைத்து
மகத்தானலிங்கத்தின் பலகைதானும்
அறவியே யரைப்பலந்தான் தூக்கிக்கொண்டு
ஆண்மையாம் பரிரேக்கை மேலேசுத்தி
கரவிலே கற்பூர தீபந்தன்னில்
கனமான சவுக்கார செயநீர் தோச்சு
துரவிலே நால்சாமம் வாட்டுவாட்டு
துரிசாக வாட்டிடவுங் கட்டிப்பாரே. (765)

மேற்படி புடமிட்ட அரைப்பலம் லிங்கத்திற்கு தங்கரேக்கை மேலே சுற்றி சவுக்கார செயநீரை தோய்த்து கற்பூரதீபத்தில் நான்கு சாமம் வாட்ட லிங்கம் பரிரேக்கை வாங்கிக்கொள்ளும், லிங்கம் கட்டாகும்.

பாரப்பா குருவோடு மகாரஞ்சேரில்
பாருலகில் நினைத்ததெல்லாம் வசியமாகும்
ஆரப்பா மகாரநடு வெடுத்துமருலோ
டறையிலிட அழைப்பிக்கும் வித்தையாகும்
சேரப்பா சிகாரநடு வெடுத்தேபானு
சேர்த்திடவே பேதனமாந் தெளிந்துபாரு
வேரப்பா வகாரநடு வெடுத்தே ஈந்து
மேலிடவே வித்துவே ஷணந்தானாமே. (766)

ஆமப்பா ரவிமுதலாய் கேதுமட்டு
மவ்ரவர்தன் றிசையிலக்க மறிந்துபோட்டு

ஓமப்பா சாத்தியந்தா னாமம்போட்டு
உரைக்கறியார் ஐங்காய மேலேபூசு
தாமப்பா சோதனைக்கு விளக்கில்வாட்ட
சல்லிய மூலிக்குவரைத் தகட்டிற்பூசு
நாமப்பா கண்டபடி யுமக்குச்சொன்னோம்
நவக்கிரகக் கசமென் னாளுமுற்றே. (767)

நாளான கார்த்திகை யுத்திரமுத்திராடம்
நாள்மூன்றும் ரவிதிசைக்கு வருஷமாறும்
வாளான சகடுவலைத் தனமாமூன்றும்
மதியினுட நாள்திசைதான் வருஷம்பத்தாம்
கோளான மும்மீன் சித்திரையவிட்டம்
குசனுடைய நாள்திசைதான் வருஷமேழாம்
ஆளான திரைசோதி சதயமூன்று
மாண்டுபதி னெட்டவுக் கறிகுவீரே. (768)

தானான நவக்கிரக மடைந்தபின்பு
சாங்கமா யவரவர்தன் பீசம்போடு
கோனான அகாரம் அஞ்சுபோடு
குறிப்பான நகாரமுதல் அஞ்சுபோடு
வேனான குறிப்போடு ஸ்ரீயும்போடு
மேவுசௌவுங் கிலியோடு ஐயும்போடு
ஊனான பூதங்க ளஞ்சுபோடு
உத்தமனே யவரவர்தன் றிசைநாட்போடே. (769)

போடப்பா ரேகைமுனை சூலமேத்திப்
புகழாக விந்திட்டுப் பிரணவத்தால்கூட்டி
சூடப்பா வதின்மேலே விருத்தமொன்றிட்டு
துலங்கவே நாலிதழுஞ் சூலம்போடு
தேடப்பா சிதம்பரத்தின் மகிமைதானும்
சிறக்கவே போட்டிட்டால் வசியமாகும்
நாடப்பா வதின்மேலே விருத்தமொன்றிட்டு
நலமாக பத்திதழும் நவின்றிடாயே. (770)

நவின்றிடுவா யதின்மேலே விருத்தமொன்றிட்டு
நலமாக பத்திதழும் பன்னிரண்டிதழும்போடு
உவன்றிடுவா யதன்மேலே விறுத்தமொன்றிட்டு
உபையவித முபையவிட்டம் பானுவட்டம்
தவன்றிடுவாய் பீசாட்சர மறிந்துபோடு
தப்பாமல் சிகாரமது மாட்டுமொட்டு
முவன்றிடுவா யன்பத்தோ ரெழுத்துமந்த
முறைவீத மிகதழறிந்து மூட்டுமூட்டே. (771)

மூட்டிடுவா யஞ்சுவன்ன கோட்டையிட்டு
முளைக்கநூற் றிருபத்தஞ் சிதமுமிட்டு
கூட்டிடுவாய் நால்வாசல் தேவதையுமிட்டு
குறிப்பாகப் பூசித்துப் பானம்பண்ணு
ஆட்டிடுவாய் வஸ்துவொடு சுத்திவைத்து
அங்கனியாசங்ரனியாச மறிந்துபண்ணு
பூட்டிடுவாய் பரமான்னம் பலகாரங்கள்
பூசுபரி மளசுகந்தம் பூசைக்கேத்தே. (772)

ஏத்திடுவாய் மைந்துனுட காரஞ்சேறி
லிருந்துகுன்ற தம்பனமா மிகத்திலேதான்
சாற்றிடுவாய் ராகுவொடு மகாரஞ்சேரில்
சாற்றுகிறேன் நாதாக்கள் பாதம்போற்றி
மாத்துகிறே னெண்பத்தோ ரறையாநிற்கும்
மறுபடியுமும் மூன்றாய் வகுத்திட்டேதான்
தோத்துகிறேன் நவக்கிரக மடைக்கும்வாறு
தொடுகுறிபோல் நன்றாகச் சொல்லிப்பானேன். (773)

பானுகுழி மால்கேது சனியேழாகப்
பவரறிய புகழறிந்து குசனேமுத்தம்
வானுமடு குசன்வெள்ளி குருமால்பானு
மகத்தான சனிராகு கேதுமுத்துந்
தேனுடைய புகழறிந்து புவனபானுஞ்
செம்பொனி ராகுகேது சனியேமுத்தும்
தானுபுத னிரவிகுரு ராகுகேது
சனிசெவ்வாய் புகழறிந்து முத்துந்தானே. (774)

முத்திகுரு புதனிரவி மைந்தனாகு
முறைகேது பிறைசெவ்வாய் வெள்ளிமுத்தும்
வெத்திபுகர்ச்சி செவ்வாயி ரவிபொன்பால்
விஷமான கேதுசனி றாகுமுத்தும்
மத்திசனி யுடன்றாகு கேதுவிந்து
வாரல்புகர் குருமாலோ டருக்கன்முத்துஞ்
சுத்திடுமி ராகுகேது சனிகுசனே வெள்ளி
துலங்குமதி மாலிரவி குருமுத்தாச்சே. (775)

ஆச்சிந்த கேதுசனி றாகுவெள்ளி
அம்புலிசெவ் வாயிரவி குருபுதனேமுத்துஞ்
வாச்சிந்த அம்மூன்று மதின்கீழிட்டு
உள்ளறைமூ வொன்பதிலும் முறைகண்டேத்து

யேச்சிந்த விருபத்தா றிருபத்தேழில்
வளமான திராவகத்தால் சவுக்காரந்தானே. (776)

தாறான சவுக்கார மிதுதானாப்பா
சாதகமாய் நூல்தோறு மொளித்தார்சித்தர்
வீணான பயல்களுக்கு சொன்னாயானால்
விண்ணிலிடி வந்துதலை தெறிக்கும்பாரு
ஊனான நாய்போலே திரிந்தலைவாய் சொன்னேன்
உண்மையாய் மனதில்வைத்து கைமுறையாய்ச்செய்து
தேனான சவுக்காரஞ் சுன்னமாக்கிச்
செயமாகும் யெட்டெட்டுங் கண்டால்நீறும். (777)

கண்டாக்கால் வாதமெல்லா மடிகீழ்போற்றுங்
கருவான சவுக்கார மகிமைதன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கொடாதே
வேதாந்த ஞானியென்றா லீயான்பாரு
தொண்டு செய்வான் பதினாறு வருஷங்காத்
திருக்கப்பின் பவர்க் கீவாயப்பா
சண்டமா ருதம்போல வெளியதாகச்
சாத்தினதோர் வயித்திய மன்பதுதானாட்டே. (778)

நூல் சார்புவிபாரம் ஐங்கோலக்குரு

ஆட்டவே முப்பூவின் மார்க்கஞ்சொன்னேன்
அழகாக கொங்கணர்தன் கருக்கள்சொன்னார்
பூட்டவே களிச்சுண்ணஞ் சுந்தரானந்தர்
பொங்கியே உப்பெடுக்க வகையாய்ச்சொன்னார்
ஆட்டவே கயிலாச சட்டைநாதர்
ஆயிரத்தில் கைமுறைகள் அரைப்பின்பாகம்
நீட்டவே மச்சமுனி எண்ணூற்றுள்ளே
நிசமாக சுத்திமுறை சவுக்காரஞ்சொன்னார். (779)

சொன்னார்கேள் கமலமுனி வாசமுனிதானும்
சூத்திரத்தில் நாலுதரம் வெள்ளையாகச் சொன்னார்
சாத்திரமும் பதினெண்பேர்கள் சூத்திரமும்பார்த்தால்
சார்வாக கருக்கள்மிகத் தோணும்பாரு
கண்ணான யிந்தநூல் முன்னூலுக்கெல்லாம்
கருக்குருவும் வெளியான கைமுறைதான்பாரு
பன்னார்கேள் சுத்திமுறை யிருனூறுக்குள்ளே
பகர்ந்திட்டேன் ஐங்கோலத் திறமிதாமே. (780)

திறமாக வேள்விசெய்தாற் கோடாகோடி
செய்தங்கே நீட்டிடவே போவதில்லை
திறமாகும் பூரண சூத்திரத்தைப்பாரு
திட்சையொடு கருக்குருவுஞ் செய்யலாங்கேள்
திறமாகுங் களிச்சுண்ணங் குருக்கதாகச்
செப்புகிறே னைங்கோலஞ் சுக்கிரவாரம்
திறமான காயம்வாங்கி சுத்திகேளு
சிறுநீரு மீரெட்டுப் படிதான்பூவே. (781)

பூவோடு சூடன்சேர் வாகஞ்சேரு
புழுகு நவாச்சாரங் கற்சுண்ணம்போடு
நாவானத் தினாலே சொல்லாதேகேள்
நன்றாக அவித்துலர்த்தி பதனம்பண்ணு
மாவாக யிடித்தேடுத்து முப்பூவுஞ்செய்து
மகிழ்வாக முக்களஞ்சி யிளவறுப்பாய்செய்து
வேமப்பா யெரியிடுநீ தேனைவிட்டு
மெழுகுபோ லானபத மிறக்கிப்போடே. (782)

போட்டேதா னுறவுசெய்து தேவிமுன்னேவைத்துப்
பூசைபண்ணி வட்டுவட்டாய் பிடித்துலர்த்தி
காட்டாதே ஒருத்தருக்கும் லகிரிவட்டை
களஞ்சிதான் மாலையிலே கொண்டால்கேளு
ஆட்டாது புலம்பாது வாசியேறு
மானந்த பரிபூர ணத்திலூணி
நாட்டமாய் சிவபதத்தை மனதில்வைத்துத்
நலமறைவே முத்தியடா நலனம்நாட்டே. (783)

மருந்தால் ஏற்படும் உஷ்ணத்திற்கு

நாடாமல் சூடு கொண்டால் மேகங்கொண்டால்
நன்றான மருந்துஅனல் வீறுகொண்டால்
பாடான செந்தூரம் வெப்புகொண்டால்
பரிவாக யிதுகளுக்குக் கியாழஞ்சொல்வேன்
வேடான வறுகம்வேர் மிளகுங்கூட்டி
வேகவே யெட்டொன்றாய் யிறுத்துவைத்து
மாடான பசுவெண்ணை கூகைநீறு
மாதளம்பூ அதிமதுர மரைத்துப்போடே. (784)

உஷ்ணம், மேகம் இவைகள் இம்மருந்தால் உண்டானால் செந்தூரம் உஷ்ணம்கொண்டால் இவைகட்கு கியாழம்கூறுகிறேன், அறுகம்வேர், மிளகு,

இவைகளை நீரிலிட்டு கியாழம்செய்து எட்டுக்கு ஒன்றாக சுண்டவைத்து வெண்ணெய், கூகைநீறு, மாதளம்பூ, அதிமதுரம், இவைகளை அரைத்து கியாழத்திலிட்டு உட்கொள்வாயாக.

போடாப்பா இந்தவகை அஞ்சுதன்னைப்
புகந்துநீ கொண்டிடவே முன்சொன்னதெல்லாந்தீரும்
காட்டப்பா போவானேன் வயித்தியரே நீதான்
கடையிலே பரங்கிவைப்புத் தேடுவானேன்
வீடப்பா யிருந்துகொண்டு வயித்தியம்பாரு
வேணுமென்ற பொருள்கள்தரு மிந்தநூல்தான்
ஆட்டப்பா யெட்டெட்டுஞ் சித்தியாகு
மாதியென்ற முப்பூவிக் கினத்தைக்கூட்டே. (785)

மேற்படிவகையில் ஐந்து சரக்கையும் சேர்த்து கியாழம்கொள்ள முன்சொன்ன தொல்லைகள் நீங்கும் வயித்தியரே காட்டுக்கு போய் என்ன செய்வாய், கடைக்களுக்குபோய் பறங்கிவைப்பை தேடுவானேன், வீட்டில் இருந்துகொண்டு வயித்தியம்பார்ப்பாயாக உனக்கு தேவையான பொருளை இந்த நூலின் மூலும் உனக்குகிடைக்கும். அறுபத்து நான்கு சித்தியும் உண்டாகும் ஆதி என்ற முப்பூவின் இனத்தைக் கூட்டுவாயாக.

கூட்டவே தானன்றாய் வாசிதனிலே
கூடவே சுழிமுனைக் கண்ணாலாட்டி
ஆட்டப்பா மனதுருகிச் சிங்கிபூட்டு
அப்பவல்லோ பிரகாச மணந்தங்கோடி
நீட்டப்பா யிந்தமுறை தொந்தங்கோடி
நேரான சின்மயத்தி லனந்தங்கோடி
பாட்டப்பா யின்னதென்று சொல்லப்போகா
பரையிருந்த பட்டணத்தின் ரூபந்தன்னை. (786)

வாசியினால் சுழிமுனைக் கண்ணால் ஆட்டி மனது ருகிச்சிங்கி பூட்டு, சோதிபோல பிரகாசமுண்டாகும் கோடி ஆனந்தம் உண்டாகும், இதனால் தொந்தம்கோடி, சினமயத்தில் ஆனந்தம் கோடி, பரை இருந்த பட்டணத்தின் ரூபத்தின் பெருமையை எவ்வாறு சொல்வது.

கோரக்கர் மூலி

ரூபமென்றால் சிவப்பல்ல பச்சையல்ல
உத்தமனே மஞ்சளல்ல வெண்மையல்ல
ரூபமென்றால் கறுப்பல்ல புகைமேகமல்ல
ஊணிப்பார் மனதினா லின்னதென்று

ரூபமென்றா லடியல்ல முடியுமல்ல
ஓகோகோ சிவரூபம் நன்றாய்த்தோணும்
ரூபமென்றால் விளக்கொளியின் பிரகாசம்போ
லுண்மையதை யறிந்தவனே தலைவனாமே. (787)

தலைவனா யிருந்தவர்க்கே யெல்லாஞ்சித்தி
சாராம லிருந்துவிட்டால் மடையனப்பா
அலையாமற் சொல்லிவிட்டேன் யோகசாதகம்
அப்பனே விட்டகுறை யாலேஎய்தும்
மலையாதே யின்னூல்பார் தேறுந்தேறும்
வயித்தியமுஞ் சித்தியடா வாதஞ்சித்தி
கலையான ஆயிரத்தெண் கமலமீதில்
கருணையா லோட்டிவருங் கொள்ளுகொள்ளே. (788)

அவ்வாறு தலைவனாக இருந்தவர்க்கு எல்லாம் சித்தியாகும் இந்நிலையை சாராதவன் மடையனாகும், யோக சாதகம் சொன்னேன், விட்டகுறை இருந்தால் இது கிடைக்கும், இன்னூலை ஆராய்ந்துபார் வைத்தியமும் வாதமும் சித்தியாகும்.

கொள்ளவே கோரக்கர் மூலிவட்டைக்
குருவாகச் சூரணித்துக் கூட்டக்கேளு
சொல்லுவேன் பலம்பத்து கோரக்கர்மூலி
சூட்டடுப்பில் யேற்றிவரு யீரைஞ்சுதரந்தான்
மெள்ளவே சூரணித்து யேலம்ஓமம்
வெத்தியா மத்தம்விதை சாதிக்காயும்
உள்ளபடி காமப்பூவும் மிளகுகூட்டி
முத்தக்காசு அதிவிடையந் திப்பிலியுமாமே. (789)

கோரக்கர் மூலியான கஞ்சாவைப்பற்றி கூறுகிறேன், கோரக்கர் மூலிகையை பத்துபலம் எடுத்துக்கொள் இதை அடுப்பேற்றி பத்துமுறை வறுப்பாயாக, பின் நன்றாக சூரணித்து ஏலம், ஓமம், ஊமத்தம்விதை, சாதிக்காய், காமப்பூ, மிளகு, முத்தக்காசு, அதிவிடையம், திப்பிலி, இவைகளை சேர்த்து சூரணித்து உட்கொள்ள தாது நட்டம், உஷ்ணம், இவைகள் நீங்கி உடல் பலப்பட்டு வீரீயமுண்டாகும்.

போமப்பா சொல்லுகிறேன் புலத்தியனேகேளும்
புதுசாக அபிஷேக நிதிகள்தந்தால்
ஆமப்பா பத்துக்கு ரெண்டுவீதம்
அப்பனே மிஞ்சாதே மேலோடாதே
நாமப்பா உள்ளபடி சொல்லிவிட்டோம்
நம்மிடமேல் குற்றமில்லை தீரும்ரோகம்
ஓமப்பா சிவபதமே கிட்டாதப்பா
உற்பனமாய் சாபம்வந்து சண்ணுங்கேளே. (790)

புலத்தியரே கேளும், அபிஷேகத்திற்கு நிதிகள் வந்தால் பத்து பணத்திற்கு இரண்டு பணம் எடுத்திடு அதிகமாக எடுப்பது ஆகாது. உள்ளபடி சொன்னேன். அதனால் நோய்கள் தீரும். அதிகமாக எடுப்பதனால் சிவபதம் அடைய முடியாது சாபம் உண்டாகும்.

பத்துக்கு ரெண்டுபணம் வாங்குவது

கேளப்பா தோஷத்துக் கீரஞ்சுபத்து
கெணிதமாய் சுரத்துக்கு ரெண்டுபத்துபணங்கேள்
வாளப்பா சயமுதலாய் நீரிழிவுகாசம்
வரிசையாய் மூணுபத்து பணமேகேளு
நாளப்பா மருந்தீட்டு முக்கால்வாங்கு
நலமில்லா வுளவை பவுத்திரமாம்குஷ்டம்
சூளப்பா யீரஞ்சு பொன்னேவாங்கு
துடியான தாதுநஷ்டம் யீரஞ்சுவாங்கே. (791)

தோஷத்திற்கு பத்துபணமும், சுரத்திற்கு இருபது பணமும், சயம், நீரிழிவு, காசம் இவைகட்கு முப்பது பணமும், மருந்து கொடுத்து இக்கணக்குப்படி பணங்களைப் பெற்றுக்கொள், உளவை, பவுத்திரம், குஷ்டம் இவ்வியாதி கட்கு பத்து பொன் வாங்குவாயாக, தாது நட்டத்திற்கு பத்து பொன் வாங்குவாயாக.

வாங்குவாய் மேகமென்ற சூலைக்கெல்லாம்
வரிசைபணம் பத்து அஞ்சுங்கூட்டி
நீங்கிடவே பணமிருபத் தஞ்சுகேளும்
நிலையில்லா சத்திகுன்மம் வயிற்றுவலிக்கெல்லாம்
தாங்கிட்ட மகோதரமுங் ரெத்தபித்தம்
தங்கத்தில் புத்துமுதல் கெற்பறோகம்
பாங்குபெறப் பதினைஞ்சு பணமேகேளு
பழுதுசொன்னால் அவுஷதமும் கட்டிபோடே. (792)

மேகம், சூலை, இவைகட்கு பதினைந்து பணமும், நோய்குணமான பின் இருபத்தைந்து பணமும் வாங்கு, சத்திகுன்மம், வயிற்றுவலி மகோதரம், இரத்தபித்தம், இவைகட்கு பத்து பொன்னும், கற்பநோய்க்கு - பதினைந்து பணமும் வாங்கிக்கொண்டு மருந்து கொடு. குறை சொன்னால் மருந்து கொடுக்கலாகாது.

போடப்பா யிந்தமுறை பொருளேதந்தால்
பூட்டல்ல அவுஷதங்கள் கொடுத்துதிரு
கோடப்பா கோடியென்ற ரோகமெல்லாம்
குறிப்பாக பாடுதற்கு யென்னால்கூடா
தேடப்பா கிடைக்காது வயித்தியத்திற்கு
சிறப்பளித்த மட்டுமடா ரோகந்தீரும்

நாடப்பா நிதியாசை பெரியதப்பா
நாவினால் அவிழ்தவிலை சொல்லப்போமோ. (793)

சொன்ன அளவில் பொருட்களை தந்தால் மருந்து கொடுப்பாயாக, நோய்கட்கு கோடி பணமெல்லாம் பாடுவதற்கு என்னால் ஆகாது. மருந்துக்கு அவ்வளவு பணமும் கிடைக்காது, இவ்வகையில் நோயைத் தீர்ப்பாயாக, பொருளாசை கொள்ளல் ஆகாது.

சொல்லாத அவிழ்தங்கள் தன்னைவேண்டி
சோர்வில்லா யென்தேகம் வலுத்துப்போச்சு
எல்லாரு மிப்படியே கொண்டாரானால்
யேமமிறுத்து தட்டுமடா யென்றுசொல்லி
நில்லார்கள் வரைதப்பு மென்றுசொல்லி
நிச்சயமாய் சாபம்வைத்தார் சாபந்தீர்த்து
வல்லாரும் வாதிமகன் வயித்தியமே தீர்ப்பான்
வணங்கிவந்தால் பிணியாளர் தகைத்துத்தீரே. (794)

மருந்துகள் வேண்டி சோர்வுயிலாமல் என் உடல் வலுத்து விட்டது, எல்லோரும் இவ்வாறே கொண்டாரானால் ஏமமிறுத்து தட்டுமடா என்று சொல்லி சாபம் வைத்தார் அச்சாபம் தீர்த்து வாதிமகன் நோயைதீர்ப்பான் என்று பணியாளர் வணங்கிவந்தால் நோயை தீர்ப்பாயாக.

தீரென்பான் உபசாரம் ரொம்பச்சொல்வான்
தீர்ந்தவுடன் காற்காசு யீயான்பாவி
தீராதே பிணிதிரும்பி பெருவயறுகொண்டு
செகமெல்லாந் திரிந்தாலும் தீராதப்பா
தீராத சாபத்தால் பொருளுமற்று
திரும்பிவந்து வயித்தியரே கும்பிட்டாலும்
தீராத நோயிதென்று கெணிதஞ்சொல்லு
செப்பிடுவீர் அவனோயும் தேகமாமே. (795)

நோயை குணப்படுத்து என்பான் உபசாரம் செய்வான் மருந்து கொடுத்து நோய்தீர்ந்தவுடன் கால்காசுகூட கொடுக்க மாட்டான், அவனுக்கு பெருவயிறுநோய் ஏற்பட்டு உலகமெல்லாம் திரிந்தாலும் நோய் தீராது. திருப்பி உன்னிடம் வந்து வயித்தியரே எனக்கும்பிட்டாலும் தீராத நோயிது என்று சொல்லிவிடு அவனுடலில் நோய்நீங்காது.

தேகமப்பா ரோகமுற்ற தேகந்தன்னில்
தீராத மேகமுண்டு சிலபேருக்கு
மோகமுற்ற பாவிகட்கு சன்னியேழு
மூத்தவய சான பெண்ணை வேண்டினோர்க்கு

பாதமுற்ற சனியெண்ணை வேண்டிகொண்டு
படுத்திருந்தோர் நீரிழிவு சயம்தீராது
யேகமாய் பாடிவிட்டார் தன்வந்திரிநூலும்
யென்னூலும் பாடவுந்தா னினிக்கூடாதே. (796)

நோயுள்ள உடலில் சிலருக்கு தீராத மேகநோய் உண்டு அதிகம் மோகம் கொண்டவர்கட்கு ஏழுவகை சன்னியுண்டு தன்னைவிட அதிகவயதுள்ள பெண்ணைப்புணர்ந்தால் நீரீழிவு, சயம் ஆகிய நோய்களுண்டாகி குணமாகாது தன்வந்திரி பகவானாகிய நான் கூறிவிட்டேன்.

கூடாது வாயுவப்பா நாபியின்கீழே
கூண்டெரியும் பித்தமடா கண்டத்தின்கீழ்
மூடாத சிலேட்டுமந்தான் பிர்மமண்டத்துள்
மூவருமே விகற்பமிட்டால் வீடுபோச்சு
நாடான தரிதரிது பிழைக்கமாட்டான்
நன்றாக யென்னூலைப் பார்த்தபேர்க்கு
கோடான கோடியென்ற காலமெல்லாம்
கொள்ளுமடா வீடகலா திருப்பர்தானே. (797)

நாபியின் கீழ் வாய்வும், கழுத்தின்கீழ் பித்தம் எரிவும் பிர்ம மண்டலத்தில் சிலேத்துமமும் ஆகிய மூன்றும் ஏற்பட்டு கலந்தால் உடல்நசிந்து பிழைப்பது அரிதாம், என் நூலை ஆராய்ந்து இம்முறைகளை உபயோகிக்க கோடாகோடி காலத்திற்கு உடல் இறுக்கும்.

தாம்பூல மகிமை

இருப்பதற்கு பென்னூலின் படிசெய்தாக்கால்
யென்றைக்கும் எமமிருத்து யில்லைபாரு
நரிப்ப.ாலுஞ் சர்க்கரையும் போலப்பேசி
நாட்டிவைத்தா ரிக்குடும்பம் நாயேனென்பார்
வெறுப்பாகும் நோய்தீர்த்தால் கண்டால்பேசார்
வெகு அதமம் சண்டாளர் விழலாந்தேகம்
சிரிப்பார்கள் பிணிதிரும்பி அலைந்தலைந்து
தீராது தீராது திறந்துபாரே. (798)

என் நூலில் சொல்லப்பட்ட முறையில்செல்ல இறப்பு என்பது எந்நாளுமில்லை, பாலும் சக்கரைப்போலும்பேசி மருந்து உட்கொண்டு நோய் குணமானபின் உன்னைக் கண்டால் பேசமாட்டார், அச் சண்டாளருக்கு உடல் வீணாகப்போகும், நோய் மறுபடியும் உண்டாகி அலைந்தாலும் தீராது.

திறந்துபார் வயித்தியற்கும் பெரியோருக்குத்
தினமளித்தால் தாம்பூலம் நோய்கள்தீரும்

திறந்துபார் நிதிகோடி தர்மஞ்செய்வார்
செகமெல்லா மறிவார்கள் தாம்பூலத்தை
திறந்துபார் தாம்பூல மில்லாத்தர்மம்
செகத்தினிலே அளிப்பதுண்டோ சிறப்புமுண்டோ
திறந்துபார் தாம்பூல மகிமைசொல்ல
சிவசிவா சிவசத்தி சித்தியாமே. (799)

வயித்தியருக்கும் பெரியோருக்கும், தாம்பூலத்தை தினமும் கொடுத்தால் நோய்கள் நீங்கும், கோடிநிதி தர்மம் செய்வார், உலகமெல்லாம் அறிவார்கள் தாம்பூலத்தைப்பற்றி, தாம்பூலம் இல்லாத தர்மம் கொடுப்பது இல்லை, அதில் சிறப்பும் இல்லை தாம்பூலத்தின் மகிமையைக் கூறுகிறேன், சிவசக்தி சித்தியாகும்.

சித்தியார் தாம்பூல மளித்தபேர்க்கு
சிவபதமுந் தவயோகந் தினமுமெய்தும்
பத்தியா மறிபஞ்ச பூசமெல்லாம்
பரமாகித் தாம்பூல மளித்தபேர்க்கு
முத்தியாம் அவுஷதங்கள் சித்தியாகும்
முன்னனித் தாம்பூலத் தாலேயப்பா
நித்தியமு மன்னமுண்டு தாம்பூல மீந்தால்
நீங்காத கர்மமெல்லாம் நீங்கிப்போமே. (800)

தாம்பூலம் கொடுத்தவர்கட்கு சிவபதமும் தவயோகமும் தினமும் உண்டாகும், பஞ்சபூதமெல்லாம் பரமாகும், மருந்துகள் சித்தியைத்தரும், நீங்காத கர்மம் எல்லாம் நீங்கும், தாம்பூலம் தானம் கொடுப்பவர்கட்கு.

சரக்குசுத்தி சூதசித்தி குளிகைகட்டமஞ்சள் (ஒட்டடை நாகவல்லிச்சாறு தாழைநீர்)

நீங்கிடவே சரக்குவகை சுத்திகேளு
நிகரில்லை ஒருசுத்தி யிதுக்குமொவ்வா
தாங்கிடா ரோக மெல்லாந்தீரும்
தயங்காத வாதபித்தம் கபமுந்தீரும்
ஆங்கிடவே பழமலங்கள் குற்றந்தீரும்
அல்லாமல் கிறிச்சனங்கள் வாந்திதீரும்
வாங்கியிரும் ரெத்தசலம் கடுப்பும்தீரும்
வாகான மருந்தினுட சுத்திதானே. (801)

சரக்குவகை சுத்தி கூறுகிறேன், இவ்வகை சுத்திக்கு மற்றொரு சுத்தி இணையாகாது இச்சுத்திசெய்து மருந்துவகைசெய்ய நோய்கள் நீங்கும், வாத, பித்த, கபங்கள் நீங்கும், மலக்குற்றம் நீங்கும், கிரிச்சனம், வாந்தி, ரத்தசலம், நீர்க்கடுப்பு, இவைகள் குணமாகும்.

தானப்பா சூதத்தின் சுத்திசொல்வேன்
    தாக்கான கல்வத்தில் சூதம்வாரு
தோணப்பா மஞ்சத்தூள் ஒட்டடையின்தூளும்
    சொல்லரிய நாகவல்லிச் சாறுவிட்டு
ஊணப்பா வெவ்வேறே மத்திச்சக்கால்
    உத்தமனே திறிக்குகை ஊதிப்போடு
பூணப்பா தாழைநீர் வாழைநீரும்
    புகழுயர்ந்த செம்பருத்தி பூவின்சாறே. (802)

சூதசுத்தி கூறுகிறேன், கல்வத்தில் சூதமிட்டு மஞ்சள்தூளை சூதத்திலிட்டு நாகவல்லி சாறுவிட்டு மத்தித்திடு இவ்வாறே ஒட்டைத் தூளிட்டு நாகவல்லிச்சாறு விட்டு மத்தித்திடு, பின் குகையில்வைத்து அழுக்கு போக ஊதி எடு, தாழைநீர், வாழைநீர், செம்பருத்தி பூச்சாறு, மற்றும்.

சாறாகும் வெற்றிலையும் பழுபாகற்கிழங்கும்
    தனிச்சாறும் ஐங்கோலம் சாறுங்கூட்டி
வாறாகும் அம்மான் பச்சரிசிச்சாறும்
    வாயுவுடும் சாரணைச்சார் அரசப்பட்டை
கூறாகும் கொன்னையுடப் பட்டைசாறும்
    கொத்தோடே மும்மூன்று கடிகைமாற்றி
வாறாக யிப்படியே மத்திச்சாக்கால்
    வாலைப் பிரகாசமாய் வருகும்பாரே. (803)

வெற்றிலைச்சாறு, பழுபாகல் கிழங்குசாறு, அம்மாம்பச்சரிசி சாறு, சாரணைச்சாறு, அரசம்பட்டைசாறு, கொன்னைப்பட்டைச் சாறு, இவைகளை ஒவ்வொன்றாக விட்டு ஒவ்வொன்றுக்கும் மூன்று கடிகை வீதம் மத்தித்து அழுக்கு போக ஊதி எடுக்க பிரகாசமான சூதமாக இருக்கும்.

பாரப்பா யிருபத்து அஞ்சுசுத்தி
    பாடுகிறேன் திரிபலையும் திரிகடுகுஓமம்
சீரப்பா மரமஞ்சள் கற்கண்டுசர்க்கரையும்
    சீரான சம்பழமு முந்திரிகையுடனே
பேரப்பா கொம்மட்டி பொன்முசுட்டை
    நன்னாரி புளியாரை கொடுவேலிமணத்தக்காளி
சீரப்பா கத்தாழை வாய்விளங்கங்கெந்தம்
    சீர்கருஞ் சீரகமும் கோஷ்டமாமே. (804)

இருபத்து ஐந்து சுத்தி கூறுகிறேன், தி.ரிபலை, திரிகடுகு, ஓமம், மரமஞ்சள், கற்கண்டு, சக்கரை, சம்பழம், முத்திரிக்கை, கொம்மட்டி, பொன்முசுட்டை, நன்னாரி, புளியாரை, கொடிவேலிவேர், மணத்தக்காளி, கற்றாழை, வாய் விளங்கம், கெந்தம், சீரகம், கருஞ்சீரகம், கோஷ்டம், மற்றும்.

கோஷ்டமுட னாயுருவி யிருபத்தஞ்சுங்
　　கூறான நீர்கொண்டு கியாழஞ்செய்து
ஆட்டமுடன் மூன்று கடிகைமாற்றி
　　அப்பனே வெவ்வேறே செய்தாயானால்
ஊட்டலாங் குளிகைக்கும் அவிழ்தத்துக்கும்
　　உத்தமனே வேதையாம் நோயுந்தீரும்
பாட்டெல்லாஞ் சூதத்தா லல்லோசித்தர்
　　பாடினார் நூல்தோறும் பாடினாரே. (805)

நாயுருவி, ஆகிய இருபத்தைந்தும் தனித்தனியாக கியாழம்வைத்து தனித்தனியாக மும்மூன்று கடிகைவீதம் கியாழத்தில் மத்திக்க சிறப்பான சூத சுத்தியாம், குளிகை, மருந்துவகை, வாதம், இவைகட்கு இச்சுத்தி செய்த சூதத்தைச் சேர்க்க சிறப்பான குணமாகும், சகலநோய்களும் நீங்கும்.

பாடினதோர் பொரிகாரஞ் சுத்திகேளு
　　பண்பான மேதியுட சாணந்தன்னில்
மூடியே சலத்தைவிட்டு அலம்பிப்போடு
　　மூண்டுவருங் கதிர்தனிலே உலர்த்திக்கொண்டு
நாடிநின்ற மனோசிலையின் சுத்திகேளு
　　நறுக்கடா பணம்போலே நன்றாய்நீயும்
மூட்டினதோர் கிழிகட்டி ஆட்டுநீரில்
　　முதிரவே டோளேந்திர மெரித்துவாங்கே. (806)

பொரிகாரத்தை சுத்தி செய்ய எருமைச் சாணத்தில் நீர்விட்டு கரைத்து காரத்தைப்போட்டு கழுவி வெய்யிலில் உலர்த்திக்கொள், மனோசிலையை பணம்போல் சீவி கிழியாகக்கட்டி ஆட்டின் அமுரியில் டோலேந்திரமாகத்தொங்கவிட்டு எரித்து வாங்க சுத்தியாகும்.

எரித்திடுவாய் ரசம்வைத்த தண்ணீர்விட்டு
　　எரித்திடவே மனோசிலையின் சுத்தியாச்சு
மரித்திடுவா ரில்லையப்பா துறைகட்கெல்லா
　　மகத்தான தாளகத்தின் சுத்திகேளு
பரித்திடுவாய் தாளகத்தைப் பணம்போல்வெட்டி
　　வருஞ்சீலை தனைமுடிந்து கிழிதான்கட்டி
அரிந்திடுவாய் டோளேந்திரங் கோமியத்தில்
　　அப்பனே கடியா லவித்திடாயே. (807)

மனோசிலை சுத்தி முழுமையாக இல்லை. தாளகத்தின் சுத்தி கூறுகிறேன், தாளகத்தை பணமளவாக வெட்டி துணியில் முடிந்து கிழிகட்டி கோமியத்தில் டோலாயந்திரமாக கட்டி அவித்துக்கொள்.

தந்திவிரைசுத்தி வாளசுத்தி

அவித்திடுவாய் சுரையினிற் கூழ்பாண்டத்தில்
ஆவின்பால் புரசம்பட்டைக் கியாழந்தன்னில்
அவித்திடுவாய் மூன்றுதினம் ஊறப்போட்டு
அரகரா தாளகமே சுத்தியாச்சு
அவித்திடவே தந்திவிரை சுத்திகேளு
அடவான உவற்கரைத்து நனையப்போடு
அவித்திடுவாய் மூன்றுதினம் நனையச்சுற்றி
அவலாமல் குமரியுட மடலைவாங்கே. (808)

சுரையின்சாறு, கூழ்பாண்டச்சாறு, ஆவின்பால் புரசம்பட்டையின் கியாழம், இவைகளில் மூன்று நாள் தாளகத்தை ஊறவைக்க தாளகம் சுத்தியாகும். தந்திவிரை சுத்தியைக் கூறுகிறேன், உவற்மண்ணை கரைத்து மூன்றுநாளூர வைத்து பின் வேகவைத்தெடுக்க சுத்தியாகும்.

வாங்கியே வாளமிட்டு சாணிபூசி
வாகான மேதியுட சாணியாகும்
தாங்கியே சீலைசுற்றி புடத்தைப்போடு
தாரணியில் தசதீட்சை பத்துஞ்செய்ய
நீங்கிவிடும் குற்றமெல்லாம் போகும்பாரு
நெறியாக சித்திதனை மறைத்தாரையா
பாங்குசெய்த வாளமதை யெடுத்துநன்றாய்ப்
பதம்பெறவே சலத்தைவிட்டு அலம்பிப்போடே. (809)

குமரிமடலை எடுத்து அதற்குள் நேர்வாளமிட்டு மேதியின் சாணத்தைப்பூசி சீலைசுற்றிப்புடமிடு, இவ்வகையில் பத்துபுடமிடு, வாளத்தின் குற்றங்கள் நீங்கும், சித்தர் இதனை மறைத்தார், இவ்வாறு செய்தவாளத்தை எடுத்து நன்றாக நீர்விட்டுக் கழுவிப்போடு.

போட்டுநீ ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
புகழான மேதியுட சாணிதன்னை
மூட்டுநீ சலமதிலே கரைத்துநன்றாய்
மூடிவிட்டு வாளமதை யெரித்துவாங்கி
கூட்டுநீ யேரண்ட மிடித்துப்போட்டு
குருவான வாழையுட சலத்திற்போட்டு
கோட்டுநீ அக்கினியில் பிரளவற்ற
கடிதான குற்றமெல்லாங் குடிதான்போச்சே. (810)

மேற்படி நேர்வாளம் நன்றாக காய்ந்தபின் எருமை சாணியை சலத்தில்கரைத்து மேற்படி வாளத்தை இட்டு எரித்து எடுத்து ஏரண்டத்தை இடித்து வாழையின் நீரிலிட்டு மேற்படி வாளத்தை அதனில்போட்டு நெருப்பில்வற்ற வைக்க வாளத்தின் குற்றங்கள் நீங்கும்.

போச்சென்ற குற்றமேல்லா மெங்கேபோச்சு
புகழான சித்தரையா ஒளித்தமார்க்கம்
நீச்சென்ற குற்றமெல்லா மென்போலார்தீர்ப்பார்
நெறியாக நூல்வழியே சொல்லாரையா
பாச்சென்ற வாளமதை வறுத்துவாங்கி
பாங்கான தொருமுனை நஞ்சுபோக்கி
ஆச்சென்ற கமலையுட பாலுதன்னில்
அடவாக கடிகைஅஞ்சு உலர்த்திச்சேரே. (811)

இம்முறையை சித்தர்கள் ஒளித்தனர் சரக்குகள் குற்றத்தைத் தீர்க்க என்போல் யாரும் சொல்லவில்லை நூல் வழியில் கூட சொல்லவில்லை மேற்படி சுத்தித்த வாளத்தை வறுத்துஎடுத்து வாளத்திலுள்ள நஞ்சுஎனப்படும் முளையைபோக்கி பசுவின்பாலில் ஐந்துகடிகை ஊறவிட்டு உலர்த்திக் கொள்.

நவசித்தாதிக் குளம்பு

சேர்த்திட்ட கும்பமுனி நவசித்தாதி
திரைகொண்ட குளம்பதனை சொல்லக்கேளு
ஏர்த்திட்ட அரசருக்கும் குழந்தைக்காகும்
எதிரில்லா வேதியற்கும் பூசுரர்க்கும்
சூர்த்திட்ட மனிதருக்கு அனுபானந்தன்னில்
கொண்டிடவே பிணிதீரும் குற்றமில்லை
பார்த்திட்ட வேதாந்தக் குளம்புதன்னைப்
பரிவாகக் கொண்டுநீ பிணியைத்திரே. (812)

கும்பமுனியின் நவசித்தாதி குளம்பைக் கூறுகிறேன். அரசர், குழந்தைகள், வேதியர், மனிதர்கள், இவர்கட்கு அனுபானத்துடன் இக்குழம்பைக் கொடுக்க நோய்கள் நீங்கும், ஒருகுற்றமும் வராது, இவ்வேதாந்தக், குழம்பைக் கொண்டு நோயைத் தீர்பாயாக.

தீர்ப்பதற்கு ரசமெடுத்து பதங்கம்வாங்கிப்
திசைகண்டங் காரியுட மூலமாகும்
ஏற்பதற்கு சுத்திசெய்ய மருந்தையெல்லாம்
இயல்பான யிடபாக மறிந்துபோடு
சூர்ப்பதற்கு பதங்கமொன்று சிலையுமொன்று
சூறரிய தாரமொன்று காரமொன்று

வீர்ப்பதற்கு யிந்துவுடன் கடுகுகாயம்
விரவான கருஞ்சீரகம் திப்பிலியுமாமே. (813)

ரசத்தை எடுத்து பதங்கம்செய்து கண்டங்கத்திரிவேர் மூலமாக மருந்து வகைகளை சுத்தி செய்து சேர்ப்பாயாக. மேற்படி ரசபதங்கம், மனோசிலை, தாரம், காரம், இந்துப்பு, கடுகு, பெருங்காயம், கருஞ்சீரகம், திப்பிலி.

ஆமென்ற நவமருந்து கழஞ்சிஒன்று
அடவாக வகைவகை நிறுத்துக்கொண்டு
வேமென்ற கல்வத்தி லரைத்துச்சாமம்
வெண்மையென்ற சரக்கெல்லா மாட்டிப்பின்பு
ஓமென்ற சுத்திசெய்த வாளந்தன்னை
ஒவ்வொன்றாய்க் கொடுத்துவா மெழுகுமட்டுஞ்
சேமென்ற பதந்தனிலே யாட்டிவாங்கிச்
சேர்ந்தோடும் ரோகமெல்லா மகன்றுபோமே. (814)

மேற்படி ஒன்பது சரக்குகளையும் வகைக்கு கழஞ்சிஎடை எடுத்து கல்வத்திலிட்டு ஒரு சாமம் அரைத்து சுத்திசெய்த வாளத்தை ஒவ்வொன்றாக இட்டு அரைக்க மெழுகுபதமாகும், இம்மெழுகால் நோய்கள் எல்லாம் நீங்கும்.

போமென்ற சித்தாந்தக் குழம்புதன்னில்
பூட்டவில்லை சத்திகளை மறைத்துச்சொன்னார்
ஆமெனவே வேதாந்த சுத்திசெய்து
ஆச்சரியங் குழம்புதன்னை அறியமாட்டார்
நாமெனவே பேருமிட்டு லோகந்தன்னில்
நன்றாக விஷங்களைத்தான் கழற்றிப்போட்டேன்
வேமெனவே மூன்றுவகை நாடிதோஷம்
வேரோடே முடிந்துதடா அறிந்துபாரே. (815)

இக்குழம்பில் சேரும் சரக்கு சுத்தியை சித்தர்கள் மறைத்துச் சொன்னார்கள், உயர்ந்த சுத்திசெய்து செய்யும் இக்குழம்பை அறிய மாட்டார்கள் மானிடர்க்குண்டாகும் விஷங்களை இக்குழம்பு மூலம் நீக்கினேன், வாதபித்த கபம் ஆகிய முத்தோஷங்களும் இதனால் முழுதும் குணமாகும்.

அறிந்துபார் சன்னிபாத விஷத்துக்காகும்
அடங்காத வாதபித்தம் கபத்துக்காகும்
அறிந்துபா ரத்தசலம் கடுப்புமேகம்
அடரான வலிசத்தி நீரடைப்புக்காகும்
செறிந்துபார் மலடிக்கும் பிள்ளைக்காகும்
செயபரங்கி புத்துமுதல் மூலந்தீரும்

செறிந்துபா ரடங்காது யின்னமுண்டு
    செய்யடா வனுபானம் வெவ்வேறாமே. (816)

மேலும் சன்னி, பேய்விஷம், வாதம், பித்தம், கபம், நீரில்ரத்தம், நீர்கடுப்பு, மேகம், வலிசத்தி, நீரடைப்பு, பரங்கி, புற்று, மூலம் இவைகள் இக்குழம்பால் நீங்கிகுணமாகும் மலடிக்கும் பிள்ளைப் பேரு உண்டாகும், இன்னும் இக்குழம்பால் அனேக செயல்களுண்டு தனித்தனி அனுபானத்தில் கொள்ள வேண்டும்.

வேறு

ஆமே வாத மிஞ்சிச்சார்
    அடுத்த பித்தங் கடுக்காயாம்
போமே சகல வாயுவதுவும்
    பொருந்து சுக்கு நீர்வாதம்
ஆமே பித்த வாய்வதற்கு
    ஆவின் பால் கடுக்காயாம்
போமே குளிருஞ் சுரந்தனக்கும்
    பொருந்து மிளகு தன்னிலிட்டே. (817)

வாதத்திற்கு இஞ்சச்சாற்றிலும், பித்தத்திற்கு, கடுக்காயிலும், சகலவாய்வுக்கும் சுக்குநீரிலும் பித்த வாய்விற்கு ஆவின்பால் கடுக்காயுடனும், குளிர் சுரத்திற்கு மிளகிலும், மேற்படி குளம்பைக் கொடுக்கவும். நோய்கள் நீங்கிகுணமாகும்.

வேறு

ஒன்றான குருமுடித்த மார்க்கமெல்லாம்
    ஓலையிலே யெழுதிவைத்தேன் குருவைப்பார்த்தேன்
அன்றாடங் குருமுடிந்த வார்த்தையெல்லாம்
    அடியோலைக் கட்டியது சொச்சம்பாரு
வண்டான தும்பியது ரசனையுண்டு
    வாங்குமப்பா ஓலையிலே யீயேயாகும்
சென்றான ஓலையிதோ வெடுத்துவாசி
    சிறப்பான யீறெழுத்து அஞ்சுமுத்தே. (818)

குரு முடித்த மார்கத்தை எல்லாம் ஓலையில் எழுதிவைத்தேன்.

காரம்

காரமென்றால் கல்லினிட கல்லோகாரங்
    காரத்திற் குங்கார மேறவென்றால்
காரமது பூநீரு மெடுத்துவந்து
    சாதகமா நீராலே யேமுகத்தி

மாரகத்தின் நீராலே யேழுசுத்தி
மகத்தான வஸ்துவினா லேழுசுத்தி
சீராகத் தேசியுட வமுரிதன்னில்
சிறப்ப்ாக ஏழுசுத்தி பாருபாரே. (819)

காரம் என்றால் கல்லின் கல்லோ காரமாகும், இக்காரத்திற்கு காரமேற்றும் முறையைக் கூறுகிறேன், பூநீரை எடுத்து நீரில் ஏழு சுத்தியும், மாரகத்தின் நீரில் ஏழுசுத்தியும். வஸ்துவினால் ஏழுசுத்தியும், கழுதை நீரினால் ஏழுசுத்தியும், செய்துகொள் (இவ்விடம் சுத்தி என்பது சொல்லப்பட்ட நீரில் கரைத்து மீண்டும் உப்பாக்கிக் கொள்வதாம்)

பாரார்க ளாயிசொன்ன படியேபார்த்தேன்
பாங்காக யின்னாலு சலத்திற்கொஞ்சம்
சீராக யெழுத்துடனே யோர்பீங்கானில்
சிறப்பாக விட்டொருநாள் ரவியில்வைத்து
காராகுங் காரநீர் தன்னில்நன்றாய்
கல்லைநீ துவைத்துதான் வாட்டுவாட்டு
ஆராலு முடியாது யிந்தக்காரம்
அப்பனே அறிந்துநீ யடக்குவாயே. (820)

ஆயிசொன்ன முறைப்படி செய்தேன் மேற்படி நான்கு வத நீரை கொஞ்சம் எடுத்து பீங்கானிலிட்டு ஏழுநாள் வெய்யிலில் வைக்க வேண்டும், பின் காரத்தை சார நீரில் துவைத்து நெருப்பில் வாட்ட வேண்டும், சாமானியர்களால் செய்யமுடியாது. அறிந்து ஆராய்ந்து செய்.

வாய்ப்பாகக் கல்லைநன்றா யெடுத்துக்கொண்டு
மறுபடியு முன்னுப்பை யரைத்துப்பூசி
தாய்ப்பாகப் பூநீறு கீழ்மேலிட்டுச்
சாதகமாய் முழப்புடத்தில் போட்டுயின்னும்
காய்ப்பாகச் சாரத்தை யிப்படியேசெய்து
கைமுறையாய்ப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
செய்யப்பா ரெண்டையுந் தானரைத்து வைக்கச்
செயநீர்தா னாகுமப்பா சிவந்தானாச்சே. (821)

காரத்தை எடுத்து மேற்படி பீங்கானில் வைத்த நீரில் உப்பை எடுத்து அரைத்து காரத்திற்கு பூசி அகலில் மேற்படி சுத்தித்த பூநீரையிட்டு காரத்தை வைத்து மேலும் பூநீரையிட்டு மூடி சீலை செய்து புடத்தைப்போடு, சாரத்தை இவ்வாறு பதப்படுத்தி புடமிட்டு எடுத்துக் கொண்டு காரம் சாரம் சம அளவு எடுத்து அரைத்து வைக்க சிவந்த செயநீராகும்.

ஆச்சப்பா முன்னீரில் முன்னுப்பைத்தான்
அரைத்தங்கே வில்லைகட்டி புடத்தில்போட்டு

பாச்சப்பா உப்பதனைப் பின்னும்நீரில்
பருவமதா யரைத்து வொருபுடமேசெய்து
நீச்சப்பா யிதினுடைய நீச்சேயல்லால்
நிலையாது மற்றதெல்லாம் நிசமேசொன்னோம்
பேச்சேது யிதைவிட்டால் காரவித்தை
பிலக்காது வாதமெல்லாம் பிழையதாமே. (822)

முன்பு சொன்ன நீரில் முன் உப்பை அரைத்து வில்லைகட்டிப் புடம்போட்டு மறுமுறை முன்போல் அரைத்து புடமிட்டு எடுத்துக்கொள். இதை விட்டால் காரவித்தைக்கு பலமில்லை, வாதம் முடியாது.

தானென்ற உப்பதனை செயநீராலாட்டி
சாரத்திற் கவசமது போடுபோடு
வானென்ற கல்லுப்புக் கிப்படியேபோடு
மறுச்சதை வெடுத்துநன்றாய்ப் புடமேபோடு
தேனென்ற யிருசரக்கும் கூட்டியாட்டச்
செயநீரால் சுத்தசலமது உண்டாகும்
ஊனென்ற சரக்கெல்லா மிதினால்சாகும்
உத்தமனே துருசிட்டு சமாதிவையே. (823)

மேற்படி உப்பை செயநீரால் அரைத்து சாரத்திற்கு கவசம்கட்டி புடமிடு, கல்லுப்பிற்கு இவ்வாறே புடமிடு, மேற்படி புடம்போட்ட சாரம். கல்லுப்பு இரண்டையும் சம அளவு எடுத்து அரைக்க செயநீராகும் சுத்த சலம் போலிருக்கும், சரக்கெல்லாம் இச்செயநீரால் சாகும், செயநீரில் துரிசு இட்டு குழிவெட்டிப் புதைத்து.

வையப்பா சமாதிதனில் நாற்பதுநாள்
வைத்திருந்து மறுபடிதா னெடுக்கும்போது
செய்யப்பா பராபரைக்கு வடுகனுக்கும்
திரவிவஸ்து சுத்தியுடன் பூசைசெய்து
கையப்பா யெடுத்துநன்றாய் தொழுதுநின்று
கனகந்தா வென்றுசொல்லிக் கேட்டுக்கொண்டு
மெய்யப்பா சமாதிதனைத் திறந்துவாங்கி
மெய்க்கவே துருசுநன்றாய் ரவியில்போடே. (824)

மேற்படி வகையில் நாற்பதுநாள் வைத்து எடுக்கும்போது பராபரைக்கும், வடுகனுக்கும், வஸ்துசுத்திவைத்துப் பூசை செய்து எடுத்து தொழுதுபோற்றி, கனகந்தா என்று சொல்லிக் கேட்டுக்கொண்டு திறந்து துரிசை எடுத்து வெய்யிலில் போடுவாயாக.

போட்டிடவே துருசுசொன்ன வெளுப்பேயாகும்
பூலோக முடியாது பூரணமாம்வித்தை

காட்டிடவே யெண்ணாது காரசாரங்
காட்டினால் கண்தெரிக்குங் கருவைச்சொன்னால்
நீட்டிடவே யிதின்மேலே காரமெத்த
நிசமாகச் சொல்லுகிறே னினைவாய்க் கேளு
மூட்டிடவே முன்னுப்பும் புழுகினோடு
புரமுரமும் வண்டுவெடி சூடன்தானே. (825)

வெய்யிலில் போட துரிசு வெளுக்கும், பூலோகத்தில் இதன் பூரண வித்தைகளை முடிக்க முடியாத அளவு அனேகவித்தைகளாம், காராசார கருவை வெளிசொன்னால் கண்தெரிக்கும் இத்துரிசு காரம் அதிகம், முன்சொன்ன உப்பு, புனுகு, குருவண்டு உரம், வெடியுப்பு, சூடன்.

சூடனொடு முன்துருசுஞ் சரக்கெல்லாங்கூட்டி
சுருக்கான முந்நீரா லரைத்துநன்றாய்
மாடனமாம் வில்லைகட்டி ரவியில்வைத்து
பாங்காக அஞ்சுன்ன குகையிலிட்டு
தேடரிய சிந்தூரத்தா லூதியூதித்
திறமாக குகைபழுக்கச் சுன்னமாகும்
நாடரிய சுன்னமதை யெடுத்துக்கொண்டு
நாட்டுவாய் சூதமொன்றி லோடும்போமே. (826)

முன்செய்த வெள்ளைத் துரிசுடன் மேற்படி சொன்ன சரக்குகளைக் கூட்டி முன் செயநீரால் அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் வைத்து ஐந்து சுண்ணக் குகையில் வைத்து நெருப்பிலிட்டு குகைபழுக்கும் அளவிற்கு ஊத சுண்ணமாகும், இச்சுண்ணத்தை சூதத்திலிட சூதம் விரைத்துக் கட்டிப்போகும்.

போட்டவுடன் சூதமங்கே விரைத்துபோகும்
புகழான நாகந்தான் விரைத்துப்போகும்
காட்டினால் பாஷாணங் கட்டிப்போகும்
கலந்துகொண்டால் தாளகமே யீயமாகும்
மீட்டவே மனோசிலைதான் வெந்துசாகும்
மூதண்ட வீரமங்கே மடங்கிப்போகும்
மாட்டவே யிதைக்கொண்டு சரக்கையெல்லாம்
மைந்தனே வேதைக்கு வழிசொல்வேனே. (827)

நாகம் உருகும்போது மேற்படி சுண்ணத்தைக்கொடுக்க நாகம்கட்டும் சுண்ணத்தால் பாஷாணம் கட்டும் சத்தாகும், மனோசிலை வெந்து சுண்ணமாகும், வீரம் அடங்கிக்கட்டும், இதைககொண்டு சரக்குகளை வேதை செய்ய கூறுகிறேன்.

சொல்வேனான் சூதமொடு தங்கங்கூட்டி
சுகமாக வுருக்கையிலே களங்கமாகும்

வெல்லவேனான் நாகமது கொடுக்கையிலேவாங்கும்
விரையாமல் கெந்திதனைக் கொடுக்கவாங்கும்
மல்லுறவே லோகமங்கே ஒருமாப்போடு
வடிவான களங்கத்தை வாங்கிக்கொண்டு
நல்லுறவே செம்புவெள்ளிக் கொருமாவீய
நாட்டினோம் மாத்தெட்டுநவின்றிடாதே. (828)

மேற்படி விரைத்துக்கட்டின சூதம் உருகும் போது தங்கம்கூட்ட களங்காகும், மீண்டும் உருக்கி நாகம் கொடுக்க வாங்கும் பின் கெந்தகத்தைக் கொடுக்க வாங்கும், லோகத்தை மா அளவிட்டு களங்காக்கிக்கொண்டு செம்பு, வெள்ளி உருகும்போது ஒருமா அளவு களங்கத்தைக் கொடுக்க எட்டுமாற்று தங்கமாகும்.

நவின்றிடா நாகத்தைச் செந்தூரிக்க
நாதாக்கள் வழலையைத்தா னெடுத்துக்கொண்டு
பவின்றிடா முருக்கம்பூ கீழ்மேலிட்டு
பாங்கான பின்புரசம்பூ விப்படியேபோட்டு
கவின்றிடா பூநீற்றைக் கீழ்மேலிட்டுக்
கனக்கவொரு செங்கல்லால் மூடிப்போட்டு
மவின்றிடாச் சீலைமண்தான் செய்துகொண்டு
வாகாகப் புடமிடவே செந்தூரமாமே. (829)

நாகத்தைச் செந்தூரிக்கக் கூறுகிறேன், வழலையை எடுத்து கொண்டு நாகத்திற்கு கீழ்மேல் முருங்கைப்பூவை இட்டு பின்பு புரசம் பூவை இவ்வாறே போட்டு பூநீற்றை கீழ்மேலிட்டு செங்கல்மூடியிட்டு சீலைமண் செய்து புடமிட நாகம் செந்தூரமாகும்.

செந்தூரங் கொடுப்பதற்கு வகையைக்கேளு
செயப்படுத்தும் வீரமொடு பூரங்கூட்டி
அந்தூரச் சரக்குரெண்டும் பொடித்துக்கூட
அப்பனே கூடவிட்டுக் கலந்துகொண்டு
தந்தூர வெள்ளிகொண் டொருமாவீய
தாரணியில் வயதுபதி னாறுபிள்ளாய்
தந்தூறு மாத்தாளைப் பூசித்தாக்கால்
நாட்டுவாள் வேதையிட்டு நடத்திப்பாரே. (830)

செந்தூரம் கொடுப்பதற்கு வகையைக் கூறுகிறேன், வீரம் பூரம், இரண்டையும் கூட்டி பொடித்து செந்தூரத்துடன் கலந்து வெள்ளி உருகும்போது ஒருமா அளவுவிட பதினாறு மாற்றுத் தங்கமாகும். ஆத்தாளை பூசைசெய்து வேதையை செய்யதவறாது.

வேறு

இடுவாய் சன்னிக் கிஞ்சியதாம்
இடுவாய் கண்ணில் அஞ்சனஞ்செய்
இடுவாய் பேய்க்கு வெத்திலையில்
வியனாய்க் கொடுத்து அஞ்சனஞ்செய்
கெடுவாய் பித்தசுரங் கடுக்காய்க்
கேளே திப்பிலி தாபசுரம்
அடுவாய் முலைப்பால் நசியமிடு
அழண்ட வொருத் தலைவலிபோமே. (831)

இஞ்சிச் சாற்றுடன் செந்தூரத்தை அஞ்சனமிட சன்னிநீங்கும் பேய்க் குணத்திற்கு வெற்றிலைச்சாற்றில் அஞ்சனமிட குணமாகும், பித்தசுரத்திற்கு கடுக்காய்த் தூளுடனும், தாப சுரத்திற்கு திப்பிலித் தூளுடனம் செந்தூரத்தை கலந்து கொடுக்க வேண்டும், தாய்ப்பாலில் செந்தூரம் கலந்து நசியமிட ஒருத்தலைவலி நீங்கும்.

தீரும்வியாதிகள்பேர் அனுபானம்

போமே கண்ணோய் மிகத்தீரப்பொருந்து
முலைப்பால் கண்ணிலிடு
ஆமே யிடித்துக் கஞ்சனஞ்செய்
அடர்த்தே வெற்றிலைக் கிம்மருந்து
தாமே யிடியும்பேய்தனக்கு
தலையுஞ் சீலைதிரியெடுத்து
நாமே யெலியின் கடிதனக்கு
நன்றாய் நீலிச்சாற்றிலிடே. (832)

தாய்ப்பாலில் செந்தூரத்தைக் கலந்து கண்ணிலிட கண்ணோய் நீங்கும் வெற்றிலைச் சாறுடன் செந்தூரத்தை அஞ்சனம் செய் கண்ணோய் தீரும், பேய்த் தலைவலிக்கு திரியில் செந்தூரமூட்டி புகைபிடிக்கத் தீரும், எலிக்கடி விஷத்திற்கு நீலிச் சாற்றில் செந்தூரத்தைக் கொடுக்க வேண்டும்.

வேறு

சாறாகுங் காடியுட யிளநீராகும்
சாதகமாய் வெள்ளரிக்காய் நீரடைப்புதீரும்
வேறாகும் கடுக்காயின் கியாழந்தன்னில்
வெறுண்டிடுமே யிருமலுடன் காசந்தீரும்
கூறாகுஞ் சத்திக்கு காடியாகும்
கொள்ளடா சலக்குப்பு பாலேதீர்க்கும்

பேறாகு மூலத்தில் வாயுவென்றால்
பெருங்குமரி ரசமதிலே கொடுக்கநன்றே. (833)

வெள்ளரிக்காயுடன் செந்தூரம் கொடுக்க நீரடைப்பும், கடுக்காய் கியாழத்தில் செந்தூரம் கொடுக்க இருமல், காசமும் நீங்கும், சத்தி குன்மத்திற்கு காடியுடன் செந்தூரத்தைக் கொடுக்க வேண்டும், பெருங்குமரிச் சாற்றில் செந்தூரத்தைக் கொடுக்க மூலவாய்வு குணமாகும்.

கொடுத்திடவே ரத்தமொடு கடுப்புநெய்யாம்
கொள்ளடா மலக்கட்டுப் பாலேயாகும்
அடுத்திடவே வெள்ளாட்டுப் பாலிலிட்டா
லளவில்லா கெற்பவிப் புருதிக்கெல்லாம்
தெளித்திடவே அரசினுட கொழுந்தரைத்து
சேர்வான தண்டுகட்டு பாலிற்றீரும்
எடுத்திடவே விளக்கொண்ணை ஆட்டின்பாலும்
யேகுமடா வாயுவுட திரட்சிப்போமே. (834)

ரத்தக் கடுப்பிற்கு நெய்யுடன் செந்தூரம் கொடு மலக்கட்டிற்கு வெள்ளாட்டுப் பாலுடன் செந்தூரம் கொடு, கெற்ப விப்புருதிக்கு அரசள் கொழுந்தை அரைத்து செந்தூரம் கலந்து கொடு, தண்டுகட்டுக்கு பாலுடனும், வாய்வு திரட்சிக்கு விளங்கெண்ணை ஆட்டின் பாலுடனும் செந்தூரம் கலந்து; கொடுக்க குணமாகும்.

திரண்ட மகோதரமுடன் வெப்புப்பார்வை
செயநீரா மாமையொடு கூகைவீக்கம்
வறண்ட சன்னியுள் வீச்சுப்பிறவிச்சுந்தான்
வலுவான தனுர்வாத மிடுப்புவாதம்
தெருண்டதொரு வெள்ளுள்ளி அரைத்துத்தானும்
நேராகக் கொடுத்திடவே தீருமின்னம்
அருண்டதொரு களச்சியிலைச் சாறுமாகும்
அல்லாமல் வயிறுவலி யொக்கப்போச்சே. (835)

மகோதரம், வெப்புப்பார்வை, நீராமை, வீக்கம், சன்னி, உள்வீச்சு, பிறவீச்சு, தனுர்வாதம், இடுப்பு வாதம், இவைகட்கு வெள்ளுள்ளியை அரைத்து செந்தூரம் கலந்து கொடுக்க குணமாகும், கழற்சியிலைச் சாறுடன் செந்தூரத்தைக் கொடுக்க வயிற்றுவலி குணமாகும்.

போச்சென்ற சூசிகா வாயுச்சூலை
பொல்லாத வலிகுன்மம் நொச்சிச்சாறு
சேச்சென்ற கழல்வாதம் அண்டவாதம்
யெடுத்திடுவாய் பேரண்டம் வெல்லமிஞ்சி

ஆச்சென்ற தேங்காயின் பாலுமாகும்
அதுகளிலே வெல்வேறா யெடுத்துசெவ்வாய்
காச்சென்ற மண்டையுறு வியாதிக்கெல்லாம்
கடுமிஞ்சி சாற்றிலிட்டுப் புகையுமேத்தே. (836)

சூசிகா வாய்வு, சூலை, வலிகுன்மம், இவைகட்கு நொச்சிச் சாற்றுடன் செந்தூரத்தைக் கொடுக்க குணமாகும், கழல்வாதம், அண்டவாதம், இவைகட்கு பேரண்டம், வெல்லம், இஞ்சி, தேங்காய்பால் இவைகளில் முறையே செந்தூரத்தைக்கொடுக்க குணமாகும், மண்டை நோய்கட்கு இஞ்சிச் சாறுடன் செந்தூரத்தைக் கலந்து துணியிலூட்டி புகை யேற்றுவாயாக.

ஏத்தியதோர் படுபருவன்பிள வையரையாப்பு
யிணங்காத முலைக் குத்துதானும்
சாத்தியதோர் உமிநீரும் வெள்ளையுள்ளி
சாதகமா 'யரைத்தங்கே கொதிக்கவைத்து
சேர்த்திட்டு மருந்திலே கூடப்போட்டு
திடனாகப் பூசியிட பிளவைமுதல்தீரும்
கோர்த்திட்ட மகோதரத்துக் கின்னஞ்சொல்வேன்
கொடியதொரு அகத்தியிலைச் சாறுமாமே. (837)

படுவன், அரையாப்பு, முலைக்குத்து, இவைகட்கு உமிநீரும் வெள்ளுள்ளியும் அரைத்து கொதிக்க வைத்து செந்தூரத்தை இட்டுப் பூசிட பிளவைமுதல் மேற்படி நோய்கள் குணமாகும், மகோதரத்திற்கு அகத்தியிலைச் சாறுடன் செந்தூரம் கொடுக்க குணமாகும்.

நிலத்துள்ளோர்க் கெத்தனைதான் சொன்னாலுமைந்தா
நேராது பொய்யென்பார் உலகமாண்பர்
நிலத்துள்ளோர் மாய்கையிலே அமுந்திமாதர்
நினைவுக்குள் கலந்துநிற்பார் சையோகித்து
நிலத்துள்ளோர் அமுர்தத்தைப் பானம்பண்ணார்
நிலையார்கள் குருபதத்தை நேராய்க்காணே. (838)

உலகத்திலுள்ளவர்க்கு என்னைப்பற்றி சொன்னால் பொய் என்று சொல்வார்கள் உலகமக்கள், அவர்கள் மாய்கையில் அமுந்தி நினைவுக்குள் கலந்து நின்று உறவு கொண்டு அமுர்தத்தைப் பானம் செய்யாதோர் குருபதத்தை சேர இயலாது.

நேரார்கள் காயத்தை சுத்திபண்ணார்
நெடியதொரு அஞ்சுவகை தீட்சைகேளார்
பாரார்கள் வாதத்தை ஊடுபாய்ந்து
பாலகனே குளிகையிட்டு கெவுனம்போகார்

சேரார்கள் ஆயியுட வோமத்தில்தானும்
செகத்திலே பூசைசெய்யார் தீட்சைவேண்டி
வாரார்கள் அறுவரையும் தள்ளிவிட்டு
மைந்தனே மற்றோரை மகிழ்ந்து பாரே. (839)

உடலை சுத்தி செய்யாதோர், ஐந்து வகை தீட்சையை கேளாதோர், வாதத்தை ஊடுபாய்ந்து, பாராதவர்கள் குளிகையிட்டு கெவுனம் போகாதவர்கள், தீட்சை வேண்டி ஒமத்தில் பூசை செய்யாதவர்கள் இந்த, ஆறுவகையினரையும் விட்டு மகிழ்ந்து பார்ப்பாயாக.

பாரப்பா யிந்தவிதஞ் சொன்னாரில்லை
பரிவான நாதாக்கள் சொல்லார்சொல்லார்
நேரப்பா யெனக்குரைத்தா ளாயிதானும்
நிலையான முன்னூலில் சொன்னாரில்லை
காரப்பா விஷக்கடிக்கு சொன்னேன்பாரு
கண்டுசொன்னே நூறுகவி மார்க்கமாக
பாரப்பா யிந்தமுறை வொளித்தார்சித்தர்
மைந்தனே சபித்திட்டேன் சபித்திட்டேனே. (840)

மேற்படி முறைகளை சொன்னவர்கள் இல்லை. நாதாக்கள் சொல்லவில்லை, ஆயி எனக்குச் சொன்ன முறையிது, முன் நூற்களில் சொன்னவர்களில்லை, நூறுகவியில் விஷக்கடிகட்கு மார்க்கத்தைக் கூறிவிட்டேன், இம்முறையை சித்தர் ஒளித்தார், நான் சபித்திட்டேன்.

சபித்திட்ட விதங்கண்டு ஆதிசித்தர்
சார்ந்தேவல் செய்வார்கள் அனேகங்காலம்
பவித்திட்ட குளிகைமுதல் யாதென்றாலும்
பாலகனே கேட்டதெல்லா மீவாரீவார்
குவித்தநூல் வைத்திருந்தேன் மனதுநொந்தால்
கூடாது சித்தியொன்றும் புண்ணியமேயநீதம்
பவித்தவர்க்குக் கிடைப்பதல்லால் மற்றோர்க்குக்கிட்டா
பார்ப்பதற்கு யெளிதான பாதைபாரே. (841)

சபித்திட்ட விதம்கண்டு ஆதிசித்தர் சேர்த்து ஏவல் செய்வார்கள் அனேககாலம், குளிகைமுதல் கேட்டதெல்லாம் தருவார், இவ்வாறு உருவான நூலை வைத்திருந்தேன், மனது நொந்தால் சித்தி வொன்றும் கூடாது, தினம் புண்ணியமாக இருந்தவர்க்கு இந்நூல் கிடைக்கும், மற்றோர்க்கு கிடைக்காது, நான்சொல்லும் வழி எளிது.

எளிதாக யிந்தநூல் வாராதப்பா
யிந்தக்கலி யுகந்தனிலே நூற்றிலொன்று

தெளிவாக வெளிவாறாச் சாபம்போட்டேன்
சர்க்குணர்க்கு கிடைப்பதல்லால் பாவிகட்கிட்டா
சுளுவாக யிந்தநூல் பெருகாவண்ணம்
சுந்தரமே வெகுபதனம் சொன்னேன்சொன்னேன்
வளிவான நாதாக்கள் கருவைச் சொன்னேன்
மைந்தனே சொல்லாதே மகிழ்ந்துதானே. (842)

எளிதாக இந்தநூல் யாருக்கும் கிடைக்காது. இந்தநூல் கலியுகத்தில் நூற்றுக்கு ஒன்று தான் வெளியாகும்படி சாபம் போட்டேன், சர்க்குணர்க்கு கிடைக்கும், பாவிகட்கு கிடைக்காது, இந்தநூல் பெருகாமலிருக்க நூலை பத்திரமாக வைத்திரு. நாதக்களின் கருவைச் சொன்னேன், இதை வெளியாக சொல்லலாகாது.

தானென்ற ஆதிமுதல் சரக்கைகேளு
தரணிதனில் பிறக்கின்ற உப்பினோடு
ஊனென்ற கல்லுப்பு ரெண்டுபங்கு
உத்தமனே பழச்சாறும் தயிறும்வாரு
கோனென்ற பாண்டத்தில் விட்டுமூடி
குறிப்பாக புறந்தன்னில் சாணியப்பு
ஆனென்ற ஆவினுட பதியில்தாக்கு
அப்பனே மண்டலத்தில் சீனமாச்சே. (843)

ஆதிமுதல் சரக்கைக் கூறுகிறேன், தரணியில் பிறக்கின்ற உப்புடன் கல்லுப்பு இரண்டு பங்கு எடுத்து பழச் சாறும் தயிறும் விட்டு பாண்டத்திலிட்டு மூடி பதமாகச் சாணியை பூசி ஆவினுட பதியில் புதைத்து மண்டலம்கழித்து எடுக்க சீனமாகும்.

ஆச்சப்பா சீனத்தால் சூடனாச்சு
அதிர்ந்துநின்ற வெண்காரப் பலகையாச்சு
நீச்சப்பா துரிசோடு பாஷாணமாச்சு
நேரான சரக்கெல்லா மிதிலேகோடி
பாச்சப்பா வாதத்துக் காதிபீடம்
பண்பான வழலைக்கு மாதிபீடம்
போச்சப்பா வாதமென்ற வேதைதாண்டி
புண்ணியனே கைமுறையாய்ப் புகழ்ந்துசெய்யே. (844)

மேற்படி சீனத்தால் சூடன் ஆனது, வெண்காரப் பலகை ஆனது துரிசுடன், பாசாணமும் ஆச்சு, கோடிசரக்கு இதனாலாச்சு, வாதத்துக்கு ஆதிபீடம் இதுதான் வாதம் என்ற வேதையைத்தாண்டி கைமுறையைத் தவறாமல் செய்வாயாக.

செய்திடுவாய் வெங்காரப் பலகைதானுஞ்
சிறந்துநின்ற பூரத்தின் வைப்பைக்கேளு
கைதிடுங் கஞ்சனிட ளாதத்தில்
கரையான சீனமது காலுங்கூட்டி

அய்திடுவாய் ஆதித்தன் மூலமோடு
அரிதான சிதம்பரத்தை பானப்பூட்டி
ஒய்திடுவா யெரித்திடுவாய் சாமந்தன்னில்
உத்தமனே சூடனது உகந்துபாரே. (845)

வெண்காரப் பலகையுடன், பூரத்தின் வைப்பைக் கூறுகிறேன், கஞ்சனுட நாதத்தில் சீனம் கால்பங்குகூட்டி ஆதித்தன் மூலமாடும் அரிதான சிதம்பரத்தை அதனுடன் சேர்த்து ஒரு சாமம் எரித்து எடுக்க இரசகற்பூரமாகும் இதைப் பார்ப்பாயாக.

சூடன்ரவிபீசம்

பாரப்பா ரவியினுட பீசமென்பார்
பராபரமாம் வித்தையிது சூடன்வித்தை
நேரப்பா பூரம்விட்டால் வாதம்போச்சு
நிலையான சுன்னத்தில் கோடாகோடி
சேரப்பா குளிகைக்கும் ஆதிமூலம்
சேர்ந்துநின்ற காயசித்துக் காதிபீடம்
காரப்பா பூரத்துக் காதிபூடம்
கரைகாணா வெங்கார வைப்பைக்கேளே. (846)

சூடனை, ரவியின் பீசம் என்பார், இது சூடன்வித்தை இப்பூரம் விட்டால் வாதம் முடியாது, பூரச்சுண்ணத்தால் கோடாகோடி முறையாகும், குளிகைக்கு ஆதி மூலமாகும், காயசித்திக்கு ஆதிபீடமாகும், வெங்கார வைப்பைக் கூறுகிறேன்.

வைப்பான லவணத்தி லாண்டுகூட்டி
மைந்தனே படிக்கமது பேரண்டந்தானும்
நைப்பான குன்றிமணி யுளுந்தின்தூளும்
நலமான கள்ளிப்பா லரைத்துக்கிண்டி
நெப்பான பாண்டலத்தில் சரக்குகோடி
நேரான மால்தேவிக் கிளையாளுக்கீய்ந்து
ஒப்பான மண்டலத்தில் வாங்கினாக்கால்
உற்றமது பலகையது உரைத்துவாறே. (847)

லவணத்துடன் படிகம், பேரண்டம், குண்டுமணியை உலர்த்தியதூள், இவைகளை கூட்டி கள்ளிப்பாலால் அரைத்துப் பண்டத்திலிட்டு மால்தேவியின் இளையாளுக்குக் கொடுத்து மண்டலம் கழித்து எடுக்க வெண்கார பலகை உரைந்திருக்கும்.

வெங்காரம்சுக்கு வெங்காரவெள்ளை

வாரான காரத்தில் சரக்குகோடி
மைந்தனே உருக்கினமே கோடாகோடி

தன்வந்திரி பகவான்

தேரான தூம்புரமுதல் வேதைகோடி
　　சேர்ந்துநின்ற சத்துவகை கோடாகோடி
கூரான சுன்னத்தில் கோடாகோடி
　　கொடியதொரு செயநீறு மெழுகுகோடி
தாரான யின்னமொரு வகையைச்சொல்வேன்
　　சாத்தரிய வெங்காரச் சுவடிதானே. (848)

மேற்படி வெண்காரத்தால் சரக்குகள் கோடா கோடியாகும், உருக்கினம், கோடிகோடி, தாம்புரம் முதல் வேதை கோடி, சத்துவகை இனம் கோடாகோடி சுண்ணங்கள் கோடாகோடி, செயநீர், மெழுகு கோடி, மேலும் ஒரு வகையைக் கூறுகிறேன்.

தானான உளுந்தினுட மாவில்தானும்
　　தனித்தெழுந்த யிணங்கனுக்கு சீனம்ரெண்டு
ஈனான கள்ளிப்பால் விட்டுநன்றா
　　யிடமாகப் பாண்டத்தி லிட்டுமூடி
கோனான சாரத்தி லணித்திமைந்தா
　　குறிப்பான மண்டலந்தான் கடந்துவாங்கு
கானான துய்யநிறம் வெங்காரமாச்சு
　　கருதிப்பா ரிதையறியார் கலந்துசேரே. (849)

உளுந்து மாவு, உப்பு ஒருபங்கு, சீனம் ரெண்டுபங்கு, இவைகளை கள்ளிப்பாலால் அரைத்து பாண்டத்திலிட்டு மூடி சாரத்தை அரைத்துப் பூசி வைத்து மண்டலம் கழித்து எடுக்க தூயநிறமான வெண்காரம் இருக்கும். இதை கருதிபார்ப்பாயாக.

சாரம்வடுகன் நாதம்துரிசி

சேர்வான சாரத்தைச் செப்பக்கேளு
　　சேர்ந்துநின்ற அசமாவு அசங்குவோடு
நேர்வான ஒட்டகமுங் கற்றமுமல்லாமல்
　　நிலையான அமுரியொடு பீடம்யேனம்
கார்வான வெடியுப்பு கற்சுண்ணந்தானும்
　　கலந்தெரிந்துப் பூமிக்குள் புடந்தான்போடு
கார்வான சாரமது கடுஞ்சாரமப்பா
　　காட்டுமுன்னே சரக்குகளைக் கடியதாமே. (850)

சாரத்தைக் கூறுகிறேன், அசமாவு, அசங்குவுடன், ஒட்டகத்தின் அமுரி, பீடம்யேனம், வெடியுப்பு, கற்சுண்ணம், இவைகளை கலந்தெரித்து குழிவெட்டி புடம்போட காரமுள்ள சாரமாகும்.

கடியான வழலையென்பா ரிதைநாதாக்கள்
கையறியா வடுகனுட நாதந்தானும்
பொடியாக செய்யவைக்கும் வங்கத்தைமைந்தா
போக்கான கெவுனமென்றார் குளிகைக்காந்தி
வடிவான ஆயியுட நாதத்தைக்கொல்ல
மைந்தனே வல்லோன்காண் நிறவைத்துக்
கையா செடியான சாரத்தை அறியார்மூடர்
சூடறியார் சூடதினால் சுழலுவாரே. (851)

இச்சாரத்தை நாதாக்கள் வழலை என்பார்கள், இதுவடுகனின் நாகம், வங்கம் இவைகளை பொடிபோல செய்யும் குளிகைக்கு காந்தி உண்டானால் கெவுனம் என்றார், ஆயியிட நாதத்தைக்கொல்ல இச்சாரமாகும், சாரத்தை அறியாதமூடர் கொடுப்பதற்கு அறியாமல் சுழலுவார்.

ஆதியென்ற பூரணநூலாயிர நூற்றிற்சொச்சம்
அடக்கிவிட வேணுமென்று மாயிபாதம்
போதியென்ற மணந்தேத்தி யோராமாண்டு
பூசித்தேன் ஆராய்ந்து அறிக்கையிட்டாள்
சோதியென்ற மதியாளும் கருப்படுவாளென்று
சொன்னாளா மதியாளும் யானுங்காணேன்
வாதியென்ற புலத்தியனே கருவைப்பார்த்து
வாயடக்கி நாலெழுத்து மதியிற்காணே. (852)

காணென்ற சோடசந்தா னைம்பத்தொன்று
கைமுறையாய்ப் பூசித்து ஓராண்டுந்தான்
ஊனென்ற பலங்காணு கருவாய்ப்பார்த்து
உண்ணவென்றா லாத்தாளுங் குறியைக்காட்டி
பேணென்றான் காயத்தைச் சோதித்தேதான்
பிசகாம லோராண்டு தாக்கிக்காணும்
வீணென்றால் போகாது கருப்படுவதுவோமம்
வேதாந்த ஞானமதி லெழுத்துக்காமே. (853)

ஆமென்ற யெழுத்திடுவார் பெரியோரெல்லா
மாகாசப் பொருளறிந்தோர் ஞானவாதி
மோமென்றே யெழுதிடுவார் நாலெழுத்தைக்காட்டி
உறைப்பாகப் போதித்தார் சித்தரெல்லாம்
வாமென்ற புலத்தியனே கருவாய்நோக்கு
வாய்திறந்து பேசாதே குருவுக்கப்பா
தாமென்ற பொருள்மேனிப் பெண்போற்காணும்
தாக்கப்பா சிவந்தததுவு மெத்தநன்றே. (854)

நன்றேதான் பொருளறிந்து சிவந்துமேனி
நாட்டிடுவாய் புலத்தியனே பொன்னேயாகும்
மென்றேதா னறுசுவையுந் தள்ளிப்போட்டு
மேத்திடுவா யோராண்டு செலுத்திநோக்கு
கொன்றேதான் நலமுகவ நாட்டைப்பார்க்க
கூறுவே னளபாக மாகச்சொல்லி
யன்றேதா னொளிக்கவில்லை தெளிந்துபாரு
ஆடப்பா சொச்சந்தா னறிந்துதானே. (855)

வியாதிக்குறிப்பு லட்சணம்
பித்தம் 42

உண்மையா யிருமல்தான் மிகவேயுண்டா
தட்டியாய்ச் குத்தியே ரெத்தம்வீழ்ந்து
அண்மையாய் சரீரமது மிகவும்வற்றி
வடிவயிறு சுருக்கியே வற்றிக்காணும்
வண்மையாய் வாய்நீரில் கவுச்சடிக்கும்
மருவியே அவனுடம்பு வாட்டமாகும்
இண்மையா யிடுப்புத்தான் குடைச்சலாகும்
எடுப்பித்த யிரத்தத்தி னியற்கைதானே. (856)

இருமல் அதிகம் உண்டாகி குத்திருமல் கண்டு ரத்தம்வீழ்ந்து உடல்வற்றிப்போய் வாய்நீரில் கெட்டநாற்றம் அடித்து அவன் உடல் வாட்டம் கண்டு இடுப்புகுடைச்சலாகி இருந்தால் ரத்தபித்தமாகும்.

இயற்கையா யிருமியே முகப்பிற்கட்டி
யிண்டியே விக்கலொடு சத்திப்பாகும்
முயர்க்கையாம் உடம்புதான் மிகவலிக்கு
முஷ்ணமாய் வெதும்பியே குரலோகம்முந்
தியர்க்கையாய் வாய்நீரு மிகவேயூரும்
தித்திப்பாய் மிகவிருக்கு மதியாங்காணும்
கயர்க்கையா நெஞ்சுதனிற் கனமாய்க்காணும்
கரும்பிக்குங் காசபித்தக் கருத்துதானே. (857)

இருமல் உண்டாகி தீராத விக்கல்கண்டு உடல் மிகவலி உண்டாகி, உஷ்ணம் உண்டாகி, குரல்கம்பி எச்சில் மிக ஊரும், எச்சில் இனிப்பு சுவை உண்டாகும். நெஞ்சு கனத்து இருக்கும், இந்நிலை:யியிருந்தால் காசபித்தமாகும்.

கருத்தாக சுவாசமது மிகவுண்டாகும்
கனமான வயிறுமே யூதிக்காணும்
உருத்தாக வுடலதுதான் மிகவிளைக்கும்
ஊருமோ கேணிபோல் வாய்நீர்தானும்

மருந்தாக மயங்கியே கண்மறைக்கு
மார்பிலே வலியோடு யிருமலுண்டாந்
துருத்தாக வயிறுதனிற் பசியோயில்லை
சுவாசமாம் பித்தத்தின் சூட்சமாமே. (858)

அதிக சுவாசம் கண்டு வயிறு ஊதி உடல் அசதியும் கிணற்று நீர்போல எச்சில் ஊறி, மயக்கம்போல் கண்மறைப்புண்டாகி மார்புவலியுடன் இருமலுண்டாகி வயிற்றில் பசியில்லாமலும் இருக்கும் நிலை சுவாச பித்தமாகும்.

சூட்சமாய்ச் செப்புதனிற் களிம்புபோலும்
தியங்கியே வாயெடுக்குஞ் செகப்பாம்வீழும்
மாட்சமா மலமிறுகிச் சிவப்புபோலா
மயக்கமொடு வேர்வைதான் சென்னீர்மாயும்
தாட்சமாய்த் தண்ணீர்தான் மிகத்தவிக்குந்
தலைதானுந் திரும்பியே தவக்கமுண்டாம்
தேட்சமாந் திடுக்கொடு பயமுமாகும்
சிறுத்தரவி போல்மேணி செம்பித்தமாமே. (859)

செம்பிலுள்ள களிம்புபோல் வாயிலிருந்து நீர்விழும், மலம் இறுகி சிவப்பு நிறமாக இருக்கும், வேர்வை சென்னீர்போல இருக்கும், தண்ணீர் தாகம் மிக உண்டாகும் தலை திரும்பி தெவக்கமுண்டாகும் உடலில் சிகப்பு தோன்றும் இக்குணம் செம்பித்தமாகும்.

செம்பித்த மாயே தியக்கமுண்டாம்
சிரசோடு மெய்நடுக்குந் தலைவலிக்கும்
கரும்பித்த மாகியே கண்ணுறங்குங்
கடைக்கண்தான் சிவந்துமின் மின்னியாகும்
நம்பித்த சடமெல்லாங் கனத்துலர்த்தும்
நாவிதனில் ருசியில்லை நலமேபாரு
வம்பித்தங் கருப்பாசி வாந்தியுண்டா
மாசடையுங் கரும்பித்த வளர்ப்பந்தானே. (860)

மயக்கம் உண்டாகி, தலை, உடல் இவைகள் நடுக்கம் உண்டாகி தலைவலி உண்டாகி கரும்பித்தமாகி கண்ணில் சோர்வு ஏற்பட்டு கடைக்கண் சிவந்து உடல்கனத்து நாக்கில் ருசி இல்லாமல் கருப்பான பித்தம் வாந்தியாகி காணும் குணம் கரும்பித்தமாகும்.

வளப்பமா யுடம்பெங்குஞ் சொரியுண்டாகி
வருத்தமிக வாகியே கூட்டிகட்டுங்
குளப்பமாய் வயிறுதான் பேதியாகுங்
குமரியே பொருமலா யிழுத்துக்கொள்ளும்

இளப்பமாய் கால்தானும் பெலன்கேட ாகும்
இடுப்பிலே வலியுண்டாய்த் திமிருண்டாகும்
களப்பமாய் கருகியே மேனியெல்லாம்
காந்துங் கரப்பன்பித்தங் கண்டிடாயே. (861)

உடல் எங்கும் சொரியுண்டாகி வருத்தமுண்டாகி வயிறுபேதியாகி பொருமல் ஏற்பட்டு இழுத்துக்கொள்ளும் காலுக்கு பலம் குறைந்து இடுப்புவலி திமிர் உண்டாகி உடல் கருப்பாகும் குணம் கரப்பான் பித்தமாகும்.

கண்டிட்ட மந்தமாய்ப் பசியேயில்லை
கடுத்துமே நளிராகி மலமறுக்கும்
வென்றிட்ட விழிக்குத்து நீர்தான்பாயு
மிகத்தலைவலி செவியி லிரைச்சலாகும்
அன்றிட்ட அடிவயிறு அழுத்தமாகும்
அசனமிகச் செல்லாது கைகாலோயும்
பன்றிட்ட பிளித்தப்பா யவாய்நீரூரும்
பண்பான அசீரணபித்தம் பயின்றிட்டாயே. (862)

வயிறு மந்தமாகி பசியில்லாமல் கருத்து மலம் இறுகும், கண்குத்தி நீர்பாயும், அதிகதலைவலி, காது இரைச்சல், அடிவயிறு அழுத்தம் ஏற்பட்டு கைகால் ஓய்ந்து, வாய் நீரில்புளிப்புச்சுவை ஏற்படும் இவ்வகை குணம் அசீரணபித்தமாகும்.

பயின்றிட்ட மனமறுத்துக் குடல்பிரட்டி
பாங்கான வாந்தியொடு அருசியாகி
தியன்றிட்ட தியக்கமாம் சிரசிலேறி
திரும்பியே தலைதன்னைப் புறகேவீசும்
நவின்றிட்ட அடிநாக்கு மிகத்தடிக்கும்
நாவிலே உணர்ச்சியில்லை வாதுரக்கமத்து
அயின்றிட்ட ஆகாச மெரிதல்போலாம்
அதட்டுமே அருசியென்ற பித்தந்தானே. (863)

மனமறுத்து குடல்பிறட்டி - வாந்தியுடன் ருசியில்லாமலும் தியக்கமாக தலையிலேறி அடிநாக்கு தடித்து நாக்கில் உணர்ச்சியில்லாமல் உறக்கமில்லாமல் ஆகாயம் எரிதல்போல் உண்டாகும் குணம் அருசி பித்தம் ஆகும்.

அதட்டியே அடிதுடைதான் ரெண்டுபாதம்
அழகான கண்ணோடு உள்ளங்கால்கள்
கதட்டியே உள்ளங்கை யெரிவுகாணும்
காதுரெண்டு முக்கோடு வரண்டுபோகும்
முதட்டியே முதுகுமுழங் கால்கைகால்தன்னில்

முதிர்ந்தவிருப் பாகமே யேற்றலாகும்
பதட்டியே காற்றுதான் மிகவேண்டும்
பாரமாய் யெறிபித்தம் பயின்றவாறே. (864)

அடிதொடைகள், பாதம் இரண்டு, கண்கள், உள்ளங்கால்கள், உள்ளங்கை, இவைகளில் எரிவு உண்டாகும், இரண்டுகாதுகள், மூக்கு இவைகள் வறண்டு போகும், முதுகு முழங்கால் தன்னில் கடுமையான வலியும், உடலுக்கு காற்று அதிகம்தேவைபடும், இவ்வகை குணங்கள் கொண்டது எறிபித்தமாகும்.

வாரான யிளமைதனில் மிகநரைக்கும்
வடிவெல்லா மிகவெளுப்பாய்த் தானிருக்கும்
காரான கடைக்கண்தான் மிகச்சிவக்கும்
கண்டபல ஞானங்கள் மிகவேபேசும்
தூரான வார்த்தைகள்தான் மிகச்சிக்கொன்று
துடியிடையார் மேலின்பந் திறந்துகூரல்
பாரான பலகலைதான் மிகவுரைத்தல்
பாடுமே அழல்பித்தம் பரிசுதானே. (865)

இளமையில் நரை உண்டாகி மிக வெளுப்பு உண்டாகி கடைக்கண் சிவந்து வாய் தானாக உளறிக்கொள்ளும் பல கலைகளைப்பற்றி மிகவும் சொல்லுதல். இக்குணங்கள் கொண்டது அழல்பித்தமாகும்.

பரிசுதா னுடம்பெல்லா மிகத்துடித்து
பாண்டுவாய் மேனியுந்தான் பச்சென்றாகும்
உரிசுதா னில்லாம லுண்ணமாட்டார்
ஒட்டமே மிகுதியாய் உலையப்பண்ணும்
அரிசுமே ஆயிழைமேல் மனம்புண்ணாகும்
அடிக்கடிக்கு ஆரோடுஞ் சண்டைகொள்ளும்
துரிசுதான் மிகப்பண்ணில் ஏதும்வேண்டில்
துடிப்பிறந்த தன்னுடைய சொரூபமாமே. (866)

உடல் எல்லாம் துடித்து உடல் வற்றி ஓட்டம் கண்டால் உலையப்பண்ணும், பெண்ணை நினைத்துமணம் புண்ணாகும், அடிக்கடி யாருடனும் சண்டை போடும் குணம் தன் சொரூபமாகும், மேலும்.

சொரூபமாய் சேர்ந்துமே மிகுந்திருக்குந்
தூத்துமே கொடுமைதன்னை ஆடுமாடும்
உருபடலங் காலிருந்து உசறமேறும்
உச்சமாந் தலைவலிதான் அதிகமாகும்
எருமாய் விழியிரங்கும் மோலேயேறும்
ஏகமாய் வலியுண்டாய்க் கட்டும்பாரும்

அருபமாய் அசன்மிகத் தானுஞ்சொல்லா
தரிதான விஷப்பித்த மசாத்தியமாமே. (867)

கொடுமைகளை ஆடும், படலம் காலிலிருந்து மேல் ஏறும் தலைவலி அதிகமாகி விழிஇறங்கி ஏறும், உடலில் எல்லாம் வலி உண்டாகும். இக்குணங்கள் கண்டால் விஷப்பித்தம் ஆகும். இது அசாத்தியம்.

அரிதான வயிறுதனி லிரைச்சலாகும்
அடிவயிறு பிடுங்கியே பேதியாகும்
உரிதான உப்பிசந்தான் மெத்தவாகும்
உருவிலாப் பக்கத்தில் வலியுமாகும்
உரிதான யீரலெல்லாம் குமுறல்காணும்
உத்தவமாந் தாகமொடு மயக்கமாகும்
சரிதான அயோசிகமாய் சத்தியாகும்
சஞ்சரிக்கும் அதிசார பித்தமாமே. (868)

வயிற்றில் இறைச்சல் ஏற்பட்டு, அடிவயிறு பிடுங்கி பேதியாகும், வயிற்று உப்புசம் காணும், விலாவின் பக்கத்தில் வலி உண்டாகும், ஈரல் எல்லாம் குமுறல் உண்டாகும், தாகம், மயக்கம் இவைகளும் உண்டாகும், இக்குணங்கள் கண்டால் அதிசார பித்தமாகும்.

சாரமாய் வயிறிரைந்து பேதியாகும்
சலிப்பான கோபமாய்த் தடுமாறாகும்
கோரமாய் மூலத்தில் முளையுங்காணும்
குரங்கோடு அடித்துடையுங் கடுப்புமுண்டாம்
சோரமாய் உடல்வெளுத்து சோகையாகும்
தூக்கமே மிகமிஞ்சிச் சோம்பலாகும்
காரமாய் கண்ணுந்தான் கரிச்சலுண்டாம்
கண்மூல பித்தத்தின் காட்சியாமே. (869)

வயிறு இரைத்து பேதியாகும், கோபம் தடுமாற்றம் மூலத்தில் முளை இவைகளுண்டாகி அடித்தொடையில் கடுப்பு ஏற்பட்டு உடல்வெளுத்து, தூக்கம், மிதமிஞ்சின சோம்பல், கண் கரிச்சல் இவைகள் உண்டானால் மூல பித்தமாகும்.

ஆமென்ற அங்கமெல்லாம் அம்மைவார்த்து
அதிகபுண்ணா போலெங்குந் தினவுண்டாகும்
போமென்ற சரீரமெல்லாம் புண்களாகும்
புழுதியள்ளிப் பூசினாப்போல் சரீரமாகும்
வாமென்ற வடிவுமது மஞ்சளாகும்
மலசலமுஞ் சுருங்கியே வாட்டமாகும்

நாமென்ற நாடியது துவண்டுகாணும்
நாற்றமுண்டாம் உதிரபித்தம் நாடுவோற்கே. (870)

உடல் எல்லாம் அம்மைவார்த்து புண் ஏற்பட்டு தினவு உண்டாகி உடல் எங்கும் புண்களாகும், புழுதியே உடல் எங்கும் பூசினார்போல் மஞ்சள் நிறமாகும். மலம்சலம் குறைந்து வாட்டமாகும், நாடி துவண்டு காணும், கெட்ட நாற்றம் உண்டாகும் இவ்வகை குணங்கள் உதிர பித்தமாகும்.

நாடினால் குறவளையைக் கனத்துக்கொண்டு
நற்கசப்பாய்ச் சத்தியது தானெருக்கும்
வாடியே கண்டத்தில் புண்போலாகும்
வழவழத்து நரம்பெல்லாம் வரண்டிருக்கும்
தாடியே தாளடியிற் கனப்புண்டாகும்
சமுத்திரத்தி னோசைபோல் காதிலுண்டாம்
பேடியாய் மயிருசெம் பட்டையாகும்
புறவிசிவாங் கண்டபித்த பிரதாபந்தானே. (871)

தொண்டைக்கனத்து நாக்கசந்து கழுத்தில் புண்போன்ற வலியும் நரம்புகள் வரண்டு, தாளடியில் கனப்புண்டாகி கடலின் ஓசைபோல் காதில் இரைச்சல் உண்டாகும், மயிர் செம்பட்டையாகும், புறஇசிவுண்டாம். இக்குணங்கள் கண்ட பித்தமாகும்.

பிரதாப மாகவே நாடியெங்கும்
பெற்றலாய் உதாசினங்கள் மெத்தபேசும்
நிரதாப மாகவே பல்கடிக்கும்
நெருப்பாகக் கண்சிவக்கும் நிமைத்துமூடும்
குறதாப மாகவே கூவல்ப்போடும்
கொக்கரிக்குங் கூத்தாடும் குறிச்சேபார்க்கும்
அறதாப மாகவே ஆண்மையுண்டாம்
அசாத்தியமாம் ஓடுபித்த மணுகினோர்க்கே. (872)

நாடி எல்லாம் உதாசினங்கள் உண்டாகி பல்கடித்து கண் நெருப்புபோல் சிவந்து இமைமூடி கொக்கரித்து கூத்தாடி குதித்து தாபமான ஆண்மையுண்டாம், இது ஒடு பித்தம், இந்நோய் அசாத்தியமாகும்.

அணுகியே ஆபரணம் பொன்தனைத்தான்
அகப்பட்ட யிடந்தன்னில் புதைத்துப்போடும்
மணுகியே மனுஷரைத்தான் கண்டபோதே
வார்த்தையா லுதாசினங்கள் வசனிப்பாகும்
நணுகியே நாக்குக்குர் தானேபேசும்
நற்றண்டி பண்ணியே யிருக்குங்கைகள்

மிணுகியே என்னேரம் அன்னம்வேண்டா
மிக்கான மூடுபித்த மீறினோர்க்கே. (873)

பொன் ஆபரணத்தை கண்டவிடத்தில் புதைத்துவைத்தல் வேறு மனிதர் பேசினதை கண்டால் வார்த்தையால் உதாசினம் செய்தல் தானே பேசுதல், எந்த நேரமும் அன்னம் வேண்டாது இருத்தல் ஆகிய குணங்கள் மூடுபித்தத்தின் மீறியகுணமாகும்.

மீறியே தலையோடு சிரசுநெற்றி
மிக்கான பிடரியொடு முதுகுதண்டு
காரியே கண்டங்கள் கதுப்போடொக்க
கனமாக நடுங்கியே காந்தியாகும்
சீறியே கசப்பாக வாந்தியாகும்
சிணுக்கிமே லாயிருக்குந் தூக்கமில்லை
ஊறியே வாய்நீர்தான் மார்பில்வீழும்
ஊருமே நாற்றந்தா னடுபித்தமாமே. (874)

தலை, நெற்றி, பிடரி, முதுகுதண்டு, கழுத்து இவைகள் கறுத்து நடுக்கல்கண்டு சமமாகும், கசப்பான சுவையில் வாந்தியுண்டாகும், தூக்கமில்லாது எச்சில் மார்பில் விழுந்து நாற்ற முண்டாகும், இது நடுபித்தமாகும்.

நடுக்குமே கபாலந்தான் சிரசோடொக்க
நளிராசி உடம்பெங்குங் கடுப்புமாகும்
விடுக்குமே அம்புபோல் சிரசெல்லாந்தான்
மேனியுமோ மஞ்சள்நிற மாகுங்கண்டாய்
முடுக்குமே மூக்குக்குள் தண்டெல்லாம்நோகும்
முகமெல்லாம் வீங்கியே மூச்சைகாணும்
படுக்குமே அடிக்கடித்தான் எழுந்திருக்கும்
பாரமாங்க பாலபித்தம் பண்புதானே. (875)

கபாலம் சிரசுடன் நடுக்கம் உண்டாகி உடல் எல்லாம் கடுப்பு உண்டாகி, அம்புபோல் சிரசெல்லாம் கடுத்து மஞ்சள் நிறமாகி, மூக்குக்குள் உள்ள தண்டு வலியும், முகம் எல்லாம் வீக்கமு முண்டாகி மூர்ச்சை உண்டாகும். இக்குணம் அடிக்கடி உண்டாகும், இது கபால பித்தத்தின் குணமாகும்.

பாரமாய் உடம்பெங்குந் திமிருண்டாகும்
பதைத்துமே யீரலுக்குள் வலியுண்டாகும்
வாரமாய் வாய்கசந்து வாந்தியுண்டாகும்
மகத்தான தலையெடுக்க மயக்கமாகும்
ஆரமாய் அக்கினிதான் மிகவுண்டாகும்
அரோசியமா யென்னேரம் ஆண்மைகுன்றும்

தாரமாய் தண்ணீதான் மிகவேண்டாது
சமிக்காது சத்திபித்தத் தண்மைதானே. (876)

உடம்பெல்லாம் திமிருண்டாகி, ஈரலுக்குள் வலியுண்டாகி, வாய்க்கசந்து வாந்தியுண்டாகி, தலை தூக்க மயக்கம் உண்டாகும், உஷ்ணம் அதிகமாகி ஆண்மை குன்றி, தாகமில்லாது இருக்கும் குணம், சத்தி பித்தமாகும்.

ஆண்மையாய் அடிவயிற்றில் பதைப்புண்டாகி
அங்கமெல்லாம் வெடவெடுத்து வழன்றுகாணும்
தாண்மையாய்த் தண்ணீர்தான் மிகக்குடிக்கும்
சயித்தியமாம் பண்டத்தி லிச்சையாகும்
நாண்மையாய்க் கண்டத்தில் வேர்வைகாணும்
கழுத்தடியும் நாவடியு மிசித்துக்கொள்ளும்
மூண்மையாப் புளிப்புமே லிச்சையாகும்
பெரியதண்ணீர் தாகபித்தம் பேசலாமே. (877)

அடிவயிற்றில் பதைப்புண்டாகி, உடலெல்லாம் வழன்றுகாணும் தாகமெடுத்து தண்ணீர் அதிகமாக குடித்தல் உண்டாகும், சயித்திய பொருட்கள் உட்கொள்ள ஆசை உண்டாகும், கழுத்தில்வேர்வை உண்டாகும், கழுத்தடியும், நாவினடியும் இசித்தல் உண்டாகும், புளிப்பு சுவையில் ஆசை உண்டாகும். மிக அதிக தண்ணீர் குடித்தல் போன்ற குணங்கள் தாகபித்தமாகும்.

தாகமுடன் சத்தியதாய் விக்கலாகுந்
தவிப்பெய்தி சரீரமெல்லாஞ் சயித்தியமாகும்
பாகமுடன் தலைபிறட்டுங் கிடைகொடாது
பால்போல வாய்தனிலே நுரையுந்தள்ளும்
சாகமுடன் சயித்தியத்தில் மிகக்கிடக்குந்
தணலாக மேல்வெதும்புந் தளர்ச்சியாகும்
சோகமுடன் கைகால்தான் ஓச்சலாகும்
சுறுக்கிடுமே விக்கல்பித்தஞ் சுருதிதானே. (878)

தாகமுடன், தீராதவிக்கலுடன், தவிப்பு உண்டாகும், உடலெங்கும் சயித்தியமாகும், தலைபிறட்டி பால்போல் வாயில் நுரைதள்ளி சயித்திய முண்டாகும் உஷ்ணம் அதிகமுண்டாகி தளர்ச்சியாகும், கைகால் சோர்வு உண்டாகும், இது விக்கல் பித்தமாகும்.

சுருதியா யிருமலது மிகவுமுண்டாய்ச்
சூட்சமாய் வெதும்பலொடு தண்ணீர்தாகம்
பருதியா யுடல்வெளுத்து பாண்டுவாகும்
பஞ்சுபோல் கண்களெல்லாம் வெளுப்பாய்ப்போகும்
குறுதியாஞ் நெஞ்சுதனில் கோழைகட்டும்
குணுக்காகக் கட்டிபோல் சளியேவீழும்

நிருதியாய் நெஞ்சுதனி லெரிவுண்டாகும்
நித்திரையே மிகக்கட்டிய பித்தந்தானே. (879)

இருமல் மிக உண்டாகி வெதும்பலுடன் தண்ணீர்தாகமும் உடல் வெளுத்து பாண்டுவாகும், கண்கள் பஞ்சுபோல் வெளுப்பாய்ப் போகும், நெஞ்சில் கோழைக்கட்டும், சளி கட்டியாக விழும் நெஞ்சில் எரிவு உண்டாகும், தூக்கத்தில் கோழைகட்டும், இது கபபித்தமாகும்.

பித்தமா யுடம்பதுதான் மிகமயக்கம்
பொருமியே வயிறெங்கு முள்ளுப்போலாகும்
நித்தமாய்க் காலமே வாந்தியாகும்
நினைவோடு நித்திரையும் சத்தியாகும்
பத்தமா யொன்றையே பிடித்துநிற்கும்
பாரமா யுடம்பெங்குந் திமிருண்டாகுஞ்
சுத்தமாய் சரீரமெலாந் தூசுநேர்ந்து
துரிசுநடை கொடாது திமிர்பித்தமாமே. (880)

உடல்மிக மயக்கமாகி, வயிறுபொருமலுடன் முள்ளுப்போல் குத்தும் தினமும் வாந்தியும், நினைவோடு தூக்கமும், உடல் எங்கும் திமிர் உண்டாகும், உடலில் தூசி அழுக்குச் சேரும். இக்குணங்கள் கொண்டது திமிர்பித்தமாகும்.

நடைகொடா தடிவயிற்றில் யிசித்துநேர்ந்த
நாவரண்டு தலையெல்லா மிகக்கனத்து
இடைகொடா தசந்தெல்லாம் நோவுண்டாகி
யீரல் தனிலே வயிறுநோவாம்
படைகொடா வயந்தானும் பச்சென்றாகும்
படபடத்து வுடம்பெங்கும் பங்குகொள்ளும்
மடைகொடா வயிறிரைச்சல் மெத்தவாகும்
மாரடைக்கும் வலிபித்தம் வண்மைதானே. (881)

அடிவயிறு இசுவுண்டாகி நாக்குவரண்டு தலையெல்லாம் கனத்து உடல் எங்கும் வலி உண்டாகி ஈரல் வயிறு இவைகளில் நோயுண்டாகும் உடல் எங்கும் படபடப்பு உண்டாகும், வயிற்று இரைச்சல் அதிகமாகும், மார்பு அடைக்கும், இந்தக் குணம் ஏற்பட்டால் வலிபத்தமாகும்.

வண்மையா யுடம்பெங்கும் வடியுந்தண்ணீர்
மயக்கமா யுடல்கனத்து பாரமாகும்
பெண்மையாம் பிடரிதனி லிசுவுண்டாகும்
பொருமியே வயிறுப் பிசந்தனாகும்
திண்மையாய் உடல்கனத்துச் செக்குப்போலாகும்
சீறியே மிகயிருமி சிந்தைகேடாம்

செண்மையாய் வாய்நீர்தா னுப்புரைக்கும்
சிறுநீருந் சிவப்பாகும் சீதபித்தம். (882)

உடம்பெல்லாம் நீர்வடிந்து மயக்கமாக உடல்கனத்து பாரமாகும், பிடரியில் இசிவு உண்டாகும், வயிறு உப்பி பொருமலுண்டாகும், உடல்கனத்து செக்கு போலாகும், இருமல் அதிகமாகி சிந்தைக்கு கேடாகும், எச்சில் உப்புக்கரிக்கும், சிறுநீரில் சிவப்பு காணும் இது சீதபித்தமாம்.

சீதமா மடிவயிற்றில் திமிருண்டாகி
செழுமையாய் உடம்பெங்குந் தினவுமாகி
வாதமா யுடம் பெங்குங் கடுப்புண்டாகி
வத்தியே மலஞ்சலமும் வரண்டுபோகும்
காதமாய் கால்கைகள் கதலித்தண்டு
கனத்ததுபோல் வெச்சென்று கடுப்புமாகும்
நாதமாய் மலந்தன்னில் கிறுமிவீழும்
நாறுமே உடம்புகிருமி பித்தமாமே. (883)

அடிவயிற்றில் திமிர் உண்டாகி உடலெல்லாம் தினவுமாகி கடுப்புண்டாகும், மலஞ்சலமும் வரண்டு போகும், கால் கைகள் துவளும், கனத்து கடுப்பு உண்டாகும், மலத்தில் கிருமி விழும், உடல்நாற்ற முண்டாகும் இதுகிருமிபித்தமாம்.

உடம்பதுதான் லாகிரிகள் தின்றவன்போல்
உணர்சிந்தா னில்லாமல் புடவைகட்டா
கடம்புதான் அழலணுகுந் தன்மைபோல
தவிச்சுமே தாகந்தான் மிகவுண்டாகும்
வடம்புதான் வாதமே மனுஷரோடே
வார்த்தைகள் பலபேசுமால் தனியாகும்
மடம்புதான் உக்கிரமாய்க் கண்சிவக்கும்
வாய்வறளும் சாத்திய பித்தந்தானே. (884)

லாகிரிப்பொருள் தின்றவனைப்போல் தாகம் அதிகமுண்டாகி வார்த்தைகள் தடுமாறி பல பேச்சுகள் உண்டாகும், உக்கிரமாய்க் கண்சிவக்கும், வாய்வறண்டிடும். இது சாத்திய பித்தமாகும்.

தானென்ற சகலநூல் தானேபேசும்
சடுதியினில் உளுக்காரும் ஒட்டம்பாயும்
பேனென்ற புடவையைத்தான் கிழித்துப்போடும்
புலம்புமே வாயில்வந்த தெல்லாம்பாடும்
தேனென்ற சிரசோடு பிடரியெல்லாஞ்
சிக்கென்ற யிசிவாகும் தேகம்வாடும்

பானென்று பலபலவாங் கருமம்செய்யும்
    பழிக்குமே பிறரைத்தான் மார்க்கபித்தமாமே. (885)

சகல நூல்களும் தானேபேசும் ஓட்டம்பாயும், புடவையைக் கிழித்துப்போடும் புலம்பி வாயில்வந்த தெல்லாம் பாடும் சிரசு, பிடரி, இந்த பகுதியில் இசிவு உண்டாகி உடல்வாடும், பலபல தொல்லைகள் உண்டாகும் பிறரைப் பழித்தலின் குணமுண்டாகும், இது மார்க்க பித்தமாகும்.

மார்க்கமாய் மனமதுதான் மவுனமாகும்
    வடிவெங்கும் ஊதிடே நெஞ்சும்வற்றும்
ஊர்க்கமாய் உடம்பதுதான் அசதியாகும்
    ஊணுறக்கந் திரேகமது வுழலையெங்கும்
தேர்க்கமாய் திடுக்கிட்டுச் சிதைவாம்புத்தி
    சேயிழையார் மருந்தினால் பிச்சியாகி
ஆர்க்காமல் அடிக்குடலில் மருந்துபற்றி
    அடங்காது மருந்தீடு பித்தமாமே. (886)

மனம் மவுனமாகும் நெஞ்சு ஊதி பிறகு வற்றிப்போகும், உடம்பதுவும் அசதியாகும், ஊனுறக்கம் உடலெங்கும் உழலை உண்டாகும் திடுக்கிட்டு புத்தி சிதைந்து, அடிக்குடலில் ஈடுமருந்துபற்றி அடங்காத பலதொல்லை உண்டாகும், இது மருந்தீடு பித்தமாகும்.

ஆமப்பா பித்தந்தான் நாற்பத்திரெண்டின்
    அடவான குணமெல்லாம் ஆராய்ந்துபார்த்து
தாமப்பா சதாசிவன்தான் தன்வந்திரிக்கு
    தயவுடனே அனுக்கிரகம் பண்ணிச்சொல்ல
வாமப்பா தன்வந்திரி அசுவனிதேவர்க்கு
    மகிழ்ந்துரைக்க அசுவனியாந் தேவர்தாமும்
தேமப்பா அகஸ்தியமுனி தேவர்க்குச் சொல்ல
    சித்தமகிழ்தே யுரைக்க புலத்தியர்க்கே. (887)

இவ்வாறு நாற்பத்து இரண்டு பித்தத்தின் குணங்களை ஆராய்ந்து பார்த்து சதாசிவன், தன்வந்திரியான எனக்கு அனுக்கிரகம் செய்து சொல்ல நான் அசுவனி தேவருக்குச் சொல்ல அசுவனிதேவரும் அகஸ்திய முனிக்குச் சொல்ல அகஸ்தியரும் சித்தம் மகிழ்ந்து புலத்தியருக்குச் சொன்னார்.

புலத்தியர்தாம் தோரணமா முனிவனுக்குப்
    பொதிக்க தோரணமா முனிவன்தானும்
தலத்தியராம் யூகிமுனிக் குபதேசித்த
    சாங்கமா யூகியென்ற முனிவன்தானும்

யிலத்தியராய் தன்வந்திரி நூலைப்பார்த்து
மாமுனிவர் சொன்னஉப தேசங்கேட்டு
குலத்தியராய்க் குருவினிட உபதேசத்தால்
குறித்தபித்த நாற்பத்து ரெண்டுமுற்றே. (888)

புலத்தியரும் தோரணமா முனிக்குச் சொல்ல தோரணமா முனிவரும் யூகிமுனிக்குச்சொல்ல, யூகிமுனிவரும் தன்வந்திரியாகிய என்நூலைப் பார்த்து மாமுனிவர் சொன்ன உபதேசம் கேட்டு உணர்ந்த பித்தம் நாற்பத்து இரண்டும் முற்று பெற்றது.

சிலேத்தும வகை 21.

முற்றான சேத்துமந்தான் யிருபத்தொன்று
முனியுரைத்த சொற்படியே மொழியக்கேளு
சித்தான யிருமவஞ் சிலேத்துமத்தோடு
செறிகச் சேத்துமமாஞ் சுவாசசிலேத்துமம்
மகத்தான தபசிலேத்து கத்தோடொக்க
மந்தசி லேத்துமம் வாசி சிலேத்தூத்துமமாகுந்
துத்தான பித்தசிலேத்துமந் தொந்தசிலேத்துமம்
சூதசன்னி வாத சிலேத்துமந்தானாமே. (889)

சிலேத்துமம் இருபத்து ஒருவகையின் குணத்தைக் கூறுகிறேன் இருமல் சிலேத்துமம், செறிகச் சிலேத்துமம், சுவாச சிலேத்துமம், தீபன சிலேத்துமம், மந்தசிலேத்துமம், பித்தசிலேத்துமம், தொந்த சிலேத்துமம், சூத சிலேத்துமம், சன்னி சிலேத்துமம், மற்றும்.

ஆகுமே சுரசேத்துமம் அதிசாரசேஷ்டுமம்
அதிகசல சிலேத்துமமாம் அக்கினிசிலேத்துமமாம்
போகுமே பூதசிலேத்தும மூர்க்கன்தானும்
பொல்லாத நீர்க்கடுப்புப் பொருந்திக்காணும்
ஏகுமே வாதசேத்துமந் தான்குன்றி
யெறிப்பான சேட்டுமமாம் விகாரசேத்துமம்
சோகுமே சுறோணித சேத்துமந்தானும்
தோற்றமாம் வரலாறு நயந்துகேளே. (890)

சுரசிலேத்துமம், அதிசார சிலேத்துமம், சலசிலேத்துமம் அக்கினி சிலேத்துமம், பூதசிலேத்துமம், மூர்க்கசிலேத்துமம், இவ்வகை சிலேத்து மங்களின் நீர்க்கடுப்பு காணும், எரிசிலேத்துமம், விகார சிலேத்துமம், சுரோணித சிலேத்துமம், விரணசிலேத்துமம், துர்கந்த சிலேத்துமம், நித்திய சிலேத்துமம், ஆக இருபத்தொருவகை சிலேத்துமமாகும்.

நயமாக ஒருவருடன் பேசும்போது
நாவிலொன்றும் மனதிலொன்றும் நாடும்பேர்க்கு
பயமாக வந்தவர்க்கு யிடங்கொடாது
பாதகர்க்கும் வேதத்தைப் பழிக்கின்றோர்க்குந்
துயமாக சூரியற்கு யெதிரே நின்று
துரிசாக மலசலங்கள் விட்டபோர்க்கும்
சுயமாக விஷ்ணு சமயந்தான்
அடக்கரிது ரோகிக்குஞ் சேட்டுமமீறும் (891)

ஒருவரிடம் பேசும்போது மனதில் ஒன்றுவைத்து பேச்சு ஒன்றுபேசும் குணம் கொண்டவர்க்கும், பயம் கொண்டு வந்தவர்க்கு இடம் கொடுக்காத பாதனுக்கும், வேதத்தை பழிக்கின்ற பாதகர்க்கும், சூரியனுக்கு முன் நின்று மலம் சலம் கழிப்பவர்கட்கும் சிலேத்தும நோய் உண்டாகி மீறுதல் குணமுண்டாகும்.

மீறியே தித்திப்பு புளிப்புதானும்
மிகத்தின்னுங் கிழங்குவகை யருந்தினாலும்
சாதியே சயித்தியமாம் குளுந்தபண்டம்
தண்ணீர்தான் பழையதுக ளருந்தலாலும்
சீறியே தன்வயது தனக்குமூத்த
ஸ்திரீகளுட னனுபோகம் பண்ணினாலும்
மாறியே மசானத்தின் புகைமேல்பட்டால்
வருகுமே சிலேட்டுமத்தின் மகிமைதானே. (892)

இனிப்பு, புளிப்பு, கிழங்குவகைகள், சயித்திய பொருட்கள் குளிர்ந்த பொருட்கள், தண்ணீர் இவைகளை அதிகம் உட்கொள்வதாலும், தன்வயதுக்கு மூத்த பெண்ணிடம் உறவு கொள்ளுதல் மயான புகை உடலின் மேல் படுதல் முதலியவைகளாலும் சிலேத்தும் உண்டாகும்.

மகிமையாய் மாசியொடு பங்குனிதான்
மருவியே வர்த்திக்கு மையந்தானும்
நதிகமையா வைகாசி தனில்கோபிக்கும்
நன்மையாச் சமிக்குகின்ற காலங்கேளு
அதிமையாய் ஆடிதனில் மிகச்சமிக்கும்
ஆவணியும் புரட்டாசி தன்னிற்கேளு
ததிமையாய் தாட்சியாங் காலமாகுஞ்
சதாசிவன்தான் சொன்னபடி சாத்தினேனே. (893)

சிலேத்துமம் மாசி பங்குனியில் மத்திமமாயும், வைகாசியில் சிறிது அதிகமாகவும், ஆடியில் அதிகமாகவும், ஆவணி, புரட்டாசியில் மிக அதிகமாகவும் இருக்கும், சதாசிவன் கூறியபடி நானும் கூறிவிட்டேன்.

சாத்தியே நொய்ப்புமாய் சளியே வீழும்
தளுக்காகு முகந்தானும் குளிருமுண்டாம்
மாத்தியே முகத்தினில் நீரேபாயும்
மாசற்ற வுடம்பெல்லாம் வெள்ளையாகும்
சீத்தியே மலந்தன்னில் சீதமுண்டாம்
சிறுநீறு மஞ்சணித்துச் சிறுகவீழும்
காத்தியே உடம்புதான் மெதுகுடாகுங்
கணவிருமலாஞ் சேட்டுமக் கணக்குத்தானே. (894)

அதிகமான சளிவிழும், முகத்தில் குளிர் உண்டாகும், முகத்தில் நீர்பாயும் உடல்எல்லாம் வெள்ளையாகும், மலத்தில் சீதம் விழும், சிறுநீர் மஞ்சனித்து குறைந்தும் இருக்கும், உடல் குறைந்த சூடாக இருக்கும், இது இருமல் சேத்துமத்தின் குணமாகும்.

கணக்காக சரீரந்தான் சீதளமாகி
கனத்துமே தடித்திட்டுப் பாரமாகி
மணக்காக நாடியெல்லால் நுணுக்கமாகி
மருவுசேட்டு மந்தடைந்து வாய்வரண்டு
அணக்காக அக்கினிதான் மிகவுண்டாகி
அடிமூக்குத் தண்டெல்லா மிகக்கனத்து
திணக்காக விருமலொடு தினவுமுண்டாஞ்
சேயகாச் சிலேட்டுமத்தின் திறமைதானே. (895)

உடல் சீதளமாகி, கனத்து, தடித்து பாரமாகி நாடிஎல்லாம் துணுக்கமாகி, சேத்துமம் அடைத்து வாய்வரண்டு, உஷ்ணம் அதிக முண்டாகி அடிமூக்குத்தண்டு மிகவும் கனத்து இருமல் தினவு, உண்டாகும் குணங்கள் சேயகாச் சிலேத்துமாகும்.

திறமையாய் நெஞ்சுதனில் கோழைகட்டும்
சிக்கென்று யிருமியே மூக்கடைக்கும்
குறமையைக் குரட்டொன்று சுவாசங்காணும்
குளிரோடு சுரமுண்டாய் மயக்கமாகும்
மறைமையாய் மார்போடு நெஞ்சடைக்கும்
வாய்வறண்டு மூக்கதனில் நீரேபாயும்
வெறுமையாய் மிகத்தண்ணீர் தாகமுண்டாம்
விடுகவாச சிலேட்டுமத்தின் விபரந்தானே. (896)

நெஞ்சில் கோழைகட்டி இருமல் உண்டாகி மூக்கடைக்கும் குரட்டென்ற சத்தத்துடன் சுவாசமிருக்கும், குளிர் சுரம் உண்டாகி மயக்கம் உண்டாகும், மார்பு, நெஞ்சு இவைகள் அடைத்து வாய்வறண்டு மூக்கில் நீர்பாயும் தண்ணீர்தாகம் அதிகமுண்டாம், சுவாச சிலேத்துமத்தின் குணங்களாமிவை.

விபரமாய்த் தீபனந்தான் மிகவுண்டாகும்
மிக்கான உடம்பெல்லா எரிவுண்டாகும்
அபரமாய் நெஞ்சடைக்கும் அழுகையாகும்
ஆக்கையெல்லாம் வலியுண்டாம் அழலுண்டாம்
கடரமாம் கைகாலுஞ் சயித்தியமாகும்
கனத்துமேச் சரீரந்தான் பருத்துக்காணும்
உபரமாய் உண்ணாக்கில் பசபசக்கும்
உறுதியாந் தீபன சிலேட்டுமனுந்தானே. 897)

தீபனம் அதிகமுண்டாகி உடம்பெல்லாம் எரிச்சலுண்டாகி நெஞ்சு அடைத்து அழுகை உண்டாகும், ஆக்கை எல்லாம் வலி, அழல், இவைகள் உண்டாகும், கை, கால், சயித்தியமாகும், உடல் பருத்துக் காணும், உள்நாக்கில் பசபசப்பு உண்டாகும், இது தீபன சிலேத்துமமாகும்.

தானென்ற வயிறுதனில் மந்தமுண்டாம்
சலங்கட்டும் மலங்கட்டுஞ் சித்தியாகும்
ஊனென்ற உடம்புதனில் வேர்வையாகும்
ஒக்காள மிகவாகும் உயர்மூச்சாகும்
கானென்ற அடிவயிறு கல்லுப்போலாம்
கனத்திரும்ப லாகியே காரலுண்டாம்
மானென்ற வாயசைத்து வெற்புகாணும்
மந்தமாம் சிலேட்டுமமென்றே வழுத்தலாமே. (898)

வயிறு மந்தமுண்டாகி மலசலம்கட்டி உடம்பில் வேர்வை ஏற்பட்டு ஒக்காளம் உண்டாகும் அடிவயிறு கல்லுப்போல் இருக்கும், காரலுண்டாகும். இது மந்த சிலேத்துமமாகும்.

வழுத்தவே வயிறுதான் பொருமிக்கொள்ளும்
வலித்துமே வலமிறங்கி நீர்க்கடுக்கும்
உழுப்பாக அன்னமிகத் தானுஞ்செல்லா
ஊறியே வாய்நீர்தான் மிகவுண்டாகும்
கழுப்பாகக் கண்டத்தில் கோழைகட்டும்
கனக்கவே யிருமலொடு மூச்சுமாகும்
விழுப்பாக மேனியுமோ மஞ்சணிக்கும்
மிக்கபித்த சேட்டுமத்தின் பான்மையாமே. (899)

வயிறு பொருமலுண்டாகி வலிவுண்டாகி வலப்பக்கம் இறங்கி, நீர்கடுத்து, எச்சில் மிகவூறும் தொண்டையில் கோழைக்கட்டும், இருமலுடன் மூச்சுவாங்கும், உடல் மஞ்சனிக்கும், இது பித்த சேத்துமத்தின் குணமாகும்.

பண்பாகக் கண்மயங்கிக் கிறுகிறுக்கும்
பயித்தியந்தான் மிகுதியாய்ச் சத்தியாகும்
உண்பாக அன்னமிகத் தானுஞ்செல்லா
ஊறியே வாய்நீர்தான் மிகவுண்டாகும்
கண்பாகக் கண்டத்தில் கோழைகட்டும்
கனக்கவே யிருமலொடு மூர்ச்சையாகும்
விண்பாக மேனியுமோ மஞ்சணிக்கு
மிக்கபித்த சேட்டுமத்தின் விபரமாமே. (900)

கண்மயங்கி கிறுகிறுப்புண்டாகி, பயித்தியம் அதிகமாகி அசதி உண்டாகி, எச்சில் மிக உண்டாம், தொண்டையில் கோழைகட்டும், இருமலுடன், மூர்ச்சையாகும், உடல் மஞ்சனிக்கும், இது அதிகபித்த சேத்துமத்தின் குணமாகும்.

விபரமாய் மேனியெங்கும் அழலையாகும்
விக்கலோ டிருமலாய் சுவாசமுண்டாம்
அபரமாய் சுரமோடு அசதியாகும்
அழன்றுமே வுடம்பெங்கு மெரிவுண்டாகும்
தபரமாய்த் தாகமுண்டாய்த் தலைவலிக்கும்
சஞ்சலமாய் மார்புதனில் நோக்காடுண்டாம்
குபரமாய் குளிரோடு மயிர்க்கூச்சுண்டாம்
கொடிதாவி சேத்தும சாத்தியமாமே. (901)

உடல்எங்கும் அழலை உண்டாகும், விக்கல் இருமல் சுவாசம் உண்டாகும், சுரம், அசதி, உடல் எரிவு, தாகம் இவைகளுண்டாகும், தலைவலி உண்டாகும், மார்பில் நோயுண்டாகும், குளிருடன் மயிர் கூச்சமுண்டாகும், இச்சிலேத்துமம் சாத்தியமாகும்.

கொடிதாக நாவரண்டு கறுப்புமாகும்
குளுந்துமே சுரமுண்டா மெரிவுண்டாகும்
கடிதாக வுடம்பெங்கு மிசிவுகாணும்
கனமான அசதியொடு சத்தியாகும்
தடிதாக தாடையொடு கன்னங்காது
தாக்கான புருவமொடு நாசிஉச்சி
டடிதாகத் துடித்துமே படபடக்கும்
பாகசன்னி சிலேத்துமமென்றே பகன்றிகிடாயே. (902)

நாவறண்டு கறுப்புநிறமாகி குளிர்சுரமுண்டாகும், எரிவு உண்டாகும், உடலெங்கும் இசிவுகாணும், அசதி உண்டாகும், தாடை, கன்னம், காது, புருவம், நாசி உச்சி, இவைகள் துடித்து படபடப்புண்டாம், இது சன்னி சிலேத்துமமாகும்.

பருகவே சுரந்தானும் பலகாலுண்டாம்
பாரமா யுடம்பெங்கும் வலியுண்டாகும்
அருகவே அடிக்கடிக்கு வேர்வையாகும்
அன்னந்தான் கொண்டுடனே வாந்தியுண்டாம்
உருகவே வயிறெல்லாம் உளைச்சலாகும்
உப்பிசமு மேல்மூச்சு மிருமலுண்டாம்
நடுகவே நாவரண்டு நீரதாகி
நவிலவே சிலேத்தும சுரமென்று சொல்லே. (903)

சுரம்கண்டு உடல்கனமுண்டாகி உடலெங்கும் வலியுண்டாகி அடிக்கடி வேர்வையுண்டாகும், அன்னமுட்கொண்டால் உடனே வாந்தியுண்டாகும், வயிறெல்லாம் உளைச்சலுண்டாகும், உப்புசம், மேல்மூச்சு, இருமல் இவைகள் உண்டாகும், நாவறண்டு விடும் இக்குணங்கள் சுர சிலேத்துமமாம்.

சொல்லவே வயிறுதனில் குத்தலுண்டாய்
சூலையாய் வலித்துமே சுழண்டுவிம்மும்
அல்லவே விலாப்பக்க மிரைச்சலாகி
அதிசார மாய்ச்சிவந்து பேதியாகும்
மல்லவே யீரலொடு நெஞ்சுநொந்து
வாய்வரண் டிருமலொடு மூச்சுண்டாகும்
தல்லவே தாகமொடு எரிவுமுண்டாம்
தவிக்குமே அதிசார சிலேத்துமந்தானே. (904)

வயிற்றில் குத்தல் ஏற்பட்டு சூலையாய் வலித்து கழண்டுவிம்மும், விலாப்பக்கம், இரைச்சலுண்டாகி, அதிசாரமாய் சிவந்து பேதியாகும், ஈரல், நெஞ்சில் நோயுண்டாகி, வாய்வரண்டு இருமலுடன் மூச்சுண்டாகும், தாகமுடன் எரிவு முண்டாகும், இது அதிசார சிலேத்துமமாகும்.

தவிக்குமே தண்ணீர்தான் மிகவுங்கேட்கும்
சலந்தானுஞ் சிக்கென்று தடித்திறங்கும்
அவிக்குமே அடிக்கடிக்கு நீரிறங்கும்
அனலாக அழண்டுமே ஆலோசிக்கும்
கவிக்குமே குரல்தானும் கம்மலாகும்
கனமான கோழையொடு சிலேத்துமம்விழும்
பவிக்குமே பல்லெல்லாம் உளைச்சலாகும்
பாரமென்ற சலசிலேத்துமம் பண்பாயென்றே. (905)

தண்ணீர் மிகதாக முண்டாகும், நீர்தடித்து இறங்கும், அடிக்கடி நீர் இறங்கும், உஷ்ணம் அழலும், குரல் கம்மலாகும், கோழையுடன் சிலேத்துமம் விழும், பல்லெல்லாம் உளைச்சலாகும், இது சல சிலேத்துமத்தின் குணமாகும்.

என்றதோ ரிருமலொடு கோழையுண்டாய்
எகமேங்கும் அக்கினியா யெரியப்பாய்ந்து
கன்றவே கால்கையும் அழர்ச்சியாகி
கண்ணோடு மூக்குமே யெரிவாய்க்காணும்
தன்றவே தாகமது மிகவுமுண்டாம்
சயித்திமாய் கால்கைகள் குளுந்துகாணும்
உன்றவே உண்டபின்பு பசியேயாகும்
உறுதியக்கினி சிலேத்துமத்தி னுண்மைதானே. (906)

இருமலுடன் கோழையுண்டாகி உடல் எங்கும் அக்கினியைப்போல் எரியும், கால், கை, அழற்ச்சியாகும், கண், மூக்கு, எரிவுகாணும், தாகம் மிகவுண்டாகும், கால், கைகள் சயித்தியமாய் குளிர்ந்துகாணும், சாதம் உண்டபின் பசியாகும், இது அக்கினி சிலேத்துமத்தின் குணமாம்.

உண்மையாய்க் கண்ணுருட்டி முழித்துப்பார்க்கும்
ஊமையைப் போல் தானிருந்து உறத்துப்பேசும்
குண்மையாங் குறட்டோடு மூச்சுவாங்கும்
கொடிகொடியாய்ச் சளியோடு யிருமலாகும்
வண்மையாய்க் கோழையொடு வாந்தியுண்டாம்
வாகான மூர்ச்சையொடு மயக்கமாகும்
தண்மையாய்ச் சந்தோஷ வார்த்தைபேசி
சண்டைகொள்ளும் பூத சிலேத்துமந் தானாமே. (907)

கண் உருட்டி முழித்து பார்த்தலும், ஊமையைப் போலிருந்து உரத்துப்பேசுதலும், குறட்டையும் மூச்சு வாங்குதலும், கொடி கொடியான சளியுடன் இருமலும், கோழையுடன் வாந்தியும் மூர்ச்சையுடன் மயக்கமும், சந்தோச வார்த்தைபேசி சண்டைப் போடுதலும் பூத சிலேத்து மத்தின் குணமாகும்.

தானான சடமெல்லாம் வலிப்புக்காணும்
சரீரத்தி லுணர்ச்சியற்று தளர்ச்சியுண்டாம்
வேனான கண்தானும் சிவந்துகாணும்
மிகக்கண்ணீர் பாய்ந்துமே மேனிகன்றும்
ஊனான வுடம்பெங்குங் கருகிக்காணும்
உறுதிமல சலம்விழுதல் தெரிந்திடாது
மூனான மூச்சோடு யிருமலாகும்
மூர்க்கமாஞ் சிலேட்டுமம் அசாத்தியமாமே. (908)

உடலெல்லாம் வலிப்பு உண்டாகும், உடலில் உணர்ச்சியற்று தளர்ச்சி உண்டாகும், கண்சிவந்து காணும், கண்ணீர்பாய்ந்து உடல்கன்றும், உடல் கருத்துக்காணும், தானாகவே சலம் கழிந்துவிடும், மூச்சோடு இருமல் உண்டாகும், இது மூர்க்க சிலேத்துமத்தின் குணமாகும்.

முயல்போல விதிந்துமே முருக்கம்வீசை
முளையாக யெழுந்திருந்து முருக்கிப்பாயும்
பயல்போல பல்லையே மிகத்திறக்கும்
பாடுமே சங்கீதம் பலகாலுந்தான்
கயல்போலக் கண்களெல்லாஞ் சிவந்துகாணும்
காமியைப்போ லுடம்பெங்குங் கருகலாகும்
உயல்போல வுருமியே உதடுகாயும்
உலைச்சலாமெரிச் சேட்டுமத்தி னுண்மைதானே. (909)

முயல்போல் குதிந்து எழுந்து முருக்கிப்பாயும், பல்லை மிகவும் திறக்கும், சங்கீதம் பாடும், கண்கள் சிவந்து காணும், உடல் எங்கும் கருகும், உதடுகாயும், இது எரி சேத்துமத்தின் குணமாகும்.

வெளிச்சமே மேனியுந்தா ணாடியெங்கு
மிடுக்காகப் பாடுமே சங்கீதந்தான்
மரிச்சுமே மங்கையர்மேல் சிந்தையாகு
மனசொன்று மற்றொரு காரியத்திற்செல்லும்
நரிச்சுமே சகலகலை தனக்குள்பேசும்
சாப்பாடு மேல்மனசு தரித்திடாது
குறிச்சுமே மயக்கமாய் விகாரமாகும்
கூறினோம் விகாரசிலேத்துமத்தி னுண்மைதானே. (910)

சங்கீதம்பாடி மங்கைமேல் சிந்தை வைத்தும் மனம் மற்றொரு காரியத்தில் செல்லும் சகலகலை தனக்குள் பேசும், சாப்பாடுமேல் பிரியம் வராது. மயக்கம் உண்டாகும், இது விகார சிலேத்துமத்தின் குணமாகும்.

உண்மையாய் முழங்காலில் மிகக்குடைந்து
உ.ளைச்சுமே முதுகோடு விலாப்பக்கங்கள்
கண்மையாம் முழங்கைகள் கணுக்கையசைந்து
கடினமாய் வீங்கியே குடைச்சலுண்டாந்
தண்மையாய்ச் சளிகட்டுந் தாகமாகுஞ்
சாதகமா யிருமியே மூச்சுண்டாகுஞ்
திண்மையால் நாவறண்டு தித்திப்பாகுஞ்
செயமான சுரோணித சிலேஷ்டுமந்தானென்றே. (911)

முழங்கால் மிகக்குடைந்து முதுகு உளைச்சலுடன் விலாப்பக்கமும் உளையும், முழங்கைகள், கணுக்கைகளில் வீக்கமும் குடைச்சலும் உண்டாகும், சளிகட்டும், தாகமுண்டாகும், இருமலாகி மூச்சுண்டாகும், நாக்குவறண்டு, தித்திப்புகாணும், இது சுரோணித சிலேத்துமமாம்.

தானென்ற தொண்டையினில் புண்ணுமாகிச்
சளியோடே சீழ்தானுங் கலந்துவீழும்
கானென்ற கழுத்தோடு பிடரிகன்னங்
கனமாக வீங்கியே காச்சலுண்டாம்
கோனென்ற குளிரோடு எரிவுண்டாகுங்
கொக்கென்று விரும்பியே கூவலுண்டாம்
வேனென்ற இடமெல்லாம் புண்போலாகும்
மிகவிரண சேட்டுமத்தின் விபரந்தானே. (912)

தொண்டையில் புண்ணாகி சளியுடன் சீழ்கலந்து விழும், கழுத்து, பிடரி, கன்னம், இவைகள் வீங்கி, காய்ச்சலுண்டாகும், குளிருடன் எரிச்சலுண்டாகும், இருமல், கூவல் உண்டாகும், உடலெல்லாம், புண்போலாகும், விரண சேத்துமத்தின் குணமாகும்.

விரணமாய் சீழோடு உதிரமுண்டாய்
மிகவிருமி மீன்தண்ணீர் போலநாறும்
அரணமாய் அன்னத்தை யிறங்கொட்டாது
அடிவயிறு வீங்கியே கால்கைவீங்கும்
தரணமாய் சடலஅசதி மிகவுண்டாகும்
சரீரந்தான் மிகவற்றி தழலாய்வேகும்
மரணமாய் அவுஷதந்தான் பலித்திடாது
துர்க்கந்த சேட்டுமந்தா னசாத்தியமாமே. (913)

சீழுடன் உதிரமுண்டாகி அதிக இருமலுண்டாகி மீன் கவிச்சை அடிக்கும் தண்ணீர்போல் நாற்றம் உண்டாகும், அன்னம் இறங்காது, அடிவயிறும் கால் கையும் வீக்கம் உண்டாகும், உடல்மிகவும் வற்றி உஷ்ணமும் உண்டாகும், மருந்துவகை குணமளிக்காது துர்க்கந்த சேத்து மான இது அசாத்தியமாம்.

காந்தமாங் காசமொடு யிருமலாகி
கனக்கவே வெதும்பலாய்க் கருக்கிவற்றி
மாந்தமாய் மேனியெங்கு மெரிவுண்டாகி
வரண்டுவாய் மேனியெங்கு மிகவெளுத்து
ஊந்தமாய் ஒக்காள மிகவுண்டாகி
உயரமாய் கிறுகிறுத்து கீழேதள்ளும்
சாந்தமாய்க் குரல்கம்மிப் பேசொட்டாது
தனிநித்திய சிலேத்துமத்தின் தாட்டிகந்தானே. (914)

காசமுடன், இருமலும் வெதும்பலுடன் கருக்கிவற்றி, உடல்எங்கும் எரிவு உண்டாகி, உடல் வெளுத்து ஒக்காளம் அதிகமாக உண்டாகி, கிறுகிறுத்து கீழே தள்ளும், குரல்கம்மி பேசமுடியாது, இது நித்திய சிலேத்துமத்தின் குணங்களாகும்.

தன்வந்திரி பகவான்

தாட்டியாய் சிலேட்டுமந்தா னிருபத்தொன்றும்
    தயாநிதியாம் சிவன்தானும் தாய்க்குச்சொன்னார்
நாட்டியாந் தாய்தானும் நந்திக்குச் சொல்ல
    நந்திதான் தன்வந்திரிக் குபதேசிக்க
சேட்டியாய்த் தன்வந்திரி சித்தருக்கு
    திறமாக வுபதேசம் பண்ணசித்திர்
யூட்டியா யூகிமுனிக்குபதேசிக்க
    யூகிமுனி யுலகத்தோர்க் குறைத்திட்டாரே. (915)

இவ்வாறு இருபத்தொரு சிலேத்துமத்தின் குணங்களை சிவனும் தாய்க்குச் சொல்ல தாயும் நந்திக்குச் சொல்ல நந்தீசரும் தன்வந்திரியாகிய எனக்குச்சொல்ல, நான் சித்தருக்கு உபதேசிக்க, சித்தரும் யூகிமுனிவருக்கு உபதேசிக்க யூகிமுனிவரும் உலகத்தோருக்கு சொல்லிவிட்டார்.

பிரமியம் 21

உரைத்திட்டேன் மேகமென்ற பிரமியத்தை
    உத்தமனே மிருவத்து ஒன்றுந்தன்னை
தெரைத்திட்ட சிவன்தானும் தேவிக்குச்சொன்னார்
    தேவிதான் தன்வந்திரிக் குபதேசிக்க
கரைந்திட்ட தன்வந்திரி அசுவினிதேவர்க்கு
    சாற்றிடவே அசுவினியாந் தேவர்தாமும்
பரைத்திட்ட அகஸ்தியற் குபதேசிக்கப்
    பாங்காகப் புலத்தியற்கு அருள்செய்தாரே. (916)

மேகம் என்ற பிரமியம் இருபத்து ஒருவகையாகும், இவ்வகை மேகங்களைப் பற்றி சிவன், தேவிக்குச் சொல்ல, தேவியும் தன்வந்திரியாகிய எனக்குச் சொல்ல நானும் அசுவனி தேவருக்கு உபதேசிக்க அசுவனி தேவரும் அகஸ்தியருக்கு உபதேசிக்க, அகஸ்தியரும் புலஸ்தியருக்கு உபதேசித்தார்.

அருள்செய்வார் புலஸ்தியரும் யூகியென்றமுனிக்கு
    அதிகமாம் யூகியென்ற முனிவர்தாமும்
பொருள்செய்தார் பூலோகத்தி லுள்ளபேர்க்கு
    பொன்னான ஆயுரு வேதத்தைத்தானும்
தெருள்செய்தார் திரட்டியதோர் நாமுக்கிவர்தாமும்
    தேசிகனாய் தேசத்திலுள்ள பேர்களுக்கு
அருள்செய்து போகாமல் சாஸ்திரத்தின்படியே
    மார்க்கமாம் பிரமியத்தை வழுத்தக்கேளே. (917)

புலஸ்தியரும் யூகிமுனிக்கு உபதேசிக்க, யூகிமுனியும் உலகத்தில் உள்ளவர்க்கு உபதேசித்தார், ஆயுர் வேதத்தை திரட்டி உலகத்திலுள்ளவர் கட்கு சாஸ்திரத்தின்படி அருள்செய்தார், பிரமியத்தைப் பற்றிக் கூறுகிறேன்.

வழுத்தவே பிரமியத்தின் பேரைக்கேளு
வாதத்தின் பிரமியமாம் பித்தபிரமியமாம்
திழுத்தவே சிலேத்துமத்தின் பிரமியந்தான்
சீரான வாதபித்தப் பிரமியமாகும்
நழுத்தவே பித்தசிலேத்துமப் பிரமியந்தான்
நற்றொந்த பிரமியந்தான் கட்டிப்பிரமியம்
தழுத்தவே சலப்பிரமியந் தந்திப்பிரமியந்
தானென்ற தன்வந்திரி யறைந்தவாரே. (918)

பிரமியத்தின் பேரைக் கூறுகிறேன், வாதப் பிரமியம், பித்தபிரமியம், சிலேத்துமபிரமியம், வாதபித்த பிரமியம், பித்த சிலேத்தும பிரமியம் தொந்த பிரமியம், கட்டிப்பிரமியம், சலப்பிரமியம் தந்திப்பிரமியம், மற்றும்.

தானென்ற சீப்பிரமியம் ஒழுக்குப்பிரமியந்
தனியதிற் பிரமியமாங் கிரிச்சிப்பிரமியங்
கானென்ற கறப்பானும் பிரமியத்தோடு
கல்விளையும் பிரமியமாந் துரந்துபிரமியம்
நேனென்ற நிட்டைப் பிரமியம் குஷ்டப்பிரமியம்
நேரான மதுப்பிரமியம் விறணப்பிரமியம்
யேனென்ற பிரமியந்தா னிருபத்தொன்று
மிதனுடைய உற்பத்தி யியம்பக்கேளே. (919)

சீழ்பிரமியம், ஒழுக்குப் பிரமியம், தனிப்பிரமியம், கிரிச்சிப் பிரமியம், கறப்பான் பிரமியம், கல்விளையும்பிரமியம், துரந்து பிரமியம், நிட்டைப்பிரமியம், குஷ்டப்பிரமியம், மதுப்பிரமியம், விரணப்பிரமியம், இவைகள் இருபத்தொருவகை பிரமியமாகும், இவற்றின் உற்பத்தியைக் கூறுகிறேன்.

இயம்பிடவே யெளியோரை யிகட்சிசொல்லல்
ஏத்தமாம் பெரியோரை ஏவல்கொள்ளல்
பொயம்பவே பெண்தனையே சோரஞ்செய்தல்
பொருள்தனையே அபகரித்தல் பெருமைசொல்லல்
நயம்பெறவே ஆற்பரித்து பற்கடித்தல்
நலமான சுரோணிதப் பிரமியமாகும்
பயம்பெறவே பயந்துவந்த பேரைக்காட்டில்
பசித்தபேர் பிரமியத்திற் படும்பாடாமே. (920)

எளியோரை இகழ்ச்சியாக சொல்லல், பெரியோரை ஏவல் கொள்ளல், பெண்ணை சோரம் செய்தல், பொருளை அபகரித்தல், தற்பெருமை சொல்லல், பல்கடித்தல், இது சுரோணித பிரமியமாகும், பிரமியத்தால் மிகு தொல்லைகள் உண்டாகும்.

பாடகப் பெண்போக மிகவிரும்பிப்
பயின்றிட்டுப் பட்டியே மிகவிருத்தல்
தாடாகத் தாள்பதத்தில் சூடுதாங்கி
தலைச்சதுரமாய் பலவாம் விசேஷஞ்செப்பில்
நீடான துன்பத்தை மிகவேகாட்டும்
நேரான சேட்டுமத்தை யறுத்துப்போடும்
தாடான மனக்கிலே சங்காரமானத்தைத்
தாளோடு மிருக்கியது காணுங்காணே. (921)

பெண்போகம் மினவிருப்பம் கொண்டு மிகுஉறவு கொள்வதாலும், உஷ்ணம் அதிகமாகி அதிக துன்பம் கொடுக்கும், சேத்துமத்தை அறுக்கும்.

காணவே முதுகெலும்புக் கோர்வைபத்தி
கனமாக நாசியிலுங் கதித்துலதி
ஆணவே அடிகுய்யம் மூலாதாரம்
அழன்றுமிக நோயாகிப் பற்றிக்கொள்ளும்
நாணவே நாடியொடு சுலும்பில் சூழ்ந்து
நலமான சுரோணிதத்தில் மிகக்கலந்து
ஆணவே அடிவயிறு சித்துநோவாம்
ஆகாது பிரமியத்தி னாண்மைதாமே. (922)

முதுகெலும்பு கோர்வையைப் பற்றி நாசியில் கதித்துலதி அடிக்குய்யம், மூலாதாரம் அழன்று மிக நோயாகிப் பற்றிக்கொள்ளும், சுழும்பில் சூழ்ந்து சேர்ந்து சுரோணிதத்தில் கலந்து அடிவயிற்றில் நோயுமுண்டாம் இதுவும் பிரமியத்தின் குணமாகும்.

ஆண்மையால் கோலம்போல் நீரிறங்கும்
ஆக்கியே தடிதண்டில் மிகவலிக்கும்
வேண்மையால் கட்டியாய்ச் சீதான்வீழும்
விரையிலே கனத்துமே நோக்காடுண்டாம்
பாண்மையாய் யடிவயிறு பாகந்தன்னில்
பரபரத்து நோவாலே பாரமுண்டாம்
வாண்மையால் வயிறுதனிலிசிவுண்டாகும்
வற்றுமே சரீரந்தான் வாதபித்தமாமே. (923)

கோலம்போல் நீர்இறங்கும், அடித்தண்டில் மிகவலிஉண்டாம், சீழ்கட்டியாக விழும், விரை கனத்து வலி உண்டாகும், அடிவயிறு பாகத்தில் பதைபதைத்து பாரமுண்டாகும், வயிற்றில் இசிவு உண்டாகும், உடல்வற்றி வாதபித்தம் உண்டாம்.

சரீரந்தான் மிகவற்றித் தியக்கமுண்டால்
சந்தோடு கைகால்தான் நோவுண்டாகும்
சரீரந்தான் கறுத்துமே எரிவுண்டாகும்
கனமுடனே குதங்குய்யங் கடுப்புங்காணும்
வரீரந்தான் மஞ்சள்போல் சரியாய்வீழும்
அருசியாய் கை காலோயும்
சரீரந்தான் லிங்கமது புளகிவிம்மும்
பேரான லிங்கபித்தப் பிரமியமாமே. (924)

உடல்வற்றி தியக்கம் ஏற்படும், கைகால் சந்துகளில் நோயுண்டாகும், கழுத்தில் எரிவு உண்டாகும், குய்யம் கடுப்பு உண்டாகும், நீர் மஞ்சள் போல் விழும், அருசி ஏற்பட்டு கை, கால் ஓயும், உடலும் லிங்கமும் புளகிவிம்மும், இது லிங்கபித்த பிரமியத்தின் குணமாகும்.

லிங்கத்தில் நோவுண்டாய்க் கடுப்புக்காணும்
நீரிறங்கிவ் வெள்ளையாய்ச் சலமும்வீழும்
துங்கத்தில் சுருக்கிட்டு நீரிறங்கும்
துரிசாக அடிக்கடிக்கு நீர்தான் வீழும்
பங்கமாய் தேகத்தை கெடுத்துக்கொல்லும்
பதைபதைத்து மேனியுடல் தளுப்புமாறும்
அங்கத்தி லனலுண்டா யழண்டுகாணும்
அசாத்திய சேத்துமபிரமிய மறிந்துகொள்ளே. (925)

லிங்கத்தில் நோயுண்டாகி கடுப்பு காணும், நீரிறங்கினால் வெள்ளையாய் நீர்விழும், சிறுநீர் குறையும், அடிக்கடி நீர் இறங்கும், உடலைக்கெடுத்து கொல்லும், பதை பதைத்து உடல் அசதி உண்டாகும், உஷ்ணமுடன் அழண்டு உடல் நோயுண்டாகும், இது அசாத்தியம், சேத்தும பிரமியத்தின் குணமாமிது.

அறியவே ஆக்கையெல்லாம் லலியுண்டாகி
அடிலிங்கத் தடியிலே சாக்கை வைத்தாப்போல்
மறியவே அடிக்கடிக்கு வருத்தமாகும்
மாப்போலே சிறநீரில் கரைந்து வீழும்
வெறியவே பவுத்திரத்தில் கட்டிகட்டும்
மேன்மையா மலமதுதா னிருக்கிக்கொள்ளும்
துரியவே சுருக்கென்று நீரிறங்கி
துடிக்குமே வாதபித்த பிரமியந்தானே. (926)

உடல் எல்லாம் வலியுண்டாகி லிங்கத்தின் அடியில் சாக்கை வைத்ததுபோல் அடிக்கடி வருத்தமுண்டாகும். சிறுநீரில்மாவுபோல் கரைந்து விழும், பவுத்திரத்தில் கட்டிகட்டும், சுருக் என்ற வலியுடன் நீர்இறங்கி தொல்லை உண்டாகும், இது வாதபித்த பிரமியத்தின் குணமாகும்.

பித்தமாய் வாயெல்லா மிகவேகைத்து
பிரமிய அடிவயிறு யிசுவுபாணும்
சத்தமாய் மஞ்சளித்து வெள்ளைவீழும்
சுருக்குத்தான் லிங்கத்தில் மிகுதியாகும்
பத்தமாய்க் கணுக்களில் நோவுண்டாகும்
பல்லுறக்க மிகுதியாம் பதிகொடாது
உத்தமாய் உடம்பெல்லாம் வுலர்த்திக்காணும்
பித்தசேத்தும பிரமியம் பேசுங்காலே. (927)

வாயெல்லாம் மிகவும் கசப்பாகி, அடிவயிற்றில் இசுவு காணும். மஞ்சனித்த வெள்ளைபோல் நீரில்விழும், லிங்கத்தில் சுருக்கென்று வலியுண்டாகும், கணுக்களில் நோயுண்டாகும், உறக்கம் மிகுதியாகும், உடம்பெல்லாம் உலர்ந்து காணும், பித்த சேத்தும பிரமியத்தின் குணமாமிது.

பேசுமென்ற சரீரத்தில் தினவுண்டாகி
புழுக்கள்தான் ஊர்தல்போல் புளகமாகும்
கூசுமென்ற லிங்கத்தில் கசிவுண்டாகி
குறியதுதான் பலவர்ன மாகக்காணும்
மாசுடனே நீரிறங்கி ரோகந்தானும்
மானிடரைக் கொல்லுமென வகுக்கலாகும்
தூசிதான் அடிதன்னில் தோய்ந்திருக்கும்
தொந்தமாம் பிரமியத்தின் சூட்சந்தானே. (928)

உடலில் தினவுண்டாகும், புழுக்கள் உருத்துவது போல் தோன்றும், லிங்கத்தில் கசிவுண்டாகும், குறிபலவண்ணமாக காணும், அழுக்கான நீர் இறங்கும், அடியில் தூசுபோல படிந்திருக்கும், முற்றினால் இறப்பு உண்டாகும், தொந்த பிரமியத்தின் குணமாமிது.

தானாகச் சடமெங்குங் கட்டியாகி
தரிக்காமல் வலியுண்டாய் தளர்ச்சிகேடாய்த்
தேனாக லிங்கத்தில் தினவுண்டாகிச்
சொரியாகி விரைரெண்டில் சிறுநீர்பாயும்
ஊனாகக் கட்டியாய் லிங்கந்தன்னில்
உறுதியாய் பருக்கைபோல் சீழாய்வீழும்
மானாக உடம்பதுதான் வத்திக்காணும்
மருவுகட்டிப் பிரமியத்தின் வண்மைதானே. (929)

உடல் எங்கும் கட்டியுண்டாகி வலிஏற்பட்டு தளர்ச்சி உண்டாகும், லிங்கத்தில் தினவுண்டாகும், விரைகளிரண்டில் சொறி உண்டாகி சிறுநீர் பாயும், லிங்கத்தில் பருக்களைப்போல் கட்டி உண்டாகி சீழ்விழும், உடல் வற்றிவிடும், இது கட்டிப்பிரமியத்தின் குணமாகும்.

வண்மையா யுடம்பெல்லாம் வலியுண்டாகும்
　　வாய்கையது வாந்தியொடு மயக்கமாகும்
தன்மையாய் லிங்கத்தில் சலங்கசித்தல்
　　தாக்கான அடிவயிற்றில் பிடுங்கலுண்டாம்
வெண்மையாய் மலந்தனிலே சீதங்காணல்
　　வெளுப்பாக நீரிறங்கிக் குத்துண்டாதல்
அண்மையா யடிவயிறு அரையாப்பு கட்டியுண்டாய்
　　அழுந்துமே சலப்பிரமிய ஆண்மைதானே. (930)

உடம்பெல்லாம் வலியுண்டாகி, வாந்தியுடன் மயக்கமாகி லிங்கத்தில் சலம்கசிந்து அடிவயிற்றில் பிடுங்கல் வலி உண்டாகும். மலத்தில் சீதமுண்டாகும், வெளுப்பாகவும் குத்தல் வலியுடன் நீர் இறங்கும், அடிவயிற்றில் அரையாப்பு கட்டியுண்டாகும். இது சலப்பிரமியத்தின் குணமாகும்.

ஆண்மையா யடிவயிறு புண்போல்நொந்து
　　அடித்தண்டு விருவித்து உச்சங்காணும்
தாண்மையாய் லிங்கத்துள் கிண்ணாரத்தின்
　　தந்திபோல் நீருருக்கு முன்னேவீழும்
வெண்மையாய் வெளுப்புதான் சீலைதன்னில்
　　விந்தையாய் அடிக்கடிக்கு நனைவுகாணும்
நண்மையாய் கால்கையும் எரிச்சலாகும்
　　நாதந்து பிரமியத்தின் நாட்டந்தானே. (931)

அடிவயிறு புண்போல வலி உண்டாகி அடித்தண்டு விருவிருக்கும் நீர்கழிககும்போது நீருக்குமுன்னே தந்திபோல் வெளுப்பாய் விழும், துணி அடிக்கடி நனையும், கால்கை எரிச்சலுண்டாகும், தந்தபிரமியத்தின் குணமாகும்.

தந்திரமாய்த் தியங்கியே தலைதிருப்புஞ்
　　சரீரமெங்கும் பஞ்சுபோல் தளர்ச்சிகேடாம்
மந்திரமாய் வருந்தியே நீரிறங்கும்
　　மாசற்ற முயல்நாற்றம் போலேவீழும்
சுந்தரமா யிந்தமுகந் தூசியாகுஞ்
　　சுருக்குத் தான் சிறுநீரும் சிகரமாய் வீழும்
அந்திரமாய் பிச்சுபோ லலைச்சலாகும்
　　அடிக்கடிக்கி நீரிறங்கும் ரெத்தப்பிரமியமாமே. (932)

தலைதிரும்பி உடலெங்கும் பஞ்சுபோல் தளர்ச்சியாகி வருத்தமாய் நீர் இறங்கும், முயலின் நாற்றம் போலிறங்கும் தூசுண்டாகும், குறைந்த அளவில் சிகப்பாக நீர்விழும், அடிக்கடி நீர் இறங்கும் இது ரத்த பிரமியத்தின் குணமாகும்.

கடுத்துமே சீப்போலே வெள்ளைகாணும்
கட்டுமே சுரையாப்பில் பவுத்திரத்தில்
நடுத்துமே நாபியெல்லாம் ரெணமுமாகும்
நற்சந்தம் கணுக்காலில் குடைச்சலாகும்
அடுத்துமே அடிக்கடிக்கு நீரிறங்கும்
அதிகமாய் குளிரோடு சுரமுமுண்டாம்
மடுத்துமே மயக்கமாய் வருத்தமாகும்
வடிப்பெல்லாம் நொந்திடிஞ்சீழ்ப் பிரமியமாமே. (933)

சீழ்ப்போல் வெள்ளை காணும் அரையாப்பு பவுத்திரம் நாபி, இவைகளில் ரணமுண்டாகும். கணுக்கால், மற்றும் சந்துகள் இவைகளில் குடைச்சலுண்டாகும், அடிக்கடி நீர் இறங்கும், குளிருடன் சுரம் இவைகளுண்டாகும், மயக்கமாய் வருத்தமுண்டாகும் அடியில் நொந்துவலியுண்டாம், சீழ்பிரமிய குணமிது.

சீயாகி தண்ணியாய் ரெத்தம்போலச்
சிறுகியே ஒழுகுமே யென்னேரந்தான்
காயாகிக் கட்டியாய் முளையுண்டாகிக்
கனமான ரணமாகி காயமெல்லாம்
ஆயாகி அங்கமெல்லாங் குடைச்சலாகி
அழலாகி அக்கினியாய் அனலாய்வேண்டும்
நோயாகிப் பாய்க்குள்ளே கிடையுமாகி
நுணுக்கமாய் ஒழுகுமென்ற பிரமியந்தானே. (934)

சீழ்நீர் ரத்தம்போல எப்பொழுதும் ஒழுகும், காயாகி கட்டியாகி முளைப்பு உண்டாகும், உடலெங்கும் குடைச்சலுண்டாகும் உஷ்ணம் அதிகமுண்டாகும், பாயில் படுக்கிடையாகும் இது ஒழுகுபிரமியத்தின் குணமாகும்.

தானுமே மஞ்சள்போல் வெள்ளைகாணும்
தணலாக வெதும்பியே நீரிறங்கும்
காணுமே கதிர்தனையே யேத்தினாப்போல்
கடுப்பாக விருவிருக்கும் கடுஷ்ணமாகும்
வாணுமே மதியம்போல் தானிருந்த
மதிமுகங்கள் மஞ்சள்போல் தானிருக்கும்
தேணுமே கசப்பாகும் நாவுதானும்
திடுக்குண்டாம் அரித்திரமாம் பிரமியந்தானே. (935)

மஞ்சள் போல் வெள்ளைகாணும், உஷ்ணமாக நீர் இறங்கும் கதிரை உள்ளுக்கு ஏற்றினாற்போல் கடுமையான உஷ்ணமாகும் முகம் நிலவைப்போல் மஞ்சளாக இருக்கும். நாக்கு கசக்கும், திடுக்கென்று விழவைக்கும், அரித்திரபிரமியத்தின் குணமாமிது.

அரித்திரம்போல் நீரிறங்கும் ஆண்மைகுன்றும்
அருகியே மிகக்கடுத்து நீர்தான்வீழும்
நெரித்திறம்போல் நீர்தனையே கட்டிக்கொள்ளும்
நீரசியம்போல் சரீரத்து லுறக்கமில்லை
தரித்திரம்போல் அன்னத்தைப் பொசிக்கொட்டாது!
சஞ்சலமாய் மனமதுதான் தரிக்கொடாது
உலத்திரம்போல் உடம்பெல்லாம் உளைச்சலுண்டாம்
ஓடுமூத்திரங்கிரிச்சிப் பிமியந்தானே. (936)

அரித்திரம்போல் நீர் இறங்கும் ஆண்மைகுன்றும், மிகவும் கடுத்து நீர்விழும், நீர்கட்டும், உடலுக்கு உறக்கம் இல்லை, அன்னம் சாப்பிட முடியாது. மனச்சஞ்சலம் உண்டாகும், உடலெல்லாம் உளைச்சலுண்டாகி சிறுநீர் இறங்கும், இது மூத்திரங்கிரிச்சிப் பிரமியமாகும்.

உளைஞ்சுமே வயிறுதான் சீதங்காணும்
உஷ்ணமாய் மூத்திரந்தான் உருங்கிவீழும்
அளைஞ்சுமே அங்கமெல்லாஞ் சொரியுண்டாகும்
அனலாக வெதும்பலாய்க் கைகாலோயும்
புளைஞ்சுமே லிங்கத்தில் புண்போல்குத்தி
பொடிப்பொடியாய் சுண்ணாம்பு கற்போலேவீழும்
களைஞ்சுமே நீரோடு மலமுஞ்சிக்குங்
கசியுமே காணாமல் பிரமியந்தானே. (937)

வயிறு சீதம்காணும் சிறுநீர் அதிஉஷ்ணமாக இருக்கும். உடலெங்கும் சொரியுண்டாகும், உஷ்ணமாய் கை, கால் ஒய்ந்து போகும், லிங்கத்தில் புண்போல குத்தலுண்டாகும், பொடிப் பொடியாக சுண்ணாம்புக் கல்போல் விழும், நீரும் மலமும் கட்டும், இது ஒருவகை பிரமியம்.

கசியுமே லிங்கத்தில் கள்ளுபோலக்
கற்றாழை நாற்றந்தான் உடம்பில்வீசும்
தசியுமே சாத்தரைத்துப் படுத்தகற்போல்
தங்கியே நீர்சிக்கி வயிறுவிம்மும்
விசியுமே விருவிருப்பாய் வயிறெல்லாந்தான்
மீனா நாபினோ டுப்புசமாகும்
பசியுமே யில்லாமற் பாரமாகும்
பளிங்குநிற மாகுங்கள் பிரமியந்தானே. (938)

லிங்கத்தில் கல்போல் கசிந்து, உடம்பில் கற்றாழை நாற்றம் வீசும், நீர்கட்டுண்டாகி வயிறுவிம்மும், வயிறெல்லாம் விருவிருககும், உப்புசமாகும், பசியில்லாமல் பாரமாகும், பளிங்குபோல் நிறம்காணும் இது ஒருவகை பிரமியமாகும்.

கல்லான சிலந்தியுட நூலைப்போல
கனமாக லிங்கத்தில் வலுத்துவீழும்
வல்லான வெண்மையொடு உதிரங்காணும்
வலியெடுக்கும் அடித்தண்டில் விம்மும்போது
சல்லான கலசந்தான் அடியிற்றங்கும்
சமர்த்தான விலாப்பக்கம் தனிலேகுத்தும்
துல்லான மூத்திரந்தான் துளியாய் வீழும்
தாது பிரமியத்தினுட சுருக்குத்தானே. (939)

சிலந்தியின் நூல்போல லிங்கத்திலிருந்து விழும், வெண்மையுடன், ரத்தம்காணும், வலி எடுத்து அடித்தண்டில் விம்மல் உண்டாகும், கலசத்தின் அடியில்தங்கும், விலாப்பக்கத்தில் குத்தலுண்டாகும், சிறுநீர் துளிதுளியாக வரும், இது தாது பிரமியத்தின் குணமாகும்.

சுருக்காகக் கள்ளுப்போல் நீரிறங்கும்
சூட்சமாய் வெள்ளையொடு சீயுங்காணும்
வருக்காக லிங்க உச்ச மாகும்போது
வருத்தமா யடித்தண்டுக் குத்தோடொக்க
விருத்தாக விருவிருப்பாம் வலியுண்டாகும்
விசையான நரம்பெல்லா௺் சுருக்கமாகும்
குறுக்காக அடிவயிறு தனிலேகுத்தும்
குளிருமே நிட்சயப் பிரமியத்தின் கூறே. (940)

கள்ளுப்போல் நீர் இறங்கும், வெள்ளையுடன் சீழும்காணும், சிறுநீர் கழிக்கும் போது அடித்தண்டில் வருத்தமும் குத்தலுமுண்டாகும் விருவிருப்பான வலியுண்டாகும், நரம்பெல்லாம் சுருக்கமாகும், அடி வயிற்றில் குத்தலுண்டாம், குளிருமுண்டாம், நிட்சயபிரமியத்தின் குணமாகும்.

கூறாக அடிநரம்புக்குத் தங்குபாய்ந்தான்
குத்தியே அடிக்கடிக்கு வலியுண்டாகும்
வாறாக வடிவெல்லா மிக அழற்றி
மயக்கமாய் நாவோடு கைத்தலாகும்
பாராக யிடங்காலில் திமிருண்டாகும்
பருத்துமே லிங்கத்தில் வெள்ளைவீழும்
தூராகத் துண்மாங்கிஷஞ் சுருண்டுகாணும்
தூசி:மிகப் படியும்வலிப் பிரமியமாமே. (941)

அடிநரம்பில் குத்தலுடன் அடிக்கடி வலியுமுண்டாம், வடிவ மெல்லாம் மிக அழற்சி உண்டாகும், மயக்க முண்டாகும், காலில் திமிருண்டாகும், லிங்கத்தில் வெள்ளை விழும், துர்மாங்கிஷம் சுருண்டுகாணும், தூசு படியும், இது வலிப்பிரமியமாகும்.

வலியாக லிங்கமெல்லாம் வருத்தமாகி
வண்டலாய்த் தேன்போல நீரிறங்கும்
எலியாகி யெருமலடுக்கும் சிறுநீர்தன்னில்
இலர்ச்சிபோல் உள்ளுக்கு விரணமாகும்
நலியாகி நாற்றமாம் உடம்பெங்குந்தான்
நாவிலே உணர்ச்சியில்லா உரிசைபோகும்
மலியாகி நாவரண்டு மயக்கமாகும்
வறுத்தமாம் பித்தபிரமிய மார்க்கமாமே. (942)

லிங்கமெல்லாம் வலியுடன் வருத்தமுண்டாகி வண்டலுடன் தேன்போல நீர்இறங்கும், சிறுநீர்கழிக்கும்போது வலி உண்டாகும், உள்ளில் புண்ணுண்டாகும், உடலெல்லாம் நாற்றமுண்டாகும், நாவில் உணர்ச்சி இருக்காது, நாவரண்டு மயக்கமாகும். இது பித்தபிரமியத்தின் குணமாகும்.

மார்க்கமாய் உடம்பெங்கும் விரணமாகி
மகாவருத்த மாகியே நோக்காடாகி
சேர்க்கமாய் லிங்கமது பெருத்துவீங்கி
சீயோடு ரெத்தந்தான் மிகவேகாணும்
கார்க்கமாய் கறட்டோடு கணுக்களெல்லாம்
கட்டியே நோவாகிக் கடுப்புமுண்டாம்
வோர்க்கமாய் மெனியெல்லாம் வெதும்பலாகும்
விருவிருக்கும் விரணமாம் பிரமியந்தான்பாரே. (943)

உடல் எல்லாம் புண்ணாகி வருத்தமுண்டாகி வலியும் ஏற்படும், லிங்கம் பெருத்து வீங்கி சீழுடன் இரத்தம் காணும், கறட்டுடன் கணுக்களெல்லாம் வலியும் கடுப்புமுண்டாகும் உடலெல்லாம் லேசான உஷ்ணமாகும், விரண பிரமியமித்தின் குணங்கள் இவை.

பாரான பிரமியந்தா னிருபத்தொன்றும்
பரமசிவன் தாய்தனக்கு அருளிச்செய்ய
பாறான தாய்தானும் நந்திக்குச்சொல்ல
பராபரமாநந்தி தன்வந்திரிக்குச்சொல்ல
ஆறான தன்வந்திரி அசுவினிதேவருக்கு
அருள்செய்ய அசுவனியும் அகத்தியருக்குச் சொல்ல
கோறான அகத்தியரும் புலத்தியற்குச்சொல்ல
குருவான புலத்தியரும் குறித்திடாரே. (944)

பிரமியவகை இருபத்து ஒன்றும் அதன் குணங்களையும் பரமசிவன் தாய்க்கு உபதேசிக்க, தாயும் நந்தீசருக்குச் சொல்ல, நந்தீசரும் தன்வந்திரியாகிய எனக்குச் சொல்ல நானும் அசுவனி தேவருக்கு உபதேசிக்க அசுவனிதேவரும் அகத்தியருக்கு உபதேசிக்க அகத்தியரும் புலத்தியருக்கு சொல்ல, புலத்தியரும் தோரணமா முனிக்கு கூறிவிட்டார்.

குறித்திட்டார் தோரண மாமுனிவருக்கு
 கூரான தோரணமா முனிவர்தானும்
உரைத்திட்ட யூகியென்ற முனிக்குச் சொன்னார்
 யூகியென்ற முனிவர்தானும் உகந்தான்கூர்ந்து
மறைத்திட்ட ஆயுருவே தத்தினுள்ளே
 மறைப்பான பொருளெல்லாம் ஆராய்ந்துபார்த்து
தெறித்திட்ட திரட்டையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து
 சிவன் சொன்ன படிசொன்னார் தெளிவாய்த்தானே. (945)

தோரணமாமுனியும் யூகிமுனிக்குச்சொல்ல யூகிமுனிவரும் ஆயுர் வேதத்தில் மறைப்பையெல்லாம் ஆராய்ந்து பார்த்து திரட்டையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து சிவன் சொன்னபடி தெளிவாக சொல்லிவிட்டார்.

தெளிவாக தேவிதான் சிவனைநோக்கி
 தெண்டனிட்டு ஆயுரு வேதத்தைமுன்னே
அளிவாக அனுக்கிரகம் பண்ணியல்லோ
 ஆத்தும கோடிகளிடத்தில் கிருபைவைத்து
நளிவாக தேவருக்குத் தேவரான
 நடேசரே சகலபே ரிடத்தில்தானும்
எளிவாக யிருதய கமலத்தில்தங்கி
 யிருந்தவரே சலத்தை நீ சொல்லுமென்றாள். (946)

தேவியும் சிவனை நோக்கி ஆயுர்வேதத்தை அனுக்கிரகம் செய்து ஆத்ம கோடிகளிடத்தில் கிருபைவைத்து தேவருக்குத்தேவரான நடேசரே சகலபேரிடமும் இருதய கமலத்தில் தங்கி இருந்தவரே சலத்தை மேக நீர்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்க.

சொல்லுமென்ற கேழ்க்கவுந்தான் சிவன்தானப்போ
 தேவியைத்தான் முகம்பார்த்து வாராய்தேவி
அல்லுமென்ற மேகமது யிரண்டுபத்து
 ஆதிதுல்லா மாயிருக்கும் லோகத்துள்ளே
உல்லுமென்ற உன்னுடைய சினேகந்தன்னால்
 உரைக்கரிது உரைக்கிறேன் உத்துக்கேளும்
மல்லுமென்ற மகாதேவி பராக்கில்லாமல்
 மகிழ்ந்து நீ கேளுமென்று வசனித்தாரே. (947)

சிவனும் தேவியை முகம்பார்த்து வாராய் தேவி, மேகம் இருபத் தொன்று உலகத்துள்ளே உன்சினேகிதம் தன்னால் சொல்ல வரிதான இவற்றைப்பற்றி கூறுகிறேன், உற்றுக்கேட்பாயாக. மகிழ்ந்து நீ கேள், என்று சிவன் கூறினார்.

மேகம் 20

வசனித்த மேகந்தான் ரெண்டுபத்து
வாதத்தில் பிறந்தசலம் நாலேயாகும்
பிசனித்த பித்தத்தில் உற்பவித்த
பேரான சலந்தானும் ஆறாகும்
வதசனித்த சிலேத்துமத்தில் உற்பவித்த
சீரான சலந்தானும் பத்தேயாகும்
இசனித்த யிதினுடைய குணாகுணங்கள்
எழிலான உற்பத்தி யியம்பக்கேளே. (948)

மேகம் வாதத்தில் பிறந்தது நான்கும், பித்தத்தில் பிறந்தது ஆறும், சிலேத்துமத்தில் பிறந்தது பத்தும் ஆக இருபதுமாகும், இதன் உற்பத்தியையும் குணங்களையும் கூறுகிறேன் கேட்பாயாக.

இயம்பவே ஆறுகுளம் பின்னஞ்செய்தல்
ஏத்தமாம் பிராமண சங்கமம்பண்ணல்
பயம்பவே பாலர்க்கு ஒளிச்சுத்தின்னல்
பழமைசலம் போறவழி தடுத்திட்டார்க்கும்
அயம்பவே ஆலயத்தில் சிலம்விட்டோர்க்கும்
ஆதியாம் வேதத்தை தூஷித்தோர்க்கும்
துயம்பவே சூரியனை வணங்காதவர்க்கும்
சுருக்காக மேகம்வந் துற்பவிக்குந்தானே. (949)

ஆறுகுளம் இவைகளை பின்னப்படுத்தல், பிராமணப் பெண்ணைப் புணர்தல், குழந்தைகட்கு தெரியாமல் ஒளித்துவைத்துத்தின்னல், பழையதண்ணீர் போகும் வழியை தடுத்து நிருத்தல், ஆலயத்தில் சிறுநீர்கழித்தல், வேதத்தை தூஷித்தல், சூரியனை வணங்காதிருத்தல் இக்குணங்களை உடையோருக்கு மேகநோய் உண்டாகும்.

உற்பவிக்கும் பால்நெய்யா லிறைச்சிகள்ளால்
உரிசையாய் மீன்றனால் அருவிருக்குத்தம்
மறப்பவிரும் பதார்த்தத்தால் மதுமாமிஷத்தால்
மந்தங்கள் தனிபொசித்தல் வேகாப்பண்டம்
குறப்பவிக்கும் குளிந்த அன்ன மங்கைகோடி
குறித்தநித்திரை தவிர்த்தல் அக்கினிமந்தம்
மசர்ப்பவிக்கும் சரீரந்தான் மிகப்பருக்கல்
சஞ்சலந்தான் பயப்படுதல் தரிக்கும்நோயே. (950)

பால், நெய், இறைச்சி, கள், மீன், பதார்த்தம், மது, வேகாப்பண்டம், குளிர்ந்த சாதம், இவைகளை உட்கொள்வதாலும், குறித்தநேரம் தூங்காமை, அக்கினிமாந்தம், உடல்பருத்தல், சஞ்சலம், பயப்படுதல் இதனாலும் நோய் உண்டாகும்.

தரித்திட்ட வாதத்தின் சலந்தானாலு
தனியான நாலுக்கும் பேரேதென்னில்
அரித்திட்ட ஆக்கைய கெந்திமேகமென்றும்
அதன்பிறகு சுத்தமா மேகமென்றும்
பிறித்திட்ட பிரமியமா மேகமென்றும்
பேரான மாஞ்சிரவி மேகமென்றும்
குறித்திட்ட யிதுவாத சலந்தானாலு
குணத்தினுட பலமெல்லாம் குறிப்பாய்க்கேளே. (951)

வாதசலம் நான்கிற்கு பெயர் கூறுகிறேன், ஆச்சிய கெந்திமேகம், சுத்தமாமேகம், பிரமியமேகம், மாஞ்சிரவிமேகம், இவைகள் வாதசலம் நான்காகும், இதன் குணங்களை கூறுகிறேன்.

குறிப்பாக ஆக்கையசல மிறங்கும்போது
குணமான நெய்போலத் தானிறங்கும்
நெருப்பான சீலைதான் தோய்த்துகொளுத்தில்
நேரான விளக்குபோ லெரியும்பாரு
தெரிப்பாகத் தினமொன்று குறுணிதானும்
சீக்கிரமா யிறங்கிவிடும் தேகம்வாடும்
எரிப்பாக யிம்மேக ம்கண்டபேர்கள்
ஏழுநாளி லெமபுரத்துக் கெய்துவாரே. (952)

ஆக்கையசலம் இறங்கும்போது, நெய்போலிரங்கும், துணியை அதில் தோய்த்துக் கொளுத்த விளக்குபோல் எரியும், ஒருநாளைக்கு குறுணி அளவு வெளியேறி உடல்வாடும் இம்மேகநோய் கண்டவர்கட்கு ஏழுநாளில் இறப்பு உண்டாகும்.

எய்துவார் சுத்தமா மேகந்தானும்
இறங்குமே கோசலம்போல் வண்ணமாக
நய்துவார் நாதமு மப்படியேயாகும்
நானாழி தானிறங்கு மொருவேளைக்கு
கெய்துவார் காய்ச்சினால் விளக்குத்தானும்
கடுத்துலக்க மாயெரியும் களைமெத்தாகும்
பய்துவார் பதினஞ்சு நாளிற்கொல்லும்
பாலன்போ லிருந்தமுக மகிழ்முகமுமாமே. (953)

சுத்தமா மேகத்தின் குணத்தைக் கூறுகிறேன், பசு மூத்திரம் போல் நிறமுடைய நீர்இறங்கும், நாதமும் அவ்வாறேயாகும், ஒருவேளைக்கு நான்கு நாழி அளவு நீர் இறங்கும், காய்ச்சினால் விளக்குபோல் எரியும், இந்நோய் கண்டவர்கட்கு பதினைந்து நாளில் இறப்பு உண்டாகும்.

குளமாகப் பிரமியந்தா னிறங்கும்போது
கொழுப்பான மாங்கிஷனாற் றம்பிறக்கும்
பழமாக வேளைக்கி நாழிதானும்
பருத்துமே யிறக்குமே அடிக்கடிக்கு
அழமாக அந்தநீர் காச்சினாக்கால்
அதின்வாடை தேன்போலத் தானிருக்கும்
இளமாக யிப்படிதான் கண்டமேகம்
எமபுரத்துக் காறுமாதத் தேருந்தானே. (954)

பிரமியம் இறங்கும்போது கொழுப்பான மாங்கிஷ நாற்றம் பிறக்கும், ஒருவேளைக்கு நாழி அளவாக அடிக்கடி நீர் இறங்கும், நீரைக்காய்ச்சினால் தேன்போல் வாடை வரும், இவ்வாறு இம்மேகம் கண்டவர் ஆறுமாதத்தில் உயிர் இழப்பார்.

ஏகுமே சிறுநீர் யிறங்கும்போது
யிளஆட்டின் கொழுப்புப்போல் தானிறங்கும்
ஆகுமே காச்சினால் ஆட்டின்நெய்போல்
அடவாக வேளைக்குக் குறுணிகாணும்
காகுமே கருப்பஞ்சார் போலேநாறும்
கனத்துதனை மூன்றுநாள் யெட்டுநாளில்
சாகுமே அஞ்சாமல் சதையிலேதானும்
சதுர்விதமாம் வாதசலந் தானுமாச்சே. (955)

(மாஞ்சிரவி மேகம் கண்டு) சிறுநீர் இறங்கும்போது ஆட்டின் கொழுப்பை போலிரங்கம், நீரைக்காய்ச்ச ஆட்டின்நெய்போலாகும், ஒருவேளைக்கு குறுணி அளவு நீர் இறங்கும், கருப்புசாறு போல் நாற்றமுண்டாம், மூன்று நாள், எட்டுநாளில் இறப்பு உண்டாகும், ஆக நான்குவித வாத சலம்பற்றியும் கூறப்பட்டது.

வாதகுணம் நாலுக்கும் சமுதாயகுணம் - 2

ஆச்சென்ற நாலுக்கும் குணத்தைக்கேளு
அழகான கைகால்கண் உடலமுத்தம்
நாச்சென்ற நாவாற்றாம் பல்லும்நாக்கும்
நடுத்தொண்டை கருத்தாக்கா லுதடெல்லாந்தான்
பேச்சென்ற பிலச்சியமாம் மகனல்நோக்கும்
பேராக அன்னந்தண்ணீர்தான் மிகவேவாங்கும்
து:ச்சென்ற சரீரந்தான் கத்திவெட்டுத்
தான்போலக் கடுத்துமெத் தழலுண்டாமே. (956)

வாதகுணம் நான்கிற்கும் குணத்தைக் கூறுகிறேன், கை, கால், கண், உடல் இவைகள் அழுத்தமும், பல், நாக்கு, நடுத்தொண்டை, கால், உதடு, இவைகளில்

பாதிப்புண்டாகும், சாப்பாடு, தண்ணீர் இவைகள் அதிகம் கொள்ளும் உடலில் கத்திவெட்டுபோல கடுப்புண்டாகும்.

தழலாக வெதும்பியே மயக்கமாகும்
சஞ்சலமாய் திடைசூடா தேபிரட்டும்
அழலாக அடிக்கடிக்கு வாயுத்தானும்
ஆகாத நாற்றமாய்ப் பரியுமெத்த
குழலாக வடிக்கடிதான் குடிலமாகக்
குணபேத மாய்நடக்கும் வெக்கைநாறும்
வழலாக வாசமே கந்தனக்கு
வகுத்தமுறை பாடுதற்கு நாலுமாச்சே. (957)

வெதுப்பலும் மயக்கமும் உண்டாகும், சஞ்சலமும், பிறட்டும் உண்டாகும், அடிக்கடி கெட்ட நாற்றமுடைய வாய்வு வெளிப்படும், அடிக்கடி குணபேதமுண்டாகும், வெக்கையுமுண்டாம், ஆக வாதசலம் நான்குமாகும்.

முறையான பித்தசலம் ஆறுமாகும்
முதிர்ந்த அப்பியமென்றும் இபயமென்றும்
தலையான சாம்பிரணமது மீயமென்றும்
சாதிகமே ஆறுவிதந் தன்னோடாகும்
மறையான யிந்தாறு மேகந்தன்னை
மகாதேவர் சொல்லிடவே தேவிகேட்க
துரையான குணாகுணத்தை விரித்துச்சொல்ல
சுத்தமாய்ப் பிரமியத்தின் சுருவங்கேளே. (958)

பித்தசலம் ஆறுவிதமாகும், முதிர்ந்த அப்பியமென்றும், இபய மென்றும் சாமிபிரணம் மதுமீயமென்றும், ஆறுவிதம் தன்னோடாகும், இவ்வகை ஆறுமேகமும் இதன் குணங்களையும் மகாதேவர் சொல்ல தேவி கேட்டு இதன் குணங்களை விரிவாக உபதேசித்தாள்.

சுருவமாயப் பியந்தா னிறங்கும்போது
துடியான மதம்போலத் தானிறங்கும்
வெருவமாய் வேளைக்கு நாழிதானும்
விருசாகத் தானிறங்குங் காச்சினாக்கால்
உருவமா யுவர்மண்போற் படியும்பாரு
உக்கிரமாய் கண்டயெட்டா மாதந்தன்னில்
எருவமா யெமபுரத்துக் கெய்துவார்கள்
யேத்தமாம் அப்பியத்தின் மேகந்தானே. (959)

அப்பியத்தின் உருவங் கூறுகிறேன், நீர் இறங்கும்போது மதம் போல் இறங்கும், ஒரு வேளைக்கு நாழி அளவு இறங்கும், இதைக்காய்ச்ச உவர்மண்ணைப்போல

படியும் நோய்கண்ட எட்டாம் மாதத்தில் இறப்பு உண்டாகும், இது அப்பியத்தின் மேகத்தின் குணமாகும்.

தாளென்ற கற்றாழை சாறுபோலும்
தன்னாற்றம் போலவே மிகவேநாறும்
காளென்ற காச்சினால் கடிதாம்நாற்றம்
கடிகைக்குள் ளிருநாழி தானிறங்கும்
ஏனென்ற யிக்குணமா மேகந்தானு
மிறங்கியதோர் மூன்றாகும் ஆண்டுதன்னில்
பாளென்ற பரமபதம் எய்துமென்று
பரமனா ருரைத்தார் அறியப் பண்புதானே. (960)

கற்றாழைச் சாறுபோல் நாற்றமடித்து நீர் இறங்கும். நீரைக்காய்ச்ச நாற்றமுண்டாகும், ஒருகடிகை நேரத்தில் இருநாழி அளவு இறங்கும் இவ்வகை மேகநோய் கண்ட மூன்றாம் ஆண்டில் இறப்பு உண்டாகும், இதை பரமனார் விரிவாக உரைத்தார்.

பண்பாக சுண்ணாம்பு போலேநாறும்
படியுமே அடியிலே நீறுபோல
நண்பாக வேளைக்கு நாழிதானும்
நாறியே யிறங்குமிக எரும்பரிக்கும்
கண்பாகக் காச்சினால் சுன்னநீரு
கனமாகப் படியும் அடிபாச்சல்தானும்
தண்பாகக் கண்டசல மிரண்டுஆண்டில்
சாகுவரே சாம்பீரணத் தன்மைதானே. (961)

சுண்ணாம்பு போலபடிந்து அடியில் நீர்போலவும் ஒருவேளைக்கு நாழி அளவு நாற்றமுடையதாக இறங்கும், நீரை எரும்பு அரிக்கும், காய்ச்சினால் சுண்ணநீர்போல அடியில்படியும், இந்நோய்கண்ட இரண்டாமாண்டில் மரணம் உண்டாகும். இது சாம்பீரண மேகத்தின் குணமாகும்.

தண்மையாய் சலந்தானும் பழுப்புமஞ்சள்
தானிறங்கும் வீசமும் கோசமுங்கடுக்கும்
அண்மையாய் அரிக்கக்கு நீரிறங்கும்
அடிக்கடிக்கு அரைநாழி தனிலேகாணும்
வெண்மையா யடிதனிலே தான்பிடிக்கும்
மிக்கான சடம்வெளுத்து மேனிகண்ணும்
பண்மையாம் பஞ்ச ஆண்டதனிற்கொல்லும்
பகர்கின்ற மதுமியத்தின் பாங்குத்தானே. (962)

இறங்கும் நீர் பழுப்பு மஞ்சளாகவும் வீசும் அளவு இறங்கும், அடிக்கடி நீர் இறங்கும், அரை நாழிக்கொரு தடவை நீர் இறங்கும், வெண்மையாக அடியில் தங்கும், உடல் வெளுத்து உடல்கன்றிப்போகும், ஐந்து ஆண்டில் மரணமுண்டாகும். இது மதுமியமேகத்தின் குணமாகும்.

பாங்கான பளிங்குநிறம் போலிறங்கும்
　　பருபீச கோசமுமே கடுத்துகூசும்
தாங்கான தாழையின் விழுதுச்சாறு
　　தனைப்போலே தானிறங்குங் காச்சினாக்கால்
தேங்கான சீய்போலே மிகவேநாறும்
　　சீக்கிரமாய் வேளைக்கோர் படிதானாகும்
ஏங்கான யிப்படிதான் கண்டமேகம்
　　செய்திடுமே அஞ்சாண்டில் அசாத்தியந்தானே. (963)

நீர் பளிங்கு நிறம்போலிறங்கும் பீசகோசம் கடுத்து கூசும், தாழை விழுதுச்சாறுபோல் நீர் இறங்கும், நீரைக்காய்ச்ச சீழ்ப்போல் நாறும், ஒருவேளைக்கு படிஅளவு நீர் இறங்கும். இவ்வாறு உண்டாகும் மேகநோய் ஐந்தாண்டில் மரணம் உண்டாக்கும், அசாத்தியமாம்.

சாத்தியமா முயல்ரெத்தம் போலேவீழும்
　　சாதகமா யிருணாழி தானிறங்கும்
காச்சியமாய் காச்சினால் புலாலேநாறும்
　　கணமான பீசகோசங் கடுக்கும்
ஒச்சியமா யப்படிதான் கண்டமேகம்
　　ஒன்பதா மாதத்தில் ஒடுங்குஞ்சீவன்
ஆச்சியமா யாறுவித மேகமென்றே
　　அவனியுள்ளோர் தங்களுக்கு அறியச்சொல்லே. (964)

நீர் முயல்ரத்தம்போல் விழுந்து ஒருவேளைக்க இருநாழி அளவு இறங்கும், நீரைக்காய்ச்ச புலால்போல் நாற்றமுண்டாகும். பீசகோசம் கடுப்புண்டாகும், இவ்வாறு கண்ட மேகநோய் ஒன்பது மாதத்தில் இறப்பையுண்டாக்கும். இவ்வாறு ஆறுவித மேக நோயை கண்டு கொள்வாயாக.

அறியவே பித்தசலம் ஆறுக்குத்தான்
　　அங்கத்தில் செயுங்குணத்தை யறியக்கேளு
தரியவே சரீரம்வற்றி யெரிவுண்டாகும்
　　சடத்திலுந் தான்கவிச் சுண்டாகும்
தெரியவே சீப்போலுங் கற்றாழைபோலும்
　　தேன்போலும் நாற்ற முண்டாம்
வெரியவே பீசத்தில் கோசத்தில்குத்தில்
　　மிகுயீரல் நாபியிலும் வேக்காடாமே. (965)

பித்தசலம் ஆறும் உடலில் செய்யும் குணத்தைக் கூறுகிறேன், உடல்வற்றி எரிவுண்டாகும். உடலில் கெட்ட நாற்றமுண்டாகும், சீழ், கற்றாழை, தேன் போலவும் நாற்றமுண்டாகும் பீசகோசத்தில் குத்தல் உண்டாகும், ஈரல், நாபி இவைகளில் வேக்காடுண்டாகும்.

வேக்காடாய் விரணமுண்டாய் வாய்தானூறும்
விக்கலொடு அருசியாய் சுரமுண்டாகும்
தீக்காடாய் தேகந்தான் கிடைகொடாது
தியக்கமொடு மூர்ச்சையுண்டாய் மயக்கமாகும்
சாக்காடாய் நாவாறாந் தண்ணீர்தாகம்
சத்தியொடு சரீரமெல்லாந் தளர்ந்துபோகும்
தாக்கடா சஞ்சலந்தான் மிகவுண்டாகும்
சமர்த்தான பித்தசலம் ஆறுமாமே. (966)

வாயில் புண்ணுண்டாகும், விக்கல், ருசியின்மை, சுரம், இவைகளுண்டாகும், தியக்கம், மூர்ச்சை, மயக்கம் இவைகளும் உண்டாகும். நாவறண்டு தண்ணீர் தாக முண்டாகும், உடல் தளர்ந்து போகும், சஞ்சலம் அதிக முண்டாகும் பித்தசலம் ஆறின் குணமிதாகும்.

வண்மையாய் மேகந்தா னிறங்கும்போது
மகாயிறைச்சி கழுவியதோர் தண்ணீர்போலாம்
கண்மையாய்க் காச்சினால் கவுச்சடிக்கும்
கண்பாக நீர்தாரை முறுக்கிவீழும்
வெண்மையாய் வேளைக்கு முன்னாழியாகு
மிக்கான குறிகண்ட மூணாம் ஆண்டு
தண்மையா யமதர்ம புரத்துக்கேகும்
தயித்திய மேகந்தா னிசமுமாச்சே. (967)

மேகம் இறங்கும்போது இறைச்சிகழுவிய நீர்போல இருக்கும், நீரைக்காய்ச்ச கெட்ட நாற்றமுண்டாகும், நீர்தாரை முறுக்கி வீழும், ஒருவேளைக்கு நாழிஅளவு நீர் இறங்கும், நோய்கண்ட மூன்றாம் ஆண்டு இறப்புண்டாகும், தயித்தியமேகமாகும்.

தசமான பத்துக்குங் குணத்தைக்கேளு
சரீரந்தான் பெருத்துமே வெளுப்புண்டாகும்
அசமான தினவுண்டா யடிக்கடிக்கு
அன்னமுமே தண்ணீரு மிகவேதேடும்
கசமான யிருமலுடன் கோழையுண்டாங்
கண்ணெரிவாய் ஆயாச ஊளையாகும்
குசமான குணங்களெல்லாம் சிலேட்டுமந்தன்னில்
கொடிசல குணமென்றே கூறினாரே. (968)

பத்துவகையான சிலேத்தும மேகத்தின் குணத்தைக் கூறுகிறேன், உடல் பெருத்து வெளுப்பு உண்டாகும், அன்னமுடன் தண்ணீர் மிகவும் கேட்கும், இருமல், கோழையுண்டாகும், கண்ணெரிவும், சோர்வு, சிலேத்தும் இவைகளுண்டாகும், இது சிலேத்தும சலத்தின் குணமாகும்.

கூரான மேகமது யிருபதுக்குங்
குணந்தன்னைச் சிவன்சொல்ல தேவிகேட்க
தாரான தாகமொடு ரோகம்யேக்கம்
தரியாமல் நீரழித லிருமல்மூச்சு
ஆரான அருசிசத்தி சித்தப்பிரமை
அடிக்கடிக்குத் தண்ணீர்தான் அன்னங்கேழ்க்கல்
ஈரான யிடுப்புக்குள் கடுப்புக்காணல்
எலும்புக்கு ளழதலொடு எரிவுண்டாமே. (969)

இருபதுவகை மேகத்திற்கும் குணங்களை சிவன், தேவிக்குச் சொன்னார், தாகமுடன், ரோகம் ஏக்கம், நீரழிதல், இருமல், மூச்சு, ருசியின்மை, சித்தப்பிரமை, அடிக்கடி தண்ணீர், அன்னம், கேட்கும், இடுப்புக்குள் கடுப்பும் உஷ்ணமும் உண்டாகும், எலும்புக்குள் அழலும் எரிவுமுண்டாகும்.

எரிவோடு சரீரமெல்லாம் அடிபட்டாற்போல்
தேகமெங்கும் நோதல் நித்திரையில்லாதல்
வரிவாய்வு மெத்தவே யறிதல்காணும்
மனது சஞ்சலப்படுதல் காற்றுவேண்டல்
மெரிவோடு தினவுந்தான் மிகவுண்டாதல்
விக்கலொடு மயக்கந்தான் மெத்தக்காணல்
தெரிவொடு தேகமெங்கும் வெளுருண்டாதல்
தேகமெத்த ஆயாசப் படுதல்காணே. (970)

உடலெல்லாம் எரிவுடன் அடிபட்டாற்போல், வலி தூக்கமில்லாமை, வாய்வு அதிகமாதி, மனது சஞ்சலப்படுதல், காற்று உடம்புக்கு வேண்டல், தினவு மிகவுண்டாதல், விக்கலுடன் மயக்கம் அதிகம்காணல், உடலெல்லாம் வெளுப்புண்டாதல், முதலிய குணங்களுண்டாகும்.

காணவே முதல்வற்றை சரீரந்தானும்
கனமாகப் பரித்திக்கு நீர்துவாரம்
வேணவே ரெண்டாக்கி யகலம் பண்ணு
மிகயிரண்டா மவத்தை விளம்பக்கேளு
மூணவே மூத்திரப் பீடையுமாய்
சுக்கில முகமமுங்கி தேசும் குன்றும்
நாணவே மூன்றாகு மவத்தைக்குத்தான்
நாவரளும் வாயுவது மீறுந்தானே. (971)

நீர்துவாரம் இரண்டுபங்காக அகலம் செய்யும், சிறுநீர், மலம், இவைகளில் நாற்ற முண்டாகும், சுக்கிலம் முகம் மழுங்கி அடர்த்தி குறையும், நாவரளும் வாயுவது மீறும்.

தானான நாலவத்தை அங்கதாகஞ்
சலிப்பாகச் சன்னியுண்டாம் அஞ்சவத்தை
நேனான நீர்ப்பெருகுந் தாதுநஷ்டம்
நிலையுரா மவத்தையுட கிடைகொடாது
மூனான மூர்ச்சைவரும் யேழவத்தை
மிக்க அரோ சிகசுவாசந் தேகசாட்டியம்
ஏனான எட்டவத்தை தானுமேதான்
எழுந்து மனையுந்தான் எரிவுண்டாமே. (972)

அங்கதாகமும் சலிப்புடன் சன்னியும் உண்டாகும், நீர்ப்பெருகி தாது நட்டமுண்டாகும், மனதில்ஒருநிலை இருக்காது. மூர்ச்சையுண்டாகும், அரோசிகமும் சுவாசமும், உண்டாகும், எரிச்சலுமுண்டாகும்.

உண்டாகும் ஒன்பதா மவத்தைக்கேளும்
ஒழுக்கான அதிசாரங் கிருமியுண்டாம்
பண்டாகும் பத்தாந்தா னவத்தைக்கேளு
பாரமாம் சயங்கண் பரத்துக்கேகும்
வெண்டாகும் மேகந்தா னிருபதுக்கும்
விளங்கியதோர் தேச அவுத்தரி வாளுஞ்சொன்னோம்
அண்டாகும் அசாத்தியம் சாத்தியம் விப்பியம்
அறிந்து கொண்டு அடவாகச் செய்யவிழ்தஞ்செய்யே. (973)

ஒன்பதாம் சிலேத்தும மேகவகையின் குணத்தைக் கூறுகிறேன், அதிசாரமும் கிருமியுமுண்டாகும், பத்தாவது சிலேத்தும மேகத்தைக் கூறுகிறேன், சயம் கண்ணுக்கு ஏறும், மேகம் இருபது வகைக்கும் குணங்களையும் வியாம்பியம், சாத்தியம் அசாத்தியம், ஆகியவைகளைக் கூறிவிட்டேன். குணத்தை அறிந்து மருந்து செய்வாயாக.

செய்யவே வச்சிரமாத் தண்டமான
செயமான முதுகுதண்டை பத்திநிற்கும்
பிய்யவே பெருநரம்பில் மேகந்தானும்
பிறக்குமென்றே தானறிந்து வாதந்தன்னால்
பெய்யவே பிறந்தசலம் நாலு அசாத்தியம்
பித்தத்தி லமிர்தசலம் ஆறும்வியாப்பியம்
பய்யவே சிலேத்துமத்தில் பிறந்தசலம்பத்தும்
பரமனுரைத்தார் சாத்தியம் பராபரிக்கே. (974)

தன்வந்திரி பகவான்

வச்சிரமான முதுகுதண்டைப்பற்றி நிற்கும், பெருநரம்பில் மேகம் ஆரம்பமாகும், வாதத்தில் உண்டாண சலம் நான்கும் அசாத்தியமாகும், பித்தத்தில் உண்டான சலம் ஆறும் வியாப்பியம், சிலேத்துமத்தில் உண்டான சலம் பத்தும் சாத்தியமாகும், இதை பரன்தானும் பராபரிக்கு உரைத்தார்.

பரிமேகம் யிருபதுக்கும் பத்தியந்தான்
பாங்காக உரைத்திடுவோம் பசுவின்வெண்ணை
பொரிவாக எருமைமோர் பொன்னாங்கண்ணி
பேர்பெற்ற சிறுகீரை முசுட்டையாகும்
அரிவாக அவரையொடு புனல்முருங்கை
அதிரசமாங் கற்கண்டு சர்க்கரையுமாகும்
மரிவாக மாதளையாம் பேரீச்சாகும்
மகாவிளாம் பழமுந்திரிகைப் பழமுமாமே. (975)

இவ்வகை மேகநோய் இருபதுக்கும் பத்தியத்தைக் கூறுகிறேன், பசுவின் வெண்ணெய், எருமைமோர், பொன்னாங்கண்ணி, சிறுகீரை, முசுட்டை, அவரை, புனல்முருங்கை, அதிரசம், கற்கண்டு, சக்கரை, மாதுளை, பேரீச்சம், முந்திரி, இவைகளின் பழங்கள் ஆகும்.

ஆமே பேயன்வாழைப்பழம் வாழைக்கச்சல்
அத்தியுட பிஞ்சு சிறுபயறு பழமுஞ்சோறு
பாமே பழஞ்சோற்று நீர்வெந்தயம் சீரகமாம்
பகர்பீர்க்கங்காய்க்கு வேப்பிலைகொத்தமல்லி
நேமே நெற்பொரியெள்ளு முசுக்கையாகும்
நேரான நல்லெண்ணெய் புண்ணாக்காகும்
தாமேக மிருபதுக்கும் பத்தியவர்க்கம்
தானுமிது சாத்தினார் சிவன்தாய்க்குத்தானே. (976)

பேயன் வாழைப்பழம், வாழைக்கச்சல், அத்திப்பிஞ்சு, சிறுபயறு, பழஞ்சோறு, பழஞ்சோற்றுநீர் வெந்தயம், சீரகம், பீர்க்கங்காய், வேப்பிலை, கொத்தமல்லி, நெற்பொரி, எள்ளு, முசுமுசுக்கை, நல்லெண்ணெய், புண்ணாக்கு, இவைகள் ஆகும், மேகவகை இருபதுக்கும், பத்தியத்தின் முறைகளை சிவன், தாய்க்குச் சொன்னார்.

சிலேத்துமம் 10

ஆறான சிலேத்துமம் பத்துதன்னை
அரன்சொல்ல ஆத்தாள்தான் கேழ்க்கும்போது
வாறான வலைமேக வுத்தமேகம்
மார்ச்சியா மேகத்தோ டாசிமேகம்
தூரான சுராரிசுக்கில உதகமேகம்
சுத்தமாம் பிராணியொடு லவணமேகம்

தேரான தெயித்தியமா மென்றுஞ்செப்பினார்
சிலேற்பனத்தின் சலத்தை தானே. (977)

சிலேத்தும மேகம் பத்தைப்பற்றிய குணங்களை அரன் ஆத்தாளுக்கு கூறினார், வலைமேகம், உத்தமேகம், மார்ச்சியாமேகம், ஆசிமேகம், சுராரி சுக்கில உதகமேகம், பிராணியொடு லவணமேகம், இவ்வாறு சிலேத்து மத்தின் சல வகை நோய்களாகும்.

தானென்ற வசுரமேக மிரங்கும்போது
சலத்தின் மேல் நிணம்போலும் ஆண்மையுண்டாம்
வேனென்ற வேளைக்குக் குறுணிகாணும்
விடுபட்டுத் தானிறங்குங் காச்சினாக்கால்
றேமென்ற நீண்முருக்கம் போலேநாறும்
நிலையாக யிப்படிதா னிறங்குமேகம்
ஓனென்ற யேழாண்டு தன்னில்தானும்
எமபுரத்துக் கேகுமென்று யியம்பிடாயே. (978)

சுரமேகம் இறங்கும் போது சலத்தின் மேல் நிணமும் ஆண்மை யுண்டாம் வேளைக்கு குறுணி அளவு நீர் இறங்கும் நீரைக் காய்ச்சினால் முருக்கம்போல் நாற்றம் உண்டாகும், நோய்கண்டு ஏழாண்டில் இறப்பு உண்டாகும்.

இயம்பவே நல்லதண்ணீர் நீர்வேளைக்கு
யிப்படியே தனக்குமே குறுணிகாணும்
அயம்பவே அப்படித்தான் கண்டமேகம்
அப்பாரண்டு வருஷத்தி லறியக்கேளு
தயம்பவே யிம்முறைதான் பொய்யாதையா
தப்பாது தன்வந்திரி வாக்குபொய்யா
மயம்பவே மறலியுட யூரும்புக்காகும்
லயணந்தான் உத்தமமா மேகந்தானே. (979)

வத்த மேகம் கண்டவர்க்கு நல்ல தண்ணீர்போல் நீர் இறங்கும் ஒருவேளைக்கு குறுணி அளவு நீர் இறங்கும், இவ்வாறு கண்டமேகம் நோய், இரண்டு வருஷத்தில் இறப்பு காணும், தன்வந்திரியாகிய என் வாக்கு பொய்யாகாது.

உத்தமமா யெலும்புக்குள் சதையைப்போலே
உருகியே தானிறங்குங் காச்சினாக்கால்
நித்தமாம் நிணநாற்ற மாயிருக்கும்
நிசமாக வேளைக்கு முன்னாழியாகும்
பத்தமா யிப்படிதான் கண்டமேகம்
பரமசிவ னடிபணியாப் பாவியொக்கும்

இத்தமா எமனுடைய ஊர்புக்காகும்
யிசைந்த அஞ்சு வருஷத்தின் மாச்சிகமேகம். (980)

எலும்புக்குள் சதையைப் போல உருகு நீர் இறங்கும், நீரைக்காய்ச்ச நிண நாற்றமாக இருக்கும், ஒருவேளைக்கு மூன்று நாழி அளவு நீர் இறங்கும், பரமசிவனை அடிபணியாத பாவிக்கு இந்நோய் கண்டு ஐந்து வருஷத்திற்குள் மரணமாம், இது மார்ச்சிக மேகமாகும்.

மேகந்தான் நீர்போலத் தானிறங்கும்
மிகக்காச்சில் இளநீர்போல் தானிருக்கும்
வாகந்தான் வாடையது யிளநீர்வீசும்
வகையாக வேளைக்கு நாழியாகும்
தாகந்தான் மிகவுண்டாய் உடம்பிளைக்கும்
சஞ்சலந்தான் மிகவுண்டாய் கண்டநீளும்
பாகந்தான் வருஷத்தில் சாவுமாகும்
பாங்கான ஆசிகமே கத்தின்பண்பே. (981)

நீர்போல இறங்கும் நீரைக்காய்ச்ச இளநீர்போல் இருக்கும், இளநீர்போல் வாடைவீசும், ஒரு வேளைக்கு நாழி அளவு நீர் இறங்கும், தாகம் மிகவுண்டாகும், உடல் இளைக்கும், சஞ்சலம் மிகவுண்டாகும், வருஷத்தில் இறப்பு உண்டாகும், இது ஆசிக மேகத்தின் குணமாகும்.

பண்பாக நுரையோடே வெளுப்புபோல
பணங்கள்ளுப் போலவே தானிறங்கும்
குணமாக வேளைக்கு நாழியாகும்
காச்சினால் கள்ளுந்தான் மிகவே வீசும்
மண்பாகப் போலே மண்டியுண்டாம்
மயக்கமா யிப்படிதான் கண்டமேகம்
எண்பாக ஏழுஆண் டதனிற்கொல்லும்
ஏத்தமா சுராரியென்ற மேகந்தானே. (982)

நுரையைப்போல் வெளுத்து பனங்கள் போல் நீர் இறங்கும், ஒருவேளைக்கு நாழி அளவு நீர் இறங்கும், நீரைக் காய்ச்ச கள்ளுபோல் வீசும் மண்டியுண்டாகும், இவ்வாறு ஏற்படும் மேகம் ஏழுஆண்டில் இறப்புண்டாகும், இது சுராரிமேகமாகும்.

என்றதோர் மேகந்தா னிறங்கும்போது
ஏத்தமாம் சுக்கிலந் தன்னிறமே போலும்
தின்றதோர் தானியுட சாறுபோலும்
திரிச்சுமே மொழுகூர்ந்து சிறுகிவீழும்
கண்டதோ ரிதைக்காச்சில் கட்டிபோல
கனமான யீரல்போல் தோஞ்சுபோகும்

முண்டதோர் கண்டசலம் முயர்ச்சியாய்கொல்லு
முக்கியமாய்ச் சுக்கில மேகந்தானே. (983)

மேகம் நீரில் இறங்கும்போது சுக்கிலத்தின்நிறத்தில் போகும், தானியின் சாறுபோல திரிச்சு மொழுகூர்ந்து குறைந்து வீழும் இதைக்காய்ச்ச கட்டி போலாகும், ஈரல்போல் தோஞ்சு போகும், இது இறப்பை உண்டாக்கும், சுக்கில மேகமிது.

மேகமாய் கழனீர்போல் சிக்கிசிக்கி
மிகுதியாய் தானிறங்குங் காச்சினாக்கால்
சாகமாய் சங்குச் சுண்ணாம்புப்போலே
தாழவே மண்டிமிகப் படியும்பாரு
பாகமா யிப்படித்தான் கண்டமேகம்
பாங்கமாய் நாலாண்டு தனிலேகொல்லும்
வேகமாய் மிகநாறுஞ் சரீரந்தானு
மிக முதக மேகமென்றே விளம்புவாமே. (984)

கழனீர்போல் சிக்கி, சிக்கி மிகுதியான நீர் இறங்கும் நீரைக்காய்ச்ச சங்குச்சுண்ணாம்பு போல அடியில்படியும் இவ்வாறு ஏற்படும் மேகம் நான்கு ஆண்டில் இறப்பை உண்டு செய்யும், உடல் மிகவும் நாற்றமுண்டாம், இது உதக மேகமாகும்.

விளம்பவே தேன்போலே மிகவிறங்கி
மிக்கான தேன்போன்ற நாற்றமாகும்
அளம்பவே மெழுகுபோல் அடியில்நிற்கும்
அதிகமா யீயெறும்பு மிகவேமொய்க்கும்
குளம்பவே வேளைக்கு குறுணியாகும்
குறிகண்ட அஞ்சுயாத் தையிலேகொல்லும்
தளம்பவே சரீரத்தின் மதுத்தானாறும்
தணித்ததோர் பிராணியென்ற மேகந்தானே. (985)

தேன்போல் நீர்இறங்கி தேன் போன்ற நாற்றமுடன் மெழுகுபோல் அடியில் நிற்கும். நீரில் ஈ, எரும்பு, இவைகள் மொய்க்கும், வேளைக்கு குறுணி அளவு, நீர் இறங்கும், ஐந்து ஆண்டில் இறப்பு உண்டாகும், இதுபிராணி என்ற மேகம் நோய்.

தனித்ததோர் மேகந்தா னிற்கும்போது
தழலான சுண்ணாம்புக் காரநீர்போல்
மனத்ததோர் மிகுதியாய்த் தானிறங்கும்
வேளைக்கி னாழிதா னிறங்கும்
கனித்ததை காச்சினாற் படியுமுப்பு
கண்டசலம் பஞ்ச வருஷத்தில்தானே

வனித்ததை மறலி யூர்புக்காகும்
மறுகால வணமேகத்தின் வண்மைகூறே. (986)

மேகம் இறங்கும்போது சுண்ணாம்பு காரநீர்போல் அதிகமாக இறங்கும், வேளைக்கு நாழி அளவு நீர் இறங்கும், நீரைக்காய்ச்ச உப்பு படியும், இந்த நோய் ஏற்பட்ட ஐந்து வருஷத்தில் இறப்பு உண்டாகும், லவண மேகத்தின் குணமாமிது.

கூறியே கற்பமுண்டாய்ப் பயின்றபோது
குறிக்கியே படகடம்பில் வலிப்புத்தோன்றி
மூறியே மூக்கோடு புருவந்தன்னில்
மு...க்காமாய் மிகநொந்து வலியுண்டாகி
நாறியே நாக்கோடு வுண்ணாக்குந்தான்
நலித்துமே பல்லெல்லாம் கடுப்புண்டாகும்
ஆறியே முன்சொன்ன அசாத்தியமைந்து தானும்
அருத்தான் கண்டாக அவ்வாதந்தானே. (987)

கற்ப முண்டாகி அக்காலத்தில் படபடப்பும் வலிப்பும் ஏற்பட்டு, மூக்கு, புருவம் இவைகளில் வலி உண்டாகி நாக்கு, உள்நாக்கு, பல், இவைகளில் கடுப்புண்டாகி இருக்கும் நிலை முன்சொன்ன அசாத்திய வாதம் ஐந்தின் குணமாகும்.

அவதான மடியிரசு தன்னிற்பத்தி
அதட்டியே பின்னெல்லாம் வற்றிநொந்து
மவதான வடிபுக்கிற் கடியிற்சென்று
வளர்ந்துடம்பு நொந்துமே வாட்டமாகி
இவதான தேகமெங்கும் திமிருண்டாகும்
செடம்போகும் காலத்தில் முன்னுங்காணும்
பவதான சிறக்கம்பு அவதானகந்தான்
பாடியதோர் பாவமென்றும் அசாத்தியந்தானே. (988)

மடியிரசு தன்னில் புகுந்து பின்பகுதியெல்லாம் வற்றி நொந்து அடியில்புகுந்து அடியில் சென்று, உடல்நொந்து வாட்டமாகி உடலெங்கும் திமிருண்டாகும், இறப்புக்கு முன் இருக்கும் நிலையிதாகும், அசாத்தியமாகும்.

சாத்தியமா மசானத்தின் தலைக்காடு
தண்மையாம் பிடர்பற்றித் தலைநோயுண்டாம்
அசாத்தியமாய் காதிரண்டும் தான்பிலத்துக்
கதுப்போடு மூக்கோடு குறடுவுச்சி
நேத்தியமாய் நெத்தியொடு நோவுமாகி
நேராக ஆப்படித்தாப் போலக்குத்தும்
மாத்தியமாய் கனக்கிலேசப் படுத்துகின்ற
வாதத்தின் நோவு வண்மைதானே. (989)

மயானத்தின் தலைக்காடு தண்மையுடன் பிடரியைப்பற்றி தலைநோயுண்டாகும், காது இரண்டும் பிலத்து மூக்க, உச்சி, கண்கள், நெற்றி, இவைளில் வலியுண்டாகும், ஆப்பு அடித்தல் போல குத்தலுண்டாகும். கனக்கிலேசப் படுத்துகின்ற வாதத்தின் நோயிதுவாம்.

வண்மையாய் நிற்கின்ற மூக்குதானும்
வடிந்துமே நீர்ப்பாய்ந்து சிலேக்கனத்து
வெண்மையாய் நீர்தான் மிகவும்லூறி
மீறியே வுண்ணாக்கைப் பற்றிநொந்து
திண்மை செவிதனிலே கடுத்தலுண்டாய்
சிரசுதான் பாரமாய் மிகக்கனக்கும்
கண்மையாய் கண்ணோடு விருவக்குத்து
கனமாக பித்தத்தில் கால்நோக்காடே. (990)

மூக்கில் நீர்வடித்து பாய்ந்து தலைகனத்து வெண்மைநிறம் கொண்ட நீர் அதிகமாக ஊறி உள்நாக்கு பற்றி நொந்து காதுகளில் கடுப்புண்டாகி தலைபாரம் உண்டாகி கண்ணில் குத்தல்வலியும் உண்டாகும், இது பித்தத்தின் நோயாகும்.

கால்நோக்கா டாகியே மிகவருந்தி
சஞ்சலத்தால் மனக்கிலேசந் தானென்றாகி
மலைநோக்காய் நெஞ்சடைத்து பெருமூச்சாகி
மறுகாதில் இரண்டிலாப் படித்தாபபோலாம்
புலைநோக்காய் வாய்தானும் பேச வொட்டாப்
புழுக்கள்தான் வூர்தல்போல் தேகமாகும்
தால்நோக்கா வுணஎச்சி வறிவில்லாதாகும்
கண்சன்னியின் விதத்தின் தலைநோக்காடே. (991)

காலில் மிகவும் வலியுண்டாகி சஞ்சலத்தால் மனம் கிலேசம் ஏற்பட்டு நெஞ்சு அடைத்து பெருமூச்சு விட்டு இருகாதுகளிலும் ஆப்புவைத்து அடித்துபோல் வாய் பேச முடியாமல், உடலில் புழுக்கல் ஊர்வது போலவும் இருக்கும் நிலை கண் சன்னியின் தலை நோயாகும்.

சந்தியாய்க் குளுந்துமே லெசசென்றாகும்
தாகமே மிகவுண்டாய் மயிர்க்கூச்சாகும்
நிண்ணியாய்த் திமிர்ந்து மொத்தமீறி
செவிமூக்கு வாயாலே ரத்தம்வீழும்
ஒண்மையாம் வுடலில்த்தான் துடிப்புண்டாகும்
ஒக்கமாம் சுவாசமது மெத்தவாகும்
கண்மையாம் சரீரமதுக் குத்தலாகும்
கறுத்தெழுந்த ரத்தபித்தத் தலைநோக்காடே. (992)

தன்வந்திரி பகவான்

உடல் குளிர்ந்து எச்சில் விஷந்து தாகம் அதிகமுண்டாகி மயிர்க் கூச்சல் உண்டாகி காது, மூக்கு, வாய், இவைகளில் ரத்தம் விழும், உடல் துடிப்புண்டாகும், சுவாசம் அதிகமாகும், உடலில் குத்தல் உண்டாகும், இது ரத்தபித்தத்தின் குணமாகும்.

கறுத்தமே மயில்பற்றித் தலைநோயுண்டாம்
  கடைமூக்குத் தண்டு புருவம்வலிக்கும்
வலித்துமே வாய்நீர்தான் மிகவும்நாறும்
  வடுவமெல்லாம் நோவாகி மணமறுக்கும்
குறித்துமே கைகாலு முருகும்வற்றி
  குத்தியே வெருவரென்று மிருக்குமேதான்
நதித்துமே நாணர்ப்பூபோலக் கிருமிவீழும்
  நாறுமே மிகுமிகுந் தலைநோக்காடே. (993)

கடைமூக்குத்தண்டு, புருவம் இவைகளில் வலிஉண்டாம், எச்சில் மிகவும் நாற்றமுண்டாகும் உடலெல்லாம் வலியுண்டாகி கை, கால் இவைகள் வற்றி மலத்தில் நாணற்பூப்போல் கிருமிகள் விழும், இருமினால் நாற்றம் உண்டாகும்.

கந்தமாம் வலப்பக்கம் மிடப்பக்கமாதல்
  கண்ணடியும் மூக்கடியும் புருவம்பற்றி
புந்தமாம் புருவத்தில் வூசிகுற்றுபோல்
  வலிக்கும் கண்தானும் சுருக்கிக்காணும்
பந்தமாம் வுடம்பெங்கும் பாரமாகும்
  பகல்போது தணிந்தவுடன் நோவொட்டாது
துந்தமாம் துமிந்துபோல் வலியுண்டாக்கும்
  சூரிய வாதந்தன்னில் சொரூபமாமே. (994)

வாசம் ஒருபக்கம் வலதும் இடது பக்கமாகவும் வீசும், கண்ணின் அடிப்பகுதி மூக்கின் அடிப்பகுதி, புருவம் இவைகளைப்பற்றி ஊசிகுத்துதல் போன்று வலியுண்டாகும், கண் சுருங்கிக் காணும், உடல் எல்லாம் பாரமாக இருக்கும், பகல்பொழுது முடிந்தவுடன் நோய் இருக்காது, கடுமையான வலி உண்டாகும் இது சூரிய வாதத்தின் குணமாகும்.

சுரூபமாய் உடம்பெங்கும் வலியுமாகி
  தும்மியே மூக்கடைத்து சுகந்தமத்து
புருவமே மிகவலித்து நெத்தியோடு
  புண்போல பிடந்திட்டுப் புளகமாகி
அரூபமாய் அந்திப் போது தோன்றி
  அர்த்தராத் திரியில்மட்டும் அலங்கலாகி
சரூபமாய் விடியு நேரத்தில்தானும்
  சாய்க்குமே சந்திர வடிவந்தானே. (995)

உடல் எங்கும் வலியுண்டாகி, தும்மல் ஏற்பட்டு மூக்கு அடைத்து வாசனை அறிய முடியாத நிலை ஏற்பட்டு புருவம் மிகவும் வலித்து நெற்றி புண்போலவும் சூரியன் இறங்கும் நேரத்தில் இந்நிலைகள் உண்டாகி இரவிலும் தொல்லை இருந்து விடிந்தபின் இந்நிலைமாறும், இது சந்திர வாதமாகும்.

வாதமாய் மார்போடு பிடரிகாது
 வலித்துமே ஆப்புக்கொண் டடித்தாப்போல
குத்தமாய்க் காதிரண்டும் கொடைச்சலாகும்
 கோணியே காது கழுத்தும்கனக்கும்
அத்தமாய் வுச்சியிலும் நெற்றிதன்னில்
 அடிக்கடிக்கு நோவாகி அசதியாகும்
பத்தமாய் பசிப்பின்றி வுறக்கமின்றி
 பார்க்காணா வாதமென்றே பகரலாமே. (996)

மார்பு பிடரி, காது இவைகளில் ஆப்பு அடித்ததுபோல் வலித்து காது இரண்டிலும் குடைச்சலுண்டாகி காது, கழுத்து இவைகள் கணத்து தலை உச்சி, நெற்றி, இவைகளில் அடிக்கடி வலி ஏற்பட்டு அசதி உண்டாகும். பசியில்லாமல் தூக்கமுமில்லாமல், இருக்கும்நிலை நாவாதம் என்பதாம்.

பகரான ஒருதலையைப் பற்றிநொந்து
 பகழிகொண்டு மவுளிதன்னைப் பிவிந்தாப்போல
நிகரான கண்ணுநீர்ப் பாய்ந்துமேதான் காதினில்
 நெடுமூச்சு விட்டுமே நினைந்து துன்பம்
மதிகாரன் சடந்தானும் தயுதவுக்கொன்றாக்கி
 மதிப்பாக லாகிரியே பசிகாணாது
காரண வாதமாய் மயிர்க் கூச்சமாகும்
 மகவாத பேதத்தின் தலைவலியுமாமே. (997)

தலையில் ஒருபகுதியில் வலிஏற்பட்டு, கழியைக்கொண்டு நெற்றியில் இடித்ததுபோல் வலியும், கண்ணில் நீர்ப்பாய்ச்சலும், நெடுமூச்சுண்டாகி துன்பத்தை நினைத்து போதைப்போல் ஏற்பட்டு பசி இல்லாமல் மயிர்க்கால் கூச்சமுண்டாகும் நிலை மகாவாதத்தின் குணமாகும்.

வலியாகி சீழ்விழுந்து காதிரண்டும்
 மகத்தான சமுத்திரம்போல் இறைச்சலாகி
சிலியாகி செவிதனிலே சத்தமொன்றாய்
 கேள்வியில்தான் வசனமதுக் கேட்டிடாது
பெலியாகி யிவ்வசனத் திசைகட்டாகும்
 பேய்கொண்ட மனமதுபோல் பேச்சுதானும்
அலியாகி ஆணவமுந் தான்குறைந்து
 அணங்காத் தின்ன சூலையாமே. (998)

தன்வந்திரி பகவான்

இரண்டு காதிலும் சீழ்வடிந்து வலிவுண்டாகி கடலின் இறைச்சல் போல் இறைச்சலுண்டாகி யார் பேசினாலும் கேட்கமுடியாத நிலை ஏற்பட்டு பேய் கொண்ட மனம் போல் பேசி ஆண், பெண் அற்ற அலியாகி ஆணவம் குறைந்து இருக்கும் நிலை சூலை நோயாகும்.

தானென்ற திரண்டுகைகால் தன்னிலேதான்
　　தாக்கான கிரந்தையாய் எழுந்துநொந்து
ஓனென்றவு திரமொடு சீழும்பாய்ந்து
　　வூத்தையாம் கும்பிபோல் நாற்றமாகி
தேனென்ற திறம்போல கசிந்துகாணும்
　　தெகுட்டுமே சாதமது தின்னவொட்டா
கானென்ற சிரசெங்கும் வண்டுபோலூரும்
　　கடினமாய்ச் சொன்னாரே முனிவர்தாமும். (999)

கைகால் இவைகளில் கட்டி உண்டாகி, சீழ்வடித்து குப்பிபோல் நாற்றமுண்டாகி, தேனின் நிறம்போல் கசிந்து காணும், சாதம் சாப்பிடமுடியாம் வாந்தியுண்டாவதைப் போலிருக்கும், தலையில் வண்டு ஊர்வது போலாகும், இவைகளைப்பற்றி முனிவர் சொல்லிவிட்டார்.

வேறு

சொன்றாயுள் வேதமிது தோற்றுங்குரு நூலிதுவாகும்
அன்னேதாமும் தன்வந்திரிக் கறைந்தாரிந்நூல் சூட்சமுடன்
மன்னேயூகி முனிதமக்கு வரைந்தார் வடநூல் தன்னைப் பிரித்து
மின்னேயிந் நூலாயிரமாம் வரைந்தார் முற்றும். (1000)

இந்நூல் ஆயுர்வேதமாகும், இது குரு நூல் வடமொழி நூலைப் பார்த்து தன்வந்திரியான நான் யூகிமுனிக்கு முறைகளைச் ஆயிரம் பாடல்களாகச் சொன்னேன், இவ்வாறு சொன்ன ஆயிரம்பாடல்கள் முற்றுபெற்றது.

தன்வந்திரிபகவான்
யூகிமுனிவருக்குபதேசித்த
வயித்தியகாவியம் - ஆயிரம்
முற்றுப் பெற்றது.

தாமரை

நூலகம்